Issued—23-6-1959

5566
MADRAS SECRETARIAT LIBRARY
4 - JUL 1959

# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

# OFFICIAL REPORT

## TUESDAY, 10TH FEBRUARY 1959

### VOLUME XVIII—No. 1

CONTENTS


| | | PAGES |
|---|---|---|
| | Questions and Answers .. .. .. .. .. .. | 1–30 |
| | Calling attention to sea erosion and damages in Tiruchendur taluk .. .. .. .. .. .. .. .. .. | 30–32 |
| III | Privilege Motion re article in the 'Kumudam' .. .. .. .. | 32 |
| IV | Government Bill—The Madras General Sales Tax Bill, 1958 (L.A. Bill No. 6 of 1958) .. .. .. .. .. .. .. | 32–71 |
| V | Papers laid on the table of the House .. .. .. | 71 |


©
GOVERNMENT OF MADRAS
1959

*Legislature (Assembly) Department*
*Madras*

PRICE, 37 *naye Paise*]

D
V211,31'N59
N60.18;1
61268

# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

## FIFTH SESSION OF THE SECOND LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

*10th to 14th February* 1959.

**Volume XVIII (Nos. 1 to 5)**

TABLE OF CONTENTS.

PAGES

***Tuesday, the 10th February* 1959.**

| | |
|---|---|
| I **Questions and Answers** .. .. .. .. .. .. .. | 1-30 |
| II **Calling** attention to sea erosion and damages in Tiruchendur taluk .. .. .. .. .. .. .. .. | 30-32 |
| III **Privilege** Motion *re* article in the 'Kumudam' .. .. .. | 32 |
| IV Government Bill—The Madras General Sales Tax Bill, 1958 (L.A. Bill No. 6 of 1958) .. .. .. .. .. .. .. | 32-71 |
| V **Papers** laid on the table of the House .. .. .. .. | 71 |

***Wednesday, the 11th February* 1959.**

| | |
|---|---|
| I **Questions** and Answers .. .. .. .. .. .. | 73-99<br>146-148 |
| II **Privilege Motion** *re* article in the 'Kumudam' .. .. .. | 99-101 |
| III **Government Bill—The Madras General Sales Tax Bill, 1958 (L.A. Bill No. 6 of 1958)**—*cont.* .. .. .. .. .. .. | 101-145 |
| IV **Papers laid on the table of the House** .. .. .. .. | 145 |

***Thursday, the 12th February* 1959.**

| | |
|---|---|
| I **Obituary reference to Sri C. Marudavanam Pillai** .. .. | 149 |
| II **Questions and Answers** .. .. .. .. .. .. | 149-179<br>239-248 |
| III **Calling** attention to the closure of beedi factories .. .. | 179-181 |
| IV Privilege Motions— | |
| (1) Article in the 'Kumudam' .. .. .. .. .. | 181-182 |
| (2) 'Dina Thanthi' Case No. 2 .. .. .. .. .. | 182 |

| | PAGES |
|---|---|
| V Motion *re* change in the order of business .. | 182 |
| VI Statement by the Hon. Minister for Industries .. .. .. .. | 182 |
| VII Government Bill—The Madras General Sales Tax Bill, 1958 (L.A. Bill No. 6 of 1958)—*cont.* .. .. .. .. | 183–238 |
| VIII Papers laid on the table of the House .. .. .. .. | 238 |

*Friday, the 13th February* 1959.

| | |
|---|---|
| I Questions and Answers .. .. .. .. .. .. | 249–278<br>322–325 |
| II Announcement *re* Message from the Governor .. .. .. .. | 278 |
| III Government Bill—The Madras General Sales Tax Bill, 1958 (L.A. Bill No. 6 of 1958)—*cont.* .. .. .. .. | 278–321 |
| IV Papers laid on the table of the House .. .. .. .. | 321 |

*Saturday, the 14th February* 1959.

| | |
|---|---|
| I Questions and Answers .. .. .. .. .. .. | 327–355<br>411–420 |
| II Announcement *re* Bills passed by the Council .. .. .. | 355 |
| III Government Bill—The Madras General Sales Tax Bill, 1958 (L.A. Bill No. 6 of 1958)—*cont.* .. .. .. .. | 356–410 |
| Index .. .. .. .. .. .. .. .. .. | 421–447 |


# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Tuesday, the 10th February 1959.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Mettalling of village roads*

* 161 *Q*.—SRI M. C. MUTHUKUMARASWAMY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any scheme for metalling the village roads in Tanjore district; and

(*b*) if so, the amount sanctioned?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) There is no separate scheme for metalling village roads in Tanjore district.

(*b*) Does not arise.

**SRI G. G. GURUMURTHI** : நமது மாகாணத்திற்கென்று கிராம ரஸ்தாக்களுக்கு அபிவிருத்தித் திட்டம் ஏதாவது இருக்கிறதா? அப்படி இருந்தால் அந்த விவரங்கள் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**THE HON. SRI C. SUBRAMANIAM** : கம்யூனிடி டெவலெப்மெண்டு ஸ்கீம்படி அங்கங்கே ரோடுகள் அமைக்கும் திட்டம் இருக்கிறது. ஸ்தல ஸ்தாபன திட்டத்தின்கீழும் அவ்வேலை செய்யப் பட்டு வருகிறது. ஸ்தல அபிவிருத்தித் திட்டங்களின் மூலமாகவும் எடுத்துக் கொள்ளல்லாம்.

**SRI C. MUTHIAH PILLAI** : ஜில்லா போர்டில் நிதி இல்லாத காரணத்தினால் இரண்டு வருஷங்களாக இருக்கிற ரோடுகளைப் பராமரிக்கவும் முடியவில்லை. புதிதாக ரோடுகள் போடவும் முடியவில்லை. ஆகவே இதை கவனித்து அவற்றுக்கு தக்க பணம் ஒதுக்கியாவது ரோடுகளைப் பராமரிக் கவும், புது ரோடுகளை அமைக்கவும் சர்க்கார் முன்வருமா ?

**THE HON. SRI C. SUBRAMANIAM** : ஜில்லா போர்டு களின் நிதியைப் பொருத்த வரையில் அவர்களுடைய தேவையை அனு சரித்து போக்குவரத்துக்குப் பணம் ஒதுக்கப்படுகிறது. ஒவ்வொரு ஜில்லா விலும் அங்குள்ள நிதி நிலைமையை அனுசரித்துத்தான் புது வேலை எடுத்துக்கொள்ளப்படும்.

**SRI S. LAZAR** : நாட்டின் முன்னேற்றத்திற்கு நல்ல ரோடுகளும், டிரான்ஸ்போர்ட் வசதியும்தான் மிகமிகத் தேவை. இதற்கு ஏற்றபடி ஒரு திட்டத்தைத் தயாரிக்க அரசாங்கம் முன்வருமா ?

**THE HON. SRI C. SUBRAMANIAM** : இதை அனுசரித்துத் தான் மற்றவர்கள் பாராட்டும்படியாக நம் ராஜ்யத்தில் பல ரோடுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த ரோடு பராமரிப்பு வேலையும், புதிதாக ரோடு போடுகின்ற வேலையும் நடந்து வருகிறதென்று நினைக்கிறேன்.

SRI V. SUBBIAH : ஜில்லா போர்டுகளில் பணம் இல்லையென்ற நிலைமை இருப்பதால் பணத்தைக் கொடுத்து அவர்களையே செய்யச் சொல்வதைவிட, நேஷனல் ஹைவேஸ், பப்ளிக் வொர்க்ஸ் மூலமாக சர்க்காரே எல்லா ரோடுகளையும் எடுத்துக் கொள்ளும் உத்தேசம் உண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : பஞ்சாயத்துச் சட்டம் நிறை வேறும்போது இதைப் பற்றி விவரித்துக் கூறியிருக்கிறேன். எந்த எந்த ரோடு களை சர்க்கார் எடுத்துக் கொள்ளும், எந்த எந்த ரோடுகளின் பொறுப்பு பஞ்சாயத்து யூனியனுக்கும், எந்த எந்த ரோடுகள் கிராம பஞ்சாயத்தின் நிர்வாகத்திலும் வரும் என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : பிர்கா அபி விருத்தித் திட்டத்தின்கீழ் மண் ரோடுகள் போடப்பட்டன. உடனே கப்பி போட முடியாத காரணத்தினால் அவை அப்படியே விடப்பட்டு, இன்று வண்டி கூடப் போவதற்கு முடியாமல் இருக்கின்றன. ஆகவே கிராம ரஸ்தாக்களை சர்க்கார் அபிவிருத்தி செய்ய முன் வருவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : பஞ்சாயத்து யூனியன் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொண்டு அவைகளை நல்லமுறையில் நடத்த முடியும் என்று நினைக்கிறேன்.

*State Trading Scheme*

* 162 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state the details of the State Trading Scheme decided by the National Development Council in the first week of November 1958?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The details of the Scheme of State Trading in foodgrains are being worked out by the Government of India and they are awaited.

SRI N. K. PALANISAMI : ஸ்டேட் ட்ரேடிங் என்று சொல்லிக் கொண்டு 2 லட்சம் டன் கொள்முதல் செய்தவுடன் பாக்கியைக் கொள் முதல் செய்ய லைசென்சு வழங்கப்படுமா ? அல்லது எல்லாவற்றையும் சர்க்காரே கொள்முதல் செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதில் கனம் அங்கத்தினருக்கு எப்படி ஐயம் எழுந்தது என்று தெரியவில்லை. இந்தத் திட்டத்தின் விவரங்கள் எல்லாம் இப்போதுதான் பரிசீலனையில் இருப்ப தாகக் கூறினேன். அதற்கு முன்னதாக 2 லட்சம் டன் வாங்குவதாக ற்பாடு.

SRI S. LAZAR : இது சம்பந்தமாக நமது அரசாங்கம் மத்திய அரசாங் கத்திற்கு ரிப்போர்ட் தயாரித்துக் கொடுத்திருக்கிறதா ? அதன் அம்சம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த அரசாங்கம் ஸ்டேட் ட்ரேடிங் பற்றி எப்படி திட்டம் வகுப்பது என்று குறித்து மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறது. இதுவெல்லாம் பரிசீலனை செய்து முடிவு செய்கிற வரையில் அதைப்பற்றி வெளியிடுவது உசிதம் இல்லை.

SRI S. M. ANNAMALAI : கம்பு, சோளம், போன்ற பொருள்களின் விலையும் ஏறியிருக்கிறது. அவைகளையும் கூட வாங்குவதற்கு இந்தச் சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவைகளை வாங்குவது என்ற யோசனை அரசாங்கத்தினிடம் இல்லை.



SRI V. K. RAMASWAMY MUDALIYAR : May I know when this is likely to be finalised? After finalisation, will the Government be pleased to place a copy of the scheme on the table?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I cannot say when the State Trading Scheme will be finalised. It is being worked out and as soon as it is finalised certainly a copy will be placed on the table of the House.

SRI M. D. THIAGARAJA PILLAI : தலைவர் அவர்களே, நெல், அரிசி கொள்முதல் செய்வதில் முதல் ரேட்டாக, கடைசித் தரத்தில் இருந்து வி. 20 ரகத்தை மாற்றியிருக்கிறார்கள். ஆனால் தஞ்சாவூரில் கட்டைச் சம்பா நெல் அதிகம் விளைகிறது. அதை இரண்டாம் தரம் என்று நிர்ணயித்து விலையை குறைத்திருக்கிறார்கள். அதையும் உயர்த்த அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதிகமாக ஒரு ரகத்தை உற்பத்தி செய்வதனால் மட்டும் விலையை உயர்த்த முடியாது. தனித்தனியாக அந்த அந்த ரகத்தைப் பிரித்திருக்கிறார்கள். வியாபாரிகளையும், உற்பத்தி செய்கிறவர்களையும் சிவில் சப்ளை அதிகாரிகள் கலந்து கொண்டு நிர்ணயிப்பது.

***Economic prices for agricultural produce***

* 163 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any decision has been taken at the meeting of the National Development Council held in November 1958 to guarantee minimum economic prices for agricultural produce; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) In view of the answer to (*a*) above, this question does not arise.

SRI N. K. PALANISAMI : பதினைந்து ரூபாய், பத்தொன்பது ரூபாய் என்று ஒரு மணங்குக்கு நிர்ணயம் செய்திருக்கிறார்கள். அது அவசி யமா ? ஹோல் சேலாக இரண்டு லட்சம் டன் வாங்கினவுடன் நிறுத்தி விடுவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : செய்யப்பட்டிருக்கிற விலை நிர்ணயம் இரண்டு லட்சம் டன் வாங்குவதற்காக மட்டும் அல்ல. மொத்தமாக விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஹோல்சேல் விலை. ஏஜெண்டுகள் மூலமாகத்தான் விற்கவேண்டும் என்பது இல்லை. உற்பத்தியாளர்கள் நேரடியாக அரசாங்கத்திடமே விற்கலாம்.

SRI T. SAMPATH : May I know on what basis prices of paddy and rice were fixed? Have Government any intention of fixing floor prices for paddy and rice?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government have taken into account the price factors prevailing in the Southern States and fixed maximum prices.

[10th February 1959

SRI M. KALYANASUNDARAM : இப்போது நிர்ணயிக்கப் பட்டிருக்கிற விலையானது வியாபாரிகளிடமிருந்தும், மில் சொந்தக்காரர்களிடமிருந்தும் வாங்குவதற்காகவா ? அவர்கள் விவசாயிகளிடத்திலிருந்து என்ன விலைக்கு வாங்குவார்கள் ? இதனால் விவசாயிகள் நிலை பாதிக்கப்படாமலிருக்க சர்க்கார் என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித் திருக்கிறார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : வியாபாரிகள் இப்படி நிர்ணயிக்கப்பட்டிருக்கிற விலைக்குக் கேட்காவிட்டால் விவசாயிகள், அரசாங்கத்திடமே நேரிடையாக விற்கலாம் என்று சொன்னேன். ஆகவே வியாபாரிகள் விவசாயிகளைச் சுரண்ட முடியாது.

SRI K. PERIANNAN : விலைபொருளின் விலையைக் கட்டுப்படுத்தக் கூடிய நமது சர்க்கார் விவசாயத்திற்கு வேண்டிய இதர பொருள்களின் விலையையும் கட்டுப்படுத்துமா என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அது வேறு விஷயம். அதில் எந்த அளவு கட்டுப்படுத்த முடியும் என்று நான் சொல்வதற்கில்லை.

*Procurement of paddy*

* 164 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether there was a discussion in the National Development Council meeting held in November 1958 about the procurement of paddy in the State by the State Government; and

(b) the stand taken by the Government during the debate?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) This Government was in support of the proposal.

SRI N. K. PALANISAMI : வாங்குவதற்கு சீலிங் ப்ரைஸ் வைத்திருப்பதைப்போல விற்பதற்கும் சீலிங் ப்ரைஸ் நிர்ணயம் செய்யப்படவில்லையா ? இதனால் நடுவில் வியாபாரிகள் கொள்ளை லாபம் அடிக்க வசதி உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அரசாங்கத்திடமே நேரில் விற்கலாம் என்று நான் முன்பே சொல்லியிருக்கிறேன்.

SRI K. B. S. MANI : சர்க்கார் விலை நிர்ணயித்திருந்தாலும் பக்கத்து ராஜ்யங்களைச் சேர்ந்த வியாபாரிகள் அதிக விலைக்கு தஞ்சாவூர் ஜில்லா நெல்லை வாங்கிப்போகத் தயாராக இருக்கிறார்கள். அவர்களுக்கு விலை நிர்ணயம் செய்யப்படவில்லை. ஆகவே இப்படி வெளியில் இருந்து வியாபாரிகள் வந்து கொள்முதல் செய்வதைத் தடுக்க அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இரண்டொரு நாட்களுக்குள் கேரள அரசாங்கமும் விலை நிர்ணயம் செய்துவிடும்.

SRI N. K. PALANISAMI : நேரிடையாக சர்க்காரே ஹோல் சேலில் வாங்கலாம் என்றும் அப்படி வாங்குவதற்குப் போதிய ஆபீசர்களையும் இந்தச் சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கிறார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் சொன்ன பதிலில் அப்படி வாங்கிக்கொள்வதற்குத் தயார் என்றுதான் சொன்னேன். விவசாயிகள் அப்படி சர்க்காரிடத்தில் நேரிடையாக விற்க முன் வரமாட்டேன் என்கிறார்கள் என்பதுதான் புகார். அவர்கள் பதுக்கி வைத்துக் கொள்கிறார்கள் என்பதுதான்.



10th February 1959]

SRI N. K. PALANISAMI : When fixing the price of paddy to be procured from producers, will the Government take into consideration the cost of production in the seed farms also?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Certainly, Sir, the cost of production, that is the cost of seeds that are supplied to the agriculturists and other items contributing towards the cost of production are being taken into account.

SRI S. LAZAR : இந்த திட்டம் நல்ல முறையிலே வேலைசெய்ய வேண்டுமென்று சொன்னால் நாம் கொள்முதல் செய்வது போலவே தென் மண்டலத்தைச் சேர்ந்த மற்ற மாகாணங்களும் கொள்முதல் செய்யக்கூடிய வகையில் ஈடுபடவேண்டும். அப்படி இருந்தால் அதற்கு நமது அரசாங்கம் என்ன செய்திருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கொள்முதல் செய்கிறார்களோ இல்லையோ, நாம் குறிப்பிட்டது போலவே ஆந்திரா மாகாணத்திலும், மைசூர் மாகாணத்திலும் அதிக பட்ச விலை நிர்ணயிக் கப்பட்டிருக்கிறது. அந்த அரசாங்கங்களிலே கொள்முதல் செய்கின்றன. கேரளத்தில் சீக்கிரத்தில் அதிகபட்ச விலை நிர்ணயிக்கப்படும். நான் டில்லிக்கு போயிருந்தபோது கேரள மந்திரியுடன் பேசியபோது அவர்களும் கொள்முதல் செய்வதாக சொன்னார்கள்.

SRI N. K. PALANISAMI : கொள்முதல் செய்யவேண்டியது இரண்டு லட்சம் டன் நெல் என்று முடிவுக்கு வரக்காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இரண்டு லட்சம் டன் போதும் என்று அல்ல. கொள்முதல் செய்வதினால் அல்ல. வேறு காரணங்களை ஒட்டி. அதிகபட்ச விலை நிர்ணயித்து அதை அமுல் நடத்துவதற்கு நாமே நடந்த இருந்தால் நியாயவிலை கடைகள் திறப்பதற்கும்—நியாயவிலை கடைகள் என்று சொல்லும்போது மற்ற கடைகள் எல்லாம் அநியாயவிலை கடைகளாக இருப்பதாகத்தான் குறிப்பிட வேண்டி இருக்கிறது.—அடுத்த ஆண்டில், உற்பத்தி குறைந்தால் அதற்குத் தயாராக இருக்கவேண்டுமென்று பல காரணங்களை ஒட்டி கொள்முதல் செய்யப் படுகிறது.

SRI C. NATARAJAN : கொள்முதல் செய்வதற்கு ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர் கிரேட் அதிகாரியைப் போட்டிருப்பதாக தெரிகிறது. கொள்முதல் செய்யும்போது ஈரமாக இருக்கிறதா அல்லது சரியானபடி நெல் இருக்கிறதா என்பதுகூட அவர்களுக்குத் தெரியாது. ஆகையால் விவசாயம்பற்றி தெரிந்த அதிகாரிகளை நியமித்து கொள்முதல் செய்ய அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : விவசாய அதிகாரிகளைக் கலந்துகொண்டுதான் அவர்கள் எல்லாம் பரிசீலனை செய்து முடிவு செய்வார்கள்.

SRI T. SAMPATH : கனம் அமைச்சர் அவர்கள் கேரள அரசாங்கமே விலையை நிர்ணயிப்பதாகச் சென்னார்கள். அப்படி செய்யும்போது நம் அரசாங்கத்தின் விலையை அனுசரித்து அந்த விலைகள் இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவ்வாறு தான் இருக்கும். அங்கே எவ்வாறு நிர்ணயித்திருக்கிறார்கள் என்று பார்த்து, அதை ஒப்பிட்டுத்தான் விலையை நிர்ணயம் செய்வார்கள்.

[10th February 1959]

SRI P. G. MANICKAM: நெல் முதலியவைகளை பதுக்கிவைத்து கள்ள மார்க்கட்டில் விற்கும் வியாபாரிகள்மீதும் விவசாயிகள் மீதும் என்ன நடவடிக்கை எடுக்க திட்டமிட்டிருக்கிறார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: யாராவது பதுக்கி வைத்திருந்தால் அவர்கள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். முக்கியமான நடவடிக்கை பதுக்கப்பட்ட நெல்லை எடுத்துக்கொள்வது.

SRI M. KALYANASUNDARAM: தேசீய அபிவிருத்தி கவுன்சில் உணவு தான்யத்தின் மொத்த வியாபாரம் பூராவுமே அரசாங்கம் எடுத்து நடத்தவேண்டுமென்று சிபார்சு செய்திருந்தும் இப்போது இரண்டு லட்சம் டன் மட்டும் வாங்க முடிவு செய்திருப்பதன் காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: தேசிய அபிவிருத்தி கவுன்சில் சிபார்சின் மீது செய்யப்பட்ட ஸ்டேட் டிரேடிங் ஸ்கீம் என்று சற்று முன்தான் சொன்னேன். ஸ்டேட் டிரேடிங் ஸ்கீம் எவ்வாறு உருவாக்குவது என்று பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. அதுவரையில் காத்துக்கொண்டிராமல் தற்போது இரண்டு லட்சம் டன் வரை வாங்கலாம் என்று ஏற்பாடு செய்து வருகிறோம்.

*Stocks of foodgrains with wholesalers*

* 165 Q.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Home be pleased to state whether any action has been taken on the decision of the National Development Council held during November 1958, regarding the declaration of stocks of food-grains with wholesalers?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: This Government have issued the Madras Foodgrains Dealers' Licensing Order, 1958, under which all dealers who carry on business in wheat, rice and paddy (including their products) in quantity of 50 maunds or more at any one time will have to submit to the Commercial Tax Officer concerned a fortnightly return showing the stocks held at the beginning of each fortnight, quantities purchased and sold during the fortnight and the balance held at the end of the fortnight (including the stocks pledged by them).

SRI N. K. PALANISAMI: இந்த உத்திரவின் காரணமாக பல மில்கள் கொள்முதல் செய்வதை நிறுத்தியிருக்கிறார்கள். வேண்டுமென்று இந்த உத்திரவுக்குக் கீழ்படியா விட்டால் லைசென்சை கான்சல் செய்யப் படுமென்று ஒரு உத்திரவு போடமுடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இந்த நிலைமைக்குச் செல்லும்போது பரிசீலனை செய்து தகுந்த நடவடிக்கை எடுக்கும் அவசியம் இருந்தால் லைசென்சும் ரத்து செய்யப்படும்.

SRI A. A. RASHEED: What is the price that would be paid to stockholders by the Government?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The price that has been fixed for the various varieties of paddy will apply to the stocks that was there on the 2nd February.



10th February 1959]

SRI M. R. KANDASWAMI MUDALIYAR: சர்க்கார் உணவு விலை கட்டுப்பாடு காரணமாக விவசாயிகளுக்கும் கட்டுபடியாகவில்லையானால் அது விவசாயத்தை பாதிக்காதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இப்பொழுது இந்தப் பிரச்னை எழவில்லை. நியாய விலையிலேதான் அதிகபட்ச விலையாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

SRI N. K. PALANISAMI: நிவாரணக்கடைகள் வைத்துக்கொள்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அவைகளுக்கு கொள்முதல் செய்யும்போது அரிசியை சப்சிடைஸ்ட் ரேட்டில் விற்க ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Subsidised rate-ல் விற்பதற்கு வற்புறுத்த வேண்டும் என்று அரசாங்கத்திற்கு இல்லை. அப்படி விற்கவேண்டும் என்ற அவசியமும் இல்லை. இப்பொழுது அதிகபட்ச விலை நிர்ணயித்திருக்கிறோம். நியாயவிலையில் எல்லாவிடத்திலும் விற்கவேண்டிய விலை அதிகபட்ச விலையாக நிர்ணயித்திருக்கிறோம். இதை அமுலாக்க வேண்டும். நியாயவிலை கடைகள் அமைக்க வேண்டிய அவசியம்

MR. SPEAKER: Shall we take up the remaining three questions on the same subject (168, 193 and 194) also now, if the Hon. Minister has no objection?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Yes, Sir. They may be taken up now.

*State Trading Corporation*

* 168 Q.—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to entrust the trading in grains to the State Trading Corporation?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No, Sir.

SRI A. A. RASHEED: Will the State Trading Schemes be confined to this State only or will it function as a unit for the whole of India?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I have said that we have not yet finalised the scheme of State Trading but perhaps under the scheme which we contemplate, it will have its own organization.

SRI S. LAZAR: இப்பொழுது இருக்கக்கூடியமுறையில், சர்க்கார் கொள்முதல் செய்யவேண்டுமென்றிருக்கிறது. மில்கள் வாங்கக்கூடிய விலை அந்தந்த இடத்தைப்பொறுத்திருக்கிறது. அதற்குச் சர்க்கார் என்ன செய்யப் போகிறார்கள்? சர்க்கார் எல்லோரிடமிருந்தும் ஒரே விலையில் வாங்குமா ? அல்லது போக்குவரத்திற்குத் தகுந்தபடி எதாவது ஈடு செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இதைப்பற்றி சில மில்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் சர்க்கார், அவர்களை எங்கிருந்து நெல் வாங்கிக்கொண்டுவருகிறார்கள் என்றும், அவர்கள் எவ்வளவு வண்டி சத்தம் கொடுத்துவருகிறார்கள் என்றும் பார்த்து இதை நிர்ணயிப்பது எவ்வாறு என்று பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

SRI M. KALYANASUNDARAM: இப்பொழுது இரண்டு லட்சம் டன் கொள்முதல் செய்யப்படும் என்றும் சர்க்கார் மொத்த வியாபாரம் செய்வது பரிசீலனையில் இருக்கிறது என்றும் கூறினார்கள். சர்க்காரே மொத்த வியாபாரம் பூராவும் எடுத்து நடத்த ஏற்பாடுகள்பற்றி எப்போது இறுதி முடிவு செய்யப்படும்? இந்த அறுவடை காலத்திற்குள்ளேயே செய்யப் படுமா? இல்லையென்றால் எவ்வளவு காலம் ஆகும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இந்த அறுவடை காலத்திற்குள்ளேயே முடிவு எடுக்கவேண்டுமென்று சொல்ல முடியாது மற்ற ராஜ்யங்களையும் இதைப்பற்றி கேட்டிருக்கிறார்கள். இவைகளை பரிசீலனை செய்து பிறகு அவர்களுடன் முடிவு செய்யவேண்டும். ஏனென்றால் ஒவ்வொரு ராஜ்யத்திலும் தனித்தனியாக ஒரு ஏற்பாடு செய்துகொள்வது சரி அல்ல.

SRI K. VINAYAKAM: Sir, is it not a fact that State Trading Schemes are undertaken with a view to helping the consumers in a state of emergency, when food becomes scarce and if so, what useful purpose would be served when the tense situation eases? So, will the Government expedite the scheme of trading in foodgrains as early as possible, as there is a state of emergency now?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: This is a big comprehensive scheme. As it is a new scheme, it has to be examined in all its aspects and there should not be any hurry in finalising it. But in order to afford relief to the consumers and getting over the present situation, the Government have already taken steps to fix the maximum prices and also purchase certain quantities of rice and paddy.

SRI A. A. RASHEED: Did the Government receive any protest from the foodgrain dealers and if so, what are their grounds of protest?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Protests from vested interests are to be expected.

SRI A. VEDARATHNAM: கேரளத்திற்குத் தேவையான தானியங்களை அங்கேயுள்ள தனிப்பட்ட வியாபாரிகளோ அல்லது அரசாங்கமோ இங்கிருந்து நேரில் கொள்முதல் செய்யாதபடி நமது அரசாங்கமே அவர்களுக்குத் தேவையான உணவு தானியங்களை இங்கிருந்து ஸப்ளை செய்ய முன்வருமா ? அவர்கள் நேரிடையாக இங்கிருந்து வாங்கினால் அவர்கள் அதிக விலை கொடுக்க நேரிடுகிறது. இதைத் தடுப்பதற்காக தாங்களே அவர்களுக்காகக் கொள்முதல் செய்ய நமது அரசாங்கத்தார் முன்வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கேரளத்திலும் உணவு தானியங்களுக்கு அதிகப் பட்ச விலை நிர்ணயிக்கப்படும் என்று சொன்னேன். மேலும், அங்கே அது நம் மாநிலத்தின் அதிகப் பட்ச விலையை யொட்டியே நிர்ணயிக்கப்படும் என்றும் சொன்னேன். அரிசியைக் கொள்முதல் செய்வதை, ஸ்டேட் ட்ரேடிங் கார்ப்பொரேஷன் ஆரம்பிக்கப்பட்ட பிறகு கேரள அரசாங்கமே ஏற்றுக்கொள்ளும்.

MR. SPEAKER: Question Nos. 193 and 194 may be taken up together as they relate to the same subject.



*State Trading in Foodgrains*

* 193 *Q*.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have received any scheme from the Planning Commission regarding State Trading in foodgrains; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes.

(*b*) It is not in the public interest to reveal the details of the scheme at this stage.

* 194 *Q*.—SRI P. G. MANICKAM: கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சென்னை சர்க்காரே உணவு தான்ய வியாபாரம் நடத்தும் திட்டம் பற்றிய பரிசீலனை ஏதாவது நடத்தப்பட்டு வருகிறதா ?

(ஆ) இது சம்பந்தமாக மத்திய சர்க்காரோடு சென்னை சர்க்காரால் நடத்தப்பட்டு வரும் கடிதப்போக்குவரத்து விவரங்கள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes.

(*b*) It is not in the public interest to reveal the correspondence with the Government of India at this stage.

SRI M. D. THIAGARAJAN: மில் சொந்தக்காரர்கள் வெளி மாநிலங்களிலிருந்து லாரிகளில் உணவு தானியங்களை அதிகமான விலைக்கு வாங்கிவந்தார்கள். இப்போது, அரசாங்கத்தார் உணவு தானியங்களுக்கு அதிகபட்ச விலை நிர்ணயித்திருப்பதால் அவர்கள் வெளி மாநிலங்களிலிருந்து அவைகளை வாங்கிவரத் தயங்குகிறார்கள். இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் என்ன ஏற்பாடு செய்ய உத்தேசித்திருக்கிறது.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கேரளாவில் அதிகப்பட்ச விலை இன்னும் நிர்ணயிக்கப்படாமல் இருப்பதால் இவ்வாறெல்லாம் சொல்லப்படுகிறது. கேரளாவில் சீக்கிரத்திலேயே அதிகப்பட்ச விலை நிர்ணயிக்கப்படும் என்று ஏற்கெனவே சொன்னேன். நமது ராஜ்யத்தில் அதிகப்பட்ச விலை இந்த மாதம் 2-ம் தேதியிலிருந்து தான் அமுலுக்கு வந்திருக்கிறது. ஒருசில நாட்கள் வரை இந்தக் கோளாறுகள் இருக்கலாம். இந்தக் கோளாறுகள் மிகைப்படுத்தப்படுகின்றன என்று தான் நான் நினைக்கிறேன்.

SRI K. B. S. MANI: தென் மண்டலத்திலுள்ள மற்ற ராஜ்ய அரசாங்கங்கள், தங்களுடைய பற்றுக்குறையை சரிப்படுத்துவதற்காக நம்முடைய அதிகப்பட்ச விலையைவிட அதிகமாக தங்கள் ராஜ்யங்களில் அதிகப் பட்ச விலையை நிர்ணயித்துவிட்டால், அப்போது நமது வியாபாரிகளும் விவசாயிகளும் பாதிக்கப்படுவார்கள். நமது ராஜ்ய வியாபாரிகளும் விவசாயிகளும் அவ்வாறு பாதிக்கப்படக்கூடிய காலத்தில் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க நமது அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்திருக்கிறதா ?

MR. SPEAKER: இது ஒரு "ஹைபாதெடிகல்" கேள்வியாக இருக்கிறது. இதற்கு கனம் அமைச்சர் பதிலளிக்கப்போகிறாரா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இதற்கு பதிலளிக்கிறேன். கேரள அரசாங்கத்தில் நிர்ணயிக்கப்படும் அதிகப்பட்ச விலை நமது ராஜ்யத்தின் அதிகப்பட்ச விலையை ஒட்டியிருக்கும். அந்த அதிகப் பட்ச விலையையும் கேரள அரசாங்கம் இன்னும் நிர்ணயிக்கவில்லை. அதை மத்திய அரசாங்கம்தான் நிர்ணயிக்கிறது.

### The Ashok Mehta Foodgrains Enquiry Committee

* 166 Q.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the Ashok Mehta Foodgrains Enquiry Committee has recommended in its report the building up of buffer stocks by internal purchases and imports to check the rise in the prices of foodgrains; and

(b) if so, the steps taken by the Government on the above recommendations of the Committee?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Yes.

(b) The Government of India are builidng up a Central reserve by making internal procurement and by import. This Government have also decided to procure 2 lakhs of tons of rice from the ensuing harvest this year.

SRI N. K. PALANISAMI: "பப்பர் ஸ்டாக்" வைத்துக் கொள்வதன் நோக்கம், பொருளின் விலை உயரக்கூடிய காலத்தில் அதை ஓரளவு குறையச் செய்வதற்கு இந்த ஸ்டாக் உதவும் என்பதுதான். அந்த அடிப்படையில் பார்த்தால், விலை உயர்வு காலத்தில் மாநிலத்தில் எல்லா இடங்களிலும் நியாய விலைக் கடைகளை வைத்து மக்களுக்கு உணவு தானியங்களை நியாய விலையில் கிடைக்கச் செய்யவேண்டும். சர்க்காரிடம் அப்படிப்பட்ட திட்டம் ஏதாவது இருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இது சம்பந்தமாக முன்பே சொன்னேன்; முதலில் அரிசியைக் கொள்முதல் செய்ய வேண்டும்; அப்படி இல்லாவிட்டால் நெல்லை வாங்கி அதை அரிசியாக்க வேண்டும்; அதற்குப் பிறகு, அவசியமான அளவிற்கு நியாய விலைக் கடைகளை அமைக்கவேண்டும்.

SRI M. KALYANASUNDARAM: இந்த நாட்டில் இறக்குமதி செய்யப்படும் தானியத்திலிருந்து எவ்வளவு தானியம் நமது ராஜ்யத்திற்கு ஒதுக்கப்படும் என்பதை கனம் அமைச்சர் தெரிவிப்பாரா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இறக்குமதி செய்யப்படும் தானியத்திலிருந்து நமது ராஜ்யத்திற்குப் பங்கு தேவையில்லை. நமது ராஜ்யத்திற்குப் போதுமான உணவு தானியம் இந்த ராஜ்யத்திலேயே உற்பத்தியாகிறது. ஆனால், சென்னைக்கு ஆந்திராவிலிருந்து மட்டும் முக்கியமாக நெல்லூர் அரிசி வந்து கொண்டிருக்கிறது. இந்த மாதம் முதல் தேதியிலிருந்து அது கொஞ்சம் நின்றிருக்கிறது. ஏதோ, கொஞ்சம் அதிக விலை கிடைக்குமா என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். இந்த நிலைமையும் விரைவில் மாறிவிடும் என்று எதிர்பார்க்கிறேன்.

MR. SPEAKER: Questions 167 and 197 may be taken up together as they relate to the same subject.

### Cost of living

* 167 Q.—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the steps recommended by this Government to the Central Government to bring down the cost of living; and

(b) the steps this Government took to bring down the prices?



THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) This Government have not recommended to the Government of India any special steps to bring down the cost of living;

(b) The cost of living is dependent not only on the prices of foodgrains but also on other factors. So far as prices of foodgrains are concerned, the National Development Council has decided that wholesale trading in foodgrains should be taken over by the State Governments. The Government of India are working out the details of the scheme and this Government will take necessary steps to implement the scheme on its receipt. Meanwhile this Government have decided to procure tentatively 2 lakhs tons of rice from the ensuing harvest for distribution through fair price shops. It has also been decided to fix controlled prices for paddy and rice at wholesale level. As the prices of other agricultural commodities normally centre round the prices of paddy and rice, it may be expected that with the control of the prices of paddy and rice, the prices of other commodities will also be held down.

### Cost of living index

* 197 Q.—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the present cost of living index;

(b) the trend in the cost of living;

(c) the commodities that are mainly responsible for the rise or fall and the reasons therefor; and

(d) whether the availability of these indicate a further rise in the course of the next year or a fall in the cost of living index?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) The cost of living index for December 1958 is 430.

(b) The trend in the cost of living index is upward, i.e., the cost of living index increased from 100 in 1939 to 351 in 1953 except for a decline in 1955 to 321 and it again rose to 430 in December 1958.

(c) Rice, dhal, meat, coconut, chillies, gingelly and firewood have contributed principally to the increase in the index, due to the rise in their prices.

(d) With the commencement of harvests and large arrivals of new crop the price of rice is expected to fall and consequently, the cost of living index is also expected to fall to some extent.

SRI K. SATTANATHA KARAYALAR: உணவு தானியங்களின் விலையேற்றத்தால் மட்டுமன்றி இதர பொருள்களின் விலையேற்றத்தாலும் வாழ்க்கைச் செலவுப் புள்ளி உயர்ந்திருக்கிறது என்று கனம் அமைச்சர் சொன்னார். விலையேறியுள்ள இதர பொருள்களுக்கும் விலைக் கட்டுப்பாடு செய்தோ வேறு விலைவாசி உயர்வதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இதற்கு தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

[10th February 1959

SRI K. PONNIAN : இவ்வாறு வாழ்க்கை செலவுப் புள்ளி உயரும் காலத்தில் ஊழியர்களுக்கு, டியர்னஸ் அலவன்ஸுடன் வாழ்க்கைச் செலவுப் புள்ளி உயர்வுக்கு என்று ஓரளவு தொகையைச் சேர்த்துக் கொடுப்பதற்கு வகை செய்யும் சட்டம் இருக்கிறதா ? அப்படியானால் ஊழியர்களுக்கு அவ்வாறு அலவன்ஸ் கொடுத்துக் கொண்டிருக்கிறார்களா ?

MR. SPEAKER : ' யார் ' கொடுத்துக் கொண்டிருக்கிறார்களா என்று கேட்கிறீர்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் இதை என் சகா கனம் தொழில் அமைச்சரிடம் கேட்டால் அவர் பதில் அளிப்பார்.

SRI M. KALYANASUNDARAM : விலை ஏறக்கூடிய இன்னும் சில முக்கியமான பொருள்கள் விறகும் அடுப்புக் கரியும் ஆகும். அவைகளின் விலைகளைக் குறைக்க சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் கூறியது உண்மைதான். விறகின் விலை உயர்வைத் தடுப்பதற்கு விறகுகள் அதிகம் கிடைக்கச் செய்யவேண்டும். இதற்காக, கிராமக் காடுகளிலும் மற்ற இடங்களிலும் விறகுக்கு வேண்டிய மரங்கள் வளர்க்கப் படுகின்றன. மேலும், நெய்வேலித் திட்டம் நடக்க ஆரம்பித்து விட்டால் விறகுச் செலவை (விறகின் உபயோகத்தை) ஓரளவு குறைக்கலாம்.

SRI A. GOVINDASAMY : விலைவாசிகள் உயர்விற்குக் காரணஸ்தர்களாக இருப்பவர்கள் பதுக்கல்காரர்கள்தான் என்பது தெரிந்திருந்தும், பதுக்கல்காரர்களைக் கண்டு பிடிப்பதற்கு அரசாங்கம் இதுவரையில் நடவடிக்கை எடுக்காததற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பதுக்கல் அதிகமாக இருக்கிறது. விலைவாசிகள் உயர்விற்கு அது தான் காரணம் என்று அரசாங்கம் கருதவில்லை. பதுக்கல்காரர்கள் சம்பந்தமாக கனம் அங்கத்தினரிடம் தகவல் இருந்தால் அதை நான் வரவேற்கிறேன். அவர் தகவல் கொடுத்தால், வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கலாம்.

SRI A. A. RASHEED : What was the cost of living index figure in December 1957 ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I am sorry, Sir, I don't have that figure with me now.

SRI M. KALYANASUNDARAM : சற்று முன்பு கனம் அமைச்சர் நெய்வேலித் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டார். சென்னை நகரத்திற்கு " காஸ் " ஸப்ளை செய்யக்கூடிய திட்டம் சர்க்காரின் ஆலோசனையில் இருக்கிறதா ? அது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அம்மாதிரியான திட்டம் இப்போது அரசாங்கத்தின் ஆலோசனையில் இல்லை. ' ப்ரிகெட்ஸ் ' சம்பந்தமாக நெய்வேலித் திட்டத்தைக் குறிப்பிட்டேன். ' ப்ரிகெட்ஸ் ' தேவை அதிகமாக இருக்கிறது. அதிகமாக மின்சாரம் உபயோகிக்கும் நாடுகளில் கூட ' ப்ரிகெட்ஸ் ' அதிகமாகத் தேவைப்படுகின்றன. நெய்வேலித் திட்டம் நடக்க ஆரம்பித்தால் நமக்கு ' ப்ரிகெட்ஸ் ' அதிகமாகக் கிடைக்கும் என்றுதான் நான் சொன்னேன்.



10th February 1959]

" *Maniyamkaram* "

*169 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether " maniyamkaram " is collected still in the Kanyakumari district; and

(b) if so, what is the agency that collects it?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) Yes Sir.

(b) The Sanketham staff working under the Collector of Trivandrum is the agency by which the maniyamkaram dues are being collected. Arrears of maniyamkaram being recoverable as arrears of land revenue under the Travancore-Cochin Revenue Recovery Act, 1951. This Government have agreed to collect them in cases where the application of coercive processes under that Act is necessary for such collection.

SRI T. T. DANIEL : Sir, is it not a fact that at present, our Government have issued a stay order to the Collectors to stay the recovery of maniyamkaram?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir. That is so.

SRI K. SATTANATHA KARAYALAR : இதுபோன்று மணியக்கரம் கேரள பகுதிகளில் வசூலிக்கப்படுகிறது. அதை நிறுத்துவதற்கு அவர்கள் ஒரு மசோதா சமீப காலத்தில் பிரசுரம் செய்திருப்பது சர்க்கார் கவனத்திற்கு வந்ததா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : நம் அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில் சில நில சொந்தக்காரர்கள் இது பற்றி முறையிட்டார்கள். அதை பரிசீலனை செய்து அங்கிருந்து கலெக்டர் ரிப்போர்ட் அனுப்பியிருக்கிறார். அதையெல்லாம் பரிசீலனை செய்து இதை மாற்றியமைக்க முடியுமா என்று ஆராய்ந்து கொண்டிருக்கிறோம்.

SRI K. VINAYAKAM : Sir what exactly is this ' maniyamkaram '? What is its connotation in Madras Revenue parlance?

MR. SPEAKER : I think the Hon. Member must put a separate question and give notice.

SRI T. S. RAMASWAMY PILLAI : Sir, may I know whether the Government are aware of the fact that the Kerala Government are bringing forward a Bill to abolish this maniyamkaram tax?

THE HON. SRI M. A. MANICKAVELU : I am not aware of what the Kerala Government are doing. As far as our Government are concerned, certain representations were made, and they are being examined in the light of the report of the Collector.

[10th February 1959

*Sales-tax on milk*

*170 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : கனம் கைத் தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) ராஜ்ய பால் உற்பத்தியாளர் யூனியனிடமிருந்தும், இதர பால் உற்பத்தியாளர்களிடமிருந்தும் பால் விற்பனைக்கு வரி எடுபட வேண்டுமென்று கோரி சமீபத்தில் வேண்டுகோள் வந்ததா ?

(ஆ) அப்படியானால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) No such representation has been received recently.

(ஆ) Does not arise.

SRI A. GOVINDASAMY : காங்கிரஸ் ஆட்சி வந்தால் பாலும் தேனுமாக ஓடுமென்று சொன்னார்கள். ஆகவே பாலுக்காவது வரியைக் குறைக்க அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : காங்கிரஸ் அரசாங்கத்தில் வரி போட்டாலும் பாலும் ஓடும், தேனும் ஓடும்.

*House-sites for Harijans*

*171 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Public Works be pleased to state the steps taken by the Government to assign house-sites to Harijans in Erode taluk, Coimbatore district?

THE HON. SRI P. KAKKAN : Under a rehabilitation scheme for relief of seepage-affected areas under the Bhavani Project, acquisition of house-sites was made in 57 cases in Erode taluk in Coimbatore district. Construction of colonies is in progress in 9 cases. In the other cases, steps are being taken to rehabilitate the Harijans.

SRI N. K. PALANISAMI : ஹரிஜனங்களுக்கு மனைகள் கட்ட இடங்கள் கோரி சுமார் ஆயிரம் விண்ணப்பங்களுக்கு மேல் வந்திருந்தும் இதுவரையில் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. ஆகவே உடனடியாக வீடுகள் கட்ட இடம் கொடுப்பதற்கான உத்திரவை சர்க்கார் சீக்கிரம் போடுமா ?

THE HON. SRI P. KAKKAN : நான் சொன்ன பதிலில் 57 கேஸ்களில் நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள் என்று கூறினேன். நான் சுற்றுப் பிரயாணம் செய்தபோது கலெக்டரிடம் சொல்லி, பவானி ப்ராஜெக்ட் ஏரியாவில் ஹரிஜனங்களுக்கு மனைகட்டுகள் வழங்க துரிதமாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றும், ஒதுக்கப்பட்டிருக்கும் பணத்தை மிச்சப் படுத்தக்கூடாதென்றும் சொல்லியிருக்கிறேன்.

SRI M. K. SOMASUNDARAM : ஈரோடு தாலூகாவில் மொத்தம் எத்தனை பேர்களுக்கு மனைக்கட்டுகள் வழங்க வேண்டுமென்று கணக் கெடுத்திருக்கிறார்கள் ? எத்தனை பேர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது ? இன்னும் எத்தனை பேர்களுக்கு வழங்கப்படும் ?

THE HON. SRI P. KAKKAN : தனிக் கேள்வி வேண்டும்.

SRI P. G. MANICKAM : லோயர் பவானி வாய்க்கால் நீர் கசிவால் சேதமடைந்த வீடுகளைக் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட தொகையில் மிச்சம் இருக்கிறதா, அல்லது எல்லாம் செலவழிக்கப்பட்டு விட்டதா ?

THE HON. SRI P. KAKKAN : தனிக் கேள்வி வேண்டும்.



10th February 1959]

*Facilities for Marakanam fishermen*

*172 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state the various facilities provided for the fishermen near Marakanam Sea Coast in Tindivanam taluk in South Arcot district?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : Four Fishermen Co-operative Societies have been set up in the Marakanam Coastal area, one each at (i) Kaipanikuppam, (ii) Anamandaikuppam, (iii) Koonimedukuppam and (iv) Mudaliar Chavadikuppam. The main purpose in the formation of these societies is to provide the members with loan finance for purchase of fishery requisites. Long-term loans to the extent of about Rs. 25,000 have been distributed to the fishermen in 1958 through two of these societies for purchase of fishing implements. During 1957–58, yarn worth Rs. 10,000 was distributed to the fishermen through the four societies at 50 per cent of the cost. The society at Koonimedu has been granted Rs. 4,000 partly as loan and partly as subsidy, for the construction of a fish-curing yard-*cum*-godown.

SRI A. GOVINDASAMY : இந்த பகுதியில் மீன் பிடிப்பவர்களுக்கு பாட்லோ போட்களும், நைலான் வலைகளும் வழங்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இது வரையில் இது கொடுக்கவில்லை.

MR. SPEAKER : 173-வது கேள்வியையும், 192-வது கேள்வியையும் ஒன்றுசேர்த்து எடுத்துக்கொள்ளலாம். ஸ்ரீ பழனிசுவாமி, ஸ்ரீ கரயாளர், ஸ்ரீ சம்பத், ஸ்ரீ ரஷீத், ஸ்ரீ லாஸர் இந்த ஐந்து பேர்களும் கேட்டிருக்கிறார்கள்.

*Yellow journalism*

*173 *Q.*—SRI N. K. PALANISAMI :
SRI K. SATTANATHA KARAYALAR :
SRI T. SAMPATH :
SRI A. A. RASHEED :
} Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to bring in legislation to curb yellow journalism in this State; and

(*b*) if so, the stage at which the matter now stands?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) The Government are examining proposals to amend the relevant provisions of the Indian Penal Code so as to cover publication of indecent or scurrilous matter or matter intended for blackmail.

(*b*) A draft Bill is being prepared and the Bill will be introduced in the Legislature in due course after it is finalised.

### *Yellow Journals*

* 192 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government are aware of the obscene and slanderous journals published and sold in public in the State; and

(*b*) if so, the steps taken against the publication of such journals?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) A few "Yellow" journals disseminating obscene and scurrilous matter among the public in the State have been brought to the notice of the Government.

(*b*) To curb such journals, the Government have, whenever occasion demanded it, launched prosecutions under Section 292, Indian Penal Code, against the persons responsible for such publications. The Government are also examining proposals to amend the relevant provisions of the Indian Penal Code so as to cover publication of indecent or scurrilous matter, or matter intended for blackmail.

SRI A. A. RASHEED : Sir, is the Hon. Minister aware that the number of these journals has increased recently?

THE HON. SRI C. SUBRAMANIAM : I am not in touch with these journals (laughter). Perhaps it may be so.

MR. SPEAKER : I will give chance to put supplementaries to those who have given notice of questions. If there is time, I will give chance to others also. Sri Lazar will now put his supplementary.

SRI N. K. PALANISAMI : சர்க்கார், இந்த மாதிரியுள்ள "எல்லோ ஜர்ணல்களை"-யும் தடை செய்ய ஒரு மசோதா கொண்டு வர நாலைந்து வருடங்களுக்கு முன்பாகவே ஒரு ஏற்பாடு செய்தார்கள். இதுவரையில் அதை ஏன் கொண்டுவரவில்லை? தாமதத்திற்கு காரணம் என்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதற்கு முன்னால், "பிரஸ் (அப்ஜக்ஷனபிள் மாட்டர்ஸ்) ஆக்ட்" என்ற சட்டம் இருந்தது. அந்தச் சட்டம் இருக்கிற வரையில் அதன் கீழ் நடவடிக்கைகள் எடுக்க முடிந்தது. இப்பொழுது அந்தச் சட்டம் அமுலில் இல்லை. இப்பொழுது நாமே ஒரு தனிச்சட்டம் நம் ராஜ்யத்திற்கு ஏற்படுத்த வேண்டுமென்ற முறையில் ஒரு சட்டம் தயாரித்துக் கொண்டிருக்கிறோம், ஐ.பி.ஸி. யைத் திருத்துவதற்கும் கூடிய சீக்கிரம் சட்டம் கொண்டுவரப்படும்.

SRI S. LAZAR : "அப்சீன்" படங்களையுடைய புத்தகங்கள் எல்லாயிடங்களிலும் பகிரங்கமாக விற்கப்படுகிறது. இவைகளை தடுப்பதற்கான சட்டம் வருவதற்கு சிறிது தாமதம் ஏற்பட்டாலும் இதுபோன்று பகிரங்கமாக விற்பதைத்தடுக்க உடனடியாக ஏதாவது நடவடிக்கைகள் எடுக்க சர்க்கார் முன்வருமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : வெறும் நடவடிக்கைகள் எடுப்பது முடியாத காரியம். சட்டத்திற்கு உட்பட்டுத்தான் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். இப்பொழுதுள்ள சட்டத்தில் அந்த அதிகாரம் இல்லாததால் அந்தச் சட்டத்தை திருத்தவேண்டுமென்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.



SRI A. VEDARATHNAM : இந்நாட்டிலுள்ள பத்திரிகைகளில் வருகிற செய்திகளை எல்லாம் உண்மையென்று நம்புகிற பழக்கம் ஜனங்களிடத்திலே இருக்கிறது. அந்நிலையில் அநேகம் பத்திரிகைகள் உண்மைக்கு மாறான செய்திகளை பிரசுரிக்கின்றன. சட்ட சபையில் நடந்த விஷயங்களைக்கூட நடந்ததற்கு மாறாக பிரசுரம் செய்ததின் மேல், அதின் மேல் நடவடிக்கைகள் எடுக்க முடிந்தது. சாரம் இருந்தால் அதன் வெளியிலுள்ள காரியங்களை உண்மைக்கு மாறான விதத்தில் அதேபோன்று பிரசுரித்தால் வரப்போகிற சட்டத்தில் அவைகளின் பேரில் நடவடிக்கைகள் எடுக்க அரசாங்கம் வகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : உண்மைக்கு மாறுபட்ட செய்திகள் எல்லாவற்றின் மீதும் நடவடிக்கைகள் எடுப்பது என்பது முடியாத காரியம். ஆபாச பிரசுரங்கள், மக்களின் ஒழுக்கத்தைக் கெடுக்கும் பிரசுரங்களைத் தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்க இப்பொழுது சட்டம் திருத்தப்படுகிறது. உண்மைக்கு மாறாக இருந்தால் அந்த உண்மை வெளிப்பட்டுவிடும். மக்கள் உணர்ந்து கொள்வார்கள். எந்தெந்த பத்திரிகைகள் உண்மையான செய்திகளைப் பரப்புகின்றன? எந்த பத்திரிகைகள் பொய் செய்திகளை பரப்புகின்றன என்று மக்களுக்கு இப்பொழுது தெரிந்திருக்கிறது என்று நம்புகிறேன்.

SRI V. K. KRISHNAMURTHY : தலைவர் அவர்களே, கூடா ஒழுக்கத்தை அடிப்படையாகக்கொண்டு, கூடா ஒழுக்கத்தை கைக்கொண்டிருக்கும் நூல்கள் அத்தனையும் தடை செய்வதற்கு அரசாங்கம் முன் வருமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : "அப்ஜெக்ஷனபில் மாட்டர்" என்று சொல்லும்பொழுது புத்தகங்களும் வரும், பத்திரிகைகளும் வரும், சுவர் ஒட்டிகளும் வரும், படங்களும் வரும். எல்லாமே அதற்குள்ளாக வரும்.

### *Report of the Agricultural Administration Committee*

* 174 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Agricultural Administration Committee's (Nalagarh Committee) report was examined by this Government;

(*b*) if so, what are the recommendations that are to be implemented by this Government; and

(*c*) what are the recommendations that are not possible to be implemented and why?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The recommendations contained in the Report of the Committee are under examination of the Government.

(*b*) & (*c*) Since the recommendations are still under examination it will not be possible to give the details, till the final decisions are taken.

SRI K. SATTANATHA KARAYALAR : இதிலே முடிவு எடுப்பதற்கு இன்னும் எத்தனை காலம் ஆகும் என்பதைச் சொல்லமுடியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஒவ்வொன்றாக முடிவு செய்யப்பட்டு வருகிறது.

* 175 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Agricultural Administration Committee constituted by the Government of India under Raja Surendra Singh Nalagarh in 1958 has recommended that both Agricultural and Irrigation Departments should be under one Minister; and

(*b*) if so, the steps taken by the Government to implement the above recommendation?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) The matter is under examination.

* 176 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Agricultural Administration Committee constituted by the Government of India under Raja Surendra Singh Nalagarh during 1958 has recommended that the State should not depend upon the Centre for taking action on the subjects which are the responsibility of the States; and

(*b*) if so, the steps taken by the Government in the matter?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The answer is in the affirmative.

(*b*) This recommendation, along with other recommendations of the Committee, are under consideration of the Government.

SRI N. K. PALANISAMI : இப்பொழுது அகில இந்தியாவுக்கும் ஒரு பாலிஸி அடிப்படையிலே ஒவ்வொரு ஸ்டேட்டும் விவசாயத்தை அபிவிருத்தி செய்வது என்ற தீர்மானத்திற்குப் பதிலாக, ஒரு ஸ்டேட், ஒரு டிஸ்டிரிக்ட், ஒரு தாலூகா என்பதற்கு பதிலாக, ஒவ்வொரு கிராமத்தின் அடிப்படையிலே இருக்கவேண்டும் என்று இந்தக் கமிட்டி சிபார்சு செய்திருக்கிறதா? அந்த அடிப்படையிலே ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதுபற்றி எல்லாம் எந்த அளவுக்கு சாத்தியம் என்பது பரிசீலனை செய்யப்பட்டு தான்வருகிறது.

*General Hospital, Pudukkottai*

* 177 *Q.*—SRI V. ARUNACHALA THEVAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) when the General Hospital at Pudukkottai town was repaired last;

(*b*) whether the Hon. the Minister was in receipt of complaints from the public of Pudukkottai about the same;

(*c*) what action the Government have taken to repair it now; and

(*d*) when the Government propose to construct the T.B. Ward at the said hospital?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) In March 1957.

(*b*) No, Sir.





(*c*) Estimates for further repairs to the hospital building have been prepared.

(*d*) The work will be taken up for execution as soon as the detailed plans and estimates now under preparation are scrutinised by the competent Public Works Department authorities.

SRI V. ARUNACHALA THEVAR : சமஸ்தான சர்க்கார் டி.பி. வார்டு கட்டுவதற்காக எத்தனை ஆயிரம் ரூபாய் வசூல் செய்து வைத்திருந்தார்கள்?

THE HON. SRI M. A. MANICKAVELU : என்னிடம் இருக்கும் தகவல்படி அந்தப் பணம் பொது மக்களிடத்திலிருந்து வசூல் செய்யப் பட்ட பணம் என்று தெரியவருகிறது. சுமார் ரூ. 85,000 இருக்கிறது. 24 படுக்கை அடங்கிய ஒரு வார்டு கட்டுவதற்காக பிளானெல்லாம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

SRI V. ARUNACHALA THEVAR : புதுக்கோட்டை ஆஸ்பத்திரியில் எத்தனை படுக்கைகள் வைக்கப்பட்டிருக்கின்றன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அனுமதிக்கப்பட்ட படுக்கைகளின் எண்ணிக்கை 96. ஆனால் எண்ணிக்கைக்கு மேற்பட்டே அங்கே நோயாளிகள் இருக்கிறார்கள்.

*Andhra-Madras border dispute*

* 178 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Chief Minister be pleased to state whether any compensation is to be paid to the Andhra State in connection with the settlement of Andhra-Madras border dispute?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

* 179 *Q.*—SRI K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government are in receipt of a draft Bill from the Central Government regarding the adjustment of boundary between Madras and Andhra States based on Pataskar's award;

(*b*) the salient features of the draft Bill; and

(*c*) whether the Government have submitted their remarks to the Central Government on the above Bill?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) to (*c*) Only a preliminary draft Bill was received from the Government of India and this Government have accepted it subject to some slight modifications. The Government of India will finalize the Bill after considering the comments made by this Government. When the Bill is formally referred to the State Government under Article 3 of the Constitution, it will be placed before both the Houses of the State Legislature.

SRI K. VINAYAKAM : இங்கு அனுப்பப்பட்ட நகல் மசோதா விஷயத்தில் இந்த ராஜ்ய சர்க்கார் தங்களுடைய அபிப்பிராயத்தை சொன்ன பிறகு, பிப்ரவரி 15-ம் தேதிக்குள் ராஜ்ய சர்க்கார் அசெம்பளியில் இதை

[10th February 19

பாஸ் செய்து அனுப்பவேண்டும் என்று ஏதாவது நிபந்தனை தெரிவிக்க பட்டதா? எப்ரல் முதல் தேதிக்குள்ளாக இதெல்லாம் சரிசெய்யப்ப இது அமுலுக்கு வரவேண்டுமென்ற யோசனையும் சொல்லப்பட்டதா?

THE HON. SRI C. SUBRAMANIAM: எப்ரல் முதல் தேதிக்கு அமுலுக்கு வரவேண்டுமென்றுதான் இந்த ராஜ்ய சர்க்காரும் சொல்ல யிருக்கிறார்கள். பிப்ரவரி 15-ஆம் தேதிக்குள் இங்கு கொண்டு வரமுடி மானால், சௌகரியமாக இருக்கும் என்று இந்த அரசாங்கம் தெரிவித்திரு கிறது. ஆனால் மசோதா இன்னும் வந்து சேரவில்லை.

SRI K. VINAYAKAM: கூடிய சீக்கிரம் அந்த மசோதா நமக் வரும்படி செய்வதற்கு நம்முடைய சர்க்கார் மத்திய சர்க்காருக்கு மு படியும் எழுதி, தகவல் கேட்க முடியுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: அதுபற்றி அவர்களுக் அவ்வப்பொழுது எழுதிக்கொண்டிருக்கிறோம். கூடிய சீக்கிரம் அவர்களு பரிசீலனை செய்து அனுப்புவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

*Seed farms*

* 180 Q.—SRI K. SATTANATHA KARAYALAR: Will th Hon. the Minister for Home be pleased to state—

(a) the area of seed farms in Tirunelveli district and Kanya kumari district;

(b) the extent of wet and dry lands; and

(c) the lease amount paid per acre of dry lands and wet land in the different seed farms of these districts?

THE HON. SRI M. BHAKTAVATSALAM:

(a) (1) Tirunelveli district—164.83 acres.

(2) Kanyakumari district—32.00 acres.

(b) & (c) The entire extents in the two districts are wet lands

The lease amounts paid are as below:—

| Name of seed farm. | Lease amount per acre |
|---|---|
| (1) Tirunelveli district— | |
| Karaiyiruppu farm | 600 |
| Vasudevanallur farm | 300 |
| Illangi farm | 300 |
| (2) Kanyakumari district— | |
| Thirupathisaram farm | The lands are Government lands. The question of lease amount does not arise. |



10th February 1959]

SRI K. SATTANATHA KARAYALAR: திருநெல்வேலி வட்டாரத்திலுள்ள விதைப் பண்ணைகளில் எவை எவை லாபகரமாக வேலை செய்கின்றன. எந்தெந்த விதைப் பண்ணைகளை தொடர்ந்து நடத்துவதாக சர்க்காருக்கு உத்தேசம்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கரையிருப்பு பண்ணை குத்தகை அதிகமாக இருந்தாலும் லாபகரமாக வேலை செய்கிறது. அதனால் அதைத் தொடர்ந்து வைத்துக்கொள்வது என்று யோசனை. மற்ற இரண்டு விதைப் பண்ணைகளையும் விட்டுவிடுவதாக முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

SRI M. KALYANASUNDARAM: கரையிருப்பு விதைப் பண்ணைக்கு 600 ரூபாய் குத்தகை மாகாணத்தில் இருக்கும் குத்தகை விகிதத்தை விட அதிகமாகத் தோன்றுகிறது. அதற்குக் காரணம் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: குத்தகை அதிகமாகத்தான் இருக்கிறது. அவ்வாறுதான் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவ்வளவு அதிக குத்தகை கொடுத்து மற்ற செலவுகளையும் சேர்த்து பார்த்தால் கூட 31—3—1958 வரை செலவு ரூ. 38,022. ரூ.41,000 வருவாய் வந்திருக்கிறது. மறுபடியும் 1—4—1958 முதல் 30—9—1958 வரையில் ரூ. 38,392 செலவு, வருவாய் ரூ. 41,552.

SRIMATHI T. N. ANANDANAYAKI: குத்தகை அதிகமாக இருக்கிறது என்று சொல்லப்படுவதினால் அரசாங்க நிலங்களிலேயே இந்த விதைப் பண்ணைகளை நடத்துவது சாதகமாக இருக்குமா? அதுபற்றி ஏதாவது புள்ளிவிவரம் தயாரிக்கப்பட்டிருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அரசாங்க விதைப்பண்ணை இருக்கிறது ஆராய்ச்சிக்கு. நல்ல நிலம் இருந்தால் அந்த நிலத்திலே பண்ணை வைக்கலாம் என்பதுதான் உத்தேசம். ஆனால், தகுந்த நிலம் போதிய அளவு அரசாங்கத்தின் கைவசம் இல்லை.

SRI G. GOMATHISANKARA DIKSHITAR: அம்பாசமுத்திரம் ஆராய்ச்சிப் பண்ணையில் விதைப் பண்ணை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அம்பாசமுத்திரம் ஆராய்ச்சி பண்ணையிலே ஆராய்ச்சி செய்வதற்கே போதிய நிலம் இல்லை. அதிக நிலம் வேண்டுமானால் விலை அதிகமாக சொல்லுவார்கள். அங்கே விதைப் பண்ணை வைப்பதற்கு நிலம் இருக்கும் என்று தோன்றவில்லை.

SRI K. SATTANATHA KARAYALAR: இளஞ்சி விதைப் பண்ணையில். தகுந்த காலத்தில் போதிய தண்ணீர் விடப்படாமல் இருந்ததா? கோவிலைச் சேர்ந்த இதர நிலங்களுக்கு தண்ணீர் விடப்பட்டும், இதற்கு மாத்திரம் விடப்படாமல் இருந்ததா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: தண்ணீர் கிடைக்காமல் இருந்தது ஒரு காரணம் தான். போதிய தண்ணீர் வசதி இருந்தும் போதிய அளவு தகுந்த காலத்தில் தண்ணீர் கிடைக்கவில்லை. கோவில் அதிகாரிகள் இந்த நிலத்தை மறுபடியும் அவர்களுக்கு திருப்பிக் கொடுத்துவிடவேண்டு மென்று கேட்டார்கள். அவ்வாறு திருப்பி கொடுத்துவிடுவது என்று முடிவு செய்திருக்கிறோம்.

SRI T. S. RAMASWAMY PILLAI: கன்யாகுமரியிலுள்ள திருப்பதிசாரம் விதைப் பண்ணை சர்க்கார் பூமியில் நடத்தப்படுகிறது. அங்கே வருவாய் என்ன, செலவு என்ன? அது லாபகரமாக நடக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: 1958-ம் வருஷம் மார்ச் மாதம் 31ந்தேதி வரையில் இந்த விதைப் பண்ணையில் ரூ. 14,168 செலவு, ரூ.19,144 வருவாய். வாடகை ஒன்றுமில்லை. 1958-ம் வருஷம் எப்ரல்

மாதம் 1-ம் தேதி முதல் 1958-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 30-ந்தேதி வரையில் ரூ.10,311 செலவு, வருவாய் ரூ.10,076. அதற்கு மேல் 7,764 ரூபாயும் வந்திருக்கிறது.

* 181 *Q.*—SRI A. GOVINDASAMY : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) விழுப்புரம் தாலூகா வீராணம் விதைப் பண்ணைக்கு எவ்வளவு நிலம் குத்தகைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது ?

(ஆ) நஞ்சை எவ்வளவு ? புஞ்சை எவ்வளவு ?

(இ) குத்தகைத் தொகை தனித்தனியே எவ்வளவு ?

(ஈ) இந்த விதைப் பண்ணையில் எத்தனை கிணறுகள் இருக்கின்றன ?

(உ) இதுவரை எவ்வளவு செலவாகியுள்ளது ? வருமானம் எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) 42.08 acres.

(*b*) Wet lands 25.31 acres.

Dry lands 16.72 acres.

(*c*) Rs. 225 per acre for wet lands.

Rs. 175 per acre for dry lands.

(*d*) Two wells.

(*e*) Rs. 8,806.69 has so far been spent on the farm and a sum of Rs. 4,76.00 has been derived as income from the farm.

SRI A. GOVINDASAMY : ஸார், இந்த பாரத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள புஞ்சை நிலத்திற்கு அதிகமான குத்தகை கொடுத்திருப்பதற்கு காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முதலில் போதிய அளவில் நிலம் வேண்டும் என்கின்ற அளவில் இந்த நிலங்களை எடுத்துக்கொண்டார்கள். இப்போது அவ்வளவு நிலங்கள் அவசியமில்லை என்று முடிவு செய்யப்பட்டு அதை திருப்பி கொடுத்துவிடுவது என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதோடு இப்போது ஸ்டாண்டிங் கிராப்பில் 6,400 ரூபாய்க்கு வருவாய் இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

SRI C. NATARAJAN : அரசாங்கம் விதைப் பண்ணைகளை எடுத்துக்கொள்ளும்போது பெரிய மிராசுதார்களிடமிருந்து வாங்கி விதைப் பண்ணைகளை நடத்துகிறார்கள். இதற்கு அதிகமான குத்தகையும் கொடுக்க கலெக்டர் முன் வருகிறார்கள். கூடிய சீக்கிரமாகவே நிலங்களுக்கு ஸீலிங் வரப்போவதால் பெரிய மிராசுதார்கள் இம்மாதிரியான வழியில் அதிகமான பணத்தை சர்க்காரிடமிருந்து பெற்றுவருகிறார்கள். ஆகவே இம்மாதிரியான நிலங்களை எடுக்கக்கூடாது என்று இந்திய அரசாங்கத்திலிருந்து ஏதாவது உத்தரவு வந்திருக்கிறதா ? அப்படியானால் அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இம்மாதிரி விதைப் பண்ணைகளை நடத்தும்போது குறைந்தது ஐம்பது எக்கர்கள் தேவைப்படுகிறது. இவ்விதம் ஐம்பது எக்கர் நிலம் வாங்க வேண்டுமென்றால் அதை அதிகமாக நிலம் வைத்திருப்பவர்களிடமிருந்துதான் வாங்க முடியும். இதிலும் குத்தகைக்கு வாங்குவதை விட விலைக்கு வாங்கிவிடுவது மிகவும் நல்லது என்றும் கருதப்படுகிறது. இதைப்பற்றி மத்திய அரசாங்கத்திடமிருந்து ஒரு உத்தரவும் வரவில்லை. இந்த அரசாங்கம் தான் இம்மாதிரியான நிலங்களை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய அவசியம் இல்லை.



கூடிய சீக்கிரம் நிலச் சீர்திருத்த சட்டம் வரப்போவதால் அதிகமான அளவில் நிலங்கள் கிடைக்கும், அதில் விதைப் பண்ணைகளை நடத்துவதற்கு சௌகரியமாக இருக்கும் என்று அரசாங்கம் ஏற்கனவே முடிவு செய்திருக்கிறது.

* 182 *Q.*—SRI A. GOVINDASAMY : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்ட சீமாவரம் சர்க்கார் விதை பண்ணைக்கு எவ்வளவு நிலம் குத்தகைக்கு எடுக்கப்பட்டது ?

(ஆ) எப்பொழுது குத்தகைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது ?

(இ) குத்தகைத் தொகை எவ்வளவு ?

(ஈ) நீர்ப்பாசன வசதியிருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) 38·50 acres.

(*b*) 1st March 1958.

(*c*) The lease amount has not yet been finalised.

(*d*) Yes.

SRI A. GOVINDASAMY : ஸார், இதில் குத்தகையை நிர்ணயம் செய்வதற்கு காலம் கடத்துவதின் ரகசியம் என்ன ? நீர்ப்பாசன வசதி இல்லாத இந்த நிலத்தை அவசர அவசரமாக எடுத்துக் கொண்டதன் காரணமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : என்னிடம் இருக்கின்ற தகவலின்படி இந்த இடத்தில்தான் நீர்ப் பாசன வசதியிருக்கிறது. இதன் பேரில் குத்தகை நிர்ணயம் செய்ததில் கலக்டருடைய ரிப்போர்ட்டுக்கும் விவசாய இலாகா அதிகாரிகளுடைய ரிப்போர்ட்டுக்கும் அபிப்பிராய பேதம் இருப்பதால்தான் இது வரையிலும் குத்தகை நிர்ணயிக்கப்படவில்லை. இதைப்பற்றி ஆலோசித்து பரிசீலனை செய்த பிறகு நிர்ணயிக்கப்படும்.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : இந்த விதைப் பண்ணைகளுக்கு எடுக்கக்கூடிய விதைகளை சிமிட்டி தரையில் வைத்து பாதுகாக்கப்படுவதால் சரியான விதத்தில் முளை வருதில்லை என்கின்ற புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே இதை நல்ல முறையில் பாதுகாக்கப்படுவதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : விதைகளை சரியான முறையில் பாதுகாக்கப்படுவதற்கு அரசாங்கம் எல்லா முயற்சிகளும் எடுத்து வருகின்றது.

SRI T. S. RAMASAMY PILLAI : குத்தகையை நிர்ணயம் செய்வது கலெக்டர் அவர்களா அல்லது விவசாய இலாகா அதிகாரிகளா ? சீமாவரம் பாரத்திலிருந்து எடுக்கப்பட்ட நிலத்திற்கு நிர்ணயித்திருக்கும் குத்தகையை அதிகப்படுத்தி தரவேண்டும் என்று அந்த நிலச் சொந்தக்காரரிடமிருந்து அரசாங்கத்திற்கு ஏதாவது மனுக்கள் வந்திருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சாதாரணமாக கலெக்டர் தான் இதை நிர்ணயிக்கிறார். இம்மாதிரி மனுக்கள் வந்ததாக தெரியவில்லை. இதில் கலெக்டர் அவர்கள் நிர்ணயித்திருப்பது அதிகமாக இருக்கிறது என்று நினைத்துத்தான் இதை பரிசீலனை செய்யவேண்டியிருக்கிறது. ஆகவேதான் இதில் தாமதம் ஏற்படுகின்றது.

SRI A. GOVINDASAMY : கலெக்டர் அவர்கள் நிர்ணயித்தது அதிகம் என்று தெரிந்த உடன் விவசாய இலாகா டயரக்டர் அவர்கள் ஏன் அதன் பேரில் நடவடிக்கை எடுக்கவில்லை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதினால்தான் இதில் இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

SRIMATHI T. N ANANDANAYAKI : இப்போது அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது விதைப்பண்ணைகளை நடத்துவதற்கு நிலங்களுக்கு ஸீலிங் வந்துவிட்டால் சரசமாக நிலங்கள் கிடைக்கும் என்று தெரிவித்தார்கள். இம்மாதிரி விதைப் பண்ணைகளுக்கு எடுக்கப்படும் நிலங்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க மாட்டார்களா என்பதை அறியவிரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நஷ்டஈடு கொடுத்தாலும் நிலங்கள் சரசமாக கிடைக்கும் என்று நினைக்கிறேன்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: பல ஜில்லாக்களிலும் நடத்தப்படுவரும் விதைப்பண்ணைகளை சர்க்கார் எடுத்துவிடப்போவதாக கேள்விப்பட்டேன். அது உண்மையா என்பதை அறியவிரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பல பண்ணைகளிலும் அதிகப்படியான அளவில் உற்பத்தி பெருகவில்லை என்று காணப்படுவதால் சில பண்ணைகளை எடுத்துவிடுவது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

SRI S. NAGARAJA MONIGAR : இம்மாதிரி நிலங்களை வாங்கும்போது பொது மக்களுடைய ஒத்துழைப்பு அவசியம் என்கின்ற முறையில் அந்தந்த இடங்களில் இருக்கின்ற எம்.எல்.ஏ.க்கள், எம்.எல்.ஸி-க்கள் எம்.பி.க்கள் என இவர்களையும் கலந்து முடிவு எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்போதும் பொதுவாக விதைப் பண்ணைகளை மேற்பார்வையிடுவதற்கும், அதனுடைய வளர்ச்சிக்காக ஆலோசனை கூறுவதற்கும் ஒரு அட்வைசரி கமிட்டி அமைக்க வேண்டுமென்று அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது.

SRI K. SATTANATHA KARAYALAR : இதற்கு குத்தகையை நிர்ணயிப்பது கலெக்டர் அவர்களா? அல்லது விவசாய இலாகா அதிகாரிகளாக இவ்விதம் நிர்ணயிக்கும்போது நிலச் சொந்தக்காரர்களுடைய வேண்டுகோளும் கவனிக்கப்படுகிறதா ? இவ்விதம் குத்தகை நிர்ணயிப்பது அக்கம்பக்கத்திலுள்ள நிலங்களை பார்த்துத்தான் குத்தகையை நிர்ணயிக்கிறார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பொதுவாக கலெக்டர் அவர்கள்தான் அக்கம் பக்கத்திலுள்ள நிலங்களுக்கு இருக்கின்ற குத்தகையை கவனித்துபார்த்து, 100-க்கு 40 என்கிற அளவில் மதிப்பு போட்டு பார்த்து இதை நிர்ணயிக்கிறார்கள்.

### *Special Irrigation Schemes*

* 183 Q.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1957—58, 1958—59-ல் வடார்க்காடு ஜில்லாவில் விசேஷ நீர்ப்பாசன திட்டங்களுக்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது ?

(ஆ) எவ்வளவு செலவழிக்கப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :

| | RS. (IN LAKHS). |
|---|---|
| (a) (i) 1957–58 .. .. .. .. | 4·40 |
| (ii) 1958–59 .. .. .. .. | 3·57 |
| (b) (i) 1957–58 .. .. .. .. | 4·40 |
| (ii) 1958–59 up to the end of October 1958 | 2·50 |



### *Minor Irrigation Expeditious Restoration Scheme*

* 184 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state the amount this Government are to receive by way of loan or subsidy under the Minor Irrigation Expeditious Restoration Scheme from the Central Government?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : It is presumed that the hon. Member refers to the assistance for the Special Minor Irrigation Programme which is formulated on an annual basis. The amounts of loan sanctioned by the Government of India for the Programme during 1956–57 and 1957–58 are Rs. 38.92 lakhs and Rs. 26.80 lakhs respectively. The grants sanctioned for these years are Rs. 3·29 lakhs and Rs. 11·25 lakhs, respectively. For the year 1958–59, a loan of Rs. 13.22 lakhs and a grant of Rs. 11.20 lakhs have been applied for and the sanction of the Government of India is awaited.

### *Development of Ramanathapuram district*

* 185 Q.—SRI N. R. THIAGARAJAN : கனம் முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—இராமநாதபுரம் ஜில்லா அபிவிருத்தி சம்பந்தமாக டெவலப்மெண்ட் ஆபீசர் அருள்தாஸ் செய்த சிபாரிசுகளில் எவையெவை நிறைவேற்றப்பட்டன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : The recommendations of the Special Officer were not specifically taken up for implementation as a whole due to the difficult financial position of the State. The Heads of Departments were asked to bear in mind those recommendations when forwarding schemes for consideration in connection with the Budget for 1953–54 and subsequent years. These schemes are being implemented to the extent practicable either as a part of the Five-Year Plan or outside it with reference to requirements and according to the availability of funds.

SRI K. RAMACHANDRAN : இந்த ஸ்பெஷல் ஆபீஸர் 1952-ம் வருஷத்திலேயே ராமநாதபுரம் ஜில்லாவிலும் குறிப்பாக பழைய ஜமீன் பிரதேசங்களிலும் சீர்திருத்தங்கள் செய்யவேண்டும் என்றும் நூற்பு ஆலைகள் ஏற்படுத்தவேண்டும் என்றும் சொல்லியிருந்தார் அதில் இப்போது எந்தெந்த திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன ? அவ்விதம் நிறைவேற்றப்படவில்லை என்று சொன்னால் அதன் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : அதற்கான விவரங்கள் இப்போது என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் தெரிவிக்கலாம்.

### *Tube-wells*

* 186 Q.—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the Government have estimated the results of the pilot project of sinking exploratory tube-wells in Udayarpalayam taluk, Tiruchirappalli district;

(b) if so, what they are; and

(c) whether, and if so when, the Government propose to extend this project to other areas in the taluk?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Yes, Sir.

(b) Out of seven wells sunk, one proved to be a failure and two proved to be artesian wells. For the remaining four wells, diesel pumpsets are being fitted up.

(c) The full financial implication in respect of these wells will be known only after the cost data and other particulars are received from the Exploratory Tubewells Organization and the wells are operated for a year or so. Hence, the question of extending this project to other areas will have to be considered in due course.

## *Well Subsidy Loans*

* 187 Q.—SRI K. R. VISWANATHAN: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the number of cases for which Well Subsidy loans have been granted so far and the total amount still outstanding in the Udayarpalayam taluk, Tiruchirappalli district; and

(b) the number of cases where the wells after completion have not been inspected by the inspecting authorities in the above taluk?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Number of cases—2,151.

Amount outstanding—Rs. 41,166.

(b) One hundred and nineteen cases.

SRI K. R. VISWANATHAN: இப்போது கிணறுகள் வெட்டுவதற்கு ஆரம்பிக்கும்போது சில இடங்களில் வந்து பார்வையிட்டுவிட்டு போய் விடுகிறார்கள். அதன் பின்னால் இதற்கு அனுமதிக்கப்படுகின்ற தொகையை வசூலிப்பதற்காக திடீரென்று அதிகாரிகள் குடியானவர்களிடம் வந்து கேட்கிறார்கள். இதனால் அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டுகிறார்கள். ஆகவே இது சம்பந்தமாக எடுக்கப்பட்ட முடிவை எல்லாம் முன்கூட்டியே குடியானவர்களிடம் தெரிவிக்கப்பட்டாகவேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு பணம் செலுத்துவதற்கு வசதியாக இருக்கும். ஆகவே இம்மாதிரி முன் கூட்டி தெரிவிப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: பரிசீலனை கழிந்தவுடன் நிலைமையை குடியானவர்களிடம் தெரிவிக்கும் வகையில்தான் இப்போதும் இருந்து வருகிறது.

MR. SPEAKER: இப்போது மணி 10 ஆகிறது, இன்னும் நாலைந்து கேள்விகள் இருக்கின்றன, இன்னும் ஐந்து நிமிடங்களில் அவைகளையும் எடுத்து முடித்துவிடலாம் என்று கருதுகிறேன்.



## *Rice supply to Kerala State*

* 188 Q.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the Kerala State had requested this Government in October 1958 to allot them 10,000 tons of rice;

(b) if so, whether the Government have agreed to supply the rice; and

(c) on what terms?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Yes, Sir.

(b) No, Sir.

(c) This question does not arise in view of answer to clause (b).

* 189 Q.—SRI P. G. MANICKAM: கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) கோயமுத்தூர் டிவிஷன் இந்து மத அற நிலையப் பாதுகாப்பு இலாகாவானது கோயமுத்தூர் டிவிஷன், சேலம் டிவிஷன் என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந்தால் இந்த இரண்டு டிவிஷன்களுக்கும் தனித்தனியாக ஏரியா கமிட்டிகள் (Area Committees) நிறுவப்பட்டிருக்கின்றனவா ?

(ஆ) அவ்வாறு நிறுவப்படாமல் இருந்தால் எப்போது அவைகள் நிறுவப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Yes, Sir.

(b) Does not arise.

SRI P. G. MANICKAM: அந்தக் கமிட்டியிலே எத்தனை பேர்கள் டிரஸ்டிகளாக நியமிக்கப்படுவார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கமிட்டியிலே எத்தனை பேர்கள் டிரஸ்டிகள் என்றால் எனக்குப் புரியவில்லை. கமிட்டிதான் டிரஸ்டிகளை நியமிக்கும்.

## *Southern Railways*

* 190 Q.—SRI A. A. RASHEED: Will the Hon. the Ministe for Home be pleased to state whether the Government hav recommended to the Union Government for the larger allotment ( new railway coaches for Southern Railways?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No, Sir.

SRI A. A. RASHEED: May I know the total number carriages made in the Integral Coach Factory in 1958 and t number of coaches added to the Southern Railway during the ne year?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I have no inform tion. This question must be put in Parliament.

* 191 *Q.*—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Home be pleased to state whether the Government have made any representation to the Union Government for the allotment of Diesel Cars to the Southern Railways?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No, Sir.

SRI A. A. RASHEED: May I know whether these cars were imported from Commonwealth countries and if so, the number of cars imported and the number allotted to the Southern Railways?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The Home Minister should not be expected to have all this information.

### *Lands affected by floods*

* 195 *Q.*—SRI A. GOVINDASAMY: கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டம், வீராநந்தபுரம், கண்டமங்கலம், பெரிய புங்கநேரி, வில்வகுளம், நாட்டார்மங்கலம், வீராணநல்லூர் ஆகிய கிராமங்களிலுள்ள நஞ்சை நிலங்கள் ஒவ்வொரு ஆண்டும் வெள்ளத்தால் பாழாகி வருவதுபற்றி பொது மக்களிடமிருந்து மகஜர் வந்ததா?

(ஆ) அதன் மீது சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) & (*b*) No mahazar was received from any of the villagers. However in a welcome address presented to Minister for Revenue during his visit to Kandamangalam on 3rd November 1957 by the villagers of Chinnapunganeri, hamlet of Veeranandapuram village, Chidambaram taluk, the following requests have been made:—

(i) to repair the broken calingula in Periapunganeri tank; and

(ii) to strengthen the banks of the surplus course of the tank for about a furlong.

In regard to the first request an estimate for repairing the broken calingula has been prepared and the Executive Engineer has been asked to execute the repairs expeditiously. As regards the second request the Executive Engineer has reported that the banks of the surplus course of the Periapunganeri are in a fair condition and that the main reason for the occasional breaches is due to the backing up of floods in Vettuvoikkal which takes off on the left side of the Vadavar and that a head sluice at the off-take will obviate the difficulties and regulate the supply. An estimate for the construction of the head sluice has been approved and sent to the Executive Engineer for further action.

SRI A. GOVINDASAMY: இந்த கிராமங்களில் வெள்ளக் காலங்களில் அதிகமான நீர் பிடிப்பதால், அங்கே வடிகால் கட்டித்தர வேண்டுமென்று விண்ணப்பம் கொடுத்து அரசா கத்தைக் கேட்டிருப்ப





தாகத் தகவல் கொடுத்தார்கள். வடிகால் அமைத்துக் கொடுக்க அரசாங்கம் முயற்சிக்குமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: நான் சொன்னதெல்லாம் இங்கே இந்தத் தண்ணீர் வெள்ள ஓட்டத்தினாலே நிலம் பாழாகிறது என்பது. நீர்ப்பிடிப்பு விஷயமாக கனம் அங்கத்தினர் சொல்லுவதைப் பற்றித் தனியாக எழுதிக் கொடுத்தால் அதை கவனிக்கலாம்.

### *Pearl fishing*

* 196 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government have received any assistance under Technical Assistance Programme of Food and Agriculture Organization for pearl fishing at Tuticorin; and

(*b*) if so, what is the nature of such assistance?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: (*a*) & (*b*) Services of an Under-Water Exploration Expert for a period of five months from November 1958 have been obtained under the Technical Assistance Programme of the Food and Agriculture Organization for conducting survey of pearl and chank beds in the waters off the coast of Tuticorin. The following information is expected to be gathered by the survey—

(1) Contour and extent of each bank;

(2) Nature of the bottom of the banks;

(3) Details of fauna and flora; and

(4) Hydrographical conditions.

### *Officers of the National Water-Supply Scheme in Tirunelveli*

* 198 *Q.*—SRI M. S. SELVARAJAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether any complaints of corruption and negligence of duty against the officers of National Water-Supply Scheme in Tirunelveli district have been received from the Tirunelveli Taluk Congress Committee in 1957; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) Yes, Sir. A complaint was received in March 1958.

(*b*) The matter is under enquiry.

### *Industrial-cum-Training Centre, Udaiyarpalayam*

* 199 *Q.*—SRI K. R. VISWANATHAN: Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government have any proposal to start any Industrial-*cum*-Training Centre in Udaiyarpalayam taluk, Tiruchirappalli district?

THE HON. SRI R. VENKATARAMAN: No, Sir.

[10th February 1959

*Fancy Leather Goods Manufacturing Unit, Pallavaram*

* 200 *Q*.—Sri P. G. **MANIKKAM** : கனம் உள்விவகார அமைச்சர்
அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா :—

(அ) செங்கற்பட்டு ஜில்லா பல்லாவரத்தில் இருக்கும் **Fancy Leather Goods Manufacturing Unit**-லிருந்து என்னென்ன விதமான **Fancy Leather goods** சாமான்கள் தயாரிக்கப்படுகின்றன ?

(ஆ) இத் தொழிற்சாலையிலே எத்தனை பேர்களுக்கு வேலை கிடைத்திருக்கிறது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Leather utility and fancy articles like belts, wallets, purses, bill folders, school-boy satchells, ladies' hand-bags, travel bags, writing cases, wrist-watch boxes, zip folio cases, spectacle cases, suit cases, toys, etc.

(*b*) Ten persons are employed on the staff of the Centre and 12 candidates are given training in the Centre.

Mr. SPEAKER : Questions are over.

**[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

## II.—CALLING ATTENTION TO SEA EROSION AND DAMAGES IN TIRUCHENDUR TALUK.

Mr. SPEAKER : கனம் எம். எஸ். செல்வராஜன் அவர்கள்
சபையின் 40–வது விதிப் பிரகாரம் அமைச்சர் அவர்களின் கவனத்
திற்கு ஒரு முக்கியமான விஷயத்தைக் கொண்டுவரவேண்டுமென்று அறி
விப்புக்கொடுத்திருக்கிறார். அதைப் பற்றிச் சுருக்கமாகப் பேசவேண்டு
மென்று அவரைக் கேட்டுக்கொள்கிறேன்.

Sri M. S. SELVARAJAN : Sir, under Rule 40, I rise to call attention to a matter of urgent public importance, viz., sea erosion and damages thereby at Manapad in Tiruchendur taluk, Tirunelveli district.

கனம் சபாநாயகர் அவர்களே, மணப்பாடு என்பது திருநெல்வேலி
ஜில்லாவில், திருச்செந்தூர் தாலூகாவில், கடலோரப் பகுதியில் ஒரு
புராதனமான சிறு நகரம். அங்கே தூத்துக்குடியின் தென் பகுதி
யில் கலங்கரை விளக்கு அமைந்திருக்கிறது. 1954–ம் ஆண்டிலே, ஏப்ரல்
மாதம் முதன் முதலாக அங்கே கடலரிப்பு ஏற்பட்டது. அதன் காரண
மாக, கடலோரமாக இருந்த மூன்று வீடுகள் சேதமடைந்தன. மற்றும்
நான்கு வீடுகள் சிதைக்கப்பட்டு குடியிருக்க லாயக்கில்லாததாகி விட்டது. இது
அரசாங்கத்தின் கவனத்திற்கு உடனடியாக வந்து அந்த இடத்தில்
இரண்டு பகுதிகளாக 500 அடி நீளத்திற்கு சவுக்குக் கம்புகளைக் கொண்டு
3 அடி அகலத்திற்கு இரண்டு வரிசைகளாக தற்காலிகமாக ஒரு
அணை நிறுவப்பட்டது. மத்தியில் மண் மூட்டைகள் அடுக்கப்பட்டு, இந்தக்
கடலரிப்பைத் தடுக்க யத்தனங்கள் செய்யப்பட்டன. மண் மூட்டைகள்
பயன்படாத நிலையில் மேலும் ஆயிரம் அடி நீளத்திற்கு அணையை
விஸ்தரித்து கற்கள் போடப்பட்டு தடுக்கப்பட்டது. 1956–ல் இருந்து 1957
மார்ச் வரையில் கடலரிப்பு நீடித்தது. ஓரளவுக்கு அதைத் தடுப்பதற்கு
அந்த அணை அப்போது உதவி செய்தது. 1957–ம் ஆண்டில், நவம்பர்
மாதத்தில் அதே இடத்தில் மீண்டும் கடலரிப்பு ஏற்பட்டது. அப்போது
இருந்த தற்காப்பு அணை ஓரளவுக்கு உபயோகமாயிருந்ததன் காரணமாக
எந்த விதமான சேதாரமும் ஏற்படவில்லை. மறுபடியும், 1958–ம்
வருஷம் அக்டோபர்-நவம்பர் மாதங்களில் கடலரிப்பு ஏற்பட்டது. அந்த
கட்டத்தில்தான் நான் அவசரப் பிரேரணை கொடுத்தேன். அப்போது
கடலரிப்பு ஆபத்தும் அணை ஓரளவுக்குச் சேதப்பட்டும் இருந்ததால் அங்கே
பயங்கரமான நிகழ்ச்சி ஏதும் நிகழ்ந்து விடுமோ என்று முன்னெச்சரிக்
கையாக இருக்கவேண்டுமென்று இந்த அவசரப் பிரேரணை மூலமாக



10th February 1959] [Sri M. S. Selvarajan]

அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்று அப்போது
கொடுத்தேன். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட தாற்காலிக அணை
சிதைந்து இருக்கிறது. இருக்கக்கூடிய மரங்களைப் பழுது பார்த்து கற்களை
அடுக்கவேண்டிய இடத்தில் அடுக்கி தாற்காலிக ஏற்பாடுகள் மூலமாக
கடலரிப்பு ஏற்படாமல் தடுக்க முடியும். பல வருஷங்களாகக் கடலரிப்பு
ஏற்பட்டுக்கொண்டிருப்பதால், இதற்கு ஒரு நிரந்தரமான ஏற்பாடு
செய்ய வேண்டுமென்பது எனது கோரிக்கை. இந்த மாதிரி கடலரிப்பு
ஏற்படாமல் தடுப்பதற்கேற்ற பரிகாரங்களை நிரந்தரமான அடிப்படையில்
செய்யவேண்டும். இன்றைய தினம் சிதைந்து, பழுதுபட்டிருக்கக்கூடிய, குடி
யிருக்க லாயக்கற்று இருக்கக் கூடிய வீடுகளுக்குப் பதிலாக நல்ல வீடு
களைக் கட்டிக்கொள்ள அவர்களுக்குத் தகுந்த நஷ்ட ஈடு கொடுக்கவேண்டு
மென்பது எனது வேண்டுகோள். அந்தப் பகுதிகளில் உள்ளவர்களைக்
குடிபெயர்த்து விடுவதால் பரிகாரம் காணலாமா என்று நினைத்தால்
இன்று இல்லாவிட்டாலும் மற்றொரு நாள் அந்த ஊரையே காலி
செய்யவேண்டிய அபாயம் ஏற்படலாம். ஆகவே இதற்கு ஒரு நிரந்தர
மான பரிகாரம் தேடவேண்டும். கலங்கரை விளக்கையும் அந்தக் கிரா
மத்தையும் காப்பாற்றவேண்டும், வீடிழந்தவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க
வேண்டும், அணையை பழுது பார்த்துக் கட்டவேண்டும் என்ற காரணத்
திற்காக இதையெல்லாம் அவசரமாகச் செய்யவேண்டுமென்று இந்தப்
பிரேரணை கொடுக்கப்பட்டிருக்கிறது.

The Hon. Sri P. **KAKKAN** : கனம் சபாநாயகர் அவர்களே, 1954–ம் 10.10 a.m.
ஆண்டு, அக்டோபர் மாதத்தில் திருநெல்வேலி மாவட்டம் திருச்செந்தூர்
வட்டத்தில் மணப்பாடு கிராமத்தில் கடல் அரிப்பு ஏற்பட்டது. அதனால்
இல வீடுகள் சேதமடைந்தன. கடல் அரிப்பைத் தடுக்க உடனடியாக நட
வடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டு அரசாங்கத்திற்கு கோரிக்
கைகள் வந்தன. கடல் அரிப்பால் மொத்தம் பாதிக்கப்பட்ட வீடுகள் 8
என்று கலெக்டர் தெரிவித்தார். இவ்விஷயமாக உடனடியாக நடவடிக்கை
எடுக்கும்படி திருநெல்வேலி கலெக்டருக்கும் மராமத்துத் துறை
(பொது) தலைமைப் பொறியருக்கும் உத்திரவுகள் அனுப்பப்பட்டன. கடல்
அரிப்பைத் தடுப்பதற்கும், மணப்பாடு கிராமக் கரையோரத்தில் அவசரமான
பழுது பார்க்கும் வேலைகளை முடிப்பதற்கும் ரூபாய் 1,130 செலவிட
அனுமதிக்கப்பட்டது. கடல் அரிப்பு அபாயம் நிச்சயமாகக் குறைந்துவிட்டது
என்றும், கடலரிப்பு ஏற்படக்கூடிய உடனடி அபாயம் எதுவுமில்லை என்றும்
அப்போது தெரிவிக்கப்பட்டது. 1955 செப்டம்பரில், பருவ மழை சமயத்
தில் மணப்பாடு கிராமத்தில் மீண்டும் கடலரிப்பு ஆரம்பித்திருப்பதாக
குலசேகரப்பட்டிணம் பஞ்சாயத்து போர்டு தெரிவித்தது. அவ்விஷயம் கவ
னிக்கப்பட்டு, மணப்பாடு கிராமத்தின் 600 அடி நீள கடற்கரையைப்
பாதுகாக்க ரூபாய் 6,330 அனுமதிக்கப்பட்டது. திரும்பவும் 1956–57–ல்
அந்தக் கிராமத்தில் 950 அடி நீள கடற்கரையில் பாதுகாப்பு நடவடிக்
கைகளை மேற்கொள்வதற்காக ரூபாய் 8,825 அனுமதிக்கப்பட்டது. கடல்
அரிப்பைத் தடுப்பதில், பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக இதுவரை ரூபாய்
16,285 செலவிடப்பட்டிருக்கிறது.

கடற்கரைப் பகுதியில் சுமார் 100 குடும்பங்கள் வசிக்கின்றன என்
றும், 19—9—1958–ல் அடைப்பு அமைப்புகளின் அருகில் அலைகள்
வந்தன என்பது தவிர, அண்மையில் கடலரிப்பு எதுவும் கிடையாது
என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. உடனடி அபாயம் எதுவும் ஏற்படு
மெனவும் தோன்றவில்லை. இந்தப் பிரச்னையை நிரந்தரமான முறையில்
தீர்ப்பதற்கு எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. தனுஷ்
கோடி, திருச்செந்தூர் முதலிய இடங்களிலும் கடலரிப்பு ஏற்பட்டதால்
தனுஷ்கோடியில் இந்திய அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கையின்
பலாபலன்களைப் பார்த்து, கடலரிப்பைத் தடுக்க எல்லா இடங்களிலுமே
திட்டமான நடவடிக்கை எடுப்பது பற்றி கவனிக்கலாம் என முடிவு செய்யப்
பட்டது. தனுஷ்கோடி கடலரிப்புப் பிரச்னையைத் தீர்ப்பது குறித்து ஏதாகி
லும் முடிவு ஏற்பட்டதா என்று 1958 டிசம்பரில் இந்திய அரசாங்கத்தைக்
கேட்டோம். அப்படி முடிவு ஏற்பட்டிருக்குமானால் நம்புதாழை மற்றும்

இதர இடங்களில் கடலரிப்புப் பிரச்னையைச் சமாளிக்க அது உதவுமெ
றும் தெரிவிக்கப்பட்டது. இப் பிரச்னை இன்னும் ரயில்வே துறையின்
சீலனையில் இருப்பதாக மத்திய அரசினர் பதிலளித்தனர்.

ஆயினும், மணப்பாட்டைப் பொறுத்தவரை, கடலரிப்பைத் தடு
தற்காலிக, நிரந்தர பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வி
யம் அரசாங்கத்தின் கவனத்தில் இருந்து வருகிறது. கடலரிப்பைத் தடு
தற்காலிக நடவடிக்கைகளுக்கான திட்டம் ஒன்று தயாராக உள்ள
மணப்பாடு கிராமத்தில் நிரந்தர அடிப்படையில் கடலரிப்பைத் தடு
தற்காக, கரைகாப்பு அமைப்பை நிர்மாணிப்பதற்கும் திட்டம் வகுக்க
பட்டுள்ளது. இவைகளுக்கான திட்டங்களைச் சமர்ப்பிக்கும்படி தலைமை
பொறியர் கேட்கப்பட்டுள்ளார். அவரிடமிருந்து திட்டங்கள் வந்தது
அரசாங்கம் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளும்.

## III.—PRIVILEGE MOTION *RE* ARTICLE IN THE 'KUMUDAM'.

* SRI M. KALYANASUNDARAM : Mr. Speaker, Sir, I have given notice of a motion of privilege regarding a scandalous remark about the House appearing in '*Kumudam*' dated the 10th February 1959.

MR. SPEAKER : The hon. Member gave it to me only five minutes back. I have not even looked into it. I shall look into it and give my decision on it tomorrow. I suppose the hon. Member has no objection to that.

We will now take up Government Bills.

## IV.—GOVERNMENT BILL.

### THE MADRAS GENERAL SALES TAX BILL, 1958 (L.A. BILL NO. 6 OF 1958).

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I move—

'That the Madras General Sales Tax Bill, 1958 (L.A. Bill No. 6 of 1958), as amended by the Select Committee be taken into consideration.'

As a large number of changes have been made, for the sake of better appreciation, I crave the indulgence of the House to speak in English. In the course of my reply to the discussion, I will meet all the criticisms and reply in Tamil.

As the House is aware the Bill was introduced in this House on the 8th March 1958 and was subsequently referred to Select Committee of the House for detailed scrutiny. Before proceeding to explain the various changes made in the Bill by the Select Committee I wish to give a short history of the Bill and its origin for the benefit of the hon. Members so that they may appreciate the changes that have been made.

The hon. Members are aware that the levy of tax generally on the sales of goods was introduced in the State in October 1939 by the enactment of the Madras General Sales Tax Act, 1939. The tax was then a multi-point tax at a uniform rate of half-a-per cent



with a provision for a slab rate of tax for turnovers between Rs. 10 to Rs. 20 thousand and turnovers below Rs. 10,000 being totally exempt from the tax.

Since then the provisions of the Act have undergone several changes both in structure and in the rate of tax necessitated partly by the decisions of the Law Courts and partly for augmenting the revenue of the State. The Act as it stands to-day provides for the levy of a general multi-point tax at 2 per cent on the majority of the goods, a single-point tax on certain goods at varying rates and an additional tax at varying rates on certain luxury goods at the stage of first sale besides the multi-point tax at the general rate payable on these goods at all points of sale. Dealers in goods are liable to single point tax and Commission agents are liable to take out licences and pay licence fees. Also articles of food or drink or both, sold in a hotel, boarding house, etc., are liable to tax at a rate higher than the general multi-point rate, namely, $2\frac{1}{2}$ per cent if the turnover in these articles exceeds Rs. 25,000. Added to the numerous changes made from time to time in the structure and rates of tax, legal decisions especially in respect of matters relating to assessment of inter-State transactions, etc., have made the provisions of the Act, rather complicated and not easy of understanding, especially for small dealers who have neither the time nor the resources to take legal opinion. There have been repeated representations from the trade for a general change over from the multi-point system to a single-point system of taxation and for making the law simpler and its administration easy so as to minimise as much as possible the inconveniences to the dealers in general and especially to the small dealers. The Government were convinced that there was force in the representations. They therefore invited Dr. Lokanathan to examine the scope and working of the sales tax law in the State and to offer his advice for simplifying the law and its administration. After studying the existing system from the revenue and economic point of view and after hearing the representations of the trade and making exhaustive enquiries, Dr. Lokanathan gave his report on the simplification and improvement of the sales tax system in Madras.

The main recommendations of Dr. Lokanathan are that the licensing provisions in the Act should be abolished, that the registration of dealers should be made comprehensive, that in respect of such goods for which tax can conveniently be levied at source a single-point tax should be levied and that small dealers with turnover below Rs. 25,000 should have the option to pay the tax at compounded rates. He also proposed the reduction in the general rate of multi-point tax to 1 per cent and recommended that cereals, pulses, milk and vegetables be assessed at a concessional rate of $\frac{1}{2}$ per cent. He also recommended that the appellate powers under the Act should be exercised by a separate set of officers not connected with the administrative side and that tackling of evasions should be entrusted to a separate set of officers. With this end in view, he proposed three wings in the department, namely, assessment wing, appellate wing and intelligence and

[Sri R. Venkataraman] [10th February 1959

on the Government is that within six months the notification should be adopted as law by means of adopting the procedure prescribed for a Bill. This has some importance to us, because whenever proposals changing the rate of tax are included, or exclusion of items in the schedule are made in the budget proposals, there is a time-lag between the date on which the proposals are made and the date when the Act is finally adopted. In the interim period, it is possible for people to corner the goods and evade tax. In order to prevent this possibility, the Government are given power to notify the rates and get them approved by the Legislature within the course of six months.

In respect of goods which would be newly brought under single-point levy at a higher rate of tax at the point of first sale or first purchase on the date of commencement of the new Act, there was no provision for the levy of single-point tax on the stocks held by the second and subsequent dealers on that date. A new problem has arisen. A number of items which are now under multi-point levy are transferred to the single-point levy. If we do not have provision for taxation of these goods, then almost everybody will corner the goods, and then, when the single-point tax comes, plead that they have already suffered multi-point tax on the first sale and therefore they are not liable to pay any tax at all.

(Sri R. Subramaniam in the Chair.)

In order to prevent this, a new provision has been included in the Bill whereby notwithstanding the fact that it is not the first sale and notwithstanding the fact that it has already suffered multi-point levy, any sale of goods mentioned in the first schedule, as can bear a single-point levy, shall be subject to such single-point levy on and after the law comes into force.

If provision is not made for taxing the sales of such stocks from that date, the second and subsequent dealers will purchase and hoard large stocks before that date to get the benefit of lower rate of tax and the Government will lose revenue. New clause 60 has accordingly been inserted to provide for the levy of tax on the sales of these stocks also.

Let me now proceed to examine the schedules. Staple fibre yarn has been included at 1 per cent along with artificial silk yarn. In fact staple fibre yarn and artificial silk yarn come from synthetic chemicals and there is no difference between the two, and therefore any difference in the levy cannot be justified. Bone meal and any mixture of organic manure and chemical fertiliser have been included in the definition of chemical fertilisers. According to item 27 of the first schedule as it originally stood, firewood and charcoal were liable to single-point tax.

(Mr. Speaker in the Chair.)

As the tax under single-point system is payable, whatever be the quantum of turnover of such goods, even small dealers in firewood especially in the village parts will become liable to pay



10th February 1959] [Sri R. Venkataraman]

tax. This will cause inconvenience to the small dealers. It has, therefore, been decided to exclude firewood and charcoal from the first schedule and to retain it under multi-point levy.

For the same reason, 'bricks and tiles' have been deleted from the first schedule. Ivory products, carvings, paintings and curios have been deleted from the first schedule, as it was considered that it will be difficult to locate the point of taxation in respect of these goods. The following items have also been deleted from the first schedule as the trade represented that the multi-point levy will be more convenient in respect of these goods than a single point levy at a higher rate :—

(1) Aerated water.

(2) Matches including undipped splints and veneers.

(3) Stainless steel sheets, utensils and articles made of stainless steel.

(4) Aluminium, copper and brass sheets and utensils and articles made therefrom.

(5) Chemicals, drugs and medicines excluding indigenous medicines, herbs and roots used for indigenous medicine.

(6) Dyes and chemicals.

(7) Tin, zinc, lead (non-ferrous) slabs, bars, blocks, ingots, or scraps.

(8) Spectacles and frames of all kinds.

(9) Tapioca.

'French coffee' has been included in the first schedule for single-point levy at 5 per cent. Sugarcane and potatoes have also been included in the first schedule as they are commercial crops and are suitable for single-point levy. So far as sugarcane is concerned, it will be the last purchase in the State. Sugarcane is generally purchased for use in the sugar factories and therefore it is found that it is possible to collect the single-point levy at that point. Similarly potato will be taxed at the first sale in the State, and as it is largely purchased for export to other States, it can easily bear the tax at the point of the first purchase.

The Select Committee has made these changes after a thorough examination of the provisions of the Bill and after due consideration, and I presume that they will satisfy all shades of opinion in this House. The recommendations of Dr. Lokanathan have been substantially accepted except in regard to the general multi-point rate of tax and the rate of tax on foodgrains, milk, pulses and vegetables. While moving the Bill in this House previously on the 12th March 1958, I have already explained to this House that in view of the paramount need for funds to execute the Second Five-Year Plan and the condition of the State finances, the Government could not afford to experiment by reducing the rates when there was no guarantee that the yield under the revised system will not be below the present yield. The demands of merchants

have been met to a large extent by the introduction of slab rates for small dealers who form 50 to 60 per cent of the dealers assessed to tax and the extension of single-point levy to a large number of items.

The pattern of the Bill is calculated to give relief to small dealers, to reduce the inconvenience to traders in general in filing returns, appeals, etc., and getting legitimate relief and to protect the interests of honest traders by plugging evasions and suppressions.

Before I conclude, I wish to record my thanks to the members of the Select Committee for the excellent co-operation they gave me. But for the extraordinary diligence they showed, it would have been very difficult to bring about a measure of agreement in regard to the Bill, which has now been made possible. I now request the House that the Bill, as amended by the Select Committee, be taken into consideration.

MR. SPEAKER : Motion moved.

"That the Madras General Sales Tax Bill, 1956 (L.A. Bill No. 6 of 1958), as amended by the Select Committee, be taken into consideration ".

10-40 a.m. MR. SPEAKER : Now, there will be general discussion for two days, i.e., to-day and tomorrow. I request the hon. Members who wish to participate in the discussion to speak for not more than 15 minutes.

SRI M. KALYANASUNDARAM : Sir, time may be given till tomorrow for the sending of amendments.

MR. SPEAKER : Even yesterday, I have announced the latest time by which amendments will have to be sent. I am sorry the hon. Member was absent yesterday. I suppose his party-men would have told him about it; anyway, he can ascertain the exact time within which amendments are to be sent, from his party Members. I have already announced the time.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Mr. Speaker, I request the Hon. Minister through you, to arrange to circulate copies of his speech to all the hon. Members of this House before this evening.

THE HON. SRI R. VENKATARAMAN : I shall try to do so, Sir.

*SRI K. RAMACHANDRAN : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விற்பனை வரி மசோதாவைப் பொறுத்தவரை, இந்த மசோதாவைப் பற்றி ஆரம்பத்தில் பேசுகிற காலத்தில் இதை ஒரு "comprehensive and simplified" சட்டமாகக் கொண்டுவரவேண்டுமென்ற குறிப்பை மந்திரி அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இந்த விற்பனை வரியைப் பொறுத்தவரை என்னென்ன கஷ்டங்கள் சொல்லப்பட்டு வந்தன, என்பதை எல்லாம் பரிசிலித்து பொதுமக்கள், வியாபாரிகள் ஆகியவர்களின்

10th February 1959] [Sri K. Ramachandran]

கோணங்களில் இருந்தெல்லாம் ஆலோசனை செய்து பார்த்து இந்தச் சட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம். டாக்டர் பி. எஸ். லோகநாதன் அவர்களை இதைப்பற்றியெல்லாம் விசாரிக்கப்போட்டிருந்தார்கள். அதற்குப் பின் இந்தச் சட்டமானது வெகு நாட்களுக்குப் பின் வந்திருக்கிறது. இப்பொழுது இது "சிம்ப்ளிபைடு" லெஜிஸ்லேஷனாக இருக்கிறதா (SRI R. SUBRAMANIAM in the chair) மந்திரி அவர்களின் குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால், இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். பொதுவாக விற்பனை வரியைப் பொறுத்தவரை ஒரு முனை விற்பனை வரி என்பது வற்புறுத்தப்பட்டு வந்தது. ஏன் அப்படி ஒரு முனையில் விதிக்க வேண்டும் என்று நான் விரிவாகச் சொல்ல வேண்டுமென்பது அவசியம் இல்லை. அதுதான் "simplified" என்பதற்குப் பொருள். கொடுக்கும் வரியை ஒரு முனையில் விதிப்பதால் பல கட்ட விற்பனை வரியினால் ஏற்படும் சிரமமான நிலைமைகள் ஏற்படாமல் இருக்கும் என்பதற்காகத்தான் இதை வலியுறுத்தி வந்தோம். பொதுவாக இந்த விற்பனை வரியைப் பொறுத்த வரை சிறிய வியாபாரிகளுக்குத்தான அதிகத் தொந்தரவு இருக்கிறது. அதைப் பார்க்கும்போது இப்பொழுது வந்திருக்கும் சட்டத்தின்படி 10 ஆயிரம் வரை "டர்ன் ஓவர்" உள்ளவர்களுக்குத்தான் இதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கும்போது அது அவ்வளவு பெரிய விஷயம் என் சொல்லிக்கொள்ள முடியாது. 10 ஆயிரம் "டர்ன் ஓவர்" என்று சொல்லும்போது ஒரு மாதத்திற்கு 230 ரூபாய் ஒரு நாளைக்கு 25, 30 வரை வியாபாரம் செய்யும் வியாபாரிக்கு பாதகம் ஏற்படக்கூடிய நிலையில் இந்த விற்பனை வரி வந்திருக்கிறது. ஏற்கனவே இருந்ததை விட இப்பொழுது ஓரளவுக்கு நல்ல விதத்தில் இருக்கிறது என்றாலும் இன்று இருக்கும் நிலையை எடுத்துக்கொண்டு பார்த்தால் ஒரு நாளைக்கு 25, 30 வரை வியாபாரம் செய்யும் வியாபாரிக்கு சாதாரணமாக 2 அல்லது 3 ரூபாய்கள்தான் லாபம் கிடைக்கும். அவர்களுக்கு ஒரு மாதத்திற்கு 100 ரூபாய்தான் வருமானம் கிடைக்கும். இந்த அடிப்படையில் பார்த்தால் இந்த மாதிரி சிறிய வியாபாரிகளால் சாதாரணமாக கணக்குகள் வைத்துக் கொள்வது சாத்தியமா என்பதை நாம் சிந்தித்துப்பார்க்க வேண்டும். உங்களுக்கு, எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்—பலசரக்கு வியாபாரிகள் ஒரு நாளைக்கு 20, 30 ரூபாய்க்கு வியாபாரம் செய்யக்கூடியவர்களாக இருந்த போதிலும் அவர்கள், காலணா, அரையணாவுக்கும்கூட சாமான்கள் விற்க வேண்டி இருக்கிறது. அவர்கள் இதற்கெல்லாம் கணக்கு வைத்துக் கொள்வது என்பது சாத்தியமான காரியமா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். எனவே 10 ஆயிரம் ரூபாய் என்று நிர்ணயித்திருப்பது குறைவு என்று நான் கருதுகிறேன். இதை ஓரளவுக்கு 20 ஆயிரம் என்று உயர்த்தி விட்டோமானால் கிட்டத்தட்ட 50 முதல் 60 ரூபாய் வரை வியாபாரம் செய்பவர்கள் மட்டும் கணக்கு வைத்தால் போதும் என்றிருக்கும். இவ்வாறு 20 ஆயிரம் என்று உயர்த்தினோமானால் வருமானம் குறைந்து விடும் என்று சொல்லலாம். ஆனால் அது சரியல்ல. ஒரு நாளைக்கு 50, 60 ரூபாய்க்கு மேல் வியாபாரம் செய்யும் வியாபாரிகளிடம் இருந்து பூரா விற்பனை வரியையும் கண்டு பிடித்து வசூலிப்பது தற்போது திறமையாக நடந்து வருகிறது என்று சொல்ல முடியாது. நான் "evasion" ஐப்பற்றித்தான் குறிப்பிடுகிறேன். இப்படிக் குறைந்த "டர்ன் ஓவர்" உள்ள வியாபாரிகளின் கணக்குகளையும் பார்க்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்ற காரணத்தால் பெரிய வியாபாரிகளை அதிகாரிகள் சரியாகக் கண்காணிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும். பொதுவாக பெரிய வியாபாரிகளிடந்தான் "tax evasion" அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. அதை நிதர்சனமாகக் காண்கிறோம். அவர்கள் கணக்குகளில் மோசம் செய்வதில் இருந்து, எல்லா விதமான பிறபோக்கு வழிகளையும் கடைப்பிடிக்கிறார்கள். அவர்களுடைய கணக்குகளைப் பரிசீலிப்பதில் தொந்தரவும், அதிகாரிகளுக்குச் சங்கடம் ஏற்படும். ஆகவே 20 ஆயிரம் என்று உயருவதன் மூலம் அதிகாரிகள் பெரிய வியாபாரிகளின் கணக்குகளை நன்கு பரிசீலித்து வரி விதிப்பதின் மூலம் வருமானம் அதிகரிக்குமே தவிர குறைந்து விடாது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

டாக்டர் லோகநாதன் "**essential articles**" என்பதைப் பொருத்த வரை ½ சதவிகிதம் வரி போட வேண்டும் என்று சிபாரிசு செய்திருக்கிறார்கள். அரசாங்கம் 1 சதவிகித பலகட்ட வரி விதித்திருக்கிறது. நாம் எதிர் பார்த்தது எல்லாம் இந்த உணவு தானியங்களுக்கு வரியினின்றும் விலக்கு அளிக்கப்படவேண்டும் என்பதுதான். இந்த பலகட்ட விற்பனை வரியின் மூலம் பொதுவாக ஏழை மக்கள் பாதிக்கக்கூடிய நிலைமைதான் ஏற்படும். உணவு தானியங்கள் பாதிக்கக்கூடிய நிலைமை ஏற்படக் கூடாது என்பதற்காகத்தான் அதற்கு பல கட்ட வரியினின்றும் விதி விலக்கு அளிக்க வேண்டுமென்று கூறுகிறேன். இப்பொழுது "**multi-point tax**" ஆக இருக்கிறது. ஒரு முனை வரியாக இல்லை. பக்கத்தில் உள்ள கேரளா, மைசூர் ராஜ்யங்களில் எல்லாம் உணவு தானியங்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. நாம் என் அதைச் செய்ய முடியவில்லை என்ற விவரம் தெரியவில்லை. முக்கியமான காரணம் என்று சொல்லப்பட்டதெல்லாம் "நாம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இருக்கிறோம். நாம் வருமானத்தைப் பொறுத்துத்தான் இந்த வரி விதிப்பை விதிக்க வேண்டியிருக்கிறது." என்பதுதான். நான் வருமானத்தைக் குறைக்க வேண்டுமென்று வாதிக்கவில்லை. இப்பொழுது உள்ள சட்டத்தின்படி இந்த வரியின் மூலம் என்ன வருமானத்தை எதிர்பார்க்கிறோம். இந்த சட்டத்தின் "**financial implications**" என்ன என்பது தெரியுமானால் இதைப்பற்றி முடிவுக்கு வரலாம். அவ்வாறில்லாமல் வருமானம் குறைந்துவிடும் என்று கூறுவதை என்னால் ஒத்துக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறேன். திரு பி. எஸ். லோகநாதன் விசாரணை செய்து கொடுத்த விவரம் என்ன? இந்த உணவு தானியங்களுக்கு வரியை நீக்கினால் அதனால் கிடைக்கும் நிகர வருமானம் என்ன என்பது பற்றி, வரி விதிப்பிலிருந்து விலக்குவது பற்றி செலக்ட் கமிட்டி என்னென்ன விவரங்கள் கொடுத்தது என்பதுபற்றியெல்லாம் சரியான முறையில் தெரியாத வரையில் இதை உண்மையில் "**comprehensive legislation**" என்று சொல்ல முடியாது.

10-50 a.m. அடுத்தாற்போல பாலுக்கு விற்பனை வரி போடப்பட்டிருக்கிறது. அதையும் நீக்க வேண்டுமென்று பல முறை வற்புறுத்தப்பட்டு வந்திருக்கிறது. பல விண்ணப்பங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சமீப காலத்தில் பாலினுடைய உற்பத்தியும், உபயோகமும் அதிகமாகிக்கொண்டு வருகிறது. பால் இந்த நாட்டின் குழந்தைகளின் உணவு. குழந்தைகளே நாட்டின் செல்வமாதலால், அவர்களுக்கு உணவாக இருக்கும் இந்தப் பாலுக்கு குழந்தைகளின் க்ஷேமத்தை உத்தேசித்தாவது வரி போடக் கூடாது. எல்லோரும் கொஞ்சமாவது பால் சேர்த்துக் கொள்ள வாய்ப்பு இருக்க வேண்டும். பால் போன்ற அத்தியாவசியமான உணவுப் பொருள்களுக்கு கண்டிப்பாக விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கவேண்டும். நிதி நிலைமையைப் பற்றி எடுத்துச் சொல்லி, நம்முடைய திட்டங்களை எல்லாம் நிறைவேற்ற வேண்டுமானால் நமக்குப் பணம் தேவை, என்கிற ஒரே கருத்தை இதில் அடிப்படையாகக் கொண்டு இந்த மாதிரியாக வரி போடக்கூடாது. நிபுணர்களும் இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்.

ஏற்கனவேயே கம்பவுண்டிங் முறையில் சிறிய வியாபாரிகளுக்கு அதிகத் தொந்தரவு இருக்கிறது. சிறிய வியாபாரிகளைத் தொந்தரவு செய்வது அதிகாரிகளுக்கும் சுலபமாக இருக்கிறது. பெரிய வியாபாரிகளை விட வெகு சுலபத்தில் இவர்களை பயமுறுத்தி, மிரட்டி வரியை அதிகமாகப் போட்டு தொந்தரவு செய்ய முடிகிறது. ஆகவே சிறு வியாபாரிகளுக்கு எந்த எந்த வகையில் எல்லாம் கொஞ்சம் வசதி செய்து கொடுக்க முடியும் என்பதைப்பற்றித்தான் சிந்திக்க வேண்டும்.

கம்பௌண்டிங் லிமிட்டை 25 ஆயிரம் ரூபாய் வரையில் செய்து இருக்கிறார்கள். வரி விலக்கை 20 ஆயிரம் ரூபாய் ஆக வைத்துக் கொண்டு இந்த கம்பவுண்டிங் லிமிட்டை 40 ஆயிரம் வரையில் வைத்திருந்தால் சிறு வியாபாரிகளுக்கு அதிக வசதியாக இருந்திருக்கும். கணக்கு வைத்துக்கொள்ளும் தொல்லையும் இல்லாமலிருக்கும். பெரிய வியாபாரிகளைப் பொறுத்த





வரையில் டாக்ஸ் இவேஷனுக்கு இடம் இல்லாமல் பார்த்துக்கொண்டால் போதும். நமது வருமானம் ஒருநாளும் குறையாது. ஏனென்றால், கம்பவுண்டிங் லிமிட்டை 40 ஆயிரம் என்று வைத்துக்கொண்டாலும்கூட ஒரு தினத்திற்கு 100 ரூபாய் வியாபாரம் செய்யக் கூடிய வியாபாரிக்குகூட அனுகூலமாக இருக்கும். 100 ரூபாய் ஒரு நாள் வியாபாரம் என்றால் அதில் இவர்களுடைய லாபம் ஒரு ரூபாய்க்கு 1 அணாதான். அதாவது நாள் ஒன்றுக்கு 6 ரூபாய் முதல் 10 ரூபாய் வரையில் கிடைக்கலாம். அதாவது மாதம் இவர்களுடைய லாபம் 300 ரூபாய்க்கு மேல் போகாது. சாதாரண குடும்பத்தை வைத்து சம்ரட்சிக்கத்தான் இது போதுமானதாக இருக்கும். ஆகவேதான் இந்த கம்பவுண்டிங் லிமிட்டை 40 ஆயிரமாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல ரிஜிஸ்ட்ரேஷன் ஆப் டீலர்ஸ். இதிலும் 15 ஆயிரம் வரையில் மட்டும் ரிஜிஸ்டர் செய்துகொண்டால் போதும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். சின்னச் சின்ன வியாபாரிகளை அதுவும் 7 ஆயிரம், எட்டாயிரம் வருஷ வியாபாரம் செய்யக் கூடியவர்களைக்கூட ரிஜிஸ்டர் செய்யவேண்டுமென்று சொல்வதில் மிகவும் சிரமங்கள் இருக்கின்றன. சில பேர்களுக்கு நிலையான இடம் இல்லாமலே வியாபாரம் செய்யவேண்டிய நிலை இருக்கிறது. அதுவுமின்றி பலயிடங்களுக்கு மாறக்கூடிய நிலையும் இருக்கிறது. அதனால்தான் 7,500 என்று இருப்பதை 15 ஆயிரமாக உயர்த்தவேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பொறுக்குக் கமிட்டியில் கூட அதிக வரி போடுவதன் காரணமாக வியாபாரம் வேறு பிரதேசங்களுக்குச் சென்றுவிடக்கூடாதென்ற கருத்து சொல்லப்பட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு பணம் வேண்டும். அதைக் குறைத்துவிடக் கூடாது என்றார்கள். அந்தச் சமயத்தில் சொல்கிற காலத்தில் கூட ஒரு காம்பிரிஹென்சிவ் லெஜிஸ்லேஷன் கொண்டு வரப்போவதாகச் சொன்ன அமைச்சர் அவர்கள் — அப்படி ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்ற முடியாமல் இருப்பதற்கு வருந்துகிறேன். உணவு தானியங்கள் மீது போடப்பட்டிருக்கக்கூடிய வரியை நீக்கிவிட்டு, ஒருமுனை விற்பனை வரியை எல்லாப் பொருள்களுக்கும் கொண்டு வருவதனால் என்ன பயன் உண்டாகும் என்பதை புள்ளி விவரங்களுடன் பரிசீலனை செய்து பார்க்காத வரையில் இதை என்னால் ஒப்புக் கொள்ள முடியவில்லை. இனிமேலாவது வியாபாரிகளுக்கு சௌகரியம் அளிக்கும் வகையில் இந்த மசோதாவில் சில பல நல்ல திருத்தங்களையாவது செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**Sri S. LAZAR**: சேர்மன் அவர்களே, சபையின் முன் விவாதத்திற்கு வந்திருக்கிற 1958-ம் வருஷத்திய பொது விற்பனை வரி மசோதாவின் மீது என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கனவே அமைச்சர் சொன்னது போல இந்தச் சட்டம் 1939-லேயே விதிக்கப்பட்டிருக்கிறது. நடைமுறையில் அவ்வப்போது ஏற்படுகிற சில பல சிக்கல்களுக்கு ஏற்ப பல திருத்தங்கள் அதில் செய்யப்பட்டு வந்திருக்கின்றன. இதனால் சர்க்காருக்கு ஒரு பக்கத்தில் அவஸ்தை. வியாபாரிகளுக்கு உண்டாகிற தொந்தரவுகள் ஒரு பக்கம். அதோடு சர்க்காருக்கு வரக்கூடிய வருமானமும் வராது செய்கின்றவர்களின் எண்ணிக்கையும் அதிகமாகிவிட்டது. இந்த மூன்று காரணங்களையும் வைத்துக்கொண்டு இந்த மசோதாவை நல்ல முறையில் திருத்தி அமைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இப்போது கொண்டுவரப்பட்டிருக்கிற மசோதாவை என்னால் பாராட்டாமல் இருக்க முடியாது. இந்தச் சட்டம் பொறுக்குக் கமிட்டிக்குச் சென்றதற்குப் பிறகு நல்ல திருத்தங்களோடு புது அம்சங்களும் சேர்ந்து வந்திருப்பதைப் பற்றி நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னது போல பல முக்கியமான அம்சங்கள் இதில் இருக்கின்றன. எந்த நோக்கத்தோடு இந்தச் சட்டத்தை நாம் கொண்டுவரவேண்டுமென்று நினைத்தோமோ அந்த நோக்கங்கள் இதில் பெரும் அளவுக்கு வெற்றி பெற்றிருக்கிறதென்பதைப் பார்க்கிறபோது நாம் எல்லாம் சந்தோஷப்பட

[Sri S. Lazar] [10th February 1959

இந்த அம்சமானது நமது அரசியல் சட்டத்திற்கு புறம்பாக அமைந்திருப்பதாக சந்தேகம் இருக்கிறது. ஆனால் இதிலே ஐந்தாவது உப பிரிவிலே அந்த மூன்றாவது நபர் அம்மாதிரி அந்த வியாபாரிக்கு பணம் கொடுக்க வேண்டியதில்லை என்று சொன்னால் இந்த விதி பொருந்தாது என்று கூறப்பட்டிருக்கிறது. இதைப் பார்க்கும்போது அரசாங்கத்தினுடைய நோக்கம் இதனால் நிறைவேறாது என்று தெரிகிறது. அதனால் 11-10 a.m. அரசாங்கம் இதை பரிசீலனை செய்து இந்த ஐந்தாவது உப பிரிவை அகற்றிவிட்டால்தான் அரசாங்கத்தின் நோக்கம் நிறைவேறும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே 5-வது உப பிரிவை அகற்றிவிட்டால் அரசாங்கத்தின் நோக்கம் நல்லபடி நிறைவேறும் என்று நான் நினைக்கிறேன்.

**The Hon. Sri R. VENKATARAMAN** : சபைத் தலைவர் அவர்களே, இது சட்டப் பிரச்னையாக இருப்பதால், இதைநான் உடனே தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஒரு குறிப்பிட்ட நபரிடமிருந்து வாங்க வேண்டிய விற்பனை வரிப் பணத்தை அவருடைய **Judgment-debtor** இடமிருந்து வாங்குவதற்கு—அந்த **garnishee**-யிடமிருந்து வாங்குவதற்கு சிவில் ப்ரொஸிஜர் கோடில் என்ன ஷரத்துக்கள் இருக்கின்றனவோ, அவைகளுக்கு உட்பட்ட ஷரத்துக்கள் தான் இந்த மசோதாவில் இங்கே போடப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கு புறம்பான ஷரத்துக்கள் இங்கே போடப்படவில்லை. குறிப்பிட்ட ஒரு நபர் கொடுக்க வேண்டிய விற்பனை வரியைக் கோரும் நோட்டீஸைப் பெற்ற மூன்றாவது நபர், தாம் அந்த குறிப்பிட்ட நபருக்குப் பணம் கொடுக்க வேண்டியவராக இல்லை—தாம் அவருக்கு ஜட்ஜ்மெண்ட் **Debtor**-ஆக இல்லை—என்ற காரணத்தைக் கொண்டு வரிப் பணத்தைக் கொடுக்க மறுத்தால், அவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டியதில்லை என்றும் இந்த மசோதாவில் விதிக்கப்பட்டிருக்கிறது. எனவே இவை ஒழுங்கான ஷரத்துகள் தான்.

**Sri S. LAZAR** : அடுத்தபடியாக, ஏற்கெனவே இருந்த சட்டத்தில் அப்பீல்களைப் பைசல் செய்யும் அதிகாரம் இலாகாவில் உள்ள அதிகாரிகளுக்குத் தான் இருந்துவந்தது. சாதாரணமாக, டெபுடி கமெர்ஷியல் டாக்ஸ் ஆபீசர் விதிக்கும் வரி சம்பந்தமாக ஆட்சேபனை செய்ய வேண்டுமானால் அதற்கு கமர்ஷியல் டாக்ஸ் ஆபீசரிடம் அப்பீல் செய்துகொள்ள வேண்டியிருந்தது ; அப்போது, ஒரே அப்பெலேட் ட்ரிப்யூனல்தான் இருந்து வந்தது. அந்த நிலையில் இரண்டு வேலைகளையும் ஒரே அதிகாரி பார்த்து வந்ததால் பல கோளாறுகள் ஏற்பட்டன. பல கோளாறுகள் ஏற்பட்டனவோ இல்லையோ, அதனால் மக்களுக்கு மிகவும் அதிருப்தி இருந்தது உண்மை. இந்த மசோதாவில், அந்த நிலையை மாற்றி, தனி ஜுடிஷியல் ட்ரிப்யூனலுக்கு வகைசெய்யப்பட்டிருக்கிறது. இது இந்த மசோதாவின் ஒரு சிறந்த அம்சம். ஜுடிஷியல் டிரிப்யூனல்களில் சட்டம் தெரிந்தவர்கள் நீதிபதிகளாக நியமிக்கப்படும் நிலையில் வியாபாரிகளுக்கு எந்த விதமான சந்தேகமும் இருக்க வேண்டிய அவசியமும் இல்லை.

மேலும், டிபார்ட்மெண்டல் அப்பீல்களுக்கும் வகை செய்யப்பட்டிருக்கின்றது. கோர்ட்டுகளுக்குச் சென்று பணம் செலவழிக்க விரும்பாதவர்களுக்கு இது மிகவும் அனுகூலமான அம்சம்.

அடுத்தபடியாக, கணக்குகளை வைத்துக்கொள்ளுவது சம்பந்தப்பட்ட ஷரத்துக்களைப் பொறுத்தவரையில், அரசியல் சட்டத்தின் 8-வது ஷரத்திலுள்ள பாஷைகளில் கணக்குகளை வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருப்பது அவ்வளவு உசிதமல்ல என்று நான் நினைக்கிறேன். நமது மாநிலத்தைப் பொறுத்தவரையிலும், பிரதேச மொழியானது அனேகமாக தமிழாக இருக்கிறது ; சில இடங்களில் வேறு பாஷைகளும் இருப்பதாகக் கேள்விப்படுகிறோம். எனவே, இதுசம்பந்தப்பட்ட ஷரத்தை; கணக்குகளை பிரதேச மொழியில் அல்லது ஆங்கிலத்தில் வைத்திருக்க வேண்டும் என்று திருத்தியமைத்தால், கணக்குகளைப் பரிசீலிக்கும் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு சௌகரியமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.



10th February 1959] [Sri S. Lazar]

இன்னொரு முக்கியமான விஷயம். அது இந்த மசோதாவில் இடம் பெறவில்லை. அதுசம்பந்தமாக கனம் அமைச்சர் பதில் அளிப்பார் என்று நம்புகிறேன். விற்பனை வரி சம்பந்தமாக ஒரு " இன்டெலிஜென்ஸ் அண்ட் இன்வெஸ்டிகேஷன் " இலாகா இருக்க வேண்டும் என்று டாக்டர் லோகநாதன் அவர்கள் தமது ரிப்போர்ட்டில் சொல்லி யிருக்கிறார்கள். உண்மையிலேயே அது அவசியம். இதற்கும் அரசாங்கம் ஏற்பாடு செய்யும் என்று எதிர்பார்க்கிறேன்.

விற்பனை வரியினால் மக்களுக்கு தொந்தரவு இருக்கக்கூடாது, அதனால் வியாபாரிகளுக்கு பளு ஏற்படக்கூடாது என்பன அரசாங்கத்தின் நோக்கங்கள். இந்த நோக்கத்தைக் கொண்டிருக்கும் அரசாங்கம் தனக்கு விற்பனை வரியினால் வருமானம் வரவேண்டும் என்றும் விரும்புகிறது. இந்த மூன்று நோக்கங்களுடன் இந்த மசோதாவை அரசாங்கம் கொண்டு வந்திருக்கிறது. இந்த மூன்று நோக்கங்களும் நிறைவேறவேண்டுமானால், இந்த இலாகாவிற்கு நியமிக்கப்படும் அதிகாரிகள் சிறந்தவர்களாகவும், நேர்மையானவர்களாகவும் இருக்க வேண்டும். இப்போதுள்ள அதிகாரிகள் சிறந்தவர்கள் அல்ல என்று நான் சொல்லவில்லை. இன்னும் சிறந்த அதிகாரிகளை நியமிக்க வேண்டும். வேண்டுமானால், அரசாங்கம் அந்த அதிகாரிகளுக்கு அதிப்படியான ஊதியம் கொடுக்கலாம். அவ்வாறெல்லாம் செய்தால் இயற்றப்படும் சட்டம் நல்ல பலன் அளிக்கும் என்று சொல்லிக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

**Sri T. SAMPATH** : சபைத் தலைவர் அவர்களே, இந்த மசோதா மிகவும் முக்கியமான மசோதா. ஏனென்றால், இது அரசாங்கத்திற்கு அதிக வருவாயைத் தரக்கூடியது. நாம் சுமார் 10 கோடி ரூபாய் வருவாயை விற்பனை வரியின் மூலம் எதிர்பார்க்கிறோம். எனக்கு முன் பேசிய கனம் நண்பர் ஸ்ரீ. லாஸர், விற்பனை வரி விதிப்பின் வரலாற்றைச் சொன்னார். 1939-ம் ஆண்டில் விற்பனை வரிச் சட்டம் வந்தது. 1939-ம் ஆண்டிலிருந்து 30 ஆண்டுகள் ஆகிவிட்டன. விற்பனை வரிச் சட்டத்தால் சிக்கல்கள் ஏற்பட்டு, பல கோர்ட்டுத் தீர்ப்புகள் வந்திருக்கின்றன இந்தச் சிக்கல்களை யெல்லாம் தீர்க்க வேண்டுமென்றும், இந்த வரியை எந்த அளவில் விதித்தால் மக்களுக்கு கஷ்டம் இருக்காதோ அந்த அளவில் விதிக்க வேண்டுமென்றும் விரும்பி இந்த அரசாங்கம் டாக்டர் லோகநாதன் அவர்களை, இது சம்பந்தமாக ஒரு ரிப்போர்ட் தயாரித்து சமர்ப்பிப்பதற்கு நியமித்தது. அவர் ஒரு அறிக்கையை சமர்ப்பித்தார். ஓராண்டு காலத்திற்கு முன்பு இந்த மசோதா சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. அதற்குப் பிறகு இந்த ஓராண்டு காலம் இது பொறுக்குக் கமிட்டியால் பரிசீலிக்கப்பட்டது. பொறுக்குக் கமிட்டியின் ரிப்போர்டும் சபையில் வைக்கப்பட்டிருக்கிறது. பொறுக்குக் கமிட்டியினர் இந்த மசோதாவை நன்றாகப் பரிசீலித்து சில நல்ல மாறுதல்களை பல பிரிவுகளில் செய்திருக்கிறார்கள். இந்தத் திருத்த மசோதாவை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். இருந்தாலும், இந்தத் திருத்த மசோதாவானது, கூடியவரையில் அரசாங்கத்திற்கு அதிக வருவாய் கொடுக்கக்கூடியதாகவே உருவாகியிருப்பதாக நான் நினைக்கிறேன். இந்த மசோதாவை நான் எதிர்க்கவில்லை. அரசாங்கத்திற்கு அதிக வருவாய் வருவதையும் ஆட்சேபிக்கவில்லை. ஏனென்றால், நம் திட்டங்களெல்லாம் வெற்றிகரமாக நிறைவேற வேண்டும் என்றும் அதற்கு அதிகப் பணம் வேண்டும் என்றும் கனம் அமைச்சர் சொல்லியிருக்கிறார். இருந்தாலும், மற்றொரு முக்கிய விஷயத்தை அரசாங்கம் கவனிக்க வேண்டும். வியாபாரிகள் மீது போடப்படும் விற்பனை வரியானது அவர்களுக்குச் சுமையாக இருக்கக்கூடாது. ஏனென்றால், வியாபாரிகள் மீது போடப்படும் வரியானது உண்மையில் மக்கள் மீது தான் விழுகிறது. இந்தக் கண்ணோட்டத்துடன் நாம் இந்தத் திருத்த மசோதாவைப் பரிசீலிக்க வேண்டும். அப்படிப் பார்க்கும்போது, இந்த மசோதாவில் இன்னும் சிலமாறுதல்களுக்கு இடம் இருக்கிறது என்று நான் நினைக்கிறேன்.

விற்பனை வரி வசூலிக்கப்பட வேண்டியவருக்கு இருக்க வேண்டிய குறைந்தபட்ச மொத்த வருட வருமானம் 5,000 ரூபாய் என்று இந்த மசோதாவில், செலக்ட் கமிட்டிக்குப் போவதற்கு முன்பு, நிர்ணயிக்கப்

[Sri T. Sampath] [10th February 1959

பட்டிருந்தது. அந்த வரம்பை பொறுக்குக் கமிட்டியினர் 10,000 ரூபாயாக
உயர்த்தியிருக்கிறார்கள். இது மிகவும் வரவேற்கத்தக்க விஷயம் தான்.
எனக்கு முன்பு பேசிய ஸ்ரீ. ராமச்சந்திரன், இந்த வரம்பை 20,000
ரூபாயாக ஆக்க வேண்டுமென்று சொன்னார். அவர் கோருவது ஒப்புக்
கொள்ளக்கூடியது என்று நினைக்கிறேன். ஏனென்றால், நாட்டில் இன்
றுள்ளபொருளாதார நிலையிலும் பணவீக்க நிலையிலும், இந்த விதி
விலக்கு வரம்பை 20,000 ரூபாயாக வைத்தால், சில்லறை வியாபாரி
களுக்கு பெரிய அளவில் நிவாரணம் கிடைக்கும். கனம் நண்பர்கள்
ஸ்ரீ. லாஸர் அவர்களும் ஸ்ரீ. ராமச்சந்திரன் அவர்களும், உணவுப்
பொருள்களுக்கு, சர்க்கார் விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்க
வேண்டும் என்று சொன்னார்கள்.

அண்டை ராஜ்யங்களாகிய கேரளா, மைசூர், இந்த இரண்டு ராஜ்யங்களில்
உணவுப்பொருள்களின் மேலுள்ள வரியை எடுத்து விட்டார்கள். இது
நீண்ட நாளையப் பிரச்னை. வெகு நாட்களாகவே இதை வலியுறுத்தி வரு
கிறோம். ஆனால் இப்பொழுது பொறுக்குக் கமிட்டி என்ன சிபார்சு
செய்திருக்கிறது என்று பார்த்தால் இப்பொழுது ஒவ்வொரு கட்டத்திலும்
விதிக்கப்படும் 2 சத விகிதம், மல்டிபாயிண்ட் என்று சொல்வார்களே,
அந்த வரியை ஒரு சதவிகிதமாக குறைத்தால் போதுமென்று சிபார்சு
செய்திருக்கிறார்கள். அதே அளவில் கைத்தறி துணிகளுக்கு பூராவாக
விதிவிலக்கு அளிக்கப் பட்டிருக்கிறது. உடை மக்களுக்கு எவ்வளவு முக்கி
யமோ அதை விட மிக முக்கியமானது உணவு. அந்தளவில் பார்ப்
போமேயானால் உணவுப் பொருள்களுக்கு பூராவாக விதிவிலக்கு இருப்பது
தான் பொருத்தமாகும். அதுதான் நியாயமென்றும் நான் எண்ணு
கிறேன். அப்படி ஒருக்கால் அரசாங்கம் அதற்கு பூராவாக விலக்கு
அளிக்க முடியாதென்று கருதினால் லோகநாதன் அவர்கள் சிபார்சுபடி
½ சத வீதம் ஆக உணவுப் பொருள்கள் மீதுள்ள வரியைக் குறைக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதையாவது ஏற்றுக் கொண்
டால்தான் ஏழை மக்களை இந்த வரிச்சுமை பாதிக்காது. ஆகவே அந்தளவு
அதை ½ சத வீதம் ஆக குறைக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக்
கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, கைத்தறி, கைத்தறி ஜவுளி,
நூல்கள், இவைகளுக்கு எல்லாம் வரியில் இருந்து பூராவாக விலக்கு
அளிக்கப் பட்டிருக்கிறது. இதிலே, " ஹாண்ட் ஸ்பன் யார்ன் " என்று
குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஷெடியூல், 3-ல், **hand-spun yarn** . . . . . .
என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஆனால் கோராப் பட்டுகள், கோரா
நூல்கள் எல்லாம் அதில் வரவில்லை. ஏற்கனவே கோராப் பட்டுகள்,
கோரா நூல்கள் இவைகளுக்கெல்லாம் நமது அரசாங்கம் விதிவிலக்கு
அளித்தது. லோகநாதன் அவர்கள் சிபார்சில் கூட, 59-வது பக்கத்தில்
" உறாண்ட்ஸ்பண் " என்பதற்கு ஒரு விளக்கம் தந்திருக்கிறார்கள்,
"**including all kinds of indegenous silks**" என்று. எப்பொழுது
கைத்தறி ஜவுளிகளுக்கும், கைத்தறி நூல்களுக்கும் விலக்கு
அளித்திருக்கிறோமோ அதேமாதிரி பட்டுக்கும் நாம் விலக்கு அளிப்பது
தான் பொருத்தமாகும். அதைப் பரிசீலனை செய்து அதற்கும் விதிவிலக்கு
அளிக்க வேண்டுமென்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.
அடுத்தாற்போல் பொறுக்குக் கமிட்டியின் முடிவு பெருவாரியான சாமான்
களின் விஷயத்தில் நாம் கையாளும் ஒவ்வொரு கட்டத்திலும் 2 சத
வீத வரி செலுத்தியாக வேண்டுமென்று செலக்ட் கமிட்டி சிபார்சு
செய் திருக்கிறது. ஆனால் லோகநாதன் அவர்கள் இத்தகைய பலமுனை
வரி 1 சத வீதத்திற்கு மேல் இருக்கக் கூடாதென்று தெளிவாக
சொல்லியிருக்கிறார்கள்.

"In making these recommendations, I have taken full account of the revenue implication; I am convinced that the decision of the Government that multipoint levy is to be kept always at a moderate level, will go a long way in creating the condition of an effective and successful sales-tax system."



10th February 1959] [Sri T. Sampath]

என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஆனால் அந்த ரிப்போர்ட்டின் சிபார்
சுக்கு மாறுதலாக பொறுக்கு கமிட்டியானது 2 சத வீதமாக குறிப்
பிட்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்களும் தெரிவித்தார்கள், ஒரேடி
யாக வருவாய் குறையக் கூடுமென்ற அச்சந்தான். ஆனால் வரி எவ்வளவு
அதிகமாக இருக்கிறதோ அந்தளவு வரியில் இருந்து தப்பப் பார்ப்பார்கள்.
ஆகவே, இதை ஒரு சதவிகிதமாகக் குறைத்தால் வருவாய் குறைந்து
விடாது என்பதுதான் என் அபிப்பிராயம். அதைத் தான் லாஸர் அவர்
களும் குறிப்பிட்டார்கள். இதனால் வருவாய் பாதிக்கப்படாது என்று
தான் நான் கருதுகிறேன். அடுத்தாற்போல், ராமசந்திரன் அவர்கள்
முக்கியமான இன்னொரு விஷயத்தைப் பற்றி குறிப்பிட்டார்கள். கம்ப
வுண்டிங் ரேட் என்று சொல்லும் அம்சம், ரூ. 40,000 ஆக உயர்த்தப்
படவேண்டுமென்று சொன்னார்கள். அதுவும் ஏற்கக் கூடிய விஷயம்
என்றுதான் நான் கருதுகிறேன். அடுத்தபடியாக, லாஸர் அவர்கள்
காய் கறி, பூ முதலிய பண்டங்கள் மீதுள்ள வரி விலக்கு வரம்பை, 30,000
ஆக நிர்ணயிக்கப்பட்டிருப்பதை அதிகமாக்க வேண்டுமென்று சொன்
னார்கள். அதுவும் ஒப்புக் கொள்ளக்கூடிய விஷயந்தான், அதிகமாக
சேதாரமாகும் பண்டங்கள் இவை. ஆகவே இந்த வரம்பை கொஞ்சம்
கூடுதலாக்கி வைப்போமானால் மிகவும் சௌகரியமாக இருக்குமென்று
எண்ணுகிறேன். இவைகளுக்கு பூராவாகவே விலக்கு அளித்திருந்தால்
அது மிகவும் மகிழ்ச்சிகரமான விஷயமாக இருந்திருக்கும். அடுத்தபடி
யாக, ஹோட்டல் சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.
2½ சத வீதம் என்பது கொஞ்சம் உயர்வாகவே இருக்கிறது என்பது
தான் என் எண்ணம். அடுத்தபடியாக, இந்த மசோதாவில் நாம் நல்ல
பல அம்சங்களைக் காண்கிறோம். அமைச்சர் அவர்கள் குறிப்பிலே மூன்று
விஷயங்கள் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இந்த மசோதா மூன்று
பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒன்று, " அஸெஸ்மெண்ட் விங் ",
இன்னொன்று, " அப்பலெட் விங் ". மூன்றாவது " இன்டெலிஜென்ஸ்
விங் " ஒன்று, அதிகாரிகளின் உத்தரவுகள்பேரில் அப்பீல் செய்ய ஒரு
பிரிவு, வரியில் இருந்து தப்பாமல் இருக்க ஒரு தனி பிரிவு. ரிவிஷன்
பிரிவு சம்பந்தமாகவும் சொன்னார்கள். வரி சம்பந்தமாக இடப்படும் உத்தர
வின் பேரில் அப்பீல் செய்ய பிரிவு 30-ல் இருந்து பல பிரிவுகள் இருக்
கின்றன. உண்மையிலேயே நல்ல சிறந்த நோக்கத்துடனேயே பொறுக்கு
கமிட்டி பல விஷயங்களை ஆராய்ந்து பார்த்து அமைச்சர் அவர்கள் குறிப்
பிட்டமாதிரி இன்கம் டாக்ஸில் உள்ளபடியுள்ள அம்சங்களைப் பொருத்த
வேண்டுமென்ற நோக்கத்தின் பேரில் இந்தப் பிரிவுகளை மாற்றியமைத்
திருக்கிறார்கள். அது, மிகவும் வரவேற்கத்தக்கதாகும். 30-வது பிரிவு,
அப்பலெட் ட்ரிப்யூனல் பற்றியது. அதில் ஜில்லா ஜட்ஜ் அளவில் ஒருவர்
சேர்மெனாகவும், மற்ற இரண்டு மெம்பர்கள் கொண்ட குழு அப்பீல்
களை விசாரணை செய்யும் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் தற்போதுள்ள
நிலையில் இந்த அப்பலெட் ட்ரிப்யூனல்கள் சென்னையில் இருந்து கொண்டுதான்
இயங்கி வருகிறது. இதுபோன்ற ட்ரிப்யூனல்கள், எல்லா ஜில்லாக்களுக்கும்
சுற்றுப்பிரயாணம் செய்து ஆங்காங்குள்ள அப்பீல்களை விசாரணை செய்யும்
படியாக ஒரு வழிவகை செய்து கொடுத்தால் வியாபாரிகளுக்கு அது
மிகவும் சௌகரியமாக இருக்கும். இந்த யோசனையை அமைச்சர் அவர்கள்
பரிசீலனை செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். கடைசி
யாக, நான் சொல்ல ஆசைப்படுவது, இந்த "கம்பவுண்டிங் " என்று
சொல்லக்கூடிய அம்சம் இருக்கிறதே அதை எடுத்துப் பார்த்தால் 20%
50,000 ரூபாய்க்கு மேல் கொடுக்கக் கூடிய வியாபாரிகள் அதிகமாக
இருக்கிறார்கள். 50,000க்கு குறைவாக இருக்கக் கூடியவர்கள்
15 சதம் வீதம் இருப்பார்கள். ஆகவே அவர்களுக்கு இந்தச் சலுகையை,
(கம்பவுண்டிங்கை) அதிகமாக நாம் உயர்த்தி கொடுத்தால் அவர்களைப்
பொறுத்தமட்டில் சௌகரியமாக இருக்குமென்று சொல்லிக் கொண்டு
எனது வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

**Sri M. P. SUBRAMANIAM** : அவைத் தலைவர் அவர்களே, இந்த
விற்பனை வரிச் சட்டம் ஏறக்குறைய 20 ஆண்டு காலமாக நம்முடைய
மாநிலத்திலே அமுலாக்கப்பட்டு, நல்ல அனுபவமும், அறிவும், திற

[Sri T. Sampath] [10th February 1959

பட்டிருந்தது. அந்த வரம்பை பொறுக்குக் கமிட்டியினர் 10,000 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். இது மிகவும் வரவேற்கத்தக்க விஷயம் தான். எனக்கு முன்பு பேசிய ஸ்ரீ. ராமச்சந்திரன், இந்த வரம்பை 20,000 ரூபாயாக ஆக்க வேண்டுமென்று சொன்னார். அவர் கோருவது ஒப்புக்கொள்ளக்கூடியது என்று நினைக்கிறேன். ஏனென்றால், நாட்டில் இன்றுள்ளபொருளாதார நிலையிலும் பணவீக்க நிலையிலும், இந்த விதிவிலக்கு 'வரம்பை 20,000 ரூபாயாக வைத்தால், சில்லறை வியாபாரிகளுக்கு பெரிய அளவில் நிவாரணம் கிடைக்கும். கனம் நண்பர்கள் ஸ்ரீ. லாஸர் அவர்களும் ஸ்ரீ. ராமச்சந்திரன் அவர்களும், உணவுப் பொருள்களுக்கு, சர்க்கார் விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்று சொன்னார்கள்.

அண்டை ராஜ்யங்களாகிய கேரளா, மைசூர், இந்த இரண்டு ராஜ்யங்களில் உணவுப்பொருள்களின் மேலுள்ள வரியை எடுத்து விட்டார்கள். இது நீண்ட நாளையப் பிரச்னை. வெகு நாட்களாகவே இதை வலியுறுத்தி வருகிறோம். ஆனால் இப்பொழுது பொறுக்குக் கமிட்டி என்ன சிபார்சு செய்திருக்கிறது என்று பார்த்தால் இப்பொழுது ஒவ்வொரு கட்டத்திலும் விதிக்கப்படும் 2 சத விகிதம், மல்டிபாயிண்ட் என்று சொல்வார்களே, அந்த வரியை ஒரு சதவிகிதமாக குறைத்தால் போதுமென்று சிபார்சு செய்திருக்கிறார்கள். அதே அளவில் கைத்தறி துணிகளுக்கு பூராவாக விதிவிலக்கு அளிக்கப் பட்டிருக்கிறது. உடை மக்களுக்கு எவ்வளவு முக்கியமோ அதை விட மிக முக்கியமானது உணவு. அந்தளவில் பார்ப்போமேயானால் உணவுப் பொருள்களுக்கு பூராவாக விதிவிலக்கு இருப்பது தான் பொருத்தமாகும். அதுதான் நியாயமென்றும் நான் எண்ணுகிறேன். அப்படி ஒருக்கால் அரசாங்கம் அதற்கு பூராவாக விலக்கு அளிக்க முடியாதென்று கருதினால் லோகநாதன் அவர்கள் சிபார்சுபடி ½ சத வீதம் ஆக உணவுப் பொருள்கள் மீதுள்ள வரியைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதையாவது ஏற்றுக் கொண்டால்தான் ஏழை மக்களை இந்த வரிச்சுமை பாதிக்காது. ஆகவே அந்தளவு அதை ½ சத வீதம் ஆக குறைக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, கைத்தறி, கைத்தறி ஜவுளி, நூல்கள், இவைகளுக்கு எல்லாம் வரியில் இருந்து பூராவாக விலக்கு அளிக்கப் பட்டிருக்கிறது. இதிலே, " ஹாண்ட் ஸ்பன் யார்ன் " என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஷெடியூல், 3-ல், hand-spun yarn . . . . . என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஆனால் கோராப் பட்டுகள், கோரா நூல்கள் எல்லாம் அதில் வரவில்லை. ஏற்கனவே கோராப் பட்டுகள், கோரா நூல்கள் இவைகளுக்கெல்லாம் நமது அரசாங்கம் விதிவிலக்கு அளித்தது. லோகநாதன் அவர்கள் சிபார்சில் கூட, 59-வது பக்கத்தில் " ஹாண்ட்ஸ்பன் " என்பதற்கு ஒரு விளக்கம் தந்திருக்கிறார்கள், "including all kinds of indegenous silks" என்று. எப்பொழுது கைத்தறி ஜவுளிகளுக்கும், கைத்தறி நூல்களுக்கும் விலக்கு அளித்திருக்கிறோமோ அதேமாதிரி பட்டுக்கும் நாம் விலக்கு அளிப்பது தான் பொருத்தமாகும். அதைப் பரிசீலனை செய்து அதற்கும் விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். அடுத்தாற்போல் பொறுக்குக் கமிட்டியின் முடிவு பெருவாரியான சாமான்களின் விஷயத்தில் நாம் கையாளும் ஒவ்வொரு கட்டத்திலும் 2 சத வீத வரி செலுத்தியாக வேண்டுமென்று செலக்ட் கமிட்டி சிபார்சு செய்திருக்கிறது. ஆனால் லோகநாதன் அவர்கள் இத்தகைய பல்முனை வரி 1 சத வீதத்திற்கு மேல் இருக்கக் கூடாதென்று தெளிவாக சொல்லியிருக்கிறார்கள்.

"In making these recommendations, I have taken full account of the revenue implication; I am convinced that the decision of the Government that multipoint levy is to be kept always at a moderate level, will go a long way in creating the condition of an effective and successful sales-tax system."



10th February 1959] [Sri T. Sampath]

என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஆனால் அந்த ரிப்போர்ட்டின் சிபார்சுக்கு மாறுதலாக பொறுக்கு கமிட்டியானது 2 சத வீதமாக குறிப்பிட்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்களும் தெரிவித்தார்கள், ஒரேஅடியாக வருவாய் குறையக் கூடுமென்ற அச்சந்தான். ஆனால் வரி எவ்வளவு அதிகமாக இருக்கிறதோ அந்தளவு வரியில் இருந்து தப்பப் பார்ப்பார்கள். ஆகவே, இதை ஒரு சதவிகிதமாகக் குறைத்தால் வருவாய் குறைந்துவிடாது என்பதுதான் என் அபிப்பிராயம். அதைத் தான் லாஸர் அவர்களும் குறிப்பிட்டார்கள். இதனால் வருவாய் பாதிக்கப்படாது என்றுதான் நான் கருதுகிறேன். அடுத்தாற்போல், ராமசந்திரன் அவர்கள் முக்கியமான இன்னொரு விஷயத்தைப் பற்றி குறிப்பிட்டார்கள். கம்பவுண்டிங் ரேட் என்று சொல்லும் அம்சம், ரூ. 40,000 ஆக உயர்த்தப்படவேண்டுமென்று சொன்னார்கள். அதுவும் ஏற்கக் கூடிய விஷயம் என்றுதான் நான் கருதுகிறேன். அடுத்தபடியாக, லாஸர் அவர்கள் காய் கறி, பூ முதலிய பண்டங்கள் மீதுள்ள வரி விலக்கு வரம்பை, 30,000 ஆக நிர்ணயிக்கப்பட்டிருப்பதை அதிகமாக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதுவும் ஒப்புக் கொள்ளக்கூடிய விஷயந்தான், அதிகமாக சேதாரமாகும் பண்டங்கள் இவை. ஆகவே இந்த வரம்பை கொஞ்சம் கூடுதலாக்கி வைப்போமானால் மிகவும் சௌகரியமாக இருக்குமென்று எண்ணுகிறேன். இவைகளுக்கு பூராவாகவே விலக்கு அளித்திருந்தால் அது மிகவும் மகிழ்ச்சிகரமான விஷயமாக இருந்திருக்கும். அடுத்தபடியாக, ஹோட்டல் சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். 2½ சத வீதம் என்பது கொஞ்சம் உயர்வாகவே இருக்கிறது என்பது தான் என் எண்ணம். அடுத்தபடியாக, இந்த மசோதாவில் நாம் நல்ல பல அம்சங்களைக் காண்கிறோம். அமைச்சர் அவர்கள் குறிப்பிலே மூன்று விஷயங்கள் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இந்த மசோதா மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒன்று, " அஸெஸ்மெண்ட் விங் ", இன்னொன்று, " அப்பலெட் விங் ". மூன்றாவது " இன்டெலிஜென்ஸ் விங் " ஒன்று, அதிகாரிகளின் உத்தரவுகள்பேரில் அப்பீல் செய்ய ஒரு பிரிவு, வரியில் இருந்து தப்பாமல் இருக்க ஒரு தனி பிரிவு. ரிவிஷன் பிரிவு சம்பந்தமாகவும் சொன்னார்கள். வரி சம்பந்தமாக இடப்படும் உத்தரவின் பேரில் அப்பீல் செய்ய பிரிவு 30-ல் இருந்து பல பிரிவுகள் இருக்கின்றன. உண்மையிலேயே நல்ல சிறந்த நோக்கத்துடனேயே பொறுக்கு கமிட்டி பல விஷயங்களை ஆராய்ந்து பார்த்து அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டமாதிரி இன்கம் டாக்ஸில் உள்ளபடியுள்ள அம்சங்களைப் பொருத்த வேண்டுமென்ற நோக்கத்தின் பேரில் இந்தப் பிரிவுகளை மாற்றியமைத்திருக்கிறார்கள். அது, மிகவும் வரவேற்கத்தக்கதாகும். 30-வது பிரிவு, அப்பலெட் ட்ரிப்யூனல் பற்றியது. அதில் ஜில்லா ஜட்ஜ் அளவில் ஒருவர் சேர்மென்னாகவும், மற்ற இரண்டு மெம்பர்கள் கொண்ட குழு அப்பீல்களை விசாரணை செய்யும் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் தற்போதுள்ள நிலையில் இந்த அப்பலெட் ட்ரிப்யூனல்கள் சென்னையில் இருந்து கொண்டுதான் இயங்கி வருகிறது. இதுபோன்ற ட்ரிப்யூனல்கள், எல்லா ஜில்லாக்களுக்கும் சுற்றுப்பிரயாணம் செய்து ஆங்காங்குள்ள அப்பீல்களை விசாரணை செய்யும்படியாக ஒரு வழிவகை செய்து கொடுத்தால் வியாபாரிகளுக்கு அது மிகவும் சௌகரியமாக இருக்கும். இந்த யோசனையை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். கடைசியாக, நான் சொல்ல ஆசைப்படுவது, இந்த "கம்பவுண்டிங் " என்று சொல்லக்கூடிய அம்சம் இருக்கிறதே அதை எடுத்துப் பார்த்தால் 20% வியாபாரிகள் அதிகமாக 50,000 ரூபாய்க்கு மேல் கொடுக்கக் கூடிய வியாபாரிகள் இருக்கிறார்கள். 50,000க்கு குறைவாக இருக்கக் கூடியவர்கள் 15 சதம் வீதம் இருப்பார்கள். ஆகவே அவர்களுக்கு இந்தச் சலுகையை, (கம்பவுண்டிங்கை) அதிகமாக நாம் உயர்த்தி கொடுத்தால் அவர்களைப் பொறுத்தமட்டில் சௌகரியமாக இருக்குமென்று சொல்லிக் கொண்டு எனது வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

**SRI M. P. SUBRAMANIAM** : அவைத் தலைவர் அவர்களே, இந்த நம்முடைய விற்பனை வரிச் சட்டம் ஏறக்குறைய 20 ஆண்டு காலமாக நம்முடைய மாநிலத்திலே அமுலாக்கப்பட்டு, நல்ல அனுபவமும், அறிவும், திற

மையும் கொண்ட டாக்டர் லோகநாதன் அவர்கள் சமர்ப்பித்த
அறிக்கையின் பேரில் இந்த மசோதா தயாரிக்கப்பட்டு, ஒரு ஆண்டு காலமாக
பொறுக்குக் கமிட்டியின் பரிசீலனையில் இருந்து, இப்பொழுது விவாதத்
திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. 20 ஆண்டு காலமாக அமுலில்
இருந்த இந்தச் சட்டம் இப்பொழுது முழு அளவிலே புது ரூபத்தில் நம்
முன்னிலையிலே வைக்கப்பட்டிருப்பதுபற்றி நாம் எல்லோரும் அறிவோம்.
இதுபற்றிய முக்கியமான சில அடிப்படையான விஷயங்களை மனதில் வைத்து
கொள்ளுவது நல்லது என்பதை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.
நம்முடைய சென்னை மாநிலத்தைப் பொறுத்த வரையில் விற்பனை வரி
அதிகப்படியான வருவாயை கொடுக்கக்கூடிய ஒரு வருவாய் மூலம்
என்பதை நாம் நன்றாக உணர்வோம். ஆகவே, எந்த விதமாக திருத்.
தங்கள் கொண்டுவந்தாலும், இதனால் வரக்கூடிய வருமானம் குறை
யக்கூடாது என்பதில் அமைச்சர் அவர்களுக்கு எவ்வளவு அக்கரை இருக்
கிறதோ, அதுபோலவே இந்த அவையில் உள்ள எல்லா உறுப்பினர்
களுக்கும் அக்கரை இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள
விரும்புகிறேன். மற்றும் இதிலே கவனிக்கவேண்டிய விஷயம் இந்த வரி
விதிப்பை மாற்றி அமைக்கும் நேரத்தில் எந்த விதத்திலும் நம்முடைய
ராஜ்யத்திலுள்ள வியாபாரம் வேறு ராஜ்யங்களுக்கு விரட்டப்படாமல் இருக்க
வேண்டும் என்பது தான். இது மிகவும் முக்கியமாக கருதப்படவேண்டி
யது என்பதை நான் இங்கே வலியுறுத்திக்கூற விரும்புகிறேன். இந்த
இரண்டு விஷயங்களையும் அடிப்படையாக வைத்துத்தான் இந்த மசோ
தாவை கவனிக்கவேண்டும். இதற்குள்ளாக எந்தத் திருத்தங்களை கொடுத்
தாலும், அவைகளை ஒப்புக்கொள்ளத் தயாராக இருப்பதாக பல முறை
அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள்.

மற்றும் சில அடிப்படை விஷயங்களையும் நாம் கவனத்திலே கொள்ளு
வது நல்லது என்று நான் எண்ணுகிறேன். கனம் லாஸர் அவர்கள்
பேசுகிற நேரத்தில் குறிப்பிட்டதுபோல் டாக்டர் லோகநாதன் அவர்களின்
அறிக்கையின்படி, விற்பனை வரியிலிருந்து கிடைக்கக்கூடிய வருமானம்
பெரும்பாலும் ரூ. 50,000-க்கு மேல் விற்றுமுதல் இருக்கக்கூடிய பெரிய
வியாபாரிகளிடத்திலிருந்து தான் கிடைக்கிறது. வருமானத்தில் ஏறக்
குறைய 80 சதவிகிதம் 50,000 ரூபாய்க்கு மேற்பட்டு விற்று முதல் செய்யும்
பெரிய வியாபாரிகளிடத்திலிருந்து தான் பெறுகிறோம். சிறிய வியாபாரி
களிடத்திலிருந்து கிடைக்கக்கூடிய வருமானம் குறைவு தான், பெரும்
பாலான வருமானம் பெரிய வியாபாரிகளிடத்திலிருந்து தான் பெறு
கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை சவனத்தில் வைத்துக்
கொள்ளுவது நல்லது.

குறிப்பிடவேண்டிய மற்றொரு விஷயம் என்னவென்றால், பல ஆண்டு
காலமாக இந்த சட்டசபையில் உள்ள உறுப்பினர்களும், வியாபாரிகளும்,
மற்றவர்களும் விற்பனை வரியில் ஏமாற்றங்கள் நிறைய இருக்கின்றன
என்றும், ஆகவே, நிர்வாக இயந்திரத்தைச் சரி செய்தால் இப்பொழுது
கிடைக்கின்ற வருமானத்தைப் போல் இரண்டு மடங்கு வருமானம் உறுதி
யாகக் கிடைக்கும் என்றும் அமைச்சர் அவர்களிடத்தில் நேரில் கண்ட
பொழுதும், பொறுக்குக் குழுவினிடத்திலும் கூறியிருக்கிறார்கள். இந்த அடிப்
படையான உண்மைகளை நன்றாக மனதில் வைத்து ஆராயவேண்டும்.
இவ்வளவையும் மனதில் வைத்து அமைச்சர் அவர்கள் பேசியபோதும்கூட,
வருமானம் குறைந்துவிடும் என்ற காரணமாகத்தான் பல நல்ல ஆலோ
சனைகளையும் ஏற்க முடியாமல் போய்விட்டது என்று நான் எண்ணுகிறேன்.
டாக்டர் லோகநாதன் அவர்கள் கூறிய ஆலோசனைகள் பெரும்பாலும்
ஏற்கப்பட்டுவிட்டன. அவைகள் இந்த மசோதாவில் இடம் பெற்றிருக்
கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னாலும் கூட, பெரும்பாலும்
என்று சொல்லும்பொழுது அவருடைய முக்கியமான சில ஆலோ
சனைகள் ஏற்கப்படவில்லை என்று தான் நான் குறிப்பிடவேண்டியிருக்கிறது.
ஒருமுனை வரி, பலமுனை வரி விஷயத்தில், வியாபாரிகளுக்கோ, மற்ற
வர்களுக்கோ நல்ல ஒரு தெளிவான கருத்து தெரிவிக்க முடியவில்லை
என்பதை நாம் நன்றாக அறிவோம். ஏனென்றால், ஒருமுனை வரி
போடுவதினால், வரிப்பளு கூடுமா, குறையுமா என்று அவர்கள் நரன்



தெளிவான முறையிலே புரிந்துகொள்ள முடியவில்லை. இருந்தாலும்
டாக்டர் லோகநாதன் அவர்கள் பலமுனை வரி பற்றி சொல்லும்பொழுது,
அதை ஒரு சதவிகிதமாக மாற்றுவது நல்லது என்று கூறியிருக்கி
றார்கள். வருமானம் குறைந்து விடுமோ என்ற அவசியமல்லாத அச்சத்
தினால், அமைச்சர் அவர்கள் இதுபற்றி கருதாமல் இருந்திருக்கவேண்டு
மென்று நினைக்கிறேன். காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும் மற்றும் பல
உறுப்பினர்களும் வேண்டிக்கொண்டபடி சில சாதாரண சலுகைகள்கூட
இதனால் அமைச்சர் அவர்களால் கொடுக்க முடியவில்லை. டாக்டர் லோக
நாதன் அவர்கள் ஒரு இடத்திலிருந்து தன்னுடைய அறிக்கையை தயார்
செய்யவில்லை. அனுபவமும், திறமையும் வாய்ந்த அவர் பல இடங்
களிலும் சுற்றுப் பிரயாணம் செய்து, வெளி உலக அனுபவத்தையும்
கொண்டு, பல வியாபாரிகளையும், நிர்வாகஸ்தர்களையும் கலந்து ஆலோசித்த
பிறகே இந்த அறிக்கையை தயாரித்திருக்கிறார்கள். தோராயமாக ஒவ்
வொரு பொருள்களின் மீதும் கிடைக்கக்கூடிய வருமானத்தையும்
அவர்கள் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர் கூறிய பலவற்றை
நமக்கு ஆதாரமாகக் காட்டி பல திட்டங்களை நிறைவேற்றவேண்டும் என்று
பல சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட அமைச்சர் அவர்கள், இந்த ஒரு முக்கிய
மான விஷயத்திலே அவநம்பிக்கை கொள்ளவேண்டிய அவசியமில்லை
என்று குறிப்பிட விரும்புகிறேன். பலமுனை வரி 2 சதவிகிதம் என்று
இருப்பதை ஒரு சதவிகிதமாக குறைக்கலாம் என்று அவர் சொன்னதை
புனர்பரிசீலனை செய்து பார்த்து ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று அமைச்
சர் அவர்களை கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதுபோலவே, உணவு தானியங்கள், அழிந்துபோகக்கூடிய பொருள்
கள், காய் கறிகள், வெற்றிலை, வாழை இலை போன்ற பொருள்களுக்கு
½ சதவிகிதம் தான் வரி விதிக்கவேண்டுமென்று டாக்டர் லோகநாதன்
அவர்கள் கூறியிருக்கிறார்கள். இம்மாதிரி பொருள்களை வியாபாரம்
செய்யக்கூடிய சிறு வியாபாரிகளிடமிருந்துதான் விற்பனைவரி சம்பந்தமாக
ஏராளமான புகார்கள் வந்திருக்கின்றன. அவர்களுக்குத்தான் அதிகா
ரிகளின் தொல்லைகள் அதிகமாக இருக்கின்றன என்று தெரிவிக்கப்
பட்டிருக்கிறது. இவர்களுக்கு எந்த விதத்திலும் நிவாரணம் இல்லை
என்றுதான் சொல்லவேண்டும். அமைச்சர் அவர்கள் 10,000 ரூபாய்
வரையில் விற்றுமுதல் செய்யக்கூடிய-வியாபாரிகளுக்கு விதிவிலக்கு அளித்
திருக்கிறோம், அதற்கு மேல் வியாபாரம் செய்பவர்கள் கணக்கு வைத்
திருக்க முடியாதா என்று கேட்கலாம். 1939-ம் ஆண்டிலிருந்தே ½
சதவிகித வரியும், 10,000 ரூபாய்க்கு விதி விலக்கும் அளித்திருக்கிறோம்.
இந்த 20 ஆண்டுகளுக்குள்ளாக விலைவாசிகள் எவ்வளவோ உயர்ந்திரு
க்கின்றன. ஆகையால் இப்பொழுது 10,000 ரூபாய்க்கு மேல் வியாபாரிகள்
கணக்கு வைத்துக்கொள்ளவேண்டுமென்றால் சாதாரண சிறிய வியாபாரி
கள் கூட கணக்கு வைக்கவேண்டி வரும், ஏற்கனவே குறிப்பிட்டபடி பெரும்
பாலான வருமானம் பெரிய வியாபாரிகளிடத்திலிருந்து கிடைக்கின்றது. சிறு
வியாபாரிகளிடத்திலிருந்து கிடைக்கக் கூடிய வருமானம் மிக குறைவு. இதன்
காரணமாக சிறு வியாபாரிகளுக்கு பல சலுகைகள் அளிப்பதின் மூலம்
தான் அவர்களிடமிருந்து வரக்கூடிய புகார்கள் குறையும், அவர்களுடைய
வரிப்பளுவும் குறையும், இதை நாம் நன்றாக மனதில் வைத்துக்கொள்ள
வேண்டுமென்று அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்ளுகிறேன். அந்த
முறையில் இந்தப் பிரச்சனையை அணுகினால் 10,000, 5,000 ரூபாய்
கூடுதல் விற்றுமுதல் செய்யும் வியாபாரிகளுக்கு விதி விலக்கு அளிப்பதில்
அதாவது ஃதிஸ்ஃக்கு வரம்பை உயர்த்துவதிலே பெரிய ஆட்சேபணை
காணமுடியாது.

உணவுப்பொருள்களுக்கு விதிவிலக்கு பல இடங்களிலே அளித்திருக்
கிறார்கள். மைசூர், கேரளா இந்த இடங்களிலெல்லாம் உணவுப்
பொருள்களுக்கு விதிவிலக்கு அளித்திருக்கிறார்கள். இவைகளுக்கு விதி
விலக்கு அளிக்கவேண்டுமென்று எல்லா தரப்பினர்களும் பல ஆண்டு
களாக வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். ஆகையால் உணவுப்பொருள்
களுக்கு ½ சதவிகிதமாகவாவது வரியை குறைக்கவேண்டும் என்று மிக
உறுதியாக அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

(இந்த சமயத்தில் மிஸ்டர் ஸ்பீக்கர் தலைமை வகித்தார்).

இந்த விஷயம்பற்றி சட்டசபையில் விவாதம் செய்யும்பொழுது புனராலோசிக்கலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த சந்தர்ப்பத்தில் இதுபற்றி எல்லா தரப்பினர்களின் ஒருமித்த கருத்தை அவர்கள் உறுதியாக கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏற்கெனவே நமக்கு அரசாங்கம் சில அழியும் பொருள்களுக்கு விதிவிலக்கு அளித்திருக்கிறார்கள். டாக்டர் லோகநாதன் அவர்கள் எல்லாப் பொருள்களுக்கும் வரி விதிப்பதே சிறந்த முறை என்றும் இந்த மறைமுகமான வரியை எல்லோரும் கொஞ்சம் தாங்குவது தான் நல்ல அடிப்படை பொருளாதாரக் கொள்கை என்று சொல்லியிருக்கிறார். ஆகவே, முழு விதிவிலக்கு அளிக்கவேண்டுமென்ற கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், அவர் குறிப்பிட்டபடி குறைந்தது ½ சதவிகிதமாவது குறைக்கவேண்டுமென்று அமைச்சர் அவர்களை வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மற்றும் ஓரிரண்டு விஷயங்களைபற்றி குறிப்பிட விரும்புகிறேன். கைத்தறிக்கு விதி விலக்கு அளித்ததைப்போல் பனை மரத்திலிருந்து செய்யக்கூடிய பொருள்களுக்கும் விதி விலக்கு அளிக்கவேண்டும். மதுரை, ராமனாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களில் இம்மாதிரி கையால் ஏராளமான பொருள்கள் செய்யப்படுகின்றன. இந்த 'ஹாண்டி கிராப்ட்ஸுக்கு' விதி விலக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதனால் வரக்கூடிய வருமானம் 2 அல்லது 3 லட்சம் ரூபாய் தான் என்று கணக்கு போடப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்தப் பொருள்களுக்கு விதி விலக்கு கொடுப்பது மிகவும் பொறுத்தமானது. இதனால் குடிசைத் தொழில்களுக்கு, சிறு கைத்தொழில்களுக்கு நல்ல ஆதரவு கிடைக்கும்.

மற்றும் குறிப்பாக நான் சொல்லவிரும்புவது என்னவென்றால்: புண்ணாக்குக்கு 3 % ஒரு முனை வரி போடப்பட்டிருக்கிறது. அதற்கு விதி விலக்கு அளிக்க வேண்டுமென்று மீண்டும் அமைச்சர் அவர்களை வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன். பெரும்பாலும் புண்ணாக்கு விவசாயிகளுக்கு பயன்படக்கூடியது. அவர்களுக்கு அது எருவாக பயன்படுகிறது. வேண்டிய அளவுக்கு அவர்களுக்கு ரசாயன உரத்தை கொடுக்க முடியாத நிலைமையிலே கிராமங்களிலே பசுந்தாள் உரத்திற்கு அடுத்தபடியாக அவர்கள் புண்ணாக்கை பல ஆண்டுகளாக உரமாக உபயோகப்படுத்துகிறார்கள். அதற்கு மேல் கால்நடைக்கு தீவனமாகவும் பயன்படுத்துகிறார்கள். ஆகவே புண்ணாக்கு விவசாயிகளுக்கு இந்த இரண்டு முக்கியமான விஷயங்களுக்கு பயன்படுகிறது. அமைச்சர் அவர்கள் பெரிய எக்ஸ்பெல்லர் புண்ணாக்கை மனதில் வைத்துக்கொண்டு 3 சதவிகிதம் வரி விதித்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். கிராமங்களில் செக்குகளில் சிறிய அளவில் புண்ணாக்கு வியாபாரம் செய்யப்படுகிறது. ஒரு முனை வரி அதற்கு கொடுக்க வேண்டுமென்றால் சிறிய செக்குகள் வைத்துக்கொண்டிருக்கும் கிராமவாசிகள்கூட வரி கொடுக்கவேண்டியிருக்கும். அவர்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். ஆகவே, இதை மனதில் வைத்துக்கொண்டு புண்ணாக்குக்கு விதி விலக்கு அளிக்கவேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இறுதியாக ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். 59-வது பிரிவின் படி அரசாங்கம் ஒரு விசேஷ அதிகாரத்தை மேற்கொள்ளுகிறார்கள். அது பற்றி கூட அமைச்சர் அவர்கள் பேசும்போழுது இறுதியில் விளக்கிச் சொன்னார்கள். மத்திய அரசாங்கத்திலே வரவு செலவுத் திட்டத்தில் திடீரென்று ஏதாவது வரியை, உயர்த்தினால், அந்த நேரத்தில் விலை ஏற்றத்தை, இறக்கத்தை தவிர்ப்பதற்கு, சட்டமில்லாமல் நோடிபிகேஷன் மூலம் வரியை வசூலிப்பதற்கு அதிகாரம் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதேமாதிரி அதிகாரம் 'டாரிப் ஆக்ட்' கலால் வரி சட்டம் இவைகளிலும் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அம்மாதிரி தனிப்பட்ட அதிகாரத்தை மத்திய அரசாங்கம் எடுத்துக்கொண்டிருப்பதுபோல், இந்த விற்பனை வரி மசோதாவிலும்கூட ஒரு விசேஷமான அதிகாரத்தை, இதுவரையில் நம் ராஜ்யத்தில் எடுக்காத புதிய அதிகாரத்தை 59-வது பிரிவின் பிரகாரம் எடுத்துக் கொள்ளப்போகிறார்கள். அதாவது, அரசாங்கம் சட்டமில்லாமலே ஒரு நோடிபிகேஷன் மூலம் 1, 2 ஷெட்யூலில் கூறப்பட்ட பொருள்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவோ, குறைக்கவோ அல்லது மாற்றவோ செய்யலாம். அதாவது நோடிபிகேஷன் மூலம் வரியை உயர்த்துவதற்குக்கூட அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. இதுவரையில் வரி விதிக்கப்படாத பொருள்களையும் ஷெட்யூலில் சேர்க்கலாம்.



பொதுவாக இதை மனதில் வைத்துக்கொண்டு பார்க்கும்போது இம் மாதிரி விஷயத்தில சட்டசபைக்கு இருக்கின்ற அதிகாரத்தை பயன்படுத்தாத வகையில் அரசாங்கம் எடுத்துக்கொள்வது என்பது சரியான காரியம் என்று சொல்ல முடியாது. தவிர்க்க முடியாத நேரங்களில் ஆர்டினன்ஸ் மூலம் பல சட்டங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. ஆனால் சட்டசபை கூடியிருந்தாலும் கூட இந்த அதிகாரத்தை வேறொரு இடத்தில் கொடுப்பது என்பது நியாயமாகாது. அமைச்சர் அவர்கள் வேண்டுமென்றால் சொல்லலாம் ஒரு பொருளுக்கு திடீரென்று வரிவிதிப்பதற்கு வேண்டிய ஒரு மசோதாவை சட்டசபையில் கொண்டு வருவது என்பது இயலாத காரியம் என்று வேண்டுமானால் சொல்லலாம். ஆனால் கொள்கை அடிப்படையில் நான் சொல்ல விரும்புவது என்ன வென்றால் சட்டசபைக்கு இந்த அதிகாரம் எல்லாம் இருக்கவேண்டும் என்று நாம் எல்லாம் ஒப்புக்கொண்ட பிறகு சில பொருள்களுக்கு வரி போடுவதற்கு சாதாரண ஒரு நோட்டிபிகேஷன் மூலம் தெரிவித்து வரி விதித்துவிட்டால் போதும் என்று சொன்னால் நம்முடைய ஜனநாயக அடிப்படைக்கே இது தவறானது என்பதை நான் வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஆர்டினன்ஸ் பவர் பிரகாரம் சில அவசர சட்டங்களை பிறப்பிக்கலாம் என்கின்ற அதிகாரத்தை சட்டசபை இல்லாத நேரத்தில் கவர்னரோ அல்லது ராஷ்டிரபதியோ பயன் படுத்திக் கொள்ளலாம். ஆனால் இப்போது நம் முன் வந்திருக்கும் சட்டத்தின் பிரகாரம் சட்டசபை கூடியிருந்தாலும் கூட, வரி விதிக்க வேண்டிய அதிகாரத்தைப் பெற்றிருக்கிற இந்த சட்டசபையை கலந்து ஆலோசியாமல் நோட்டிபிக்கேஷன் மூலம் வரி விதிக்கலாம் என்று செக்ஷன் 59-ன் பிரகாரம் அதிகாரத்தை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஏற்கனவே வரியை குறைப்பதற்கும் விதிவிலக்கு அளிப்பதற்கும் செக்ஷன் 17-ன் படி அதிகாரத்த எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் வரி விதிக்கப்படாத ஒரு பொருளின் மீது புதிதாக வரி விதிக்கவேண்டுமென்றால் சாதாரணமான ஒரு நோட்டிபிகேஷன் மூலம் வரியை விதிக்கலாம் என்றுள்ள அதிகாரத்தை எடுத்துக்கொள்வது என்பது ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டிருக்கும் நமது சட்டசபையின் அடிப்படைக்கே நேர்விரோதமானதாகும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். சட்டசபை அங்கத்தினர்கள் இந்த கொள்கையை உணருவார்களானால் நிச்சயமாக இதற்கு ஒத்துக்கொள்ளமாட்டார்கள். இருபது ஆண்டு காலத்தில் இன்னும் இதற்கு ஒரு சரியான முறையை கொண்டு வர முடிய வில்லை, அதிலும் பரவலாக எல்லா வியாபாரிகளுக்கும் இந்த வரிவிதிப்பை ஏற்படுத்த வேண்டும் என்று மத்திய அரசாங்கம் சொல்லும் போது நமக்கும் எல்லா வியாபாரத்தின் மீதும் வரி விதிப்பை ஏற்படுத்த வேண்டியிருக்கும், அப்போது, நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பதற்காக ஆலோசித்துப்பார்த்துத்தான் இந்த பிரிவு போடப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இருந்தாலும் இது போன்ற சட்டசபையின் ஒரு அதிகாரத்தை எக்ஸிக்யூட்டிவின் கையில் ஒப்படைப்பது என்பது தவறான அடிப்படையாகும் என்பதை தெரிவித்துக் கொண்டு, இந்த நிலையை தவிர்க்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். 11-40 a.m.

* SRIMATHI KAMALAMBUJAMMAL: கனம் அவைத்தலைவர் அவர்களே, சபையின் முன்பு கொண்டு வரப்பட்டிருக்கும் மசோதா மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இந்த மசோதாவானது இருபது வருடங்களுக்கு முன்பே கொண்டு வரப்பட்டு 1959-ம் ஆண்டில் அதாவது 1958-ல் பல திருத்தங்கள் செய்யப்பட்டு இப்போது கொண்டு வரப்பட்டிருந்தாலும் கூட இன்னும் இம்மசோதாவில் திருத்தங்களே ஏற்படாது என்று சொல்லு

[Srimathi Kamalambujammal] [10th February 1959

வதற்கில்லை. இன்னும் இந்த மசோதாவில் எத்தனையோ திருத்தங்கள் காலாகாலத்தில் வரக்கூடும் என்று சொல்லுவதற்குரிய வகையில் பல சான்றுகள் இதில் இருக்கின்றன. இந்த விற்பனை வரி மசோதா நம் மாகாணத்திற்கு வருமானம் கிடைப்பதற்கு காமதேனு போன்றதாக இருந் தாலும் கூட இதை அமுலுக்கு கொண்டு வருவதற்கு முன்னுல் இதைப்பற்றி தீர்க்கமாக ஆலோசனை செய்து, எத்தனையோ முறை ஆலோசனை செய்யப்பட் டிருந்தாலும் கூட மேலும் மேலும் தீர்க்கமாக ஆலோசனை செய்து முடிவு எடுக்கவேண்டிய ஒரு முக்கியமான மசோதாவாகும். இந்த மசோதாவை நன்ருக துருவிப் பார்க்கும்போது எந்த பொருளுக்கும் விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. முக் கியமாக உணவுப்பொருள்களுக்கும் அதிலும் காய்கறி வகைகளுக்கும் கூட மசோதாவின் பிரகாரம் விற்பனை வரி விதிக்கப்பட்டிருக்கிறது. டாக்டர் லோகநாதன் அவர்கள் இதைப்பற்றி எத்தனையோ காலமாக ஆராய்ந்து பார்த்து, இதைப்பற்றி நன்ருக பரிசீலனை செய்து ஒரு அறிக்கையை சமர்ப்பித்தார்கள். அந்த அறிக்கையை பார்க்கும்போது அதில் பல மாறு தல்கள் செய்யப்பட்டிருப்பதை நாம் காண்கின்ருேம். டாக்டர் லோகநா தன் அவர்களுடைய அறிக்கையில் உணவுப்பண்டங்களுக்கும் காய்கறி வகைகளுக்கும் அரை சதவிகிதம் வரி விதிக்கலாம் என்கிற கருத்தை தெரிவித்திருக்கிருர்கள். ஆனல் பொறுக்கு கமிட்டியில் இதைப்பற்றி ஆலோசித்துப்பார்த்து அரை சதவிகிதம் என்று இருப்பதை மாற்றி ஒரு சதவீதம் இருக்கவேண்டும் என்கின்ற முறையில் மாற்றி அமைத்திருக்கி ருர்கள். ஆகவே வரிகள் விதிக்கும்போது சில பொருள்களுக்கு விதி விலக்கு அளித்திருக்கலாம். அண்டை ராஜ்யங்களில் அதாவது கேரள ராஜ் யத்திலும் மைசூர் ராஜ்யத்திலும் உணவுப் பண்டங்களுக்கு விதிவிலக்கு அளித்திருக்கிருர்கள். ஆனல் எல்லா காரியங்களிலும் மற்ற ராஜ்யங்களுக்கு எல்லாம் முன்னேடியாக இருக்கும் நமது சென்னை ராஜ்யம் இதில் வரி விதிப்பிலிருந்து விதிவிலக்கு அளிக்க தவறிவிடுமானல் ஓரளவு நமது கடமையை செய்ய தவறியவர்களாவோம் என்று தான் சொல்ல வேண்டி யிருக்கிறது. உணவு தான்யங்களைப் பொறுத்தவரையில் இதற்கு விதி விலக்கு அளித்துவிட்டால் வருமானம் குறைந்துவிடும் என்று சொன்னலும் கூட டாக்டர் லோகநாதன் அவர்கள் குறிப்பிட்டிருப்பது போல் இவற்றிற்கு அரை சதவீதமாக குறைத்தால் நலமாக இருக்கும் என்பதை தெரி வித்துக்கொள்கிறேன். காய்கறிகளைப் பொறுத்தவரையில் இந்த அரை சதவீதத்திலிருந்தும் விதிவிலக்கு அளிக்கப்பட வேண்டியது மிக முக்கிய மாகும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். உணவு தான்யங்களாவது ஸ்டாக் வைத்து கடையில் ரசீது முதலியவைகள் வைத்து வியாபாரம் செய்யக்கூடும். ஆனல் காய்கறிகளை பொறுத்த வரையில் ரசீதுகள் வைத் திருப்பதோ அல்லது இதற்கு என்று கணக்குகள் வைத்திருப்பதோ இடை யாது. இந்த விஷயம் எல்லோருக்கும் தெரியும். காய்கறி வகைகளை வியாபாரம் செய்யும் வியாபாரிகளும் கிழங்கு வியாபாரிகளும் செலக்ட் கமிட்டியின் முன் வந்து தங்கள் குறைகளை எடுத்து விளக்கிச்சொன்னர்கள் என்று ரிப்போர்ட்டிலிருந்து தெரிகிறது. காலையில் மூன்று மணிக்கு மேல் வியாபாரத்தை ஆரம்பித்து மாலை 5 அல்லது 6 மணிக்குள்ளாக வியாபாரம் செய்து முடிக்க வேண்டும். மேலும் இவர்கள் வியாபாரம் செய்யக்கூடிய கடைகளில் பெரும்பாலும் மின்சார விளக்குகள் கிடையாது. கணக்கு வைப்பதற்கோ அல்லது கணக்குப்பிள்ளை வைப்பதற்கோ அவர்களுக்கு வசதி கிடையாது. ஆகவே அவர்கள் காலை மூன்று மணியிலிருந்து ஆறு மணிக்குள்ளாக அவசர அவசரமாக வியாபாரம் செய்யும்போது அதற் கெல்லாம் கணக்குவைத்துக்கொள்ளவேண்டும் என்று சொல்லுவது ஒரு அர்த்தமற்ற காரியமாகும். பொதுவாக வியாபாரிகளிடம் கணக்கு வைத்துக் கொள்ளவேண்டும் என்று சொல்லும் போதுதான் பல தொல்லைகளும் ஏற்படுகிறது. அதோடு வியாபாரிகள் கணக்கு வைத்துக்கொள்ள தவறுவார் களேயானல் அவர்களை ப்ராஸிக்யூட் செய்வதற்கும் அவர்கள் மேல் அபராதம் விதிப்பதற்கும் சட்டத்தில் விதிகள் இருக்கின்றன. இம்மாதிரி செய்யும்போது சிறு சிறு வியாபாரிகள் மிகவும் பாதிக்கப்படுவார்கள் என்பதை நாம் முக்கியமாக உணர வேண்டும். அதிலும் முக்கியமாக காய்கறி கிழங்குகள் எல்லாம் காலையில் புதிது பதிதாக இருக்கும், மாலையில் வாடி வதங்கிப்



10th February 1959] [Srimathi Kamalambujammal]

போகக்கூடிய நிலைமையில் தான் இவை இருக்கின்றன. இந்த நிலைமை யில் இதற்கெல்லாம் கணக்கு வைத்துக்கொள்ள இடமுண்டா என்பதை நாம் பார்க்கவேண்டும். கிழங்கு வகையில் உருளைக் கிழங்கு வெளி நாடு களுக்கு எல்லாம் ஏற்றுமதி செய்யப்படுகிறது என்று கூறலாம். ஆனல் கிழங்குவகைகளில் இருக்கக்கூடிய கருணைக்கிழங்கு, சேப்பங்கிழங்கு, மர வெள்ளிக் கிழங்கு போன்ற வகைகளுக்கு கணக்கு வைத்துக்கொள்வது மிகவும் கஷ்டமான காரியமாகும். ஒரு நாள் கழிந்தால் இந்த கிழங்குகள் எல்லாம் கெட்டுவிடக்கூடியதாகும். ஆகவே இந்த காய் கறி வகைகளுக் கும் கிழங்கு வகைகளுக்கும் விதிவிலக்கு அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் இதற்கெல்லாம் விரிவான கணக்கு தேவையில்லை. மொத்தமான கணக்கு வைத்திருந்தால் போதும் என்றிருந்தாலும்கூட தோராயமாக கணக்கு வைப்பதற்கும் இதில் பல தொல்லைகள் ஏற்படும். கணக்கு வைக்கவேண்டும் என்று சொல் லும்போது தான் வியாபாரிகளுக்கு பலவிதமான கஷ்டங்கள் ஏற்படுகிறது. ஆகவே இதற்கு விதிவிலக்கு அளிப்பது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். நெல்லுக்கும் அரிசிக்கும தனித் தனியாக வரி போடுகிருர்கள். நெல் ரூபமாக இருக்கும்போதும் வரி இருக்கிறது அதுவே அரிசி ரூபமாக இருக்கும்போதும் வரி. இப்படி இரண்டு இடங்களில் வரி இருப்பதால் ஒன்று நெல்லாக இருக்கும் போது வரி இருக்கவேண்டும், அல்லது அரிசியாக இருக்கும்போது வரி இருக்கவேண்டும். நெல்லுக்கும் வரி, அரிசிக்கும் வரி என்று வைத்தால் இரட்டிப்பு மடங்கு வரி—அதாவது மல்டி பாயிண்ட் வரி—வந்து விடாதா என்று அதையும் யோசித்து நெல்லுக்கோ அல்லது அரிசிக்கோ என்ற முறையில் வரி விதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 11-50 a.m.

அடுத்தபடியாக புண்ணக்கு மாடுகளுக்குத் தீவனமாகவும், விவசாயி கள் அதை உரமாகவும் உபயோகிப்பதாலே, விவசாயிகளின் முன்னேற்றத் தைக் கருதி ஏற்கெனவே எத்தனையோ திட்டங்களையெல்லாம் வகுத்துப் பல வசதிகளைச் செய்து கொடுக்கும் நாளிலே, பிண்ணக்கை விவசாயிகள் உரமாக உபயோகிப்பதாலும், கால்நடைகளுக்குத் தீவனமாக இருப்பதாலும், அதற்கு வரி விலக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மசோதாவின் மீது சொல்லக்கூடிய திருத்தங்களையெல்லாம் கமிட்டியிலே நன்ருகப் பரிசீலித்து ஆலோசனை செய்து முடிவு செய்து விட்டோம் என்று சொன்னலும் கூட, மீண்டும் மீண்டும் ஆலோசனை செய்து, இப்போது சொல்லப்படும் திருத்தங்களையும் ஏற்றுக்கொண்டு அமைச்சர் அவர்கள் இதை நல்ல முறையில் நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**SRI J. MATHA GOWDER** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விற்பனை வரி மசோதாவைப் பார்க்கும்போது, இதிலே நம்முடைய மாகா ணத்தின் வருவாயைக் குறைக்கக்கூடாது என்ற ஒரே நோக்கத்தோடு வரி விதிப்பது அவ்வளவு உசிதமாகாது என்று கருதுகிறேன். உதாரணமாக இந்த விற்பனை வரி, லாபம் இருந்தாலும், நஷ்டம் இருந்தாலும், அவர் களுடைய டர்னேவரை வைத்து—எவ்வளவு ரூபாய்க்கு வியாபரம் செய்கிருர் களோ, அந்த வியாபாரத்தை வைத்து—அதன் அடிப்படையில் விதிக்கப் போகிருேம். அதிலே நாம் ஒன்று சொல்லாம். அதிகமாக வியாபாரிகள் லாபம் வைத்துக்கொண்டு, அவர்கள் வரி கொடுப்பதிலிருந்து தப்பிக் கொள் கிருர்கள் அதனல் நாம் இப்படி வரி போடாமல் இருக்க முடியாது என்று அந்த சமாதானத்தைச் சொல்லாம். ஆனல், அதே நேரத்தில் லாபமே இல் லாத—லாபமே வர முடியாத—பொருள்கள்—அசந்தர்ப்பத்தினல் அழுகக் கூடிய பொருள்கள் மீது வரி விதிக்கிருேம் என்று கண்டிப்பாகக் கூறுவோ மானல் எப்படி அந்தச் சமாதானம் இந்த வரிக்குப் பொருந்தும். நஷ்டம் ஏற்படக் கூடிய வியாபாரத்தில் இன்னும் வரியை வேறு போட்டால் நஷ்டம் இன்னும் அதிகப்படியாகின்றது என்பதை கவனிக்கவேண்டும். வியாபாரி, தானே கொடுக்கிருன் என்று அந்தச் சமாதானத்தை அதிகாரிகள் சொல்லலாம். பொருள் எங்கே உற்பத்தி யாகிறதோ அந்தப் பொருளை வாங்கி வியாபாரம் செய்யும்போது, ஒரு பொருள் 10 ரூபாய் என்ருல் அந்த

[Sri J. Matha Gowder] [10th February 1959]

வியாபாரி கொடுக்கவேண்டிய விற்பனை வரியையும் சேர்த்து 10 ரூபாய் என்று கணக்குப் போடுகிறான். பத்து ரூபாய்க்கு உற்பத்தியாகக் கூடிய இடத்தில் வாங்குகிறான். ஆகையால் உற்பத்தி செய்யக் கூடியவன் பாதிக்கப்படுகிறான் என்பதில் சந்தேகமில்லை.

அடுத்தபடியாக இந்த இடத்திலே டீயைப்பற்றி சற்று நான் சொல்ல வேண்டியிருக்கிறது. டீயைப் பற்றிச் சொல்லும்போது, 46-ம் பக்கத்திலே

"Tea, that is to say any one of the forms of tea in which it is sold, but not including tea drink.",

என்று குடிக்கப்படக் கூடிய டீத் தண்ணீரை தவிர மற்ற டீக்களுக்கு வரி விதிக்கிறோம் என்று 5 சத வீதம் எற்கெனவே விதித்த வரியை திருத்த மசோதாவிலே கொண்டு வந்திருக்கிறோம். இதிலே "பினிஷ்ட் குட்ஸ்" எங்கு இருக்கிறதோ—பாக்டரியில் வந்து உற்பத்தி யான பிறகு சென்ட்ரல் எக்ஸைஸுக்குக் கணக்குக் காண்பித்து டியூடி கட்டிய பிறகு தான் விற்க முடியுமென்பதால் "பினிஷ்ட் குட்ஸ்" என்ற அர்த் தத்திலே வரியைப் போடவேண்டுமே தவிர, இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ் நிலையிலே டீ இலையைப் பறித்து வந்தாலும் அவர்களுக்கு வரியை போடுகிறார்கள். இந்த வரியைப் பற்றி நான் எற்கெனவேயே அமைச்சர் அவர்களுக்கு விண்ணப்பம் செய்திருந்தேன். பச்சை இலைக்கு வரி விதித்து விட்டு "பினிஷ்ட் குட்ஸ்" என்று அங்கும் வரி விதித்தால் "[illegible] பாயிண்ட்" என்பதற்கு என்ன அர்த்தம். இதனால் இரண்டு வரி [illegible] வில்லையா ? பச்சை இலைக்கும் வரி, டீ செய்தால் அதற்கும் வரி என்று இப்படி அங்கே 5 பர்சன்ட், இங்கே 5 பர்சன்ட் என்று மொத்தம் 10 பர்சன்ட் என்று ஆகிவிடுகிறது. அந்த விண்ணப்பம் செய்ததற்கு ஒரு பதில் கொடுத் தார்கள். பாக்டரிக்காரர்கள் தான் கொடுக்கிறார்கள், பச்சை இலைக்கு வரி கொடுத்திருந்தால் பாக்டரிக்காரர்கள் ரீபண்ட் வாங்கிக்கொள்ளலாம், அப்படி இருப்பதால் "டபிள் டாக்ஸ்" ஆகாது என்று பதில் வந்திருக் கிறது. அவர்களுக்கு இது நன்றாகப் புரியவில்லை என்பதை நான் அழுத்தந் திருத்தமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். சிறிய டீ தோட்டக்காரர் கள் பச்சை இலையைக் கொண்டு வந்து பாக்டரியில் போட்டுவிட்டால், அந்த முறையில் 10,000 ரூபாய்க்கு டர்னோவர் ஆகிவிட்டால், அவன் வரி கட்டியாக வேண்டும். அந்த மாதிரி இருக்கும்போது அவன் பாக்டரிக் காரனுக்கு அவன் வரி கட்டி விட்டதாகச் சொல்வானா என்று சிந்திக்க வேண்டும். அவன் சொல்லப் போவதில்லை. அவன் வரியைக் கொடுத்து விடப் போகிறான். இங்கே என்ன நிலை ? இவன் எத்தனை ஆயிரம் பவுண்டு விற்கிறானோ, எத்தனை ஆயிரம் ரூபாய்க்கு விற்கிறானோ, அத்தனை ஆயிரம் ரூபாய்க்கு அவனிடமிருந்து வரியை வசூலித்து விடுகிறோம். அந்த வரியை பாக்டரிக்காரன் கொடுத்துவிடுகிறான். ஆகையால் இது "டபிள் டாக்ஸேஷன்" ஆகிவிடாதா என்று எழுதியிருந்தேன். ஆகவே ஒரே இடத்தில் வாங்கிக்கொள்ளுங்கள், டீ உற்பத்தி செய்யக்கூடிய இடமான பாக்டரியில் வாங்கிக்கொள்ளுங்கள், இலையைப் பறித்துக்கொடுப்பவனுக்கும் வரி, டீ செய்பவனுக்கும் வரி என்று இரண்டு வரி கூடாது என்று சொன்னேன். நான் யாரோ சொல்வதை வைத்துக் கொண்டு சொல்லவில்லை. என்னையே எடுத்துக்கொள்ளுங்கள். நான் ஒரு டீ பாக்டரி வைத்திருக்கிறேன். என்னுடைய தோட்டத்திலிருந்து இலையைக் கொண்டு போய் போடுகிறேன். வருமான வரிக்காக வேண்டி கணக்குக் காட்டவேண்டியிருப்பதால் அதற்காக இலையைப் போட்டுவிடும்போது, பறித்து விற்பவன் என்ற முறையில் ஒரு வரி 5 சதவீதமும், அதே நேரத்தில் டீயாக்கி விற்கும்போது டீ விற்பவன் என்ற முறையில் ஒரு வரி 5 சதவீதமும் ஆக மொத்தம் 10 சதவீதம் வரி கொடுக்கிறேன். இது "டபிள் டாக்ஸேஷன்" என்று சொன்னால், அதிகாரிகளுக்குப் புரியாமல் போட்டிருக்கிறார்கள். இதை மறு பரிசீலனை செய்யவேண்டும். எதாவது ஒரு இடத்தில் வாங்கிக்கொள்ளுங்கள், பச்சை இலைக்குப் போட்டுக் கொள்ளுங்கள், அல்லது "பினிஷ்ட் குட்ஸ்" என்று அந்த இடத்தில் போட்டுக்கொள்ளுங்கள், அப்படி இல்லையானால், "டபிள் டாக்ஸேஷன்" [illegible] என்று மறு முறை சொல்லிக்கொண்டு [illegible] கேட்டுக்கொள்ளுகிறேன்.



10th February 1959] [Sri J. Matha Gowder]

அடுத்தபடியாக உருளைக்கிழங்கு, காய்கறிகளுக்கு வரி விலக்குக் கொடுக்கிறோம் என்று 1954–55-ம் வருஷ பட்ஜெட் உரையிலே சொல்லி யிருக்கிறார்கள். 1954–55-லே காய்கறிகளுக்கு வரி விலக்குக் கொடுக் கிறோம் என்று சொல்லி, 1959-ம் வருஷத்திலே வரியைக் கொண்டு வந்தால் உருளைக்கிழங்கின் நிலைமை என்ன ? விலை அதிகமாக உயர்ந்து விட்டதா ? அல்லது உருளைக்கிழங்கு வியாபாரம் அதிக லாபகரமானதாக ஆகிவிட்டதா ? இதற்கான புள்ளி விவரம் அரசாங்கத்திடம் இருக்கிறதா? 1954-ல் இருந்த உருளைக்கிழங்கு வியாபாரத்தின் தரம் இன்றைக்குக் குறைந்திருக்கிறது என்று அரசாங்கத்திற்குத் தெரியும். அப்படித் தெரிந்தும்கூட உருளைக்கிழங்குக்கு வரி சுமத்தியிருப்பது நியாயம் இல்லை என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதை வரியிலிருந்து விலக்க வேண்டும் என்று நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். "விற்கக் கூடிய இடத்திலே" உருளைக் கிழங்குக்கு வரி வசூல் செய்துவிடலாம் என்று இருக்கிறது. உருளைக்கிழங்கு அதிகமாக விளையும் இடம் நீலகிரிப் பிரதேசம். அங்கே விளையும் உருளைக்கிழங்கை மேட்டுப்பாளையத்திற்குக் கொண்டுபோய், கமிஷன் மண்டியிலே போட்டு, இரண்டு மூன்று நாட்கள் பார்க்கிறான் வியாபாரி. அங்கே நல்ல விலை கிடைக்காவிட்டால், கிழங்கை மதராசுக்குக் கொண்டுவந்து விடுகிறான். இங்கேயும் நல்ல விலை கிடைக்க வில்லையானால், வேறு எங்காவது அனுப்பவேண்டுமா என்று பார்க்கிறான். எங்கே போய் விற்கிறது என்று கண்டுபிடிப்பதற்கு முடியாமல் இருக்கிறது.

சாதாரணமாக மேட்டுப்பாளையத்தில் விற்றுவிட்டுப் போய்விட்டால் வரி போட்டுவிடுகிறோம். மேட்டுப்பாளையத்தில் போடாமல், நீலகிரியிலிருந்து மதராசுக்கு வந்துவிட்டால், இங்கே ஒரு வரி போடுகிறோம். ஆனால், மேட்டுப்பாளையத்தில் விற்பனையாகக்கூடிய கிழங்கு மதராசுக்கு வந்து விட்டால் அதற்கு அங்கே வரி போடுவதில்லை. இது எப்படியிருக்கிற தென்றால், அங்கு விற்பனை செய்து, அங்கு வாங்கப்பட்ட உருளைக்கிழங்கை மதராஸிலே போட்டால் அதற்கு ஒரு விலை. விற்பனை அங்கு செய்யாமல், நேராக இங்கே வந்துவிட்டால், அதற்கு ஒரு விலை. இரண்டு விலையாக இங்கு தடுமாற்றத்துடன் வியாபாரிகள் விற்கவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். இதையும் சற்று சிந்திக்கவேண்டும். இதைப் பார்க்கும் போது, அங்கு வரி போடுவது நியாயம் இல்லை என்று நல்லவிதமாகத் தெரிகிறது. இதை செலக்ட் கமிட்டியிலே பார்க்கும்போது, செலக்ட் கமிட்டி சேர்மன் அவர்கள் உறுதியளித்திருக்கிறார். செலக்ட் கமிட்டி ரிப்போர்ட்டின் 118-வது பக்கத்திலே குறிப்பிட்டிருப்பதாவது :

"The Chairman assured the members that in regard to perishables each case would be considered on merits. Mention would also be made in the report that the question of exempting vegetables, flowers and like perishable articles from the payment of tax should be carefully examined on their merits."

"நன்றாகப் பரிசீலனை செய்து, மிக ஜாக்கிரதையாகப் பரிசீலனை செய்து நாங்கள் வரி போடுகிறோம்" என்று சேர்மென் அவர்கள் அன்றைக்கு செலக்ட் கமிட்டியில் உறுதி கூறிவிட்டு, இன்றைக்கு இப்படிச் செய்திருக்கின்றார். ஜாக்கிரதையாகப் பரிசீலனை செய்து மிக ஜாக்கிரதை யாக வரி போட்டுவிட்டார் நம்முடைய அமைச்சர் அவர்கள். இதைச் சற்று சிந்தித்துப் பார்த்து, உருளைக்கிழங்குக்கு வரி போடக்கூடாது என்று நான் மிகவும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இதில் மிகவும் நெருக்கடியான நிலை இருக்கிறது. நீலகிரியில் உருளைக் கிழங்கு விளைவிப்பவர்களாக இருந்தாலும் சரி, வியாபாரம் செய்கின்ற வர்களாக இருந்தாலும் சரி, அதை லாபகரமான தொழிலாகக் கருதாமல் எவ்வளவோ கஷ்டத்தினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நீலகிரியிலே இருக்கும் உருளைக்கிழங்கு பயிர்செய்பவர்கள் இன்றைக்கு சாக்காரிடத்தில் எவ்வளவோ முறையீடுகள் செய்துகொண்டிருக் கிறார்கள். வாங்கிய கடனையே திருப்பிகொடுக்க முடியாத நிலையில்,

[Sri J. Matha Gowder] 10th February 1959]

சர்க்காருக்கு விண்ணப்பம் செய்துகொண்டிருக்கிறார்கள். இந்த நிலையிலே உருளைக் கிழங்குக்கு வரி விதிக்கிறோம் என்றால், அவர்களுடைய மனம் எந்த நிலையில் வேதனைப்படும் என்பதை நாம் சற்று சிந்தித்து, சீர்தூக்கிப் பார்க்கவேண்டும் என்று அமைச்சர் அவர்களை நான் மிகப் பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்றைக்கு முப்பதாயிரம் ரூபாய் வரைக்கும் நாங்கள் எக்ஸெம்ப்ஷன் கொடுத்திருக்கிறோம் என்று ஒருக்கால் சொல்லலாம். முப்பதாயிரம் வரையில் விவசாயிகளுக்கு வராது என்று சொல்லலாம். எவ்வளவு வந்தாலும், ஆயிரத்துக்குமேல் விற்கக்கூடிய விவசாயியாக இருந்தாலும் சரி, முப்பதாயிரத்துக்கு மேல் விவசாயம் செய்யக்கூடிய விவசாயியாக இருந்தாலும் சரி, மொத்தமாக அங்கிருக்கும் வியாபாரி வரி வசூல் செய்யாமல் முடியாது. முப்பதாயிரம் ரூபாய்க்கு மேல் போய்விடுகிறது, வரி கொடுத்துவிடுகிறான் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். முப்பதாயிரம் ரூபாய் என்பதை ஐம்பதாயிரம் ரூபாய் வரைக்கும் எக்ஸெம்ப்ஷன் இருக்கவேண்டும் என்று திரு. லாஸர் அவர்கள் சொன்ன மாதிரி செய்யவேண்டும். அதற்குமேல் ஒரு ஸ்லாப் ரேட் போடலாம். வரி என்று அர்த்தம் இல்லாமல், ஐம்பதாயிர ரூபாயிலிருந்து 75 ஆயிரம் ரூபாய் வரைக்கும் விற்பவனுக்கு இத்தனை ஆயிரம் ரூபாய் வரி என்று ஸ்லாப் ரேட் போட்டால் நாம் எதிர்பார்க்கக் கூடிய வரியைப் பெற்றுவிடலாம். நமக்கு விற்பனை வரியிலிருந்து இத்தனை ரூபாய் வந்தாகவேண்டுமென்ற ஒரு புள்ளி விவரம் இருந்தால், அந்தப் புள்ளி விவரத்திற்கு ஸ்லாப் ரேட் போட்டால் எவ்வளவு நமக்கு வரி வசூல் ஆகிறது என்பதை நாம் பார்ப்போமானால், ஐம்பதாயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்போகிறவர்கள் 80 சத விகிதம் இருக்கும்போது, ஸ்லாப் ரேட் மூலமாக 20 சத விகிதம் இருக்கும் குறைந்த வியாபாரிகள் அந்த வரியை ஈடு கட்டிவிடமுடியும் என்பதைச் சற்று சிந்தித்துப் பார்த்தார்களானால், நிச்சயமாக 50 ஆயிரம் ரூபாய்க்கு எக்ஸம்ப்ஷன் லிமிட்டை உயர்த்தவேண்டும் என்று திருத்தம் கொண்டுவருவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. இதைப் பரிசீலனை செய்து, சர்க்காரிலிருந்தே இதுபற்றி திருத்தம் கொண்டு வரவேண்டும். 50 ஆயிரம் ரூபாய் வரையில் எக்ஸெம்ப்ஷன் கொடுத்துவிட்டு, அதற்குமேல் ஒரு ஸ்லாப் ரேட் போடும் வகையில் திருத்தம் கொண்டுவரலாம் என்று நான் மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். வரி போட்டுத்தான் ஆகவேண்டும் என்றால் அப்படிச் செய்யலாம். இல்லையென்றால், நிச்சயமாக வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டிய நியாயம் இருக்கிறது.

வாட்டில் பார்க்குக்கு இன்றைக்கு வரி புகுத்தப்பட்டிருக்கிறது. அதற்கும் வரி போட்டிருக்கிறோம். வாட்டில் மரங்கள் நீலகிரியிலும் மற்றப் பகுதிகளிலும் அதிகமாக உற்பத்தியாகிக்கொண்டிருக்கிறது. வாட்டில் உற்பத்தியை அதிகமாக்க வேண்டும். அந்தப் பொருள் அதிகமாகக் கிடைப்பதற்கு சர்க்கார் காடுகளிலெல்லாம் பயிரிட்டுக் கொண்டிருக்கிறோம், தனிப்பட்டவர்கள் யாராவது வாட்டில் பயிர் செய்தால், அவர்களுக்குக் கடன் தருகிறோம், பணம் தருகிறோம், பூமி தருகிறோம் என்று சர்க்கார் ஆசையை ஊட்டிவிட்டு, மேலும் வாட்டிலுக்கு வரி போடுகிறோம் என்றால், அது நியாயமா என்று கேட்கின்றேன். அவர்கள் உற்பத்தி செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள்; அது லாபகரமாக இருக்குமா, இல்லையா என்று இன்னும் நிர்ணயிக்க முடியாத நிலையில் இருக்கும்போது, ஒரு பக்கத்தில் அதனைப் பயிர் செய்யும்படிச் சொல்லிவிட்டு, மறு பக்கத்தில் வரி விதித்திருக்கிறோம் என்ற முறையில் அமைந்திருக்கிறது. இது விஷயத்தில் பத்து ஆண்டுக்காலத்திற்கு மேல் பொறுத்திருந்து, அது எவ்வளவு பயிராகிறது என்று தெரிந்து, நம் நாட்டின் தேவைக்கு போதுமானதாக இருந்து, அயல்நாட்டுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய அளவு வந்துவிட்டால், அதற்கு வரி விதிக்கலாமே தவிர, இப்பொழுது நாம் வரி விதிப்பது சரியல்ல என்று நான் சொல்லிக்கொள்ளுகிறேன்.



10th February 1959] [Sri J. Matha Gowder]

இந்த மசோதாபற்றி ஸ்ரீ பாலகிருஷ்ணன் என்பவர், உருளைக்கிழங்கு பயிர் செய்கின்றவர்களுடைய நிலைமையை நன்றாகத் தெரிந்தவர், செலக்ட் கமிட்டியில் சாட்சியம் சொல்லியிருக்கிறார். அவருடைய சாட்சியத்தின் விவரம் 155-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அவருடைய சாட்சியத்தை ஏற்க முடியாமல் விட்டுவிட்டார்கள். உருளைக்கிழங்கு வியாபாரி ஏதோ தன்னுடைய லாபத்தைக் கருதிச் சொல்லியதாக செலக்ட் கமிட்டியார் எண்ணிவிட்டார்களோ என்று புரியவில்லை. அவர் தம்முடைய சாட்சியத்தில் நன்றாகப் புள்ளி விவரம் கொடுத்திருக்கிறார். அதைச் சற்று பரிசீலனை செய்திருந்தால், உருளைக் கிழங்குக்கு வரி விதிப்பது நியாயம் அல்ல என்று நீங்களே முடிவு செய்திருப்பீர்கள். ஆனால், இது ஏன் கவனிக்கப்படவில்லை என்று தெரியவில்லை. நான் கொடுத்திருக்கும் திருத்தம் வரும்போது அதைப் பற்றி சொல்கிறேன். அதையும் அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து இதற்கு விதிவிலக்கு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**Sri N. K. PALANISAMI**: கனம் சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் சர்க்கார் கொண்டுவந்திருக்கும் மசோதாவில் முக்கியமாக வரவேற்கும் அம்சம், சேல்ஸ் டாக்ஸ் ஆக்ட், டர்னோவர் அண்டு அஸெஸ்மெண்ட் ரூல்ஸ், ஜெனரல் சேல்ஸ் டாக்ஸ் ரூல்ஸ் ஆகிய இந்த மூன்றையும் ஒன்றாக இணைத்து ஒரே பகுதியாகக் கொண்டுவந்திருப்பதுதான். வரி வசூலிக்கும் அதிகாரிகளுக்கு இன்றைக்கு இருக்கும் அதிகாரத்தைவிட அதிகப்படியான அதிகாரம் இந்த மசோதாவில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. வரி வசூலிக்கக்கூடிய முறையிலும், வியாபாரிகளிடமிருந்து கடுமையாக வசூலிக்கக்கூடிய முறையிலே சட்டங்கள் திருத்தப்பட்டிருக்கின்றன. இந்தச் சபையிலே பல வருஷங்களாக நாம் பேசிவந்திருக்கிறோம். வியாபாரிகளும் சர்க்காரைப் பார்த்து அடிக்கடி தங்களுடைய குறைகளை எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். ஒவ்வொரு சமயத்திலும் பதில் சொல்லும்போதெல்லாம், "நாங்கள் வரி விசாரணைக்கு ஸ்பெஷல் ஆபீசர்களை நியமித்திருக்கிறோம்; அவர்கள் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள்; அவர்கள் ரிப்போர்ட் சமர்ப்பித்தவுடன் எல்லாம் கவனிக்கப்படும்" என்று சொல்லிவிட்டு, உண்மையாகவே அவர்கள் ஒரு சிபார்சை சமர்ப்பித்ததற்குப் பிறகு, அந்த அடிப்படையிலே இங்கிருக்கும் ஷரத்துக்களைக் கொண்டுவராமல், அவர்களுக்கு வேண்டியதை மட்டும் கொண்டுவந்து, உண்மையாக வியாபாரிகளுக்கு ஏற்படக்கூடிய கஷ்டங்களைப் போக்கக்கூடிய நிலைமையிலே இந்த ஷரத்துக்களைக் கொண்டுவராதது மிகவும் வருந்தத்தக்கது. அப்படியிருக்க, ஸ்பெஷல் அதிகாரிகளை இதற்காக ஏன் நியமிக்கவேண்டும்? அவருடைய சிபார்சை ஏற்றுக்கொள்ளாவிட்டால், அவரை ஏன் நியமித்து, இதைப் பரிசீலனை செய்து ஒரு ரிப்போர்ட் தரும்படி சர்க்கார் ஏன் கேட்கவேண்டும் என்பது எனக்குப் புரியவில்லை.

ஏற்கெனவே, பத்தாயிரம் ரூபாய் டர்னோவர் இருந்தால், அதை டாக்ஸ் பிள் லிமிட்டாக வைத்திருந்தார்கள். மசோதா பப்ளிஷ் ஆனபோது அதை ஐயாயிரம் ரூபாயாகக் குறைத்தார்கள். மறுபடியும் பத்தாயிரம் ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். பாலைவனத்தில் பாரத்தைச் சுமந்து செல்லும் ஒட்டகத்தின் முதுகில் நிறைய பாரத்தையும் வைத்து, அத்துடன் இரண்டு கற்களையும் வைப்பார்கள். அது புறப்படுவதற்கு முன்னால் அந்தக் கற்களைத் தூர எறிந்துவிடுவார்கள். பாரம் குறைந்துவிட்டது என்று நினைத்து ஒட்டகம் தன்மேல் இருக்கும் பாரத்தைச் சுமந்துகொண்டு தன் பிரயாணத்தைத் துவக்கும். அதுபோலத்தான் இருக்கிறது நம்முடைய சர்க்காரின் செய்கையும்.

வரி போடுவதற்கு முன்னால், அந்த வரியை யார் பேரில் போட வேண்டும் என்று சர்க்கார் நன்றாக உணர வேண்டும். டாக்டர் லோகநாதன் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். ஐம்பதாயிரம் ரூபாய்க்கு மேலே

டர்னோவர் இருக்கிறவர்களிடமிருந்து 85 சதவிகிதம் வரி வருகிறது என்று. ஆனால், அப்படிப்பட்டவர்கள் இன்றும் தப்பித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

உதாரணமாக இன்றைய தினம் கொத்தவால் சாவடிக்குச் சென்று பார்த்தால் தெரியும். வாஷிங் சோடாவின் கண்ட்ரோல் விலை 21 ரூபாய் என்று இருக்கிறது. ஆனால் 45 ரூபாய் கொடுத்தால்தான் கிடைக்கும். இன்றைக்கு 5 லட்சம் மூட்டை வேண்டுமானாலும் கிடைக்கும். ஆனால் 21 ரூபாய்க்கு வாங்கவேண்டுமென்று சென்றால் ஒரு மூட்டை கூடக் கிடைக்காது. இப்படிப்பட்ட பதுக்கல் வியாபாரிகளை எல்லாம் கண்டுபிடித்து வரி வசூலிப்பதுதான் நியாயம். இதற்குச் சர்க்கார் தகுந்த நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்புகிறேன். "கம்பௌண்டிங்" க்ளாஸ் இருக்கிறது. இது நல்ல அம்சம். இதிலே பத்தாயிரத்துக்கு மேல் பதினையாயிரம் வரையில் வருஷத்திற்கு 120 ரூபாய் என்றும், பதினையாயிரத்திற்கு மேல் இருபதாயிரம் வரை 180 ரூபாய் என்றும், இருபதாயிரத்திற்கு மேல் இருபத்தி ஐயாயிரம் வரையில் 240 ரூபாய் என்றும் மாக்சிமம் லிமிட் வைத்திருக்கிறார்கள். இதில் ஒரு சிறு விஷயம். ஒரு வியாபாரி கம்பவுண்டிங் பண்ணி வரி கட்ட வேண்டுமென்று விரும்பினாலும் இதற்கு அதிகாரிகளின் பர்மிஷன் வேண்டும். பர்மிஷன் இல்லையென்றால் இல்லை. அதற்கு அப்பீல் கிடையாது. இது மோசமான முறை. ஓர் அதிகாரி பர்மிஷன் கொடுக்காவிட்டால் அதன் மேல் அப்பீல் பண்ணிக்கொள்வதற்கும் இடம் இருக்க வேண்டும். ரெக்கார்டு பூர்வமாக அந்த வியாபாரி ஏற்கனவே சில குற்றங்களை செய்தவர் என்பதற்கு ஆதாரம் இருந்தால் வேண்டுமானால் கம்பவுண்ட் பண்ண பர்மிஷன் கொடுக்க அதிகாரி மறுக்கலாம்.

THE HON. SRI R. VENKATARAMAN : அதிகாரி பர்மிஷன் கொடுத்தால்தான் கம்பவுண்டிங் பண்ணலாம் என்று இந்தச் சட்டத்தில் எந்த இடத்தில் இருக்கிறது என்று தெரியவில்லை.

SRI N. K. PALANISAMI : ஒரு முனை வரி என்று சொல்லப்படுகிறது. ஒரு கடையில் பல சரக்குகள் இருக்கும். ஒரு முனை விற்பனை வரி 5 சதவிகிதம், 7 சத விகிதம் என்று துணிகள் முதலியவைகளுக்கு விதிக்கப்படுகிறது. இன்னும் சில பொருள்களுக்கு 2 சத விகிதம் வரி விதிக்கப்படுகிறது. பல சாமான்கள் வைத்திருக்கும்போது ஒரு முனை வரி கட்டுவார்களா ? அல்லது பல கட்ட விற்பனை வரி கட்டுவார்களா ? ஒரு முனை வரியாக இருந்தாலும் சரி, இரு முனை வரியாக இருந்தாலும் சரி அது பல கட்ட விற்பனை வரியில்தான் கணக்கு வரும். "Single point tax" என்பதற்கு அர்த்தம் இல்லாமல் போய்விடுகிறது. இந்த லைசென்ஸ் விஷயத்தில் 7,500 வரை லைசென்ஸ் வேண்டியது அவசியம் இல்லை. அந்த லிமிட்டைப் பத்தாயிரத்திற்கு உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாதாரணமாக 100 ஆடு விற்றால்கூட "காஷுவல் ட்ரேடர்" என்று அவரைத் தீர்மானித்துவிடலாம். இந்த ஒரு க்ளாசை வைத்துக்கொண்டு அந்த வரி விதிப்பு அதிகாரி என்ன வேண்டுமென்றாலும், எவ்வளவு தொந்தரவு வேண்டுமென்றாலும் செய்யலாம். "Appellate Tribunal" முடிவுதான் கடைசியாக இருக்கிறது. அதற்குப் பிறகு ஹை கோர்ட்டுக்குத்தான் வரவேண்டும். அதிகாரி ஏதாவது சொல்லிவிட்டால் கடைசிவரை அவர் வார்த்தைதான் நிற்கும். இந்த மாதிரி "காஷுவல் ட்ரேடர்களை" எல்லாம் சேர்ப்பது சரியாகாது.

THE HON. SRI R. VENKATARAMAN : There is no levy of tax on the casual dealer.

SRI N. K. PALANISAMI : அடுத்தது "பெஸ்ட் ஆப் ஜட்ஜ்மெண்ட்" பற்றி நான் இதே சபையில் எதிர்த்து வந்திருக்கிறேன். ஐம்பதாயிரத்திற்கு மேல் இந்த பெஸ்ட் ஆப் ஜட்ஜ்மெண்ட் வராது என்று



லோகநாதன்கூட சிபாரிசு செய்திருக்கிறார்கள். அது ரொம்ப பாதிக்கும். அது அறவே கூடாது. 50 ஆயிரம் ரூபாய்க்கு மேல் டர்ன் ஓவர் இருக்கிறவர்களுக்கு வேண்டுமானால் இம்மாதிரிப் போடுவதைப் பற்றி ஆலோசிக்கலாம். இப்போது முக்கியமான மாற்றம் என்னவென்றால். வரி விதித்தவுடன் அதை ஆட்சேபிப்பதாக இருந்தால் அது தவறு என்றோ அல்லது நியாயம் என்றோ நிரூபிக்க வேண்டிய பொறுப்பு சர்க்காரிடம் இருந்ததை மாற்றி வியாபாரிகளுக்கே விட்டுவிட்டார்கள். ஒருவன் அரிசி மூட்டையைத் தன் ஊருக்குக் கொண்டு போகிறபோது அவன் அதை விற்கிறான் என்று சொல்லி ஒரு அதிகாரி வரியைப் போட்டு விட்டால் தான் விற்கவில்லை என்பதை அந்த வியாபாரி இன்று நிரூபித்தாக வேண்டும். இந்த அதிகாரிகளுக்குப் பயந்துகொண்டு அவனுக்கு யார் சாட்சி சொல்ல வருவார்கள் ? ஆகவே "ப்ரூவ்" பண்ண வேண்டிய பொறுப்பு சர்க்காரிலேயே இருந்தால்தான் சவுகரியமாக இருக்கும். அதனால் "பர்டன் ஆப் ப்ரூப் ஷலர் செய்ய வேண்டுமென்று இருப்பதை மாற்றி சர்க்காரே அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். சாதாரணமாக ஒரு மாஜிஸ்ட்ரேட்டிடம் போய் அந்த வரி விதிக்கக்கூடிய அதிகாரி இந்த வியாபாரி இவ்வளவு பணம் கட்டவேண்டுமென்று கொடுத்துவிட்டால், உடனே அவர் போலீஸ்காரனை அனுப்பி சாமான்களை எடுத்து வசூல் செய்து விடுகிறார். விசாரணை செய்வதுகூடக் கிடையாது. இது ரொம்பக் கடுமையான முறை. இதை எல்லாம் தளர்த்தி வியாபாரிகளுக்குக் கொஞ்சம் வசதி செய்ய வேண்டும். இப்போது ஒவ்வொரு கட்டத்திலும் லஞ்சம் அதிகமாவதற்குத்தான் சந்தர்ப்பம் நிறைய இருக்கிறது. இதைத் தடுக்க கண்டிப்பான முறையில் கண்காணிக்க வேண்டும். இன்னும் "ஹாரஸ்மெண்ட்" எடுத்துக்கொண்டால் அவ்வாறே அதிகாரிகள் சிறிய வியாபாரிகளுக்குத் தொந்தரவு கொடுக்கிறார்கள். சிறிய வியாபாரிகள் தவறு செய்தாலும் கூட அவர்களுக்கு இந்த மாதிரி "ஹாரஸ்மெண்ட்" உடனே பறிமுதல் செய்வது, ரெக்கார்டுகளை எடுப்பது போன்ற முறை இருக்கிறது. இது அவர்களைப் பாதிக்கும் முறையில் இருக்கிறது. "பிசினஸ் கம் ஹவுஸ்" இருக்கிற இடங்களில் அதிகாரிகள் வீட்டுக்குள் நுழைந்து ரெக்கார்டுகளைக் கொண்டுவர மாஜிஸ்ட்ரேட் பர்மிஷன் வேண்டும். அவசியம் இந்த மாதிரியான தொந்தரவு இருக்கக்கூடாது. இன்றைக்கு சென்னையை எடுத்துக்கொண்டால் கொத்தவால் சாவடிக்கும் கோடவுன் ஸ்ட்ரீட்டுக்கும் போட்டி. கொத்தவால் சாவடியில் லட்சக் கணக்காகப் பிஸினஸ் நடக்கிறது. சென்னையிலேயே பெரிய பெரிய விற்பனை அதிகாரிகள் எல்லாம் இருக்கிறார்கள். இருந்தும் லட்சக் கணக்கில் வியாபாரம் செய்யும் கொத்தவால் சாவடி வியாபாரிகளைப் பிடித்து இவர்களால் வரி போட முடியவில்லை. போய் யாரையாவது ஒருவரைப் பிடித்தால் அவர் மண்டலக் காங்கிரஸ் கமிட்டி பிரசிடெண்ட் ஆகவோ, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியைச் சார்ந்தவராகவோ இருப்பார். அவரை என்ன செய்வது ? இப்படிப்பட்ட நிலை நீடிக்கக்கூடாது. எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் வியாபாரம் என்று வருகிறபோது சர்க்காருக்குச் சேரவேண்டிய வரிப் பணத்தை சரியான முறையில் வசூல் செய்ய நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். "டாக்ஸ் எவேஷனுக்கு" இடம் இருக்கக்கூடாது.

இன்னும் உணவுப் பொருளுக்கு வரி போட்டதை எதிர்க்க வேண்டியதாக இருக்கிறது. சிலவற்றுக்கு விதிவிலக்கு அளித்துவிட்டு, சிலவற்றுக்கு மட்டும் ஏன் வரி போடவேண்டுமென்பது தெரியவில்லை. மின்சார சாமான்களை எடுத்துக்கொண்டால் பம்பாயில் 4 சத விகிதம் போடுகிறார்கள். இங்கே 6 சத விகிதம். அதனால் பம்பாயிலிருந்தே நேரிடையாக ஒரு சத விகிதம் இண்டர் சேல்ஸ் டாக்ஸ் கூடக் கட்டிவிட்டு வாங்கி இங்கே கொண்டு வந்துவிடுகிறார்கள். அதேமாதிரி மூங்கில் போன்றவற்றுக்கு 3 சத விகிதம் வரி போடுகிறோம். பக்கத்து மலபார் போன்ற இடங்களில் இருந்து ஒரு சத விகிதம் இண்டர் சேல்ஸ் டாக்ஸ் கட்டிவிட்டு அவைகளைக் கொண்டுவந்துவிட முடியும். இதனால் எல்லாம் வடநாட்டு வியாபாரம் பெருகும். நம்நாட்டு வியாபாரம் குறையத்தான் செய்யும். ஆடம்பரப் பொருள்களுக்கு அதிக

12.20 p.m.

[Sri N. K. Palanisami] [10th February 1959

வரி போடுவதை ஆட்சேபிக்கவில்லை. ஆனால் வெஜிடபிள் ஆயிலுக்கு 3 சத விகிதம் போட்டிருக்கிறது. அதையும் குறைக்கவேண்டும். கெமிகல் பார்டிலைசர்ஸ்களுக்கு 3 சத விகிதம் வரி போடப்பட்டிருக்கிறது. அவற்றுக்கு வரியே கூடாதென்பது என் கருத்து. இதைப்பற்றியெல்லாம் ஷரத்துவாரியாக விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளும்போது பல திருத்தங்கள் கொடுத்துப் பேச விரும்புகிறேன். அந்தத் திருத்தங்களை எல்லாம் ஆலோசனை செய்து ஏற்றுக்கொண்டு வியாபாரிகளுக்குச் சாதகமாக இருக்கக் கூடிய முறையில் இம்மசோதாவைத் திருத்தி அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* SRI M. J. JAMAL MOIDEEN : Mr. Speaker, Sir, on the whole I think, the Report of the Select Committee is commendable. I would also like to congratulate the Government and the Select Committee for having reduced the tax on foodgrains to one per cent. But we are looking forward to a day when these foodgrains and perishable articles and also edibles will be exempted from any taxation. I am quite sure that even if these things are exempted and the tax structure is properly readjusted, it will not affect the quantum of the tax. It can be adjusted like that. Anyway, I think, before long the tax on foodgrains and perishable articles should be abolished. I would like to quote one incident here. When we started the Independence struggle under Mahatmaji, the first thing he tackled was the tax on salt. Of course, the salt satyagraha was introduced by him to get mass appeal but at the same time he had given us a dictum that absolute necessities of life should not be taxed and it is inherently wrong to tax such necessities of life. If we extend the same dictum, foodgrains, vegetables and other perishable articles, edibles and fertilisers should be exempted from any taxation. The Government may feel that the quantum of tax will be reduced. I do understand that without income it is not easy to carry on the Government but at the same time it can be readjusted in such a way that the quantum is not affected. I once mentioned in this august House that in some countries there was a purchase tax of even 100 per cent and the people did not feel it. But here even if it is two per cent, it is felt because the structure is such. So, the whole structure will have to be readjusted in such a way that reliefs are given.

Sir, the sales tax in our State and, as a matter of fact in other States also, is introduced as a tax of revenue but at the same time it could be utilized for encouraging local industries and also for earning foreign exchange and reducing their expenditure. It can be adjusted like that. For instance, in England, after the war they levied a purchase tax of 100 per cent even on things like apparel and cloth when they were used within the country. When they were delivered on board the steamer, they were exempted. Like that, this tax also can be utilized for encouraging local industries and basic industries and earning foreign exchange. So, there also a lot of thought has to be bestowed and I am sure the Government will do that. I would like to point out one factor here. I do not want to go into details. I find that since Independence, business people and traders are always treated as some unsocial elements. I think it is not correct to adopt such an attitude



10th February 1959] [Sri M. J. Jamal Moideen]

They are also citizens of this country and they are also children of this soil. They are entitled to a fair treatment. Here I can quote an example of what is happening in a home. When one always mistrusts a child, it loses confidence. It becomes a bad character. But when he trusts the child, it improves its character. So, also businessmen and traders should be taken into confidence. But they are not taken into confidence, I am sorry to make that observation. That is the feeling and I should think that it is a correct feeling. They are always considered as some undesirable people. I am told very often that business people, middlemen, are an evil but they are a necessary evil. Without them it is not possible for even an agriculturist to reach the consumer with his agricultural product directly. It is necessary to have a businessman or an intermediary. If we consider him to be even a necessary evil, then sufficient protection should be given. I am sure, if we take these people into our confidence, they will just see that the quantum of tax is obtained. At the same time they will give us the necessary data for readjusting the tax structure. So the Government will have to consider that aspect of the matter also. As a matter of fact, most of the tax is derived from these people and if they are not taken into confidence, it is really difficult to collect the tax. I can also tell the Government that trust always begets trust and respect. Mistrust always begets fear and evasion. If only the commercial community is evasive and is afraid, I think the treatment meted out to them is responsible to a great extent. 12-30 p.m.

Coming down to my own industry, the tanning industry, it is sharing the unenviable fate. Unlike all other industries, the tax, as far as raw skins and hides are concerned, is a tax on the industry and not either on the purchase point or sale point. When I buy raw skins, I do not have to pay the tax. Neither the seller has to pay tax. But when I put the skins into soaks, and I want to tan them, at this point I am taxed. It is the industry that is taxed. I made this point some time back also. The same thing is extended to wattle bark and dyeing materials also. This means that the industrialists suffer. It is a tax on the industry and not on the purchase or sale, as is the case in respect of all other commodities. Why this particular industry is given this treatment? Perhaps because it is thought that the people connected with this industry are docile or the Government think that they can be made to be docile. I do not think there is any other explanation possible. I do not find such treatment is meted out to other industries.

Then, Sir, this industry is concentrated in our State. We get raw materials from other parts of the country. It is one of the largest foreign exchange earners. I can also tell you that in spite of the fact that this industry has established itself in this State for more than a century, we do not find any outstanding figure in this industry for this reason, namely, we have to depend entirely upon foreign markets. Our consumption of higher classes of goods

is negligible in the country. Our fate fluctuates with the fluctuations of the economic conditions of foreign countries. Skins and hides being world commodities, their prices are controlled by world conditions. It is always a buyers' commodity and not a sellers' commodity. We are not able to fix our prices as any other industry does. We have to sell at prices offered by foreign countries. So the taxation is definitely on the industry. I do not know when the Government will see through this aspect of the question and give us some relief.

There is another item included in the list, and that is wool. Three per cent tax is levied on it. I was under the impression that our Government were anxious to foster the drugget industry, and they have put up some construction in Vinnamangalam and other places. I do not know how, when they want to give all sorts of encouragement to this industry, they can put a tax on wool, which will be mostly consumed by the drugget industry or the small carpet manufacturers in the country.

Then, Sir, I come to wattle bark. It already bears an import duty of five per cent in the case of wattle bark and ten per cent in the case of extract, there is this additional tax of three per cent. I am afraid this tax will be a heavy burden on the industry. The point is shifted to the industry and not to the purchase or sale point. As I have said earlier, it is because the Government think that it is easier for collection from the tanners.

Then, Sir, I just want to mention one other point. There is the power for *suo motu* revision for assessed tax in the hands of the Commercial Tax Officer or in the hands of the Board. It may be all right. But at times it so happens, when an appeal is pending with an appellate authority, a *suo motu* revision is made. That means that the appeal has to be given up and then again another appeal has to be filed. The Government will have to do something to see that *suo motu* revision is not resorted to when an appeal is pending. After the appeal is disposed or before the appeal is filed, they can have this *suo motu* revision, and they can do this for five years.

In the case of first appeals, whether it is the Commercial Tax Officer, or the Deputy Commissioner, or the Board, stay should be granted without asking for any bond. In the case of second appeals, they can ask for bonds or security. In the case of first appeals, such conditions as asking bonds or security, should not be resorted to. In the case of first appeal, stay should be granted.

There is one clause, namely, clause 19 newly introduced. Under this clause, the tax could be collected from the property of the partners. It is a known fact that under the Civil Procedure Code and also under the Partnership Act that every partner of a business is liable for the debts of the firm. The assets of the individual partners have to be taken and distributed only after the dissolution or after exhausting the assets of the partnership.



That provision is already there under the Partnership Act and also under the Civil Procedure Code. Therefore, I think that this clause is redundant, unless it seeks to say that even before the company is dissolved, the partners can be proceeded against. That is what it amounts to. This is another instrument of harassment. It will work like this. Suppose there are four partners and the firm is not able to pay the tax when it is demanded. Suppose one of the partners happens to be a rich man. The officer without caring to collect the tax from the company's assets would proceed directly against that particular rich partner and get his property entangled. I think this will be another instrument for harassment. In my own constituency there were people who went to a house for seeing whether account books were hidden there. Some such thing might happen now also. If the Government see the force of my argument, they can just modify this provision.

One other point with regard to the quality of the officers. I do not say that the quality of the officers is anything wrong. But then sales tax administration is rather a complicated affair. Now most of these officers are drawn from the Revenue Department, like Tahsildars, Revenue Officers and so on. Of course they have been accustomed to collect a fixed or determined tax. They have now to interpret the law. For this they must have legal background. Then only they will be able to administer the Act properly. I would suggest that some training, just like the I.A.S., but not a rigorous training, about six months or a year should be given to the officers who are newly recruited, unless they are law graduates. I think the Hon. Minister will kindly consider this suggestion.

I am not of course proposing any amendments. If, however, the Government feel that I have made some points and that I have made some useful suggestions in the course of my speech, it is for the Government to bring forward the necessary amendments to give effect to my suggestions. With these few words, I commend this Report to this August House. 12-40 p.m.

SRI T. L. SASIVARNA THEVAR: கனம் சபாநாயகர் அவர்களே, நமது சர்க்கார் கொண்டுவந்திருக்கும் விற்பனை வரிச் சட்டத்தின் மீது ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நம் நாடானது உலகத்திலேயே மிக எளிமையான நாடு என்று சொல்வார்கள். அதே சமயத்தில் நமது அரசாங்கம்தான் உலகத்திலேயே ஜாஸ்தியாக வரி போடுகிறது. அப்படி யிருந்தும் நாம் எளிமையாகத்தான் இருக்கிறோம். வரிவிதிப்பிலே உயரத் திலே இருக்கிறோம். இது எப்படி ஒத்துப்போகிறது என்று தெரிய வில்லை. ஐந்தாண்டுத் திட்டம் இருக்கிற காரணத்தினால் மேலும் மேலும் வரி போட்டுக்கொண்டே போகிறார்கள்.

விற்பனை வரி சம்பந்தமாக டாக்டர் லோகநாதன் அவர்கள் ரிபோர்ட் சமர்ப்பித்திருக்கிறார். இதில் அவர்கள் சொன்ன சிபார்சின்படி வரி விதிப்ப தினால் சர்க்காரின் வருமானம் எந்த விதத்திலேயும் பாதிக்காது என்று குறிப்பிட்டிருக்கிறார். அப்படி குறிப்பிட்டிருந்தும் அரசாங்கத்தார்தான் சொன்ன சிபார்சுகளை ஏற்றுக் கொள்ளாத நிலைமையில் வரியை உயர்த்தி யிருக்கிறார்கள். அவர்கள் சொல்லும் காரணம் டாக்டர் லோகநாதன் சொல்லுகிற சிபார்சுப்படி செய்தால் ஏற்கெனவே இருக்கிற வருமானம்

[Sri T. L. Sasivarna Thevar] [10th February 1959

குறைந்துவிடும் என்பதாகும் அரசாங்கத்தின் புள்ளி விவரக் கணக்கு
இருக்கிறது. விற்பனை வரி மூலமாக இதுவரையில் எவ்வளவு
வருமானம் கிடைத்திருக்கும் என்பதற்கு அரசாங்கத்திலே புள்ளி
விவரம் இருக்கும். இந்தப் புள்ளிவிவரங்களை மேற்கொண்டு
டாக்டர் லோகநாதன் சொல்லும் சிபார்சுப்படி வரும் வருமானத்தைக்
கணக்கிட்டால் உண்மையிலே வருமானம் குறைகிறதா, உயர்கிறதா என்று
தெரிந்து கொள்ளலாம்.

சில்லரை வியாபாரிக்கு ஜாஸ்தி தொந்திரவு இருக்கக்கூடும். அவர்
களுக்குப் போதுமான பாதுகாப்பு இருக்கவேண்டும் என்பது மிக்க அவசியம்.

(Sri R. Subramaniam in the Chair)

முன்பு வரி விதிக்கும் அளவு ஐயாயிரத்தில் இருந்தது. இப்போது
பத்தாயிரத்துக்கு வந்திருக்கிறது. அது மிகவும் குறைச்சலான தொகை.
என் தொகுதி சம்பந்தப்பட்டவரை ஒரு சம்பவத்தை சொல்லுகிறேன்.
எங்கள் ஊரில் ஒருவருக்கு ஒரு சிறு கடை இருக்கிறது. அங்கு ஒரு கதவுதா
னுண்டு. ஒரு ஆள்தான் அந்தக் கடைக்குள் இருக்க முடியும். இட
ரென்று அந்தக் கடையைப் பார்க்க அதிகாரி ஒருவர் வந்தார். அவரை
தூரத்திலிருந்து பார்த்தபோதே கடைக்காரர் அந்தக் கடையை அப்படியே
விட்டுவிட்டு ஓடிவிட்டார். அந்தக் கடையில் மூன்று நான்கு ரூபாய்க்கு
வியாபாரம் இருக்கும். ஏன் அப்படி அந்த அதிகாரியைக் கண்டு பயப்பட
வேண்டும்? ஏனென்றால் ஜாஸ்தியாக வரிபோடக்கூடிய அதிகாரம் அவ
ருக்கு உண்டு. அதே சமயத்தில் பொய் கணக்கு வைத்து அதிகாரிகளை
ஏமாற்றும் பெரிய வியாபாரிகளும் உண்டு.

சமீபத்தில் ஒரு பெரிய வியாபாரி ஆயிரக்கணக்கான ரூபாய்க்கு சாமான்
வாங்கினார்கள். ஆனால் விற்பனைவரி கொடுக்காமல் ஏமாற்றுகிறார்கள்.
அரசாங்கத்திற்கு கொடுக்கும் பணத்தை ஒளிக்கக்கூடாதென்று உபதேசம்
செய்தால் கேட்பதில்லை. கேட்டால் வரி அதிகமாக இருக்கிறதென்று
சொல்லப்படுகிறது. பொதுவாக வியாபாரிகள் வரிகொடுக்கத் தயாராக
இருக்கிறார்கள். குறைவான அளவிற்கு வரி விதித்தால் அவர்கள்
ஏமாற்றுவதற்கு முயற்சி செய்யாமல் வரியை செலுத்துவார்கள். இதனால்
அரசாங்கத்திற்கு பணம் ஜாஸ்தியாக கிடைக்கும். இதை ஒரு வருஷத்திற்கு
பரீட்சை செய்து பார்த்தால் அதிக வருமானம் கிடைக்கும். வரியை உயர்த்
துவதன் காரணமாக வரி கொடுக்காமல் டிமிக்கி கொடுக்கப்பார்க்கிறார்கள்.

சிறு வியாபாரிகள் சம்பந்தப்பட்டமட்டில் இந்தத் தொந்தரவு இருக்
கிறது. கடற்கரையில் மல்லாக்கொட்டை வியாபாரம் செய்கிறவன் கூட,
30 ரூபாய், 35 ரூபாய்க்கு இரண்டு மணி நேரத்தில் விற்றுவிடுவான்.
மதுரை போன்ற ஊர்களில் கத்திரிக்காய் மூட்டை ஒன்றுக்கு, மிளகாய் மூட்டை
ஒன்றுக்கு 24 ரூபாய் வருகிறதென்றால் இதிலிருந்து இரண்டு மூன்று ரூபாய்
லாபம் கிடைக்கும். அவர்களுக்கெல்லாம் விற்பனை வரி தொந்தரவு
கொடுக்க வேண்டியிருக்கிறது.

விதிவிலக்கு சம்பந்தப்பட்ட மட்டில் செலக்ட் கமிட்டியே. அதற்கு ஒரு
சத விகிதம் வரி போடலாம் என்று முடிவுசெய்தது. உணவுப்பொருள்
களுக்கு வரி போடுவது என்பது பெரிய பாவம், பாவம், பாவம். உணவுப்
பொருள் விலைவாசியைப் பற்றித்தான் கவர்னர் உரைமீது பேசினோம்.
நாட்டிலே பஞ்சம் இருக்கிறது. நியாயவிலைக் கடைகள் திறக்கப்
போகிறோம் என்று சொல்லப்படும் இந்த நேரத்தில் உணவுப் பொருள்மீது
வரி விதிப்பது கொஞ்சம்கூட ஒத்துக்கொள்ளக்கூடாத விஷயம். எனவே,
அரசாங்கத்தார் பெரிய மனதுடன் உணவுப்பொருள் மீது இருக்கும் வரியை
நீக்கவேண்டும்.

அதேபோல் அழுகக்கூடிய பொருள்களுக்கு ஏற்கெனவே வரி விலக்கு
அளிக்கப்பட்டிருக்கிறது. செலக்ட் கமிட்டியிலிருந்து வந்திருக்கிற இந்த
மசோதாவில் இந்த விதிவிலக்கு காணப்படவில்லை. எனவே உணவுப்



10th February 1959] [Sri T. L. Sasivarna Thevar]

பொருள் பொறுத்தவரையில், காய்கறிகள் எல்லாம் மக்க
ளுக்கு தேவையானபடியால் அரசாங்கம் இந்தப் பொருளுக்கு
வரி விதிக்காமல் இருந்தால் அவர்களுக்கு வசதி செய்து கொடுத்தவர்கள்
ஆவார்கள்.

காய்கறி வியாபாரம் சம்பந்தப்பட்ட மட்டில் பெரும்பாலும் பெண்கள்
தான் வியாபாரம் செய்கிறார்கள். ஏதோ ஒன்று இரண்டு மொத்த வியா
பாரிகள் ஆண்களாக இருக்கலாமே தவிர சிறு சிறு வியாபாரிகளாக
இருப்பவர்கள் 80 சத விகிதம் வியாபாரிகள் தாய்மார்கள் என்றுதான்
சொல்லலாம். அவர்களும் விற்பனை வரி செலுத்தவேண்டுமென்றால் அவர்
களுடைய நிலைமைக்கு அது ஜாஸ்தியாக இருக்கிறது. சாதாரணமாக கணக்கு
வைத்துக்கொள்வது என்பது ஆண்களுக்கே சற்று சங்கடம் என்றால்,
பெண்களுக்கு இன்னும் எவ்வளவு கஷ்டம் ஏற்படும் என்பதை சொல்ல
வேண்டியதில்லை. ஆகவே, காய்கறி முதலிய அழுகக்கூடிய பொருள்களுக்கு
வரி விதிவிலக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.
30,000 ரூபாய் என்பது அவர்களுக்கு மிகவும் குறைவான தொகை என்று
நான் முன்பே சொன்னேன். ஒரு ஸ்திரீ 150 ரூபாய்க்கு வியாபாரம்
நடத்தலாம். அப்போதுகூட அவளுக்கு அதிக லாபம் வராது. மேலும், p.m.
ஒரு ஸ்திரீ சிறு கடை—சில்லறைக் கடை—வைத்து வியாபாரம் நடத்தும்
போது அவள் யாரிடம் விற்பனை வரியை வசூலிக்க முடியும்? அவள்
எப்படி விற்பனை வரியை வசூலிக்க முடியும்? ஆண்கள் பில்கள் வைத்துக்
கொண்டிருப்பார்கள். ஆண்கள் பில்கள் கொடுப்பார்கள். தாய்மார்கள்
அவ்வாறு செய்ய முடியாது. தாய்மார்கள் பில் கொடுத்து வரிப் பணத்தை
வசூலிக்க முடியாது. ஆகையால், 30,000 ரூபாய்க்கு விதிவிலக்குக் கொடுக்கப்
பட்டிருந்தாலும், பரிபூரணமாக விதிவிலக்கு அளிக்கப்பட வேண்டிய
பொருள்கள், பழங்கள் போன்ற சீக்கிரம் கெட்டுப்போகும் பொருள்
களுக்கு ஏற்கனவே விலக்கு அளிக்கப்பட்டிருந்தது. எனவே
இந்தச் சலுகை ஏற்கனவே இருக்கிறது. ஏற்கனவே இருக்கும் சலுகையை
ஏன் பறிக்க வேண்டும்? இந்தப் பொருள்களை பெரும்பாலும் ஸ்திரீகள்
தான் விற்கிறார்கள். எனவே தாய்மார்களுக்கு இந்தச் சலுகையை
மீண்டும் கொடுக்கவேண்டும்.

விற்பனை வரியினால் வியாபாரிகளுக்கு இருக்கும் தொந்தரவுகளில்
பெரும்பான்மையானது, அதிகாரிகளால் ஏற்படும் தொந்தரவு. இன்றுள்ள
சட்டத்தில் அதிகாரிகளுக்கு ஜாஸ்தி அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்
கிறது. எல்லா அதிகாரிகளுமே தவறு செய்கிறார்கள் என்று நான்
சொல்லவில்லை. எந்த அதிகாரியும் தவறு செய்வதில்லை என்றும் நான்
கூறவில்லை. வியாபாரிகள் சமூகத்திலேயே வெறுக்கத்தக்க கூட்டத்தின
ராகக் கருதப்படுகின்றனர் என்று எனக்கு முன் பேசிய கனம் அங்கத்தினர்
சொன்னார். கள்ள மார்க்கெட் கூட்டமே வியாபாரிகளிலிருந்துதான்
வந்திருக்கிறது. வியாபாரிகள் எல்லோருமே அநியாயம் செய்பவர்கள் அல்ல
என்று நான் சொல்ல விரும்புகிறேன். வியாபாரிகளிடையேயும் நியாயஸ்
தர்கள் இருக்கிறார்கள். நியாயமான வியாபாரிகள் அதிகாரிகளால் மிகவும்
கஷ்டப்படுகிறார்கள். அநியாயம் செய்யும் வியாபாரிகள் அதிகாரிகளிடமி
ருந்து தப்பித்துக்கொள்கிறார்கள். 10,000 ரூபாய் மொத்த வருட
வருமானம் வரையிலும் விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்
கிறது. ஒரு வியாபாரிக்கு உண்மையிலேயே வருடத்தில் 9,500 ரூபாய்க்கு
வியாபாரம் நடந்திருக்கலாம். ஆனால், அவர் அந்தக் கணக்கை அதிகாரி
யிடம் காண்பித்தால் அதிகாரி அதை ஒப்புக்கொள்ளமாட்டார். அவர்
அந்த வியாபாரிக்கு 15,000 ரூபாய்க்கு "அஸெஸ்" பண்ணுவார்.
இப்படிப்பட்ட சிறு தொகைகள் கணக்காகக் காண்பிக்கப்படும்போது சர்க்கார்
உத்தியோகஸ்தர்கள் ஜாஸ்தியாகத்தான் அஸெஸ் பண்ணுவார்கள். பொது
வாகவே, வியாபாரிகளைத் தொந்தரவு செய்யக்கூடாது என்ற நல்ல
ஆலோசனை எல்லா அதிகாரிகளுக்கும் கொடுக்கப்படவேண்டும். இல்லா
விட்டால், சாதாரண வியாபாரிகள் மட்டுமின்றி பெரிய வியாபாரிகளும்
தொந்தரவுகளுக்கு ஆளாவார்கள்.

[Sri T. L. Sasivarna Thevar] [10th February 1959

காய்கறிகளின் மீதும், உணவுப் பொருள்களின் மீதும் உள்ள விற்பனை வரியை பூரணமாக நீக்கிவிடவேண்டும் என்று கனம் அமைச்சரைக் கேட்டுக் கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

* SRI G. ANNAMALAI MUTHURAJA: கனம் சபைத் தலைவர் அவர்களே, விற்பனை வரி சம்பந்தமாக சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சீக்கிரம் கெட்டுப் போகும் பொருள்களாகிய பழம், புஷ்பம், பால், காய்கறி, வெற்றிலை, இலை இவைகளுக்கு முன்பு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருந்தது. இந்த மசோதாவில் அவைகளுக்கும் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. இங்கே ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் முதன் மந்திரியாக இருந்ததற்கு முன்பு, இந்தப் பொருள்களுக்கு விற்பனை வரி வசூலிக்கப்பட்டு வந்தது. அவைகள் சீக்கிரம் கெட்டுப்போகும் பொருள்களாக இருப்பதால் அவைகளுக்கு விற்பனை வரி விதிக்கக்கூடாது என்று ஸ்ரீராஜகோபாலாச்சாரியார் அவைகளுக்கு இந்த வரியிலிருந்து விலக்கு அளித்தார். இந்த அரசாங்கத்தார் இப்போது அவைகளுக்கு மறுபடியும் வரி விதிக்க முன்வந்திருக்கிறார்கள். அவைகளுக்கு வரி விதிப்பதால் பொதுஜனங்களுக்கும், வியாபாரிகளுக்கும் பலவிதமான இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன. ஆகையால், நன்றாக யோசனை செய்து, வரியினின்றும் ஏற்கனவே விலக்களிக்கப்பட்டிருந்த பொருள்களுக்கு இம்மசோதாவில் வரி விதிக்க வேண்டாம் என்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பொருள்களுக்கு விலக்கு அளித்தால் அரசாங்கத்திற்கு வருமானம் குறையும் என்று நினைக்க வேண்டாம். அதை வேறு விதத்தில் சரிக்கட்டலாம். தாராளமாக வருமான வரி கொடுக்கும் பெரிய வியாபாரிகள் இருக்கிறார்கள். அந்தப் பெரிய வியாபாரிகள் நேர்மையாகக் கணக்கு வைத்திருப்பார்கள். அவர்களுடைய அந்தக் கணக்குகளைப் பார்த்து அவர்களுக்கு சரியான அளவில் நாம் வரி விதிக்கலாம். கனம் நண்பர் ஸ்ரீ சசிவர்ணத் தேவர் சொன்னதுபோல், ஸ்திரீகள் வியாபாரம் செய்தால், அவர்கள் கணக்கு வைத்துக்கொள்வது கஷ்டம். ஆகையால் இதை நன்றாகப் பரிசீலித்து, சிறு வியாபாரிகளும், ஸ்திரீகளும் விற்கும் பழங்கள், காய்கறிகள் முதலிய விரைவில் கெட்டுப்போகும் பொருள்களுக்கு வரியிலிருந்து விலக்கு அளிக்கவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டுச் சர்க்கரைக்கும், வெல்லத்திற்கும் இந்த மசோதாவில் விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அவைகள் சீக்கிரம் கெட்டுப்போகும் பொருள்களா? இவைகளுக்கு ஏன் வரி போடக்கூடாது என்று எனக்குத் தெரியவில்லை. அவைகள் எவ்வளவோ காலத்திற்குக் கெடாமல் இருக்கும். அவைகளுக்கு வரியிலிருந்து விலக்களித்திருக்கும் போது, சீக்கிரம் கெட்டுப்போகும் பொருள்களுக்கு ஏன் விலக்கு அளிக்கக் கூடாது? கூடியவரையில், ஏற்கனவே வரியிலிருந்து விலக்கு அளிக்கப் பட்டிருக்கும் சரக்குகளுக்கு மீண்டும் விலக்கு அளிக்க வேண்டும் என்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

* SRI S. M. ANNAMALAI: மன்றத் தலைவர் அவர்களே, இப்போது இந்த மசோதாவைக் குறித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். விற்பனை வரி என்பது பொது மக்களிடமிருந்து வியாபாரிகள் மூலம் வசூலிக்கப்படும் வரி. நம் மாநிலத்தில், விற்பனை வரியானது ஏறத்தாழ 15 கோடி ரூபாய்க்கு மேல் வசூலிக்கப்படுகிறது என்று அரசாங்கத்தின் புள்ளி விவரங்களிலிருந்து தெரியவருகிறது. அப்படியானால், நம் மாநிலத்தில் ஒவ்வொருவனும் விற்பனை வரியாக ஏறத்தாழ சராசரி ஐந்து ரூபாய் கொடுத்து வருகிறான். மற்ற மசோதாக்களில் "ஆப்ஜெக்ட்ஸ் அண்ட் ரீசன்ஸ்" சொல்லப்பட்டிருக்கும், இந்த மசோதாவில் அவை சொல்லப்படவில்லை, இந்த மசோதா சட்டமாகி அமலுக்கு வந்தால், அரசாங்கத்திற்கு விற்பனை வரியின் மூலம் அதிக வருமானம் வருமா, அல்லது இப்போது வருவதை விட குறைவாக வருமா, அதிகமாக வருமானால் எவ்வளவு பணம் அதிகமாக வரும், குறைவாக வருமானால் எவ்வளவு பணம் குறைவாக வரும் என்று கூட ஒரு குறிப்பு கொடுக்கப்படவில்லை.



10th February 1959] [Sri S. M. Annamalai]

வியாபாரிகள் பாமர மக்களிடமிருந்து வசூலித்த
விற்பனை வரியை வியாபாரிகள், தாங்கள் வசூலித்த விற்பனை வரித் தொகையை
விடுகிறார்கள். வியாபாரிகள், தாங்கள் வசூலித்த விற்பனை வரித் தொகையை
சரியாக சர்க்காருக்குக் காட்டாமல் ஏமாற்றுகிறார்கள். மேலும், சில
உத்தியோகஸ்தர்கள் விற்பனைவரியை சரிவர வசூலிக்க முடியாமல் இருக்கிறார்
கள். எனவே இந்த மசோதாவை, நன்றாகப் பரிசீலித்து நல்ல முறையில்
சட்டமாக்க வேண்டும். சர்க்கார் போடும் விற்பனை வரி பாமர மக்களை
பாதிக்கக்கூடாது. பலமுனை விற்பனை வரி கூடாது என்ற காரணத்தால்
தான், டாக்டர் லோகநாதன் அவர்களைக் கொண்டு இப்பிரச்னையை ஆராயச்
செய்து அவருடைய அறிக்கையைப் பெற்ற பிறகு இந்த மசோதா இம்
மன்றத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. குறிப்பாக, பல கனம் உறுப்
பினர்கள் கூறியதுபோல், உணவு தானியங்களின் மீது போடப்படும் வரி,
பாமர மக்களை பாதிக்கும். வரி வசூலிக்கப்பட வேண்டியவருக்கு இருக்க
வேண்டிய குறைந்தபட்ச வருட வருமானம் 10,000 ரூபாய் என்று
மசோதாவில் கண்டிருக்கிறது. இந்த வரம்பு சிறிய வியாபாரிகளைக் கூட
பாதிக்கும். தினமும் ஒரு பட்டணம் படி அரிசி வாங்கும் மனிதன் கூட
இதனால் பாதிக்கப்படுகிறான். ஒரு சிறு வியாபாரி இரண்டு மூட்டை நெல்லை
வாங்கி அதை அரிசியாக அறைத்து பஜாருக்கு கொண்டுவந்து விற்றால்,
அவனுக்கு 60 ரூபாய்க்கு ஒரு ரூபாய் கிடைக்கும். அவன் தினமும் அவ்
வளவு அரிசி விற்றால், தினமும் 60 அல்லது 65 ரூபாய்க்கு வியாபாரம்
செய்தால், வருடத்திற்கு ஏறத்தாழ 20,000 ரூபாய்க்கு வியாபாரம்
செய்வான். எனவே அந்த சிறிய வியாபாரிகூட அந்த வரியினால் பாதிக்கப்
படுவான். இவ்வாறு, சிறிய வியாபாரிகளை இந்த வரி மிகவும்
பாதிக்கும் என்று சொல்ல விரும்புகிறேன்.

கூட்டுறவுச் சங்கங்கள் கூட விற்பனை வரியினால் மிகவும் பாதிக்கப்படு
கின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் மேலும் மேலும் அதிகரிக்க வேண்டும்
என்று சொல்லப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்கள் தனிப்பட்டவர்களுடன்
போட்டி போட முடியாது. எனவே கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனை
வரியினின்றும் விலக்கு அளிக்க வேண்டும். இந்த மசோதாவில்
கூட்டுறவுச் சங்கங்களும் விற்பனை வரிக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றன.

இந்த மசோதாவில் பிண்ணாக்கிற்கும் விற்பனை வரி போடப்பட்டிருக்
கிறது. பிண்ணாக்கு மாடுகளுக்கு போடப்படுகிறது. விவசாயத்திற்கு பிண்
ணாக்கு உபயோகப்படுகிறது. இப்படிப்பட்ட பிண்ணாக்கிற்கு ஏறத்தாழ 3 சத
வீதம் விற்பனை வரி போடப்பட்டிருக்கிறது. பிண்ணாக்கு சாப்பிடும் மாடுகளை
வளர்ப்பவர்கள் பாமர மக்கள். பிண்ணாக்குக்கும் வரி போடப்பட்டால்;
கிராமங்களிலுள்ளவர்கள் மாடுகளை வைத்து நிர்வகிப்பதே மிக மிகக்
கஷ்டமாகிவிடும். மாடுகளை வைத்து நிர்வகிப்பது இப்போதே கஷ்டமாக
இருக்கிறது. ஒரு மூட்டை தவிட்டின் விலை 4–5 ரூபாயாக இருக்கிறது.
1 p.m.

இப்பொழுது மாடுகளைக்கூட விற்றுவிடலாம் என்ற நிலையில் இருக்கிறார்
கள், விவசாயிகள். அப்படியிருக்க, பிண்ணாக்கிற்கும் 3 சத வீதம் நம் சர்க்கார்
வரி விதித்தால் உண்மையிலேயே அது கிராமப்புறங்களிலுள்ள பாமர
மக்களைத்தான் பாதிக்கும். அடுத்தபடியாக, கிரஸின் ஆயில். அதற்கு
5 சத வீதம் வரி விதித்திருக்கிறார்கள். மண்ணெண்ணை கிடைக்காமல் மக்கள்
மிகவும் அவதிப்படுகிறார்கள். குறிப்பாக சென்னை மாநிலத்தை பொறுத்த
மட்டில் அது இங்குள்ள மக்களை மிகவும் அதிகமாகப் பாதித்திருக்கிறது.
மின்சாரம் நாளுக்கு நாள் அதிகப்பட்டு வரும் இந்நாளில் மண்ணெண்
ணையின் மேல் போடப்படும் வரி பாமர மக்களைத்தான் பாதிக்கும், தவிர
நகரப்புரங்களில் உள்ளவர்களை அது பாதிக்காது. காரணம், நகரப்புரங்
களில் இருப்பவர்கள் மின்சார விளக்குகள் போட்டு வாழ்க்கையை நடத்து
கிறார்கள். கிராமப்புறங்களிலுள்ள மக்கள்தான் மண்ணெண்ணையை அதிக
மாக உபயோகிக்கிறார்கள் ஆகவே மண்ணெண்ணைக்கு 5 சத வீதம் வரி
விதித்திருப்பது உண்மையிலேயே வருந்தத்தக்கதாகும். கடைசியாக 7,500
ரூபாய்க்கு வியாபாரம் செய்பவர்கள் ரெஜிஸ்டர் செய்யவேண்டுமென்று
சொல்லிக்கொண்டு இருக்கிறது. அதை 10,000 ஆக ஆக்க வேண்டுமென்று
கொண்டு 59-வது பிரிவில் ஷெடியூலை அரசாங்கம் எப்பொழுது வேண்டு
மானாலும் திருத்தலாம் என்றிருக்கிறது. ஜனநாயக ரீதியில் எந்தவித

[Sri S. M. Annamalai] [10th February 1959]

திருத்தங்கள் கொண்டுவரவேண்டுமென்றாலும் சட்டமன்றத்தில் அது கொண்டு வரப்பட்டு சட்டமன்றத்தின் அனுமதி பெற்றே அது கொண்டு வரப்படவேண்டுமேயொழிய சட்டமன்றத்தின் அனுமதியில்லாமல் சர்க்கார் எப்பொழுது வேண்டுமானாலும் திருத்தலாம் என்பதற்கு அதிகாரம் தரக் கூடிய 59-வது பிரிவை ஷெடியூலை நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**Sri V. SUBBIAH:** தலைவர் அவர்களே, விற்பனை வரியானது ராஜாஜி அவர்களால் 1939-ம் ஆண்டில் கொண்டு வரப்பட்டாலும் கூட இன்று 59-ம் ஆண்டில் புது ரூபத்தில் லோகநாதன் அவர்கள் அறிக்கையின் பேரில் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இது பற்றி பல அங்கத்தினர்கள் பேசியிருந்தாலும்கூட, முக்கியமாக விவசாய உற்பத்தியைப் பாதிக்கக்கூடிய விதத்தில் சில விவசாயப் பொருள்களுக்கு மட்டுமில்லாது விவசாயப் பொருள்களை உற்பத்திசெய்யக்கூடிய உரப் பொருள்களுக்கும் 3 சத வீதம் வரி போடப்பட்டிருக்கிறது. இன்று இந்நாட்டில், தழைப் பொருள்கள் இல்லாத நிலையில் இன்று விவசாயிகள் புண்ணாக்கைத்தான் நம்பியிருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. அதுபோல் ரசாயன உரங்கள், 'மனியூர்களை' எடுத்துக் கொண்டால், அம்மோனியம் சல்பேட், நைட்ரேட், யூரியா, எலும்புத்தூள் 'போன்மீல்' போன்றவைகள் விவசாயத்திற்கு மிக முக்கியமான உரப்பொருள்களாகும். இவைகளுக்கெல்லாம் இன்று அரசாங்கம் புதிதாக 3 சத வீதம் வாச்சில் விற்பனை வரி போட்டு இருப்பது விவசாயத்தைப் பாதிக்கும், அதாவது விவசாய உற்பத்தியைப் பாதிக்கும் என்பதுதான் எனது தாழ்மையான அபிப்பிராயம். இப்படியானால் விவசாயத்தைப் பெருக்க வேண்டுமென்று நாம் சொல்வதில் ஒருவித அர்த்தமும் கிடையாது.

(Mr. Speaker in the Chair.)

சட்டமன்றம் இந்த நாட்டில் ஏற்பட்டதில் இருந்து நாம் புதிது புதிதாக வரிகள் போட்டுக் கொண்டேயிருக்கிறோம், என்பதைத் தவிர இருப்பதை வைத்துக் கொண்டு, இருக்கக்கூடிய சட்டங்களை வைத்துக் கொண்டு, இருக்கக் கூடிய வரிகளை வைத்துக் கொண்டு சிக்கனமாக ஆட்சி செய்ய வேண்டுமென்ற எண்ணமே ஆட்சியாளருக்கு இல்லாமல் போய்விட்டது, என்று மக்கள் நினைக்கும் விதத்தில் போய் கொண்டிருக்கிறார்கள். காய்கறி போன்றவைகளுக்கு எல்லாம் விற்பனை வரி வந்துவிட்டது என்றால் மக்கள் என்ன நினைப்பார்கள் என்று நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். விவசாயிகள் கொடுக்காத எதாவது ஒரு வரி இந்த நாட்டில் இருக்கிறதா ? விவசாய வருமான வரியிலிருந்து, டீஸல் ஆயிலுக்குள்ள வரி வரையில், மத்திய மாகாண அரசாங்கம் போடுகிற எல்லா வரிகளையும் விவசாயிகள் மறைமுகமாகவாவது கொடுக்க வேண்டியிருக்கிறது. நேரடியாக நெல் தீர்வை கொடுப்பதோடு விவசாயி மறைமுகமாக பல வரிகள் கொடுக்க வேண்டியிருக்கிறது. புண்ணாக்கு, ரசாயன உரங்கள் போன்றவைகளுக்கு இன்று வரி விதிக்கப்பட்டிருக்கிறது. அம்மோனியம் சல்பேட், நைட்ரேட் போன்ற ரசாயன உரங்கள் இன்று விவசாயிகளுக்கு எப்படி கிடைக்கிறது என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்த வருட ஸீஸனில், அம்மோனியம் சல்பேட் மூட்டை ஒன்று 35 ரூபாய்க்கு விற்றது. சிறிய விவசாயிகள் ப்ளாக் மார்க்கெட்டில் 55 ரூபாய் கொடுத்து வாங்கினார்கள் என்பதை யாரும் மறுக்கமுடியாது. அப்படிப்பட்ட கேஸ்கள் பல பிடிக்கப்பட்டிருக்கின்றன. இப்படி ரசாயன உரங்களை கூடுதல் விலை கொடுத்து விவசாயிகள் வாங்குகிறார்கள். நிலைமை இப்படியிருந்தால் உணவு உற்பத்தியை எப்படி பெருக்க முடியும் ? விலைவாசிகள் உயர்ந்துவிட்டது என்று சொல்லக்கூடிய அரசாங்கம் இப்படி புதிது புதிதாக வரிகளைக் கொண்டு வருகிறார்களோ ? அடுத்தபடியாக, நவீன இயந்திர சாதனங்களை புகுத்த வேண்டுமென்று சர்க்கார் சொல்லும்போது, அதே சமயத்தில் ட்ராக்டர்ஸ், புல்டோஸர்கள் போன்ற கருவிகளுக்கும் 3 சத வீதம் வரி போடப்பட்டிருக்கிறது. யந்திர மயமாக்க மெக்கானிக்கல் ...வேண்டுமென்று சொல்லும்போது, இம்மாதிரி ட்ராக்டர்கள்,



10th February 1959] [Sri V. Subbiah]

புல்டோஸர்கள் போன்றவைகளுக்கு இப்படி 3 சத வீதம் வரி போட்டால் என்ன செய்வது ? அதேபோல் மில்லட், கம்பு, கேழ்வரகு போன்ற முக்கியமான உணவுப் பொருள்களுக்கும், குழந்தைகள் சாப்பிடக்கூடிய பால் பவுடர், பால் போன்றவைகளுக்கும் வரி விதிக்கப்படுகிறது. விவசாயிகள் உற்பத்தி செய்து மார்க்கெட்டில் கொண்டு வரும்போதும் வரி விதிக்கப்படுகிறது. விவசாயத் துறையில் பொருளாதார முன்னேற்றம் காண முடியவில்லை என்று இராம மக்கள் நகரப்புறங்களில் வந்து வியாபாரம் செய்யலாம் என்று நினைத்தால் விற்பனை வரி அவனை எந்தளவிற்கு கொண்டு வந்துவிடுகிறது என்று பார்க்க வேண்டும். இரண்டு வித கணக்குகள் வைத்துக் கொள்ளாமல் நேர்மையாக காலத்தைக் கடத்த வேண்டுமென்று நினைத்து வியாபாரம் செய்யப்போனால் இந்த விற்பனை வரி அவனை பொய் சொல்ல வைக்கிறது, இரண்டு கணக்குகள் வைக்கச் செய்கிறது. அதுமட்டுமல்ல. மனசாட்சிக்கு விரோதம் இல்லாமல் வியாபாரம் செய்ய வேண்டுமென்று விரும்பிய எனது நண்பர்கள் சிலர் அந்தத் தொழிலையே விட்டு விட்டு வெளியே போகும் நிலையில் இன்று கஷ்டப்படுகிறார்கள். ஆக, ஒழுங்கானவர்கள் இந்த நாட்டில் ஜீவிப்போம் என்றால், தவறு இழைக்காது வாழ்க்கை நடத்த விரும்பி நேர்மையாக நடந்தவர்கள் இன்று தெருவில் நிற்கக் கூடிய அளவிற்கு இந்த விற்பனை வரி அவர்களைக் கொண்டு வந்து வைத்து விட்டது எனக்குத் தெரியும். உணவுப்பொருள்களுக்கும், உரப் பொருள்களுக்கும் போடப்பட்டிருக்கிற வரி விவசாயிகளை, ஏழை மக்களை எவ்வளவு தூரம் பாதிக்கிறது, எத்தனை தடவை அவர்கள் வரி கொடுக்க வேண்டியிருக்கிறது என்று பார்த்து எங்கு அவை உற்பத்தியாகிறதோ அந்தயிடத்திலேயே வரி போட வேண்டும். சாமான்களுக்கு அவைகளின் உற்பத்தி ஸ்தலத்திலேயே டாக்ஸ் போட்டு அனுப்பினால் அது வரவேற்கத்தக்கதாகயிருக்கும். இப்பொழுது அது பல ரூபங்களில் போய்க்கொண்டிருக்கிறது. ஆகவே, கடைசியாக, விவசாயிகள் உபயோகிக்கும் இனங்களின் மீதுள்ள வரியை கொஞ்சம் குறைத்தோ அல்லது நீக்கியோ எதாவது செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

**Mr. SPEAKER:** Is any hon. Member anxious to speak now? (After a pause.) As no hon. Member is anxious to take part in the discussion just now, I adjourn the House till 9 a.m. tomorrow.

The House then adjourned.

## V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A.—STATUTORY ORDERS, RULES AND NOTIFICATIONS.

80. *Notification issued with G.O. Ms. No. 3448, Home, dated 10th December 1958 amending rule 337 of the Madras Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939.]*

81. *Notification issued with G.O. No. 44, Local Administration, dated 9th January 1959, extending the terms of office of the Members of the Ambasamudram Panchayat, Tirunelveli District, under section 10 (1) of the Madras Village Panchayats Act, 1950. [Laid on the table of the House under section 113 (4) of the Madras Village Panchayats Act, 1950 (Madras Act X of 1950.]*

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Wednesday, the 11th February 1959.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS

*Beedi industry*

* *S.N.Q.* 1.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government are aware of the crisis facing the beedi industry in the State due to import restrictions in Ceylon;

(*b*) whether any representation has been made by the Government to the Union Government for taking up the question with the Government of Ceylon; and

(*c*) what steps have been taken to give relief to beedi industry?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) Yes, Sir.

(*c*) The Government of India were requested to take steps to restore the normal import quota of beedies from India to Ceylon. They have informed the State Government that they will do their utmost to see that the restrictions imposed by Ceylon are relaxed, if not fully removed.

SRI M. KALYANASUNDARAM : சிலோன் கவர்ன்மெண்ட் இந்த பீடி இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதற்கு என்ன காரணம்? இது சம்பந்தமாக நம்முடைய மத்திய சர்க்கார் சிலோன் சர்க்காரோடு செய்துகொண்ட ஒப்பந்த சமயத்தில் நம்முடைய ராஜ்யசர்க்காரினுடைய அபிப்பிராயத்தை கேட்டார்களா?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்பொழுது சிலோன் கவர்ன்மெண்ட் பீடி இறக்குமதியைக் குறைத்துக்கொண்டிருப்பது இந்தியா சிலோன் ஒப்பந்தப்படி. ஒப்பந்தம் செய்துகொண்டபோது நம்மைக் கலந்தார்களா என்பதற்கு என்னிடத்தில் தற்போது தகவல் இல்லை. தனியாக கேள்வி போட்டால், பதில் சொல்லலாம்.

SRI S. LAZAR : இந்தத் தடை ஏற்பட்ட காரணத்தால் எந்த அளவுக்கு நாம் பாதிக்கப்பட்டிருக்கிறோம் என்று மதிப்பிட முடியுமா?

THE HON. SRI R. VENKATARAMAN : 45 சத விகித பீடிகள் இப்பொழுது சிலோனுக்கு அனுப்ப முடியாமலிருக்கிறது.

**SRI S. M. ANNAMALAI**: இந்த பீடி இறக்குமதித் தடையின் காரணமாக எத்தனை தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா ?

**THE HON. SRI R. VENKATARAMAN**: பீடி ஏற்றுமதித் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களிலே சுமார் பாதிப் பேர் பாதிக்கப்பட்டிருப்பார்கள் என்று சொல்லலாம் 45 சத விகிதம் ஏற்றுமதி தடைபட்டிருப்பதால்.

**SRI T. T. DANIEL**: Sir, may I know whether any measures have been taken by Government so as to render relief to the workers who have been thrown out of employment? Is it a fact that because the Central Government put some restrictions on the import of tobacco from Ceylon to India, the Ceylon Government have put restrictions on the import of beedis?

**THE HON. SRI R. VENKATARAMAN**: Sir, I wish to state in detail the position. By an agreement between India and Ceylon, the import of raw tobacco into this country was restricted. Actually in March 1958, dealers in tobacco in this State came and represented to me that even this import of tobacco which was permitted under the Indo-Ceylon agreement, namely, 1,500 candis of chewing tobacco, should be further restricted. I wrote to the Government of India at that time, and I was told that because of the Indo-Ceylon agreement, it was not possible to further restrict the import of chewing tobacco into this country. Now, as part of that agreement, the export of beedis from India to Ceylon is to be progressively reduced. For the year 1957–58, 20 lakhs of pounds were to be allowed. For 1958–59, 16 lakhs, 1959–60, 12·8 lakhs, 1960–61, 10·24 lakhs. In pursuance of this agreement, the Ceylon Government have progressively reduced the import of beedis into their State. The Government of India have now represented to the Ceylon Government that this restriction may be relaxed, because Ceylon is not really producing all the beedis that it wants.

**SRI M. KALYANASUNDARAM**: இம்மாதிரி தமிழ் நாட்டுப் பீடித் தொழிலைப் பாதிக்கக்கூடிய ஒரு ஒப்பந்தம் நடந்துகொண்டிருக்கிறது சர்க்காருக்கு ஒரு வருஷத்திற்கு முன்னதாக தெரிந்தாலும், ஏன் உடனே நடவடிக்கை எடுக்கவில்லை ? அதற்கான காரணங்கள் என்ன என்று சொல்ல முடியுமா ?

**THE HON. SRI R. VENKATARAMAN**: ஒரு தேசத்திற்கும் மற்றொரு தேசத்திற்கும் செய்து கொள்ளுகிற ஒப்பந்தம் மத்திய சர்க்காரைப் பொறுத்தது. அதுவும், நமக்கு புகையிலை இறக்குமதியைத் தடை செய்ய வேண்டுமென்ற ஒரு நிலைமை இருந்ததினால் நாம் சிலவற்றைத் தடை செய்தோம்; அவர்கள் அதற்கு எதிரிடையாக சிலவற்றைக் குறைத்துக் கொண்டார்கள்.

**SRI M. S. SELVARAJAN**: இயல்பாகவே புகையிலை உபயோகிப்பது அநாகரீகம் என்று கருதி நமது ராஜ்யத்தில் பெரும்பாலோர் புகையிலை உபயோகிக்கப்பதை விட்டுவிட்டாலும், பெரும்பாலும் புகையிலை உபயோகிப்போர் கேரளப் பிரதேசத்தார் என்பதையும் மனதிற்கொண்டு, யாழ்ப்பாணப் புகையிலை வருவதை அனுமதித்தாலும்கூட, இங்கிருந்து பீடி அங்கு போவதற்குத் தடை இல்லை என்று இலங்கை அரசாங்கம் ஒருதுமானால், அந்த அளவுக்கு இப்பொழுது ஒப்பந்தத்தை ரத்து செய்தால்கூட பாதகம் இல்லை என்பதைக் கருதி நம்முடைய அரசாங்கம் மத்திய சர்க்காருக்கு ஆலோசனை கொடுக்குமா ?



**THE HON. SRI R. VENKATARAMAN**: Sir, these are all questions which affect other States. I do not think that we, at any rate, can do anything about this. We have made representation to the Government of India, and they have taken it with the Ceylon Government.

**MR. SPEAKER**: I also would like to add that in putting supplementary questions which affect other States hon. Members must know the limitations. Hon. Members must be careful to limit questions to the handicaps and difficulties of the Government without making any reference to whatever action the foreign Governments may take. So, when hon. Members put questions, they should remember this limitation.

**SRI M. JAGANNATHAN**: Sir, is there not any other country in the world besides Ceylon which might consume this 45 per cent of our beedis?

**THE HON. SRI R. VENKATARAMAN**: Sir, I am thankful to the hon. Member for putting this question. There seems to be an impression in the public mind here that finding markets is the duty of the Government. In fact the trade ought to find markets. They should send people outside. There are traditional markets like Malaya, Indonesia, and other countries. They should try to expand the market. On the other hand, the moment there is some fall in export, they all complain to the Government and say that there are no markets for them. In all the countries of the world, markets are developed by the trade and not by Governments.

## *National Development works*

* 201 *Q*.—**SRI P. G. MANICKAM**: கனம் முதலமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

தேசிய வட்டார அபிவிருத்தி வேலைகளைத் துரிதப்படுத்துவதற்காக சென்னை ராஜ்ஜியத்திலே நியமிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு டிப்டி கமிஷனர்களின் மேற்பார்வையின் கீழ் எத்தனை தேசிய வட்டார அபிவிருத்தி பிளாக்குகள் இருக்கின்றன ?

**THE HON. SRI C. SUBRAMANIAM**: The number of Blocks under each of the Deputy Development Commissioners is detailed below :—

1. Deputy Development Commissioner, Madras—42 Blocks.
2. Deputy Development Commissioner, Tiruchirappalli—35 Blocks.
3. Deputy Development Commissioner, Madurai—57 Blocks.
4. Deputy Development Commissioner, Coimbatore—39 Blocks.

**SRI V. K. RAMASWAMY MUDALIYAR**: Sir, may I know the functions of these Deputy Development Commissioners and whether they periodically visit all these places? What exactly is the work of these people?

**THE HON. SRI C. SUBRAMANIAM**: Sir, the overall supervision of the work that is going on in the various blocks is done by them. I may inform the hon. the Leader of the Opposition

that I am told that the tempo of the work has considerably increased after the appointment of the Deputy Development Commissioners.

Sri P. G. MANICKAM: ஒவ்வொரு டெபுடி டெவலப்மெண்ட் கமிஷனருக்கும் சில ஜில்லாக்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆனால், தற்போது ஜில்லாக்களுடைய நிர்வாகம் ஜில்லாக் கலெக்டர்கள் மூலமாக நடை பெற்றுக்கொண்டு வருகிறது. இனிமேல் ஜில்லாக் கலெக்டர் மூலமாக நிர்வாகம் நடைபெறுமா? அல்லது, டெபுடி டெவலப்மெண்ட் கமிஷனர் மேற்பார்வையின் கீழ் ஜில்லாக்கள் தோறும் ஸ்பெஷல் ஆபீசர்கள் நியமிக்கப்படுவார்களா?

The Hon. Sri C. SUBRAMANIAM: ஜில்லாக் கலெக்டர்களுக்கு இப்பொழுது இருக்கும் வேலையையும் வைத்துக்கொண்டு, ப்ளாக்கிலே நடக்கும் வேலைகளையும் மேற்பார்வை பார்ப்பது என்பது மிகக் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, சர்க்காருக்கு உதவியாக இருக்கும் முறையிலே தான் இந்த டெபுடி டெவலப்மெண்ட் கமிஷனர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களே தவிர, கலெக்டருடைய பொறுப்பு இப்பொழுதும் கலெக்டரிடம்தான் இருக்கிறது.

Sri M. JAGANNATHAN: Sir, in view of the fact that though the tempo of the work has actually increased, the real work as such and the quantity of tht work as such in most of these places have not been increased, so far as my knowledge goes, will the Government consider the desirability of reducing the number of blocks placed under each of these Deputy Development Commissioners so that they may do effective supervision all right?

The Hon. Sri C. SUBRAMANIAM: I am only afraid that the knowledge of the hon. Member is rather poor. I would request the hon. Member to contact the committee which has been appointed, consisting of the Members of this House and the Council. They have visited the various blocks. If a reference is made to that committee, he will be able to get some useful information. I may inform him that even though there is still scope for improvement, we need not be dissatisfied with the work which is going on now.

Sri T. R. RAMAMIRTHA THONDAMAN: ப்ளாக் அட்வைசரி கூட்டங்கள், புனாஷிங் போர்டு கூட்டங்கள், மற்ற எல்லா கூட்டங்களிலும் எல்லா அதிகாரிகளும் கலந்து கொள்ளும்போது இந்து மத பரிபாலன டிபுடி கமிஷனர் அவர்களும் கலந்து கொண்டால் பல விஷயங்களை சர்ச்சை செய்வதற்கு வசதியாக இருக்கும். ஆகவே அவர்களும் கலந்து கொள்ளுவதற்கு சர்க்கார் ஏதாவது உத்தரவு இடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM: இந்தக் கூட்டங்களில் மத விஷயமாக சர்ச்சைகள் நடைபெறுகின்றனவா என்பதை அறிவதற்கு நான் அந்தக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கு இது வரையிலும் எனக்கு எந்த விதமான வாய்ப்பும் கிடைக்கவில்லை. ஆகவே மத விஷயமாக அங்கே சர்ச்சை செய்யப்படுகிறதா என்று எனக்குத் தெரியாது.

*Seed Potatoes*

* 202 Q.—Sri K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Home be pleased to state the steps, the Agriculture Department has taken to supply good quality "Seed Potatoes" to potato growers?



The Hon. Sri M. BHAKTAVATSALAM: The answer is placed on the table of the House.

Sri K. SATTANATHA KARAYALAR: ஐந்து மாதங்களுக்கு முன்னதாக இதே போன்ற ஒரு கேள்விக்கு பதில் அளிக்கும்போதும் உருளைக் கிழங்குகளை அந்நிய நாடுகளிலிருந்து தருவிக்க வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று இதே போன்ற பதில் தான் கொடுக்கப்பட்டுள்ளது. அதே பதில் தான் இப்பொழுதும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனால் இதற்கு இவ்வளவு காலதாமதம் ஏன் என்பதை அறிவிக்க முடியுமா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: அந்நிய நாட்டு செலாவணிதான் இதற்கு முக்கிய இடையூறாக இருக்கிறது. அதை சமாளித்துவிட்டு அதன் பிறகு அந்நிய நாட்டிலிருந்து விதைகளை வரவழைக்கவேண்டிய கவனம் செலுத்தப்பட்டுவருகிறது.

Sri K. SATTANATHA KARAYALAR: அந்நிய நாட்டு செலாவணியினால் இதற்கு காலதாமதம் ஏற்படுகிறது என்று சொல்லுகிறபடியால் இதை வரவழைப்பதற்கு முதல் இடம் கொடுக்க ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா? அதற்கு எவ்வளவு காலமாகும் என்பதையும் சொல்ல முடியுமா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: இதற்கு போதிய இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. வற்புறுத்தப்பட்டும் இருக்கிறது. சீக்கிரமும் இதைப் பெறலாம் என்ற நம்பிக்கையுடன் இந்த அரசாங்கம் இருக்கிறது.

Sri J. MATHA GOWDER: இப்பொழுது அதிகப்படியாக எட்டு விதைப் பண்ணைகள் ஆரம்பிக்கப்போவதாகச் சொல்லப்படுகிறது. அப்படி எப்பொழுது ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM: இதைப் பற்றி பூர்வாங்க பரிசீலனை நடத்தப்பட்டு வருகிறது. இது முடிந்ததும் அது எடுத்துக் கொள்ளப்படும்.

*Baby food*

* 203 Q.—Sri K. SATTANATHA KARAYALAR:
Sri N. K. PALANISAMI:
Sri A. A. RASHEED:
} Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the Government are aware that Ovaltine, Horlicks, and other Baby Foods are not available in the market at control rates; and

(b) if so, what steps have been taken in the matter?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (a) No, Sir.

(b) Does not arise.

Sri A. A. RASHEED: In view of the shortage of milk foods and baby foods, have the Government recommended to the Union Government an increased import of these foods?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: No, Sir. Government have not made any such approach.

* Printed as Appendix I on page 146 infra.

[11th February 1959

SRI K. VINAYAKAM: Are the Government aware that there are very good substitutes for these baby foods, e.g., Alvitone for Ovaltine which is very nourishing and comparatively cheaper? What steps have been taken to encourage such indigenous products?

MR. SPEAKER: The hon. Member will be well-advised not to mention the names of particular products. He can make reference in a general way and not mention anything with a view to boosting particular products.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: This question has answered the previous question of the other hon. Member.

SRI S. LAZAR: இப்படிப்பட்ட உணவுப் பொருள்களை நமது மாகாணத்தில் உற்பத்தி செய்யும் நோக்கம் ஏதாவது அரசாங்கத்திர்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இங்கேயே இப்படிப்பட்ட உணவு பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டுமென்ற நோக்கம் அரசாங்கத்திற்கு இருக்கிறது. அதைப் பற்றி பரிசீலனையும் செய்யப்பட்டு வருகிறது.

SRI N. K. PALANISAMI: ஏற்கெனவே உள்ள விலைக்கு அதிகப்படியாக 25 சத விகிதம் அதிக லாபம் வைத்து விற்கலாம் என்று சர்க்கார் உத்தரவு போட்டும் அதன்படி இது வரையிலும் இந்தக் குழந்தைகளுடைய உணவு பொருள்கள் சாதாரணமாகக் கிடைப்பதாக இல்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அப்படி இல்லை. அரசாங்கத்தினிடம் இருக்கும் தகவலின்படி அவ்விதம் விற்க வேண்டும் என்று உத்தரவு போட்டு அப்படி விற்கிறவர்களுக்குத்தான் லைசென்சு கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டது. இதைப் பற்றி கலெக்டர் அவ்வப்போது அங்கங்கே மேற்பார்வை பார்க்க வேண்டும். அவ்வப்போது இதைப்பற்றி பரிசீலனை செய்ய வேண்டும், அப்படி விற்காவிட்டால் லைசென்சு ரத்து செய்யப்பட வேண்டும் என்று ஒப்பந்தம் செய்து கொண்டதன் பேரில் அப்படியே விற்று வருகிறார்கள். அதன் பிறகு விலை குறைந்து தான் இருக்கிறது.

SRI J. MATHA GOWDER: குழந்தைகளின் உணவு பொருள்களில் ஒன்றாகிய கொக்கோ நீலகிரி மலையில் நல்ல விதமாக பயிராகிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அதனால் அங்கே குழந்தைகளின் உணவு பொருள்களை உற்பத்தி செய்யவும் இதை அதிகமாக பயிரிடவும் அரசாங்கம் முன் வருமா?

MR. SPEAKER: இந்தக் கேள்வி மூல கேள்விக்கு சம்பந்தப்பட்டது இல்லை. அடுத்த கேள்வி.

*Railway Line to Dhanushkodi via Aranthangi—Karaikudi.*

*204 *Q.*—SRI A. VEDARATHNAM: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

அரந்தாங்கி-காரைக்குடி மார்க்கமாக தனுஷ்கோடிக்கு ரயில் போக்குவரத்து விரைவில் ஏற்படுத்த திட்டம் ஏதேனும் இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பியுள்ளதா?

THE HON. SRI M BHAKTAVATSALAM: No, Sir.

SRI A. VEDARATHNAM: முஸ்லீம் யாத்ரா ஸ்தலமும், கிறிஸ்தவ யாத்ரா ஸ்தலமுமாகிய வேளாங்கன்னியும், இன்னும் ஏராளமான ஹிந்து யாத்ரா ஸ்தலங்களும் தஞ்சை ஜில்லாப்பகுதிகளில் இருக்கின்றன என்ற காரணத்தாலும், அங்கே மாதந்தோறும் திருவிழாக்கள் நடைபெறுவ



11th February 1959]

தாலும், ரயில் நிலையங்களில் தாங்க முடியாத கூட்டம் இருக்கின்றன. அதனால் இங்கிருந்து நேர் முகமாக தனுஷ்கோடிக்கு போக இந்த மார்க்கம் ரொம்பவும் சமீபமாய் குறுக்கே இருக்கிறது. அதனால் ரொம்ப மைல்களும் குறைவாக ஆகிறது. அதனால் இந்த லைனில் காரைக்குடி வரையில் பல நேர் வண்டிகளை விடுவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER: கனம் அங்கத்தினர் கேள்வி நேரத்தில் கேள்வி கேட்க வேண்டுமேயொழிய அபிப்பிராயத்தை தெரிவிக்கக்கூடாது. இருந்தாலும் கனம் மந்திரி அவர்கள் பதில் சொல்வதாக இருந்தால் பதில் சொல்லலாம்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் அங்கத்தினர் குறிப்பிட்டபடியே மெயில் லையனில் திருச்சி வரையில் நேர் மார்க்கம் இருக்கிறது. அது வரையில் போட் மெயில் போகிறது. அதை அரந்தாங்கி வரையில் நீடிக்கவேண்டுமென்றால் நடுவில் இருக்கக்கூடியவர்களாகிய திருச்சியிலுள்ளவர்கள், மாயவரம் பகுதிகளில் உள்ளவர்கள் பாதிக்கப்படுவார்கள். இந்த மார்க்கத்தில் இரண்டு வேகமாகப் போகும் ரயில்கள் இருக்கின்றன. அதனால் அதிகப்படியாக விடுவதற்கு முடியாமல் இருக்கிறது. இது தான் நிலைமை.

*Use of fire-arms by the Police*

* 205 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Home be pleased to state whether the Government intend to revise the Police Code with regard to the use of fire-arms by the Police?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No, Sir.

SRI A. A. RASHEED: May I know whether the Police Code allows shooting to kill or to disperse unruly crowds?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I am unable to answer the question.

SRI K. SATTANATHA KARAYALAR: போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதைப்பற்றி மத்திய சர்க்கார் சமீபத்தில் எல்லா சமஸ்தானங்களும் ஒன்றுபட்டு ஒரு சட்டம் நிறைவேற்ற வேண்டுமென்று ஏதாவது எழுதி உள்ளார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அதைப் பற்றி எந்த விதமான தகவலும் கொடுப்பதற்கு இல்லை.

*Religious education*

* 206 *Q.*—SRI S. LAZAR: Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is a proposal to have religious education as an integral part of the educational system?

THE HON. SRI C. SUBRAMANIAM: No, Sir.

SRI S. LAZAR: இதனுடைய தேவையைப் பற்றி நாட்டிலுள்ள பெரும் தலைவர்கள் ஸர். ராதாகிருஷ்ணன், மகாத்மாகாந்தி போன்றவர்கள் வற்புறுத்தியதன் காரணத்தால் இதைப்பற்றி பரிசீலனை செய்வதற்கு ஒரு தனி குழுவை நியமிக்க அரசாங்கம் முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: இதில் கவனிக்கப்பட வேண்டிய விஷயம் மத போதனை என்று சொல்லலாம். இதைப் பற்றி பேசும் போது பல பிரச்னைகள் வருகிறது. அதை விட்டு விட்டு எல்லோருக்கும்

பொதுவாக இருக்கக்கூடிய நல்ல விஷயங்களை மாணவர்களுக்கு எடுத்துச் சொல்வதற்கு மதம் அடிப்படை இல்லை. பொதுவாக இருக்கும் சில உண்மைகளை மாணவர்களுக்குத் தெரிவிக்கும்படியான யோசனையைச் செய்யலாம்.

**SRI S. NAGARAJA MONIGAR :** மத விஷயமான பாடங்களை பள்ளிகளில் போதிக்க சர்க்கார் ஏற்பாடு செய்ய முடியாவிட்டாலும் மதத்திற்கு எதிராக நடக்கும் பிரசாரங்கள், போதனைகளைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**MR. SPEAKER :** இந்தக் கேள்விக்கும் மூல கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. அதனால் வேறு கேள்வி போட வேண்டும்.

*Guineaworm disease*

* 207 Q.—**SRI K. SATTANATHA KARAYALAR :** Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) the places where Guineaworm disease is prevalent; and

(b) the steps taken to eradicate this disease?

**THE HON. SRI M. A. MANICKAVELU :** (a) & (b) A paper* is placed on the table of the House.

**SRI K. SATTANATHA KARAYALAR :** இதற்கு மத்திய சர்க்காரிடமிருந்து கழிந்த ஆண்டு நமக்குக் கொடுக்கப்பட்டிருந்த உதவிப் பணம் முழுவதும் உபயோகப்படுத்தப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**THE HON. SRI M. A. MANICKAVELU :** I am not aware of any such help.

**SRI M. K. SOMASUNDARAM :** இம்மாதிரியான வியாதி திருநெல்வேலி பகுதிகளில் இருக்கிறது. அந்த வியாதியைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**THE HON. SRI M. A. MANICKAVELU :** திருநெல்வேலி ஜில்லாவில் இல்லை. ஏதோ எங்கேயோ ஒரு பகுதியில் ஒன்றிரண்டு இடங்களில் இருக்கிறது. புள்ளி விவரங்கள் கொடுக்கும்படியான அளவில் அங்கே இல்லை.

**SRI S. RAMALINGA PADAYACHI :** இம்மாதிரியான வியாதி வருவதற்கு குடி தண்ணீர்தான் காரணமாக இருக்கிறது. குட்டை குளங்களில் தண்ணீர் குடிப்பதினால் நல்ல குடி தண்ணீர் இல்லாத காரணத்தால் இது வருகிறது. இதைப்பற்றி பரிசீலனை செய்து இதைச் தேசியப் பிரச்சினையாகக்கருதி பார்த்தால் தெரியும். ஆகவே பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் அமைக்கும் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**THE HON. SRI M. A. MANICKAVELU :** இந்த நோயை தீர்த்துகட்ட வேண்டும் என்பதற்காகத்தான் ஒரு திட்டம் போட்டு சுமார் இரண்டு அல்லது மூன்று லட்சம் ரூபாய் செலவு செய்து இந்த நோய் இப்பொழுது இருக்கும் இடங்களிலிருந்து குறைக்க வேண்டும் என்பதற்காக அதைப் பற்றி பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

**SRI M. K. SOMASUNDARAM :** திருநெல்வேலி ஜில்லாவுடன் மற்றும் எவ்வளவோ இடங்களில் இந்த வியாதி அதிகமாக இருந்து கொண்டு இருக்கிறது. இது வராமல் தடுக்க அரசாங்கம் என்ன ஏற்பாடு செய்து என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

**MR. SPEAKER :** நீங்கள் சொல்லும் இடங்கள் இந்தக்கேள்வியில் இல்லை. கேள்வி பொதுவாகத்தான் இருக்கிறது.

* Printed as Appendix II on page 147 infra.



**SRI K. R. VISWANATHAN :** இந்த நோயானது தேசிய நீர் வழங்கு திட்டத்தின் (National water-supply and sanitation scheme) கீழ்கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பது உண்மையா? அப்படியானால் அதன்படி நீர் வழங்க என்ன நடவடிக்கை சர்க்காரால் எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது. ஏதாவது நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**THE HON. SRI M. A. MANICKAVELU :** நாஷனல் வாட்டர் சப்ளை ஸ்கீம் கீழ் இருக்கும் என்று நினைக்கிறேன். மாகாணத்தில் ஐந்து ஜில்லாக்களில் இது அமுலில் இருக்கிறது. இந்த நோய் தென்னார்காட்டில் திருச்சியைவிட அதிகமாக இருக்கிறது. நாங்கள் ஏதோ வசதிகளை ஏற்படுத்திக்கொண்டு திட்டம் போட்டு அதை அமுலுக்குக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறோம். அதனால் அதை அமுல் பண்ணியே தீருவோம்.

**SRI A. A. RASHEED :** Sir, from the statement placed on the table of the House, it is seen that North Arcot and South Arcot districts have been much affected. May I know the reasons therefor?

**THE HON. SRI M. A. MANICKAVELU :** That is probably because there, people take water from step-wells and ponds. I have got information that Harijans are not mostly affected and that is because, it is said, they do not take water from ponds and other such places, but only from draw-wells.

*Hostel for Adivasi students*

* 208 Q.—**SRI P. G. MANICKAM :** கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் ஜில்லா, தாளவாடி மலைப்பிரதேசத்தில் தலமலையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஆதிவாசிகளுடைய, மாணவர்கள்—மாணவிகளுடைய ஹாஸ்டலானது எந்தக் கட்டிடத்திலிருக்கிறது?

(ஆ) சர்க்கார் மூலம் ஹாஸ்டல் கட்டிடம் கட்டப்படுவதற்கான பரிசீலனை நடத்தப்பட்டு வருகிறதா?

**THE HON. SRI P. KAKKAN :** (a) The residential school for Scheduled Tribes at Talamalai is housed in the District Board Chatram.

(b) No, Sir.

**SRI P. G. MANICKAM :** சார், ஜில்லா போர்டு சத்திரத்திலே இந்த ஹாஸ்டல் இருப்பதால் அங்கு படிக்கும் மாணவர்களுக்கு அநேக இடைஞ்சல்கள் உண்டாகிக் கொண்டு வருகின்றன. ஆகவே இந்த 1959-ம் வருஷத்திலாவது அங்கு ஒரு ஹாஸ்டல் கட்ட சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

**THE HON. SRI P. KAKKAN :** அந்தச் சத்திரமானது நல்ல கண்டிஷனில் தான் இருக்கிறது. இப்பொழுதுதான் 810 ரூபாய் செலவு செய்து அந்த ஜில்லா போர்டு சத்திரம் பழுது பார்க்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது இருக்கும் நிலைமையில் தனியாக வேறு கட்டிடம் கட்ட உத்தேசம் இல்லை.

*Paper mill at Tirunelveli district*

*209 Q.—Sri K. SATTANATHA KARAYALAR : } Will the
Sri N. K. PALANISAMI :
Hon. the Minister for Industries be pleased to state with reference to question No. 120, answered on the 11th September 1958—

(a) whether the Government have issued licence to any other party to start a paper mill in the Tirunelveli district in the private sector; and

(b) if so, the place and the party to whom the licence has been given?

The Hon. Sri R. VENKATARAMAN : (a) No, Sir.

(b) Does not arise.

Sri K. SATTANATHA KARAYALAR : இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் திருநெல்வேலி ஜில்லாவில் ஒரு பேப்பர் மில்லை பாளையம் அருகிலே ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா?

The Hon. Sri R. VENKATARAMAN : உத்தேசம் உண்டு. லைசென்சும் கொடுக்கப்பட்டது. லைசென்சுதார் எவ்விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளாத காரணத்தினாலே அது ரத்தும் செய்யப்பட்டுவிட்டது.

Sri N. K. PALANISAMI : சர்க்கார் இவ்விஷயத்தில் வேறு யாருக்காவது லைசென்ஸை மாற்றிக் கொடுத்து அவர்களோடு சேர்ந்து நடத்த உத்தேசித்திருக்கிறதா?

The Hon. Sri R. VENKATARAMAN : சேர்ந்து நடத்தும் உத்தேசம் இல்லை. இந்தத் தொழில் தனியார்களுக்கே ஒதுக்கப்பட்டது. தனியார் முன்வந்தால் அவர்களுக்கு எல்லாவிதமான உதவியும் அளிக்கத் தயார்.

Sri V. K. RAMASWAMY MUDALIAR : In view of the abnormal rise in price of papers, will the Government consider the desirability of putting some restriction on paper prices, Sir.

The Hon. Sri R. VENKATARAMAN : I think that is beyond this question.

Srimathi HEMALATHA DEVI : அரிசிபாளையம் மிகவும் பிற்பட்ட பகுதி; தண்ணீர் வசதியும் காடும் இருப்பதினால் பேப்பர் மில்லை அங்கே கொண்டுவர அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

The Hon. Sri R. VENKATARAMAN : தனியார் துறையில் யாராவது நடத்த முன் வந்தால் சர்க்கார் எல்லாவிதமான உதவியும் தரும்.

Sri K. SATTANATHA KARAYALAR : இங்கு எந்த ரகப் பேப்பர் உற்பத்தி செய்ய லைசென்சு வழங்கப்பட்டிருக்கிறது. இந்த இடத்தில் இருந்து திருநெல்வேலி ஜில்லாவுக்கு மாற்றிக் கொடுக்க லைசென்சு கொடுக்கப்படுமா?

The Hon. Sri R. VENKATARAMAN : லைசென்சு மாற்றிக் கொடுக்க முயற்சி செய்து அதுவும் பயன் இல்லை என்று சொல்ல விரும்புகிறேன். பாபநாசம் பேப்பர் மில்ஸ்க்கு முதலில் கொடுத்த லைசென்ஸை மணிமுத்தாறு பேப்பர் மில்ஸ்க்கு மாற்றவேண்டுமென்று சொல்லி, மத்திய சர்க்கார்க்கும் சிபார்சு செய்து அவர்களும் ஒத்துக்கொண்டார்கள். ஆனால் மணிமுத்தாறு பேப்பர் மில்ஸ்காரர்களும் மேல் நடவடிக்கை ஒன்றும் எடுத்துக்கொள்ளாத காரணத்தினால் அந்த லைசென்சு ரத்தாகிவிட்டது.



*Naduvakurichi-Vellalankulam Road*

* 210 Q.—Sri T. VELUCHAMI : கனம் முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

சங்கரன்கோவில் ப்ளாக்கிற்காக 1958-ம் வருஷம் அக்டோபரில் போட்ட வேலைத் திட்ட ஜாபிதாவில் நடுவக்குறிச்சியிலிருந்து வெள்ளாளன் குளத்திற்கு ரோடு போடும் வேலை ஏன் சேர்க்கப்படவில்லை ?

The Hon. Sri C. SUBRAMANIAM : The formation of the road was not included in the list of works selected by the Sankarankoil Block Advisory Committee because the villagers were not prepared to part with the lands required for a part of the road and they were not also prepared to form the earthern road themselves.

*Feeder Road to Kizhvellakkal in Tenkasi taluk*

* 211 Q.—Sri T. VELUCHAMI : கனம் முதலமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) நெல்லை ஜில்லா தென்காசித் தாலுகாவின் கீழ் வெள்ளக்கால் என்ற இடையர் தவனை என்ற கிராமத்திற்கு வீரகேரளம்புதூர்-வெள்ளக்கால் மெயின் ரோட்டிலிருந்து ஒரு (feeder) இணைப்பு ரோடு போடுவதற்கு (Local Development Works Scheme)-ன் கீழ் உத்தேசம் இருந்ததா ?

(ஆ) இந்த வேலை இவ்வாண்டில் செய்யப்படுமா ? செய்யப்படாதென்றால் காரணம் என்ன ?

The Hon. Sri C. SUBRAMANIAM : I. (a) Yes. The formation of feeder road from Idayarthavani to Vellakal-Veerakeralampudur road in Tenkasi was included in the Local Development Works Programme for 1958–59 and was sanctioned for execution on 29th October 1958.

(b) Yes. The work is expected to be completed before 31st March 1959 as the Local Development Works Programme will come to a close on that date.

II. Does not arise.

*Agriculture Department service*

* 212 Q.—Sri K. SATTANATHA KARAYALAR and Sri S. LAZAR : Will the Hon. the Minister for Home be pleased to state whether this Government intend to recommend to the Central Government to upgrade the Agriculture Department service into an All-India service and to give it the rank and scale as that of I.A.S. ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The Agriculture Administration (Nalagarh) Committee, constituted by the Government of India, suggested among other things the creation of an All-India Agricultural Service on a par with the I.A.S. This suggestion, along with other suggestions of the Committee is under consideration of the Government.

I may add that Government have since expressed the view at the recent Conference of State Ministers for Agriculture that the proposal was not acceptable, because Government felt that there are more disadvantages than advantages in this proposal and Governments of other States also have expressed the same view.

[11th February 1959

SRI S. LAZAR: அப்படி இல்லையென்று சொன்னால் திறமைசாலிகளை இந்த இலாகாவிற்கு இழுப்பதற்கான வசதி அல்லது தனிப்பட்ட சலுகைகள் என்ன இருக்கின்றன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: திறமைசாலிகள் அகில இந்திய சர்வீஸ் இருந்தால்தான் வருவார்கள் என்று இல்லை. திறமைசாலிகள் வேண்டுமென்று இந்த அரசாங்கமும் உணருகிறது. அந்த வகையில் என்ன என்ன வசதிகள் அளிக்கவேண்டுமோ அதை அளித்துக் கொண்டும் வருகிறது.

SRI M. JAGANNATHAN: Arising out of the reply given by the Hon. Minister, there are certain obvious disadvantages in the proposal to upgrade the services of the Agricultural Department; may I know what are those disadvantages?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: It is not exactly upgrading the service, Sir. This is converting it into an All-India Service and if it is converted into an All-India Service, the State Government will have to hang on the Central Government.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN: விவசாய சம்பந்தமான பயிற்சிகளில், முக்கியமாக கிராம பஞ்சாயத்து போர்டு தலைவர்களுக்கு சிறிது காலமாவது பயிற்சி அளித்து அதன்மூலம் திறம்பட நடத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அதைப்பற்றி தனியாகக் கேள்விபோட்டால் பதில் சொல்லமுடியும்.

SRI K. VINAYAKAM: What are the supposed advantages which this system involves and what are the obvious objections which our State Government had to convert this into an All-India Service?

THE HON. SRI M. BHAKTAVATSALAM. I have just now mentioned the obvious disadvantages in that this Government could not be free in making selections and other things regarding the service, if it is All-India Service. The obvious advantage, as pointed out by one hon Member, is an All-India service will attract better types of technical officers.

SRI M. KALYANASUNDARAM: அகில இந்திய சர்வீசோடு இணைக்காமல் ராஜ்ய சர்க்காரின் கீழ் வைத்துக்கொண்டு இவர்கள் சம்பள விகிதத்தை உயர்த்தவேண்டுமென்பதாக டைரக்டெர் ஆப் அக்ரிகல்சரிலிருந்து சர்க்காருக்கு சிபார்சு வந்தனவா? அவை பரிசீலிக்கப்பட்டதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இவ்வாறு சிபாரிசு ஒன்றும் வரவில்லை. ஆனால் சம்பள விகிதம் கொஞ்ச காலத்திற்கு முன்பு உயர்த்தப்பட்டது. ராஜ்ய சர்வீசிலேயே வேறு சுப்ரீம்காடர் வைக்கலாமா என்று யோசிக்கப்பட்டிருக்கிறது.

SRI S. LAZAR: அகில இந்திய ரீதியில் அமைக்கப்படவில்லை என்ற போதிலும் ஒரு சில இலாகாவில் மாகாண சர்க்காரிலே வேலை செய்கின்ற உத்தியோகஸ்தர்களுக்காவது மத்திய அரசாங்கம் கொடுப்பது போல் தாராளமாகக் கொடுக்க முன்வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அத்தகைய பிரச்னை எழவில்லை. நான் மற்ற ராஜ்யங்களோடு ஒப்பிட்டுப்பார்த்தேன். ஒன்றும் நம் சம்பளவிகிதம் குறைவாய் இல்லை.



11th February 1959]

*Jaggery societies in Erode taluk*

* 213 Q.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the Presidents of the jaggery societies in Erode taluk are retained in office at the discretion of the officers concerned even though the majority of tappers of the respective societies do not wish those Presidents; and

(b) if so, the reasons thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) No, Sir.

(b) Does not arise.

*Prostitution*

* 214 Q.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Home be pleased to state the number of women arrested for soliciting in the streets for purpose of prostitution (i) in the State and (ii) in the City of Madras in 1957 and 1958?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The number of women arrested for street solicitation in this State was 595 in 1957 and 280 for the first eleven months in 1958 out of which the number of women arrested in the Madras City area was 209 and 71 respectively.

SRI N. K. PALANISAMI: சர்க்கார் போதிய நடவடிக்கை எடுத்தும் சமாளிக்க முடியாமல் இருப்பதற்குக் காரணம் வறுமைதான். ஆகவே பொதுஜன ஸ்தாபனங்களை அணுகி இதைத் தடுப்பதற்குரிய மார்க்கத்தைத் தேடுவார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் அங்கத்தினர் சர்க்கார் இவ்விஷயத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்கக்கூடாது என்று சொல்கிறார்களா? பொது ஸ்தாபனங்களும் இதில் அக்கறை காட்ட வேண்டுமே தவிர நாமும் நடவடிக்கை எடுக்கத்தான் வேண்டும்.

SRI A. A. RASHEED: Sir, may I know how many of these girls were reformed after release?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I do not have that statistics with me just now.

SRI K. VINAYAKAM: Sir, was any reciprocal action taken by the Government against these 'platform princes' who hunt after these 'street queens'? (Laughter.)

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I am unable to understand what exactly the hon. Member means or wants to be done.

*Rattan industry in Sirkali*

* 215 Q.—SRI C. MUTHIAH: கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சீர்காழி வடதொகுதியில் பிரம்புத் தொழிற்சாலை அமைக்க உத்தேசமுண்டா?

(ஆ) அப்படியானால், எப்போது, எங்கே?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) No, Sir.

(b) Does not arise.

*Special Police Establishment cases*

* 216 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether this Government have received any communication from the Centre to appoint whole-time special Judges to dispose of Special Police Establishment cases quickly; and

(b) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir.

(b) This does not arise.

*Birth and death rates*

* 217 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(i) the birth rate; and

(ii) the death rate in the State in 1957 and in 1958?

THE HON. SRI M. A. MANICKAVELU : (i) & (ii) The estimated birth rate for both the years is 26·7 per thousand of population. The death rates are 14·2 in 1957 and 13·0 in 1958.

9-30 a.m. SRI K. SATTANATHA KARAYALAR : பாமிலி ப்ளான் பிரசாரத்தால் இது குறைந்திருக்கிறதென்று சர்க்கார் கருதுகிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : குறைந்து இருக்கிறது டெத் ரேட்டு தான். பாமிலி ப்ளான் பிரசாரத்தால் குறைந்திருக்க வேண்டுமென்றால் பர்த் ரேட் குறையவேண்டும். (சிரிப்பு).

*Fertilizer plant*

* 218 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the President of the U.S. Export-Import Bank, has offered any financial help for setting up a fertilizer plant in the private sector in the State; and

(b) if so, whether any private enterprise, has come forward for setting up a fertilizer plant?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) There is no information with this Government, Sir.

(b) Does not arise.

SRI K. SATTANATHA KARAYALAR : எக்ஸ்போர்ட் இம்போர்ட் பாங்க் பிரிசிடெண்ட் இங்கே வந்திருந்தபோது தனியார் துறையில் பர்டிலைசர் ஸ்தாபனம் ஏற்படுத்தப்பட்டால் யு.எஸ். சர்க்கார் கடன் உதவி அளிக்கும் என்று சொன்னதாகப் பத்திரிகையில் வந்திருந்தது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அது சம்பந்தமாக சர்க்கார் என்ன மேல் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் ?

THE HON. SRI R. VENKATARAMAN : எக்ஸ்போர்ட் இம்போர்ட் பாங்கின் கடன் உதவி இந்திய சர்க்காரின் மூலமாகத்தான் அளிக்கப்படுகிறது. பிரிசிடென்டாக இருந்தாலும்கூட அவராக தனியார் துறை தொழிற்சாலைக்கும், இண்டஸ்டிரிக்கும் கடன் கொடுக்க முடியாது.





தனியார் துறைக்கு அனுமதி கொடுக்க முடியும் என்று சொல்லியிருக்கக் கூடும். அடுத்தபடியாக தனியார் துறையில் இருந்து யாராவது முன் வந்து இண்டஸ்டிரி ஆக்ட் பிரகாரம் அப்ளிகேஷன் போட்டால் அது பரிசீலனை செய்யப்படும்.

*Census of livestock*

* 219 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether census of livestock has been taken in 1956;

(b) if so, the number of horses, cows, oxen, goats and sheep; and

(c) the steps taken by the Government for their improvement?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir.

(b) The population of cattle according to the 1956 census is as follows :—

| | |
|---|---|
| Horses and ponies ... ... ... | 23,942 |
| Cows ... ... ... ... ... | 3,255,157 |
| Cattle (including cows, breeding bulls, young stock) ... ... ... ... ... | 9,698,251 |
| Goats ... ... ... ... ... | 3,757,582 |
| Sheep ... ... ... ... ... | 7,041,616 |

(c) Several schemes with the object of improving and upgrading the cattle of this State have been undertaken by the Animal Husbandry Department, such as the Malestock Distribution Scheme, Artificial Insemination Scheme, Key Village Scheme, Goshala Development Scheme, Kangayam Cattle Improvement Scheme, Cross Breeding Scheme, etc.

SRI N. K. PALANISAMI : ஆஸ்டிரேலியாவுக்கு அடுத்தபடியாக நம் தேசத்தில்தான் அதிகப்படியான கால்நடை இருக்கிறது. இப்போது அதன் எண்ணிக்கை குறைந்துகொண்டு வருவதற்குக் காரணம் அவற்றுக்குப் போதுமான தீவனம் இல்லாததுதான். ஆகவே தீவனத்தை அதிகப்படுத்த நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தீவனத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் கால்நடையில் வெறும் எண்ணிக்கை பிரயோஜனம் இல்லை. அவற்றின் தரத்தை உயர்த்த வேண்டும்.

*Discharged prisoners*

* 220 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the number of prisoners discharged in 1956, 1957 and 1958;

(b) of the above the number re-convicted; and

(c) the steps taken to rehabilitate the discharged prisoners?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) 60,931 in 1956, 62,452 in 1957 and 63,057 in 1958.

(b) 515 in 1956, 406 in 1957 and 161 in 1958.

(c) (1) The Central and Local Discharged Prisoners' Aid Societies try to rehabilitate the discharged prisoners;

(2) The Probation Officers besides being predischarge and orientation work try to help the ex-convicts in securing employment.

(3) The Government have established After-care Homes for prisoners discharged from Correctional Institutions, in which industrial and vocational training is given to the inmates to help their rehabilitation.

SRI K. SATTANATHA KARAYALAR : மீண்டும் தண்டிக்கப்பட்டவர்கள் எந்த ஜில்லாக்களில் மிக அதிகமாக இருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றிய தகவல் என்னிடம் இப்போது இல்லை.

*Tractor Hiring Scheme*

* 221 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state whether the Tractor Hiring Scheme is conducted on commercial basis or on " no profit no loss " basis?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Tractor Hiring Scheme is intended to be worked on a no loss no profit basis :

*Tractors*

* 231 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the number of tractors that are sold by the Agriculture Department under the Hire Purchase System; and

(b) the number of tractors that are available district war under the Tractor Hiring Scheme?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) The answer[a] is placed on the table of the House.

* 240-A Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the number of tractors with the Agriculture department in 1958;

(b) the number amongst them that are in working condition;

(c) the hiring charges levied for the working of the tractors per hour;

(d) whether any additional tractors were purchased in 1957; and

(e) if so their number?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) to (e) The answer[b] is placed on the table of the House.

---

[a] Printed as Appendix III on page 148 infra.
[b] Printed as Appendix IV on pages 148 infra.





SRI K. SATTANATHA KARAYALAR : லாப நஷ்டம் இல்லாத தன்மையில் நடத்தப்படுவதாகச் சொல்லப்படுகிறது. கணக்குப் பார்க்கும் போது லாபத்தில் நடந்திருக்கிறதா ? நஷ்டத்தில் நடந்திருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : லாபத்தில் இல்லை. ஆனால் நஷ்டம்தான் ஏற்படுகிறது.

SRI A. A. RASHEED : Is it a fact that a number of tractors are under repair and become unusable every month? If so, will the Government consider the desirability of purchasing new tractors to replace the unserviceable ones?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have indicated in my answer that out of the 142 tractors or so, only 75 are in working condition. The Government have no proposal to renew them by purchasing new tractors.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : சேலம் ஜில்லாவில் இருக்கக் கூடிய டிராக்டர்களுக்கு சில சாமான்கள் இல்லையென்ற காரணத்தினால் 6 மாதம், 8 மாதமாக அவைகளை உபயோகப்படுத்த முடியாமல் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இதற்கான உத்தியோகஸ்தர்கள் சம்பளம் என்ன ? போக்குவரத்துச் செலவென்ன ? இவ்வளவு வீண் விரயம் ஆவதால் உடனடியாக அவற்றுக்குப் போதுமான சாமான்களைப் போட்டு உபயோகத்திற்கு அனுப்புவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஸ்பேயர் பார்ட்ஸ் கிடைப்பது கஷ்டமாகத்தான் இருக்கிறது. அடிக்கடி பழுது பார்க்கவேண்டியதாகவும் இருக்கிறது. ஆகவே இவைகளை அரசாங்கமே வைத்துக் கொள்ளாது கூட்டுறவு சங்கங்களின் மூலமாகக் கொடுப்பது பற்றி பரிசீலனை செய்யப்படுகிறது.

SRI N. MARUDACHALAM : டிராக்டர்களை விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கு முன் பணம் கட்டவேண்டும் என்கிறார்கள். முன் பணம் கட்டாமல் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : வாடகைக்கு கொடுப்பதனால் முன் பணம் கட்டவேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறது.

SRI S. RAMAKRISHNA THEVAR : புயலால் பாதிக்கப்பட்ட ராமநாதபுரம், திருவாடனைத் தாலூகாவில் உள்ளவர்கள் டிராக்டர் வேண்டுமென்று கேட்டு பதினான்கு மாதங்கள் ஆகியும் இன்னும் அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. இதுபற்றி அந்த இரண்டு தாலூகாக்களில் இருந்து புகார் வந்திருக்கிறதா ? அதற்கு சர்க்கார் உடனடியாக அவர்களுக்கு டிராக்டர் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கைவசம் இருக்கிற டிராக்டர்களை அவசியமாக அவசரமாக வேண்டிய இடங்களுக்கு கொடுக்க வேண்டுமென்பதுதான் ஏற்பாடு.

SRI V. SUBBIAH : 1958–59-ம் வருஷத்தில் டிராக்டர் வேண்டுமென்று அட்வான்ஸ் பணம் கட்டியிருந்தும்கூட காலாகாலத்தில் கொடுக்க முடியாமல் இருப்பதனால் புதிய டிராக்டர்களை லோன் ஆகவோ, வேறு எந்த முறையிலாவது வழங்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவ்வாறும் செய்யப்பட்டு வருகிறது.

SRI K. B. S. MANI : டிராக்டர்களின் உதவி நம் நாட்டுக்கு இப்போது அதிகம் தேவையாக இருப்பதனால் பட்டாளங்களில் உள்ள டிராக்டர்களை தருவித்து உபயோகித்துக்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

[11th February 1959

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : அவசர நிமித்தமாக, விபத்து நிமித்தமாகத்தான் கேட்கலாமே தவிர சாதாரணமாகக் கேட்பது சரியல்ல.

**SRI K. SATTANATHA KARAYALAR** : டிராக்டர் Hire purchase scheme அமுலில் இருக்கிறதா ? அதற்கு என்ன நிபந்தனை ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : எவ்வளவு பணம் கட்டப்படுகிறதோ அதற்கு ஏற்ப அந்த ஸ்கீமும் இருக்கிறது. அதற்கான நிபந்தனை தெரியவேண்டுமென்றால் தனிக் கேள்வி கேட்டால் சொல்லப் படும்.

*Public meetings*

* 222 Q.—SRI A. GOVINDASAMY : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the D.M.K. Secretary, Kumbakonam, applied for permission to conduct a public meeting on 29th June 1958 at the maidan opposite to Chakrapani Sannadhi street; and

(b) the reasons for not granting permission to hold a public meeting there?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) " No ", Sir.

(b) Does not arise.

**SRI M. SELVARAJ** : மற்ற கட்சியார்களுக்கும் கூட்டம் நடத்த அனுமதிக்கப்படுகிறதா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : கூட்டம் நடத்த இதில் லைசென்சு கேட்கவில்லை. கூட்டத்தைக் கூட்ட ஒலிபெருக்கிக் கேட்கப்பட்டது. அதுவும் லாரியில் ஒலிபெருக்கி வைத்துப் பிரசாரம் செய்யவும் கேட்கப் பட்டது. இது நகரம். அதனால் அனுமதி மறுக்கப்பட்டது.

SRI S. M. ANNAMALAI : மற்ற கட்சிக்காரர்களுக்கு மாத்திரம் கூட்டங்கள் நடத்துவதற்கு அதுவும் ஒலிபெருக்கி வைத்து நடத்துவதற்கு அனுமதி கொடுக்கப்பட்டதா ? தி.மு.க.-வினருக்கு மட்டும் அனுமதிக்காதது காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஒலிபெருக்கி வைத்து கூட்டம் நடத்துவதற்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். லாரிகளில் ஒலி பெருக்கிகளை வைத்து தெருக்களில் கூட்டம் நடத்துவது பற்றி அறிவிப்பது போன்றவைகளுக்குக் கொடுத்தார்களா என்னும் தகவல் என்னிடத்தில் இல்லை.

***Fire accident in Tindivanam Town***

9-40 a.m. * 223 Q.—SRI M. SELVARAJ (on behalf of SRI A. Govindasamy) : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப் பாரா—

(அ) 1958-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் தென்னார்காடு மாவட்டம் திண்டிவனம் டவுனில் மொத்தம் எத்தனை தீ விபத்துகள் ஏற்பட்டன ?

(ஆ) அவை சம்பந்தமாய் அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Only one on 6—8—1958.

(b) The Mobile Tank Unit temporarily stationed at the Municipal Office, Tindivanam, from 31—7—1958 to 29—8—1958 attended to this fire and extinguished it in an hour.



11th February 1959]

SRI M. JAGANNATHAN : May I know why the Government are extremely unwilling or reluctant to open a fire station at Tindivanam in order to cater to the needs of the municipal town in view of the fact that that particular place is subjected to frequent outbreaks of fire?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : It is only a question of finance and priority.

*Women political prisoners*

* 224 Q.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state the number of women political prisoners?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There are no women political prisoners in the Jails of this State.

*Begger Home Avadi*

* 225 Q.—SRI N. MARUDACHALAM (on behalf of SRI V. K. Kothandaraman) : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) ஆவடியிலுள்ள பிச்சைக்கார விடுதியில் எத்தனை பேர் உள்ளனர் ?

(ஆ) அவர்களில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் எத்தனை பேர் ?

(இ) அவர்களுக்கு ஏதாவது தொழில்கள் கற்றுக்கொடுக்கப்படுகின்றதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The total number of inmates in the Government Care Camp at Melpakkam (Avadi) was 508 on 22—12—1958.

(b) Males—401 (including 3 children).
Females—107 (including 3 children).

(c) The following handicrafts are taught to the inmates :—

1. Weaving.
2. Tag Making.
3. Tailoring.
4. Carpentry.
5. Book-Binding.
6. Pottery.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware that the beggars still pester the people in the city and what steps have been taken by the Government to remove them to the beggar home?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do admit that all beggars in the city have not been confined to the begger home at Melpakkam.

*Manufacture of potable liquor*

* 226 *Q.*—SRI K. SATTANATHAKARAYALAR: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether alcohol is being manufactured in the State;

(*b*) if so, where;

(*c*) whether the proposal to permit the manufacture of potable liquor was considered by the Government; and

(*d*) if so, with what result?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) The answer is in the negative;

(*b*) Does not arise;

(*c*) Yes;

(*d*) The proposal was not approved.

*Police dogs*

* 227 *Q.*—SRI M. JAGANNATHAN: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether a new kennel has been built to accommodate more police dogs at Madras; and

(*b*) if so, the total expenditure incurred for that purpose?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes, Sir.

(*b*) Total expenditure incurred on building the new kennel is Rs. 27,000.

SRI M. JAGANNATHAN: May I know, Sir, how many dogs are occommodated in the new kennel?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Now there are seven police dogs which are being trained. In addition two dogs belonging to the Military police, one belonging to the railway protection force and two belonging to the customs department are also under training in this kennel.

SRI V. VEDAYYAN: போலீஸ் நாய்கள் என்ற பெயர் போலீஸ் காரர்களையே, போலீஸ் வர்க்கத்தினரையே, மதிப்புக் குறைவாகப் பேசுவது போன்று தொனிப்பதால் அந்த நாய்களை, துப்பறியும் நாய்கள் என்று அழைப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: பெயரை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை. எல்லாம் அவர் அவர் மனப்பான்மையைப் பொறுத்தது.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR: திருடுகள், கொலைகள் மற்ற குற்றங்கள் எல்லாம் கண்டுபிடிப்பதற்கு எல்லா இடங்களுக்கும் சென்னையிலிருந்து வரவழைக்கவேண்டியிருக்கிறது. அப்படியில்லாமல் இரண்டு ஜில்லாக்களுக்கு அல்லது மூன்று ஜில்லாக்களுக்கு ஒரு இடத்தில் வைத்துக்கொள்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?





THE HON. SRI M. BHAKTAVATSALAM: ஒவ்வொரு இடத்திலும் வைத்துக்கொள்வதினால் பலவித அசௌகரியங்கள் இருக்கின்றன. அவைகளுக்கெல்லாம் பயிற்சி அளிக்க வேண்டியிருக்கின்றன. இப்பொழுது அவைகள் தேவைப்படுகிற இடங்களுக்கு சீக்கிரமாக ஏரோப் பிளேனில் கொண்டு செல்லப்படுகின்றன.

*Sandalwood Products*

* 228 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சென்னை ராஜ்ஜியத்திலே சந்தன மரத்திலிருந்து, எண்ணை உற்பத்தி செய்வதோடுகூட இந்த எண்ணையிலிருந்து இதர பொருள் களையும் உற்பத்தி செய்வதற்காக தொழிற்சாலை ஒன்றை அரசாங்கத்தின் மூலமாக நிறுவுவதுபற்றி பரிசீலனை செய்யப்பட்டு வருகிறதா ?

(ஆ) அவ்வாறு பரிசீலனை நடத்தப்படுபவரின் விவரங்கள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM:—(*a*) & (*b*) The proposal for the extraction of sandalwood oil on a State monopoly basis was examined by the Government and was deferred for the present. No other proposal for manufacture of products of sandal wood oil was examined by the Government so far.

SRI P. G. MANICKAM: ஒரு சந்தன எண்ணைத் தொழிற் சாலை மூலம் பல லட்சக்கணக்கான பேர்களுக்கு வேலை கொடுக்கலாம். ஆகவே இதை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்து ஏற்படுத்து வதற்கு பரிசீலனை செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: சந்தன எண்ணையை எல்லா மார்க்கட்டிலும் விற்கிறார்கள். இப்பொழுது கிடைக்கும் வருமானத்தைவிட ஆலைகள் வைத்தால் அதிகம் கிடைக்குமா என்பது பரிசீலனை செய்யவேண்டிய விஷயம்.

*National Extension Scheme*

* 229 *Q.*—SRI M. SELVARAJ (on behalf of Sri A. Govindasamy) கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) விழுப்புரம் தேசிய விஸ்தரிப்பு திட்டத்தில் வளவனூர் பிர்க்கா வில் தொடர்ச்சியாகயுள்ள மேலும் சில கிராமங்களைச் சேர்க்க வேண்டு மென்று கோரிக்கை சர்க்காருக்கு வந்ததா?

(ஆ) அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) Yes, Sir.

(*b*) A representation was received by the Collector of South Arcot. It has been considered that it is not advisable to add any more villages to the Villupuram Block as it will impair the efficient working of the Block.

SRI M. SELVARAJ: அரிசிபாளையம் தாண்டி, சேந்தமங்கலம் கிராமங் களை ஒன்றாக் இணைத்து அந்த பிளாக்கில் சேர்த்துக்கொள்வார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ஒவ்வொரு பிளாக்கிலும் எவ்வளவு மக்கள் எண்ணிக்கை இருக்க வேண்டும் என்று நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது. அதைவிட அதிகமாக இருக்குமானால் பிளாக்குகளை சரிவர நடத்துவது கஷ்டமாக இருக்கும்.

* 230 Q.—Sri M. JAGANNATHAN: Will the Hon. the Chief Minister be pleased to state the number of villages in the Merkanam National Extension Service Block ,South Arcot District) which have been provided with radio sets by the State Broadcasting Department?

The Hon. Sri C. SUBRAMANIAM: Four.

Sri M. JAGANNATHAN: On what basis are these radio sets given to the villages in the National Extension Service Blocks. May I know whether the Government would come forward to instal more number of sets in the Merkanam Notional Extension Service Blocks in view of the fact that most of the villagers are ignorant and they are thirsting to acquire some knowledge of world affairs?

The Hon. Sri C. SUBRAMANIAM: Sir, it is the policy of the Government to instal as many radio sets as possible in as many villages as possible. There are some difficulties with reference to availability of sets and the procedure adopted in the purchase of these sets. Now Government have issued orders that the sets could be purchased from private dealers and they could also be approached for maintenance and servicing of these sets. I hope the situation would improve.

*Tamil Typewriting Examination*

* 232 Q.—Sri K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether candidates appearing for the Lower Grade Examination in Tamil Typewriting for April 1959 are to be examined in the new Tamil Standardised Key Board Machines; and

(b) if not, whether they are allowed to use the new or the existing approved machine due, to the non-availability of the new Standardised Key Board Machines?

The Hon. Sri C. SUBRAMANIAM: (a) & (b) The Government Typewriting Examinations in Tamil to be conducted during the year 1959 will be held with the old machines.

Mr. SPEAKER: Next question. Question 233.

Sri M. KALYANASUNDARAM: Are no supplementaries to be allowed on this question?

Mr. SPEAKER: Since nobody got up, I passed on to the next question. It is not my fault. Hon. Members who want to put supplementaries, should stand up in time and draw my attention. I will now allow the hon. Member to put the supplementary on question 232.

Sri M. KALYANASUNDARAM: Sir, may I know the reasons and on whose advice the change was introduced?



The Hon. Sri C. SUBRAMANIAM: An expert Committee was appointed and they considered the various suggestions made in this regard. An experiment was also conducted with the various suggestions made and it was found that the key board now adopted is the most useful. I may also inform the hon. Member that training of Tamil Typists on this new key board is going on in the old Legislative Assembly buildings. If only the hon. Member cares to go there and see the thing for himself he will be convinced that the present key board evolved by the expert Committee is the best.

*Drinking water scheme for Sankarankoil Panchayat*

* 233 Q.—Sri P. URKAVALAN: கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சங்கரன்கோவில் பஞ்சாயத்துக்கு குடி தண்ணீர் திட்டம் பற்றி சர்க்காரில் ஏதேனும் உத்தேசம் உண்டா?

(ஆ) அப்படியானுல் மேற்படி பஞ்சாயத்துக்கு உதவித் தொகை எவ்வளவு கொடுக்கப்பட்டது?

(இ) அத்திட்டம் எப்போது நடைபெறும்?

The Hon. Sri M. A. MANICKAVELU: (a) Yes, Sir.

(b) No grant has been paid to the panchayat.

(c) The scheme is not in the Five Year Plan. It is too soon to say when the scheme will be taken up.

Sri P. URKAVALAN: சென்ற மூன்று நான்கு வருஷங்களாக சங்கரன்கோவில் பஞ்சாயத்தில் குடிதண்ணீர் வசதி இல்லாமல் மக்கள் மிகவும் கஷ்டப்பட்டிருக்கிறுர்கள். இந்தத் திட்டத்தை உடனடியாக அமுல் நடத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

The Hon. Sri C. SUBRAMANIAM: இந்தத் திட்டத்தை நடத்துவதற்கு பஞ்சாயத்திலே பணம் இல்லை. கவர்ன்மெண்டு பணம் கொடுக்கவேண்டு மென்றுல் மத்திய சர்க்காரிடமிருந்துதான் பணம் வரவேண்டும். மத்திய சர்க்காரிடமிருந்து பணம் வந்ததும் கொடுக்கப்படும்.

*Industrial Housing Scheme*

* 234 Q.—Srimathi A. S. PONNAMMAL (on behalf of Srimathi T. N. Anandanayaki): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) how many housing schemes for industrial labourers have been started by the Government in the years 1956–57 and 1957–58; and

(b) how many have been completed?

The Hon. Sri R. VENKATARAMAN: (a) No new scheme was sanctioned in 1956–57. Five schemes were started in 1957–58.

(b) During 1956–57, the Sembium and Erukancheri Housing scheme started in 1955 was completed. During 1957–58 five schemes, namely, one at Vellanur, there at Sivakasi and one at Guindy were in various stages of construction, but were not completed.

[11th February 1959

* 235 Q.—Sri K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Industries be pleased to state the number of houses built under the Subsidised Industrial Housing Schemes in 1957–58?

The Hon. Sri R. VENKATARAMAN: Eleven Schemes for the construction of 1,158 houses were sanctioned by Government in 1957–58, out of which six schemes for construction of 692 houses were under execution, but no houses were completed during the year.

9-50 a.m. Sri K. SATTANATHA KARAYALAR: 1957–58–ல் கட்டயிருக்கும் வீடுகள் கட்டி முடிக்கப்படுமா காலாகாலத்தில்? இந்த வீடுகளுக்கு டிஸைன் அகிலயிந்திய ரீதியில் கொடுக்கப்பட்டதா? அல்லது ஆங்காங்கு தனித்தனியாக அங்குள்ள இன்ஜினியர்கள் மூலம் டிஸைன் அமைக்கப் பட்டதா?

The Hon. Sri R. VENKATARAMAN: 1957–58–ல் ஆரம்பித்த கட்டிடங்கள் எல்லாம் பூர்த்தியாகிக் கொண்டிருக்கிறது. இன்னும் சில நாட்களில் கிண்டியில் 80 வீடுகள் திறந்து வைக்கப்படும். சிவகாசியில் கட்டிடங்கள் எல்லாம் இன்னும் ஒரு மாதத்தில் முடிவு அடைந்து விடும். டிஸைன்கள் எல்லாம் மத்திய அரசாங்கத்தால் அப்ரூவ் செய்யப்பட்டவை.

Sri T. R. RAMAMIRTHA THONDAMAN: இந்த தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டத்தில் விவசாயத் தொழிலாளர்களும் சேர்க்கப் பட்டிருக்கிறார்களா? இல்லையென்றால், அவர்களுக்கும் இந்த வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தை விஸ்தரிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

The Hon. Sri R. VENKATARAMAN: இது "ஸப்ஸிடைஸ்" இண்டஸ்ட்ரியல் ஹௌஸிங் ஸ்கீம் இதில் விவசாயத் தொழிலாளர்கள் சேர்க்கப்பட வில்லை. ஆனால் "ரூரல் ஹௌஸிங் ஸ்கீம்" என்று ஒன்று இருக்கிறது. அதில் அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொள்ள முடியும். அந்த ஸ்கீம் பிரகாரம் அதற்கு மனு போட்டால் வீடு கட்டுவதற்கு ஏற்பாடு செய்யமுடியும்.

Sri M. KALYANASUNDARAM: இந்த வீடுகளின் அமைப்புகள் தென்னாட்டு பழக்க வழக்கங்களை ஒத்தவையாக இல்லையென்ற புகார்கள் சர்க்காருக்கு வந்ததா? இனியாவது கட்டப்படுவதை தென்னாட்டுப் பழக்க வழக்கங்களுக்கு ஏற்றதாக அமைக்க நடவடிக்கை எடுப்பார்களா?

The Hon. Sri R. VENKATARAMAN: இப்பொழுது கட்டப்படயிருக்கிற வீடுகளை தென்னாட்டு அமைப்புக்கு ஒத்தவாறு மாற்றியமைத்து கட்டிக் கொண்டிருக்கிறோம்.

Sri M. R. KANDASWAMI MUDALIYAR: கிராமாந்திர வீடு கட்டும் திட்டத்தின் கீழ் கட்டிக் கொள்ளலாம் என்று அமைச்சர் அவர்கள், சொல்கிறார்கள். அப்படி கிராமத்திலுள்ள விவசாயிகளும், நெசவாளத் தொழிலாளர்களும் கேட்கக் கூடிய காலத்தில் பணம் இல்லையென்று சொல்வதினால் கிராமாந்திரங்களில் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்திற்கு அதிக பணம் ஒதுக்கி வசதி செய்து கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

The Hon. Sri R. VENKATARAMAN: ரூரல் ஹௌஸிங் ஸ்கீமைப்பற்றி கேள்வி போட்டால் சொல்கிறேன்.

Sri V. K. KRISHNAMURTHY: தலைவர் அவர்களே, வேலூரில் கட்டப்பட்டிருக்கிற சைக்கில் பாக்டரியிலும், விண்ணமங்கலத்திலுள்ள உல் பாக்டரியிலும் உள்ள தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதாவது உண்டா?

The Hon. Sri R. VENKATARAMAN: இப்பொழுது ஒன்றுமில்லை.



11th February 1959]

Sri N. MARUDACHALAM: கோவை மில் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதாவது உண்டா? அப்படியானல் எத்தனை வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன?

The Hon. Sri R. VENKATARAMAN: கோவையில் கோவாப்பரேட்டிவ் இன்டஸ்ட்ரியல் ஹௌஸிங் ஸ்கீம் பிரகாரம் 144 வீடுகள் கட்ட திட்டம் போட்டு, அதற்கு அஸ்திவாரக் கல் போட்டு அது அப்படியே இருந்து கொண்டிருக்கிறது. இதற்கு தொழிலாளர்களுக்குள் முன் பணம், டெப்பாஸிட் பணம் கொடுத்து அந்தக் கட்டிடங்களை கட்ட முன்வரவில்லை என்று புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே கனம் அங்கத்தினர் அவர்கள் இதில் சற்று ஊக்கம் எடுத்துக்கொண்டால் 144 வீடுகளை சீக்கிரம் கட்டி முடிக்கலாம்.

Sri T. M. NALLASWAMI: இந்தத் திட்டத்தின் கீழ் "புகளூர்" சர்க்கரை ஆலையில் வேலை செய்யும் 600 தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அங்கீகரிக்கப்பட்டும் அத்திட்டத்திற்காக அந்த ஆலையைச் சேர்ந்தவர்கள் நிலம் ஒதுக்கியும் அந்த வேலை ஆரம்பிக்க முடியாமல் இருந்து வருகிறது. அது எப்பொழுது ஆரம்பிக்கப்படும்.?

The Hon. Sri R. VENKATARAMAN: இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட 55 லட்சம் ரூபாய்க்கும் ஸ்கீம்கள் எல்லாம் போட்டு முடிந்துவிட்டது. இனி பணமில்லை. மத்திய அரசாங்கத்தினிடம் இன்னும் அதிகம் கேட்டிருக்கிறோம். வந்தால் பிறகு யோசனை செய்யலாம்.

Sri K. SATTANATHA KARAYALAR: நெசவுத் தொழிலாளர்களுக்கு கூட்டுறவு முறையில் கட்டிக் கொடுத்திருக்கும் வீடுகள் இதைப் பார்க்கிலும் வசதியாகவும் சிக்கனமாகவும் கட்டப்பட்டிருக்கிறதை சர்க்கார் பரிசீலனை செய்ததா?

The Hon. Sri R. VENKATARAMAN: ஆமாம் அவர்களுக்கு 1/3 சப் ஸிடி கிடைக்கிறது. இதில் சப் ஸிட்டி 25 சதவிகிதம்தான்.

*Guest House at Cape Comorin*

* 236 Q.—Sri A. A. RASHEED: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether it is a fact that the Guest House at Cape Comorin is let out for the use of Ministers and V.I.Ps only; and

(b) whether there is any proposal to allow M.L.As. to occupy Guest House at Cape Comorin whenever it is not occupied by V.I.Ps and Ministers?

The Hon. Sri P. KAKKAN: (a) No, Sir.

(b) The M.L.As. can occupy it whenever it is not occupied by V.I.Ps., Ministers, etc.

Sri T. S. RAMASWAMY PILLAI: எஸ்ட்டிமேட் கமிட்டி, பப்ளிக் அக்கௌண்ட் கமிட்டி போன்ற கமிட்டிகளில் எம். எல். ஏக்கள் இங்கிருந்து போனபோது ரெஸிடன்ஸ் கேட்கப்பட்டும் அவர்களுக்கு "அனக்ஸ்"தான் கொடுத்திருந்தது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததா? இதுபற்றி புகார் ஏதாவது வந்ததா?

The Hon. Sri P. KAKKAN: அப்படி தகவல் எனக்கு வரவில்லை.

*Railway line to the south via Aranthangi-Karaikudi*

* 237 Q.—Sri A. VEDARATHNAM: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து மீட்டர்கேஜ் மெயின் லைனில் அறந்தாங்கி-காரைக்குடி வழியாகத் தெற்கே நேரே வண்டி போக்குவரத்தை நடத்தும்படி மத்திய ரயில் இலாகாவிற்கு நம் மாநில அரசாங்கம் சிபாரிசு ஏதேனும் [illegible]

(ஆ) மெயின் லேனில் இண்டோ-ஸிலோன் எக்ஸ்பிரஸைத் தவிர வேறு எக்ஸ்பிரஸ் வண்டி இல்லாததால் வண்டியில் நெரிசலைத் தவிர்க்க இன்னொரு எக்ஸ்பிரஸ்வண்டி விட அரசாங்கம் மத்திய ரயில் இலாகாவை வற்புறுத்த உத்தேசமுண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir.

(b) No, Sir.

SRI A. VEDARATHNAM : இந்த வண்டிகளில் உள்ள நெரிசலைக் குறைப்பதற்கு அரசாங்கம் என்ன முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது? நாகூர், காரைக்குடிக்கு போகும் வண்டியில் ஸீட்ஸ் 10 நாட்களுக்கு முன்னதாகவே ரிசர்வ் செய்து விடுகிறார்கள். ஆகவே, அதற்கு என்ன முயற்சி எடுத்துக்கொள்ளப்படும்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஸோனல் ரெயில்வே சபை என்று ஒன்றிருக்கிறது. அதில் இந்த மன்றத்தின் பிரதிநிதிகள் கூட இருக்கிறார்கள். அவர்கள் தான் இதைப்பற்றி கவனிக்கவேண்டும்.

### *Water Supply Scheme*

* 238 Q.—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether the Government have sanctioned any scheme for protected water-supply to the guinea-worm areas in the Tiruchirappalli district under the National Water Supply and Sanitation scheme;

(b) the details thereof;

(c) when it will be completed and the area declared free from guinea-worm and

(d) whether sanitary arrangements also will be looked into in such areas?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) to (d) No special scheme for the provision of water supply or drainage has been formulated for the guinea-worm infected areas; but priority is given for provision for water-supply to the effected villages under the various programmes for the provision of water supply.

SRI S. LAZAR : தேசிய நீர் வழங்கும் திட்டம் அங்கு அமுலுக்கு கொண்டு வந்து நடத்தப்படுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்த ஜில்லாவில் அமுலில் இருக்கிறது. The scheme costs Rs. 2,73,000 recurring and Rs. 95,000 non-recurring. The incidence of guinea worm disease at the end of the two-year period will be brought down to a hypo-endemic level. Depending upon the actual results, a maintenance programme will have to be drawn up thereafter for the areas with a view to the ultimate eradication of the disease. Details of the scheme drawn up by the Director of Public Health have been communicated to the Government of India, and they have been requested to meet half the cost of the programme. Their reply in the matter is awaited.



### *Cement*

* 239 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the total capacity of cement factories already working in the State; and

(b) the quantity allotted for the State?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Five lakhs two thousand and nine hundred tons, Sir.

(b) On the basis of scheme approved so far, the total capacity allocated for this State is about eleven lakhs and ten thousand tons per annum.

### *Manufacture of Sulphuric Acid.*

* 240 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal to set up a factory for producing sulphuric acid from the gypsum available in Tiruchirappalli;

(b) whether it is to be under public sector or private sector; and

(c) when the proposal is expected to materialise?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) There is no proposal to set up such a factory in the public sector.

(b) We would welcome the factory being set up by any interested industrial entrepreneur.

(c) Does not arise.

MR. SPEAKER : Questions are over.

[*Note*.—An asterisk * at the Commencement of a speech indicates revision by the Member.]

## II.—PRIVILEGE MOTION RE ARTICLE IN THE 'KUMUDAM'.

MR. SPEAKER : Yesterday, I received notice of a Privilege Motion from Sri M. Kalyanasundaram. The hon. Member will say a few words on the privilege motion. Let him be brief.

SRI M. KALYANASUNDARAM : கனம் சபாநாயகர் அவர்களே, தமிழில் "குமுதம்" என்ற பத்திரிகை பொறுப்புள்ளவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. துரதிருஷ்டவசமாக அந்தப் பத்திரிகையில் நம்முடைய சட்டசபையின் கௌரவத்தைப் பாதிக்கக்கூடிய ஒரு விஷயம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. சமீபத்தில் அவர்கள் சட்டசபை அங்கத்தினர்களைப் பற்றி எழுதும் கட்டுரைகளை பிரசுரித்து வருகிறார்கள். அதில் முதல் கட்டுரை நேற்று வெளியிட்ட குமுதத்தில் வந்திருக்கிறது. எந்த அங்கத்தினரைப் பற்றி எழுதியிருக்கிறது என்பதைப்பற்றி அங்கத்தினர்கள் அறிய விரும்பினால் அதைப் பார்த்து படித்துக்கொள்ளட்டும். அது எனக்கு முக்கியமான விஷயமல்ல. இந்த சபையில் இருக்கக்கூடிய ஒரு அங்கத்தினரைப் பற்றி, அவர் சட்டசபையில் அங்கத்தினராக இயற்றும் பணியைப் பற்றி எழுதக் கூடிய தோரணையில், இந்த சபையின் கௌரவத்தைப் பாதிக்கக்கூடிய ஒரு பாகம் அதில் அடங்கியிருக்கிறது. அது என்னவென்றால் " தூங்குமடமாக இருந்த சட்டசபை துள்ளியெழுந்தது இவரால் "

[Sri M. Kalyanasundaram] [11th February 1959

என்றிருக்கிறது அந்த பாகத்தில். அது உண்மையோ பொய்யோ என் பதைப் பற்றி கவலையில்லை. ஆனால் இத்தகையதொரு ஸ்தாபனத்தை தூங்குமடம் என்று வர்ணிக்கலாமா? பொது கண்யத்தைப் பொறுத்த 10-00 a.m. மட்டில் எந்த ஒரு சபையையும் பற்றி ஒரு பொறுப்புள்ள பத்திரிகை அப்படி எழுதுவது நேர்மையா? நியாயமா? நியாயம் ஒரு பக்கத்தில் இருக் கட்டும். சட்டம் ஒரு பக்கத்தில் இருக்கட்டும். சட்டத்தின் அடிப்படையில் இந்த சபையின் உரிமையைப் பற்றி நான் பேசவில்லை, கண்யத்தின் அடிப்படையிலேதான் நான் பேசுகிறேன். இந்தச் சபையைப்பற்றி தூங்கு மடம் என்று குறிப்பிடலாமா என்பதுதான் என்னுடைய கேள்வி. இது சாதாரண கௌரவத்திற்குக்கூட பொருந்தாது. இந்தச் சபையினுடைய கௌரவத்தின் அடிப்படையில், பிரத்தியேக உரிமையின் அடிப்படையில் பார்க்கும்பொழுது இந்தச் சபையை தூங்குமடம் என்று குறிப்பிடுவது இந்தச் சபையைப்பற்றிய மன்னிக்க முடியாத அவதூறு என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். இதை ஆங்கிலத்தில் சொல்லவேண்டு மானால் . . .

MR. SPEAKER : வேண்டாம்.

SRI. M. KALYANASUNDARAM : இதனுடைய விஷயத்தை நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நான் கருதுகிறேன். இதைப் பிரசுரித் தவர்கள் தெரிந்து பிரசுரித்தார்களோ, தெரியாமல் பிரசுரித்தார்களோ. எப்படி இருந்தாலும் இம்மாதிரி பிரசுரித்ததானது மன்னிக்க முடியாத, அனுமதிக்கமுடியாத குற்றமாகும். அதை இந்தச் சபையின் கவனத்திற்கும் சபாநாயகருடைய கவனத்திற்கும் கொண்டுவரவேண்டுமென்பதுதான் என் னுடைய அபிப்பிராயம். ஆகையினால்தான் இந்த உரிமைப் பிரேரணையை எழுதிக்கொடுத்தேன். இந்தப் பிரேரணையை தாங்கள் படிக்குமாறு கேட் டுக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : I have received notice of a Privilege Motion from Sri M. Kalyanasundaram. As he has just stated he takes objection to the words published in the 'Kumudam' ("தூங்குமடமாக இருந்த சட்ட சபை துள்ளியெழுந்தது இவரால்)." There is no doubt that this article which appeared in the Tamil journal 'Kumudam' dated the 10th February 1959 amounts to contempt of the House and is a matter which should be referred to the Committee of Privileges. The matter was raised at the earliest possible moment, i.e., yesterday. As I had no time to look into it, I postponed it to-day. I have examined the article and found that it is a matter fit to be sent to the Committee of Privileges. But after Mr. Kalyanasundaram saw me in connection with this matter, the proprietors of the 'Kumudam' saw me and gave me a letter which I shall read to this House. It runs as follows :—

'Respected Sir, we understand that in regard to an article published in the issue of Kumudam, dated 10th February 1959 under the caption "Ivarthan Engal M.L.A.", some hon. Members of our Assembly have raised a question of privilege on the ground that a passage occurring in the said article amounts to contempt of the Assembly.

Coming to know of it, we hasten to offer our clarification and explanation.

The said article was one of the prize-winning essays in an open competition held by us whereunder members of the public were invited to write a brief estimate of their respective M.L.As. As such the views expressed in the article are exclusively the author's. This is by way of clarification.



11th February 1959] [Mr. Speaker]

But we are conscious that this will in no way absolve us of our responsibility in publishing the article, overlooking—though inadvertently—any passage likely to be regarded by the Honourable Members as amounting to contempt of the Assembly, for we, as citizens are as zealous as any one in upholding the dignity of our Assembly and as the publishers of a responsible journal, it is far from our intention to publish anything which may even remotely affect the prestige and dignity of our Assembly.

We shall be extremely thankful if you will kindly accept and convey to the Honourable Members of the Assembly our deep regrets for having allowed the publication of the unfortunate passage.

I express my regrets as Editor and Proprietor of the journal and also on behalf of the Printer.

We are trying to contact the author of the article and would obtain his letter of regret as early as possible.

'Kumudam' is a well known journal and this is the first time that such an offence has been committed. In view of this extenuating circumstnce, even though the offence has been committed, I feel that the explanation may be admitted and the matter passed over.

SRI M. KALYANASUNDARAM : Sir, we are not informed of the name of the author of the article and we are not also sure whether the author of the article would tender his apology?

MR. SPEAKER : I have nothing more to add. The Proprietors of 'Kumudam' have given the post-cript that they will try to obtain the regret of the author. If the author refuses to express regret, then we have got the right to take action subsequently. To-day, I suggest that no further action be taken and that the matter be dropped.

SRI M. KALYANASUNDARAM : Sir, I agree to your suggestion.

## III.—GOVERNMENT BILL.

### THE MADRAS GENERAL SALES TAX BILL, 1958 (L.A. BILL NO. 6 OF 1958)—*cont.*

MR. SPEAKER : We shall now continue the discussion on the Madras General Sales Tax Bill.

நேற்று பேசுவதற்கு அங்கத்தினர்கள் இல்லாமல் சபையை 20 நிமிஷங் களுக்கு முன்னலேயே ஒத்திவைக்கப்பட்டது. அம் மாதிரி இருக்கவேண்டாம் என்று தயவு செய்து அங்கத்தினர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். முதல் நாளே அங்கத்தினர்கள் பேசியிருந்தால் நன்றாக இருக்கும் என்று கருது கிறேன். இன்றைய தினம் பேசுவதற்கு நிறைய பெயர்கள் கொடுத்தால், எல்லோருக்கும் எப்படி சந்தர்ப்பம் கொடுக்க முடியும். யாருக்காவது பேசுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்காவிட்டால் அது என்பேரில் தவறு இல்லை என்பதைச் சொல்லிக்கொள்ளுகிறேன். ஒவ்வொரு அங்கத்தினருக்கும் பேசுவதற்கு 15 நிமிஷங்கள் கொடுக்கப்போகிறேன். அங்கத்தினர்கள் யாருக்காவது சந்தர்ப்பம் கிடைக்காவிட்டால் அது என்னுடைய தவறு இல்லை என்பதை மீண்டும் ஒருதடவை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

61268

* SRI A. S. DORAISAMI REDDIAR : கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது சர்க்காரால் கொண்டுவரப்பட்டிருக்கும் விற்பனை வரி மசோதாவை நான் மனப்பூர்வமாக ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். வரி விலக்கு வரம்பு ஏற்கனவே ரூபாய் 5,000 ஆக இருந்தது. அதை இப்பொழுது செலக்ட் கமிட்டியார் 10,000 ரூபாய்க்கு உயர்த்தியிருக்கிறார்கள். முன்பு ரிஜிஸ்டிரேஷன் லிமிட் ரூபாய் 4,000 இருந்ததை ரூபாய் 7,500-க்கு உயர்த்தியிருக்கிறார்கள். டாக்டர் லோகநாதன் அவர்கள் உணவு தானியங்களுக்கு ½ சத விகிதம் வரி விதிக்கலாம் என்று சிபார்சு செய்திருந்தார்கள். இந்த மசோதாவில் அரிசி, நெல்லுக்கு ஒரு சதவிகிதமும், மற்ற உணவு தானியங்களுக்கு 2 சதவிகிதமும் வரி விதித்திருக்கிறார்கள். அதன் பிறகு செலக்ட் கமிட்டியார் தீர்க்கமாக ஆலோசனை செய்து சில திருத்தங்களைச் செய்தும்கூட, பழையபடியே இப்பொழுது இருக்கும்படியான இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். 1939-ல் நமது ராஜாஜி அவர்களால் இந்த விற்பனை வரி கொண்டுவரப்பட்டது. அப்பொழுது அதற்காக அவரை எல்லோரும் வருத்தப்பட்டு நிந்தித்துக்கொண்டிருந்தார்கள்.

நான் ஒரு கதை சொல்ல விரும்புகிறேன். ஒரு ராஜா இருந்தாராம், அவருடைய கஜானாவில் பணம் குறைந்துவிட்டதாம். உடனே அவருக்கு ஒரு யோசனை தோன்றிற்று. குடிகள் எல்லோரையும் ஒரு மூட்டை நெல் எடுத்துக்கொண்டு, அதற்குப் பதிலாக ஒரு மூட்டை அரிசி கொண்டு சேர்க்க வேண்டும் என்று அந்த ராஜா சொன்னாராம். அதனால் குடிகள் ரொம்பவும் கஷ்டப்பட்டார்களாம். ஒரு மூட்டை நெல்லுக்கு ஒரு மூட்டை அரிசி எப்படி கொடுப்பது என்று ஜனங்கள் ராஜாவை நிந்தித்துக்கொண்டிருந்தார்களாம். பிறகு சில காலம் கழித்து அந்த ராஜா தன்னுடைய பிள்ளைக்கு பட்டம் கட்டினாராம். பட்டம் கட்டும்பொழுது ராஜா, நான்தான் கெட்ட பெயர் வாங்கிவிட்டேன். அந்த கெட்ட பெயரைப் போக்கி எனக்கு நல்ல பெயர் வரும்படி செய்யவேண்டும் என்று பிள்ளைக்கு புத்திமதி சொன்னாராம். பிள்ளையும் அப்படியே "அப்பா, உங்களுக்கு வந்த கெட்ட பெயரைப் போக்கி நல்ல பெயர் வாங்கி வைக்கிறேன்", என்று சொன்னானாம். ராஜா, ஒரு மூட்டை நெல் எடுத்துக்கொண்டு போய், அதற்குப் பதிலாக ஒரு மூட்டை அரிசி கொண்டுவரவேண்டுமென்று சொன்னதினால் கெட்ட பெயர் வாங்கினார். பிள்ளை அந்த கெட்ட பெயரைப் போக்குவதற்காக என்ன செய்கிறது என்று யோசனை செய்தான். எல்லோரும் ஒரு மூட்டை உமி எடுத்துக் கொண்டு போய், ஒரு மூட்டை அரிசி கொண்டுவரவேண்டுமென்று உத்தரவு போட்டானாம். அது போல (The Hon. Sri R. Venkataraman : நாங்கள் சாக்கை எடுத்துக்கொண்டுபோய் அரிசி கொண்டுவரவேண்டுமென்று சொல்லுகிறோம்.) சந்தோஷம். ராஜா நெல்லை எடுத்துக்கொண்டுபோய் அரிசி கொண்டுவரச்சொன்னார். அதனால் மக்களுக்கு ரொம்பவும் கஷ்டமாக இருந்தது. இப்பொழுது விலைவாசியெல்லாம் அதிகரித்துவிட்டது. வரியை குறைக்கவேண்டுமென்று கேட்கிறோம். இப்பொழுது வரியை உயர்த்தி ராஜாஜிக்கு நல்ல பெயரை கொண்டுவந்து விட்டார்கள். டாக்டர் லோகநாதன் அவர்களும் குறைக்க வேண்டுமென்று சொன்னார். டாக்டர் லோகநாதன் அவர்களையும் நல்லவராக்கிவிட்டார்கள். இந்த மசோதா ஒரு வருஷத்திற்கு முன்பு கொண்டு வரப்பட்டபொழுது வியாபாரிகள் கிளர்ச்சி செய்தார்கள், பெரிய கூட்டங்கள் மாகாநாடுகள் நடத்தினார்கள். அதற்கு சர்க்கார் சமாதானம் சொல்லும் வகையில் செலக்ட் கமிட்டி போடப்போவதாகவும், அப்பொழுது வேண்டிய திருத்தங்களைச் செய்வதற்கு சந்தர்ப்பம் இருக்கும் என்று சொன்னார்கள் ; அம்மாதிரி செலக்ட் கமிட்டியும் போட்டார்கள். செலக்ட் கமிட்டியாரும் மிக தீர்க்கமாக யோசனைசெய்தார்கள். இப்பொழுது இருக்கும் சட்டத்தில் சில மாறுதல்கள் செய்ததுபற்றி மகிழ்ச்சி அடைகிறேன். அதை நான் வரவேற்கிறேன். இருந்தாலும், சில விஷயங்களில் மாறுதல்கள் செய்யவேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம். கள்ள மார்க்கெட், கொள்ளை லாபம், லஞ்சப் பழக்கம் இந்த பாஷையெல்லாம் முதலாவது யுத்தகாலத்தில்தான் வந்தது. கள்ள மார்க்கெட் ஏன் வரவேண்டும்? சாப்பிடுவதற்கு 16 அவுன்ஸ் அரிசிக்குப் பதிலாக 6 அவுன்ஸ் கொடுக்கப்பட்டால், வயிற்றுக்குப் பத்தாமல் கள்ள மார்க்கெட்டில் வாங்க வேண்டியது ஏற்பட்டது.



அது போல சம்பளம் தங்களுக்குப் போதவில்லையாதலால்தான் அதிகாரிகள் லஞ்சம் வாங்குகிறார்கள். அது போலத்தான் யுத்த சமயத்தில் கண்ட்ரோல் வந்ததால் அதிகமாகக் கொள்ளை லாபம் சம்பாதித்தார்கள். குறைவான விகிதத்தில் வரிகளைப் போட்டால் வரி ஏமாற்றம் லஞ்சம் வராது என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். அதே போன்றுதான் கண்ட்ரோல் வராதிருந்தால் கொள்ளை லாபமும் வராது. இம்மாதிரி அதிகமான அளவில் வரிகளைப் போடுவதால் அதிகமான அளவில் லஞ்சப் பழக்கம் ஏற்படுகிறது. ஏற்கனவே ஒரு வர்த்தக மகாநாடு நடந்தது. பல நிபுணர்களும் அதில் பேசினார்கள். முன்பு கவர்னர் பதவி வகித்தவரும் பொருளாதார நிபுணருமான திரு. சந்தானம் அவர்கள் அந்த மகாநாட்டில் தலைமை வகித்தார். அவர்கள் சொன்னார்கள் பலமுனை விற்பனை வரி போடுவதால் சென்னை ராஜ்யத்திற்கு அதிகமான வருமானம் வராது என்று. பலமுனை வரி போடுவதால் அதிருப்தியும் வரி ஏமாற்றமும் லஞ்சமும் பெருகுமென்பதில் சந்தேகமேயில்லை என்றும் தெரிவித்தார்கள். உணவுப் பொருட்களுக்கு விற்பனை வரி போடக் கூடாது என்பது நாட்டில் கூச்சல் இருந்துகொண்டிருக்கிறது. அதைப்பற்றிக் கூட நான் கவலைப்படவில்லை. முக்கியமாக மனிதர்களுக்கு வேண்டியது உண்ண உணவும் உடுக்க உடையும் அவசியம் வேண்டும். இவைகளின் மூலம் அதிக வருமானம் வருவதால் இவைகளின் மீது வரி போட்டுத்தான் தீரவேண்டும் என்கின்ற முறையில் இப்போது வரி போடப்பட்டிருக்கிறது. இந்த விற்பனை வரி நம்முடைய நாட்டுக்கு காமதேனு போன்றது என்றும் சொல்லப்பட்டு வருகிறது. அப்படிப்பட்ட காமதேனுவை வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. அதற்கு யாரும் மறுப்புக் கூற மாட்டார்கள். அமைச்சர் அவர்கள் ஐந்தாண்டுத் திட்டங்களுக்குப் பணம் போதாது, ஆகவே நமக்கு பணம் அதிகமாக வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் அதற்காக பொறுக்க முடியாத வரிகளைப் போட்டு வரிகளை வசூல் செய்வது என்றால் அது சரியான காரியம் என்று சொல்ல முடியாது. இம்மாதிரி அதிக வரிகள் போடுவதில் பெரும் அளவில் வருமானம் கிடைப்பதற்கு பதில் ஏமாற்றம்தான் கிடைக்கும், இதைத்தான் சந்தானம் அவர்கள் தெரிவித்தார்கள். இன்று பல பொருட்களின் மீது பலமுனை வரி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதிலும் நமக்கு முக்கியமான உணவு தானியங்களின் மீது இப்பொழுது பலமுனையாக நான்கு தடவை வரி வசூல் செய்யப்படுகிறது. பழைய ஆக்டின் பிரகாரம் கமிஷன் லைஸன்ஸ் பெற்று வியாபாரம் செய்கிறவர்களுக்கு விற்பனை வரி கிடையாது. அவர்கள் தங்கள் லாபத்திலிருந்து லைஸன்ஸ் கட்டணம் செலுத்திவிட்டார்கள். இப்போது அந்தக் கமிஷன் லைஸன்ஸ் முறையை எடுத்துவிட்டார்கள். இப்பொழுது கமிஷன் வியாபாரிகளும் விற்பனை வரி செலுத்தியாகவேண்டும். அவர்கள் சொந்த லாபத்தில் வரியை வாங்கிக்கட்டவில்லை. இப்போது கமிஷன் மண்டிகளிலும் லைஸன்ஸ் முறையையெடுத்துவிட்டதால் மொத்த வியாபாரியிடமிருந்து சில்லரை வியாபாரிகள் உணவு தானியங்களை வாங்குவதற்கு இன்னொரு முறை வரி கொடுக்கவேண்டியிருக்கிறது. இதுபோல் ஒரே சரக்குகளுக்கு நான்கு இடங்களில் விற்பனைவரி கொடுக்க வேண்டியிருக்கிறது. சட்டசபை அங்கத்தினர்கள் பொதுவாக வியாபாரிகளைப்பற்றி அவ்வளவாகக் கவலைப்படுவதில்லை. அவர்கள் அதிகமாக கொள்ளையடிக்கிறார்கள் என்று பலர் சொல்லலாம். நாட்டில் நல்லவர்களும் இருப்பார்கள், கெட்டவர்களும் இருப்பார்கள். எல்லோருமே கெட்டவர்கள் ஆகமாட்டார்கள். ஆனால் ஒவ்வொரு உணவுப் பொருளின் மீதும் நான்கு இடங்களில் வரி கொடுக்க வேண்டும் என்று சொல்லுவது நியாயமுமல்ல, தர்மமும் அல்ல என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். உணவுப் பொருட்களை வாங்குகின்ற சமயத்தில் சிறு வியாபாரிகள் பெரிய வியாபாரிகளிடமிருந்து வாங்குகிறார்கள். இம்மாதிரி மூன்றாகமாறுகிறது. இம்மாதிரி வாங்கும்போது வியாபாரிகள் கொடுக்கின்ற மூன்று முனை வரிகள் சரக்கின் மீது தான் விலையில் ஏறுகிறது. கடைசியில் அந்த வரிகளை எல்லாம் பொறுத்துக்கொள்ளவேண்டியவர்கள் அதை வாங்கிச் சாப்பிடுபவர்கள்தான். ஒரு மூட்டைக்கு ஆறு அணா என்று வைத்துக்கொண்டாலும் கூட நான்கு இடங்களிலும் விற்பனை வரியைச் சேர்த்துப் பார்த்தால் ஒன்றரை ரூபாய் ஒரு மூட்டைக்குக் கொடுக்க வேண்டியிருக்கிறது. அரசாங்கம் கொள்முதல் செய்ய போகிறது என்று எல்லாம் சொல்லப்படுகிறது. ஆனால் அதே சமயத்தில் பல

[Sri A. S. Doraisami Reddiar] [11th February 1959

முறை வரி விதிப்பதினால் விலை வாசிஏறாது என்று அரசாங்கத்தால் சொல்ல முடியுமா என்று கேட்கிறேன். இன்றைக்கு பலமுனை வரி போடுவதை விட ஒருமுனை வரி போடுவதாக இருந்தால் நிச்சயமாக வருமானம் அதிகமாக கிடைக்கும் என்று நம்புகிறேன். அதே சமயத்தில் அரசாங்கம் ஏமாற்றமடையாமல் இருப்பதற்கும் வழியாக இருக்கும். இவ்விதம் பலமுனைவரி போட்டிருப்பதால் வியாபாரிகளுக்கு வியாபாரம் செய்வதற்கு கஷ்டமாக இருக்கிறது. இதனால் அரசாங்கத்தை ஏமாற்றப்பார்க்கிறார்கள். இவ்விதம் வரி ஏமாற்றுகிறவர்கள் குறைந்த விலைக்கு உணவு தான்யங்களை விற்க முடிகிறது. அதே நேரத்தில் நியாயமாக, உண்மையாக வரிகளை கொடுத்துக்கொண்டு வியாபாரம் செய்வதென்றால் குறைந்த விலைக்கு வியாபாரம் செய்ய முடியாத நிலை ஏற்படுகின்றது. யோக்கியமான வியாபாரிக்கு ஒரு தர்மசங்கடமான நிலை ஏற்படுகின்றது. ஆகவே பல இடத்தில் வரியைப் போடுவதைவிட ஒரே இடத்தில் வரியைப் போட்டுவிட்டால் வரியை கொடுப்பதற்கு வியாபாரிகள் தயாராக இருப்பார்கள். வியாபாரிகள் பல முனை வரியால் ஏற்படும் கஷ்டங்களைப் போக்குவதற்கு அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுக்க முன் வருகிறார்கள். ஆகவே இதில் தப்பு சொல்வதில் பிரயோசனமில்லை. ஆகவே வரி போடுவதை நாம் சீர்படுத்திக் கொள்ளவேண்டும். அப்போது தான் நியாயமான முறையில் வரிவிதிப்பு முறை நடைபெறும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். வேண்டுமென்றால் ஒரு வருடம் இவ்விதம் ஒருமுனை வரிவிதித்து பரிட்சித்து பாருங்கள், அதில் சரியான்படி வருமானம் கிடைக்கவில்லை யென்றால் அதன் பின்னால் பலமுனை வரி போட்டுக் கொள்ளலாம் என்பதையும் அரசாங்கத்திற்கு சொல்ல விரும்புகிறேன். ஐந்தாண்டு திட்டத்திற்கு பணம் போதவில்லை என்ற காரணத்திற்காக ஒரு மனிதன் தலையில் எவ்வளவு வேண்டுமானாலும் வரிகளை போட்டு பளுவை சுமத்தலாம் என்றால் அது நியாயமல்ல என்பதுதான் என் அபிப்பிராயம். அதோடு இதன்படி சரியாக வியாபாரிகள் நடக்கவில்லையென்றால் அதற்காக அபராதம் போடவும் இரட்டிப்பு வரி விதிக்கவும் இதில் இடமிருக்கிறது. அதிகப்படியான அளவில் அவர்கள் மீது பளுவை சுமத்திவிட்டு அதன்படி நடக்கவில்லையென்றால் அபராதம் போடுவது என்று சொன்னால், உண்மையிலே அவர்களுக்கு அது பெரும் கஷ்டமாக இருக்கும். அவர்களுக்கு சுலபமான முறையில் வரிகளை போட்டுவிட்டு' அதன்படி நடக்கவில்லை என்றால் அவர்கள் பேரில் கடுமையான தண்டனை விதிக்க வேண்டியதுதான். நான் பலமுனைவரி முறையைப் பற்றி ஹானஸ்ட்-ஆன ஒரு ஸி.டி.ஓ. அவர்களிடம் பேசிக்கொண்டிருந்த போது அவர் சொன்னதென்னவென்றால் இந்த பலமுனை வரியால் வரி ஏமாற்றம் அதிகம் ஏற்படுகிறது. அதிகமான வருமானம் வரவில்லை, ஒருமுனை வரியினால் இப்போது கிடைப்பதைவிட இரண்டு மடங்கு அதிகமான வருமானம் கிடைக்கும் என்று தெரிவித்தார். இதைப்பற்றி ஆராய்ந்த லோகநாதன் அவர்களும் உணவுப் பொருட்களுக்கு அரை சதமானம் வரி போடவேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். ஒருமுனை வரி இருந்தால் வியாபாரிகள் நேரடியாக மண்டிக்கு சரக்கை வரவழைத்துக்கொள்வதற்கு வசதியாக இருக்கும். பல முனை வரியால் லாரியில் வரும் சரக்குகளை மண்டியில் இறக்காமலேயே லாரியிலிருந்தபடியே சரக்கை விற்றுவிடுவார்கள். கிடங்குகள் வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை. மேலும் ஒருமுனை வரி போடுவதாக இருந்தால் வியாபாரிகள் அதிகாரிகளை ஏமாற்றமாட்டார்கள். அதோடு அரசாங்கத்திற்கு அதிகமான வருமானம் வரும் என்பதில் சந்தேகமில்லை. ஆகவே ஒரு முனை வரியை கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் இப்போது நமக்கெல்லாம் நயமாக கிடைக்கிற பொருள்' உப்பு. படி ஒன்று 10 பைசாவுக்கு கிடைக்கிறது. இதன் பேரில் வரி விதிப்பதாக இருந்தால் நல்ல வருமானம் வரும் என்று நினைக்கிறேன். படிக்கு ஒரு பைசா வீதம் வரி போட்டால் கூட அதிகமான அளவில் வருமானம் கிடைக்கும். அதன் பேரில் கஸ்டம்ஸ் ட்யூட்டி முதலியவை இருக்கின்றது. அதுபோல் சிறிய அளவில் வரி போடுவதாக இருந்தால் நமக்கு அதிகமான வருமானம் கிடைக்கும் என்று நான் நம்புகிறேன். இதற்கு மத்திய அரசாங்கத்திலிருந்து பெர்மிஷன் வேண்டுமானால் வாங்கிகொண்டு இதன் பேரில் வரி விதிக்கலாம் என்பது என்னுடைய அபிப்பிராயம்.



11th February 1959] [Sri A. S. Doraisami Reddiar]

அதோடு நான் முன்னால் சொன்னது போல் யாரும் தாங்க முடியாத அளவுக்கு வரிப்பளுவை சுமத்திவிட்டு அவர்கள் பேரில் சரியாக நடக்கவில்லை என்பதற்காக தண்டனை அளிப்பது சரியல்ல. வரிப்பளுவை குறைவாக சுமத்தியிருந்தால், அதன்படி வியாபாரிகள் நடக்கவில்லையென்றால் அவர்களை ப்ராஸிக்யூட் செய்யவோ அல்லது தண்டனை கொடுக்கவோ வேண்டியதுதான். ஆனால் வரிப்பளுவை அதிகமாக சுமத்திவிட்டு இம்மாதிரி தண்டனை கொடுத்தால் அவர்களால் தாங்க முடியுமா என்பதை நாம் பார்க்க வேண்டும். ஆகவே இதையும் நாம் ஆலோசித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு நம் எல்லோருக்கும் அவசியமான உரம், மாடுகளுக்கு வேண்டிய புண்ணாக்கு முதலிய பொருள்களுக்கு மூன்று சத விகிதம் வரி போடப்பட்டிருக்கிறது. இதிலும் இவ்வளவு கூடுதலாக வரி விதிக்கக்கூடாது என்பதுதான என்னுடைய அபிப்பிராயம்.

பொதுவாக இச்சட்டத்தை நான் வரவேற்கிறேன். ஆனால் சர்க்காரை ஏமாற்றமுடியாத வகையில் இந்தச் சட்டம் அமைய வேண்டுமானால் உணவுப் பொருள்களுக்கு பலமுனைவரி இருப்பதை மாற்றி ஒரு முனை வரியாக போட வேண்டும் என்று சொல்லிக்கொள்வதோடு, இதன் மூலம் அரசாங்கத்திற்கு வருமானமும் அதிகமாக கிடைக்கும் என்றும் ஒரு முனை வரியை போட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**MR. SPEAKER** : கனம் மந்திரி அவர்கள் பதிலளிப்பதற்கு எவ்வளவு நேரம் எடுத்துக் கொள்வார் ?

**THE HON. SRI R. VENKATARAMAN** : எனக்கு முக்கால் மணி நேரம் வேண்டியிருக்கும்.

**SRI A. VEDARATHNAM** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விற்பனை வரி திருத்த மசோதாவை நான் முழு மனதோடு ஆதரிக்கிறேன். 10-20 a.m. ஏனென்றால் இது ஒரு பெரிய மகத்தான நல்ல காரியத்திற்காக ஏற்பட்ட வரி. இந்த நாட்டில் கோடிக்கணக்கான மக்களை பஞ்சமாபாதகத்திலிருந்து விடுவித்திருக்கின்ற வரி இது. ஒரு வரியின் மூலமாக ஏதாவது ஒரு நல்ல காரியம் செய்ய முடியும் என்றால், அதற்கு இந்த வரி ஒரு சான்று. இதன் மூலமாக பல கோடிக்கணக்கான மக்களை நல்ல வழிக்கு மாற்றுகிற ஒரு வகையை இது செய்திருக்கிறது. இன்றைக்கு ஏழைகளின் வாழ்வு வளமாகியிருப்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். அதுவுமின்றி, ஒரு குறிப்பிட்ட சாரார் பேரில் மாத்திரம் இல்லாது அந்த வரி நிரந்தரமாக மாகாணத்தில் உள்ள எல்லோரும் செலுத்தக் கூடிய வரியாகவும் அமைந்திருக்கிறது. ஆகையால், இதைப் போன்ற இத்தனைக் காரணங்களினால் இது வரவேற்கத் தகுந்தது என்று குறிப்பிட விரும்புகிறேன். இதற்கு முன் இந்த வரியில் இருந்த குறைபாடுகளையெல்லாம் அறிந்து, பலர் கூறிய குற்றச்சாட்டுகளையெல்லாம் ஆலோசித்து அறிவதற்கென்றே டாக்டர் லோகநாதன் என்பவரை நியமித்து அதைப் பரிசீலனை செய்தார்கள். அவர்கள் சமர்ப்பித்த அறிக்கையை, குறை கூறியவர்கள் எல்லாம்கூட, எந்த வர்த்தக சமூகத்தினர் இது தாங்க முடியாத வரி என்றெல்லாம் குறை சொன்னார்களோ அவர்களெல்லாம், டாக்டர் லோகநாதன் அவர்களின் அறிக்கை சிறந்தது, ஏற்றுக் கொள்ளத் தக்கது என்று மாகாணம் முழுவதுமே ஒரு முகமான பாராட்டுகள் வந்திருப்பதை நாம் அறிவோம். இந்தச் சபையிலே கூட இதைப் பற்றிப் பலர் சொன்னார்கள். இப்போது வந்திருக்கிற இந்தத் திருத்த மசோதாவில் டாக்டர் லோகநாதன் அவர்கள் என்னென்ன சிபாரிசுகளைச் செய்தார்களோ அவைகள் அனைத்தையும்—ஒரு சில விஷயங்களைத் தவிர மற்றதையெல்லாம்—அப்படியே அங்கீகரித்திருக்கிறார்கள். ஆனால் இதில் என்ன மாறுதல்—முக்கியமான மாறுதல்—என்றால்,' வரி விஷயத்தில் அவர்கள் குறிப்பிட்டிருந்த அந்த ஏற்பாட்டை—வரி வீதத்தை—அரசாங்கம் ஏற்றுக் கொள்ளத் தயங்குகிறது. அப்படித் தயங்குகிற காரணத்தினால், அதை மாத்திரம் ஏற்றுக் கொள்ளாமல், அதைத் தவிர மற்றப் பகுதிகள் அனைத்தையும்

[Sri A. Vedarathnam] [11th February 1959]

அப்படியே ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஒரு சிலர் சொல்லலாம். ஏன் அந்த விகிதத்தை ஒத்துக் கொள்ளத் தயங்கவேண்டும் என்று. இதற்கான காரணத்தை கனம் மந்திரி அவர்கள் தன்னுடைய ஆரம்ப உரையிலேயே குறிப்பிட்டிருக்கிறார்கள். அரசாங்கம்—ஒரு பெரிய மாகாணப் பொறுப்பை ஏற்று நடத்துகிற அரசாங்கம்—ஹேஷ்யத்தை அடிப்படையாகக் கொண்டு, அவர்கள் ஒரு முடிவுக்கு வருவது சாத்தியமல்ல என்று அவர்கள் சுட்டிக் காட்டியதை கனம் அங்கத்தினர்கள் அத்தனை பேரும் கவனித்திருப்பார்கள் என்று எண்ணுகிறேன். அவர், ஹேஷ்யமாக ½ சதவீதம் வரி போட்டால், இந்த வரி எதிர்பார்க்கின்ற அளவுக்கு வந்து விடும் என்று கூறியதை நம்பி அந்த வரியை விதிக்க முன் வந்தால், பிற்பாடு அந்த அளவு வரி வசூலாகாமல் துண்டு விழுந்தால்—பல கோடிக்கணக்கான ரூபாய்கள் துண்டு விழுந்தால்—மாகாண நிர்வாகம் ஸ்தம்பித்து விடக் கூடிய நிலை ஏற்படும். அந்த மாதிரி நெருக்கடியான நிலையில் தன்னை வைத்துக் கொள்ளக் கூடாது என்ற காரணத்தினால்தான் வரி வீதம் ஒன்றைத் தவிர மற்றது எல்லாவற்றையும்—டாக்டர் லோகநாதன் அவர்கள் சொன்னதையெல்லாம்—இந்தச் சட்டத்தின் மூலமாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் கொஞ்சம் கூர்ந்து கவனிக்க வேண்டும். அப்படிக் கூர்ந்து கவனித்தால், இதைப் பற்றிக் குறை கூறுவதற்கு இடமே இருப்பதற்கில்லை என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இந்த வரியினால் வியாபாரிகள் விஷயத்தில் நெருக்கடி ஏற்பட்டு, அவர்களுக்குக் கஷ்டம் வருகிறது என்று கூறப்படுகிறது. இங்கு பேசிய பல அங்கத்தினர்களும் இந்த வரியை ஏதோ வியாபாரிகள் சொந்த சொத்திலிருந்து செலுத்துகின்ற மாதிரியாக நினைத்துப்பேசினார்கள்—வியாபாரிகள் செலுத்துகிறார்கள் என்பது கோபுரத்தை பொம்மை தாங்குவது போல என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும்—வியாபாரிகள் யாரும் இந்த வரியைச் செலுத்தவில்லை. எந்த பில்லைப் பார்த்தாலும் அதிலே விற்பனை வரி என்ற ஒரு அம்சத்தைச் சேர்த்து வாங்குகிறவர்களிடத்தில் வசூலிக்கிறார்களேயல்லாமல் அவர்கள் கையிலிருந்து செலுத்துகிற வரி அநேகமாய் ஒரு தம்படிகூட இல்லை என்று சொன்னால் அது மிகையாகாது. அப்படி இருக்கும்போது இது வர்த்தகர்களுக்கு ஏற்பட்ட ஒரு வரி என்று எண்ணிப் பலர் கூறுவதைப் பார்க்க வியப்பாக இருக்கிறது. அதுவும் உணவுப் பொருள்களைப் பற்றி மிக முக்கியமாகக் குறிப்பிடப்பட்டது. அன்றைய தினம் அண்ணல் காந்தியடிகள் செய்த உப்புச் சத்தியாக்கிரஹத்தை ஒரு பெரிய சான்றாக எடுத்துக் காட்டப்பட்டது. உணவுப் பொருள்களுக்கு ஏற்பட்ட வரியைக் கூடாது என்று எதிர்த்து, ஒரு பெரிய சத்தியாக்கிரஹத்தை நடத்தி, அந்த அடிப்படையில் வெற்றி கண்டிருக்கிறார்கள். அந்த பரம்பரையைச் சேர்ந்தவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்துகிற காரணத்தினால், அப்போது உணவுப் பொருள்களுக்கு வரி கூடாது என்று சொன்னவர்களுக்கு இந்த மாதிரி ஒரு வரியைப் போட இப்போது என்னப் பிரமேயம் வந்தது என்று அவர்கள் கொஞ்சம் கூர்ந்து கவனிக்கவேண்டும். வெள்ளையர்கள் ஆட்சி செய்து வந்த காலத்தில், உப்புக்கு—மூட்டைக்கு இரண்டணா உள்ள உப்புக்கு—48 மடங்கு, 50 மடங்கு வைத்து ஒரு ரூபாய் முதல் ஐந்து ரூபாய் வரையில் தீர்வை போட்டார்கள். அப்போது காந்தியடிகள் அந்த வரியை ஆட்சேபித்தார். உணவுப் பொருள்களுக்கு இதுபோல் வரி போடுவதைப்பற்றி யாருக்கும் ஆட்சேபம் கிடையாது. அப்போது ஒரு பைசா, இரண்டு பைசா சமாசாரம் அல்ல. 48 மடங்கு, 50 மடங்கு வரியை உணவுப் பொருள்களின் பேரில் போட்டபோது அதை எதிர்த்தார்கள் என்பதை நினைவில் வைத்துக் கொள்வார்கள், இதை ஆட்சேபிக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

**(Srimathi Rajathi Kunjithapatham in the Chair.)**

இந்த நிலையில் உணவுப் பண்டத்தின் பேரில் அரசாங்கம் ஏன் வரி போட முன் வந்திருக்கிறது என்று கேட்டால், நாம் எந்தக் கட்டத்தில் இருக்கிறோம் என்ற விஷயத்தைக் கொஞ்சம் அவர்கள் சீர்தூக்கிப் பார்த்தால் அந்தக் குற்றச்சாட்டைக் கூற அவர்கள் முன் வரமாட்டார்கள். இப்போது நாம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மத்தியில் இருக்கிறோம் [illegible] நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். திட்ட மத்தியில்



11th February 1959] [Sri A. Vedarathnam]

இருக்கிற இந்தக் காலத்தில் இது போன்று முக்கியமான பொருள்களுக்கு இது வரையில் வசூலித்து வந்த வரியை விட்டால், அதனால் அரசாங்கத்திற்கு வரவு-செலவுத் திட்டத்தில் பல கோடிக் கணக்கான ரூபாய் துண்டு விழுந்தால் திட்டம் ஸ்தம்பித்து விடும் என்று உணர்ந்தவர்கள் இதைப்பற்றி அதிகம் குறை கூறமாட்டார்கள். இப்போது நாம் கொடுக்கும் ஒவ்வொரு தம்பிடியும், இந்த விற்பனை வரி மூலமாக ஒரு கோடி ரூபாய் உபரி வருமானம் கிடைத்தால், இரண்டு கோடி ரூபாயாக இந்த மாகாணத்தினுடைய ஐந்தாண்டுத் திட்டத்தின் செலவுக்காக மத்திய சர்க்காரிலிருந்து கிடைக்கிறது என்ற விஷயத்தை உணர்ந்தவர்கள் இதை ஆட்சேபிக்க வேண்டிய அவசியமில்லை. நாம் கொடுக்கும் ஒவ்வொரு தம்பிடியும் இன்னொரு தம்பிடியைச் சேர்த்துக் கொண்டு நமது அபிவிருத்தித் திட்ட வேலைகளுக்குக் கிடைக்கிறது என்று சொன்னால், மத்திய சர்க்காரிடத்தில் சண்டை போடவேண்டும், சண்டை போட்டுப் பணத்தை வாங்க வேண்டும் 10-3 a.m. என்று சொல்லும்போது, சண்டை ஒன்றுமில்லாமல், சுலபமாக, பெருஞ் சுமையாகக் கூட இல்லாமல் தம்பிடிக் கணக்கிலேயே—சிகரெட் பிடிக்கும் செலவுகூட ஆகாது, சினிமாவிற்குச் செலவு செய்வதில் ஒரு பகுதி கூட இருக்காது—அந்த முறையில் இந்த வரியின் மூலமாக அதிகப்படியான பணத்தை அடைவதற்கான வழி ஏற்படுகிறது என்பதை நன்கு உணர வேண்டும். இருந்தபோதிலும் "வரி" என்று சொன்னால், அதைப்பற்றி குறை கூற வேண்டியது தம்முடைய கடமை என்ற பழக்கத்திலே வருகிற காரணத்தால் இதைப்பற்றி அம்மாதிரி கூறுகிறார்களே அல்லாமல் ஏன் உணவுப் பொருளுக்கும் இப்பொழுது வரி போட்டிருக்கிறது என்று பார்ப்பதில்லை. ஒரு மூட்டை நெல் விலை ரூ. 20 இப்பொழுது இருப்பதாக வைத்துக் கொண்டாலும் ஐந்து மூட்டையின் விலை உயர்ந்தபட்சம் ரூ. 100 ஆகிறது. ரூ. 100 பெருமானமுள்ள ஐந்து மூட்டை நெல்லுக்கு ஒரு ரூபாய் வரி விதிக்கும்போது, ஒவ்வொரு படி நெல்லுக்கும் அந்த ஒரு ரூபாயை பகிர்ந்து விதிக்கும் காலத்திலே கடலிலே கரைத்த பெருங்காயம் மாதிரி ஆகிவிடுகிறதே அல்லாமல், தாங்க முடியாத பெரும் சுமை என்று சொல்ல முடியாது. எந்த வியாபாரியின் தலையிலேயும் வைத்து, அவர்கள் கொடுக்க முடியாத நிர்ப்பந்தம் ஆகிவிடவில்லை என்பதை அவர்கள் கூர்ந்து கவனித்தால், அம்மாதிரி குற்றச்சாட்டுக்களைக் கூற அவர்கள் முன் வரமாட்டார்கள் என்பதை நான் கூற விரும்புகிறேன்.

அப்படிக் கொடுக்கின்ற ஒவ்வொரு ரூபாயும் இன்னொரு ரூபாயைச் சேர்த்துக்கொண்டு நம்முடைய மாகாணத்திற்கு திரும்பி வருகிற நிலைமையை அவர்கள் கொஞ்சம் கவனிக்கவேண்டும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் வெற்றிகரமாக நடந்துவிடுமேயானால், அப்பால் இந்த நாட்டை அசைக்கின்ற சக்தி உலகத்திலே யாருக்கும் இல்லை என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். எனவே, அந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்த வேண்டியது நம்முடைய கடமை. அதிலும் இப்பொழுது நம்முடைய மாகாணம் மிகப் பின்தங்கிய நிலையில் இருக்கிற காரணத்தால் பொருளாதாரத் துறையில் உயருவதற்கான முறையில் நாம் யாருக்கும் அதிகக் கஷ்டம் இல்லாமல், சில பைசாக்களை அதிகமாகக் கேட்பதன் மூலமாக, சில கோடி ரூபாய்களை நம்முடைய மாகாணத்திற்குக் கொண்டு வந்து சேர்க்கிறதற்கு இந்த வரி ஒரு வாய்ப்பாக, சாதனமாக அமைகிறது என்று சொன்னால், அதைக் கூர்ந்து கவனித்து, நம்முடைய அரசாங்கத்தை, நம்முடைய விற்பனை வரித்துறையில் மசோதாவைக் கொண்டுவந்திருக்கிற கனம் அமைச்சர் அவர்களுடைய கையைப் பலப்படுத்த வேண்டியது இங்குள்ளோர் எல்லோருடைய கடமையாகும் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். அதற்கு மாறாக, அவர்களை பலவீனப்படுத்தாமலாவது இருந்தால் அது பெரிய உதவி ஆகும் என்று நான் அவர்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

எனவே, இந்த வரி ரொம்ப சுலபமான வரி, கஷ்டம் இல்லாமல் யாரும் எளிதிலே பைசாவாக செலுத்துகிற வரி. இது யாரையும் எப்படியும் பாதித்து விடுவதற்கு இடமில்லை என்ற விஷயத்தை நான் நினைவூட்டுகிறேன். அவர்கள் சொன்னார்கள் வரி அதிகமாக

இருக்கும் காரணத்தால் தான் கள்ள மார்க்கெட்டு, கள்ளக் கடத்தல் போன்ற காரியங்களிலே ஈடுபடுவதற்கு ஏற்பாடு ஆகின்றது; சம்பளம் குறைவாக இருக்கும் காரணத்தால் லஞ்சம் வாங்குகிறார்கள், என்றெல்லாம் எனக்கு முன் பேசியவர் கூறினார். அது காரணமே அல்ல என்ற விஷயத்தை நான் அவர்களுக்குக் குறிப்பிட விரும்புகிறேன். "இரு வேறு உலகத்து இயற்கை திரு வேறு தெள்ளியர் ஆதலும் வேறு" என்று வள்ளுவப் பெருந்தகை கூறியிருக்கிற மாதிரி, கள்ள மார்க்கெட் வழியிலேயும் அல்லது ஏதோ ஒரு தப்பான வழியிலேயும் பணம் சம்பாதிப்பது என்பது சிலருடைய மனப்பான்மை. எவ்வளவு தான் கஷ்ட ஜீவனம் நடத்தியபோதிலும்கூட யோக்கியமாக வாழ்கிறது என்ற உறுதியைக் கடைப்பிடித்து வாழ்க்கை நடத்துகின்றவர்கள், என்னதான் நெருக்கடியைக் கொண்டுவந்தாலும்கூட, ஒருக்காலும் அவர்கள் வாழ்க்கையில் தவறு செய்ய மாட்டார்கள். தவறு செய்ய வேண்டும் என்பதை கொள்கையாக வைத்திருக்கின்றவர்களை வைஸிராய் பதவியில் வைத்து, மாதம் 21 ஆயிரம் ரூபாய் சம்பளம் கொடுத்தால்கூட, அவர்களால் யோக்கியமாக நடக்க முடியாது. ஆகவே, அதிகமாகச் சம்பளம் கொடுப்பதினால் மட்டும் ஒருவரை யோக்கியமாக நடக்கும்படிச் செய்துவிட முடியாது. மிகச் சொற்ப சம்பளத்தார்கூட லஞ்சம் வாங்காமல் யோக்கியமாக நடக்கிறார்கள் என்று சொன்னால் அது பிறவியிலே ஏற்பட்ட குணம். தவறு செய்கின்றவர்களை யோக்கியமாக நடக்கும்படியாக இங்குள்ளவர்கள் அவர்களுக்கு யோசனை கூறவேண்டுமே யல்லாமல், சம்பளக் குறைவு என்ற காரணத்தைக் காட்டி, அவர்கள் தவறு செய்யலாம், வரி விதிப்பின் காரணமாக அவர்கள் எப்படி வேண்டுமானாலும் நடக்கலாம் என்று யோசனை சொல்வது நியாயம் அல்ல என்று தான் நான் அவர்களுக்குக் கூற விரும்புகிறேன்.

இப்பொழுது 1 பர்சென்ட் என்று போட்டிருக்கும் வரியானது அதிகம் என்று கூறுவதற்கில்லை. நம்முடைய நாட்டின் பொருளாதாரம் 20 ஆண்டுகளுக்கு முன் இருந்த நிலையில் இப்பொழுது இல்லை என்பதை நன்கு உணர்ந்தவர்கள் இதில் இருக்கும் வரிகளைக் கஷ்டம் இல்லாமல் செலுத்துவதற்கு முடியும். அப்படிச் செலுத்தும் பணம் நமக்கு இரு மடங்காகத் திருப்பி வந்துவிடும்.

எந்தத் தொழிலாவது இதனால் பாதிக்கப்படுகிறது என்று கூறுவார்களோ, அதற்கு விதிவிலக்கு அளிக்க, நாம் எல்லோரும் சேர்ந்து சொல்லுகிற இந்த யோசனையைக் கேட்டு நடக்கத் தயாராக இருக்கும் சர்க்கார் இதற்கு முன் அம்மாதிரி எத்தனையோ பாதிக்கப்பட்ட தொழில்களுக்கு வரி விலக்கு அளித்தது மாத்திரம் அல்லாமல், ரிபேட் கூட கொடுக்க முன் வந்திருக்கிறார்கள் என்று சொன்னால், அம்மாதிரி கஷ்டப்படுகிற தொழில்களுக்கு சர்க்கார் விதி விலக்கு தருவார்கள். இன்னும் மானியங்களைத் தருவதற்குக் கூட சூழ்நிலை இங்கே இருக்கிற காரணத்தால், நம்முடைய அரசாங்கம் அதை ஏற்று நடத்தத் தயாராக இருக்கிற காரணத்தால், ஏதோ பாதிக்கும் என்ற உத்தேச எண்ணத்தை வைத்துக் கொண்டு இதை ஆட்சேபிக்கவேண்டியதில்லை என்று தான் சர்க்காருக்கு நான் கூற விரும்புகிறேன்.

அதோடு இந்த வரி விஷயத்திலே பெரும்பாலும் குறை கூறுகிறவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், இந்த வரி வசூலிக்கிற அதிகாரிகள், அவர்கள் சில இடங்களிலே ரொம்ப கடுமையாக நடந்து கொள்ளுகிறார்கள் என்ற அந்தக் குற்றச்சாட்டு கூறப்படுகின்றன. கனம் அமைச்சர் அவர்கள் இந்த விஷயத்தில் அவர்களுடைய கவனத்தைச் செலுத்துவார் என்று நினைக்கிறேன். வருமான வரி வசூலிக்கிற அதிகாரிகளைப் போற்றுகிறவர்கள், அதே சமயத்தில் விற்பனை வரி வசூலிக்கிற அதிகாரிகளைத் தூற்றுகிறார்கள் என்றால், அதற்கு என்ன காரணம் என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்த்து, அம்மாதிரி அதற்கு உண்மையிலேயே இடம் இருக்குமானால், அதைப் பரிகரிக்க அவர்கள் முன்வரவேண்டும்.



கணக்கு வைத்துக்கொள்வது பெரிய கஷ்டம். அதுவும் விற்பனை வரிக் கணக்குக் காட்டுவது அதிகக் கஷ்டம் என்று பலர் கூறியதையும் அவர்கள் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். அம்மாதிரி வியாபாரம் பண்ணுகிறவர்கள் அத்தனை பேரையும் இதிலிருந்து விடுவித்தாய்விட்டது. காய்கறி வியாபாரம் செய்கிறவர்களைப் பொறுத்தவரையில், வரி விதிக்கும் வரம்பை 30 ஆயிரத்துக்கு உயர்த்தி விட்டார்கள். அதற்குமேலே பெரிய வர்த்தகம் செய்கின்றவர்கள் கணக்கு வைத்துக் கொள்ளாமல் இருக்க முடியாது. ஆனால், யார் அஞ்சவேண்டும்? மடியிலே கனம் இருப்பவர்கள் அஞ்ச வேண்டும். மடியிலே கனம் இல்லாதவர்கள் யாரும் அஞ்ச வேண்டிய அவசியம் கிடையாது. யார் நேர்மையான கணக்கு வைத்துக் கொள்ளாமல் தவறான முறையில் இரட்டைக் கணக்கு ஜோடிக்கிறார்களோ அவர்கள் தான் இந்த அதிகாரிகளைப் பார்த்து அஞ்ச வேண்டிய நிலை இருக்கிறதே அல்லாமல், யோக்கியமாக, நேர்மையாக, உண்மையாகக் கணக்கு வைத்திருப்பவர்கள் யாரைப் பார்த்தும் அஞ்ச வேண்டிய அவசியம் இல்லை. அதிகாரிகள் கணக்கைக் கேட்டவுடன் அவர்களிடம் கணக்குப் புத்தகங்களை எறிந்துவிட்டு, கவலையற்றுச் சும்மா இருக்கலாம். ஏதாவது தவறாக இருக்குமானால்தான் அவர்கள் அஞ்ச வேண்டிய நிலைமை வருகிறது என்பதை இந்த இடத்தில் நினைவூட்ட விரும்புகிறேன்.

இந்த வரியின் மூலம் அரசாங்கத்திற்கு அவர்கள் எதிர்பார்க்கின்ற வருமானம் வரவேண்டுமானால், இதில் வியாபாரிகள் ஒத்துழைக்கவேண்டும். இந்த வரியைக் கொடுக்காமல் "தபாய்த்துக்" கொண்டு ஏமாற்றுகிறவர்களுடைய கூட்டம் மாநிலத்தில் நிரம்ப இருக்கிற காரணத்தினால், அம்மாதிரி ஏமாற்றுவதற்கு வழி இல்லாமல் இந்த வரியை வசூலிக்கும் இலாகா இதைக் கட்டுப்படுத்த முன்வருமானால், இப்பொழுது போட்டிருக்கும் வரி விகிதம் குறைவாக இருந்தாலும்கூட, குறைந்தபட்சம் 50 பர்சென்ட் அதிக வருமானம் வரக்கூடும் என்பதை நான் அமைச்சர் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சென்னை மாநகரை எடுத்துக்கொண்டால், ஒரு நாளைக்கு நூற்றுக் கணக்கான லாரிகள் வந்துகொண்டிருக்கின்றன. அந்த லாரியில் சரக்கு அனுப்புகின்றவர்கள் கணக்கு எழுதுவது இல்லை; "பில்" எழுதுவது இல்லை. லாரியில் கொண்டுவந்து சரக்குகளை விற்கின்றவர்களிடத்திலே கணக்குக் காட்டுவதும் இல்லை; பில் கொடுப்பதும் இல்லை. ஆனால், இதற்கு "செக்" பண்ணுவதற்கு ஆள் வைத்திருக்கிறார்கள். தயவு செய்து கனம் ராமைய்யா அவர்கள் செய்த மாதிரி, தொழில் அமைச்சர் அவர்கள் கூட மாறு வேடம் பூண்டாவது "செக்" பண்ணுகிற ஆசாமிகள் ஒரு எல்லையிலே போய் சட்டைப் பையில் மாலை நேரத்தில் கை வைத்தால் ரூ. 200, ரூ. 500 வரையில் ஒருவர் செக் பண்ணும் இடத்தில் அவர்கள் சம்பாதித்துக்கொண்டு போகிறார்கள் என்பதைத் தெரிவித்து கொள்ள முடியும். அவர்கள் இதை சோதனை செய்து பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இம்மாதிரி வரியை துஷ்பிரயோகம் செய்யாமல், ஏமாற்றாமல், ஏமாற்றுவதற்கு இடம் கொடுக்காமல் வசூலிக்க தக்க ஏற்பாடு செய்ய வேண்டும். வசூலிக்கும் வரி நல்ல முறையில் வசூலிக்கப்படுவதோடு சிக்கனமாக சிதறாமல் வசூலிக்கப்பட வேண்டும். இதைப்பற்றி நாம் ஒவ்வொருவரும் கனம் மந்திரி அவர்களுக்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். டாக்டர் லோகநாதன் அவர்களுடைய 10-40 a.m.
அறிக்கையில் எப்படி காணப்படுகிறதோ அந்த முறையிலேயே வரி போடப்பட்டிருப்பதால் இதை எல்லோரும் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். வரி விதிகம் ஒன்றைத் தவிர மற்றவைகள் எல்லாம் அநேகமாக அப்படியே தான் அறிக்கையில் கண்டபடி இருக்கிறது என்ற காரணத்தால் இதை எல்லோரும் ஆதரித்து அரசாங்கத்தின் கையை பலப்படுத்தி இதை அமுலுக்குக் கொண்டு வருவதற்கு உதவியாக அவர்களுக்கு பலம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த மசோதாவை நான் முழு மனதுடன் ஆதரிக்கிறேன்.

**Sri M. P. SARATHI**: சட்ட மன்ற கனம் தலைவி அவர்களே, இந்த விற்பனை வரி மசோதாவின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். முக்கியமாக நமது சென்னை ராஜ்யத்திலேயே

[Sri M. P. Sarathi] [11th February 1959

விற்பனை வரிதான் அதிகப்படியான வருமானத்தைக் கொடுக்கிறது என்று சொல்லப்படுகிறது. இது எல்லோரும் அறிந்த விஷயம் தான். இருந்த போதிலும் இதைக் கொண்டுவருவதற்கு சர்க்காருடைய நோக்கம், சர்க்காருடைய நிதியை அதிகப்படுத்த வேண்டுமென்பதற்காகவும், சர்க்காருக்கும் வரகூடிய பணம் போதவில்லை அதை அதிகப்படுத்த வேண்டுமென்ற காரணத்தினாலோ, இந்தப் பெயரில் இந்த சட்ட மன்றத்திற்கு இந்த திருத்த மசோதாவை கனம் மந்திரி அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

குறிப்பாக வியாபாரிகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாநாடுகள் கூட்டி ஒவ்வொரு வியாபார சங்கங்கள் மூலமாகவும், பொது மக்கள் மூலமாகவும் ஒரு முனை விற்பனை வரிதான் வேண்டும் என்று பல தீர்மானங்கள் போட்டு சர்க்காருக்கு அனுப்பி இருக்கிறார்கள். அதன் பயனாக டாக்டர் லோகநாதன் அவர்களை இதை பரிசீலனை செய்யச்சொல்லி அவருடைய அறிக்கையின் பேரில் ஒரு முனை விற்பனை வரி கொண்டு வரப்பட்டிருக்கிறது. அந்த முறையில் இந்தத் திருத்த மசோதாவைக்கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் இப்பொழுது கொண்டு வரப்பட்டிருக்கிற முறையானது இது அவ்வளவு சிறந்ததாக இல்லை. இப்பொழுது கொண்டு வந்திருப்பதைப் பார்த்தால் சிறு வியாபாரிகளுக்கு பயன் உள்ளதாகவே இல்லை. சிறு வியாபாரிகள் 25 ஆயிரம் ரூபாய்க்கு மேற்கொண்டு வியாபாரம் செய்தால் தான் அவர்களுக்கு விற்பனை வரி விதிக்கப்படும் என்று பலர் பலமாக சர்க்காருக்கு எடுத்துச் சொல்லியும், சட்ட மன்றத்தில் பலர் வலியுறுத்திச் சொல்லியும் கூட இப்பொழுது பத்தாயிரத்திற்கு மேற்பட்டால் வரி விதிக்கப்படும் என்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். ரூ. 7,500-க்கு மேற்பட்டாலேயே வரி உண்டு என்றும் தோன்றுகிறது. இப்படிப்பட்ட ஒரு சிரமத்தையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இது சிறு சிறு வியாபாரிகளுக்கு எவ்வளவோ கஷ்டத்தை உண்டாக்கும். முக்கியமாக பத்தாயிரம் முதற்கொண்டு இருபத்தி ஐயாயிரம் ரூபாய் வரையில் விற்பனை செய்தால் அவர்களுக்கு வரி இல்லை என்றும் அவருக்கு லைசென்சு இருக்கவேண்டும் என்று திருத்தினால் எவ்வளவு சிறந்ததாக இருக்கும் என்பதை சர்க்கார் யோசிக்க வேண்டும். ஒரு முனை வரி என்று பெயர் வைத்து இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதால் என்ன நிலைமை இருக்கும் என்பதை சர்க்கார் யோசித்துப் பார்க்க வேண்டும். சில சரக்குகளுக்கு மூன்று சத விகிதமும், சில சரக்குகளுக்கு இரண்டு சத விகிதமும், சில சரக்குகளுக்கு ஒரு சத விகிதம் என்றும் விற்பனை வரி போடப்பட்டிருக்கிறது. ரூ. 25,000-க்கு மேல் விற்பனை செய்யக்கூடிய வியாபாரிகள் கணக்கு வைத்துக்கொண்டு வரி கொடுக்க வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு ஒரு முனை வரி என்ற பெயரைச் சூட்டி வசூலிக்கப்படுகிறது. இது எந்த நிலைமைக்கு வியாபாரிகளைக் கொண்டு போய் விடும் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட நிலைமையைப் பார்த்தால் வியாபாரிகளை மேலும் மேலும் கீழே மட்டம் தட்டுவதாகத்தான் ஆகும். அந்த நிலைமைக்கு சர்க்கார் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். என்று நான் உணருகிறேன்.

அடுத்தபடியாக, மைசூர், கேரளா போன்ற ராஜ்யங்களில் உணவுப் பொருள்களுக்கு விற்பனை வரியே கிடையாது. ஆனால் இங்கே போட்டிருக்கிறார்கள். அதைப் பார்க்கும்போது டாக்டர் லோகநாதன் அவர்கள் கூட உணவுப்பொருள்களுக்கு அரை சத விகிதம் வரி போதும் என்று சொல்லி இருக்கும்போது ஒரு சத விகிதம் வரி போட வேண்டும் என்று கமிட்டியார் தீர்மானித்திருக்கிறார்கள். ஆகவே உண்மையிலேயே உணவுப்பொருள்கள் விஷயத்திலாவது இந்த ஒரு சத விகிதத்தை எடுத்து விட்டால் உண்மையிலேயே நன்றாக இருக்கும். முக்கியமாக நமது பழம் பெரும் தலைவர் ஸ்ரீ எ. வேதரத்னம் அவர்கள் குறிப்பிட்டது போல மாகாத்மா காந்தி அவர்களுடைய மதுவிலக்குத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதற்கு ஏற்கெனவே போடப்பட்ட இந்த விற்பனை வரியானது இப்பொழுது எவ்வளவோ வருமானத்தைக் கொடுக்கிறது. அதன் வாயிலாக எவ்வளவோ குடும்பங்கள் காப்பாற்றப்பட்டன என்றும் சொல்லப்பட்டது. ஆனால் இப்பொழுது போடப்போகும் வரியினால் எவ்வளவோ வியாபாரிகளுடைய குடும்



11th February 1959] [Sri M. P. Sarathi]

பங்கள் நசுக்கப்படப்போகின்றன என்பது நன்றாகத் தெரியும். அவர்களை நசுக்குவதற்கு என்று கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த மசோதா அவ்வளவு நன்மையாக இல்லை, சிறந்தது இல்லை. இதைக் கண்டால் மகாத்மா காந்தி அவர்கள் ஒப்புக்கொள்வாரா என்பதையும் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இப்படி வரி போடுவதனால் அவருக்கு மதிப்புக் கொடுத்ததாக ஆகுமா என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிடாமல் இருக்க முடியாது. சாதாரணமாக வெற்றிலை பாக்கு விற்றால் அதற்கு வரி என்று சொல்லப்படுகிறது. வெற்றிலை பாக்கு வாங்குவது போல் ஒரு பைசா வரி கொடுக்கப்போகிறார்கள் என்று சொன்னது இப்பொழுது இரண்டு பைசாக்களாகி அது மாகாணம் பூராவிலும் அதிகப்படியான வருமானத்தைக்கொடுக்கிறது. இதன் மூலம் மொத்தத்தில் பதினைந்து கோடி ரூபாய் வருமானம் வருகிறது என்பதையும் நாம் உணர வேண்டும்.

சாதாரணமாக இப்பொழுது உணவு உற்பத்தி அதிகரிக்க வேண்டும் என்று சர்க்கார் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு வேண்டிய திட்டமும் சர்க்காரிடம் இருக்கிறது. உணவு உற்பத்திக்கு முக்கியமாக வேண்டியது உரம், பிண்ணாக்கு. அவைகளுக்கு மூன்று சத விகிதம் வரி போடப்பட்டிருக்கிறது. நாம் உணவு உற்பத்தி செய்ய வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிற காரணத்திற்காகவாவது உரம், அதன் உற்பத்தி சாமான் முதலியவைகளுக்கு வரி விதிக்காமல் இருக்கும்படியாக நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இதற்கு முன்னதாக கெட்டுபோகக்கூடிய வஸ்துக்களாகியவற்றிற்கு வரி கிடையாது, அதாவது காய்கறி முதலியவைகளுக்கு வரி இல்லாமல் இருந்தது. சீக்கிரம் கெட்டுப்போகக்கூடிய வஸ்துக்களுக்கு வரி இல்லாமல் இருந்தது. இப்பொழுது கொண்டு வரப்பட்டிருக்கும் கமிட்டி ரிப்போர்ட்டில் அவைகளுக்கும் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. அப்படி வரி போட வேண்டுமென்று கமிட்டி சிபாரிசு செய்திருக்கிறது. அதற்குக் காரணம் கூறலாம், 30 ஆயிரம் ரூபாய்க்கு அதிகமாக வியாபாரம் செய்வதாக இருந்தால் தான் அவர்களை இது பாதிக்கும் என்று சொல்லலாம். சாதாரணமாக கெட்டுப்போகக்கூடிய சாமான்கள் ஒரு லாரி நிறைய வருகிறது என்று வைத்துக்கொண்டால், அதன் மூலம் ஒரு நாளைக்கு 3,000 அல்லது 2,500 ரூபாய் விற்பனை வரலாம் என்று தோன்றலாம். அந்த லாரி முழுவதும் விற்பனையானால் அந்தப் பணம் வரும் என்பதில் சந்தேகம் இல்லை. அதற்கு என் வரி விதிக்கக்கூடாது என்று நினைக்கலாம். ஆனால் அவைகள் ஒரு நாளில் விற்பனையாகாமல் போனால் அவ்வளவும் நஷ்டம் தான். அப்படியே மொத்தமாக கெட்டு விடக்கூடிய நிர்பந்தம் அதற்கு இருக்கிறது. கெட்டு விடக்கூடிய வஸ்துக்களுக்கு லாபம் வருகிறது என்று கருதினாலும் கூட அதன் மூலம் அதிகப்படியான நஷ்டமும் வரும் என்பதை கொஞ்சம் யோசித்துப் பார்க்க வேண்டும். இது எந்த நிலைக்குக் கொண்டு போய் விடும் என்பதை சர்க்காருக்கு எச்சரிக்கை மூலமாக நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக உணவு பொருள்களுக்கு ஒரு சத விகிதம் என்றால் அதைச் சேர்ந்த பொருள்களாகிய மற்ற மிளகாய், மஞ்சள், கடுகு போன்ற பொருள்களுக்கும் ஒரு சத விகிதம் ஏற்படுத்தினால். நன்றாக இருக்கும். இவைகளுக்கு எல்லாம் ஏறக்குறைய மூன்று சத விகிதம், இரண்டு சத விகிதம் என்று போடப்பட்டிருக்கிறது. ஆகவே உணவு பொருள்கள் என்று சொல்லக்கூடியவைகளுக்கு எல்லாம் ஒரு சத விகிதம் போட வேண்டும் இல்லாவிட்டால் அவைகளுக்கு வரியே இல்லாமல் எடுத்து விட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பால், பால் போன்ற பண்டங்களுக்கு வரி உண்டு என்று சொல்லுகிறார்கள். மற்ற உணவு பொருள்களுக்கு மூன்று சத விகிதம் என்று இருப்பதை ஒரு சத விகிதம் என்று ஏற்படுத்த வேண்டும். பொது மக்களுக்கும் சர்க்காருக்கும் ஒரு முனை வரி என்றால் அது விளங்காமல் இருக்கிறது. அதை நல்ல முறையில் விளக்க வேண்டும். ஒரு முனை வரியால் லாபம் உண்டு என்ற ஒரு காரணத்தைக் காட்டியாவது அவர்களுக்கு சரியானபடி விளங்கும்படியாக ஒரு அறிக்கை விடவேண்டும்

[Sri M. P. Sarathi] [11th February 1959

என்று கேட்டுக்கொள்ளுகிறேன். சிறு சிறு வியாபாரிகளுக்கு அவ்விதம் அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொண்டு நான் என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

**Sri A. SAMUEL NADAR** : கனம் சட்ட மன்றத் தலைவி அவர்களே, இந்த மசோதாவை ஆதரித்து சில வார்த்தைகளைப் பேச விரும்புகிறேன். 1939-வது வருஷத்தில் விற்பனை வரி 100-க்கு ½ விகிதம் என்று சாதாரண முறையில் ஆரம்பிக்கப்பட்டது. நாளா வட்டத்தில் கோர்ட்டு தீர்ப்புகள் சட்டத்திற்கு விரோதமாய் இருந்ததாலும் வியாபாரிகளுக்கு இருந்த சிரமங்களை அனுசரித்தும் விற்பனை வரி சட்டத்தை திருத்தி அமைக்க வேண்டி ஏற்பட்டது. நம் முன்னால் இருக்கும் மசோதா பெரும்பாலும் வியாபாரிகளுக்குள்ள தொல்லைகளை நீக்கும் என்று எதிர்பார்க்கிறேன். பல பொருள்களுக்கு ஒரு முனை வரி வசூலிப்பது என்று இம்மசோதா வழி செய்திருக்கிறது. உணவுப் பொருள்களுக்கும், காய்கறி போன்று அழுகும் வஸ்துக்களுக்கும் வரி விலக்குக் கொடுப்பது நல்லது. தூத்துக்குடித் துறைமுகத்திலிருந்து தும்பு, ஈக்கி வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. அது ஒரு குடிசைத் தொழில். உள் நாட்டில் தயார் செய்து வெளி நாடுகளாகிய அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. எனவே அது நமக்கு டாலர் தேடிக் கொடுக்கும் தொழிலாக இருக்கிறது. ஆகையால் அந்தத் தொழில் நசித்து விடாமல் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு. ஆகவே அத்தொழிலுக்கு விற்பனை வரி விலக்கு அளிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். அந்நிய நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படும் அந்த ஈக்கி 12 ரூபாய் ஆகிறது. ஆனால் அதற்குக் கப்பல் கேள்வி 22 ரூபாய் கொடுக்க வேண்டி இருக்கிறது. அதே போல் ஒரு அந்தர் தும்பு 50 ரூபாய் ஆகிறது. கப்பல் கேள்வியோ 20 ரூபாய் கொடுக்க வேண்டி இருக்கிறது. இதைக் கொடுத்து வெளி நாட்டோடு போட்டி போட வேண்டி இருக்கிறது. இப்பொழுது சில காலமாக ஆப்பிரிக்காவிலிருந்தும் தும்பு, ஈக்கி தயார் செய்து குறைந்த விலைக்கு வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். சைனாவில் இருந்தும் ஒரு வகை தும்பு, ஈக்கி தயார் செய்து குறைந்த விலைக்கு விற்கிறார்கள். அந்த அந்நிய நாட்டு சர்க்காரோடு போட்டி போட்டு வியாபாரம் செய்து, டாலர் தேடித்தரும் இந்தக் குடிசைத் தொழில் நசித்து விடாமல் காப்பது அரசாங்கத்தின் பொறுப்பு.

ப்ளாஸ்டிக்கிலும் ஒருவித சாமான்கள் செய்யப்பட்டு, தும்புத் தொழிலைப் பாதிக்கும் அளவுக்கு அந்நிய நாட்டுச் சரக்கு இங்கே வந்து மிக மலிவாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இவைகளின் போட்டியிலிருந்து நம்முடைய குடிசைத் தொழில் நசித்து விடாமல் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு. ஆகவே இத்தொழில்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இந்தத் தும்பானது பனையிலுள்ள மட்டையைச் சுற்றி திரித்து எடுப்பதாகும். இந்தத் தும்பு ஈக்கியானது சில காலத்துக்கு முன்னால் சென்னையில் இருந்தே ஏற்றுமதி செய்யப்பட்டது. ஆந்திராவில் இருந்தும் ஏற்றுமதி செய்யப்பட்டது. இப்பொழுது சென்னையில் இருந்து ஏற்றுமதியை நிறுத்தி விட்டார்கள். ஆந்திராவிலும் நிறுத்தி விட்டார்கள். அந்தத் தொழில் நசித்து வருகிறது. இப்பொழுது தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து மட்டுந்தான் ஏற்றுமது செய்யப்படுகிறது. சுமார் மூவாயிரம் பேர் இந்தத் தும்பு ஈக்கியை ஸைஸ் பண்ணி சாயம் காய்ச்சும் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்தத் தும்பை உற்பத்தி பண்ணும் தொழிலில் பல ஆயிரக் கணக்கானவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட இந்தக் குடிசைத் தொழிலுக்கு, அந்நிய நாட்டிலிருந்து டாலரைப் பெற்றுக் கொடுக்கக் கூடிய இந்தத் தொழிலுக்கு வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

**Sri M. S. SELVARAJAN** : சட்ட மன்ற கனம் தலைவி அவர்களே, பரிசீலனையில் இருக்கக் கூடிய விற்பனை வரிச் சட்டம் சம்பந்தமாக எனக்குத் தோன்றிய சில அபிப்பிராயங்களைத் தெரிவிக்க ஆசைப்படுகிறேன். இந்தச் சட்ட மன்றத்தில், இந்த விற்பனை வரியினுடைய அவசி



11th February 1959] [Sri M. S. Selvarajan]

யம், அதன் வழியில் இருக்கக்கூடிய சிரமங்கள் ஆகியவைகளைப் பற்றியெல்லாம் இதற்கு முன் பரிசீலிக்கப்பட்டிருக்கிறது. கடந்த 20 வருஷ காலத்திற்கு முன்பு இந்த தேசத்தில் முதல் முதலாக இந்த ராஜ்யத்தில் தான் இந்த வரி பரிட்சிக்கப்பட்டது. அன்றையதினம் ஆரம்பிக்கப்பட்டபோது சாதாரண நிலையில் இந்த வரி ஆரம்பிக்கப்பட்டது. கனம் ராஜாஜி அவர்கள் கொண்டு வந்தபோது 100 ரூபாய்க்கு அரை ரூபாய் விதித்தால் சில கோடிக்கணக்கான ரூபாய் வருமென்று கணக்கிடப்பட்டது. கனம் வேதரத்தினம் அவர்கள் குறிப்பிட்டது போல மதுவிலக்கை இந்த ராஜ்யத்தில் கொண்டு வந்ததன் விளைவாக ஏற்பட்ட பள்ளத்தை ஈடு செய்ய ஏற்படுத்தப்பட்ட இந்த வரி காலக்கிரமத்தில் உயர்ந்து, இன்றையதினம் இந்த ராஜ்யத்தின் ஜீவாதாரமான வரியாகி ஏராளமான பணத்தைக் கொடுக்கக் கூடிய நிலைக்கு உயர்ந்திருக்கிறது. இந்த வரி கொடுக்கக்கூடிய தொகையானது காலக் கிரமத்தில் வளர்ந்து இருப்பதை நாம் பார்க்கலாம். 20 வருஷத்திற்கு முன்பு இந்த இனத்தில் பத்தாயிரம் ரூபாய் வரை வியாபாரம் செய்யக்கூடியவர்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருந்தது. அன்றைய தினம் அரை ரூபாய் வரியாக வாங்கி வந்தார்கள். 20 வருஷ காலத்தில் தேசத்தில் பொருள்களின் விலை உயர்வை நினைத்துப் பார்க்கும் போது, அன்றையதினம் 10 ஆயிரம் ரூபாய் வியாபாரம் செய்து வந்த வியாபாரி இன்றையதினம் முப்பதாயிரம் முதல் நாற்பதாயிரம் வரை வியாபாரம் செய்தால்தான் அன்று இருந்த அளவுக்கு வியாபாரம் செய்ய முடியும் என்று எடுத்துக்கொள்ள முடியும். இன்றைய தினம் வளர்ந்து வரக்கூடிய பல தேவைகளையும் நினைத்துப் பார்க்கின்றபோது பத்தாயிரம் என்பது நியாயமான அளவு என்றுதான் சொல்ல வேண்டும். ஐயாயிரத்தில் இருந்து பத்தாயிரத்திற்கு உயர்த்திக் கொடுத்திருப்பது, இந்தப் பொறுக்குக் கமிட்டியானது நடுநிலையில் நின்று மிகவும் ஜாக்கிரதையாகப் பரிசீலனை செய்து பத்தாயிரம் வரை விலக்கு அளிக்கலாம் என்று முடிவு எடுத்திருப்பதாக தெரிகிறது. இந்தப் பிரச்னையிலும் இன்னும் சில இனங்களிலும் பொறுக்குக் கமிட்டியானது எவ்வளவு ஜாக்கிரதையாக முடிவுகள் எடுத்திருக்கிறது என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. வர்த்தகர்கள் நியாயமாக நடக்க முன் வந்தால்தான் இந்த வரி இனங்களை வசூலிப்பதில் ஏமாற்றம் இல்லாமல் இருக்க முடியும். வர்த்தகர்கள் நேர்மையாக நடக்க முன் வந்தால், அவர்கள் எந்த விதமான அபாயங்களுக்கும் அஞ்ச வேண்டியதில்லை. அதிகாரிகளால் எந்த வித துன்பமும் அவர்களுக்கு ஏற்படாது. வியாபாரிகளும் மக்களும் மனச் சாட்சிக்குச் சரியாக நடந்தால் எல்லாம் சரிவர நடக்கும். மக்களிடம் தாங்கள் வாங்குகிற பொருள்களுக்குக் கட்டாயமாகப் 'பில்' வாங்கித்தான் ஆகவேண்டும் என்ற கடமை உணர்ச்சி ஏற்பட வேண்டும். அதிலே கண்டிப்பு இருக்க வேண்டும்.

**Sri S. M. ANNAMALAI** : ஆன் எ பாய்ண்ட் ஆப் ஆர்டர். இந்த மன்றத்திலே பத்திரிகை படிக்கலாமா ?

**Sri M. R. KANDASWAMI MUDALIYAR** : அப்படிப் பத்திரிகை படிக்கக்கூடிய நபர் யார் ?

**Sri S. M. ANNAMALAI** : இப்பொழுது யார் பேசுகிறார்களோ, அவரே தான்.

**Sri M. R. KANDASWAMI MUDALIYAR** : கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வது தவறான கருத்து. மேஜையின் மேல் வைத்திருக்கக்கூடிய விற்பனை வரி பற்றிய புத்தகத்தைத் தான் அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். விஷயம் தெரியாமல் இப்படிப் பேசுவது சரியல்ல என்பதைக் கனம் அங்கத்தினர் உணரவேண்டும்.

**Sri M. S. SELVARAJAN** : இப்படி பொறுக்குக் கமிட்டியில் சில கண்டிப்பான ஏற்பாடு செய்திருப்பதைப் பார்க்கிறோம். கணக்கை ஒழுங்காகக் காட்ட முன் வரவில்லையானால் அவர்களுக்குத் தக்க தண்டனை—அபராதம்—விதிக்கத் தக்க அளவுக்கு சட்டம் கடுமையாக்கப் பட்டிருக்கிறது. அதாவது

[Sri M. S. Selvarajan] [11th February 1959

சாதாரணமாக விதிக்கக் கூடிய வரியைக் கூட்டி 1½ மடங்கு அதிகமாகவும் வரி விதிக்க வழி செய்யப்பட்டிருக்கிறது. அவ்வளவு கண்டிப்பு சட்டத்தில் காட்டப்பட்டிருக்கின்றது. அதே சமயத்தில் 4,000 ரூபாய் மேல் வியாபாரம் செய்கிற சிறிய வியாபாரிகளுக்குக் கூடத் தொந்தரவு உண்டாகக்கூடாது என்பதற்காக 7,500 ரூபாய் வரை விலக்கும் கொடுத்து லைசென்ஸ் பெற சலுகை அளித்து சட்டத்தை கடுமையாக்கியிருப்பதைப் பார்க்கிறோம்.

கோர்ட்டுகளுக்கு வழக்குச் செல்லக் கூடிய நிலைமை ஏற்பட்டால் முன்பு வரி விதித்த அதிகாரியே தவருக வரி விதித்திருந்தாலும் அந்தத் தவ
11-00 a.m. றைத் திருத்திக்கொள்வதற்கு ஒரு சந்தர்ப்பம் இருக்க வேண்டுமென்ற கருத்தோடு அதே அதிகாரியே மீண்டும் அதைப் பரிசீலனை செய்து முன்பு போட்ட உத்தரவை மாற்றலாம் என்பதற்குச் சட்ட பூர்வமாக வசதி ஏற்படுத்த வேண்டும் என்பது செலக்ட் கமிட்டியார் ஆசை.

வியாபாரிகளுக்கு வரி கொடுப்பதில் ஆர்வக் குறைவு இருக்கிறது என்பதை நான் ஒத்துக்கொள்ளத் தயாராய் இல்லை. சர்க்கார் போடுகிற வரியை சிறிய வியாபாரிகளாக இருந்தாலும் பெரிய வியாபாரிகளாக இருந்தாலும் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிருர்கள். ஆனல் வியாபாரத்திலே சாதாரணமாக படிப்பு இல்லாதவர்கள் கூட—கையெழுத்துப் போடத் தெரியாதவர்கள் கூட—கோடிக்கணக்கில் சம்பாதிக்கும் நிலை இருக்கிறது. பெண்களும் கூட வியாபாரத்தில் ஈடுபடுகிற வாய்ப்பு இருக்கிறது. இப்படிப்பட்டவர்களாலே மிகவும் சுலபமாக கணக்கை வைத்துக்கொள்ள முடியாத நிலை இருக்கிற காரணத்தினலே—அதுவும் செல்வத்தை லட்சுமியாக—பணம் சம்பாதிக்கிற இடத்தை தெய்வீகமாக நினைக்கிற சூழ்நிலையில்—அதிகாரிகள் முரட்டுத்தனமாக உள்ளே நுழைந்து கணக்கு சரியில்லை என்று கண்டபடி தவருக நடந்து கொள்வதை அவர்கள் விரும்பவில்லை என்ற ஒரு காரணத்தினல் இதைத் தவிர்க்கவேண்டுமென்பது ஆசை. இது போன்ற நிலைமையைத் தவிர்க்க ஒரே கட்டத்தில் வரி விதிப்பதன் மூலம் தான் சாத்தியமாகும் என்பது வற்புறுத்தப்பட்டது. பெரிய வியாபாரியாக இருந்தாலும், சிறிய வியாபாரியாக இருந்தாலும் ஒரு முனை வரி விதிப்பதன் மூலமாக ஒரு கட்டத்தில் வரி கட்டிவிட்டால் பின்னல் சுலபமாகக் கணக்கு வைக்க வேண்டும் என்கிற கஷ்டம் இல்லாமல் போய்விடும். இந்த ஒரு முனை வரியைக் கொடுப்பதற்கும் யாரும் தயங்கமாட்டார்கள். அதனல் நமது வருமானமும் பாதிக்கப்படாது என்கிற கவலை தான் லோகநாதன் பரிசீலனையிலும், செலக்ட் கமிட்டியின் பரிசீலனையிலும் இந்தச் சட்டத்தை எப்படி உருவாக்கிக் கொடுப்பது என்று நினைக்கிறபோது ஏற்பட்டது.

இந்த அடிப்படையில் இன்றைக்குப் பல்வேறு பொருள்களுக்கு—குறிப்பாக எழுபது, எழுபத்தைந்து பொருள்களுக்கு மேல்—ஒரு முனை விற்பனை வரி விதிப்பது என்பதாக இந்தச் சட்டத்தில் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. அதை ஒரு புறம் வரவேற்கிறபோது மற்ருெரு இனத்தில் நாம் மிகவும் ஜாக்கிறதையாக இருக்க வேண்டும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பலமுனை விற்பனை வரி விதிக்கப்படுகிற பல பொருள்களை சிறிய வியாபாரிகளும் சரி, பெரிய வியாபாரிகளும் சரி தங்கள் கடைகளில் விற்கக் கூடும். அதே சமயத்தில் ஒரு முனை விற்பனை வரி விதிக்கக்கூடிய பொருள்களையும் கூட அவர்கள் கடையில் வைத்திருந்து விற்க முடியும். இரண்டுக்கும் அவர்கள் தனித்தனியாக பில் போடவேண்டும். அப்போது தான் வரி இல்லாத இந்த இனத்தில் ஆன வியாபாரமும், வரியோடு கூட அந்தப் பொருள்களின் வியாபாரம் எத்தனை என்பதும் தெரியும். பலபல சிறிய சிறிய வியாபாரிகளால் அது சாத்தியமாகுமா ? கடைகளிலேயே எந்த எந்தப் பொருள்களுக்கு வரி கிடையாது—அதாவது ஒரு முனை வரி விதிக்கக் கூடிய பொருள்களுக்கு சிறு கடைகளில் வரி இல்லையென்றே கூடப் போட்டுவிடலாம்—என்கிற விளம்பர அட்டை போட்டுவிடலாம். இருந்தாலும் இப்படித் தனித்தனியாக பில்போட வேண்டிய தொந்தரவும் இருக்கிறது. சேர்த்துப் போட்டாலும் அதிகாரிகள் இவ்விஷயத்தில் கொஞ்சம் அநுதாபத்தோடு வியாபாரிகளுக்குச் சங்கடம் வராமல் நடந்துகொள்ளவேண்டும்.



11th February 1959] [Sri M. S. Selvarajan]

அதோடு பட்டணப் பகுதிகளில் எல்லாம் கூட உணவுப் பொருள்களோடு மிகவும் அத்தியாவசியமான தேவையாக இருக்கக் கூடிய கரி, விறகு போன்ற பொருள்களுக்கு ஒரு முனை வரி போட்டிருக்கலாம். அப்படி இருந்ததை மாற்றி அமைத்து பொறுக்குக் கமிட்டியில் ஏன் பல முனையில் குறைந்த விகிதத்தில் வரி விதிக்கக்கூடாது என்று தெரிவித்திருக்கிருர்கள். இதில் எனக்கு அபிப்பிராய பேதம் இருக்கிறது.

இன்றைக்கு ஐயாயிரம் பத்தாயிரம் என்று வியாபாரம் செய்யக் கூடிய பெரிய கடைக்காரர்கள் எல்லாம் நாலாயிரம் ரூபாய்க்கு மேல் வியாபாரம் கிடையாது என்று அதிகாரிகளைத் தாஜா பண்ணி வைத்துக் கொண்டு வரி விதிப்பதிலிருந்து விலக்கு வாங்கிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். இந்தப் பொருள்கள் மூலம் மொத்தமாக ஐந்தாறு லட்சத்திற்கு விற்பனை வரி வசூல் ஆகலாம். இவற்றுக்கு ஒரு கட்டத்திலேயே—ரயிலில் இருந்து இறக்குமதி ஆகிறபோதோ, போட்டிலிருந்து இறக்குமதி ஆகிறபோதோ அல்லது லாரியின்மூலமாக வருகிறபோதோ காவல் கட்டத்திலோ முற்றிலும் நூற்றுக்கு நூறு வரி விதிக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. உணவுப் பொருள்களோடு ஒட்டியே இந்தப் பொருள்களும் மக்களுக்குத் தேவைப்படுகிற அத்தியாவசியப் பொருளாதலால் இவற்றுக்கும் ஒரு முனை விற்பனை விதிப்பதற்கு சர்க்கார் இந்தக் சட்டத்திலாவது பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தூத்துக்குடி அங்கத்தினர் குறிப்பிட்ட பொருள்—அது உற்பத்தி செய்யக் கூடிய முறை எல்லாம் எனக்குத் தெரியும். கொளச்சல், காகினடா, தூத்துக்குடியிலிருந்துதான்—முன்பு சென்னை ராஜ்யத்தோடு அந்தப் பகுதிகள் எல்லாம் சேர்ந்திருந்தபோது வெளிநாட்டுக்கு ஏற்றுமதியாகி வந்தது. அந்த ராஜ்யங்கள் எல்லாம் இப்போது பிரிந்து விட்ட பிறகு தூத்துக்குடி ஒன்று தான் இன்றைக்கு நமது சென்னை ராஜ்யத்திலேயே ஒரு இடமாக இந்தப் பொருளை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது. இது குடிசைத் தொழில். இதில் பல்லாயிரக் கணக்கான மக்கள் ஈடுபடுகிருர்கள். உள்நாட்டில் தயார் செயயப்படுகிற தும்பு, ராக்கி ஆகிய இவற்றை இன்றையதினம் அமெரிக்காவுக்கும், பிரிட்டனுக்கும் அனுப்பிக் கொண்டிருக்கிறோம். வெளிநாட்டு நாணயத்தை இது நமக்குத் தேடிக் கொடுக்கிறது என்பதற்காக இந்தக் குடிசைத் தொழிலுக்கு நம் சர்க்கார் மானியம் கொடுத்து, இதர கருவிகரணங்களையெல்லாம் இனமாக வாங்கிக் கொடுத்து உதவ முன் வரவேண்டியது இருக்க இதற்கு வரி போட முன் வருவது சரியல்ல. இது நம் ராஜ்யத்தில் மாத்திரம் நடக்கிறதொழில் என்கிற காரணத்தினல் மத்திய சர்க்காரும் இதில் அதிக கவனம் செலுத்தாமல் இருந்திருக்கலாம். ஆனல் வருஷத்திற்கு 50 லட்சம் ரூபாய் மதிப்புள்ள டாலர் அன்னிய நாட்டு நாணயம் நமக்குக் கிடைக்கிறது என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. ஈக்கோடு ஒட்டிய ஓலைக்கு வரி விலக்குக் கொடுக்கிறோம். ஆனல் ஈக்குக்கு தும்புக்கு வரி என்பது சரியல்ல. இதுவரையில் 80 ஆயிரம் ராத்தல்—நாலாயிரம் அந்தர் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்திருக்கிறது. ஆப்ரிக்கா, சைன போன்ற நாடுகளிலிருந்தும் இன்றையதினம் வெளிநாட்டு மார்க்கெட்டில் நமக்குப் போட்டியாக இந்த ஈக்கு தும்பு வர ஆரம்பித்திருக்கிறது. இந்த சமயத்தில் நாம் நம் நாட்டில் பல்லாயிரம் கணக்கான பேர்கள் ஈடுபட்டிருக்கிற இந்தக் குடிசைத் தொழிலுக்கு கருவிகரணங்களுக்கு, சப்ஸிடி எல்லாம் கொடுத்து ஒரு புறம் உதவி செய்ய முன்வந்திருக்க மறுபுறம் வரிபோட முன் வருவது சரியல்ல. இந்தத் தொழில் நசித்துவிடாமல் நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். இந்தப் பொருளுக்கு ஒரே கட்டத்தில் ஏற்றுமதி செய்யப்படுகிற இடத்தில் வரி கொடுப்பது நியாயம் என்ருலும் 3 சத விகிதம் அதிகம். சென்ற இரண்டு வருஷங்களில் இந்த இனத்திலிருந்து 20 ஆயிரம்தான் வந்தது என்ருலும் இந்த வரியைக் குறைத்து ஒரு முனையில் போட்டாலேயே நமக்கு புதிய திட்டப்பட்டி 50 ஆயிரம் ரூபாய் வரையில் வரலாமே தவிர குறையாது. இப்படி இந்த சதாரண ஜனங்கள் எல்லாம் ஈடுபட்டிருக்கிற குடிசைத் தொழிலைக் காப்பதற்கு முன் வராவிட்டால், அம் மக்களுடைய வாழ்வில் மலர்ச்சி என்பதே இருக்காது என்பது என்னுடைய பணிவான குறிப்பு.

[Sri M. Selvaraj] [11th February 1959

(Mr. Speaker in the Chair.)

குறிப்பாக தென் ஆற்காடு, திருச்சி மாவட்டங்களிலே மணிலாப் பயிர் உற்பத்திசெய்கிறார்கள். சில வியாபாரிகள் அவர்கள் மொத்தமாக வாங்கினால் வரி அதிகமாக கட்டவேண்டுமே என்று 10 ஆயிரம் ரூபாய்க்கு சரக்கு வாங்கிக்கொண்டு போகிறார்கள். அப்படி வாங்கிக்கொண்டுபோய் வரிகொடுக்காமல் ஏமாற்றி விடுகிறார்கள். இம்மாதிரியான வியாபாரிகள் ஏமாற்றாமல் செய்வதற்கு இந்தச் சட்டத்தை திருத்தி அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். மேலும் அவர்கள் Sales Tax Verification certificate. கொண்டுவந்தால்தான் அவர்கள் மணிலாப்பயிர் மார்க்கெட் கமிட்டியில் பயிர் வாங்குவதற்கு தகுதி உடையவர்கள் என்று சட்டத்தை திருத்தி அமைக்கவேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் அரசாங்கத்தை ஏமாற்ற முடியாது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். மார்க்கெட் கமிட்டி "பைலா" வை திருத்த உத்தரவு இட்டால் இதனால் ஓரளவு வருமானம் கிடைக்கும். வரியிலிருந்து தப்பித்துச் செல்ல நினைப்பவர்களிடம் இருந்தும் ஓரளவு வருமானம் கிடைக்கும். அடுத்தபடியாக, பால் பவுடருக்கு இப்பொழுது வரி விதிக்கப் பட்டிருக்கிறது. குறிப்பாக இந்த நாட்டில், சென்னை நகரத்தைப் பொறுத்த மட்டில் கார்ப்பரேஷனில் இருந்தும், மற்ற நகரங்களிலும் ஏழை பள்ளி மாணவர்களுக்கு பால்வினியோகம் செய்யப்படுகிறது. பவுடர் பால்தான் வினியோகம் செய்யப் படுகிறது. ஆகவே அதற்கும் விதி விலக்கு அளிக்க வேண்டும். அதேபோல், மீண்டும் சொல்லிக் கொள்கிறேன், உணவுப் பொருள்களுக்கு கண்டிப்பாக விலக்கு அளிக்க வேண்டுமென்று. ஜவுளிக்கு வரி விலக்கு அளித்திருக்கிறார்கள். "ஹோஸயரி குட்ஸ்" என்றமுறையில் பனியன் செய்யக் கூடிய துணிக்கு இன்று வரி விலக்கு அளித்திருக்கிறார்கள் பனியன்களுக்கு வரி விலக்கு அளிக்கப்படவில்லை. வட ஆற்காடு மாவட்டத்திலும், பிற மாவட்டங்களிலும் அதிகம் பனியன் உற்பத்தி செய்கிறார்கள். பனியன் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையில் ஏகப்பட்ட தொழிலாளர்கள் இருக்கக் கூடிய காரணத்தினால் பனியன் பேரில் நாம் வரி விதிப்போமானால் அது அத்தொழிலில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்களைத்தான் பாதிக்கும். ஆகவே எப்படி ஜவுளிகளுக்கு வரி விலக்கு கொடுக்கப் பட்டிருக்கிறதோ அதேபோன்று பனியன்களுக்கும் வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக நான் மேலும், மேலும் கூறிக் கொள்வது, உணவுப் பொருள்க்ளுக்கு வரி விலக்கு அளிக்க வேண்டும். பால், பால் பவுடர், பூ போன்றவைகளுக்கும் வரி விலக்கு அளிக்க வேண்டும். உருளைக்கிழங்கு, பால்பவுடர், இலை, கம்பு, விறகு, கருணைக்கிழங்கு போன்றவைகளுக்கு பூர்ண விலக்கு அளிக்க வேண்டுமென்று நான் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன். 1939-ல் பூ-க்கு வரி போட்டிருந்தார்கள். 1954-ல் அந்த வரியை எடுத்து விட்டார்கள். மறுபடியும் இந்நேரத்தில் அதைக் கொண்டுவருவது உசிதமல்ல. அது, ஏழை வியாபாரிகளை கண்டிப்பாக பாதிக்கும். ஆக, நம் நாட்டிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவு போக்குவதற்கும், சிறு தொகைகளை வைத்து வியாபாரம் செய்பவர்களை பாதிக்காமல் இருக்கும் விதத்திலும் அந்தளவு இந்த வரி முறையை திருத்தியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* SRI T. T. DANIEL : Mr. Speaker, Sir, while supporting this Bill, I would like to point out some facts for the kind consideration of the Government. Sir, in the Schedule attached to the Bill, it is seen that the Government intend to levy sales tax of three per cent on Palmyrah fibres and stalks. These are articles which are produced only in two places, Kolachel and Tuticorin, in the whole of India. Every year several lakh tons of palmyrah fibres and stalks are exported to Denmark, Norway, Sweden, the United Kingdom and other countries. In this connection I would like to bring to the notice of the Government that during the last two or three years, there has been a fall in the export of palmyrah fibres



11th February 1959] [Sri T. T. Daniel]

and stalks owing to the competition of the Mexican fibre and also the American plastic fibre. The American plastic fibre is slowly gaining ground in the world market and the Mexican fibre is also being produced in larger quantities in Mexico. As a result of the fall in the export, already one or two companies have closed down. I would like to point out that this industry is carried on partly on a factory scale and partly as a cottage industry. Several thousands of men, women and children are engaged in this trade. I think, according to the Report of Dr. Loganathan, there was a suggestion to levy two per cent multi-point tax. But the Government have now altered it to a single point tax of three per cent. That apart, the Government should consider whether by levying this tax of three per cent on these articles, the producers will be affected and whether the trade will come to a standstill. If the producers are seriously affected, certainly they will be closing down their companies one after the other, which will throw out of jobs several thousands of poor labourers. I therefore suggest that palmyra fibres and stalks should be completely exempted from the tax.

Then coming to Kerosene oil, it is seen from the Schedule, that the Government intend to impose a single point tax of five per cent. Sir, kerosene oil is an article which is used only by millions of downtrodden people in the State. Lower and upper middle class and rich people are using electric lights but it is the very poor people who are using kerosene oil for their domestic purposes. So, this tax is imposed mainly on the very poor people of the State. I think, the Hon. Minister will agree that while imposing a tax, we have to take into consideration whether it will affect the very poor people and whether a major portion of it comes from them or from other people. If we look at it from that standpoint, I feel that kerosene oil should be completely exempted from any tax whatsoever.

Now coming to the levy of tax on foodgrains, I would like to point out that rice is the only food of the poor man. If we take into account the total consumption of rice, I am sure, we will find that it is the very very poor people who will be consuming more rice than the other classes of people in the State. The other classes of people consume along with rice some other foodgrains also. So, the levy of tax on rice affects mostly the poor people in the State. As has been correctly pointed out by some hon. Members, it will be better if the Hon. Minister will give us information regarding the estimated amount which the Government hope to get by levying tax on foodgrains like rice, cholam and kambu. If the amount is not very big, I think, this Government should try to find out some other means of filling up the gap instead of levying this tax on rice and cholam which is the main food of the people. If these articles are completely exempted from taxation then the Bill as originally promised by the Government, would be encouraging and helpful and also comprehensive.

[Sri T. T. Daniel] [11th February 1959

Then coming to the principle of exemption and putting up the limit of Rs. 10,000, I agree with the other hon. Members that it would be better if the exemption limit is extended from Rs. 10,000 to at least Rs. 20,000. The compounding amount also should be
11-30 a.m. increased correspondingly from Rs. 25,000 to Rs. 40,000.

Now I would like to point out that there is some sort of fear in the minds of the merchant class that they may be unnecessarily harassed by the officers who are collecting this tax. The Government should separately take note of these misapprehensions that are prevailing among the merchant class and try their level best to see that the provisions of the Bill are not unnecessarily used for harassing innocent business people.

* **Sri M. KARUNANITHI** : சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே வைக்கப்பட்டுள்ள விற்பனை வரி திருத்த மசோதாவின் பேரில் என்னுடைய கருத்துகள் சிலவற்றை இங்கே கூற விரும்புகிறேன். இந்த வரியின் பெயர் விற்பனை வரி என்று இருந்தாலும், பொதுவாக இந்த வரி பெரும்பாலும் வாங்குபவர்களையே பாதிக்கிற காரணத்தால் வாங்குபவர் வரி என்கின்ற பெயர் சூட்டுகின்ற நிலைமையில் அமைந்திருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். வரிகளை அதிகமாக போடுவது அல்லது அதிக வரி விதிக்கவேண்டும் என்கின்ற கட்டாயத்துக்கு உட்படுவது சர்க்காருக்கு லாபம் தருகின்ற ஒரு முறை என்று சொல்லப் பட்டாலும், அந்த வரியினால் சர்க்காருக்கு கோடிக்கணக்கில் பணம் கிடைத்தாலும், அதிக வரி விதிப்பின் காரணமாக வளர்கின்ற தீய பண்புகளை எவ்வளவுதான் கோடிக்கணக்கில் செலவழித்தாலும், எந்த முயற்சியாலும் அகற்ற முடியவில்லை என்பதையும் நாம் நிதர்சனமாக உணர்கிறோம். விற்பனை வரி இலாகாதான் பொதுவாக சர்க்காரின் மற்ற எல்லா இலாக்காக்களையும் விட சிறு வியாபாரிகளையும், மற்ற வியாபாரிகளையும் பயமுறுத்திக்கொண்டிருக்கிற இலாகா என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். உதாரணமாகப் பார்ப்போமானால், சர்க்காருடைய துணை நிதிகளான சிறு சேமிப்பு திட்டம் போன்ற நிதித் தேவைக்கு மற்ற எந்த இலாகாவினரும் சாதித்து காட்டக்கூடிய அளவுக்கு அதிகமாக, ரெவின்யூ இலாகா போன்ற இலாகாவினர் சேகரிக்கக்கூடிய தொகையை விட அதிகமான தொகையை விற்பனை வரி இலாகாவினர் தர முடிந்திருக்கிறது. அதற்கான காரணம் விற்பனை வரி இலாகாவில் இருக்கும் அதிகாரிகளிடம் சிறு சிறு வியாபாரிகள் அந்த அளவுக்கு பயம் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தான் அதிகமான மிரட்டலுக்கும், அதிக பயத்திற்கும் உள்ளாகியிருக்கிறார்கள் என்பதை எனக்கு முன்னால் இந்த மன்றத்தில் பேசிய பல அங்கத்தினர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அந்த பயத்தின் காரணமாகத்தான் சர்க்காருடைய துணை நிதித் தேவையை மற்ற எந்த இலாகாவினர் சாதித்துத் தர முடியாத அளவிற்கு இந்த விற்பனை வரி இலாகாவினர் சாதித்து தர இயலுகிறது. விற்பனை வரி இலாகா அதிகாரிகள் வருகின்ற நேரத்தில், அவர்களுடைய கணக்குகளை சரியாக வைத்துக்கொள்ள இயலாதவர்களும், வைக்காமல் இருந்து விட்டவர்களும், எந்த விதத்தில் தங்களை சமாளித்துக்கொள்ளுவது என்று சிந்திக்கின்ற நேரத்தில் விற்பனை வரி இலாகா அதிகாரிகளை புராணங்களிலே கூறப்படுகின்ற எமதர்மர்களைப் போலவே எண்ணி சிறு சிறு வியாபாரிகள் அஞ்சிச் சாகின்றார்கள். புராணங்களிலே வருகின்ற எமதர்மர்களைப்போல ஒரு சில விற்பனை வரி இலாகா அதிகாரிகள் வருகின்ற நேரத்தில் மார்க்கண்டேயர் நிலைமையில் உள்ள அந்த வியாபாரிகள் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளுவதற்கு லஞ்சம் என்கின்ற சிவலிங்கத்தைத் தான் கட்டிப் பிடித்துக்கொள்ள வேண்டிய நிலைக்கு ஆளாகிறார்கள். லஞ்சம் என்கிற சிவலிங்கம் மார்க்கண்டேயரின் நிலையிலுள்ள வியாபாரிகளை சில சில நேரங்களில் காப்பாற்றுகிறது. பல பல நேரங்களில், அவர்



11th February 1959] [Sri M. Karunanithi]

களையும் இவர்களையும் சேர்த்து பெரிய அதிகாரிகளுக்கும், சர்க்காருக்கும் காட்டிக் கொடுக்கிறது. அப்படி காட்டிக்கொடுக்கின்ற நேரத்தில் நல்ல நடவடிக்கைகளை அந்த அதிகாரிகள் மீது எடுக்கவேண்டுமென்பதையும் கனம் அமைச்சர் அவர்களுக்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

விற்பனை வரி திருத்த மசோதாவின் பேரில் எனக்கு முன்பு பேசிய அத்தனை அங்கத்தினர்களும் அன்னிய மாநிலங்களான கேரளத்திலும், மைசூரிலும், உணவுப் பண்டங்களின் மீது வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை உன்னிப்பாக சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். இந்த மாநிலமும் அதைப் பின்பற்றியே அதே முறையில் தொடர்ந்து உணவுப் பண்டங்களின் மீது இருக்கிற வரியை விலக்கவேண்டுமென்று நான் மிகமிக அக்கரையோடு கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். உணவுப் பொருள்களின் மீது இருக்கிற வரியை நீக்கவேண்டுமென்று கூறுவது போலவே, ஜவுளிக்கு வரி விலக்கு அளிக்கப்படுவது போல, பனியன்களுக்கும் வரி விலக்கு அளிக்கவேண்டும் என்று எனக்கு முன்பு பேசிய நண்பர் செல்வராஜ் அவர்கள் கூறியதை நானும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். பனியன் தொழில் மிக உயர்ந்த நிலைமையில் உள்ள தொழில் என்றோ, அதிக லாபம் தரக்கூடிய தொழில் என்றோ கருதி அதற்கு அதிக வரி விதித்திருப்பார்களேயானால், அது உள்ளபடியே வருந்தத்தக்க செய்தி என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். பனியன்களை அணிபவர்கள் பெரும்பாலும் இந்த நாட்டில் ஏழை மக்கள், தொழிலாளிகள், பாட்டாளிகள் இவர்கள்தான் இவர்கள் சட்டை கூட அணிய முடியாத நிலைமையில் இருப்பதால் பனியனையே தங்கள் மேலாடையாக உபயோகப் படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை கனம் அமைச்சர் அவர்களும் நன்றாக உணர்ந்திருப்பார்கள். பாட்டாளிகள், தொழிலாளிகள் பேரில் அதிக அக்கரை உண்டு என்ற நிலைமையில் உள்ள அமைச்சர் அவர்கள் இந்த பனியனுக்கு வரி விலக்கு அளிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதுபோலவே பூவின்பேரில் போடப்படுகின்ற வரிக்கும் விலக்கு அளிப்பதின் மூலம் பூ வியாபாரிகளின் மகிழ்ச்சியையும், பாராட்டுதலையும் அமைச்சர் அவர்கள் பெற இயலும்.

**The Hon. Sri R. VENKATARAMAN** : நிறைய மாலை போடுவார்கள் !

**Sri M. KARUNANITHI** : இல்லாவிட்டால் மாலை போட மறுத்து விடுவார்கள் ; 1939-ம் ஆண்டில் பூவுக்கு வரி இருந்தது. பிறகு அது அழியக்கூடிய பொருள் என்பதற்காக 1954-ல் அந்த வரி விலக்கப்பட்டது என்பதை இங்கே ஞாபகப் படுத்துகிறேன். அழியக் கூடிய பொருள் என்று கருதப்படுகின்ற நிலையில் காய்கறிகள் கூட 2, 3 நாட்கள் இருந்து அழுகும். ஆனால், காலையில் அரும்பி, பகலெல்லாம் போதாகி, மாலையில் மலர்ந்து, மறுநாள் காலையில் வாடக்கூடிய பூவுக்கு அமைச்சர் அவர்கள் தயவு செய்து வரி விலக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். 1954–55-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்த கனம் நிதி அமைச்சர் அவர்கள் மாமிசம், மீன், முட்டை, பால் போன்ற பொருள்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை மிகப் பூரிப்போடு இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லி நாட்டு மக்களின் மகிழ்ச்சியை பெற்றிருக்கிறார்கள். மறுபடியும், அவைகளுக்கு இப்பொழுது வரி விதிக்கப்பட்டிருப்பது எத்தகைய மாற்றத்தின் காரணம் என்பதை என்னால் அறிய முடியவில்லை. நிதி அமைச்சர் அவர்கள் 1954–55 வரவு செலவு திட்டம் சமர்ப்பித்தபோது இருந்த நிலைமையைவிட இப்பொழுது நிலைமை இன்னும் மோசமாகி இருக்கிறதே தவிர, அந் நிலை மாறிவிடவில்லை. ஆகவே, மாமிசம், மீன், முட்டை, பால் போன்ற, அத்தகைய பொருள்களுக்கும். காய்கறி, பழம் போன்ற பொருள்களுக்கும் வரி விலக்கு அளிக்கவேண்டுமென்று நான் மீண்டும் மீண்டும் கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, இறுதியாக பால், மீது பரிவு காட்டுங்கள்

இல்லை வியாபாரிகள் மீது இரக்கம் காட்டுங்கள், கருணைக்கிழங்கு, வியாபாரிகளிடம் கருணை காட்டுங்கள், உருளைக் கிழங்கு வியாபாரிகளின் உள்ளத்தை உருகச் செய்யாதீர்கள், என்று வற்புறுத்த விரும்புகிறேன். ஊட்டிக்குப் போகும் செலவுக் குறைத்துக்கொண்டாவது, நேற்றைய தினம் மாதா கவுடர் அவர்கள் கேட்டுக் கொள்வது போல் உருளைக் கிழங்குக்கு வரி விலக்கு செய்யுங்கள் என்று நான் மீண்டும் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

**SRI M. R. KANDASWAMI MUDALIYAR**: கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இப்பொழுது இங்கு கொண்டு வரப் பட்டிருக்கிற விற்பனை வரி திருத்த மசோதாவை வரவேற்று ஒரு சில வார்த்தைகளைப் பேச முன் வந்திருக்கிறேன். இதற்கு முன் இந்தத் திருத்த மசோதாவின் பேரில் பல அங்கத்தினர்கள் பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே நேற்றைய தினம் பேசிய நண்பர் தேவர் அவர்கள் கூட பழம், காய்கறி, பூ இவைகளுக்கெல்லாம் வரி விதிப்பது சரியான முறையல்ல, இவைகளுக்குப் பூரணமாக வரி விலக்கு அளிக்க வேண்டும் இவைகளுக்கு வரி விதிப்பது முற்றிலும் நியாயமல்ல என்று சொன்னார்கள். அதைப் போலவே பல துறைகளிலும் சொல்லுகிறார்கள். இந்த விற்பனை வரியானது நமது நாட்டில் மாத்திரம் அல்ல, ஒவ்வொரு இடத்தில் எந்தெந்தப் பகுதியில் அந்த வரியைப் போட்டு வசூல் செய்யக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவோ அந்த இடங்களிலெல்லாம் இதை விதிக்க வேண்டியிருக்கிறது. கேரளாவில் இல்லை, அல்லது மற்ற ராஜ்யத்தில் இருப்பதினால் நாம் வரியை விட்டுவிடவேண்டும் அல்லது வரியை விதிக்கவேண்டும் என்பது அவசியமில்லை.

அந்த ராஜ்யங்களில் ஒரு வேளை தவறுதலாக செய்திருக்கலாம், அல்லது முன்னேற்றகரமாக செய்திருக்கலாம், அதே போன்று நம் ராஜ்யத்திலும் செய்ய வேண்டும் என்பது அவசியமில்லை. நம்முடைய ராஜ்யத்தில் எந்த எந்த வகைகளில் நமது பொருளாதார நிலையை உயர்த்தி, எந்த வகையில் மக்களுக்கு நன்மை செய்ய முடியும் என்பதை நாம் பார்க்க வேண்டியிருக்கிறது. மக்களுக்கு வேண்டிய பல வசதிகளைச் செய்யவேண்டுமானால் பல திட்டங்களை போட வேண்டியிருக்கிறது. அதற்காக பணம் தேவையாக இருக்கிறது. அதற்காகத்தான் இம்மாதிரி வரிகள் போட வேண்டிய நிலை ஏற்படுகின்றது. மேலும் இவ் வரிகளின் மூலமாக நமக்கு பல கோடி ரூபாய்கள் வருமானம் வருகிறது. இதைப் பற்றி பேசிய பல அங்கத்தினர்களும், இப்போது பேசிய கனம் அங்கத்தினர் அவர்களும் ஏழைகள் உபயோகிக்கக்கூடிய பொருள்கள் மீது வரிகள் போடுவது என்பது மிகவும் தவறு என்று இன்றைக்கு நாட்டில் எந்தெந்த பொருட்களின் மீதெல்லாம் வரி போடப் பட்டிருக்கின்றதோ அந்த பொருள்கள் எல்லாம் ஏழைகளாலும் பணக்காரர்களாலும் உபயோகப்படுத்தப்பட்டு தான் வருகின்றது. அப்படியிருக்கும்போது ஏழைகள் உபயோகிக்கின்ற பொருட்களுக்கு வரிகள் போடக் கூடாது என்று சொன்னால் அது எந்தவகையில் பொருத்தமாயிருக்கும் என்பதை நாம் ஆலோசித்துப் பார்க்கவேண்டும். இன்றைக்கு வரி போடப் பட்டிருக்கின்ற பொருள்களான பூ, கிழங்கு வகைகள், காய் கறிகள், வேஷ்டிகள், முதலியவை எல்லாம் ஏழைகளும் பணக்காரர்களும் உபயோகப் படுத்தக்கூடிய பொருள்கள் தான். இதற்கு முன்னால் மில் துணிக்கு வரி போட வேண்டும் என்று சொன்னபோதும், இதனால் ஏழைகள் மிக கஷ்டப்படுவார்கள், ஆகவே இதற்கு வரி போடக்கூடாது என்று சொல்லப் பட்டது. இவ்விதம் ஏழைகளை பாதிக்கின்ற பொருட்களுக்கு வரி விதிக்கக் கூடாது என்று சொல்லுகின்ற சமயத்தில் வேறு இன்னின்ன பொருட்களுக்கு வரிகளை போட்டு சரிக்கட்டிக் கொள்ளலாம் என்று சொன்னால் அதை ஏற்றுக்கொள்ளலாம். அந்த விதத்தில் யாரும் சொல்லக்காணோம். எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் பேசுகின்ற சமயத்தில் ஏழைகளை பாதிக்கின்ற பொருள்களுக்கு வரி விதிக்காமல் ஏழைகளை பாதிக்காத மற்றொரு பொருளின் மீது வரியை போடுங்கள் என்று சொல்வார்களேயானால் அது நல்ல யோசனையாக இருக்கும். அவ்விதம் யாரும் சொல்லவில்லை.



ஆகவே இந்த வரிகள் அத்தனையும் எப்படி விதிக்கலாம் என்பதை பற்றி மந்திரிமார்களும். இதற்காகப் போடப்பட்டிருந்த கமிட்டியும் நன்றாக ஆலோசனை செய்து இந்த திருத்தங்கள் எல்லாம் செய்யப்பட்டிருக்கின்றது. ஆகவே இதை நாம் வரவேற்கவேண்டியது தான். சில விஷயங்களைப் பற்றி கனம் அங்கத்தினர் தேவர் அவர்கள் பேசினார்கள், அதாவது தினம் ஒன்றுக்கு 250 ரூபாய்க்கு ஒரு பெண் அம்மையார் காய்கறி வியாபாரம் செய்கின்றார்கள். அவர்களுக்கு இதற்காக கணக்குகள் எல்லாம் வைத்துக் கொள்ள முடியுமா என்றும், இவ்விதம் வியாபாரம் செய்கின்ற பெண்களுக்கு இதனால் அதிக தொந்தரவு ஏற்படும். ஆகவே பெண்கள் என்கின்ற முறையிலாவது காய்கறிகளுக்கு இதிலிருந்து விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்று கூறினார்கள், இவ்விதம் தினசரி 250 ரூபாய்க்கு காய்கறிகள் விற்பனை செய்வதில் தினம் 2½ ரூபாய்தான் லாபம் கிடைக்கிறது என்றும் சொன்னார்கள். 250 ரூபாய்க்கு வியாபாரம் செய்கின்ற ஒருவருக்கு தினசரி இரண்டரை ரூபாய்தான் லாபம் கிடைக்கிறது என்று சொன்னால் அதை யாரும் ஒப்புக் கொள்ள முடியாது. தினசரி 250 ரூபாய்க்கு வியாபாரம் நடக்கிறது என்று சொன்னால் மாதம் 7,500 ரூபாய்க்கு வியாபாரம் ஆகிறது என்று கணக்காகிறது. இவ்வளவு வியாபாரம் நடக்கிற ஒரு இடத்தில் கணக்கு வைத்துக் கொள்வதில்லை என்று சொன்னால் அதை நம்புவதற்கில்லை. இவ்விதம் ஆண்டு ஒன்றுக்கு கிட்டத் தட்ட ஒரு லட்ச ரூபாய்க்கு வியாபாரம் நடத்துகிறவர்களிடமிருந்து வரி வசூலிக்கக் கூடாது என்று சொன்னால் இந்த அரசாங்கத்திற்கு வேண்டிய பணத்திற்கு என்ன செய்வது என்பதுதான் தெரியவில்லை. இத்தகைய வியாபாரிகளுக்கு எல்லாம் சலுகை காட்ட வேண்டும் என்று சொன்னால் நமது அரசாங்கத்தால் எந்த விதமான திட்டங்களையும் செய்ய முடியாது. அதே சமயத்தில் அரசாங்கம் ஒன்றும் செய்யவில்லை என்றால் நமது அரசாங்கம் இத்தனை காலத்தில் என்ன காரியங்களை செய்துவிட்டது என்று வெளியிலும் சொல்லுவார்கள். ஆனால் உண்மையிலே இதனால் பாதிக்கின்ற பொருட்களுக்கு விதிவிலக்கு அளிக்கவேண்டியது அவசியம்தான். சாதாரணமாக வருஷத்திற்கு 25 ஆயிரம் ரூபாய்க்கு வியாபாரம் செய்கின்றவர்கள் கணக்கு வைத்திருக்க முடியாது என்று சொன்னால் அதை யாரும் நம்ப முடியாது. இவ்விதம் வியாபாரம் செய்கின்றவர்கள் சரியான கணக்குகள் வைத்து அரசாங்கத்திற்கு வரிகள் கொடுப்பதினால் அவர்களுக்கு எந்த விதமான பாதகமும் ஏற்பட்டு விடாது. ஆகவே இப்படிப்பட்டவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கவேண்டிய அவசியமில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் காங்கிரஸ்தரப்பில் இருக்கக்கூடிய கனம் அங்கத்தினர் ஒருவர் கூறினார், இம்மாதிரி வரி விதிப்பு வருவதினால் தான் கள்ளமார்க்கட்டும் லஞ்சமும் வருகிறது என்று அந்தக் கருத்து முற்றிலும் தவறு என்பது தான் என்னுடைய அபிப்பிராயம். அதே போன்று தான் அரசாங்க சிப்பந்திகளிடத்திலேயும் போதிய சம்பளம் கொடுக்கப்படாததின் காரணமாகத்தான் அவர்களிடையே லஞ்சம் தாண்டவமாடுகிறது என்றும் தெரிவித்தார்கள். இன்றைக்கு 100 ரூபாய் சம்பளம் பெறக்கூடியவருக்கு 150 ரூபாயாக சம்பளத்தை உயர்த்திக் கொடுத்தாலும் லஞ்சம் வாங்குகின்ற பழக்கம் உள்ளவர்களுக்கு அந்த பழக்கம் போகவே போகாது. எப்போதும் நாணயமாக நடந்து கொள்பவர்கள் நம்முடைய பெரியார் வேதரத்தினம் அவர்கள் சொன்னது மாதிரி, அவர்கள் எப்போதும் நாணயமுள்ளவர்களாகவே நடந்து கொள்வார்கள். நாணயமற்றவர்கள் எப்போதும் நாணயமற்றவர்களாகத்தான் நடந்து கொண்டிருப்பார்கள். நாணயமுள்ளவர்கள் எப்போதும் ஒழுக்கமாகவும் மக்களுடைய காரியத்தில் அக்கரையோடு இருந்து தான் வேலை செய்து கொண்டிருப்பார்கள். ஆகவே சம்பளக்குறைவினால் தான் லஞ்சப் பழக்கம் ஏற்படுகிறது என்று சொல்வதை ஒப்புக்கொள்ள முடியாது. அவ்விதம் பார்த்தால் இன்றைக்கு மாதம் 1,000 ரூபாய், 1,500 ரூபாய் என்று சம்பளம் வாங்குகின்ற எல்லா அதிகாரிகளும் நாணயமாகவும் ஒழுக்கமாகவும் நடக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. அவர்களிடத்தி

லேயும் பல தவறுகள் இருக்கத்தான் செய்கின்றன. லஞ்சப் பழக்கம், ஏற்படுவதற்கு காரணம், தன்னலத்தை கருதி பேராசைப்பட்டுக்கொண்டு, மக்களின் நலனில் , அக்கரை கொள்ளலாமல் இருப்பதுதான் காரணம் என்று சொல்லலாம். தங்களுடைய வருவாயை மாத்திரம் குறிக்கோளாக வைத்துக்கொண்டு மக்களின் நல் வாழ்க்கையைப் பற்றி கவலைப் பாடமல் இருக்கின்ற ஒரு சிலர்தான் லஞ்சம் கொடுத்தால் மக்களின் காரியங்களை செய்வோம் என்கின்ற மனநோக்கத்தோடு இருந்து வருகிறார்கள். இதனால் விவசாயிகளும் தொழில் துறையில் இருப்பவர்களும் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. ஆகவே இவர்களுக்கு ஊதியம் போதவில்லை என்ற காரணத்திற்காகத் தான் லஞ்சம் வாங்குகின்றார்கள் என்று சொல்வது அவ்வளவு பொருத்தமல்ல என்பது தான் என்னுடைய அபிப்பிராயம். அதே போன்று வரி விதித்திருப்பதினால் தான் பொய் கணக்குகள் வைக்க வேண்டியிருக்கிறது என்றும் கனம் அங்கத்தினர் ஒருவர் சொன்னார். இம்மாதிரி வரி விதிக்கவில்லை என்றால் கணக்கு வைக்க வேண்டிய அவசியமில்லை. ஆகவே உண்மையான கணக்கு பொய்யான கணக்கு என்று சொல்லுவதற்கு இடமே இல்லை. வரி போடாமல் இந்த தேசத்தை நடத்த முடியும் என்று யாரும் சொல்ல முடியாது. ஆகவே வரி போட்டுத்தான் ஆக வேண்டியிருக்கிறது. ஆனால் வியாபாரிகள் எல்லாம் யோக்கியர்களாக இருக்கிறார்கள் என்று சொல்லிவிட முடியாது. அதே மாதிரி வியாபாரிகளில் பலர் சரியான விதத்தில் கணக்கு வைத்துக் கொள்பவர்களும் இருக்கிறார்கள். எனக்கு பல வியாபாரிகளிடத்தில் அனுபவமும் தொடர்பும் உண்டு. ஆனால் சில வியாபாரிகள் கணக்குகளை எவ்வளவு தூரத்திற்கு மறைத்து காட்ட முடியுமோ அந்த அளவுக்கு கணக்குகளை மறைத்து வருகிறார்கள். இந்த நிலையில் மூன்று சதமானம் என்றிருப்பதை ஒரு சதமானம் என்று குறைத்தாலும்கூட சரியான முறையில் கணக்குகளை வைத்துக்கொண்டு அரசாங்கத்திற்கு வரி கொடுக்க தயாராகயில்லை. அந்த முறையில் நம்முடைய நாட்டிலுள்ள வியாபாரிகளுக்கு தேசாபிமானம் இல்லை என்றுதான் கூற வேண்டும். இதற்கு காரணம் நம்முடைய நாட்டில் ஒழுக்கமும், தேசாபிமானமும் கெட்டுவரக் கூடிய நிலையில் பல கிளர்ச்சிகளை பலர் நடத்திக்கொண்டிருப்பதுதான் காரணம். ஆகவே பொதுவாக நாட்டில் நல்ல பண்பாடும், தேசாபிமானமும், ஒழுக்கமும் வளரச் செய்வதற்கு எல்லா கட்சிகளும் ஒன்று சேர்ந்து பாடு பட வேண்டும். இதற்கு சட்டசபை அங்கத்தினர்களும் வெளியில் இருக்கின்ற கட்சிகளும் சேர்ந்து ஒரே முகமாக பாடுபட வேண்டும். அதோடு ஒழுக்கத்திற்கு மாறாகவும், நாணயமற்ற முறையில் நடக்கக் கூடிய அதிகாரிகள் பேரில் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். இதிலே சில அதிகாரிகள் தவறு செய்கிறார்கள். உண்மையாகவே சிலர் கணக்குக் காட்டினாலும்—மற்றவர்கள் இரண்டு கணக்குகள் வைத்துத் தவறுகள் செய்வதால், அந்த கண்ணோட்டத்தோடு அவர்களையும் பார்த்து—நியாயமாகக் கணக்குக் காட்டுகின்றவர்கள்மீதும், உண்மையாகக் கணக்குக் காட்டுகின்றவர்கள் மீதும், 50,000 ரூபாய்க்கு வியாபாரம் நடந்திருந்தால், அப்படியே 50,000 ரூபாய்க்கு வியாபாரம் நடந்திருக்கிறது என்று கணக்கில் காண்பித்தாலும், இரண்டு கணக்குகளை வைத்திருப்பவர்களுக்கு 25,000 ரூபாய் சேர்த்துப் போடுவதைப் போலவே அவர்களுக்கும் போடுகிறார்கள். சென்ற வருஷத்தில் நடந்த வியாபாரம் என்ன, இந்த வருஷத்தில் நடந்திருக்கிற வியாபாரம் என்ன, எங்கெங்கே வாங்கியிருக்கிறார்கள், அதற்கெல்லாம் ஒழுங்காக பில்களை வைத்திருக்கிறார்களா என்று பார்க்கும்போது, ஒழுங்காக பில்களை வைத்திருப்பவர்களுக்குத் தொந்தரவு கொடுக்கக்கூடாது. அந்த அளவில் இல்லாமல் அதிகாரிகள் இருப்பதால் தான் சரியான கணக்கு வைத்திருப்பவர்கள் கூட ஸேல்ஸ்-டாக்ஸ் என்றதும் பயப்படக் கூடிய நிலையில் இருக்கிறார்கள். கணக்கைத் தவறுதலாக வைத்திருப்பவர்களும், பயப்படுகிறார்கள், கணக்குச் சரியாக இல்லாத காரணத்தினால், நேர்மை இருக்க்வேண்டுமென்று விரும்புகிறேன். நாம், நேர்மையாக, நியாயமாக, கணக்கு வைத்துக்கொள்ளும் வியாபாரிகளுக்கு நாம் பரிவு காட்டவேண்டியது மிக மிக அவசியம். எவ்வளவுதான் நேர்மையாகக் கணக்குக் கொடுத்தாலும் அதிகாரிகள் அதற்கு இரண்டு மடங்கு வரி போடுவதால்



தான் நாமும் அந்த மாதிரி எழுதி விட வேண்டும், நேர்மைக்குக் காலமில்லை என்று நேர்மையானவர்கள் கூடத் தவறாகப் போக இடம் கொடுக்காமல் நல்ல முறையில் பரிசீலித்து உத்தரவு போட்டு, அவர்களுக்கு வீண் தொந்தரவு கொடுக்காமல் இருக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இன்னும் சில பொருள்களுக்கு—ஏறக்குறைய ஆடம்பரப் பொருள்களுக்கு—வரி போட்டிருக்கிறோம் 6 ரூபாய் என்று சோப் ஸ்னோ போன்றவைகளுக்கு. இவைகளுக்கு வரி போடுவதால், என்ன நஷ்டம்? பௌடர் முன்பு போட்டுக் கொண்டு இருந்தோமா ? பெண்கள் மஞ்சள் பூசிக் கொண்டிருந்ததற்குப் பதிலாக இப்போது பௌடர் பூசிக் கொள்கிறார்கள். இதன் மீது வரி போடுவதால் நம் நாட்டுக்கு ஏதும் பெரும் நஷ்டம் ஏற்பட்டு விடாது. இதனால் ஜனங்கள் பாதகம் அடைய மாட்டார்கள். வியாபாரிகளை பாதிக்கிறது இந்த வரி என்று சொல்லுகிறார்களே, எந்த விதத்தில் வியாபாரிகளை பாதிக்கிறது என்று தெரியவில்லை. இந்த வரியைக் கொடுக்கக்கூடியவர் வியாபாரி அல்ல—கொடுக்கக்கூடிய வரிப்பணம் வியாபாரியின் சொந்தப் பணம் அல்ல. பொருள்களை வாங்கக் கூடிய தொழிலாளி கொடுக்கிறான் ; பொருள்களை உபயோகிப்பவர்கள் கொடுக்கிறார்கள்—வியாபாரி கொடுப்பது கிடையாது. அவர்களிடம் வாங்கக் கூடிய வரியை அப்படியே அரசாங்கத்திற்குச் செலுத்தாமல் மிச்சப் படுத்தப் பார்க்கிறார்கள் வியாபாரிகள். வரியைக் கொடுக்க கூடியது ஏழைத் தொழிலாளியோ அல்லது உண்ணக் கூடிய மற்றவர்களோ, விவசாயத் தொழிலாளியோ, அல்லது நெசவுத் தொழிலாளியோ அல்லது ஒரு பொருளை வாங்கி உபயோகிப்பவர்களோ தான். இந்த வரியை ஏழை என்று சொல்லக் கூடியவர்கள் யாரும் ஆட்சேபிப்பது கிடையாது. சாமான்களை வாங்கக்கூடியர்கள் யாரும் ஆட்சேபிப்பது கிடையாது. அவர்களிடத்தில் வரியை வாங்கி அரசாங்கத்திற்குக் கொடுக்கும் வியாபாரிகள் தான் ஆட்சேபிக்கிறார்கள். ஆகவே இந்த வரி முற்றிலும் நியாயமானது, ஒரு சிலருக்குக் கஷ்டம் ஏற்பட்டாலும் கூட, அரசாங்கம் நல்ல கருத்தோடு மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு கொண்டு வருவதால், கொஞ்சம் பளுவாக இருந்தாலும் கூட, நாட்டு மக்களுக்கு நல்லது செய்வதற்காக இருப்பதால் இந்த வரியை ஆமோதித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**SRIMATHI T. N. ANANDANAYAKI** : கனம் சபாநாயகர் அவர்களே; சென்னை விற்பனை வரி மசோதாவைப் பற்றி ஒரு சில வார்த்தைகளைக் கூற நான் ஆசைப்படுகிறேன்.

வியாபாரிகள் பல கட்டத்தில் வரி போட்ட போது பாடுபட்டு, அதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டுமென்று பல மாநாடுகளைக் கூடி, பல வியாபாரிகள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து தூது கோஷ்டி அமைத்து அமைச்சர்களைப் பார்த்து, ஒருவாறாக ஒரு கட்டத்தில் பல பொருள்களுக்கு வரி வரக் கூடிய ஒரு வாய்ப்பை பெற்றிருப்பது உண்மையிலேயே போற்றத்தக்கது. பல்லாண்டு காலமாக பல கட்ட வரியினால் கஷ்டப்பட்ட வியாபாரிகள் இதை எப்படியாவது மாற்ற வேண்டுமென்று கூச்சல் போட்டதை அமைச்சர் அவர்கள் உடனடியாக கவனித்து, சாதாரணமாக அதை விட்டு விடாமல் ஒரு நிபுணரை நியமித்து அதை ஆராய்ச்சி செய்யச் சொல்லி, அவரும் மிகவும் ஜனநாயக ரீதியில் ஊர் ஊராகச் சுற்றி, நேரடியாக வியாபாரிகளைச் சந்தித்து அவர்களுடைய சங்கடங்களையெல்லாம் கேட்டறிந்து, கடைசியில் அழகான ஒரு அறிக்கையைத் தந்தார். அந்த அறிக்கைப் படித் தயாரிக்கப்பட்ட மசோதா இந்தச்சபையினால் யோசிக்கப்பட்டு இன்னும் ஏதாவது தவறுகள் இருந்தால், அவைகளைச் சீர்திருத்திக்கொள்ள வாய்ப்பு வேண்டுமென்று ஒரு பொறுக்குக் கமிட்டி போட்டு, அந்தப் பொறுக்குக் கமிட்டி நன்றாக யோசனை செய்து, இப்போது இந்தப் பொது விற்பனை வரி மசோதாவை அமைச்சர் அவர்கள் நம் முன் வைத்திருக்கிறார்கள். அப்படி இருந்தும் கூட ஒரு சிலருக்குப் பரிவு காட்டவில்லை, இன்னும் சிலருக்கு இரக்கம் காட்டவில்லை என்று சொல்லப்பட்டால் அதையும் இப்போது சீர்திருத்திக்கொண்டால் நல்லதாக இருக்கும்.

[Srimathi T. N. Anandanayaki] [11th February 1959

பல கட்ட வரி அரசாங்கத்திற்கு நல்லது. ஒரு வியாபாரி வரியை ஒரு கட்டத்திலே ஏமாற்றினாலும், அடுத்த கட்டத்தில் அந்தப் பொருள் மாட்டிக் கொள்ளாமல் இருக்க முடியாது. ஒரு கட்டத்தில் இல்லையென்றாலும், அடுத்த கட்டத்தில் வரி ஏமாற்றப் படுவதைத் தடுக்க வழி இருந்த காரணத்தினால், பல கட்ட வரியை அரசாங்கம் நல்லது என்று எண்ணுகின்றது. ஒரு கட்ட வரி என்று போடும்போது—அதாவது ஒரு முனையில் போடும் போது—அந்த இடத்தில் வரி கொடுக்காமல் வியாபாரி ஏமாற்றி விட்டால் அரசாங்கம் அந்த வரியை இழக்கும் என்ற பயம் இருக்கிறது. காரணம் என்னவென்றால் இப்போது ஒரே கட்டத்தில் போடப் போகிறோம், போடுகிற கட்டத்தில் அரசாங்கம் ஏமாந்து விட்டால், அரசாங்கத்தின் வருமானம் கட்டாயம் குறைந்து போகும். இப்போது ஒரு கட்ட வரி என்று போடும்போது பல கட்டங்களில் போடப்பட்டு வந்த வரியைச் சேர்த்து ஒரு கட்டத்தில் போடப் போகிறோம். அதை விடச் சற்று அதிகமாகவே போடப்போகிறோம். இப்படி அதிகமான வரியை ஒரே கட்டத்தில் போடும்போது அதை வசூலிப்பதில் ஏமாந்து விட்டால் அது அதிகமான நஷ்டத்திற்குக் கொண்டு போய் விடக்கூடும். இப்போது வியாபாரிகள் "கவலைப் படவேண்டாம், காமதேனு கறந்து வந்தது குறைந்து விடாது, என்றும் போலவே இந்த வரியைத் தருகிறோம்" என்று வாக்களித்திருக்கிறார்கள். வேண்டுமானால் ஒரு முறை பரீட்சித்துப் பாருங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். இன்னும் சில மாகாணங்களில்—பம்பாய் ஒன்று என்று எண்ணுகிறேன்—இதை மாற்றி விட்டு, அரசாங்கத்திற்கு நிம்மதி இல்லை, சரியானபடி நடக்கவில்லையென்று மறுபடியும் மாற்றியிருப்பதாகத் தெரிகிறது. அது அமைச்சருக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். அந்த முறையில் வேறு மாநிலங்களில் செயல்படுவது கஷ்டமாக இருக்கிறது என்று கைவிடப்பட்டிருப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால், நாம் மிகத் தாராளமாக ஒரு முனை வரியை நம் மாகாணத்தில் புகுத்துகிறோம். இந்த ஒரு முனை வரி நீடிக்கவேண்டுமென்றால் வரி பாதிக்கப்படாமல் இருக்கவேண்டும், வருகின்ற வருமானம் பாதிக்கப்படாமல் இருக்கவேண்டும், இதற்குப் பொருப்பு பெரிதும் வியாபார மக்களைச் சார்ந்ததாக இருக்கிறது. அவர்கள் நியாயமாக, நேர்மையாக, இந்த வரியை எப்படியும் கொடுத்தாக வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு கூட அவர்கள் ஒத்துழைத்தால அவர்களுக்கும் சங்கடம் குறையும். அரசாங்கத்துக்கும் அனுகூலமாக இருக்கும். நல்ல திட்டங்களைப் போட்டு அரசாங்கம் வெற்றிபெறவேண்டுமானால், அதற்குப் பொருப்பானது மக்களைச் சேர்ந்தது. வியாபாரிகள் நல்ல முறையில் நேர்மையாக நடந்து கொள்ளவேண்டுமென்பதை இந்தச் சட்ட சபையின் மூலமாக அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ஒரு முனை வரி போடுவதால் யாருக்கு எவ்வளவு போடுவது, எந்த வகையிலே குறைப்பது, எதிலே சலுகைகள் காட்டுவது என்ற பிரச்சனைகளையெல்லாம் நிபுணர் லோகநாதன் அவர்களும், இறுதியாக பொறுக்குக் கமிட்டியும் எவ்வளவு நன்றாக ஆலோசனை செய்திருக்கிறார்கள் என்பதை இப்போது கொடுத்திருக்கக்கூடிய அறிக்கையைப் படிக்கையில் தெரிந்து கொள்ளுகிறோம். உணவுப் பொருள்களுக்கு ½ சத வீதம் வரி போடவேண்டும் என்று டாக்டர் லோகநாதன் குறிப்பிட்டிருந்தார். பொறுக்குக் கமிட்டிக்குப் போவதற்கு முன்னால் சட்ட சபையில் கூறினோம், உணவுப் பொருள்களுக்கு மட்டும் வரி வேண்டாம், அது ஏழை மக்களை பாதிக்கக் கூடியதாக இருக்கும், ஆகவே உணவுப் பொருள்களுக்கு மாத்திரம் வரி போடாமல் இருந்தால் நல்லது என்று. என்ன காரணமோ தெரியவில்லை பொறுக்குக் கமிட்டி ஒரு சதவீதமாக அதை அதிகரித்திருக்கிறது. இதற்குக் காரணம் என்ன என்றே புரியவில்லை. ½ சத வீதம் என்று போட்டதே தப்பு என்று சொன்ன பிறகு, பக்கத்தில் இருக்கக் கூடிய மாகாணங்களில் உணவுப் பொருள்களுக்கு விற்பனை வரி இல்லை என்பதைச் சுட்டிக் காட்டி, பெரிய தொந்தரவைப் பாமர மக்களுக்குத் தருவது போன்று அதை எதிர்க் கட்சிகள் பயன்படுத்திக் கொள்வதற்கு இடம் தருவதாக இருக்கிற காரணத்தினால், முடிந்தால் அதைக் குறைப்பது நல்லது என்று ஆளும் கட்சியின் சார்பாக



11th February 1959] [Srimathi T. N. Anandanayaki]

சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிலும் ஒரு சலுகை நமக்குத் தந்திருக்கிறார்கள். அதாவது, முப்பதாயிரம் ரூபாய் ஆண்டுக்கு டர்னோவர் இருக்கிறவர்கள் இனிமேல் வரி கொடுத்தால் போதும் என்று. ஒரு சதவிகிதம் என்றிருப்பதை உடனடியாக நீக்க முடியவில்லையென்றால், முப்பதாயிரம் ரூபாய் டர்னோவர் என்றிருப்பதை ஐம்பதாயிரம் ரூபாய் என்ற அளவுக்கு உயர்த்தினால் ஒரு வேளை சிறு சலுகை கிடைக்கலாம் என்று நான் நினைக்கிறேன்.

அடுத்தபடியாக கம்பவுண்டிங் விஷயம். கணக்கு வழக்கு சரியாக வைக்கத் தெரியாத காரணத்தாலே, கணக்கு வழக்கு சரியான வகையிலே வைத்தாலும், அதிகாரிகளுடைய மனதிற்கு ஏற்ற அளவிலே இல்லாததாலும், கணக்குப் புத்தகங்களை எடுத்துக்கொண்டு போய் நிற்கும் வியாபாரிகளுடைய வேதனையாலும், வரி பளுவைக்கூட வியாபாரிகள் அவ்வளவு பளுவாகக் கருதவில்லை, விற்பனை வரி ட்ரைப்யூனல் அதிகாரிகளிடத்தில் கணக்குப் புத்தகங்களைக் கொண்டுபோய் வைத்து, அவர்கள் எதிரிலே குற்றவாளிகள் மாதிரி கை கட்டி, வாய் புதைத்து நிற்கவேண்டிய நிலையில், எப்பொழுது கணக்கைச் சரி பார்க்கிறேன் என்று அவர்கள் சொல்கிறார்களோ அப்பொழுது கணக்குப் புத்தகத்தை எடுத்துக்கொண்டு போகும் நிலைமையும், அப்படி எடுத்துப் போனாலும், பொய்க்கணக்கு என்று சொல்லக்கூடிய நிலைமையும் ஏற்பட்டு மரியாதைக் குறைவான முறையில் சில இடங்களில் அதிகாரிகள் நடத்துவதினால் வியாபாரிகளுடைய மனத்திலே கொந்தளிப்பு ஏற்பட்டு, அதற்குப் பிறகுதான் ஏதாவது முடிவு கட்டவேண்டும் என்று வியாபார வர்க்கம் மிக மிகத் தீவிரமாக வேலை செய்தது. இருந்தபோதிலும், அந்தத் தீமையை முற்றிலும் விலக்க முடியாது. அதிகாரிகளிடத்தில் கணக்குகளைக் காட்டித்தான் ஆகவேண்டும். கணக்குப் புத்தகங்களைச் சரி பார்த்துத்தான் அவர்கள் வரி போட வேண்டிய நிலைமையில் இருப்பதால், சிறிய வியாபாரிகளுடைய தொல்லையைக் குறைப்பதற்கு வழி செய்ய வில்லை. பெரிய வியாபாரிகள் வேண்டுமானால் கணக்குப் பிள்ளைகளைப் போட்டுக்கொள்வார்கள் ; அவர்களுக்குச் சாமர்த்தியமாக கணக்கு எழுதிக் கொடுக்கக் கூடிய திறமை உண்டு. ஆகவே, பெரிய வியாபாரிகளுக்குத் தொல்லை இருக்காது. சிறு வியாபாரிகளுக்கு கணக்குப் பிள்ளை போட்டுக்கொள்வதற்கு கையிலே சக்தி இருக்காது. அவர்களுக்கு கணக்கு வைத்துக்கொள்வதற்கேற்ற ஆற்றல் இருக்காது. சிறு வியாபாரிகளுக்கு கணக்கு வைத்துக்கொள்வதிலே அதிகத் தொல்லை இருப்பதால், கம்பவுண்டிங்கை 25 ஆயிரம் ரூபாய்க்கு மேலே சென்று 50 ஆயிரம் ரூபாய்க்கு வைத்தால் நலமாக இருக்கும். அதற்குமேலே வைக்க முடியுமானாலும் மிக நல்லது. 75 ஆயிரம் ரூபாய்க்குக்கூட உயர்த்தலாம்.

விவசாயிகளுக்கு கம்பவுண்டிங் வசதி கொடுத்திருக்கிறோம். அதையும் அதிகப்படுத்தவேண்டுமென்று கோரினோம். கணக்கு வைக்கத் தெரியாத சிறு வியாபாரிகளுக்குத் தொல்லையைக் குறைக்கவேண்டும் என்ற வகையில் கம்பவுண்டிங் வைத்து, "ஆண்டுக்கு இவ்வளவு கொடுத்துவிடு" என்று தொகையை நிர்ணயிப்பது நல்லது என்று நான் யோசனை தெரிவித்துக்கொள்கிறேன். அரசாங்கத்திற்கு வருமானம் குறையாது. அதே சமயத்தில் வியாபாரிகளுக்கும் சற்று தொல்லை குறையும் என்று நான் எண்ணுகிறேன். இதிலும் அமைச்சர் அவர்கள் ரொம்பவும் கவனம் செலுத்துவாரானால், இந்த சட்டம் பிறமாகாணங்களுக்கு வழி காட்டியாக அமையும் என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை.

விதிவிலக்கு அளிக்கப்பட்ட ஒரு சில பொருள்களிலே சீமை எண்ணெயும் சேர்க்கப்படவில்லை. சீமை எண்ணெய்க்கு 5 சத வீதம் வரி போட்டிருக்கிறார்கள். முதல் ஷெட்யூலில், 36வது "ஐட்ட" மாக அது குறிப்பிடப்பட்டிருக்கிறது. சீமை எண்ணெயை அதிகமாகப் பயன்படுத்துவது ஏழை மக்கள் தான். மின்சாரம் எவ்வளவு விரு விருப்போடு விஸ்தரிக்கப்பட்டாலும், அது ஏழை மக்கள் வரையில் போவதில்லை. சீமை எண்ணெயை யார் அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள் என்று சொன்னால், பாட்டாளி மக்கள், தொழிலாளர் வர்க்கம் தான். அவர்களுக்கு அத்தியாவசியமாக தேவைப்படுகிற சீமை எண்ணெய்க்கு வரி போட்டு, அவர்களைப் பாதிக்கும்படிச் செய்வது நல்லது அல்ல. கையினால் நூற்கப்படுகிற நூலுக்

-கும், கைத்தறிக்கும் விதிவிலக்கு அளித்திருக்கும் இந்த அரசாங்கம், இலுப்பை எண்ணெய்க்குப் போட்டிருக்கும் வரியையும் எடுத்துவிட்டு, மூன்றாவது அட்டவணையில் இதையும் சேர்த்துவிடுவார்களேயானால் நன்றாக இருக்கும். மண்ணெண்ணெயையும், உணவுப் பொருள்களையும் மூன்றாவது அட்டவணையில் சேர்த்து விடவேண்டும். சாதாரண மக்களுக்கு வரி பளு அதிகமாகத் தோன்றுது என்ற காரணத்தினாலேதான் நான் அதைக் கூற விரும்புகிறேன்.

அது மட்டும்ல்ல. மிகச் சிறந்த அம்சங்களை எல்லாம் நம்முடைய அரசாங்கம் இந்த மசோதாவிலே புகுத்தியிருக்கிறது. கணக்கு சரியாக பார்த்து வரி போடாவிட்டால், புதிதான தவறுகளுக்கு இதிலே வாய்ப்பு கொடுத்துவிட்டால், அரசாங்கத்திற்கு சேரவேண்டிய வரித் தொகை வராமல் போய்விடும். அது விஷயத்திலும் அதிகாரிகள் கண்காணிப்புடன் நடந்துகொள்ளவேண்டும்.

அப்பெல்லேட் ட்ரைப்யூனலிலே இருக்கிறவர்கள் "**not below the rank of a District Judge**" ஆக இருக்கவேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். நீதி வழங்கும் துறையிலே அனுபவம் உள்ளவராகப் போடுவது நல்லது என்று சொன்னோம். அந்த நல்ல அம்சத்தை ஏற்றிருக்கிறார்கள். இப்படியெல்லாம் சட்டத்தைப் பார்க்கும்போது, பல நல்ல அம்சங்கள் இருக்கின்றன. எங்கோ ஒரு சில தீமைகளும் தொங்கி நிற்கின்றன. அங்குமிங்கும் இருக்கும் சில தீமைகளை நீக்கிவிட்டு, நல்ல அம்சங்களை ஏற்று, இந்தச் சட்டத்தை மிகச் சிறந்த முறையில் அமுலுக்குக் கொண்டுவருவோமானால், இது உண்மையிலேயே மற்ற மாகாணங்களுக்கு வழிகாட்டியாக இருக்கும். ஆனால், இந்தச் சட்டம் வழிகாட்டியாக இருக்கவேண்டுமானால், நான் முன்னாலே சொன்னதுபோன்று, ஒரு முனை வரியின் மூலம் வரும்படியை எதிர்பார்த்திருக்கும் அரசாங்கத்தை எள்ளளவும் ஏமாற்றாமல், தங்களால் இயன்றவரை நல்ல எண்ணத்தோடு அரசாங்கத்தோடு ஒத்துழைத்து, ஒரு முனை விற்பனை வரியை ஒழுங்காகச் செலுத்தி, மாகாணத்திற்குப் பொருளாதாரத் துறையிலே நெருக்கடியைக் கொண்டுவராத நிலையில் வியாபாரிகள் இருப்பார்களேயானால், கட்டாயமாக அவர்கள் தொல்லையும் தீரும்; நம்முடைய சட்டமும் எடுத்துக்காட்டாக இருக்கும்.

ஏதோ உருளைக் கிழங்குக்கும், கருணைக் கிழங்குக்கும் கருணை காட்டவில்லை, பாலுக்குப் பரிவு காட்டவில்லை என்று சிலர் சொல்லலாம். ஆனால், பாலுக்குப் பரிவு காட்டப்பட்டிருக்கிறது. "**Milk foods (excluding fresh milk) but including milk powder**" என்று முதல் அட்டவணையில் 25-வது ஐட்டமாகப் போட்டிருக்கிறார்கள். சுத்தமான பாலுக்கு வரி இல்லை. ஆனால், பவுடர் பாலுக்கு வரி உண்டு. அதற்குப் போடலாம். மில்க் பவுடரை பாலுக்குப் பதிலாகச் சாப்பிடுவது உடலுக்கு நல்லதல்ல. ஆனால் "**fresh milk**" குக்கு வரி இல்லை. அந்த அளவுக்கு பாலுக்குப் பரிவு காட்டப்பட்டிருக்கிறது, என்று எதிர்க் கட்சியினருக்குச் சொல்ல விரும்புகிறேன். பாலுக்குப் பரிவு காட்டவில்லை என்று மொத்தமாகப் பேசாமல், பரிவு காட்ட வேண்டிய பாலுக்குப் பரிவு காட்டப்பட்டிருக்கிறது, என்பதை உணரவேண்டும். அத்துடன், குழந்தைகளுக்கென வருகிற பால் உணவுப் பவுடர் விஷயத்திலும் அதிக பரிவு காட்ட வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். அதை நாம் ஓரளவு ஏற்றுக்கொள்ளலாம். அதற்கு வரிவிதிப்பிலிருந்து ஓரளவு விதி விலக்கு அளிக்கலாம். காரணம், சிறு குழந்தைகளுக்கு பால் பவுடர் டப்பாக்களின் விலை குறைவாக இருக்கவேண்டும். அவை கிடைப்பதும் அரிதாகப் போய்விட்டன. சுத்த பாலுக்கு வரி போடாமல் விதிவிலக்கு அளித்து அதற்குப் பரிவு காட்டியிருப்பதை வரவேற்கவேண்டும். அது தொடர்ந்து இருக்கவேண்டும். முடிந்தால், குழந்தைகளுக்கான பால் டப்பாக்களுக்கும் விலக்கு அளிப்பதற்கு அரசாங்கத்தார் சற்று கருணை உள்ளத்தைக் காட்டுவார்களானால் அது போற்றத் தக்கது. ஆனால், செய்ததைப் பாராட்டாமல் இருப்பது தவறு என்ற காரணத்தால், பாலுக்குப் பரிவு காட்டப்பட்ட அளவுக்கு அமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அரசாங்கம் மேலும் இது விஷயத்தில் பரிவு காட்டலாம் என்று கூறி, இந்த நல்ல சட்டத்தைக் கொண்டுவந்த அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இன்னும் இருக்கும்



ஒரு சில தவறுகளையும் நீக்கி, உயர்ந்த சட்டமாக சென்னை மாகாணத்திலே நாம் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு இந்த வாய்ப்பை அளித்ததற்கு நன்றியைத் தெரிவித்து, என்னுடைய உரையை இத்துடன் முடித்துக்கொள்ளுகின்றேன். வணக்கம்.

**Sri M. KALYANASUNDARAM**: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா மிக விரிவாக செலக்ட் கமிட்டியினாலே பரிசீலனை செய்யப்பட்டு சபை முன்பு வந்திருக்கிறது. என்னுடைய ஏழு வருஷ அனுபவத்திலேயே இந்த சட்டசபையில் வேறு எந்த மசோதாவும் இவ்வளவு விரிவாக ஆராய்ச்சி செய்யப்படவில்லை என்று நான் துணிந்து கூற முடியும். அனேகமாக ஒவ்வொரு பிரிவும் தனித்தனி உப கமிட்டிகள் வேறு போட்டு பரிசீலனை செய்யப்பட்டது. கருத்து வித்தியாசங்கள் இருந்தால், அந்தக் கருத்து வித்தியாசங்கள் என்ன என்ன என்று தெளிவாகக் கூறப்பட்டிருக்கிற விவரங்களை அறிக்கையிலே நன்றாகப் பார்க்கலாம். இந்த மசோதாவுக்குக் காரணமாக இருந்த அமைச்சரும், நம்முடைய நிதி அமைச்சரும் கூட அந்த செலக்ட் கமிட்டியில் இருந்தார்கள். வரி விகிதத்தைக் குறைப்பது தவிர, வருமானத்தைப் பாதிக்காமல் என்ன சீர்திருத்தம் சொன்னாலும் ஒப்புக்கொண்டார்கள். அது விஷயத்தில் அவர்கள் ரொம்ப தாராளமாக இருந்தார்கள். வரி விகிதத்தைக் குறைப்பதில் அனேகமாக விட்டுக் கொடுக்கவல்லை. இன்னும் எந்தப் பொருள்களுக்கு அதிகமாக வரி போடலாம் என்று யோசனை சொன்னாலும், வேண்டுமானால் அதை ஆலோசிப்பதற்கும் தயாராக இருந்தார்கள். இது அவர்களுடைய சங்கடமான நிலைமை என்று கருதுகிறேன்.

விற்பனை வரி நியாயமானதா, அநியாயமானதா என்பது விவாதத்திற்கு உரிய ஒரு விஷயம் அல்ல, விற்பனை வரியை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். வியாபாரி அந்த வரியைக் கொடுக்கவில்லை, பொது மக்கள் கொடுக்கிறார்கள். தனிப்பட்டவர்கள் நடத்தக்கூடிய பெரும் தொழில்கள், மொத்த வியாபாரம் இன்னும் சொத்துடைமை பூராவும் தனியார் ஆதிக்கத்தில் இருக்கும் சமுதாயத்திலே மக்கள் மீது சுமத்தக்கூடிய விற்பனை வரி, நியாயமான வரி என்று யாரும் ஒப்புக்கொள்ள முடியாது. ஆனால் நம்முடைய ராஜீய சர்க்கார் சம்பந்தப்பட்டமட்டில், விற்பனை வரியைத் தவிர வேறு வருமானம் கொடுக்கக் கூடிய வரிகளைப் போட சக்தி அற்றவர்களாக இருக்கிறார்கள். அவர்களைப்பற்றி பரிதாபப்படுவதா, கண்டிப்பதா என்று தெரியவில்லை.

நிதிக் கமிஷன் கொடுத்திருக்கும் யோசனையை இந்தச் சபை முன் வைத்து, அவற்றின் மீது விவாதம் நடத்தவேண்டும் என்று நான் வற்புறுத்தியிருக்கிறேன். அப்படி வற்புறுத்தியிருந்தால், நாம் இந்த ராஜ்யத்தின் நிதி நிலைமையைச் சீர்படுத்திக்கொள்ள யோசனைகளையும், இந்த வரிக்கு அப்பாற்பட்ட யோசனைகளையும் நாம் கொடுத்திருக்க முடியும், ஆலோசனை செய்திருக்க முடியும். அப்படிப்பட்ட யோசனைகளைக் கொடுக்க முடியாத காரணத்தால் அல்ல இந்த வரியைப்பற்றி குறை கூறியது. வேறு யோசனைகள் சொல்வதற்கு என்ன என்று கேட்டார்கள். நியாயமான கேள்வி. வேறு யோசனைகள் சொல்வதற்குச் சந்தர்ப்பம் இருக்கவேண்டிய இடத்தில் சொல்ல வேண்டியது தான். ராஜீய சர்க்காருக்கு வருமானம் கொடுக்காமல் பணத்தை அவர்கள் கையில் ஒப்படைக்காமல் செலவு செய்யவேண்டுமென்று எப்படி நாம் எதிர்பார்க்க முடியும்? எதிர்பார்க்க முடியாது. தேவையான பணம் கொடுக்கவேண்டும். ஆனால், வசூலிக்க வேண்டிய பணம் யாரிடமிருந்து வசூலிப்பது என்பது தான் பிரச்னை. இந்த வரி சம்பந்தப்பட்ட மட்டில், இது பொது மக்களிடமிருந்து தான் வசூலிக்கப்படுகிறது. உபயோகிக்கின்ற மக்கள் எந்த விதமான வித்தியாசமும் இல்லாமல் இந்த வரியைக் கொடுக்கிறார்கள் என்பதிலே எந்தவிதமான சந்தேகமும் வேண்டியதில்லை. ஆகையால், இந்த வரி சம்பந்தப்பட்ட மட்டில் தத்துவார்த்த ரீதியில் நியாயமா, அநியாயமா என்று விவாதிப்பதைவிட இந்த வரி சர்க்காருக்கு அவசியமாக ஆய்விட்டது. ஆகையால் தான் சர்க்கார் இதில் விட்டுக் கொடுக்க முடியாமல்,

இதை எப்படியும் விகிதங்களை விட்டுக் கொடுக்காமல், அனைவரும் விட்டுக் கொடுக்காமல், வற்புறுத்த நேர்ந்துள்ளது என்பதை நான் அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். முதலில் அந்த விகிதம் பல கட்டத்தில் விதித்திருக்கக்கூடிய இரண்டு சத விகிதமாக விதித்திருக்கிறார்கள். அது செலக்ட் கமிட்டியில் ஆலோசனைக்கு வந்தது. இந்த இரண்டு சத விகிதம் கூட அதிகமானதுதான் என்று செலக்ட் கமிட்டியில் பலர் அபிப்பிராயப்பட்டார்கள். அவர்களுக்கு கட்சிக்கட்டுப்பாடு இல்லாமல் இருந்திருந்தால் அவர்கள் எல்லோரும் இதை ஆதரித்து ஓட்டுச் செய்திருப்பார்கள். ஆனால் அவர்கள் பேசியபோது குறைக்க வேண்டும் என்று பேசினாலும் சர்க்கார் சொன்னதையே ஒப்புக்கொண்டு விட்டார்கள். ஓட்டுச் செய்வதற்கு அவர்களுக்கு கட்சிக்கட்டுப்பாடு இல்லாமல் இருந்திருந்தால் அவர்கள் இதற்கு ஒத்துக்கொண்டிருக்க மாட்டார்கள். உணவு பொருள்களுக்கு பூரணமாக விதிவிலக்கு அளிக்கவேண்டும் என்றும் மற்ற பொருள்களுக்கு இரண்டு சத விகிதம் இருக்கவேண்டும் என்றும் பேசினார்கள். மந்திரிகள் செலெக்ட் கமிட்டியில் இருந்ததால் அவர்கள் தங்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற முடியவில்லை. இரண்டு விகிதம் என்று சொன்னது அப்படியே இருக்கிறது. அப்படியே உணவு பொருள்களுக்கும் ஒரே சத விகிதம் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் உணவு பொருள்களுக்கு விதி விலக்கு அளித்திருக்கவேண்டும். அப்படி விதிவிலக்கு அளிக்கா விட்டாலும் கூட மற்றவைகளுக்கு விதித்திருக்கும் இரண்டு சத விகிதம் நியாயம் தானா அல்லது அவசியமா என்பதையும் பார்க்க வேண்டும்.

நாம் ஒரு நிபுணரை நியமித்தோம் அவரும் அவைகளைப்பற்றி விரிவாக பரிசீலனை செய்து தன்னுடைய அறிக்கையையும் சமர்ப்பித்திருக்கிறார். அவர் தன்னுடைய அறிக்கையில் உணவு பொருள்களுக்கு ½ சத விகிதம் தான் வைக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். அரை சத விகிதம் வசூலிக்க வேண்டுமென்று சொல்லும்போது கூட அவர் எப்படி அதை வசூலிக்கலாம் என்பதையும் சொல்லியிருக்கிறார். எவ்வித சந்தேகத்திற்கும் இடம் இல்லாமல் சொல்லியிருக்கிறார். இவர்கள் சொல்லலாம் ஒரு சத விகிதம் என்று வைத்தால் அதை வசூலிக்க கஷ்டம் அதிகமாக இருக்காது என்று சொல்லலாம். வியாபாரிகளுக்கும் இதை ஏமாற்ற வேண்டுமென்ற எண்ணம் இருக்காது என்றும் சொல்லலாம். அவர்களும் இதை உற்சாகமாகக் கொடுக்க முன் வருவார்கள் என்றும் சொல்லலாம். பல ராஜ்யங்களில் இதைப் பார்த்து பல ஆதாரங்களுடன் அவர் இதை எடுத்துக் காட்டியிருக்கிறார். டாக்டர் லோகநாதன் அறிக்கையைப்பார்த்தால் இது நன்றாகத் தெரியும். இப்பொழுதுள்ள வரி பொதுமக்களால் கொடுக்கப்பட்டாலும் ஆட்சேபணைகள் வருவதெல்லாம் வியாபாரிகளிடமிருந்துதான் வருகின்றன. அதற்குக் காரணம் இருக்கிறது. நல்ல வியாபாரிகள்கூட கெட்ட வியாபாரம் நடத்தக்கூடிய மனப்பான்மையில் போய் விடுகிறார்கள். இதன் மூலம் வியாபாரிகளுக்கு அதிகப்படியான நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. வியாபாரிகளில் நல்லவர்களும் இருக்கிறார்கள், கெட்டவர்களும் இருக்கிறார்கள். இந்த முறையில் நல்ல வியாபாரிகளும் கெட்டவர்களாக மாறி விடுகிறார்கள். கெட்ட வியாபாரிகள் வரி கொடுக்காமல் ஏமாற்றி தங்களுடைய வருமானத்தைப் பெருக்கிக்கொள்வதற்கு முயற்சி எடுத்துக்கொண்டு அதிகப்படியான வியாபாரம் செய்வதற்கு முற்படுகிறார்கள். இதைப்பார்த்து நல்ல வியாபாரிகளும் தங்களுடைய வியாபாரத்தை அதிகப்படுத்திக்கொண்டு லாபத்தை அதிகரித்துக் கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தில் கெட்ட வியாபாரத்தில் ஈடுபடுகிறார்கள். நியாயமாக கணக்கு வைத்துக்கொண்டு வியாபாரம் செய்கிறவர்கள் கூட கணக்கு வைத்துக்கொள்ளாமல் வரியைக் கட்டாமல் தப்பித்துக் கொள்வதற்கு முற்படுகிறார்கள். அதனால் அவர்கள் பல மோசடிகளில் இறங்குவதற்கு சந்தர்ப்பம் ஏற்படுகிறது. ஆகவே நேர்மையற்ற முறையில் மோசடிகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. வரியைக் கொடுக்க ஏமாற்றியாவது தங்களுடைய வியாபாரத்தை பெருக்கிக்கொள்ள முற்படுகிறார்கள். ஆகவே இந்த வரி அவர்களுடைய உண்மையான நடத்தையை குறைப்பதற்கு [illegible] இருக்கிறது என்பது என்னுடைய அபிப்பிராயம்.





உணவு பொருள்களுக்கு வரி விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்பதையும் மற்ற பொருள்களுக்கு பல கட்டத்தில் வரி விதிக்கும் போது ஒரு பர் சென்ட் விதிக்கவேண்டும் என்றும் அபிப்பிராயத்தை தெரியப்படுத்துகிறேன். இதையே நான் வலியுறுத்த விரும்புகிறேன். அதற்காக கனம் மந்திரி அவர்களிடத்தில் ஒரு அபிப்பிராயத்தையும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதாவது ஒரு வருஷத்திற்காகவாவது ஒரு பர் சென்ட்டை வைத்துப் பார்க்கலாம். அதில் எந்த அளவு அனுகூலம் ஏற்படுகிறது என்று பார்க்கலாம். அவற்றில் அனுகூலம் ஏற்படுகிறதா அல்லது பிரதிகூலம் ஏற்படுகிறதா என்பதைப் பார்த்து விட்டு பிரதிகூலம் ஏற்பட்டால் அதன் பிறகு அதை இரண்டு பர்செண்டாக உயர்த்திக்கொள்ளலாம். அதற்கு வேண்டிய அதிகாரமும் நமக்கு இருக்கிறது. அல்லது வருமானம் குறைந்தால் அதை சரிபடுத்திக்கொள்ள அதன் பிறகு உயர்த்திக்கொள்ளலாம், அதற்கு வேண்டிய அதிகாரமும் நமக்கு இருக்கிறது. இது என்னுடைய அபிப்பிராயம். ஆகவே பல கட்டத்திற்கு இரண்டு பர்செண்ட்டும் உணவு பொருள்களுக்கு விதி விலக்கும் அளித்துப் பார்க்கவேண்டும் என்றும் அதையும் பரிட்சார்த்தமாகப் பார்க்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். டாக்டர் லோகநாதன் அவர்கள் சிபாரிசுப்படி விதிப்பதானது பொருத்தமாக இருக்கும் என்பதையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இதைப்பற்றி செலெக்ட் கமிட்டியில் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் எடுத்துக்கொள்ளவில்லை. ஒருக்கால் சட்டசபையில் வந்தபோது ஏதாவது விட்டுக்கொடுக்கலாம் என்ற அபிப்பிராயத்தில் அங்கே ஒப்புக்கொள்ளாமல் இருந்து விட்டு இங்கே யாவது விட்டுக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் விட்டுக்கொடுக்க முன் வர வேண்டும், அப்படி முன் வருவார்கள் என்றும் நினைக்கிறேன். ஆகவே சட்ட சபையில் காட்ட வேண்டிய சலுகையாக இதை வைத்துக்கொண்டு அதற்கு விதிவிலக்கு அளிக்க முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அம்மாதிரியாவது இப்பொழுது செய்யலாம், அதற்கு வேண்டிய சந்தர்ப்பமும் இருக்கிறது. உணவு பொருள்களுக்கு விதிவிலக்கு கொடுக்க வேண்டும் என்கிற கிளர்ச்சி பலமாக வந்திருக்கிறது. அண்டை ராஜ்யங்களாகிய கேரளா, மைசூர் போன்ற ராஜ்யங்களில் இதற்கு விதிவிலக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதைப்போலவே இங்கும் கொடுக்கவேண்டும். ஏழு, எட்டு வருஷங்களாகச் செய்த கிளர்ச்சியின் காரணமாக இப்பொழுது இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அண்டை ராஜ்யங்களில் உணவு பொருள்களுக்கு விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கும் காரணத்தினால் இங்கேயும் அவற்றிற்கு விதிவிலக்கு அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அழிந்து போகும் பொருள்களுக்கு சலுகை தரவேண்டும் என்பதைப் பற்றியும் செலெக்ட் கமிட்டியில் விவாதம் வந்தது. முப்பது ஆயிரம் ரூபாய்க்கு வியாபாரம் செய்கின்றவர்களுக்கு சலுகைகள் கொடுத்திருக்கிறோம், விதி விலக்குக் கொடுத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். இந்தச் சலுகைகூட புஷ்பம், காய்கறி, பழங்கள், வாழையிலை, வெற்றிலை, போன்ற சாமான்களை மட்டும் வைத்துக்கொண்டு வியாபாரம் செய்கிறவர்களுக்குத்தான் இந்தச் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும் சொன்னார்கள். ஆனால் மற்ற சாமான்களுடன் இவைகளையும் விற்றால் அவர்களுக்கு இப்படிப்பட்ட சலுகை கிடையாது. இதைபற்றி கேட்டால் முப்பது ஆயிரம் ரூபாய்க்கு உள்பட்டு விற்பனை செய்கிறவர்களுக்குத்தானே இந்த சலுகை என்று சொல்லி இது ஒரு பெரிய சலுகை என்றும் சொல்லுகிறார்கள். அதனால் கஷ்டம் ஒன்றும் இருக்காது என்றும் சொல்லுகிறார்கள். இதனால் முப்பது ஆயிரம் ரூபாய்க்கு உட்பட்டு வியாபாரம் செய்கிறவர்கள் அதற்கு மேல் வியாபாரம் நடக்கவில்லை என்று காட்டுவதற்கு கணக்கு வைக்கவேண்டியதாக ஏற்படும். அதனால் அவர்களுக்கு கணக்குகள் வைத்துக்கொள்ள வேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஏற்படும். இதையும் மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். மற்ற பொருள்களுக்கும் இவைகளுக்கும் வித்யாசம் இருக்கின்றன. மற்ற பொருள்களுக்கு பில் போட்டு வியாபாரம் செய்யலாம். ஆனால் அவைகளுக்கு பில் போட்டு வியாபாரம் செய்வது என்பது முடியாது. காய்கறி, வாழையிலை, [வெற்றிலை, புஷ்பம்

அவைகளை யார் வாங்குகிறார்களோ அவர்களுக்கு 'பில்' போட்டு விற்க முடியாது. நாலு நயாபைசா போட்டு வசூலிக்க அவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடையாது. இது சலுகை என்றாலும் அது ஒப்புக்கொள்வதாக இல்லை. ஆகவே முப்பது ஆயிரம் ரூபாய்வரையில் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்வது ஒரு சரியான சலுகையாகாது. அதனால் அவர்களுடைய வியாபாரம் வெகு அளவில் பாதிக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம். உண்மையாகவே அவர்களுக்கு சலுகை அளிக்கவேண்டும் என்று கருதினால் அதற்கு நான் யோசனை சொல்வது என்னவென்றால், ஐம்பது ஆயிரம் ரூபாய் வரையிலாவது அவர்களுக்கு சலுகை கொடுக்கவேண்டும். அது வரையில் அவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கவேண்டும். அந்த அளவுக்கு அதை உயர்த்த வேண்டுமென்ற யோசனையை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். அப்படி உயர்த்தாவிட்டாலும் மற்ற பொருள் களுக்கு பத்தாயிரம் முதற்கொண்டு இருபத்தி ஐயாயிரம் வரையில் ஒட்டு மொத்தமாக வரி செலுத்தலாம் என்று வைத்திருப்பது போன்று இப்படிப் பட்ட பொருள்களுக்கும் முப்பதாயிரம் ரூபாய் முதற்கொண்டு எழுபதாயிரம் ரூபாய் வரையிலாவது ஒட்டு மொத்தமாக வரி கொடுக்கவேண்டும் என்ற முறையிலாவது சலுகை காட்டவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தினால் உண்மையிலேயே அவர் களுக்கு சலுகை காட்டியதாக ஆகும் என்பது என்னுடைய அபிப்பிராயம். ஏனென்றால் இப்பொழுது பத்தாயிரம் முதற்கொண்டு இருபதாயிரம் வரை யில் ஒட்டு மொத்தமாக வரி செலுத்தலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கனம் மந்திரி அவர்கள் எப்படியாவது இவைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். எந்த முறையிலாவது வியா
12-20 p.m. பாரிகளுக்கு இருக்கக்கூடிய குறைகளைத் தீர்க்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். அதோடு சில பொருள்களுக்கு ஒரு முனை வரியா, பல கட்ட வரியா என்பதில் அபிப்பிராய பேதங்கள்—வித்தியாசம் ஏற்பட்டிருக்கலாம். விதிவிலக்கு இல்லாமல் ஒரு முனை வரி என்று இருந்தால் அது எல்லோரையும் பாதிக்கக் கூடும். ஒரு முனை வரியைக் காட்டிலும் பலமுனை வரியே தேவலை என்று நினைக்கக்கூடும்.

உதாரணமாக, பிண்ணாக்குக்கு ஒரு முனையில் வரி போடப்பட்டிருக்கிறது. பிண்ணாக்குக்கு வரி போடுவது நியாயமா இல்லையா என்பது ஒரு புறம் இருக்கட்டும். மாட்டிற்குத் தீனியாகப் பயன்படுகிறது, விவசாயத்திற்கு மிகவும் அவசியமானது. இதற்கு ஏன் வரி விதிக்கவேண்டும் என்று வாதிக்கலாம். இருந்தாலும் வரி விதிப்பது என்றால் எப்படி விதிப்பது ? இப்போது ஒரு முனை வரி விதிக்கிறார்கள். ஒரு முனை வரி என்று வைத்துவிட்டால் விலக்குக் கிடையாது. பலகட்ட முனை வரிக்கு பத்தாயிரம் ரூபாய்க்கு விலக்குக் கொடுத்திருக்கிறோம். ஆனால் இங்கே ஒரு சாதாரண வியாபாரி ஒரு செக்கை வைத்துக்கொண்டு எண்ணையாட்டி வியாபாரம் செய்கிறான் என்றாலும் அவன் உற்பத்தி செய்கிற பிண்ணாக்குக்கு மொத்த மாக அவன் வரி கட்டியாகவேண்டிய சங்கடமான நிலை ஏற்படுகிறது. பல கட்ட வரி என்றாலும்கூட அவனுக்கு பத்தாயிரம் ரூபாய் வரையில் விலக்கு இருக்கிறது. ஆனால் இங்கே அவனுக்கு இந்தச் சலுகைகூடக் கிடையாது. மனிதர்கள் உண்ணக்கூடிய உணவு தானியத்திற்கே வரி வேண்டாம் என்கிறபோது—உணவையே அதிகம் உற்பத்தி செய்யக்கூடிய பிண்ணாக்கு, விவசாயத்திற்கு மிகவும் அத்யாவசியமான கால்நடைகளின் தீவனமான பிண்ணாக்குக்கு வரி போடாமல் விட்டிருந்தாலும் பரவாயில்லை. ஆகவே ஒரு கட்டத்தில் 3 சத விகிதம் என்று போடுவதனால் உண்டாகிற சங்கடத்தை நன்கு உணர்ந்து இதைப் பலகட்டத்தில் போடக்கூடிய வரியாக 1 சத விகிதம் வரி என்று விதித்தால்கூடக் கொஞ்சம் வசதியாக இருக்கும் என்பது என் அபிப்பிராயம். அதற்குத் தக்க திருத்தங்கள் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் விதிவிலக்கு—பலகட்ட வரியைப் பொறுத்தவரையில் 10 ஆயிரம் ரூபாய் வரையில் என்று செலக்ட் கமிட்டியில் செய்திருக்கக்கூடிய திருத்தம்—தொழிற்சங்கங்களை நடத்திப் பழக்கப்பட்ட—முதலாளிகளோடு பழகி அவர்கள் மனோபாவத்தை நன்கு தெரிந்துகொண்டிருக்கக்கூடிய அனுபவம் உள்ள நமது தொழில் அமைச்சர் அவர்கள் தம் அனுபவத்



தினாலேயே கையாண்டிருக்கக்கூடிய தந்திரங்களிலே இது ஒன்று என்று சொல்லிவிடலாம். அதுதான் என் அபிப்பிராயமும். ஏற்கெனவே வியாபாரிகளிடமிருந்து நமக்கு என்ன கோரிக்கை வந்திருக்கிறது ? 25 ஆயிரம் ரூபாய் வரையில் விதிவிலக்குக் கொடுக்க வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். தொழிலாளிகள் சம்பளம்கூட வேண்டுமென்று கேட்டால் உடனே முதலாளிகள் கையாளுகின்ற தந்திரம் ஆள்குறைப்பு செய்கிறோம் என்பதுதான். ஆள் குறைப்பு என்றவுடனே தொழிலாளிகளும் இறங்கி வந்துவிடுவார்கள். அதுபோல இன்றைக்கு 25,000 ஆயிரம் வரையில் விலக்கு அளிக்கவேண்டும் என்று அவர்கள் கோரியதற்கு லிமிட்டை ஐயாயிரம் என்று குறைக்கிறேன் என ஆரம்பித்தவுடனே பத்தாயிரம் போதும் என்று அவர்கள் இறங்கி வரும்படி செய்துவிட்டார்கள். இந்தத் தந்திரத்தைக் கையாண்டு அவர்கள் வெற்றி கண்டும்விட்டார் என்பது என் அபிப்பிராயம்.

பத்தாயிரம் என்பது நியாயமான வரம்பு அல்ல. இன்னும் அதிகப் படுத்த வேண்டிய சந்தர்ப்பம் இருக்கிறது. 25 ஆயிரம் ரூபாய் வரைக்கும் கணக்குக் காட்டாமலே வாங்கிய பொருளுக்கு மட்டும் கணக்குக் காட்டினால் போதும் என்று வாக்குறுதி கொடுத்தார்கள். அதாவது கொள்முதல் செய்தது எவ்வளவு, விற்பனை செய்தது எவ்வளவு என்று பூரா நிர்பந்தமும் இல்லாமல் கொள்முதல் செய்த பொருள்களுக்கு மட்டும் கணக்குக் கொடுத்து அந்த அடிப்படையில் 25 ஆயிரம் ரூபாய் வரைக்கும் கம்பவுண்டு பண்ண வாக்குறுதி கொடுத்தது நடைமுறைக்கு வர வேண்டும் என்பது என் அபிப்பிராயம். அதே சமயத்தில் அந்த விகிதாசாரப்படியே விலக்குக் கொடுப்பதற்கும் பாதியாகக் குறைத்தால் ஓரளவு ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையில் அமையும் என்பது என் அபிப்பிராயம். அதையும் கனம் அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டும்.

இந்த மசோதாவில் பல புதிய பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. முன்பு இருந்த நிலைமை அல்ல. இது ஒரு சங்கடமான வரி வசூலிக்கும் முறை. வரியையும் வசூலித்தாகவேண்டும். ஏமாற்றுகிறவர்களுக்கும் இடம் கொடுக்கக்கூடாது. ஏமாற்றுகிறவர்களையும் தண்டிக்க வேண்டும். அவ்வளவு சங்கடமான நிலையில் வரி வசூலிக்கவேண்டுமானால் நாம் அதிகாரிகளுக்குக் கொஞ்சம் அதிகாரம் கொடுக்கத்தான் வேண்டும். அதோடு வரி கொடுக்கக்கூடிய நபர்களின் எண்ணிக்கை அதிகம். ஏமாற்று வதற்கும் பல சந்தர்ப்பங்கள் இருக்கின்றன.

உதாரணமாக, பாண்டிச்சேரியில் டீசல் ஆயிலுக்கு வரி இல்லாத காரணத் தினாலும் நம் ராஜ்யத்தில் அதற்கு வரி போட்டிருக்கிற காரணத்தினாலும் முன்பு அந்த ராஜ்யத்தில் டீசல் ஆயில் எவ்வளவு விற்பனையாகி வந்தது, இப்போது எவ்வளவு விற்பனை ஆகிறது என்று பார்த்தால் தெரியும். அங்கிருந்து வாங்கி இங்கே தென்னாற்காடு, சேலம், திருச்சி ஜில்லா வரைக்கும் போகிறதென்பதை அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டும்.

நாம் என்ன செய்தாலும் ஏமாற்றுகிறவர்கள் ஏமாற்றுகிறார்கள். மண் எண்ணெய்க்கு இவ்வளவு கிராக்கி ஏற்பட்டதன் இரகசியம் என்ன ? பர்மாஷெல், ஸ்டாண்டர்ட் வாகுவம் ஆயில், கால்டக்ஸ் போன்ற இந்த மூன்று அந்நிய கம்பெனிகளும் வேண்டுமென்றே ஒரு நிர்ப்பந்தமான நிலையை சிருஷ்டித்து, இதன் காரணமாக பல சலுகைகளைப் பெறவேண்டும் என்கிற நோக்கத்தில் செய்கிற காரியங்களை இந்தச் சந்தர்ப்பத்தில் விவாதிக்க முடியாது. ஆனால் மண் எண்ணெய் எந்த எந்த வகையில் எல்லாம் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது என்பது நமக்குத் தெரியாதது அல்ல. டீசல் ஆயிலோடு இதைக் கொட்டிக் கலந்து நான்கு டின் ஆயிலை 5 டின்னாக—டீசல் ஆயில் விலைக்கு—கலப்பு எண்ணெயை விற்கிறார்கள். தென்னாற்காடு, சேலம் போன்ற ஜில்லாக்களில் இப்படி நடப்பது அதிகாரி களுக்கும் தெரியும். நமக்கும் தெரியாதது அல்ல.

வியாபாரத்தில் இப்படிப்பட்ட சூதுகள் நடப்பதைக் தடுக்கவேண்டு மென்றால் அதிகாரிகளின் கையைப் பலப்படுத்தத்தான் வேண்டும். இன்னொரு உதாரணம். திருச்சி ஜில்லாவில் உள்ள கம்பெனி தொடர்ந்து

அமோனியம் சல்பேட் மூட்டையை எப்படி விற்பனை செய்து வருகிறார்கள் என்பதைக் கவனிக்கவேண்டும்? நான்கு மூட்டையை பிரித்து தூத்துக்குடியிலிருந்து உப்பளத்தில் உள்ள கருப்பு கட்டிகளை வாங்கிவந்து இதோடு கலந்து மெஷின் தையல் போலவே நல்ல தையல் கலையில் வல்லவர்களைக் கொண்டு நான்கு மூட்டை அமோனியம் சல்பேட்டை ஐந்து மூட்டை, ஆறு மூட்டையாகத் தைத்து விற்று வருகிறார்கள். கேட்டால் அவருக்குக் கொஞ்சம் சொந்த நிலம் இருக்கிறது. தன் நிலத்திற்கு உரமிடுவதற்காகக் கலந்து வைத்திருப்பதாகச் சொல்கிறார். எல்லா அதிகாரிகளுக்கும் தெரியும். இது விஷயம் 1½ வருஷமாக அடிபடுகிறது.

இப்படிப்பட்ட கள்ளத்தனத்தைக் கட்டுப்படுத்த அதிகாரிகளுக்குப் போதுமான அதிகாரம் நாம் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் இந்த அதிகாரத்தைக் காட்டி அதிகாரிகள் லஞ்சம் வாங்கக்கூடிய நிலைமை வளர்ந்துவிடாதவாறும் நிர்வாகத்தில் கண்காணிப்பாக இருக்கவேண்டும். பொதுவாக சட்டத்தினால் மட்டும் இதற்குப் பரிகாரம் காண முடியாது. நிர்வாகத்தின் திறமை எப்படி இருக்கிறது, ஒழுங்கு எப்படி இருக்கிறது, நேர்மை எப்படி இருக்கிறது என்பதைப் பொருத்த விஷயமே தவிர சட்டத்தினால் பரிகாரம் காணமுடியாது என்பது என் அபிப்பிராயம். ஓரளவு பொதுஜன அபிப்பிராயம்தான் இதைத் தடுக்க, முடியும். திருச்சி நகரத்திற்காக ஒதுக்கப்பட்ட மண்ணெண்ணெயை திருட்டுத்தனமாக பக்கத்து ஜில்லாவிற்கு லாரியில் கடத்தப் போகிறார்கள் என்பது தெரிந்து எந்த லாரியாக இருந்தாலும் வழிமறிப்பது எனத் தொழிலாளர்கள் தீர்மானம் செய்தவுடனேதான் அந்த வியாபாரிகள் இறங்கிவந்தார்கள். கலெக்டரிடத்தில் நான்கணவுக்கு விற்கிறோம் என்று கையெழுத்துப் போட்டுக் கொடுத்தார்கள். ஆகவே இப்படி பொதுஜன அபிப்பிராயத்தைத் திரட்டித்தான் இந்தக் கள்ள வியாபாரத்தை ஒழிக்க முடியும்.

மேலும் இதை நிர்வகிக்கக்கூடிய முறையில் ஜில்லா மட்டிலும், ராஜ்யம் மட்டிலும் ஆலோசனைகள் கூறுவதற்கு ஆலோசனைக் குழுக்கள் இருந்து வருகின்றன. அந்த ஆலோசனைக் குழுவை பலப்படுத்தி—எப்படி நிர்வாகம் திறம்பட நடக்கலாம், இதிலுள்ள குறைபாடுகள் என்ன என்பதைப் பற்றியெல்லாம் யோசனை கேட்கப்படவேண்டும். அதற்காகவே இந்தக் குழுவை விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது தான் சிறந்த முறையாகவும் இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இந்த மசோதாவுக்கு நான் கொடுத்திருக்கக்கூடிய திருத்தங்களையும் பரிசீலனை செய்து சர்க்கார் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

12-30 p.m. *SRI V. K. RAMASWAMY MUDALIYAR : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விற்பனை வரி மசோதாவானது பொறுக்குக் கமிட்டியில் சரியாக விவாதிக்கப்பட்டு சட்டசபை முன்பு வைக்கப்பட்டிருக்கிறது. டாக்டர் லோகநாதன் அவர்களால் செய்யப்பட்ட சிபார்சுகளில் முக்கியமான சிபார்சுகள் விவாதத்திற்கு வந்து மறுபடியும் பொறுக்குக் கமிட்டிக்கு சென்று வந்திருப்பது அங்கத்தினர்கள் எல்லோருக்கும் தெரியும்.

எனக்கு முன் பேசிய பலர் சில முக்கியமான விஷயங்களைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். அதில் முக்கியமாக விதிவிலக்கு அளித்திருப்பது சில ஐடங்களுக்குத்தான். உணவுப் பொருள்களுக்கு கண்டிப்பாக விதிவிலக்கு அளிக்கவேண்டும். அப்பொழுதுதான் ஜனங்களின் கஷ்டம் நீங்கும். தவிர விலைவாசிகள் ஏறிக் கொண்டிருப்பதன் காரணமாகு இந்த விலக்கை அவர்கள் கேட்கிறார்கள்.

டாக்டர் லோகநாதனின் அறிக்கையில் என்ன சொல்லியிருக்கிறதென்றால் உணவுப் பொருள்களுக்கு ½ சத விகிதம் கொடுக்கவேண்டும் என்பது மற்றப் பொருள்களுக்கெல்லாம் பல கட்டவரி கொடுக்கும்போது ஒரு சத



விகிதம் இருக்கவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. டாக்டர் லோகநாதன் அவர்கள் அறிக்கையில் கண்டிருப்பவைகள் எல்லாவற்றையும் சர்க்கார் அங்கீகரிக்கவில்லை. அவர்கள் சொன்ன முக்கியமான கட்டத்தில் என்ன ஏற்பட்டிருக்கிறதென்றால் இம்மாதிரியாக வரிபோடும்போது சர்க்காருக்கு நிறைய தொகை வருவாய் இருக்கவேண்டும்.

முக்கியமாக பால், அழுகக்கூடிய பழம் முதலிய பொருள்களுக்கும், புஷ்பம் போன்றவைகளுக்கும் விதிவிலக்கு அளிக்கவேண்டும். அடுத்தபடியாக விதிவிலக்கு பத்தாயிரம் ரூபாய் இருக்கவேண்டுமென்று வரம்பு செய்தால் சிறிய வியாபாரிகள் இதனால் மிகவும் பாதிக்கப்படுவார்கள். முக்கியமாக காய்கறி சிறு வியாபாரிகள் பெண் பிள்ளைகளாக இருப்பதினால், அவர்கள் அன்றாடம் சம்பாதிப்பது 20, 30 ரூபாய்க்குமேல் இருக்காது. அவர்கள் பெண்களாதலால் வரி கொடுப்பதற்கும் முக்கியமாக கணக்கு வைத்துக் கொள்வதற்கும் கஷ்டப்படுவார்கள். ஆகவே அவர்கள் எல்லோருக்கும் விதிவிலக்கு 25,000 ரூபாய் வரை கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். காம்பவுண்ட் ரேட் 25,000 ரூபாய் வரை கொடுக்கப்பட்டிருக்கிறது. கணக்குக் கொடுப்பதில் மிகவும் கஷ்டங்கள் இருக்கின்றன. ஆகவே அநியாயமாக வியாபாரிகள் மிகவும் கஷ்டத்திற்குள்ளாவார்கள். காம்பவுண்ட் ரேட் 25,000 என்பதை 50,000 என்று மாற்றலாம்.

நாற்பத்தைந்தாவது செக்ஷன் கீழுள்ள சிறைச்சாலை என்ற முக்கியமான பகுதியில் குற்றம் செய்தவர்களுக்கு கடுமையான தண்டனை மாத்திரம் விதித்துவிட்டு அவர்களை இலவசமாக விட்டுவிடக்கூடாது. அவர்களுக்கு அபராதம் போட்டு அவர்களிடமிருந்து பணம் வசூலிக்கவேண்டும். இதனால் சர்க்காருக்கு அதிகப்படியான வருமானம் கிடைக்கும். இந்த விஷயத்தில் யாருக்கும் மாறுதலான அபிப்பிராயம் இருக்காது என்று நினைக்கிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : நாற்பத்தைந்தாவது பிரிவில் கிருமினல் சட்டத்தைப்பற்றிக் கூறுகிறது.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : அப்படி தண்டிக்கப்படுவதினால் லட்சக்கணக்கான ரூபாய் அரசாங்கத்திற்குக் கிடைக்கும்.

ஐம்பத்தொன்பது செக்ஷன்படி சர்க்கார் இன்றைக்கு அதிகாரம் எடுத்துக்கொண்டிருக்கிறது. அதிகாரிகளுக்கு இவ்வளவு அதிகாரம் அவசியம் இல்லை. சர்க்கார் இதை சிந்தித்துப் பார்த்து முடிவு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுது ஒரு சத விகிதம் விதிவிலக்கு அளிக்கப்படுகிறது. அரை சத விகிதம் என்று ஏற்படுத்தவேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

கம்யூனிஸ்ட் தலைவர் ஸ்ரீ கல்யாணசுந்திரம் அவர்கள் சொன்னார்கள் புண்ணாக்குக்கு வரிக்கு விதிவிலக்கு அளிக்கவேண்டுமென்று. இதானது முக்கியமாக கால்நடைகட்கும், விவசாயிகளுக்கும் அவசியமாக இருக்கிறது. இதற்கு வரி விதித்தால் விவசாயிகள் அதிகமாக பாதிக்கப்படுவர்.

அப்பீல் செய்கிறவர்கள் சர்க்காருக்கு வருமானம் வரக்கூடிய அளவில் அவர்களின் அப்பீலை அனுமதிக்கும் முறை இருக்கவேண்டும். பின்னிட்ட கணக்குகள் சரியாக இருப்பதைப் பார்க்கும் அதிகாரிக்கு ஐந்து வருஷம் வரை டயம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை இரண்டு வருஷமாக மாற்றினால் நல்லபடியாக இருக்குமென்று யோசனை கூற விரும்புகிறேன்.

அஸிஸ்டண்டு அப்பலேட் கமிஷனர் இப்பொழுது கீழ் இருப்பது அவ்வளவு உசிதம் அல்ல. இது ட்ரிபுனல் கீழ் இருக்கவேண்டும். அப்படி இருப்பதுதான் நல்லது. வரி விதிப்பதன் காரணமாக எவ்வளவு ஆதார பூர்வமான பரிசீலனை செய்யவேண்டுமோ அவ்வளவும் செய்து, போதுமான வரம்போடு உணவு பண்டங்களின் மீது விதிவிலக்கு அளித்து வரி கொடுப்பதற்கு எந்தவிதமான கஷ்டமும் இல்லாமல் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

[11th February 1959

12-40 p.m. THE HON. SRI R. VENKATARAMAN : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விவாதம் எனக்கு மிகவும் உபயோககரமாக இருந்தது என்று சொன்னால் அது ஏதோ சம்பிரதாயமாக சொல்லப்படுகிற வார்த்தையல்ல. உண்மையாகவே இதில் பங்கெடுத்துக்கொண்ட அங்கத்தினர்கள் எல்லோரும் பல ஷரத்துக்களையும் நன்கு அலசிப் பார்த்து அனுபவம் வாய்ந்த ஆலோசனைகள் பல கூறியிருக்கிறார்கள். இந்த விற்பனைவரி இலாகாவை எவ்வளவுதான் திறமையாக ஒரு மந்திரி நிர்வகித்தாலும் அது, மக்களால் அவ்வளவு (பாப்புலராக) ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்க முடியாதென்று சொல்வது, என் அபிப்பிராயம் அல்ல, "டாக்ஸேஷன் என்கொயரிக் கமிட்டியின்" அபிப்பிராயம் அது. எந்த ஒரு வரி விதிப்பும் திறமையான நிர்வாகம் மூலம் ஜனசம்மதமாக இருக்கும்படி செய்ய முடியாதென்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை ஓரளவு பொய்ப்பிக்கும் வகையில் இருக்கிறது. இன்று சென்னை சட்டசபையிலே இதன் விவாதத்தின் மேல் பங்கெடுத்துக்கொண்ட அங்கத்தினர்கள் எல்லோரும் ஒன்றிரண்டு விஷயங்களில்தான் குறைபாடு இருக்கிறதே தவிர மற்ற எல்லா ஷரத்துக்களும் ஓரளவு திருப்திகரமாக இருக்கிறது என்று சொன்னதானது எனக்கு மிக்க மகிழ்ச்சியை அளிக்கிறது. இன்னும் இதை எந்த அளவுக்கு திருத்த முடியுமோ அதையும் ஆலோசனை செய்ய சர்க்கார் எப்பொழுதும் தயாராயிருக்கிறது. அனுபவத்தையொட்டி என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பொதுவாக சில முக்கியமான அம்சங்களைப் பற்றித்தான் இப்பொழுது பதில் சொல்ல முடியும். ஏனெனில் இந்த மசோதாவானது ஆரம்ப காலத்திலிருந்து இதுவரையில் என்னென்ன முறையிலே மாற்றப்பட்டிருக்கிறது என்பதையெல்லாம் நான் முதலிலேயே இப்பிரேரணையைச் செய்யும் காலத்தில் எடுத்துச் சொல்லிவிட்டேன்.

(Sri R. Subramaniam in the Chair)

சில அங்கத்தினர்கள் ஒரு முனை வரியானது நல்லதென்றும் பலமுனை அல்லது பல கட்ட வரி பல கஷ்டங்களை விளைவிக்கும் என்றெல்லாம் பேசிக்கொண்டிருப்பது எனக்கு சற்று ஆச்சரியத்தை விளைவித்திருக்கிறது. ஒரு முனை வரி சில பண்டங்களுக்குப் பொருந்தும், சில பண்டங்களுக்குப் பொருந்தாது. பல முனை வரி சில பண்டங்களுக்குப் பொருந்தும், சில பண்டங்களுக்கு பொருந்தாமலிருக்கும். ஒருமுனை வரி விதிப்போமானால், ஒரு ரூபாயிலிருந்து எவ்வளவு ரூபாய்க்கு வியாபாரம் செய்தாலும் அதற்கு ஒருமுனை வரி கட்டவேண்டும். பல கட்ட வரி விதிக்கும்போது 10,000 ரூபாய்க்கு மேற்பட்ட பண்டங்களின் விற்பனைக்குத்தான் அவ்வரியை விதிக்கிறோம். உதாரணமாக, கனம் அங்கத்தினர் செல்வராஜ் அவர்கள் சொன்னார்கள், ஏன் விறகு, காய்கறி முதலியவைகள் எல்லாம் ஒரு முனை வரியிலிருந்து பல கட்ட வரிக்கு மாற்றப்பட்டதென்று. இதனால் மக்கள் பாதிக்கப்படுவார்களே என்றும் சொன்னார்கள். ஒருமுனை வரி இருந்தால் தான் மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்று பரிசீலனை கமிட்டி பல கட்ட வரியாக அதை மாற்றியது. காரணம், சிறு கடைகள் வைத்துக் கொண்டிருப்பவர்கள் கூட, 10,000-க்கு குறைவாக விற்பனை செய்கிறவர்கள் அந்த வரியிலிருந்து இப்பொழுது பல கட்ட முறையில் வைத்தால் கட்ட வேண்டியதில்லை என்றும், ஒரு கட்ட முறை வைத்தால் கட்டவேண்டுமென்றும் இருப்பதால் அவர்களுக்கு சலுகை காட்ட வேண்டுமென்று பல கட்ட முறைக்கு மாற்றப்பட்டது. இன்னும் வர்த்தகத் துறையை எடுத்துக் கொண்டால் தகடுகள், ப்ராஸ் ஷீட்ஸ், ஸிங்க் ஷீட்ஸ் முதலியவைகளை வைத்து பாத்திரங்கள் போன்ற சமான்கள் செய்கிறவர்கள் ஒரு கட்ட வரி எங்களுக்கு வேண்டியதில்லை என்றும் இதனால் எங்கள் தொழில் கஷ்டப்படுமென்றும், அதனால் நாங்கள் பல கட்ட வரியைத்தான் ஆதரிக்கிறோம் என்று வர்த்தகர்கள் வந்து சொன்னதால் அவற்றை பல கட்ட வரி முறையில் மாற்றியமைத்திருக்கிறோம். ஆகவே அந்தந்த பண்டங்களின் இயல்பை நன்கு பரிசீலனை செய்து எது ஒரு கட்ட முனை வரியாக இருந்தால் மக்களுக்கு அதிகக் கஷ்டம் கொடுக்காது, எது பல கட்ட முனை வரியாக இருந்தால் மக்களுக்கு அதிகமான கஷ்டம், தொல்லை, தொந்திரவு



11th February 1959] [Sri R. Venkataraman]

கொடுக்காது என்று பார்த்து இந்த ஷரத்து தயார் செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொன்றும் நன்கு அலசிப் பார்க்கப்பட்டு, அதை ஒட்டிய வர்த்தகர்களின், வியாபாரிகளின் அபிப்பிராயங்களைக் கேட்டுத்தான் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே யாராவது டாக்டர் லோகநாதன் அவர்கள் 75 பண்டங்கள் மீது ஒரு கட்ட வரி போடச் சொன்னார்கள், ஆனால் சர்க்கார் இந்த 60 ஆக மாற்றிவிட்டார்கள் என்று சொன்னால் அப்படி சர்க்கார் மாற்றவில்லை, வியாபாரிகளே தங்களுடைய நலனுக்காக, தங்கள் வியாபாரம் தழைத்தோங்குவதற்காக, நம் வியாபாரம் நம் ராஜ்யத்தை விட்டு பிற ராஜ்யங்களுக்கு ஓடிவிடாமல் இருக்க அவர்கள் செய்த சிபார்சின் மூலம் அவர்களுடைய விண்ணப்பத்தின் பேரில்தான் இது செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே அதைப்பற்றி யாரும் அதிகமாக குறை கூற மாட்டார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். மிக முக்கியமாக குறை கூறப்பட்டதெல்லாம் உணவுப் பொருள்கள் மீது இப்பொழுது ஒரு சத விகித வரி விதிக்கப்பட்டிருப்பதானது, மக்களுடைய அத்தியாவசியமான பண்டங்கள் மீது வரி விதிக்கப்பட்டிருப்பது கடுமையான, சொல்லப்போனால் கொடுமையான வரியாக இருக்கிறது என்று சொன்னார்கள். இந்த வாதத்தை நாம் சற்று ஆராய்ந்து பார்க்கவேண்டும். நமது ராஜ்யத்தில் உற்பத்தியாகிற உணவுப் பொருள்களில் 80 சத விகிதம் விற்பனையாவதில்லை. உணவுப்பொருள்களை உற்பத்தி செய்கிறவர்கள் அவர்களே தங்களுடைய சொந்த செலவிற்கும் தங்கள் பண்ணையாட்களுக்கும், கூலிகளுக்கும் கூலி கொடுப்பதிலும் இவ்விதமாக உபயோகித்து வருகிறார்கள். நகரங்களுக்கு வந்து விற்கக்கூடிய அளவை எடுத்துப் பார்ப்போமானால், அரிசியை எடுத்துக் கொண்டால் 80 சத விகிதம் கூட அப்படி விற்பனைக்கு வரவில்லை. ஆகவே இந்த ராஜ்யத்தில் உள்ள உணவுப் பொருள்கள் எல்லாவற்றின் மீதும் வரி விதிக்கப்படுகிறது என்றும் அதை உட்கொள்ளுகிற எல்லோரும் வரி கொடுத்து கஷ்டப்படுகிறார்கள் என்று சொன்னால் அது சரியல்ல. இதைக் கொடுப்பவர்கள் எல்லாம் நகரங்களில் வசிக்கிறவர்கள்தான். அவர்கள்தான் இந்த வரி கொடுக்க வேண்டி வருகிறது. தவிர கிராமாந்திரங்களில் உள்ள மக்கள் இந்த வரிக்கு ஆளாவதில்லை. (ஸ்ரீ என். கே. பழனிசுவாமி: எல்லோரும் அரிசிதான் சாப்பிடுகிறார்கள்.) எல்லோரும் அரிசி சாப்பிட்டாலுங்கூட கிராம மக்கள் அதை விலை கொடுத்து வாங்காததால் அவர்கள் அதற்கு விற்பனை வரி கொடுக்கவில்லை. எல்லோரும் அரிசிதான் சாப்பிடுகிறார்கள் என்பதை நான் முழுவதும் ஒப்புக்கொள்ளுகிறேன்.

(Mr. Speaker in the Chair.)

ஆங்காங்கு உற்பத்தியானதை அவர்களும், அவர்களது குடும்பத்தாரும், அவர்களுடைய பண்ணையாட்கள், கூலியாட்கள் போன்றவர்களுக்கு, கூலி செலவு போன்றவைகளுக்கும் அவர்கள் முழுதும் உபயோகப்படுத்துகிறார்கள். ஆதலால் அவர்கள் அதற்கு வரி கொடுக்க வேண்டி வருவதில்லை. நகரங்களில் மட்டுந்தான், அது விற்பனையாகும்போது ஓரளவு விற்பனைவரி போடும் நிலை இருக்கிறது. ஆகவே இம்மாகாணத்திலுள்ள எல்லோரும் அதற்காக வரி கொடுக்கிறார்கள், அதனால் பாதிக்கப்படுகிறார்கள் என்று சொல்வது சரியல்ல. இரண்டாவதாக, இப்பொழுது நாம் விதிக்கும் இந்த வரி குறைவானதுதான். இரண்டு கை மாறுவதாக வைத்துக்கொண்டாலும் சரி, அல்லது வாதத்திற்காக மூன்று கைகள் மாறுவதாக வைத்துக் கொண்டாலும் சரி கனம் அங்கத்தினர் வேதரத்தினம் பிள்ளை அவர்கள் எடுத்துக் காட்டியதுபோல மூட்டை 20 ரூபாய்க்கு வாங்கினாலும் 100 ரூபாய்க்கு மூன்று ரூபாய்தான் வரி ஆகும். 100 ரூபாய்க்கு ஐந்து மூட்டை நெல் கிடைக்கும். ஐந்து மூட்டை அரிசி என்பது 250 படி. ஆக, 300 நயா பைசா என்று சொன்னால் படிக்கு ஒரு நயா பைசாதான் இந்த வரியினால் அதிகரிக்கிறது என்று தாழ்மையுடன் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். நாட்டிலே உணவுப் பொருள்களின் விலை உயர்வது விற்பனை வரி காரணமாக அல்ல என்பதை நான் திட்டவட்டமாக எடுத்துக் கூற விரும்புகிறேன். வேறு காரணங்களினால்தான் இன்று உணவுப் பண்டங்களின் விலைவாசி உயர்ந்துகொண்டு போகிறதேயல்லாமல் விற்பனை வரி விதிப்பதின் மூலம் உணவுப் பண்டங்களின் விலை அதிகரித்து

[Sri R. Venkataraman] [11th February 19

கிறது என்றும், ஆகவே அதைக் குறைக்க வேண்டுமென்று சொல் வாதம் அவ்வளவு சரியல்ல என்று எடுத்துக்காட்ட விரும்புகிறே முதலாவதாக 100-க்கு 80 பேர்கள் இதைக் கொடுக்கவில்லை. இரண் வதாக பாக்கியிருக்கிற 100-க்கு 20 பேர்கள் மிகக் குறைவான தொகைதான் கொடுக்கிறார்கள். அவர்கள் படிக்கு ஒரு நயா பைசாவிற் மேல் இல்லாமல் கொடுக்கிற காரணத்தினால் இந்த பளு மிக அதிகமா பளு அல்ல என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

12-50 p.m. மூன்றாவதாக, பக்கத்தில் இருக்கிற கேரள ராஜ்யத்தில் இந்த விதிக்கப்படவில்லை, மைசூர் ராஜ்யத்தில் விதிக்கப்படவில்லை, ஆன ஆந்திர ராஜ்யத்தில் மூன்று சதவிகிதம் விதிக்கின்றார்கள். சென் ராஜ்யத்தில் இன்றைக்கு ஓரளவிற்கு போதுமான அரிசி இருக்கிற நாம் வைத்திருக்கிற தென் மண்டல ரீதியிலே கேரள ராஜ்யத்திலுள் வர்கள் நம்மிடத்திலிருந்து வாங்கக்கூடும். ஆகையால் அவர்க வாங்கி எடுத்துச் செல்லுகின்ற அளவிற்கு நம் பற்றாக்குறை நாம் ஈடு கட்டவேண்டுமென்று சொன்னால், மைசூரில் வாங்குவதற் அரிசி இல்லை, ஆந்திராவில்தான் வாங்கவேண்டும். அப்படி வாங்கு பொழுது 3 சதவிகிதம் வரி கொடுத்துத்தான் நம் ராஜ்யத்திற்கு வாங் கொண்டு வரவேண்டும்.

SRI M. KALYANASUNDARAM : அது எப்படி ?

THE HON. SRI R. VENKATARAMAN : This is not one of t declared goods. ஆகையினாலே 3 சதவிகிதம் விற்பனை வரி கொடுத்து தான் நம்முடைய ராஜ்யத்திற்கு நாம் வாங்கிக்கொண்டு வரவேண்டு நம்முடைய ராஜ்யத்திலிருந்து வரியே இல்லாமல் பிற மாகாண களுக்குச் செல்லுகிறது என்று சொல்லும்பொழுது, இதனுடை பயன்பூராவும் நம் ராஜ்யத்தில் நம்மிடம் வாங்குகிறவர்களுக் கிடைக்குமே ஒழிய, நம்முடைய ராஜ்யத்திலிருக்கிற மக்களுக் கிடைக்காது. இதை நாம் சற்று ஆராய்ந்து பார்த்து தெரிந் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். சென்னைக்கு, தஞ்சா அரிசி கொண்டு வருவதைவிட, நெல்லூர் அரிசி கொண் வருவது சுலபம். நெல்லூர் சென்னையின் அருகாமையிலிருக்கிறது. இங் இருப்பவர்கள் அதிக விலை கொடுத்து வாங்கிச் சாப்பிடத் தயார் இருக்கிறார்கள். அரிசியும் நன்றாக இருக்கிறது என்ற நிலைமையில், அங் 3 சதவிகிதம் வரி கொடுத்து வாங்கிக்கொண்டு வரும்பொழுது, நம்முடை ராஜ்யத்தில் வரி இல்லை என்று சொன்னால், நம்முடைய ராஜ்யத்திலிருந் வாங்கிக்கொண்டு போகக்கூடிய பிற ராஜ்யங்களுக்கு சலுகை காட்டிய ளாவோமே ஒழிய, நம்முடைய ராஜ்யத்து மக்களுக்கு எந்தவிதமா சலுகையும் காட்டியவர்களாகமாட்டோம். இதில் பெரிய நன்மைய இல்லை. இதனால் பெரிய நஷ்டமும் ஏற்பட்டுவிடவில்லை. இதனால் வி வாசியும் அதிகமாக உயர்ந்து மக்களுக்கு பெரிய கஷ்டமும் உண்ட வில்லை. ஆகவேதான் இதை நாம் ஒரு சதவிகிதமாக வைத்துக்கொண் ருக்கிறோம். இது நன்மையானது. முன்பு 2 சதவிகிதம் இருந்தை இப்பொழுது ஒரு சதவிகிதமாக குறைத்திருக்கிறோம். ஆகவே இதைய மாற்றுதல் செய்வதற்கு பெரிய காரணங்கள் ஒன்றுமில்லை என்பதை நா தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதுமாத்திரமல்ல. இ வரி ஒரு படிக்கு ஒரு நயா பைசா வீதம் வசூல் செய்யப்பட்டாலு மொத்தத்தில் நமக்கு வருகின்ற வருமானம் 40 லட்ச ரூபாய் வரையிலு வரும். அப்படி 40 லட்ச ரூபாய் வருமானம் வருகின்றபொழுது, அ நாம் யாருக்கும் பயன் அளிக்காத முறையில் விட்டுக்கொடுத்தால், ராஜ் சர்க்காருக்கு நன்மை இல்லை. அந்த 40 லட்ச ரூபாயைக் கொண் 4 கம்யூனிடி பிராஜக்ட்களை நிறைவேற்றலாம். மக்களுக்கு நன்ன ஏற்படும். அல்லது 4 ரோடுகள் போடலாம். அதனால் நன்மை ஏற்படு வேறு எந்தத் துறையில் செலவழித்தாலும் நன்மை ஏற்படும். அல்ல கனம் வேதரத்னம் பிள்ளை அவர்கள் சொன்னதுபோல் இதைக் காட் மத்திய சர்க்காரிடம் "நாங்கள் இவ்வளவு தொகை எங்களுடை ராஜ்யத்தில் எழுப்புகிறோம் 'டெவலப்மெண்டு ப்ரொகிராமுக்கா





11th February 1959] [Sri R. Venkataraman]

அவ்வளவு நீங்களும் கொடுக்க வேண்டும்" என்று சொல்லி இன்னொரு 40 லட்ச ரூபாய் மத்திய சர்க்காரிடம் வாங்குவதற்கு உபயோகமாக இருக்கும். இதையெல்லாம் ஒட்டித்தான் நான் பரிசீலனை கமிட்டியில் நான் சொன்னேன். இரண்டாவதாக ஐந்து வருட திட்ட காலத்தில், நமக்கு எந்த அளவுக்கு அதிகமாக உபரி வருமானம் வருகிறதோ அந்த அளவுக்கு நன்மை கிடைக்கிறது. இந்தத் தொகைக்கு ஒப்பாக மத்திய சர்க்காரிடமிருந்து கிராண்டு முதலியவைகள் கிடைக்கின்றன. ஆகவே தான் இரண்டாவது ஐந்து வருட திட்ட காலத்திற்காவது இந்த வரியை போட்டாக வேண்டுமென்று நான் சொன்னேன். அதையும் சரி என்று அங்கத்தினர்கள் ஏற்றுக்கொண்டு, இதை ஒத்துக்கொண்டார்களே யல்லாமல், கனம் கலியாணசுந்திரம் அவர்கள் சொன்னது போல் நிதி அமைச்சரும், இந்த இலாகா அமைச்சரும் அங்கே உட்கார்ந்துகொண்டி ருந்ததால் அவர்கள் ஒத்துக்கொண்டு விட்டார்கள் என்று சொல்லுவதற்கு இல்லை.

அடுத்தபடியாக, மிகவும் வன்மையாக கண்டிக்கப்பட்ட வரி காய்கறி, புஷ்பம் போன்ற பொருள்களின் மீது விதிக்கப்பட்டிருக்கும் வரி தான். அதுவும் கனம் கருணாநிதிகூட எச்சரிக்கை செய்துவிட்டார். புஷ்பக்காரர்களெல்லாம் வரி போட்டால் இனிமேல் உங்களுக்கு மாலை போடமாட்டார்கள் என்று. என்னைப் பொறுத்த அளவில் அதை நான் வரவேற்கிறேன். இந்தப் பண்டங்கள் அழுகிப் போகின்றன ; அதனால் அதற்கு வரி விலக்கு கொடுக்க வேண்டுமென்று சொல்லுவது அவ்வளவு பொருத்தமல்ல. அப்படி அழிந்து போகக்கூடிய பண்டங்கள் பல இருக் கின்றன. இந்தப் பண்டங்களுக்கு விதி விலக்கு கொடுத்தால், ஹோட்டலுக்கு விதி விலக்கு கொடுக்கவேண்டும். ஏனென்றால், காய்கறி, பழம், புஷ்பம் இவைகளைவிட இன்னும் சீக்கிரம் ஹோட்டல் பண்டங்கள் கெட்டுவிடும். (ஒரு குரல் : அவர்கள் விற்றுவிடுவார்கள்). வேறு ரூபத்தில் மாற்றி விற்கலாம். ஆகவே, இது அவ்வளவு சரி அல்ல. இதனால் வர்த்தகம் பாதிக்கப்படுமா, வியாபாரிகள் கஷ்டப்படுவார்களா என்பதைத்தான் நாம் பரிசீலனை செய்து பார்க்கவேண்டும். ஓரளவு சிறு சிறு வியாபாரிகள், கூடைக்காரிகள் இவர்களெல்லாம் வரி கொடுக்கவேண்டுமென்ற நிலைமை ஏற்படுமேயானால், அதை நிச்சயமாக சர்க்கார் ஏற்றுக் கொள்ளாது. சர்க்கார் அதைச் செய்ய தயாராகவும் இல்லை. அது அவர்களுடைய நோக்கமும் இல்லை. அதற்காகத்தான் 25,000 ரூபாய் வரை விற்பனை செய்கின்றவர்களுக்கு வரி விலக்கு கொடுக்கிறோம் என்று இந்த மசோதாவில் போட்டிருந்தோம். அதன் பிறகு பரிசீலனைக் கமிட்டி அதை யோசனை செய்யும்பொழுது 25,000 ரூபாயை ரூ. 30,000 ஆக உயர்த்தவேண்டுமென்று சொல்லி, 30,000 ரூபாய்க்கு உயர்த்தி யிருக்கிறோம். 30,000 ரூபாய்க்கு மேல் வியாபாரம் செய்கிறவர்கள் கணக்கு வைத்துக்கொள்ளாமல் இருப்பது அவ்வளவு நியாயமல்ல. உண்மை யாகவே 30,000 ரூபாய்க்கு மேல் வியாபாரம் செய்கிறவர்கள் இந்த நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் இருப்பதை போக்குவதற்காகவாவது ஒரு குமாஸ்தாவை வைத்துக்கொண்டு கணக்கு வைத்துக்கொள்ளி வேண்டும். 30,000 ரூபாய்க்கு குறைவாக வியாபாரம் இருக்கிறதா என்பதைக் காட்டுவதில் சில கஷ்டங்கள் இருப்பது உண்மைதான். அதற் காக சில கணக்குகள் வைத்துக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால், ரூ. 10,000, 15,000 இப்படி வியாபாரம் செய்பவர்களை 30,000 ரூபாய்க்கு வியாபாரம் செய்கிறார்கள் என்று சாதாரணமாகச் சொல்லிவிடுவது சுலபம் அல்ல. அவர்கள் எப்படி கணக்கு வைத்துக்கொள்ளவேண்டுமென்பதற் காக பிரத்தியேகமாக விதிகளெல்லாம் தயாரிக்கப்படும். தொழிலுக்கு தகுந்த மாதிரி விதிகளை மாற்றி அமைக்க நாம் சட்டத்தில் அதிகாரம் பெற்றிருக்கிறோம். ஆகவே, என்னென்ன பண்டங்களில் வியாபாரம் செய் கிறவர்கள் என்னென்ன கணக்குகளை எந்த மாதிரி வைத்துக்கொள்ள வேண் டும் என்பதற்கு சரியான முறையிலே விதிகள் அமைக்கப்பட்டு, அவர்களுக்கு அதிகமான தொந்தரவுகள், தொல்லைகள் இல்லாத முறையிலே செய்ய வேண்டுமென்பதுதான் சர்க்காரின் நோக்கம். இன்னும் இந்த விலக்கு இருப்பதை ரூ. 50,000-க்கு உயர்த்திவிட்டால் நல்லது என்று கனம்

கனம் அண்ணாதுரை அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் வற்புறுத்திச் சொன்னார்கள். இப்படிச் செய்வதில் ஒரு பெரிய கஷ்டம் இருக்கிறது. இந்த வரம்பை 50,000 ரூபாய் வரையில் உயர்த்திவிட்டால், ஒரு லட்ச ரூபாய்க்கு வியாபாரம் செய்கின்றவர்கள் ஒரு கடையை இரண்டு கடையாக பிரித்துவிடுவார்கள். அவர்களிடத்திலிருந்து ஒரு தம்படி வரிகூட நாம் வசூல் செய்ய முடியாது. சாதாரணமாக, இரண்டாவது கடை வைக்கவேண்டுமென்று சொன்னால், 25 ரூபாய் வாடகை கொடுக்க வேண்டும், ஒரு வருஷத்திற்கு 300 ரூபாய் வாடகை கொடுக்க வேண்டுமென்றால், 30,000 ரூபாய்க்கு வியாபாரம் நடக்கவேண்டும். ஆகையால், 30,000 ரூபாய்க்கு வியாபாரம் நடக்கும்வரையில் அவர் இரண்டாவது கடை வைக்கமாட்டார். ஏனென்றால் இதில் சர்க்காருக்கு கட்டுகின்ற வரியைவிட இரண்டாவது கடை வைப்பதில் செலவு அதிகம். அதற்கு மாறாக 50,000 ரூபாய் வரையில் வரி விலக்கு என்று சொல்லி விட்டால் நிச்சயமாக வியாபாரிகள் 60,000, 70,000 ரூபாய்க்கு வியாபாரம் ஆனஉடனேயே, அதாவது 10,000 ரூபாய் அதிகமான உடனேயே இன்னொரு கடையை தன் அண்ணன், தம்பி, மாமன், மச்சான் இம்மாதிரி யாராவது சொந்தக்காரர் பெயரில் வைத்துவிடுவார்கள்.

**Sri M. KALYANASUNDARAM:** 25 ரூபாய்க்கு இப்பொழுது எங்கு வாடகைக்கு இடம் கிடைக்கிறது ?

**The Hon. Sri R. VENKATARAMAN:** சராசரியாகத்தான் சொல்ல முடியும். இன்னொரு இடத்தில் கடை வைப்பதற்கு வாடகை கொடுப்பதற்கு எவ்வளவு செலவாகுமோ அந்த அளவுக்கு குறைவாகக் கொடுக்கவேண்டிய வரி இருக்குமானால், வரியைக் கொடுப்பார்கள். அதற்கு மேல் இருந்தால், இன்னொரு கடை வைத்துவிடுவார்கள். "எக்ஸெம்ப்ஷன் லிமிட்டை" மேலும் மேலும் உயர்த்திக்கொண்டே போனால், கடைகளை பிரிப்பதற்குதான் அனுகூலமாக இருக்குமே அல்லாமல் வரி வசூலிப்பதற்கு அனுகூலமாக இருக்காது. ஆகவே, இந்த வரி விலக்கு வரம்பை மேலும் உயர்த்தவேண்டாம் என்று நான் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மேலும், பொதுவாக 10,000 ரூபாய் வரையில்தான் வரி விலக்கு கொடுத்திருக்கிறார்கள். அது போதாது, 25,000 ரூபாய் வரையிலும் விலக்கு கொடுக்கவேண்டுமென்று கூறினார்கள்.

இதற்கு சான்றாக 1939-வது வருடத்தில் 10 ஆயிரம் என்று இருந்தது என்று பலர் சொன்னார்கள். இப்போது இருக்கின்ற விலைவாசிகள் காரணமாக இதை 25 ஆயிரம், அல்லது 30 ஆயிரம் என்று ஏன் உயர்த்தக் கூடாது என்று பலர் கேட்டார்கள். வாஸ்தவந்தான், ஆனால் அரசாங்கத்திற்கு வருகின்ற வரி 1939-ல் கிடைத்ததை போன்று கிடைத்துக் கொண்டிருந்தால் போதுமானதாக இருக்குமா என்பதையும் பார்க்க வேண்டும். அந்த நிலையில் இப்போதும் வருமானம் வந்துகொண்டிருந்தால் 25 ஆயிரத்துக்கு உயர்த்திவிடலாம். இப்போதுள்ள நிலையில் வருகின்ற வருமானத்தைக்கொண்டு 1939-ல் கொடுத்துக்கொண்டிருந்த சம்பளத்தைபோன்று, இப்போது அதிகாரிகளுக்கு கொடுக்க முடியாது. அதே போன்றுதான் மற்றுள்ள செலவினங்களும் உயர்ந்திருக்கின்றன. ஆகவேதான் 10 ஆயிரம் என்று கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக கணக்குகள் வைத்திருக்கின்ற விஷயத்தைப்பற்றி பல அங்கத்தினர்கள் எடுத்துச் சொன்னார்கள். இதில் ஒரு விஷயம் என்னவென்றால் தற்போதைய அனுபவத்தை வைத்துக்கொண்டு பார்த்தால் கணக்குவைத்திருப்பது கஷ்டமாகத் தோன்றலாம். ஆனால் இதில் நாம் பெரிய மாறுதல்களை செய்திருப்பதையும் நாம் கவனிக்க வேண்டும். அதாவது 25 ஆயிரம் ரூபாய் வரை காம்பௌண்டிங் டாக்ஸ் கொடுத்தால் போதும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் பல சிரமங்கள் வெகுவாக தீர்ந்துவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.



இதற்கு முன்னால் சென்னை ராஜ்யத்தில் இருந்து வந்த கணக்குகளை அதிகாரி பார்வையிடுவது என்றால் ஒருவருடைய கணக்கில் 13,500 ரூபாய் வரைக்கும் டர்ன் ஓவர் ஆகியிருக்கிறதா அல்லது 13,500-க்கு மேல் 13,502-ஆக டர்ன் ஓவர் ஆகியிருக்கிறதா என்பதை துருவிப் பார்க்க வேண்டும். ஏனென்றால் குறிப்பிட்ட தொகையிலிருந்து இரண்டு ரூபாய் கூட அதிகமாக டர்ன் ஓவர் ஆகியிருக்கிறது என்றால் நான்கு பைசா கூடுதலாக வருமானம் கிடைக்கிறது என்கிற எண்ணத்தோடு அதிக கவனத்தோடு பார்த்தாக வேண்டியிருந்தது. அதற்கு தகுந்த முறையில் கணக்கு வைக்க வேண்டிய நிலைமையில் வியாபாரிகளும் இருந்தார்கள். ஆனால் இப்போது அதிகாரி எதை பார்ப்பார்களென்றால் 10 ஆயிரம் ரூபாய்க்கு மேல் இருக்கிறதா என்பதை பார்த்துவிட்டு அதன் பின்னால் 15 ஆயிரம் ரூபாய் வரைக்கும் டர்ன் ஓவர் ஆகியிருக்கிறதா என்பதைதான் பார்ப்பார்கள். ஆகவே இதில் கணக்கு வைத்துக்கொள்வதற்கு சிறு வியாபாரிகளுக்கு கஷ்டமாகயிருக்கின்றது என்று சொல்வது சரியல்ல என்பதைத்தான் நான் சொல்ல ஆசைப்படுகிறேன். இப்போது அதிகாரிகள் பார்ப்பது 14,500, ரூபாய்க்கு டர்ன் ஓவர் ஆகியிருக்கிறதா அல்லது 15,000 ரூபாய்க்கு டர்ன் ஓவராகியிருக்கிறதா என்பதைதான் அதிகாரிகள் கணக்கை துருவிப் பார்ப்பார்களே தவிர மற்றபடி 12 ஆயிரம் ரூபாயாக இருந்தாலும் சரி, 13 ஆயிரம் ரூபாயாக இருந்தாலும் சரி, 14 ஆயிரம் ரூபாயாக இருந்தாலும் சரி அதைப்பற்றியெல்லாம் அவ்வளவு உன்னிப்பாக பார்க்கவேண்டிய அவசியம் அதிகாரிகளுக்கு இல்லை. ஆகவே இதற்கும் கணக்கு வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை என்று சொல்வது சரியல்ல, இதனால் அவர்களுக்கு பெரிய கஷ்டங்கள் ஏற்படும் என்று சொல்வதும் சரியல்ல.

அடுத்தபடியாக சில ஷரத்துக்களைப்பற்றி சில அங்கத்தினர்கள் சில யோசனைகளை தெரிவித்தார்கள். முக்கியமாக எதிர்கட்சித் தலைவர் அவர்கள் 45-வது பிரிவில் இந்த சட்டங்களை அனுசரிக்காதவர்களுக்கு சிறை தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது, அது அவ்வளவு சரியல்ல என்பதைப் பற்றி சொன்னார்கள். இதில் 45-வது பிரிவில் என்ன குற்றத்திற்காக சிறை தண்டனை கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறது என்பதைப்பற்றி பார்த்தால்.

**"Any person who wilfully submits an untrue return or fraudulently evades the payment of tax or dishonestly objects to notice being issued to him or wilfully acts in contravention of any of the provisions of the Act."**

எதெது சிறை தண்டனைக்குரிய குற்றங்களாக பீனல் கோடில் சொல்லப்பட்டிருக்கிறதோ அதைத்தான் இதிலும் சொல்லப்பட்டிருக்கிறது. மற்றபடி தவறு செய்கின்றவர்களுக்கு சிறை தண்டனை விதிக்கப்படவில்லை. மேலும் 45-வது பிரிவில் உட்பிரிவு 3-ல் யாராவது ஒரு அதிகாரியையோ அல்லது இது சம்பந்தமாக பரிசோதனை செய்ய வருகின்றவர்களையோ தடை செய்தால் அது குற்றமாக கருதப்படும், அதற்குரிய தண்டனையும் கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதுவும் பப்ளிக் ஸெர்வண்ட்டை தடை செய்வது குற்றம் என்று கருதப்படுகிற குற்றத்தை சேர்ந்ததாகும். இது தவிர வேறு எதற்கும் சிறை தண்டனை விதிக்கப்படவில்லை.

மேலும் 59-வது பிரிவில் சட்டசபையை கூட்டாமலேயே சில பொருட்களின் மீது திடீரென்று வரி போடுவதற்கு "டாரிப் ஆக்ட் நோட்டிபிகேஷன்" அதிகாரத்தை அரசாங்கம் எடுத்துக்கொண்டது என்று பலர் குறை சொன்னார்கள். இந்த மசோதாவை பிரேரேபிக்கின்ற நேரத்திலேயே நான் இதைப்பற்றி தெளிவாக எடுத்துச் சொன்னேன் அதாவது மத்திய சர்க்காரில் **Provisional collection of taxes** என்று தனியாக இருக்கிறது. இதன் பிரகாரம் எப்போதாவது திடீரென்று ஏற்படக்கூடிய நிலைமையை கட்டுப்படுத்த முடிகிறது. அந்த விதத்தில் கடந்த வருடத்தில் ஒரே ஒரு முறை நமது நாட்டுக்கு ஏற்பட்டது. அதாவது துணி, புகையிலை, சிகரெட் போன்றவைகளுக்கு மத்திய சர்க்கார்

[Sri R. Venkataraman] [11th February 1959

அடிஷனல் எக்ஸைஸ் டாக்ஸ் விதித்த போது நமக்கு ஒரு நிர்பந்தமான நிலைமை ஏற்பட்டது. அதாவது அந்த சமயத்தில் நமது ராஜ்யத்தில் ஸ்டாக் எவ்வளவு இருக்கின்றது என்று தெரியாமல் அதன்பேரில் ஒன்றும் செய்ய முடியாத நிலைமை நமக்கு ஏற்பட்டது. அதன் பின்னல் அதை நிவர்த்தி செய்வதற்கு ஆர்டினன்ஸ் பிறப்பிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. அந்தமாதிரியான ஆர்டினன்ஸ் பிறப்பிக்கும் போது அது எந்த தேதியிலிருந்து பிறப்பிக்கப்படுகிறதோ அந்த தேதியிலிருந்து நடவடிக்கை எடுக்க முடியும். அதற்கு முன்னல் இருந்த காலத்திற்கு வேறு முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைமை தான் இருந்தது. இந்த மாதிரியான விசேஷ அதிகாரம் இருப்பதினல் எந்தவிதமான தீமையும் ஏற்பட்டு விடாது என்பதை திட்டவட்டமாக சொல்ல ஆசைப்படுகிறேன். மேலும் இந்த அதிகாரம் ராஜ்ய நிர்வாகத்தின் நலனுக்காகத் தான் உபயோகப்படுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அவசரமான ஒரு நிலைமை ஏற்படுகின்றபொழுது நமக்கு அதிகாரம் இல்லாமல் இருக்கவேண்டிய அவசியமில்லை என்பதற்காக இந்த அதிகாரத்தை அரசாங்கம் வைத்துகொண்டிருக்கிறது. மேலும் நோட்டிபிக்கேஷன் மூலம் கொண்டுவரப்பட்ட முடிவை சட்டசபை கூட்டத்தில் அதைப் பற்றி தெரிவிக்கும்போது அதை கண்டிப்பதற்கு சட்டசபைக்கு எல்லாவிதமான உரிமையும் இருக்கிறது. ஆகவே தான் இதில் எந்தவிதமான அச்சம் கொள்ளுவதற்கும் அவசியமில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இரண்டொரு பண்டங்களின் மீது போடப்பட்டிருக்கின்ற வரிகளைப்பற்றி கனம் அங்கத்தினர்கள் எடுத்துச்சொன்னர்கள். முதலாவதாக அதைப் பற்றி குறிப்பிட்டுவிட்டு மற்ற விஷயங்களை பின்னல் சொல்ல விரும்புகிறேன். புண்ணக்கு (ஆய்ல் கேக்)-கின் பேரில் இப்பொது ஒரு முனை வரியாக மூன்று சதவீதம் போடப்பட்டிருக்கிறது. இவ்விதம் விதித்திருப்பதின் காரணமாக சிறு செக்குகள் வைத்து நடத்துகின்றவர்கள் வரி கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்படுகின்றது. இதனல் பலவிதமான கஷ்டங்களும் ஏற்படுகின்றன என்று பல அங்கத்தினர்களும் எடுத்துச் சொன்னர்கள். இதைப்பற்றி சர்க்கார் பரிசீலனை செய்து பார்த்து, இதில் நியாயம் இருக்கின்றது என்று உணர்ந்து, அங்கத்தினர்கள் சொன்ன குறைகளை ஏற்றுக்கொண்டு இதில் ஒருமுனைவரியாக மூன்று சதமானம் என்று விதித்திருப்பதை மாறறி பலமுனை வரியாக இரண்டு சதமானம் என்று மாற்றுவதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கான திருத்தம் கொடுக்கப்படும் எனபதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக பனை நார் சம்பந்தமாக, இதனல் பல தொழிலாளர்களும் பாதிக்கப்படுகின்றர்கள் என்பதை பல அங்கத்தினர்கள் எடுத்துக் காட்டினர்கள். அதை சர்க்கார் நன்ருக பரிசீலனை செய்து பார்த்து ஒருமுனை வரியாக மூன்று சதமானம் என்று போட்டிருப்பதை மாற்றி ஒருமுனை வரியாக இரண்டு சதமானம் என்று திருத்துவதற்கும் சர்க்கார் ஒப்புக்கொண்டிருக்கிறது. இதற்கும் வேண்டிய திருத்தத்தையும் கொடுக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இதர விஷயங்களில் சர்க்கார் எந்த விதமாக வரி விதித்திருக்கிறது என்பதைப்பற்றி கனம் அங்கத்தினர் மாதா கவுடர் அவர்கள் காரசாரமாக பேசினர்கள். தேயிலையிலிருந்து இரண்டு முறையில் வரி கொடுக்கவேண்டியிருக்கிறது என்றும் இதனல பல கஷ்டங்கள் ஏற்படும் என்றும் தெரிவித்தார்கள். தேயிலையை எடுத்துக்கொண்டால், இன்றைக்கு அதில் இருக்கின்ற நிலைமை என்னவென்றல் பெரிய பாக்டரிகள் வைத்திருப்பவர்கள் பிற இடங்களில் தங்களது ஏஜெண்டுகளை நியமித்து வைத்துக்கொண்டு தேயிலையை விற்று வருவதால் இங்கே வரி கொடுப்பதிலிருந்து தப்பித்துக்கொள்ளக்கூடிய நிலைமை இருக்கின்றது. ஆகையால் தொழிற்சாலையில் உற்பத்தியாகிற தேயிலைக்கு மட்டும் வரி போடுவதற்கில்லை. வரி இலையின்பேரில் போட்டிருப்பதன் காரணம், பெரிய தொழிற்சாலை வைத்திருப்பவர்கள் இலையை வாங்கித்தான் அவர்கள் செய்யவேண்டியிருக்கிறது.



11th February 1959] [Sri R. Venkataraman]

இன்னும் உருளைக் கிழங்கு சம்பந்தமாகச் சொன்னர்கள். உருளைக் கிழங்கு, இங்கு வாங்கி பிற ராஜ்யங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிற ஒரு பொருளாக இருப்பதால் அதை நாம் முதலில் யார் வாங்குகிருர்களோ அவர்களிடம் வசூலிக்கத் திட்டம் கொண்டு வந்திருக்கிறேம். இதனல் உற்பத்தி செய்கிறவர்களுக்குக் கஷ்டம் இருக்காது. முதலில் வாங்குகிறவர்களுக்குத் தான் வரி இருக்கும்.

தோல் சம்பந்தமாக டாக்டர் லோகநாதன் அவர்கள் என்ன சிபாரிசு செய்தார்களோ அதைத் தான் போட்டிருக்கிறேம். தோல் வாங்கி கடைசியாக பதனிடுபவர்களிடத்தில் 2 சதவீதம் வரிவாங்கப்படும். டிரெஸ்டு ஸ்கின்சு மீது 1 சதவீதம் வரி வாங்கப்படும். டாக்டர் லோகநாதன் அவர்கள் நன்ருகப் பரிசீலனை செய்து இந்த விதமாகத்தான் வரி விதிக்கவேண்டுமென்று சொன்னர்கள். அதை ஏற்றுக்கொண்டு அதே முறையில் வரி விதிப்பைச் செய்திருக்கிறேம்.

இன்னும் மற்றபடி தேங்காயைப் பற்றிச் சொன்னர்கள். அது ஆயில் ஷீட்ஸில் வருவதால், 2 சதவீதம் ஒருமுனையில் தான் வாங்கப்படும்.

ஒவ்வொன்ருகப் பல பண்டங்களைப் பற்றிப் பேசிக்கொண்டு போகலாம். முக்கியமாக எதைப்பற்றி அங்கத்தினர்கள் குறை சொன்னர்களோ அதில் எந்த விதத்திலும் தவறுகள் இல்லை என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் சிலவற்றைப் பற்றிச் சொன்னேன். அந்த அளவுக்குத் தவறுகள் இல்லை என்பதையும் நான் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இதை நிர்வாகம் செய்கிற முறையிலே நல்ல மாறுதல்களைச் செய்திருக்கிறேம். இப்போது சர்க்கார் அப்பீல் செய்தவற்கும், ஒரு அஸெஸீ அப்பீல் செய்வதற்கும் வித்தியாசம் இல்லாமல் செய்திருக்கிறேம். அஸெஸீ அப்பீல் செய்ய, அதற்கு மேல் அஸிஸ்டெண்ட் அப்பெல்லெட் கமிஷனருக்கும், அஸிஸ்டெண்ட் அப்பெல்லெட் கமிஷனரிடத்திலிருந்து அப்பெல்லெட் டிரிப்பூனலுக்கும், அதிலிருந்து ஹைக்கோர்ட்டுக்கு ரிவிஷனுக்குப் போகவும் அதிகாரம் கொடுத்திருக்கிறேம். அதிகாரிகள் ரிவிஷன் செய்ய டெபுடி கமிஷனரிடத்தில் இருந்து அப்பெல்லெட் டிரிப்பூனலுக்குப் போக அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. போர்ட் ஆப் ரெவின்யூ தலையிட்டு ரிவிஷன் செய்து, ரிவிஷனிலே நேரடியாக அப்பீலுக்குக் போக உரிமையைக் கொடுத்திருக்கிறேம். இந்த விதமான பாதுகாப்பு அளித்திருப்பதால் இனி அஸெஸ்மெண்ட் ஆபீஸர்கள் தங்கள் இஷ்டப்படிச் செய்வார்கள் என்று பயப்படுவதற்கு இடமில்லை. அஸஸ்மெண்ட் ஆபீஸர்கள் செய்யக்கூடியது பல வித அப்பீல்களுக்கு உட்படுவதால், தவறுகள் இருந்தால் அதைத் திருத்திக்கொள்ள வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

அடுத்தபடியாக கோவாபரேடிவ் சொஸைடிகள் எல்லாவற்றிற்கும் விதிவிலக்குக் கொடுக்கவேண்டும் என்று ஒரு நண்பர் வெகு பலமாகச் சொன்னர்கள். ஆனல் இந்தச் சட்டம் கோவாபரேடிவ் சொஸைடிகளை வளர்ப்பதற்காகக் கொண்டு வரப்பட்ட ஒரு சட்டம் இல்லை. கோவபரேடிவ் சொஸைடிகள் வளருவதற்குப் பண வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும். அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும். கோவாபரேடிவ் சொஸைடிகளை வளர்ப்பதற்கு விற்பனை வரியில் சலுகை காட்டினல் இதே துறையில் ஈடுபட்டுள்ள வியாபாரிகளுக்குப் பாதகம் விளைவிக்குமாதலால், வியாபாரத் துறையில் ஈடுபட்டுள்ள கோவாபரேடிவ் சொஸைடிகளுக்கு எந்த வித சலுகையும் கொடுக்கவில்லை. இருந்த சலுகைகளைக் கூட இந்தச் சட்டத்தில் எடுத்துவிடுவதாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

கனம் அங்கத்தினர்கள் சொன்ன எல்லாக் கருத்துகளுக்கும் ஓரளவு பதில் சொல்லிவிட்டேன் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

[11th February 1959

**SRI M. KARUNANITHI:** கனம் அங்கத்தினர் அனந்தநாயகி அவர்கள் பாலுக்கு வரி கிடையாதே என்று எடுத்துக் கூறினார்கள். அது சரிதானா என்று அமைச்சர் விளக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**THE HON. SRI R. VENKATARAMAN:** அது சட்டத்திலேயே இருக்கிறது. படித்துப் பார்த்தவர்களுக்கு நன்றாகத் தெரியும். அதனால், இதற்கு விமர்சனம் சொல்லத் தேவையில்லை என்று நினைக்கிறேன். (குறுக்கீடு) பாலுக்கு வரி உண்டு. ஒரு சதவீதம் வரி உண்டு. சாதாரணமாக பால்காரர்களை இது பாதிக்காது என்று எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். 10,000 ரூபாய் வியாபாரம் இருந்தால் தான் வரி செலுத்தவேண்டும். அநேகமாக கோவபரேடிவ் சொஸைடிகள் தான் இந்த வரியைக் கொடுக்கவேண்டியிருக்கும். வேறு யாரும் கொடுக்கவேண்டியிருக்காது. இதனால் ஏதோ ஒன்றிரண்டு மாடுகள் வைத்திருப்பவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று சொல்வது சரியல்ல. கண்டிராக்டர்கள் பாதிக்கப்படலாம். அவர்கள் மாட்டுக்காரர்களிடமிருந்து சப்ளை செய்யலாம். ஹாஸ்பிடல் முதலியவைகளுக்குச் சப்ளை செய்பவர்கள் பாதிக்கப்படலாம். அவர்கள் இந்த வரியைக் கொடுக்கலாம். டெண்டர் எல்லாம் போட்டு லாபம் அடைகிறார்கள். அதிகமாக லாபம் வருகிற முறையில் தான் டெண்டர்கள் இருக்கின்றன. ஆகையால் இது சாதாரண பால்காரர்களை பாதிக்காது.

**SRI S. M. ANNAMALAI:** ஆன் எ பாயின்ட் ஆப் இன்பர்மேஷன், ஸார், அமைச்சர் அவர்கள் பேசுகிற போது அதிகமாக அரிசி வாங்குகிறவர்கள் நகரப் புறங்களில் தான் இருக்கிறார்கள் என்று சொன்னார், ராகி, கம்பு போன்ற தானியங்களை நாட்டுப்புற மக்கள் வாங்குகிறார்களே, அதற்கு அமைச்சர் அவர்கள் என்ன பதில் சொல்லுகிறார்கள்.

**THE HON. SRI R. VENKATARAMAN:** இப்போது ராகி, கம்பு முதலியன சாப்பிடுவது ரொம்ப நின்று விட்டது. உண்மையாகவே இந்த ராஜ்யத்திலே................(குறுக்கீடு) நான் தஞ்சையிலிருந்து வருகிறவன். அங்கு ராகி, கம்பு முதலியவைகள் சாப்பிடுவது நின்றுவிட்டது. வியாபாரத்திற்கு வரவில்லை என்று முக்கியமாக எடுத்துக்காட்டினேன். பொதுவாக அங்கங்கே உற்பத்தி செய்யப்படுவதை உற்பத்தி செய்கிறவர்களே உட்கொள்ளுகிறார்கள். ஆகவே இது பாதிக்கப்படவில்லை என்று சொல்ல விரும்புகிறேன்.

**SRI S. LAZAR:** 45-வது பிரிவைப் பற்றி அமைச்சர் அவர்கள் பேசுகிற போது இவைகளெல்லாம் ஏற்கெனவேயே கிரிமினல் குற்றங்கள், ஆகவே இதில் தவறில்லை என்று எடுத்துக்காட்டினார்கள். அப்படியானால் ஏற்கெனவே இண்டியன் பீனல் கோட் பிரகாரம் குற்றம் என்று சொன்னால், தனியாக 45-வது பிரிவுப்படி குற்றம் என்று அமைக்கவேண்டியதன் அவசியம் என்ன?

**THE HON. SRI R. VENKATARAMAN:** கனம் லாஸர் அவர்கள் ஒரு வக்கீல். அவருக்கு இது நன்றாகத் தெரியும். இண்டியன் பீனல் கோடில் இருக்கிற குற்றங்களுக்கும் விற்பனை வரிக் குற்றங்களுக்கும் தனித் தனியாக சட்டம் இயற்றுவதில் தவறில்லை. இதில் வேண்டுமென்றே ஒரு கணக்கைக் கொடுக்காமல் இருப்பது, புத்தகத்தைக் காட்டவேண்டுமென்று சொல்லும்போது கொடுக்காமல் இருப்பது உத்தியோகஸ்தர் வேலை செய்வதைத் தடுப்பது போன்றவைகளையெல்லாம் குற்றங்களாகச் செய்திருக்கிறோம். இவ்வாறு செய்வது இந்தியன் பினல் கோடிலே இருப்பது போன்ற குற்றம் என்று சொன்னேனே தவிர வேறில்லை.

**MR. SPEAKER:** Has the Hon. Minister finished his speech? Unless he has finished his speech no member can ask for any clarification. If he does not yield, the members cannot ask for clarification.

**THE HON. SRI R. VENKATARAMAN:** I have finished.

**SRI M. KALYANASUNDARAM:** He is very obliging.



11th February 1959]

**MR. SPEAKER:** May be, but he is not the only person concerned here. The Speaker is also concerned.

**SRI J. MATHA GOWDER:** On a point of personal explanation.

**MR. SPEAKER:** He never attacked the hon. Member. Why does he bother?

**THE HON. SRI R. VENKATARAMAN:** ஆகவே, நான் இப்போது சந்தேகங்கள் இருந்ததைக்கூட ஓரளவு விளக்கியிருக்கிறேன். ஆகவே இந்த மசோதாவை பிரிவு வாரியாக விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**MR. SPEAKER:** I shall now put the motion to vote. The question is—

"That the Madras General Sales Tax Bill, 1958 (L.A. Bill No. 6 of 1958) as amended by the Select Committee be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

**MR. SPEAKER:** During the next three days, 12th, 13th and 14th, we shall discuss the Bill clause by clause. I now adjourn the House to meet again at 9 a.m. tomorrow.

The House then adjourned.

## IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A.—*Statutory Orders, Rules and Notifications.*

82. *Notification issued with G.O. Ms. No. 4162, Revenue, dated 17th November 1958, regarding the reorganization of Orathanad taluk (Tanjore district) consequent on the introduction of settlement.*

83. *Notification issued with Memo. No. 101261 J-3/58-2, Revenue, dated 8th December 1958, amending the Revenue Department Notification S.R.O. No. A-4675 of 1958, dated the 12th June 1958, under section 22 of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948. (Laid on the table of the House under section 67 (4) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948).*

### B.—*Reports and other papers.*

19. *Short review of the activities of the Madras State Electricity Board during the first half of 1958-59.*

APPENDIX I.

[Vide answer to starred question No. 202 asked by Sri K. Sattanatha Karayalar at the meeting of the Legislative Assembly held on 11th February 1959, page 77 supra.]

*Steps taken by the Agriculture Department to supply good quality "Seed Potatoes" to potato growers in this State.*

The Agriculture Department is taking every effort to supply good qualities of potato seeds in this State especially in the district of the Nilgiris which is the only district where the major crop is potato. After making research in the Agricultural Research Station, Nanjanad, on the potato seeds, it has been found that the existing potato stocks are all disease-affected. It has also been found that fresh imported seeds of "Great Scot" and "President" varieties are capable of giving increased yields of more than 50 per cent over the old generation seeds of these varieties produced locally. The department therefore introduced these two varieties after testing them in the Agricultural Research Station, Nanjanad and released to the ryots for further multiplication. But it is observed that over a period of years these imported varieties deteriorate due to virus diseases which results in low yields. From the experimental data available at the Agricultural Research Station, Nanjanad, it is found that the deterioration of the fresh imported seeds can be controlled to a certain extent up to five years by making the ryots rogue the crop. So supply of fresh waves of seeds from imported material once in five years is quite necessary.

2. As the State Seed Farms play a very important role in the multiplication and distribution of seeds the department have earmarked certain State Seed Farms in the Nilgiris district for the sole purpose of multiplication of good quality potato seeds. There are already six State Seed Farms in this district and eight more farms are proposed to be opened in the current year. With the aid of these State Seed Farms, it may be possible to cover about 200 acres of village seed farm from where it is possible to distribute seeds to ryots to cover the whole area. The Government are therefore making arrangements for the import of 120 tons of seed potato from the United Kingdom. If these are imported, it is expected that the first year's cropping would produce 300 tons which will be further multiplied. A scheme for the development of potatoes in the Nilgiris district has also been formulated by the Director of Agriculture, Madras, and the same is under consideration of the Government.



APPENDIX II.

[Vide answer to starred question No. 207 asked by Sri K. Sattanatha Karayalar, at the meeting of the Legislative Assembly held on 11th February 1959, page 80 supra.]

[SUBJECT.—*Places where guineaworm disease is prevalent.*]

(a) The endemic districts and the ranges of infection are as follows:—

| Serial number and name of the district. | Number of endemic ranges. | Number of villages including hamlets affected. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 North Arcot .. .. | 7 | 101 |
| 2 South Arcot .. .. | 8 | 288 |
| 3 Tiruchirappalli .. .. | 10 | 150 |
| 4 Coimbatore .. .. | 6 | 47 |
| 5 Madurai .. .. .. | 4 | 53 |
| 6 Salem .. .. .. | 4 | 20 |
| 7 Tanjore .. .. .. | 2 | 29 |
| 8 Ramanathapuram .. | 1 | 36 |
| 9 Chingleput .. .. | 1 | 2 |
| Total .. | 43 | 726 |

(b) The following steps are taken to control the disease:—

(1) Wherever step-wells are the source of drinking water, they are converted into draw-wells.

(2) In villages where ground water is potable, draw-wells are provided under the Rural Water-supply and Local Development Schemes.

(3) In villages where the sources of drinking water-supply are ponds and tanks, such water sources are protected by barbed wire fencing in order to prevent the people from stepping into them. Simultaneously, marginal draw-wells or piped water supply are provided under Local Development Scheme.

(4) Chemical methods like superchlorination of water and D.D.T. and Gammexane D. 120 treatment of water aimed at the destruction of infected cyclops in water are carried out.

## APPENDIX III.

[Vide answer to starred question No. 231 asked by Sri K. Sattanatha Karayalar at the meeting of Legislative Assembly held on 11th February 1959, page 88 supra.]

*Particulars regarding the number of tractors sold and available under the Hire-Purchase and Hiring Schemes.*

(*a*) Number of tractors sold by the Agriculture Department under the Tractor Hire-Purchase Scheme (from 1st April 1951 to 30th June 1958)—151.

(*b*) Number of tractors available in each district under the Tractor Hiring Scheme as on 1st December 1958 :—

| | | |
|---|---|---|
| 1 | North Arcot .. .. .. .. .. .. | 10 |
| 2 | Chingleput .. .. .. .. .. .. | 13 |
| 3 | South Arcot .. .. .. .. .. .. | 15 |
| 4 | Tanjore .. .. .. .. .. .. | 17 |
| 5 | Tiruchirappalli .. .. .. .. .. .. | 13 |
| 6 | Madurai .. .. .. .. .. .. | 13 |
| 7 | Ramanathapuram .. .. .. .. .. | 10 |
| 8 | Tirunelveli .. .. .. .. .. .. | 14 |
| 9 | Salem .. .. .. .. .. .. | 7 |
| 10 | Coimbatore .. .. .. .. .. .. | 10 |
| 11 | The Nilgiris .. .. .. .. .. .. | 18 |
| 12 | Kanyakumari .. .. .. .. .. .. | 12 |
| 13 | Tindivanam (Agricultural Research Station.) .. | 1 |
| | | 2 |
| | Total .. | 142 |

## APPENDIX IV.

[Vide answer to starred question No. 240-A asked by Sri N. K. Palanisami, at the meeting of the Legislative Assembly held on 11th February 1959, page 88 supra.]

*Particulars relating to supply of tractors to ryots on hire.*

(*a*) Number of tractors with the Agricultural Department in 1958—142.

(*b*) Number of units in working condition as on 31st December 1958—75.

(*c*) Hire charges levied—

| Type of work and type of tractor. | Rate of hire charges. |
|---|---|
| | RS. |
| Ploughing (all types).. .. .. | 12 per acre. |
| Harrowing (shallow ploughing) .. | 7 ,, |
| Levelling with bull dozers— | |
| D-7 .. .. .. .. .. | 17 per hour. |
| D-8 .. .. .. .. .. | 16 |
| T.D. 14 .. .. .. .. | 16 ,, |
| T.D. 9.. .. .. .. .. | 13 ,, |
| T.D. 6 .. .. .. .. .. | 12 ,, |
| D-4 .. .. .. .. .. | 13 ,, |
| T-6 .. .. .. .. .. | 12 ,, |

(*d*) and (*e*) Additional tractors purchased during 1957—Nil.



# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

**Thursday, 12th February 1959.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—OBITUARY REFERENCE TO SRI C. MARUDAVANAM PILLAI.

MR. SPEAKER : இந்தச் சபையில் பழைய கால அங்கத்தின ராக இருந்த ஸ்ரீ ஸி. மருதவாணம் பிள்ளை அவர்கள் இறந்துபோன செய்தியை உங்களுக்கு வருத்தத்துடன் தெரிவிக்கிறேன். அவர் மரணத் திற்கு இந்தச் சபையின் அனுதாபத்தைத் தெரிவிக்கும் முறையில் எல்லோரும் இரண்டு நிமிஷங்கள் மௌனமாய் எழுந்து நிற்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

சபை அங்கத்தினர்கள் இரண்டு நிமிஷ நேரம் மௌனமாய் நின்றார் கள்.

## II.—QUESTIONS AND ANSWERS.

### STARRED QUESTIONS.

*Report on the Co-operative Movement*

*[illegible] Q.—SRI N. MARUDACHALAM (on behalf of SRI V. K. Kothandaraman) : கைத் தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

கூட்டுறவு இயக்கத்தைப் பரிசீலனை செய்த கமிட்டியின் ரிப்போர்ட்டு மேஜை மேல் வைக்கப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : Copies of the Report have been placed in the Legislature Library for reference by Members.

*Coir Industry*

*158 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Industries be pleased to state the nature of help the Coir Industry gets from the Government?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : நேற்றே பதில் சொல்லி இருக்கிறேன். இப்படி ஒவ்வொரு இடங்களிலும் வைப்பது என்பது சிரமமாக இருக்கும். ஆனால் மதுரையில் வைக்கவேண்டுமென்ற யோசனை இருந்து வருகிறது என்று சொன்னேன்.

**Sri A. A. RASHEED** : Sir, have the Government any information as to the number of cases in which the dogs caught the wrong or unwanted persons?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : I do not think it is fair on the part of the hon. Member even to accuse the dogs unfairly (Laughter) and particularly these intelligent dogs. So far as my information goes they have traced only the real culprits. But sometimes the clue may not be found by the police and the cases might have proved unsuccessful.

**Sri A. GOVINDASAMY** : வட ஆற்காடு மாவட்டத்தில் துப்பறியும் நாய் ஒரு கொலைக்கேசில் ஒருவரைக் கண்டு பிடித்துக்கொடுத்தும் அது சம்பந்தமாக இது வரையிலும் அவர் பேரில் கேஸ் போட்டிருப்பதாக தெரியவில்லை. இதைப் பற்றி அரசாங்கத்திற்கு ஏதாவது தெரியுமா?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : இதைப்பற்றித்தான் நான் ஆரம்பத்தில் சொன்னேன். நாயின் மோப்பம் சரியாக இருந்திருக்கலாம். ஆனால் போலீஸ்காரர்களுடைய மோப்பம் சரியானதாய் இல்லாமல் இருந்திருக்கலாம். அது போலீஸ்காரருடைய திறமையைப் பொறுத்திருக்கிறது. அவர்களும் கெட்டிக்காரர்களாக இருக்கிறார்களா என்று பார்க்க வேண்டும். அவர்களால் மேற்கொண்டு "க்ளூ" கண்டு பிடிக்க முடியாமல் இருந்திருக்கலாம்.



*273 *Q.*—Sri M. P. SARATHI : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) போலீஸ் நாய்கள் குற்றங்களைக் கண்டு பிடிக்க 1958-ல் எத்தனை தடவை பயன்படுத்தப்பட்டன ?

(ஆ) பயிற்சி பெற்ற நாய்கள் எத்தனை உள்ளன?

(இ) வேறு ராஜ்யங்களுக்கு நமது நாய்கள் கொடுக்கப்பட்டுள்ளனவா?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : (*a*) On 165 occasions.

(*b*) Seven.

(*c*) Yes, Sir.

**Sri M. P. SARATHI** : வேலூரில் போலீஸ் பயிற்சி நிலையம் இருப்பதால் அங்கே ஏதாவது துப்பு அறியும் நாய்களை வைக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன். அது ஒரு முக்கியமான இடம். அப்படிப்பட்ட யோசனை ஏதாவது சர்க்காரிடம் இருக்கிறதா?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : வேலூரில் போலீஸ்காரர்களுக்குத்தான் பயிற்சி அளிக்கிறார்கள். துப்பு அறியும் நாய்களுக்கு அங்கே பயிற்சி கொடுக்கப்படுவது இல்லை.

**Sri M. JAGANNATHAN** : As far as my information goes, detection of crimes by using the police dogs is not scientific and proper. It always ends in pointing out the wrong persons. In view of this will the Government consider the desirability of giving up the system of using police dogs as such for the investigation of crimes?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : I do not agree with the hon. Member but still if the hon. Member has made serious researches on this subject he may communicate his results of research to me. Then I shall have it looked into.

**Sri S. NAGARAJA MONIGAR** : இந்த துப்பறியும் நாய்கள் உண்மையான குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கிறதோ அல்லது தவறு செய்கிறதோ அதைப்பற்றி ஒன்றும் இல்லை. ஆனால் நாய்கள் கண்டு பிடித்து சாட்சிகள் இல்லை என்ற காரணத்தால் குற்றவாளியின் பேரில் கேஸ் போடாமல் விட்டு விட்டார்கள். ஆனால் அந்த நாய்கள் குற்றவாளியைக் கண்டு பிடித்த காரணமாக கொலையுண்டவர்களுடைய தாய் தந்தையர்கள் சில மாதங்களுக்கு முன்னதாக கொலை செய்தவனை பட்ட பகலில் துணிந்து வெட்டிப் போட்டுவிட்டார்கள். இப்படிப்பட்ட ஒரு சம்பவம் சமீபத்தில் நடந்தது. நாய் கண்டுபிடித்தும் குற்றவாளியின் பேரில் கேஸ் போடாததன் காரணமாக இப்படிப்பட்ட சம்பவங்களும் நடைபெறுகின்றன. நாய்கள் கண்டு பிடித்தும் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். இதைப்பற்றியும் சர்க்கார் கவனிக்குமா?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : இப்படிப்பட்ட நாய்கள் ரொம்பவும் "உபயோககரமாகஇருக்கிறது" என்று தான் அதை உபயோகிக்கிறவர்கள் சொல்லுகிறார்கள். நாய்கள் குற்றவாளிகளை கண்டு பிடித்தாலும் அதற்கு மேல் போலீஸ்காரர்களும் கொஞ்சம் புலன் விசாரிக்க வேண்டியதாக இருக்கிறது. அப்படி புலன் கண்டு பிடிக்க முடியவில்லையென்றால் கேஸ் போடுவது கஷ்டமாகத்தான் இருக்கும். அது வேறு விஷயம்.

*Government Hospital at Gudiyatham*

* 274 *Q*.—Sri V. K. KOTHANDARAMAN : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) குடியாத்தத்திலுள்ள அரசாங்க மருத்துவமனையில் லேடி டாக்டர் இல்லையென்று அரசாங்கத்தாருக்குத் தெரியுமா?

(ஆ) அப்படியானால், அந்த மருத்துவமனைக்கு லேடி டாக்டர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறதா?

(இ) அந்த மருத்துவமனையில் மொத்தம் எத்தனை படுக்கைகள் உள்ளன?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) & (*b*) A Woman Assistant Surgeon has been posted to the Hospital and she has been working there since 5th November 1958.

(*c*) 40.

*Land Reforms*

*275 *Q*.—Sri C. MUTHIAH : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) நடுத்தர விவசாய குத்தகைதார் முறையை கைவிட அரசாங்கத்திற்கு சட்டம் வகுக்க உத்தேசமுண்டா ?

(ஆ) உயர்ந்த பட்ச குத்தகை விஸ்தீர்ணத்தை வரம்புகட்ட சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) The Member is apparently referring to the persons who take land on lease and subsequently sub-lease them to others for cultivation. There is a
9-50 a.m. proposal to give sub-tenants under intermediaries protection against eviction and the other rights of cultivating tenants and that if eventually this is approved, the sub-tenants under the intermediaries will become cultivating tenants directly under the landlords and the intermediaries will disappear in due course.

(*b*) There is no such proposal under consideration.

* 276 *Q*.—Sri C. MUTHIAH : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) பண்ணை முறை சாகுபடிக்கு ஒரு உச்ச வரம்பு கட்ட உத்தேசமுண்டா ?

(ஆ) நடுத்தர குத்தகைதார் எத்தனை ஏக்கராவிற்கு ஒப்பந்தம் செய்யலாம் என ஒரு வரம்பு கட்டுவார்களா?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) Under Section 4-A of the Madras Cultivating Tenants' Protection Act, a landlord who owns land not exceeding 13-1/3 acres of wet land on 1st October 1956, can resume from the cultivating tenant for personal cultivation, one half of the land leased out to him provided that the extent in his possession already and the extent resumed together do not exceed five acres of wet land. There is no limit regarding the extent of lands that can be cultivated on pannai system by a landlord who has not let out any extent of his land on lease nor



is there a proposal to fix a ceiling on pannai cultivation as such. There is however a proposal to fix ceilings on land holdings which will operate as ceiling on the extent which landlords can cultivate by this mode.

(*b*) There is no proposal Sir.

* 277 *Q*.—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the fixing of ceilings on land holdings was discussed at the National Development Council meeting held in November 1958; and

(*b*) if so, the decision taken in the matter?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) No Sir.

(*b*) Does not arise.

* 278 *Q*.—Sri T. T. DANIEL : Will the Hon. the Minister for Revenue be pleased to state the present stage of the proposal to bring in legislation fixing ceilings on land holdings?

The Hon. Sri M. A. MANICKAVELU : The matter is under consideration.

Sri C. MUTHIAH : அடுத்த பசலிக்கு குத்தகைவிட இப்பொழுதே சர்க்காரிலிருந்து உத்தரவு பிறப்பித்து 3, 5 வருஷங்களுக்குக் குத்தகை விடாமல் பாதுகாக்க முடியுமா? வரப்போகிற சட்டத்திற்கும் ஆதரவாக இருக்கும். இப்பொழுதே நடவடிக்கை எடுத்தால்தான் வரப்போகின்ற காலத்தில் பயன் அளிக்கக்கூடுமாதலால் உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

(Sri N. K. Palanisami rose.)

Mr. SPEAKER : The hon. Member need not get up. If he raises his hand, I will call him.

The Hon. Sri M. A. MANICKAVELU : இது அரசாங்கமே உத்தரவு போடவேண்டிய விஷயம் அல்ல, சட்டம் கொண்டு வரவேண்டும் ; பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன்.

Sri N. K. PALANISAMI : சார், இந்த உச்ச வரம்பு கட்டுவது சம்பந்தமாக 1959-ம் வருஷத்திற்குள் தெரு சட்டம் கொண்டுவர வேண்டும் என்பது ஆலோசனையில் இருக்கிறதா? அது எப்பொழுது முதற்கொண்டு அமுலுக்கு வரும் என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. A. MANICKAVELU : இந்த வருஷத்திற்குள் இந்தச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்ற ஆலோசனை உலாவிக் கொண்டிருக்கிறது.

Sri T. T. DANIEL : May I know from the Hon. Minister whether the Government have collected the necessary data for bringing in this land legislation, e.g., the number of land owners

who are having more than 30 or 40 acres, etc., and also whether the Government have considered the question of paying adequate compensation to land owners?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir. We have got some statistics about those matters—big landholders, small landholders, the kist they pay, etc. As regards compensation, that will be given according to the Act and the Constitution.

SRI A. GOVINDASAMI : நிலச்சீர்திருத்தச் சட்டம் வரும் போது ஆண்டவன் பேரில் இருக்கும் நிலங்களுக்கும், மடாலயங்கள்பேரில் இருக்கும் நிலங்களுக்கும் இந்த உச்ச வரம்பு கட்டப்படுமா? அல்லது விவசாய வருமானச் சட்டத்தில் இவைகளுக்கெல்லாம் விதி விலக்கு அளித்து விட்டதைப்போல் விலக்கு அளிக்கப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இவை பற்றி இப்பொழுது சொல்வது சாத்தியம் அல்ல.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : இந்த விவசாய சம்பந்தமான முறையில் நடுக் குத்தகைக்காரர்கள் பெரும்பகுதி தேவஸ்தானங்களில் இருப்பதால் இந்த உச்ச வரம்பு சட்டம் வருவதற்கு முன்பு கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து அந்தச் சங்கங்கள் மூலமாக அந்த நிலங்களைக் குத்தகைக்கு கொடுக்க சர்க்கார் சிபாரிசு செய்யுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU; இதைப்பற்றி சட்டம் கொண்டு வரப்போகிறோம். அந்தச் சட்டம் உருவாகி விட்டால் இதை எல்லாம் தீர்த்து விடலாம்.

SRI S. M. ANNAMALAI : உச்ச வரம்பு கொண்டு வருகிறேன் என்று சொல்லிக்கொண்டே இருப்பதனால் மிராசுதார்கள் அவர்களுடைய நிலங்களைப் பிரித்து எழுதிவைத்து விடுகிறார்கள். இதைக் கட்டுப்படுத்த அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : சட்டம் இல்லாமலே அது நடந்து விட்டாலும் விசேஷந்தான்.

SRI K. B. S. MANI : இந்தச் சர்க்கார் விவசாயிகளுக்காகச் செய்திருக்கக்கூடிய சட்டத்தை விவசாயிகளுக்குப் பயன்படாமல் செய்வதற்காக பல அரசியல் கட்சிக்காரர்கள் மொத்தக் குத்தகை எடுத்துக்கொண்டு கிராமங்களில் கிசான் தகராறுகளை ஏற்படுத்தி வருவதால், இந்த மொத்தக் குத்தகைக்காரர்களை ஒழிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : இது விஷயம் பற்றித்தான் முன்பே சொன்னேன். பெரிய அளவில் குத்தகை எடுத்துக் கொண்டு மற்றவர்களுக்குக் கொடுக்கின்றவர்களைப் பற்றிப் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன். மீண்டும் அதையே சொல்ல விரும்புகிறேன்.

SRI M. JAGANNATHAN : Sir, is it not a fact that the Government are talking glibly about the question of introducing land ceilings in our State mere for the purpose of vote catching in the coming general elections than for . . .

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I strongly object to the use of the word 'glibly'. The hon. Member may know some English words. But he should not indiscriminately use the words 'glibly' and 'for the purpose of vote-catching'.

MR. SPEAKER : I would like the hon. Member to use less offensive words.



SRI M. JAGANNATHAN : These words are not at all offensive.

MR. SPEAKER : The point here is that the hon. Member is wounding the feeling of some others.

SRI M. JAGANNATHAN : Sir, the words are quite parliamentary, and I do not see any point in objecting to the use of these words.

MR. SPEAKER : Anyhow, in the interests of harmony, the hon. Member may use some less objectionable words.

THE HON. SRI C. SUBRAMANIAM : The hon. Member has put the question glibly. It does not deserve an answer.

SRI S. NAGARAJA MONIGAR : நிலத்திற்கு உச்ச வரம்பு கட்ட வேண்டும் என்பது பல் வருஷங்களாகவே எண்ணத்திலேயே இருந்து வருவதால் அது இன்னும் உலாவிக்கொண்டு இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்வது எந்த நோக்கத்தைக் கொண்டு என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : The hon. Member is giving information.

SRI V. SUBBIAH : இந்த நில உடைமைக்கு வரம்பு கட்டும்போது கூட்டுக் குடும்பமாக உள்ளவர்களின் நிலத்திற்குத் தரத்திற்குத் தகுந்தபடி காம்பன்சேஷன் கொடுக்க உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த விஷயங்களைப் பற்றியெல்லாம் கனம் அங்கத்தினர் அவர்களுக்கு முன்னதாகத் தெரிவிக்கப்படும்போது யோசனை சொல்லலாம்.

SRI N. K. PALANISAMI : முன்பே சர்க்கார் **future ceiling** கொண்டு வருவதாகச் சொன்னார்கள். இப்பொழுது **existing holdings** கொண்டு வருவது பரிசீலனையில் இருக்கிறதா ? இப்பொழுது சர்க்கார் கொள்கையை மாற்றிக் கொள்ள என்ன காரணம் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த வருஷம் பரவலான மசோதா கொண்டு வர இருப்பதினால்.

SRI D. S. AUTHIMOOLAM : இந்த நிலப் பிரச்னை விஷயமாகப் பேசிக் கொண்டிருக்கும்போது, ஒவ்வொரு மந்திரிகளும் எவ்வளவு எவ்வளவு நஞ்சை, புஞ்சை நிலங்கள் வைத்திருக்கிறார்கள் என்பதை வெளியிட மந்திரி சபை முன் வருமா ?

MR. SPEAKER : தனிக் கேள்வி கேளுங்கள். பதில் சொல்லுவார்கள்.

### *Untouchability*

*279 Q.—SRI P. G. MANICKAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) தீண்டாமை ஒழிப்புக்காக சினிமா படமானது மத்திய சர்க்காரால் தயாரிக்கப்பட்டு சென்னை சர்க்காருக்கு அனுப்புவதற்கானத் திட்டம் ஏதாவது பரிசீலனையில் இருக்கின்றதா ?

(ஆ) இது சம்பந்தமாக மத்திய சர்க்காருக்கும் சென்னை சர்க்காருக்கும் ஏதாவது கடிதப் போக்குவரத்துக்கள் நடைபெற்றுவரின், அவ்விவரங்கள் யாவை ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI P. G. MANICKAM : "ஒன்றே குலம்" என்ற படத்தை வாங்குவதற்கு ஆன தொகையை தீண்டாமை ஒழிப்பு நிதியிலிருந்து கொடுக்கும்படி நமது சர்க்கார் இந்திய சர்க்காருக்குத் தெரியப்படுத்துமா ?

THE HON. SRI P. KAKKAN : பதிலிலேயே சொல்லி இருக்கிறேன். அது பரிசீலனையில் இருக்கிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுவது இயலாத காரியம்.

### *Homoeopathy system of medicine*

* 280 Q.—SRI K. SATTANATHA KARAYALAR AND SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government intend to recognize and encourage homoeopathy; and

(*b*) the help this Government intend to give to Siddha (சித்த வைத்தியம்) method of treatment?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) The question of recognizing the homoeopathis system of medicine is under the consideration of Government.

(*b*) The Sidha System is taught in the Government College of Integrated Medicine and treatment under that system is also being given in the Hospital of Integrated Medicine.

SRI K. SATTANATHA KARAYALAR : சித்த வைத்தியம் செய்பவர்களை ரிஜிஸ்டர் செய்ய ஒரு லிஸ்ட் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. எந்த அடிப்படையில் ரிஜிஸ்டர் செய்யப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : சித்த வைத்தியம் மாத்திரம் அல்ல, உள்நாட்டு முறையிலே வைத்தியம் செய்கிறவர்கள் சில வருஷகாலத்திற்குப் பழக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது போன்ற சில விதிகள் இருக்கின்றன. இந்த விதிகளுக்கு உட்பட்டிருந்தால் ரிஜிஸ்டர் செய்யப்படுகிறது.

SRI N. K. PALANISAMI : ஹோமியோபதி வைத்தியப் பயிற்சிக்குத் தனியாக ஒரு கல்லூரி ஏற்படுத்த சர்க்காரில் ஆலோசனை இருக்கிறதா ? அப்படியானால் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதைப் பற்றி சென்னையில் ஹோமியோபதி அசோசியேஷன், ஒரு காலேஜ் ஆரம்பிக்க யோசனை பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தைச் சமர்ப்பித்தால் அரசாங்கம் அதைக் கவனித்து என்ன செய்யமுடியும் என்று தீர்மானிக்கும்.



SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : ஹோமியோபதி சித்த வைத்தியம் முதலியவற்றால் நோய் வந்த மனிதனுக்கு சிகிச்சை அளிக்கலாம் என்றாலும், வியாதியே வராமல் இருக்க ஆசனப் பயிற்சி அவசியமானது என எல்லோராலும் சொல்லப்படுவதால் அந்தப் பயிற்சியை எல்லோருக்கும் அளிக்க ஏற்பாடு செய்வார்களா ?

MR. SPEAKER : இதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும். ஹோமியோபதிக்கும் ஆசனத்துக்கும் சம்பந்தம் இல்லை.

Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## III.—CALLING ATTENTION TO THE CLOSURE OF BEEDI FACTORIES.

MR. SPEAKER : சட்டசபை விதிகளில் ரூல் 40 பிரகாரம் ஸ்ரீ. எம். கல்யாணசுந்தரம், ஸ்ரீ. எம். எஸ். செல்வராஜன், ஸ்ரீமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் ஆகிய மூன்று பேரும் பீடித் தொழில் சம்பந்தமாக விவாதிக்க வேண்டுமென்று நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். இதில் சட்டப்பிரகாரம் ஒருவர் தான் பேச முடியும். முதலில் நோட்டீஸ் கொடுத்தது ஸ்ரீ எம். கல்யாணசுந்தரம். ஆதலால் அதுபற்றி அவரைப் பேச அழைக்கிறேன். 10-0 a.m.

SRI M. KALYANASUNDRAM : நேற்று நான் கொடுத்திருந்த கேள்வி ஒன்றுக்கு கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லி இருக்கக்கூடிய காரணத்தினாலும், பீடித் தொழிலாளர்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிற தொகுதியைச் சேர்ந்த ஸ்ரீமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் பேசுவதாக இருந்தால் எனக்கு ஆட்சேபனை இல்லை. நான் விட்டுக் கொடுக்கத் தயார்.

MR. SPEAKER : இரண்டாவதாக நோட்டீஸ் கொடுத்தவர் ஸ்ரீ எம். எஸ். செல்வராஜன் அவர்கள் தான். ஆகவே அவரைப் பேச அழைக்கிறேன்.

SRI M. S. SELVARAJAN : ஸ்ரீமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் அவர்கள் பேசுவதாக இருந்தால் நான் விட்டுக்கொடுக்கிறேன். எனக்கும் களைப்பாக இருக்கிறது.

MR. SPEAKER : உங்களுக்கு எல்லாம் கஷ்டமாக இருந்தால் ஸ்ரீமதி குஞ்சிதபாதம் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

SRIMATHI RAJATHI KUNJITHAPATHAM : கனம் சபாநாயகர் அவர்களே இந்தப் பிரச்னை வெகுவாக திருநெல்வேலியில் வாழ்கின்ற தொழிலாளர்களை பாதிப்பதால் இந்தப் பிரச்னை பற்றிப் பேசுவதற்கு அனுமதி கொடுத்த கனம் சபாநாயகர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம் பீடி இறக்குமதியை கொழும்பு சர்க்கார்—இலங்கை சர்க்கார்—தடை செய்திருப்பதால் அதிகமாக பாதிக்கப்பட்டிருப்பவர்கள் திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள மேலைபாளையம் தொழிலாளர்கள் தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்திய சர்க்கார் 15–1–1957-ல் இலங்கை சர்க்காருடன் செய்து கொண்ட அக்ரிமெண்ட் பிரகாரம் படிப்படியாக இந்த இறக்குமதியை இலங்கை சர்க்கார் குறைத்துக் கொள்வது என்கிற அடிப்படையில் இந்தப் பிரச்னை இன்று எழுந்திருக்கிறது. அதோடுகூட அப்படிப்பட்ட ஒரு அக்ரிமெண்டை இந்திய சர்க்கார் அவர்களோடு செய்து கொண்டபோது இந்திய சர்க்காருக்கும் சரி, இலங்கை சர்க்காரும் சரி இது சம்பந்தப்பட்ட தொழிலாளர்களையோ, வியாபாரிகளையோ கலந்து ஆலோசித்திருக்க வேண்டும். அப்படி ஆலோசிக்காமல்...

[Srimathi Rajathi Kunjithapatham] [12th February 1959

என்பது குறிப்பிடத் தக்க விஷயம். அதன் பலனாக நமக்கு 2 கோடி பெறுமான லாபம் வரவேண்டியது பாதிக்கப்படுவதோடு மாத்திரம் அல்லாமல் பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அங்கிருந்து நமக்கு 30 லட்சம் ரூபாய் பொறுமான ஜாப்னா புகையிலை இறக்குமதி ஆகிறது. அந்த ஜாப்னா புகையிலை கேரளத்திற்குப் போகிறது. ஆனால் இன்றைக்கு திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத்தில் புகையிலையைப் பயன்படுத்தி வந்த மக்கள் படிப்படியாக கல்வி அபிவிருத்தி அடைந்தவுடன் புகையிலை உபயோகிக்கும் பழக்கத்தையும் நிறுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதனால் அந்தப் புகையிலை அவர்களுக்குத் தேவையில்லாத நிலைமையில் இருக்கிறது. நம் ராஜ்யத்தில் உள்ள பீடித் தொழிலாளர்கள் அந்தப் புகையிலையை இங்கே இறக்குமதி செய்யத் தயாராய் இருக்கிறார்கள். அதோடு அங்கே இந்தப் பீடித் தொழிலும் நம் ராஜ்யத்தில் விருத்தி அடைந்திருக்கிற மாதிரி விருத்தி அடையாத நிலைமையில் இருக்கிறதென்று தெரிவதால் ஜாப்னா புகையிலையை இங்கே இறக்குமதி செய்யவும், இங்கிருந்து பீடி ஏற்றுமதி செய்யவும் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்வது இந்தத் தொழிலாளர்களுடைய நிலைமையில் உடனடியாக அபிவிருத்தி ஏற்படுவதற்குரிய வழி என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு, அதிலும் குறிப்பாக திருநெல்வேலி, மேலப்பாளையம், முக்கூடல், அம்பாசமுத்திரம் முதலிய இடங்களில் உள்ள தொழிலாளர்கள் பகல் பட்டினி, இரவு கொட்டாவி என்கிற நிலையில் இருக்கிறார்கள். திண்ணையில் சுருட்டிப் படுத்திருக்கிற அலங்கோலத்தைப் பார்க்கலாம். இவர்களுக்கு அங்கே இருக்கிற கூட்டுறவு மில்லிலாவது ஒரு தொழில் கொடுக்கலாம் என்றாலும் கூட்டுறவு ஸ்தாபனத்திலிருந்து வருகிற அங்கத்தினர்களுக்கு மாத்திரம் தான் அங்கே இடம் கொடுக்கப்படுகிறது. அதனால் இங்கும் அவர்களுக்குத் தொழில் கொடுப்பதற்கு வசதி இல்லாமல் இருக்கிறது. இப்படி இந்தத் பீடித் தொழிலாளர்கள் ஒருபுறம் அவதிப்பட்டுக் கொண்டிருக்க, அதே சமயத்தில் லுங்கி ஏற்றுமதியும் தடை செய்யப்பட்டிருக்கிற காரணத்தினால் அநேக ஆயிரம் கைத்தறித் தொழிலாளர்களும் வேலை இழந்து தவிக்கும் பரிதாப நிலை வளர்ந்து வருகிறது. இப்படி வெளிநாட்டில் இறக்குமதி தடை செய்யப்பட்டு, அதனால் இங்கே ஏற்றுமதி செய்ய முடியாத காரணத்தினால் பாதிக்கப்பட்டிருக்கிற பீடித் தொழிலாளர்களுக்கும் சரி, லுங்கித் தொழிலாளர்களுக்கும் சரி உடனடியாக மாற்று வேலையாவது கொடுக்கத் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதுபற்றி கனம் வெங்கட்டராமன் அவர்களைச் சந்தித்து எடுத்துச் சொன்னபோதும் கூட "நாம் என்ன செய்வது? அந்நிய நாட்டில் இருப்பவர்கள் அவர்கள் வியாபாரத்தில் இப்படித்தான் கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். இவர்களுக்கு வேண்டுமானால் ஒரு மாற்றுத் தொழில் நிரந்தரமாகச் செய்து கொடுக்கவேண்டும்" என்று சொன்னார்கள். முதல் அமைச்சர் அவர்களும் அதைத்தான் எடுத்துக் குறிப்பிட்டார்கள். அதன்படி நான் ஒன்று சொல்லிக் கொள்வேன். அதாவது இம்மாதிரி வேலையை இழந்து இருக்கக் கூடிய பீடித் தொழிலாளர்களுக்கும், லுங்கித் தொழிலாளர்களுக்கும் மாற்று வேலை கொடுக்க, ஒரு கூட்டுறவு மில்லை திருநெல்வேலியில் ஆரம்பித்தால் அது மிகவும் பயன்படத்தக்க முறையில் இருக்கும். ஏற்கனவே ஒரு கூட்டுறவு மில் திருநெல்வேலியில் ஆரம்பிக்க அனுமதிக்கப்பட்டிருந்தது. அனுமதி அளிக்கப்பட்ட அப்பர் அடிகள் ஓப் பிரமோடராக இருந்து காரியங்களைச் செய்வதற்கு முன்வரவில்லை என்று தெரிகிறது. அந்த மில்லை மேலப்பாளையத்தில் ஏற்படுத்த இப்போது அனுமதி கொடுத்தால் நிறைய ஷேர் சேர்த்துக் கொண்டு ஆரம்பித்து நடத்த பொது மக்கள் அத்தனைபேரும் முன் வருகிற நிலைமையில் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாதிரி நிலைமையில் அவதிப்படுகிற மக்களுக்கு ஜீவனத்திற்கு வாய்ப்பளிக்க அம்பர் பரிசிரமாலயங்கள் போன்ற நிலையங்களை ஆரம்பிப்பது நன்றாக இருக்கும், அதோடு கூட— வெள்ளைக்காரர்களின் காலத்தில் கூட—இப்படி கோவை மாவட்டத்தில்



12th February 1959] [Srimathi Rajathi Kunjathapatham]

நடந்ததாக அறிகிறேன்,—இப்படி மிகுந்த பஞ்ச நிலைமை ஏற்படுகிறபோது கைராட்டைகளை மக்களுக்கு இலவசமாக விநியோகித்து நிவாரணம் செய்திருக்கிறார்கள்; உடனடியாக ஐயாயிரம் கைராட்டைகளை அந்தப் பகுதியில் இலவசமாக வழங்கி, முதல் வாரத்தில் பஞ்சும் இலவசமாகக் கொடுத்து—ஒரு வார காலத்திற்கு அவர்கள் நூற்கிற நூல நமக்குப் பயனற்றதாக இருந்தாலும் கூட நூற்கும் பழக்கம் வருகிற வரையில் தினம் ஒரு 8 அணா கூலியாவது போட்டுக் கொடுத்தால் பசி பட்டினியால் அவர்கள் சாகிற நிலைமையிலிருந்து காப்பாற்றக்கூடும். இப்படிச் செய்வதன் மூலமாகத் தான் பசியைத் தவிர்க்க முடியும். பட்டினியை தவிர்க்க முடியும். பரிதாபத்தைத் தவிர்க்க முடியும் என்று தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, yesterday, I have answered all the questions put in this behalf. I have only a short statement to make to-day.

Sir, last month the Tirunelveli Beedi Manufacturers and Beedi Tobacco Merchants' Association represented that the Ceylon Government had cut down the import of beedies into Ceylon by 45 per cent and that this would result in large-scale unemployment in the Tirunelveli district among the beedi workers. They represented that the Government of India might be requested to persuade the Ceylon Government to withdraw the restriction. A number of representations from other beedies were also received in this regard.

Thereupon the Union Minister for Commerce and Industry was requested to see that the exports of beedies to Ceylon were restored to the normal level. A reply has been received from the Union Minister saying that the Government of India were already considering the matter and that they would do their utmost to see that the restriction imposed by Ceylon were relaxed, if not fully removed.

## IV.—PRIVILEGE MOTIONS.

### (1) ARTICLE IN THE 'KUMUDAM'.

MR. SPEAKER: Yesterday, we were discussing the breach of privilege of the House regarding the publication of an article in the 'Kumudam'. I had suggested that the matter might be closed. But the Members expressed a doubt as to the attitude of the writer of that article. I have now received a letter from Sri C. E. S. Perumal (Jayantheeyan) of Kancheepuram who has written to me and it is thus:

"Respected Sir,

I understand that in respect of an article written by me and published in the issue of 'Kumudam', dated 10th February 1959 under the caption 'Iverthan Engal, M.L.A.', some of the hon. Members of the Assembly have referred to a passage in the said article which amounts to contempt of the Assembly.

I have read once again the article and I clearly realise that I should not have written the said passage, which refers to the Assembly as 'தூங்கு மடம்'.

[Mr. Speaker] [12th February 1959

I hereby tender my unconditional apology for the same and I pray that my apology may be accepted by your goodself and the hon. Members of the Assembly.

Yours faithfully,
(Signed) C. E. S. Perumal."

In view of this letter, even that one missing link has been supplied and I think I can happily say that the matter is now closed.

(2) 'DINA THANTHI' CASE NO. 2.

SRI M. KALYANASUNDARAM: Sir, the report of the Committee of Privileges regarding the 'Dina Thanthi' case No. 2 was placed on the table of the House on 5th February 1959. May I know when we shall take it up for consideration?

THE HON. SRI C. SUBRAMANIAM: This will be arranged in consultation with the Business Advisory Committee.

V.—MOTION *RE* CHANGE IN THE ORDER OF BUSINESS.

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, I move—

That rule 23 of the Madras Assembly Rules be suspended and the House do resolve to transact Government business on Thursday, the 12th February 1959, and that Monday, the 16th February 1959 may be allotted for the transaction of the non-official business.

This is in accordance with the Business Advisory Committee's recommendations.

The motion was put and carried.

VI.—STATEMENT BY THE HON. MINISTER FOR INDUSTRIES.

* THE HON. SRI R. VENKATARAMAN: Sir, in reply to a supplementary by Sri A. Mariappan, M.L.A., on starred questions Nos. 119, 120 and 125-B, I stated on 11th September 1958 that the Mettur Chemical and Industrial Corporation, Ltd., has obtained a licence to set up a factory for the manufacture of 50 tons of paper. It has subsequently been found that even though the Corporation had applied for the grant of a licence and even though it had been duly recommended by this Government, the Union Government requested the Corporation in November, 1957, to renew its application after a year as the project involved heavy foreign exchange commitment. A licence has not so far been granted to the Corporation to set up a paper factory. On the advice of the Union Government, the Corporation is however negotiating with an American firm to get American aid for the object and the negotiations have not yet been finalised.



12th February, 1959]

VII.—GOVERNMENT BILL.

THE MADRAS GENERAL SALES TAX BILL, 1958 (L.A. BILL NO. 6 OF 1958)—*cont.*

MR. SPEAKER: We shall now proceed with the consideration of the General Sales Tax Bill.

*Clause 2.*

MR. SPEAKER: I have received notice of a number of amendments. There are Government amendments also to this clause. I will call the names of Members and the number of their amendments. Hon. Members will then move their amendments.

SRI S. LAZAR: Sir, I move—

In sub-clause (*a*), *omit* the words 'to be'.

The amendment was duly seconded.

SRI N. K. PALANISAMI: Sir, I move—

In item (*e*) after the words "a business nature", *add* the words "with profit motive".

The amendment was duly seconded.

SRI S. LAZAR: Sir, I move—

In sub-clause (*e*), *for* the words "supplying or distributing", the words "supply or distribution" shall be *substituted*.

The amendment was duly seconded.

SRI S. LAZAR: Sir, I move—

In sub-clause (*f*), *omit* the words "to be".

The amendment was duly seconded.

SRI S. LAZAR: Sir, I move—

In the explanation to sub-clause (*g*), *for* the words "club or firm", the words "club, firm" shall be *substituted*.

The amendment was duly seconded.

SRI S. LAZAR: Sir, I move—

In sub-clause (*g*) (*i*), *for* the words "Hindu undivided family", the word "firm" shall be *substituted*.

The amendment was duly seconded.

SRI S. M. ANNAMALAI: Sir, I move—

In the explanation to item (iv) of sub-clause (*g*), *for* the word "including", *substitute* the word "excluding".

The amendment was duly seconded.

[12th February 1959

SRI M. KALYANASUNDARAM : Sir, I move—

In the explanation to item (iv) of sub-clause (*g*), *for* the words and brackets " (including a co-operative society) ", *substitute* the words and brackets " (excluding a co-operative society) ".

The amendment was duly seconded.

SRI S. LAZAR : Sir, I move—

In sub-clause (*i*), *omit* the words " to be ".

The amendment was duly seconded.

SRI S. LAZAR : Sir, I move—

In sub-clause (*j*), *for* the words " newspapers, actionable claims ", the words " newspapers, journals, actionable claims " shall be *substituted*.

The amendment was duly seconded.

SRI K. SATTANATHA KARAYALAR : Sir, I move—

In sub-clause (*j*), *after* the word " newspapers " *add* the words " and periodicals ".

The amendment was duly seconded.

SRI N. K. PALANISAMI : Sir, I move—

In item (*n*), *omit* the words " and includes a transfer of property in goods involved in the execution of a works contract ".

The amendment was duly seconded.

SRI N. K. PALANISAMI : Sir, I move—

In explanation (1) to item (*n*), *omit* the words " whether or not in the course of a business ".

The amendment was duly seconded.

SRI S. M. ANNAMALAI : Sir, I move—

In the explanation (1) of sub-clause (*n*), *for* the words " including ", *substitute* the word " excluding ".

The amendment was duly seconded.

SRI N. K. PALANISAMI : Sir, I move—

In explanation (1) to sub-clause (*r*), *omit* the word " or " occurring after the word " grading ", and *after* the word " sorting ", *add* the words " or drying ".

The amendment was duly seconded.

SRI N. K. PALANISAMI : Sir, I move—

*Omit* sub-clause (*s*).

The amendment was duly seconded.



12th February 1959]

* THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

In sub-clause (*e*), *for* the words " supplying or distributing " *substitute* the words " supply or distribution ".

In sub-clause (*j*), for the words " grass and things ", *substitute* the words " grass or things ".

In sub-clause (*l*), the following shall be *inserted* at the end—

" or a place where a dealer keeps his books of accounts ".

In sub-clause (*q*), *for* the words " any person ", *substitute* the words " any portion ".

In sub clause (*r*), in explanation (2) (*i*), *for* the words " usuals proportion ", *substitute* the words " usual proportion ".

These amendments are all verbal. Some amendments correct the typographical errors. In the first amendment, we seek to substitute the words " supply or distribution " for the words " supplying or distributing ". In the second amendment, for the expression " grass and things ", the amendment seeks to substitute the expression " grass or things ". In the third amendment, we have inserted the words " or a place where a dealer keeps his books of account " at the end of sub-clause (1). This is intended to bring within the definition of a place of business a place where the dealer keeps his books of account. Otherwise a dealer can keep his books of account at a different place and say that that place is not the place of his business and thereby prevent the tax authorities from entering that place. The fourth amendment is intended to correct a typographical error. For the words " any person ", the amendment seeks to substitute " any portion ". The fifth amendment substitutes the words " usual proportion " for the words " usuals proportion ". These are the amendments I move.

MR. SPEAKER : Government amendments will have precedence over other amendments. In view of an identical Government amendment to sub-clause (*e*), Sri Lazar's amendment to sub-clause (*e*) will have to go. The clause and the amendments are now before the House for discussion. Sri S. Lazar will now speak.

SRI S. LAZAR : கனம் சபாநாயகர் அவர்களே, நான் கொடுத்திருக்கக்கூடிய திருத்தங்கள் அத்தனையும் " வெர்பல் " திருத்தங்கள். 10-10 a.m.
சாதாரணமாகப் பார்க்கிற போதே, இதெல்லாம் அவசியம் என்பதை கனம் அமைச்சர் ஒத்துக் கொள்வார்கள் என்பதில் சந்தேகமில்லை.

இதிலே 3-வது திருத்தத்தைப் பொருத்தவரையில் அரசாங்கமே ஏற்றுக்கொண்டு அரசாங்கத்தின் சார்பாகவே ஒரு திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அந்தத் திருத்தமும் இருக்கிறது. இதுபோன்று திருத்தங்கள் கொண்டுவரக் கூடிய காலத்தில், அவர்களை ஊக்குவிக்கும் முறையில் அவர்களுடைய திருத்தங்களை ஒத்துக்கொள்ள வேண்டுமே யல்லாது, அரசாங்கம் தனியாக அதே திருத்தங்களைக் கொண்டு வரக் கூடாது என்றும் இந்தச் சபையிலுள்ள அங்கத்தினர்கள் சார்பாக நான் அமைச்சர் அவர்களை வேண்டிக்கொள்கிறேன்.

[Sri S. Lazar] [12th February 1959

முதலாவது திருத்தம், " அப்பெல்லெட் அஸிஸ்டெண்ட் கமிஷனர் " என்ற வார்த்தையை விளக்கம் செய்கிற நேரத்தில் " மீன்ஸ் எனி பர்ஸன் அப்பாயிண்டெட் டு பீ ஆன் அப்பெல்லெட் அஸிஸ்டெண்ட் கமிஷனர் " என்று இருக்கிறது. சாதாரணமாக, ஆங்கிலத்திலே " அப்பாயிண்டெட் " என்று வருகிற போது உடனே பின் தொடரவேண்டும் என்ன அப்பாயின்ட்மென்ட் என்று. " டு பீ " என்ற இரண்டு வார்த்தைகள் அவசியம் இல்லாத வார்த்தைகள். மற்ற சட்டங்களில் இந்த மாதிரி போட்டிருக்கிறோம், ஆகையால் இங்கேயும் இருக்கலாம் என்று சொன்னால் தவிர, ஆங்கில பாஷைப் பிரகாரம் பார்க்கும் போது இது அவசியமில்லை. ஆகையால் தான் இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன்.

அடுத்தபடியாக, நான் எற்கெனவே சொன்ன திருத்தம். " ஈ " என்ற இடத்தில் ஒரு திருத்தம் செய்ய வேண்டுமென்று கொடுத்திருக்கிறேன். அந்தத் திருத்தத்தை அமைச்சர் அவர்களே கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகையால் நான் சொன்ன திருத்தத்தை அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டு விட்டார்கள்.

" கமெர்ஷியல் டாக்ஸ் ஆபீஸர் " என்ற பதத்தை விளக்கம் செய்கிற போதும் " டு பீ " என்ற வார்த்தைகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்த வார்த்தைகளுக்கு அவசியமில்லை.

" பிஸினெஸ் " என்ற வார்த்தையை விளக்கம் செய்கின்றதிலே " காமர்ஸ் ஆர் மானுபாக்சர் " என்று, " மானுபாக்சர் " என்ற வார்த்தைக்குப் பிறகு, " , " இல்லாது இருக்கிறது. ஆகையால் " பிஸினெஸ் " என்று சொன்னால் " டிரேட் " " காமர்ஸ் " " மானுபாக்சர் " என்ற மூன்று முறைகளும் அமைந்திருக்கிற காரணத்தினால், " மானுபாக்சர் " என்ற வார்த்தைக்குப் பிறகு ஒரு " , " இருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. அதையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக, " டீலர் " என்ற வார்த்தைக்கு விளக்கம் அமைத்திருப்பதிலே, முதலாவது உட்-பிரிவில் " ஹிந்து அன்டிவைடெட் பாமிலி " என்று போட்டிருக்கிறது. " ஹிந்து அன்டிவைடெட் பேமிலி " என்று தனியாக ஒரு " எண்டிடி " கிடையாது. ஆகையால் இந்த வார்த்தைகளுக்குப் பதிலாக " பெர்ம் " என்ற வார்த்தையைப் போட்டுக் கொள்ள வேண்டுமென்று ஒரு திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். இதற்கு ஆதாரம் 4-வது உட்-பிரிவிலே இருக்கிறது என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதேபோல, உப பிரிவு (g)-யின் உட்பிரிவு (iv)-ல் " **firm or company** "
10 20 a.m. என்ற வார்த்தைகள் போடப்பட்டிருக்கும்போது, உட்பிரிவு (i)-இலும் " பெர்ம் " என்ற வார்த்தை இருக்கவேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது.

மேலும், " ஹிண்டு அண்டிவைடட் பாமிலி " என்று தனியாக ஒரு " லீகல் எண்டிடி " இல்லை. அது ஒரு " பெர்ஸன் " தான். ஆகவே அந்த வார்த்தைகளுக்கு பதிலாக " பெர்ம் " என்ற வார்த்தையைப் போட வேண்டும் என்று திருத்தம் பிரேரேபித்திருக்கிறேன். இந்தச் சிறிய திருத்தத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உப பிரிவு (iv)-ல் உள்ள எக்ஸ்ப்ளனேஷனில் " **A society (including a co-operative society), club or firm or an association........** " என்று இருக்கிறது. இதில் " **or** " என்ற வார்த்தை அவசியமில்லை என்று நினைக்கிறேன். உதாரணமாக, இதே மசோதாவில் 2-வது பிரிவின் உப பிரிவு (**n**)-ல் உள்ள எக்ஸ்ப்ளனேஷனில் " **The transfer of property involved in the supply or distribution of goods by a society (including a co-operative society), club, firm, or any association......** " என்று கண்டிருக்கிறது. உப பிரிவு (**n**)-ல் உள்ள எக்ஸ்ப்ளனேஷனில் உள்ள அர்த்தத்துடன் தான் இந்த உட்பிரிவு (**iv**)-ல உள்ள எக்ஸ்ப்ளனேஷனும் அமைய வேண்டும் என்பது நமது



12th February 1959] [Sri S. Lazar]

நோக்கம். அப்படி இருக்கும்போது, இங்கே " or " என்ற வார்த்தை இருந்தால் இதன் அர்த்தம் சற்று மாறுபடுகிறது. இதிலிருந்து " or " என்ற வார்த்தையை நீக்குவதற்கு கனம் அமைச்சருக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இருக்காது என்று நினைக்கிறேன்.

இரண்டாவது பிரிவின் உட் பிரிவு (i)-ல் " **to be** " என்ற வார்த்தைகள் இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் திருத்தம் கொடுத்திருக்கிறேன். அந்தத் திருத்தத்தையும் கனம் அமைச்சர் ஏற்றுக்கொள்வார் என்று நம்புகிறேன்.

அரசாங்கத் திருத்தங்கள் மிக மிக அவசியமானவை. மசோதாவைப் படித்துப் பார்க்கும்போது எங்களுக்கு அந்தக் குறைகள் புலப்படவில்லை. அரசாங்கத் திருத்தங்களையும் வரவேற்கிறேன்.

" Dealer " means any person who carries on the business of buying, selling, supplying or distributing goods, etc. . . . . and includes—

' (*i*) the Central Government, a State Government, local authority, company or Hindu undivided family.'

' (*g*) (iv) every local branch of a firm or company situated outside the State.'

*Explanation to clause* (*g*).—A society (including a co-operative society), club or firm or an association . . .'

Instead of club or firm, it should be ' club, firm '.

*Explanation* (1) *to sub-clause* (*n*).—The transfer of property involved in the supply or distribution of goods by a society (including a co-operative society), club, firm or any association . . .

MR. SPEAKER: You have not spoken on your amendment to sub-clause (*j*).

SRI S. LAZAR: Not spoken, Sir . . .

MR. SPEAKER: I am not compelling him to speak on it. If he does not want to speak, that is all right.

SRI N. K. PALANISAMI: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவில் " காஷுவல் ட்ரேடரும் " பிஸினஸ் பண்ணுபவர்களுடன் சேர்க்கப்பட்டிருக்கிறார். சாதாரணமாக, யாருமே வாங்காமலும் விற்காமலும் இருக்க முடியாது. உண்மையாகவே, " ஸேல் " என்பது எப்போது வருகிறது ? ஒருவன் ஒரு பொருளை லாபத்திற்கு விற்றால், அப்போது அது " ஸேல் " ஆகிறது. ஆனால், சாதாரணமாக, கார் வியாபாரம் செய்பவர்கள் வீட்டில் உட்கார்ந்துகொண்டே அதைச் செய்கிறார்கள். எனவே இந்த விஷயத்தில் கனம் அமைச்சரின் வாதமும் சரிதான். ஆனால் அவ்வாறு வியாபாரம் செய்பவர்களுக்குத்தான் வரி போட வேண்டும். அந்த நோக்கத்துடன், 2 (e)-ல் " எ பிஸினெஸ் நேச்சர் " என்ற வார்த்தைகளுக்குப் பிறகு " வித் ப்ராபிட் மோடிவ் " என்ற வார்த்தைகளைச் சேர்க்க வேண்டும் என்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கனம் அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன்.

[Sri N. K. Planisami] [12th February 1959

அடுத்தப்படியாக, உப பிரிவு (n)-ல் " ' sale ' with all its grammatical variations means every transfer of the property in goods......and includes a transfer of property in goods involved in the execution of a works contract....'' என்று கண்டிருக்கிறது. மேலும், உப பிரிவு (r)-ல் உள்ள எக்ஸ்ப்ளனேஷன் (2)-ல் (i)-வது பகுதியில் " the amount for which goods are sold shall, in relation to a work contract, be deemed to be the amount payable to the dealer for carrying out such contract, less such as may be prescribed of such amount, representing the usual proportion of the cost of labour to the cost of materials used in carrying out such contract ; '' என்று கண்டிருக்கிறது. ஏற்கெனவே, டி.வி.எஸ். கம்பெனியார் சம்பந்தப்பட்ட கேஸை எடுத்துக்கொண்டாலும் சரி, காணென்டங்கர்லி கம்பெனியார் சம்பந்தப்பட்ட கேஸை எடுத்துக்கொண்டாலும் சரி, உழைப்புக்கு வரி போடக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதை சர்க்கார் மனதில் கொள்ளவேண்டும். எலெக்டிரிக் பல்போடு வயர் முதலிய சாமான்கள் சேர்ந்தால், அது வர்க்ஸ் காண்ட்ராக்ட். அப்போது பல்ப் மட்டும்தான் " ப்யூர் சேல்ஸ் ''-ன் கீழ் வருகிறது. " மெடீரியலுக்கு " மட்டும்தான் வரி போட வேண்டும். உழைப்பிற்கு வரி போடக்கூடாது. ஆகவே உப பிரிவு (n)-ல், " and includes a transfer of property in goods involved in the execution of a works contract " என்ற வார்த்தைகளை நீக்கிவிட வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

மேலும், உப பிரிவு (n)-ன் கீழ் உள்ள எக்ஸ்ப்ளனேஷன் (1)-ல் " whether or not in the course of a business '' என்ற வார்த்தைகள் இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்று நினைக்கிறேன். அவைகளை நீக்கிவிட வேண்டும் என்றும் கனம் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

சில விவசாயப் பொருள்களுக்கு வரியினின்றும் விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. பாக்கைப் பொறுத்தவரையிலும், அதை விவசாயிகளும் விற்கிறார்கள். அதை உலர்த்தவும் செய்கிறார்கள். எனவே, உப பிரிவு (r) -ன் கீழ் உள்ள (1)-வது எக்ஸ்ப்ளனேஷனில் " க்ளீனிங், க்ரேடிங் ஸார்டிங் " என்ற வார்த்தைகளுடன் " ட்ரையிங் " என்ற வார்த்தையை சேர்க்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். என்னுடைய திருத்தங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

**Sri S. M. ANNAMALAI** : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனை வரியினின்றும் விலக்கு அளிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் நான் என்னுடைய திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். கூட்டுறவுச் சங்கங்கள் இப்போதுதான் கிராமங்களில் அதிகமாக வளர்ச்சியடைய ஆரம்பித்திருக்கின்றன. கூட்டுறவுச் சங்கங்கள், ஆரம்பிக்கப்பட்ட பிறகு நல்ல முறையில் செயல்படுவதற்கு 4–5 ஆண்டுகள் ஆகின்றன. பொது மக்களின் நம்பிக்கையைப் பெற்று இயங்கவேண்டிய கூட்டுறவுச் சங்கங்கள் தனி முதலாளிகளுடன் போட்டியிடக்கூடிய நிலையில் இல்லை. அப்படிப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களை விற்பனை வரிச் சட்டங்களுக்கு உட்படுத்துவது நியாயமல்ல. எனவே, கூட்டுறவுச் சங்கங்களை விற்பனை வரிச் சட்டத்திற்கு உட்படுத்தக்கூடாது என்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

**Sri K. SATTANATHA KARAYALAR** : கனம் சபாநாயகர் அவர்களே, 2-வது பிரிவின் உப பிரிவு (j)-ல் " ' goods means all kinds of movable property other than newspapers . . . '' என்று கண்டிருக்கிறது. " நியூஸ்பேபர்ஸ் " என்ற வார்த்தை இங்கே தினப் பத்திரிகைகளை மட்டும்தான் குறிக்கிறதா அல்லது மாத இதழ்கள், வார இதழ்கள் முதலிய எல்லாப் பத்திரிகைகளையும் குறிக்கிறதா ? இது மசோதாவில் விளக்கப்படவில்லை. வார இதழ்கள், மாத இதழ்கள் முதலிய எல்லாப் பத்திரிகைகளையும் இதற்கு உட்படுத்தவேண்டும் என்ற



12th February 1959] [Sri K. Sattanatha Karayalar]

நோக்கத்துடன் நான் இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். வார இதழ்களும், மாத இதழ்களும் நியூஸ்பேப்பர்களின் கடமையைத்தான் செய்கின்றன. அவைகளையும் இதற்கு உட்படுத்தவேண்டியது மிக மிக அவசியம். " நியூஸ் பேபர்ஸ் " என்ற வார்த்தை தினப் பத்திரிகைகளை மட்டுமன்றி மாத இதழ்களையும் வேறு இதழ்களையும் குறிக்கின்றது என்றால், என்னுடைய திருத்தத்திற்கு அவசியமில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**Mr. SPEAKER** : ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்களுடைய திருத்தத்திலும் ஸ்ரீ அண்ணாமலை அவர்களுடைய திருத்தத்திலும் ஒரே நோக்கம் தான் காணப்படுகிறது. ஸ்ரீ அண்ணாமலை பேசிவிட்டார். ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்களும் பேச விரும்புகிறாரா ? பேச வேண்டுமானால் அவர் பேசலாம்.

**Sri M. KALYANASUNDARAM** : நான் ஒரு முக்கியமான விஷயம் சொல்ல விரும்புகிறேன். கூட்டுறவு சொஸைட்டிகளுக்கு விற்பனை வரியினின்றும் விலக்கு அளிக்க வேண்டும். தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு நியாயமான விலையில் உணவுப் பொருள்களையும் மற்ற பல பொருள்களையும் விநியோகம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் பல கூட்டுறவு சொஸைட்டிகள் இயங்கி வருகின்றன. சில இடங்களில் தப்பிப் பிழைத்த அர்பன் கோவாபரேடிவ் சொஸைட்டிகளும் இருக்கின்றன. இவைகள் தனிப்பட்ட வியாபாரிகளுடன் போட்டியிட முடிவதில்லை. தனிப்பட்ட வியாபாரிகள் தங்கள் விற்பனையைப் பூராவாகக் கணக்கில் கொண்டு வராமல் விற்பனை வரியிலிருந்து தப்பித்துக்கொள்கிறார்கள். கூட்டுறவு ஸொஸைட்டிகள் அந்த முறையை கையாள முடிவதில்லை. அவைகள் தங்கள் விற்பனை பூராவிற்கும் பில்கள் போட வேண்டியிருக்கிறது. இந்த நிலையில் அவைகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்காவிட்டால் அவைகள் மிகவும் பாதிக்கப்படும். எனவே கூட்டுறவு ஸொஸைட்டிகளுக்கு விற்பனை வரியிலிருந்து பாதுகாப்புக் கொடுக்க வேண்டியது அவசியம். அரசாங்கத்தார் அவைகளுக்கு மற்ற பல விதங்களில் ஊக்கம் கொடுத்துவரக்கூடும். இருந்தாலும், விற்பனை வரியிலிருந்து விலக்குப் பெறும் சலுகையையும் அவைகளுக்கு அளிக்கவேண்டும். அந்த நோக்கத்துடன்தான், " இன்க்லூடிங் எ கோவாபரேடிவ் ஸொஸைடி " என்ற வார்த்தைகளுக்கு பதிலாக " எக்ஸ்க்லூடிங் எ கோவாபரேடிவ் ஸொஸைடி " என்ற வார்த்தைகளைப் போட வேண்டும் என்ற திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

* **The Hon. Sri R. VENKATARAMAN** : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர்கள் கொடுத்துள்ள திருத்தங்களை முதன் முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், அதே போன்ற திருத்தங்களை அரசாங்கத்தார் கொண்டு வரக்கூடாது என்றும் கனம் அங்கத்தினர் ஸ்ரீ லாஸர் வலியுறுத்திக் கூறினார். கனம் அங்கத்தினர்கள் என்னென்ன திருத்தங்களைக் கொடுக்கப்போகிறார்கள் என்பது அரசாங்கத்தாருக்கு முன் கூட்டியே தெரிந்திருந்தால் அரசாங்கத்தார் அதே மாதிரியான திருத்தங்களை கொடுக்காமல் இருந்திருப்பார்கள். அரசாங்கத்தாருக்கு, கனம் அங்கத்தினர்கள் என்னென்ன திருத்தங்கள் கொடுப்பார்கள் என்பது, தாங்கள் திருத்தங்கள் கொடுத்தபோது தெரியாது. சட்டத்தைக் குறைகளுடன் இயற்றிவிடக்கூடாது என்ற எண்ணத்தில் அரசாங்கத்தாரும் திருத்தங்கள் கொடுத்திருக்கிறார்கள். எனக்கு ஆட்சேபணை இல்லை ; ஒரே மாதிரியான திருத்தங்களைப் பொறுத்த வரையில், நான் கொடுத்துள்ள திருத்தங்களைப் போடுவதற்கு பதிலாக கனம் அங்கத்தினர்கள் கொடுத்துள்ள திருத்தங்களைப் போட்டு அவைகளை நான் ஒத்துக்கொள்வதாக எடுத்துக் கொள்ளலாம். 10–30 a.m.

அடுத்தப்படியாக, சில வார்த்தைகளைக் குறித்து கனம் லாஸர் அவர்கள் பல திருத்தங்கள்கொடுத்தார்கள். அவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்ததில் இப்பொழுது இருப்பவைகளே சரியாக இருக்கிறது என்று நான்

சர்க்காருக்குத் தோன்றுகிறது. "**to be**" என்று இருப்பதை அவர்கள் ஆட்சேபித்தார்கள். அதை சட்ட இலாகா பரிசீலனை செய்ததில் அவ்வாறு இருப்பதில் தவறு இல்லை என்று தெரிகிறது. ஆகவே இந்த அமெண்ட்மெண்ட் அவசியமில்லை. அடுத்தபடியாக, இரண்டாவது அமெண்ட்மெண்ட் பழனிசாமி அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய திருத்தம், '**after the words "a business nature" add the words "with profit motive"**' என்பதாகும். இப்பொழுதுள்ள சட்டப்படி லாபக் கருத்துடன் வியாபாரம் செய்தால்தான் அதற்கு வரி உண்டு என்று இருக்கிறது. அதை மாற்றுவதற்காகத்தான் இந்த சட்டத்தில் ஏற்பாடு செய்திருக்கிறோம். கோவாப்பரேட்டிவ் சொஸைட்டியாக இருந்தாலும் சரி அல்லது காஸ்மோபாலிட்டன் கிளப்பாக இருந்தாலும் சரி விற்பனை செய்தால்தான் விற்பனை வரிக்கு உள்ளாகவேண்டும். லாபம் இருக்கிறதா இல்லையா என்பது பிரச்னை அல்ல. விற்பனை நடக்கிறதா இல்லையா என்பது தான் பிரச்னை. விற்பனை நடப்பதால் வாங்குகிறவர்கள் வரி கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் செய்திருப்பதால் அந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. மூன்றாவது அமெண்ட்மெண்டைப் பற்றி சொல்லிவிட்டேன். லாஸர் அவர்களின் அமெண்ட்மெண்டை ஏற்றுக்கொள்கிறேன். நான்காவது அமெண்ட்மெண்ட், "**to be**" என்பதைப் பற்றி சொல்லிவிட்டேன். ஐந்தாவது அமெண்ட்மெண்ட், "**club, or firm**" என்று இருப்பதைப் பற்றி லாஸர் அவர்கள் ஆட்சேபணை செய்திருக்கிறார்கள். இதை இரண்டு விதமாக, "**club, firm**" **or club, firm or**" என்று எழுதலாம். ஆகவே இதற்கும் அவசியமில்லை என்று நான் கருதுகிறேன். ஆறாவது அமெண்ட்மெண்டை ஸ்ரீ சம்பத் அவர்கள் மூவ் செய்யவில்லை. ஏழாவது அமெண்ட்மெண்ட், ஜாயிண்ட் பாமிலி என்ற வார்த்தையை நீக்க வேண்டுமென்று லாஸர் அவர்கள் சொன்னார்கள். அதை நீக்கி விட்டால் ஹிந்து ஜாயிண்ட் பாமிலி செய்கிற வியாபாரங்கள் வரியிலிருந்து விலக்கப்படும். ஆகவே அதை ஒத்துக்கொள்வதற்கில்லை. எட்டாது, மூவ் செய்யவில்லை. ஒன்பதாவது, அண்ணாமலை அவர்கள் கொடுத்தது. கோவாப்பரேடிவ் சொஸைட்டிகளை இந்த வரியில் இருந்து நீக்க வேண்டுமென்பது. நேற்று பொது விவாதத்திற்கு பதில் அளிக்கையில் சொன்னபடி, விற்பனை செய்கிற இடத்தில் வசூல் செய்ய வேண்டுமென்பது நோக்கம். இதில் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டிகளுக்கு சலுகை காட்ட வேண்டுமென்று சொன்னால், வேறு முறையில்தான் காட்ட வேண்டும். அதிலும், முக்கியமாக வியாபாரத்துறையில் தனியார்கள் ஈடுபட்டிருப்பவைகளுக்கு வரியும், கூட்டுறவு சொஸைட்டிகளுக்கு வரி இல்லையென்றும் சொன்னால் அது வர்த்தகத் துறையில் ஈடுபட்டிருப்பவர்களாகிய, தனியார்களைப் பாதிக்கும். இச்சட்டம் எல்லோருக்கும் சமமாக அமுல் நடத்தப்படும், அல்லது அதன் நோக்கமே தவறி விடும். ஆகவே அதை ஏற்றுக்கொள்வதற்கில்லை. சில கோவாப்பரேட்டிவ் சொஸைட்டிகளுக்கு விதிவிலக்கு கொடுத்ததைக் கூட டாக்டர் லோகநாதன் அவர்கள் அவர்களது ரிப்போர்ட்டில் கண்டித்திருக்கிறார்கள். அதனால் விதிவிலக்கு கொடுக்க முடியவில்லை. அடுத்தப்படியாக, 11-வது அமெண்ட்மெண்ட், லாஸர் அவர்கள் "**to be**" என்பதை எடுத்து விட வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு முன்பே நான் பதில் சொல்லிவிட்டேன். 12-வது அமெண்ட்மெண்டை ஸ்ரீ ஸ்ரீனிவாஸ ஐயர் மூவ் செய்யவில்லை. 13-வது, நியூஸ் பேப்பர்ஸ்யைப் பற்றிய அமெண்ட்மெண்ட். நியூஸ் பேப்பர்ஸ் என்ற டெபனிஷனில் சாதாரணமாக ஜர்னல்ஸும் வந்து விடும். அப்படி வராவிட்டால் புக்ஸ் என்ற டெபனிஷனில் அது வரும். அதாவது இந்த ஜர்னல்கள், புக்ஸ்க்கு விதிவிலக்கு கொடுத்திருப்பதால் நியூஸ் பேப்பர்ஸ் என்ற முறையிலோ அல்லது புக்ஸ் என்ற முறையிலோ அவைகளுக்கு விதிவிலக்கு அளிக்கலாம். ஆகவே இது அவசியமில்லை. 14-வது மூவ் பண்ண வில்லை. 15-வது அமெண்ட்மெண்ட் நான் முன்பு சொன்னதில் அடங்கியிருக்கிறது. 16-வது அமெண்ட்மெண்ட், "வொர்க்ஸ் காண்ட்ராக்ட்" சம்பந்தமாக பழனிசாமி அவர்கள் கொடுத்திருக்கும் திருத்தம். அது சட்டப் பரிசீலனையில் இருக்கிறது. இம்மூவபிள் ப்ராப்பர்டீஸ் சம்பந்தமாக வொர்க்ஸ் காண்ட்ராக்டில் என்னென்ன பண்டங்கள் உபயோகப்படுத்தப்



படுகிறதோ அவற்றிற்கு வரி விலக்குக் கூடாதென்று தீர்ப்பு இருக்கிறது. அடுத்தபடியாக, சுந்தரம் மோட்டார்ஸ் கேஸில் "மூவபிள் ப்ராப்பர்டீஸ்"ல் கூட எந்தவிதமான பண்டங்களை உபயோகித்தாலும் அதற்கு வரி விதிக்கக் கூடாதென்று பத்திரிகை வாயிலாக வந்த தீர்ப்பு தெரியுமே தவிர அதன் அசல் நகலை இன்னும் ஹைக்கோர்ட்டிலிருந்து பெறவில்லை. பெற்ற பிறகு ஆலோசனை செய்யப்படும். ஆகவே அது சம்பந்தமாக எந்த முடிவும் எடுப்பதற்கில்லை. சட்டம் இப்பொழுது இருப்பது போலவே தான் இருக்கவேண்டும். 18-வது கோவாப்பரேட்டிவ் சொஸைட்டிஸ்யைப் பற்றியது. 19-வது அமெண்ட்மெண்ட், பழனிஸ்வாமி அவர்கள் கொடுத்திருக்கக்கூடியது, **add the words "or drying"**? என்றிருக்கிறது. அதை யோசனை செய்துதான் செய்யவேண்டும்.

The amendment of Sri S. Lazar to sub-clause (*a*) was, by leave, withdrawn.

MR. SPEAKER : I shall now put the amendment of Sri N. K. Palanisamy to vote. The question is—

"In item (*e*) *after* the words 'a business nature' *add* the words 'with profit motive.'"

The amendment was put and lost.

MR. SPEAKER : I shall now put the amendments of Sri S. Lazar to sub-clause (*e*) to vote. The question is :—

"In sub-clause (*e*), *for* the words 'supplying or distributing', the words 'supply or distribution' shall be *substituted*.'"

The amendment was put and carried.

The amendments moved by Sri S. Lazar to sub-clause (*f*), sub-clause (*g*) and (*g*) (*i*) were, by leave, withdrawn.

MR. SPEAKER : I shall now put the amendment of Sri S. M. Annamalai to vote. The question is :—

"In the explanation to item (iv) of sub-clause (*g*), *for* the words 'including', *substitute* the word 'excluding'."

The amendment was put and lost.

The other amendments of Sri S. Lazar and the amendment of Sri K. Sattanatha Karayalar were, by leave, withdrawn.

MR. SPEAKER : The question is—

'In the explanation to item (iv) of sub-clause (*g*), *for* the words and brackets "(including a co-operative society), *substitute* the words and brackets "(excluding a co-operative society)"'

The amendment was put and lost.

MR. SPEAKER : The question is—

"In item (*n*) *omit* the words "and includes a transfer of property in goods involved in the execution of a works contract".

[12th February 1959

SRI N. K. PALANISAMI: When the whole law is under dispute why should the Government introduce it here?

THE HON. SRI R. VENKATARAMAN: The amendment of the hon. Member relating to explanation (1) to sub-clause (*r*) may be kept pending.

MR. SPEAKER: I am now putting the amendment to vote.

The amendment was put and lost.

MR. SPEAKER: The question is—

" In explanation (1) to item (*n*) *omit* the words " whether or not in the course of a business ".

The amendment was put and lost.

MR. SPEAKER: The question is—

" In the explanation (1) of sub-clause (*n*) *for* the words including ', *substitute* the word ' excluding '."

The amendment was put and lost.

MR. SPEAKER: The question is—

' *Omit* sub-clause (*s*) '.

The amendment was put and lost.

MR. SPEAKER: The question is—

(1) " In sub-clause (*j*), *for* the words ' grass and things ', *substitute* the words ' grass or things '.

(2) In sub-clause (*l*), the following shall be *inserted* at the end

' or a place where a dealer keeps his books of accounts '.

(3) ' In sub-clause (*q*), *for* the words ' any person ', *substitute* the words ' any portion '.

(4) ' In sub-clause (*r*), in explanation (2) (i), *for* the words ' usuals proportion ', *substitute* the words ' usual proportion '.

The amendments were put and carried.

The Government amendment to sub-clause (*e*) was by leave, withdrawn.

MR. SPEAKER: Now the amendment of Sri N. K. Palanisami to explanation (1) to sub-clause (*r*) is to be kept pending. So we cannot take a vote on clause 2.

THE HON. SRI R. VENKATARAMAN: This amendment and clause 2, as amended, may be kept pending for the time being and taken up a little later and voted upon.

MR. SPEAKER: Then we will take up clause 3 now.



12th February 1959]

*Clause* 3.

MR. SPEAKER: The motion is—

' That clause 3 do stand part of the Bill.'

SRI N. MARUDACHALAM: Mr. Speaker, Sir, I move—

" In sub-clause (1) *for* the words ' ten thousand rupees ' *substitute* the words ' twenty-five thousand rupees '. "

The amendment was duly seconded.

SRI S. M. ANNAMALAI: Mr. Speaker, Sir, I move the amendment—

" In sub-clause (1) *for* the words 'ten thousand ', *substitute* the words ' twenty thousand '."

The amendment was duly seconded.

SRI N. MARUDHACHALAM: Mr. Speaker, Sir, I move—

" In sub-clause (1), *for* the words ' ten thousand rupees '. *substitute* the words ' thirty thousand rupees '."

The amendment was duly seconded.

SRI A. GOVINDASAMY: Mr. Speaker, Sir, I move—

" In sub-clause (1), *for* the words ' at the rate of two per cent ', *substitute* the words ' at the rate of one per cent '."

The amendment was duly seconded.

SRI S. M. ANNAMALAI: Mr. Speaker, Sir, I move—

' *Omit* the proviso to sub-clause (1) '.

The amendment was duly seconded.

SRI N. K. PALANISAMI: Mr. Speaker, Sir, I move— the amendment, namely—

" In sub-clause (1), *for* the provisos, *substitute* the following, namely:

' Provided that—

(i) in the case of wheat products (for example wheat flour, sooji and wheat bran), coconut, and potato, the rate shall be quarter per cent;

(ii) dealers dealing in fresh vegetables (other than those mentioned in the First Schedule), fresh fruits, betel and plantain leaves, flowers, eggs, meat and fish (other than canned meat and fish), shall not be liable to pay any tax '."

The amendment was duly seconded.

[12th February 1959

SRI M. KALYANASUNDARAM : Mr. Speaker, Sir, I move—

'*For* item (i) of the proviso to sub-clause (1), *substitute* the following, namely :—

" (i) In the case of foodgrains and perishable articles such as vegetables, milk, flowers, fresh fruits, plantain leaves, betels, eggs, meat and fish no sales tax shall be levied irrespective of turnover ".'

The amendment was duly seconded.

SRI N. MARUDACHALAM : Mr. Speaker, Sir, I move—

In item (i) of the proviso to sub-clause (1), *for* the words " the rate shall be one per cent ", *substitute* the words " the rate shall be half per cent ".

The amendment was duly seconded.

SRI V. SUBBIAH : Sir, I move—

In item (i) of the proviso to sub-clause (1), *omit* the word " flowers ".

The amendment was duly seconded.

SRI K. RAMACHANDRAN : Mr. Speaker, Sir, I move—

'In item (ii) of the proviso to sub-clause (1), *for* the words " thirty thousand ", *substitute* the words " fifty thousand rupees ".'

The amendment was duly seconded.

SRI S. NAGARAJA MONIGAR : Mr. Speaker, Sir, I move—

*After* item (ii) of the proviso to sub-clause (1), *add* the following item, viz. :

" (iii) the sale of milk and milk products by co-operative societies shall not be liable for any tax under this Act ".

The amendment was duly seconded.

SRI S. LAZAR : Mr. Speaker, Sir, I move—

" In the proviso to sub-clause (3), *omit* the words ' obtained from the prescribed authority '."

The amendment was duly seconded.

MR. SPEAKER : The amendment and the clause are before the House for discussion.

**SRI N. K. PALANISAMI** : கனம் சபாநாயகர் அவர்களே, என்னுடைய முக்கியமான திருத்தம் "டாக்ஸபிள் லிமிட்" ரூ. 10,000 என்று இருப்பதை 25,000 ரூபாய்க்கு உயர்த்த வேண்டுமென்பது தான். கனம் மந்திரி அவர்கள் நேற்றைய தினம் சொன்னார்கள், முன்பு இருந்ததைவிட இப்பொழுது வியாபாரிகளுக்கு அதிகமாக வருமானம் வருகிறது, அதனால் அதிகப்படியான வரி கொடுத்தால் சகங்டம்



12th February 1959] [Sri N. K. Palanisami]

இல்லை என்று. ஆனால், " காஸ்டு ஆப் லிவ்விங் இன்டெக்ஸை " எடுத்துக் கொண்டால், இன்றைக்கு இருக்கக்கூடிய வியாபாரத்திலுள்ள போட்டியை எடுத்துக்கொண்டால், இன்று வரக்கூடிய லாபம் கணிசமான அளவு இல்லை. அதுவும் " டாக்ஸபிள் லிமிட் " 10,000 ரூபாய் என்று வைத்தால் சிறு சிறு வியாபாரிகளுக்கும், கடைக்காரர்களுக்கும் பெருத்த நஷ்டம் உண்டாகும். சர்க்காருக்கு வரி குறையக் கூடாது என்பது தான் எல்லோருடைய அபிப்பிராயமும். ஆனால் இன்றையதினம் எங்கு அதிகப்படியான வியாபாரம் நடக்கின்றதோ, அவ்விடத்தில் சரியான முறையிலே வரி வசூல் செய்யவில்லை என்பதைத் தான் நான் குறிப்பிட விரும்புகிறேன். அன்றைக்கு சில உதாரணங்கள் கொடுத்தேன். இன்றைக்கும் சில உதாரணங்கள் கொடுக்க வேண்டுமென்று விரும்புகிறேன். பல பேர்கள் எந்த விதமான கடையும் இல்லாமல் வெறும் காகிதத்தில் எழுதியே பல சாமான்களை ஸேல்ஸ் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் வரும் கமிஷன் பேபரில் இருக்கும். ஆனால் சர்க்காருக்கு கணக்கு வராது. வெளி நாட்டிலிருந்து எலக்டிரிக் மோட்டார் போன்ற பல சாமான்கள் இறக்குமதியாகின்றன. 25 எச். பி. மோட்டார் விலை கண்டிரோல் ரேட் ரூ. 3,500 என்றால், மார்க்கெட் ரேட் ரூ. 7,000 ஆக இருக்கிறது. ஆனால் அந்த " இம்போர்டர் " என்ன சொல்வார் என்றால் மேலும் 3,500 ரூபாய் கொடுத்தால் தான் மோட்டார் கிடைக்கும் என்று கூறுவார். (ஸ்ரீ எஸ். எ. எம். அண்ணாமலை உடையார் தலைமை வகித்தார்) மற்றபடி யார் கேட்டாலும் இல்லை என்று சொல்லி விடுவார். அந்த உபரியாக வரக்கூடிய 3,500 ரூபாய்க்கு கணக்கு விவரம் வராது. அதற்கு வருமான வரி வேறு கட்ட வேண்டியதாக இருக்கும். விற்பனை வரியும் கட்ட வேண்டியதாக இருக்கும். இது மாதிரி பல சந்தர்ப்பங்களில் எடுத்துக் கொண்டால் பல ஆயிரக்கணக்கான ரூபாய்கள் கணக்குக்கே வராது. இருக்கும் அதிகாரத்தை சரியான முறையில் பிரயோகித்து பெரிய பெரிய வியாபாரிகளிடமிருந்து வரியை வசூலிக்க வேண்டும். இப்படி இன்னும் 2, 3 மடங்கு அதிகப்படியாக விற்பனை வரியை வசூலிக்கக் கூடிய சந்தர்ப்பம் இருந்தும், சிறு வியாபாரிகளிடம் கொடுமையான முறையில் வரியை வசூலிக்கக்கூடாது என்பது தான் என்னுடைய வாதம். சாதாரணமாக 10,000 ரூபாய்க்கு வியாபாரம் செய்யக்கூடிய சிறிய வியாபாரிகளும் பல விதமான கணக்குகளை வைத்துக்கொள்ள வேண்டிய சங்கடமான நிலைமை இருக்கிறது. இது குறித்து வியாபாரிகள் அனை வரும் ஹர்த்தால் நடத்தி கண்டித்தார்கள் என்பதை அமைச்சர் அவர்களின் ஞாபகத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நமது ராஜ்யம் பூராவும் வியாபாரிகள் இரண்டு வருஷத்திற்கு முன்பே " டாக்ஸபிள் லிமிட்டை " 25,000 ரூபாய்க்கு உயர்த்த வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார்கள். ஆகவே இதை 25,000 ரூபாய்க்கு உயர்த்த வேண்டுமென்ற என்னுடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

(உதவி சபாநாயகர் தலைமை வகித்தார்.)

அடுத்தப்படியாக, உணவுப்பொருள்களைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். சிறு சிறு விவசாயிகளாக இருப்பவர்கள் தாங்கள் உற்பத்தி செய்த பொருள்களைத் தாங்களே சாப்பிடுவதற்கு வைத்துக்கொள்ள முடிவதில்லை. அவர்கள் விவசாயத்திற்காக கடன் வாங்குகிறார்கள். பிறகு உற்பத்தி செய்த உடனே அந்தப் பொருள்களை கடனைத் திருப்பிக் கொடுப்பதற்காக விற்றுவிடும் நிலைமையில்தான் இருக்கிறார்கள். மற்றபடி 6, 8 மாதங்களுக்கு தங்களுக்கு வேண்டிய பொருள்களை சந்தையில் தான் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, எல்லோரும் அரிசியை வாங்கித் தான் சாப்பிடுகிறார்கள். அவர்கள் கண்டிப்பாக விற்பனை வரி கொடுக்க வேண்டியிருக்கும். ஆகவே அவர்கள் சாப்பிடுவதற்காக வாங்கும் உணவுப் பொருள்களுக்கு வரி கொடுக்கக்கூடாது. " ரைஸ் அண்டு வீட் ப்ராடக்ட்ஸ் " இவைகளுக்கு வேண்டுமானால் 30,000 ரூபாய்க்கு மேல் ½ சத விதம் வரி போட்டுக் கொள்ளலாம் என்பது தான் என்னுடைய திருத்தம். இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

[12th February 1959

*SRI A. GOVINDASAMY: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, என்னுடைய திருத்தத்தை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று நினைக்கிறேன், காரணம் நான் இந்த "டாக்ஸபிள் லிமிட்டை" 20,000 ரூபாய்க்குத்தான் உயர்த்த வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். இது அதிகமான தொகை இல்லை. 10,000 ரூபாய் என்று இருந்தால் அது சாதாரண மத்தியதர வியாபாரிகளைப் பாதிக்கும். சில சமயங்களிலே விற்பனை வரி உத்தியோகஸ்தர்களுக்கு சிறு வியாபாரிகளைப் பிடிக்காவிட்டால் உத்தேசமான தொகை குறிப்பிடுகிற நேரத்திலே அதிகமாக வியாபாரம் நடந்ததாக குறிப்பிடுவார்கள். அம்மாதிரி பார்க்கும்பொழுது வருஷத்திற்கு 10,000 ரூபாய் வியாபாரம் நடக்கிறது என்று குறிப்பிட்டால் சிறு வியாபாரிகள் சங்கடப்படுவார்கள். ஆகையால்தான் இந்த லிமிட்டை 20,000 ரூபாய்க்கு உயர்த்தவேண்டுமென்று நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். இந்த சாதாரண திருத்தத்தை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று நினைக்கிறேன்.

என்னுடைய 24–வது திருத்தத்தில் 2 சதவிகித வரியை ஒரு சதவிகிதமாக மாற்றவேண்டுமென்று கேட்டிருக்கிறேன். அதுவும் அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு திருத்தம்தான்.

கடைசியாக என்னுடைய 25–வது திருத்தத்தில் உணவுப் பொருள்களின் மீது விதித்திருக்கக்கூடிய வரியை அறவே ரத்து செய்யவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறேன். கிராமத்திலுள்ள விவசாயிகள் அவர்களே உற்பத்தி செய்து அவர்களே சாப்பிடுவதாக அமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் கூறியதாக ஸ்ரீ என். கே. பழனிசாமி அவர்கள் பேசியதிலிருந்து தெரியவருகிறது. 'ப்ரொவிஸோ' ஒன்றில் குறிப்பிடப்பட்டிருக்கிற சோளம், கம்பு, ராகி, தினை, வரகு, சாமை இவைகளெல்லாம் கிராமத்திலேயே உற்பத்தியாகி அப்படியே கிராமத்திலேயே செலவாகிற நிலைமையில் இல்லை. அவைகள் நகர்ப்புரங்களுக்கு வியாபாரத்திற்கு வருகின்ற நிலைமைதான் இருக்கிறது. ஏழை எளியவர்கள் கிராமத்தில் மட்டுமல்ல, நகர்புரங்களிலும் இருக்கிறார்கள். ஆகையால் ஏழை எளியவர்கள் உபயோகப்படுத்துகின்ற உணவு தானியங்களுக்கு வரியை ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். நேற்று காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் நெல்லுக்கு வரி போடவேண்டியதில்லை, அரிசிக்கு மட்டும் வரி போட்டால் போதும் என்று குறிப்பிட்டதாகத் தெரிகிறது. அதுவும் உணவு தானியமாக இருப்பதின் காரணத்தினாலே அதற்கும் வரியை அறவே நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே உணவு விஷயத்தில் நிச்சயமாக விதிவிலக்கு அளிக்கலாம். இதைப்பற்றி மீண்டும் ஆலோசித்துப்பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் பாலுக்கு வரி போடக்கூடாது என்று சொன்னேன். இதைப்பற்றி கேள்வி நேரத்தில் சொன்னபோது வரி போட்டாலும் பாலாறும், தேனாறும் ஓடும் என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். இப்போது பாலாற்றில் கூட தண்ணீர் ஓடவில்லை என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதோடு அழுகிப்போகின்ற பொருட்களாக இருக்கின்ற முட்டை, வெற்றிலை, பூ இவற்றிற்கும் விதிவிலக்கு அளித்தால்தான் இந்த அரசாங்கம் ஏழைகளுக்கு நன்மை செய்ததாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இம்மாதிரிப்பட்ட வியாபாரத்தில் 30 ஆயிரத்திற்கு மேற்பட்டு வியாபாரம் நடந்துவிடாது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்த வியாபாரம் எவ்வளவு நடந்தாலும் உணவுப்பொருள் என்ற அடிப்படையில் உணவுப்பொருட்களுக்கும் முட்டை, வெற்றிலை, பூ போன்ற பொருட்களுக்கும் விதிவிலக்கு அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் நன்ருக ஆலோசித்துப் ப்ரவிஸோ 1-யை நீக்கிவிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

SRI S. M. ANNAMALAI: சட்டமன்ற உதவித் தலைவர் அவர்களே, நான் கொடுத்திருக்கக்கூடிய 22–வது திருத்தமானது, 20 ஆயிரம் ரூபாய்க்கு மேற்பட்டு வியாபாரம் செய்கின்றவர்களுக்கு மாத்திரம் வரி போட வேண்டும் என்று கேட்டுக்கொள்வதுதான். இதைக்குறித்து நான் இதற்கு முன்னே



12th February, 1959] [Sri S. M. Annamalai]

குறிப்பிட்டிருக்கிறேன். சாதாரணமாக கிராமப்புறங்களில் இரண்டு மூட்டை நெல்லை வாங்கிக்கொண்டு போய் அதை அரிசியாக்கி பஜாரில் கொண்டு வந்து விற்றால்தான் ஒரு ரூபாய் அல்லது இரண்டு ரூபாய் என்று அனுடைய வயிற்றுப்பிழைப்புக்கு கிடைக்கும். அப்படிப்பட்டவர்கள் கூட இப்போது நிர்ணயித்திருக்கும் 10 ஆயிரம் ரூபாய்க்கு மேற்பட்டு வியாபாரம் செய்கின்றவர்கள் வரி கொடுக்கவேண்டும் என்று சொல்லக்கூடிய அடிப்படையில், வரி கொடுக்கவேண்டிய நிலைமையில் வர வேண்டியிருக்கிறது. ஆகவே இதனால், கிராமப்புறத்திலுள்ள மக்கள் இதனால் பாதிக்கக்கூடாது என்ற அடிப்படையின் பேரில் இப்போது 10 ஆயிரம் என்று நிர்ணயித்திருப்பதை 20 ஆயிரம் என்று உயர்த்த வேண்டும் என்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். இதை ஏற்றுக்கொள்ளவேண்டும், என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக நான் கொடுத்திருக்கக்கூடிய 25–வது திருத்தம் உணவுப் பொருள்களுக்கு வரிபோட்டிருப்பதை எடுக்கவேண்டுமென்பது. நேற்றைய தினம் அமைச்சர் அவர்கள் பேசுகின்றபொழுது 100–க்கு 20 பேர்கள்தான் இந்த வரியினால் பாதிக்கப்படுவார்கள் என்றும், அதிலும் கிராமப்புறங்களில் இருக்கின்ற மக்கள் இதனால் பாதிக்கப்படமாட்டார்கள் என்றும் கிராமப்புற மக்கள் தங்களுக்கு வேண்டிய உணவைக் கூலியாகவே பெற்றுக்கொள்கிறார்கள் என்றும் நகரப்புறங்களில் இருக்கும் மக்கள்தான் இந்த வரியைக் கொடுக்கவேண்டியிருக்கும் என்றும் குறிப்பிட்டார்கள். அதன்படி பார்த்தாலும் கூட 100–க்கு 20 பேர்கள் வரி கொடுக்க வேண்டியிருப்பதில் 100–க்கு இரண்டு பேர்கள்தான் பணக்காரர்களாக இருக்கிறார்கள். பாக்கியுள்ள 18 பேர்களும் பெரிய உத்தியோகஸ்தர்கள் அல்ல, மத்தியதர வர்க்கத்தினர்கள்தான். ஆகவே அவர்கள் மீது வரி போடுவது என்பது சரியாகாது. அதிலும் குறிப்பாக அமைச்சர் அவர்கள் பேசுகின்ற பொழுது பாமர மக்களை இந்த வரி பாதிக்காது என்று குறிப்பிட்டார்கள். அதைப்பார்த்தால் இன்றைக்கு அரிசி வாங்குபவர்கள்தான் நகரத்தில் அதிகமாக இருக்கிறார்கள். ராகி, சோளம், கம்பு முதலிய உணவுப்பொருட்கள் வாங்கி உபயோகிக்கின்றவர்கள் அதிகமாக கிராமப் புறங்களில்தான் இருக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டேன். இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் சரியான பதில் சொல்லவில்லை. அதிகமாக கிராமப் புறங்களில் இருக்கின்ற மக்கள் ஒரு மாதத்தில் 20 நாட்கள் புஞ்சை தான்யங்களைத்தான் உபயோகித்து வருகிறார்கள். இதை யாரும் மறுக்க முடியாது. ஆகவே இப்பேர்ப்பட்ட தான்யங்களின் மீது வரி போட்டு வருவாயை அதிகப்படுத்த வேண்டும் என்கின்ற முறை நல்லது அல்ல. ஆகவே, புஞ்சை தான்யங்களின் மீது போடப்பட்டிருக்கின்ற வரியையாகிலும் நீக்கவேண்டும் என்று அமைச்சர் அவர்களை தாழ்மையோடு, பணிவோடு, கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் தயவு கூர்ந்து கருணை கூர்ந்து, நல்ல முறையில் இதைப்பற்றி சிந்தித்துப்பார்த்து, தெளிவாக இதைப் பற்றி ஆலோசித்துப்பார்த்து, இதன்மேல் போடப்பட்டிருக்கும் வரிகளை நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு என் திருத்தங்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI K. RAMACHANDRAN: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான் கொடுத்திருக்கும் 22–வது திருத்தம், இப்போது நிர்ணயிக்கப்பட்டிருக்கும் 10 ஆயிரம் என்று இருப்பதை 20 ஆயிரம் ரூபாய் என்று மாற்றி, அதுவரைக்கும் விதிவிலக்கு அளிக்கவேண்டும் என்பதுதான். மற்ற அங்கத்தினர்கள் இதைப்பற்றி சொன்னார்கள். அவர்கள் சொல்லாமல் இருந்த ஒரு விஷயத்தைப்பற்றி மாத்திரம் நான் சொல்ல விரும்புகிறேன். நேற்றைய தினம் அமைச்சர் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் இந்த வரம்பை உயர்த்தினால் வியாபாரிகள் வியாபாரத்தைப் பிரித்து அதிகமான கடைகளை வைத்து வியாபாரம் செய்ய ஆரம்பித்துவிடுவார்கள் என்று சொன்னார்கள். அந்த வாதம் பொருத்தமற்றது என்பதைதான் நான் சொல்ல ஆசைப்படுகிறேன். இன்றைக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கும் 10 ஆயிரம் ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு வியாபாரம் நடத்துவது என்று சொன்னால், தினம் ஒன்றுக்கு 27 ரூபாய்க்கு வியாபாரம் நடக்க வேண்டும் 20 ஆயிரம் என்று நிர்ணயித்தால் 54 ரூபாய்க்கு தினசரி வியாபாரம் நடக்க வேண்டும். இவ்விதம் வியாபாரம் நடந்தால் தினசரி 3½ ரூபாயிலிருந்து

[Sri K. Ramachandran] [12th February 1959

4 ரூபாய் வரைக்கும் லாபம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கலாம். ரூபாய்க்கு ஒரு அணு லாபம் என்று வைத்துக்கொண்டாலும் கூட இதற்கு மேல் அவர்களுக்கு லாபம் கிடைக்காது. இந்த நிலைமையில் அவர்கள் கடைகளை இரண்டாகவோ அல்லது மூன்ருகவோ பிரித்து வைத்து வியாபாரத்தை நடத்துவார்கள் என்று சொன்னுல் அது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. ஆகவே வரியில்லாமல் வியாபாரம் நடத்துகின்ற வரம்பை 20 ஆயிரம் என்று உயர்த்துவதினுல் வியாபாரத்தை பிரித்து நடத்த ஆரம்பித்து விடுவார்கள் என்று சொல்லுவது சரியாகாது என்பதை சொல்லிக் கொள்கிறேன். ஆகவே சிறிய வியாபாரிகளை பாதிக்காத அளவில் இந்த வரம்பை 10 ஆயிரத்திலிருந்து 20 ஆயிரம் என்று உயர்த்த வேண்டும் என்று கொடுத்திருக்கக்கூடிய திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தப்படியாக உணவுப் பொருள்கள் மீது வரி கொடுக்கின்ற விஷயத்தில், இதனுல் 20 சதமானம் பேர்கள்தான் பாதிக்கப்படுகின்ருர்கள் என்று சொல்லப்பட்டது. அதோடு நகரப்புறங்களில் இருக்கின்றவர்கள்தான் இதனுல் பாதிக்கப்படுவார்கள் என்றும் சொல்லப்பட்டது. அவ்விதமே நகரப்புறங்களை எடுத்துக்கொண்டாலும் கூட இன்றைக்கு அதிகமாக நகரப்புறங்களில் இருப்பவர்கள் மத்தியதர வர்க்கத்தினர்தான். ஆகவே உணவுப் பொருள்களை அதிகமாக வாங்குகின்ற மத்தியதர வர்க்கத்தினர் மீது வரி போடாமல் இருப்பதுதான் கடமையாக இருக்கவேண்டும் என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அது சாத்தியமில்லை என்று கருதினுல், குழந்தைகளுக்கு அவசியப்படுகிற பால் போன்ற பொருள்களின் மீது போடப்பட்டிருக்கும் வரியையாவது எடுத்து விட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தப்படியாக அழுகிப் போகின்ற பொருட்களுக்கு நிர்ணயித்திருக்கும் தொகை 30 ஆயிரம் என்றிருப்பதை மாற்றி 50 ஆயிரம் என்று நிர்ணயிக்க வேண்டும் என்பதாகும். இதில் சில பொருள்கள்தான் ஒன்றிரண்டு நாட்கள் இருக்கக்கூடியவை. இதில் ஒரே நாளில் கெட்டுவிடக்கூடிய பல பொருள்களும் இருக்கின்றன. ஆகவே இதற்கு நிர்ணயித்திருக்கும் 30 ஆயிரம் ரூபாய் என்று இருப்பதை 50 ஆயிரம் வரம்பு என்று உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதற்காக கொடுத்திருக்கும் திருத்தங்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**SRI K. SATTANATHA KARAYALAR**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இதில் தீர்வையில்லாமல் வியாபாரம் செய்வது 10 ஆயிரம் ரூபாய் வரையிலும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதை அதிகமாக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய திருத்தம். இதில் நிர்ணயித்திருக்கும் 10 ஆயிரம் ரூபாய் என்பது மிக மிக குறைவு, இன்றைக்கு விலைவாசி முன்னுல் இருந்ததை விட மூன்று நான்கு மடங்கு உயர்ந்திருக்கிறது, என்கின்ற புள்ளிவிவரங்கள் நேற்று இங்கே சொல்லப்பட்டது. அப்படியிருக்க, இப்போதிருக்கும் விலைவாசியின் அடிப்படையில் பார்த்தால் 20 ஆயிரம் என்று நிர்ணயித்தால் அது நியாயமாக இருக்கும். இவ்விதம் இந்த வரம்பை உயர்த்துவதினுல் "ரேட் ஆப் டாக்ஸேஷன்"-க்கு எந்த விதமான பாதகமும் ஏற்பட்டு விடாது. இந்த வரியின் மூலம் சர்க்கார் சுமார் 11 கோடி ரூபாய் எதிர்பார்க்கின்ருர்கள். இப்போது இருக்கின்ற கணக்கின் பிரகாரம் 10 ஆயிரம் ரூபாயிலிருந்து 25 ஆயிரம் ரூபாய்வரை மொத்த வியாபாரம் உள்ளவரிடமிருந்து கிடைக்கும் வருமானம் 7·4 சதமானமும், 25 ஆயிரத்திலிருந்து 50 ஆயிரம் வரை 6·8 சதமானமும் 50 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்களிடமிருந்து 85·8 சதமானமும் தீர்வை கிடைக்கின்றது என்று தெரிகிறது. இந்த அடிப்படையில் பார்த்தால் இந்த திருத்தத்தின் மூலமாக 8 சதமானம்தான் வித்தியாசப்படும். இதனுல் பெரிய பாதகம் ஒன்றும் ஏற்பட்டு விடாது. அதோடு "கலக்ஷன் ஆப் டாக்ஸ்"-க்கு ஏற்படும் செலவும் ஓரளவு குறையும். இன்று இருக்கும் நிலைமையில் கிராமங்களில்கூட சிறு சிறு வியாபாரிகளிடம் வரியை வசூலிப்பதற்காக உத்தியோகஸ்தர்களை நியமிக்க வேண்டியிருக்கும். இதனுல் செலவு அதிகமாகும். ஆகவே இந்தத் திருத்தத்தை அங்கீகரித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



12th February 1959] [Sri K. Sattanatha Karayalar]

(Mr. Speaker in the Chair.)

அடுத்தப்படியாக, அழுகிப் போகக்கூடிய பொருள்களுக்கும், உணவுப் பொருள்களுக்கும் விதி விலக்கு அளிக்கவேண்டுமென்று அமைச்சர் அவர்களை மன்றாடி வேண்டிக்கொள்கிறேன். இதிலே வரக்கூடிய வருமானம் 50 லட்சத்துக்கும் குறைவாகத்தான் இருக்கும். உணவுப் பொருள்களின் விலைகள் ஏறுமுகமாக இருக்கக்கூடிய கால கட்டத்தில், உணவுப் பொருள்களுக்கு விதி விலக்குக் கொடுத்து வரி வஜா செய்து கொடுப்பது மக்களுக்கு மிகவும் நன்மை பயப்பதாக இருக்கும். ஆகையால் உணவுப் பொருள்களுக்கு வரி போடாது, அதையும் சர்க்கார் அங்கீகரிக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன். 11-00 a.m.

***SRI N. MARUDACHALAM**: கனம் சபாநாயகர் அவர்களே, என்னுடைய திருத்தமானது 10,000 ரூபாய்க்கு மேல் இருந்தால் வரி போட வேண்டுமென்று இருப்பதை 30,000 ரூபாய்க்கு மேல் இருந்தால் வரி போட வேண்டுமென்று மாற்றுவதற்காகத்தான். 30,000 ரூபாய் என்று இருந்தால்கூட கடை வாடகை, போக்குவரத்துச் செலவு, இதற்கே வரக்கூடிய லாபம் போதுமானதாக இருக்காது. ஆகையால் 30,000 ரூபாயே குறைவு, இருந்தாலும், இப்போது உள்ளதை 30,000-ஆக உயர்த்த வேண்டுமென்று கொடுத்திருக்கக்கூடிய திருத்தத்தை ஒப்புக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**SRI M. JAGANNATHAN**: Mr. Speaker, Sir, I rise to speak on the amendments which I have given notice of with a certain amount of diffidence, because I feel that the Hon. Minister replying to the general discussion on this General Sales-Tax yesterday gave an incling of his mind which went to show that he had made up his mind already about some of these matters. However, Sir, for what they are worth, I would like to say one or two words about my amendments and try to press them hard so that the Government might realise the sanctity or correctness about them and change their mind and make an attempt to accept them.

Sir, in the first place, my amendment says that the exemption limit of Rs. 10,000 must be raised to Rs. 20,000. Several hon. Members have spoken emphasising the fact that this exemption level must be raised to Rs. 20,000, or even Rs. 25,000 and they have given very valid, valuable and convincing reasons, saying that this will affect the vast majority of the businessmen, traders and dealers who will be constrained to keep accounts and also maintain one or two clerks in order to see that their accounts are properly maintained for which purpose they will have to pay them handsomely as otherwise the clerks might desert these businessmen and traders, or they might try to keep false accounts and useless accounts which might land these people into trouble. Moreover, the majority of these businessmen, traders and dealers being half-educated or illiterate persons in our State, they may not be in a position to keep correct accounts and thus this will work a great hardship on these poor people. Therefore, if this exemption limit is raised to Rs. 20 or Rs. 25,000, a considerable number of traders, etc., would be excluded and businessmen who have got very big turn-over would alone be affected by this legislation and that is why I request the Hon. Minister to accept this amendment and increase the exemption limit from Rs 10,000 to Rs. 20,000.

மற்ற திருத்தங்களைப்பற்றி ஏனைய அங்கத்தினர்கள் பேசினார்கள். கனம் அமைச்சர் அவர்கள் பேசும்போது, நேற்றைய தினம் பல காரணங்களைக் குறிப்பிட்டார்கள். விதி விலக்கு கொடுக்க வேண்டியதன் உச்சவரம்பை அதிகப்படுத்த முடியாது என்பதற்கும், இரண்டு சத விகிதம் தான் வசூலிக்கப்படவேண்டும் என்பதற்கும் காரணங்களைக் குறிப்பிட்டார்கள். ஆனால், பெருவாரியான அங்கத்தினர்கள் நேற்றைய தினமும், இரண்டு நாள் விவாதத்திலும் இன்றையதினமும்கூட வற்புறுத்தி வருகிறார்கள் என்று சொன்னால், அதிலே ஒரு சிறிய தகவலை அரசாங்கம் கொடுத்தால், எல்லோருக்கும் ஒரு நியதி ஏற்பட முடியும். இந்த விதத்திலே சொல்லுவதற்குக் காரணம், டாக்டர் லோகநாதன் அவர்களுடைய ரிப்போர்ட்டிலே இதைப்பற்றி விவரமாக எடுத்துச் சொல்கிறார், ஒரு சத விகிதம் போட்டால் போதும் என்று. ஆனால், ஒரு சத விகிதம் போட்டால் எந்த அளவு நமக்கு வருமானம் குறைந்துவிடும் என்ற முறையிலே கனம் மந்திரி அவர்கள் புள்ளி விவரம் கொடுத்தால் கண்டிப்பாக நாங்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்போம். அங்கத்தினர்களுக்கு இருக்கும் சந்தேகமும் நிவர்த்தியாகிவிடும்.

ரூபாய் 25 ஆயிரம் வரையில் விதி விலக்கு வேண்டும் என்ற முறையில் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதைப்பற்றி டாக்டர் லோகநாதன் ரிப்போர்ட்டிலேதான் வாதம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தக் கருத்துக்களை ஏற்றுக்கொண்டால், எந்த அளவுக்கு அரசாங்கத்தினுடைய வருவாய் குறையும் என்பதைத் தெரிவிக்கவேண்டும். அங்கத்தினர்களுடைய நோக்கம்—அரசாங்கத்திற்கு வரவேண்டிய வருமானத்தை எந்த அளவிலேயும் குறைக்க வேண்டும் என்பது அல்ல. அந்தக் காரணத்திலே பார்க்கும்போது, எந்த அளவுக்கு நாம் பாதிக்கப்படுவோம் என்ற குறிப்பீட்டை அமைச்சர் அவர்கள் கொடுத்தால் உள்ளபடியே இவ்வளவு வாதத்திற்கு இடம் இருக்காது என்று கூறிக்கொண்டு 34-வது திருத்தத்தை கனம் மந்திரி அவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**Sri M. KALYANASUNDARAM** : கனம் சபாநாயகர் அவர்களே, மூன்றாவது பிரிவு, இந்த மசோதாவுக்கே ரொம்ப முக்கியமானது. இதில் விதி விலக்கு எந்த அளவுக்குக் கொடுக்கப்படவேண்டும், வரி பல கட்ட விகிதாசாரத்தில் எந்த அளவு இருக்க வேண்டும் என்பது, உணவுப் பொருள்களுக்கு விதி விலக்கு கொடுக்க வேண்டுமா, வேண்டாமா என்பது எல்லாமே இந்த பிரிவுக்குள் வந்து விடுகின்றன. ஆதலால் இது முக்கியம் என்று குறிப்பிட்டேன்.

முதலில் சர்க்கார் விகிதாசாரம் வரையிலே என்ன கொள்கையைக் கடைப் பிடிக்கிறார்கள் என்றால் டாக்டர் லோகநாதன் சிபார்சு அடிப்படையிலே இல்லை. எங்கே லோகநாதன் சிபாரிசு இவர்களுக்கு சாதகமாக இருக்கிறதோ, அதையெல்லாம் எடுத்துக் கொள்ளுகிறார்கள். விதி விலக்கு எந்த அளவுக்குக் கொடுக்கலாம் என்பதிலே பத்தாயிரம் ரூபாய் வரைக்கும் கொடுக்கலாம், அதற்கு மேல் மொத்தமாக வசூலிக்கக்கூடிய சலுகை 25 ஆயிரம் வரையில் கொடுக்கலாம் என்று எழுதியிருப்பதை அப்படியே எடுத்துக்கொண்டுவிட்டார்கள்.

பலகட்ட விற்பனை வரி விஷயத்திலே இரண்டு சத விகிதம் என்று சர்க்கார் கொண்டுவந்திருக்கிறார்கள். நேற்று பதிலளிக்கும் சந்தர்ப்பத்தில்கூட, இதற்குள்ள காரணத்தைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொல்லவே இல்லை. ஏற்கனவே முடிவு செய்யப்பட்ட ஒரு கொள்கை என்ற காரணத்தாலேயோ என்னவோ தெரியவில்லை. ஏன் இரண்டு சத விகிதம் விதிக்க வேண்டியிருக்கிறது என்பது பற்றி அவர்கள் பதில் கூறவில்லை. இப்போதாவது அவர் கூறவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

காரணம், டாக்டர் லோகநாதன் வெகு ஆணித்தரமாகச் சொல்லியிருக்கிறார்: 1 சதவிகிதத்திற்கு மேலே போடுவது நியாயம் இல்லை என்று சொல்கிறார் :



'As for the multi-point commodity, for reasons cited earlier, I am of the opinion that the prevailing rate of 2 per cent is too high'

இரண்டு சத விகிதமாக வரி இருப்பது மிக அதிகம் என்று கூறியிருக்கிறார். அதோடு அவர் சொல்லுவதாவது :

'I recommend that the general rate be reduced to 1 per cent. In making this recommendation, I have taken full account of the revenue implications, and I am convinced that a decision by the Government that multi-point levy is to be kept always at a moderate level will go a long way in creating conditions for an effective and successful sales tax system'.

ஒரு நிபுணரை நியமிக்கின்றோம். அவருக்கு ரொம்ப அனுபவம் உண்டு. அவருக்கு விஷயங்கள் அதிகம் தெரியும் என்று நியமிக்கின்றோம். அவர் இவ்வளவு திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறார். இதனாலே வருமானம் பாதிக்கப்படாது என்ற அபிப்பிராயத்தைக் கொடுத்திருக்கிறார். அதோடு விற்பனை வரி சுமுகமாக அமுலில் இருக்க வேண்டுமானால், வர்த்தகர்கள், பொதுமக்கள் இவர்களுடைய ஒத்துழைப்பைப் பெற்று வசூலிக்கவேண்டுமானால் அது எவ்வளவு குறைவாக இருக்க வேண்டுமோ அவ்வளவு குறைவாக இருக்கவேண்டுமென்பதற்கான ஆதாரங்களை எடுத்துக் காட்டி, ஒரு சத விகிதம்தான் விதிக்க வேண்டும் என்று அவர் தெளிவாக யோசனை கொடுத்திருக்கும் சமயத்தில் இதை ஏன் சர்க்கார் நிராகரிக்கிறார்கள் என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஒரு வருஷம் ஒரு சத விகிதம் என்ற விகிதத்தில் வைத்துப் பார்க்க வேண்டும், அதன் மூலம், வரி விகிதம் குறைவாக இருக்கும் காரணத்தால், மறைக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லாமல் எல்லா வியாபாரிகளும் தாங்கள் செய்யும் வியாபாரம் பூராவுக்கும் கணக்குக் கொடுக்க சந்தர்ப்பம் ஏற்படும். அதன் பிறகு வருவாய் இல்லை என்று கருதினால் வரி விகிதத்தை உயர்த்தினால்கூட ஓரளவு புரிந்துகொள்ள முடியும். இரண்டு சத விகிதம் என்று கொண்டுவந்திருப்பது நியாயம் இல்லாதது என்பது என்னுடைய அபிப்பிராயம். ஒரு சத விகிதமாகக் குறைக்க வேண்டும் என்பதற்காக நான் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறேன்.

விதி விலக்குக் கொடுப்பதை பத்தாயிரம் என்பதை 25 ஆயிரமாக உயர்த்தவேண்டுமென்று நான் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறேன்.

மூன்றாவதாக நான் கொடுத்திருக்கும் திருத்தத்திலே உணவுப் பொருள்களுக்கும் காய்கறி, புஷ்பம், வாழையிலை போன்ற பொருள்களுக்கும் விதி விலக்கு கொடுக்க வேண்டும் என்பது. காய் கறிகள், பழம், புஷ்பம் இவையெல்லாம் ஏற்கனவே விதி விலக்கு கொடுக்கப்பட்ட பொருள்கள். அவைகளை மீண்டும் வரி விதிப்புக்குள் கொண்டு வருகிறார்கள். அதற்குரிய காரணம் என்ன? சர்க்காருக்கு வருமானம் வேண்டுமென்ற காரணத்தைத் தவிர வேறு எந்த வித காரணமும் இருக்க முடியாது. புஷ்பம், காய் கறி, இலை போன்ற பொருள்களுக்குக் கண்டிப்பாக விதி விலக்கு கொடுக்க வேண்டும். கொடுக்க முடியாவிட்டால், 50 ஆயிரம் ரூபாய்க்கு மேல் வரி விதிப்பது என்று உயர்த்தவேண்டுமென்பதற்கு இரண்டு திருத்தங்களைக் கொடுத்திருக்கிறேன். அவைகளை ஆலோசனை செய்ய வேண்டும்.

உணவுப் பொருள்களிலே கடலை, வறுகடலை இவையெல்லாம் சேர்க்கப்படவில்லை. அவற்றை உணவுப் பொருள்களிலே சேர்க்கவேண்டும்; பருப்பு வகையிலே சேர்த்து அதிகமாக வரி விதிக்கிறார்கள். அவற்றை உணவுப் பொருளிலே கொண்டுவரவேண்டுமென்று நான் யோசனை தெரிவிக்கிறேன்.

[Sri M. Kalyanasundaram] [12th February 1959

உணவுப் பொருளுக்கு என் ஒரு சத விகிதம் வரி விதித்திருக்கிறார்கள் என்று கேட்டதற்குச் சமாதானம் கூறும் சமயத்தில், "உணவுப் பொருளுக்கு வரி செலுத்தக் கூடியவர்கள் பெரும்பாலும் நகரத்தில் இருக்கக் கூடியவர்கள் தான்; அதுவும் மிகக் குறைவாகச் செலுத்துகிறார்கள்; ஒரு படிக்கு ஒரு நயா பைசா கூட இருக்காது" என்று அமைச்சர் பதில் சொல்கிறார். கிராமத்திலே இருப்பவர்கள் கொடுக்கப் போவதில்லை என்று அவர் சொல்லும்போது, கிராமங்களின் நிலைமை அவருக்கு அதிகமாகத் தெரியவில்லையோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது. புஞ்சை தானியம் உபயோகப்படுத்தக்கூடியவர்கள்தான் கிராமங்களில் அதிகம். தங்களுடைய நிலத்திலே உற்பத்தியாகும் தானியத்தைக் கொண்டு ஜீவிக்கக் கூடியவர்கள், கூலியாகக் கிடைக்கும் தானியத்தைக் கொண்டு ஜீவிக்கக் கூடியவர்கள் மிகச் சொற்பம்—ஜனத்தொகையிலே. கிராமத்திலேயிருந்து நகரத்திலே இருக்கும் மண்டிக்குப் போய், திரும்ப கிராமத்திற்குப் போய் விற்கப்படுகிறதேயல்லாமல், கிராமத்திலே விளைவது கிராமத்திலே நேரடியாக உபயோகப்படுவதில்லை. கிராமத்திலே விளைவதைச் சந்தையிலே கொண்டு போய், பிறகு அங்கிருந்து மண்டிக்குப் போய், பிறகு திரும்பவும் சந்தையிலேயே கிராமத்தவர்கள் தானியத்தை வாங்குகிறார்கள் என்பது தான் நடந்துகொண்டிருப்பது. புஞ்சைப் பிரதேசத்தின் நிலைமையை சரியாக அறிந்துகொள்ளாமல், டாக்டர் லோகநாதன் அவர்கள் கூட அந்த விஷயத்தில் தவறு செய்திருக்கிறார். அதே அபிப்பிராயத்தையே சர்க்காரும் ஏற்றுக்கொண்டு, புஞ்சை தானியத்தை கிராமத்திலே உள்ளவர்கள் வாங்குவது கிடையாது என்று சொல்வது நியாயம் அல்ல. புஞ்சை தானிய உணவை நம்பியிருக்கும் மக்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்களை இது மிகவும் பாதிக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

உணவுப் பொருள்களுக்கு கட்டாயம் விதி விலக்கு கொடுக்கவேண்டுமென்பதையும் ஆலோசனை செய்ய வேண்டுமென்பதற்காகத்தான் நான் இந்தத் திருத்தங்களை கொடுத்திருக்கிறேன். இவைகளை சர்க்கார் ஏற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. இந்த விவரங்களை சர்க்கார் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் இந்த திருத்தங்களை நான் கொடுத்திருக்கிறேன்.

* Sri V. K. RAMASWAMY MUDALIYAR : Mr. Speaker, Sir, I wish to say a few words on clause 3 and amendment Nos. 27 and 21. As regards amendment 21, I have spoken about it yesterday, and I reiterate it here to-day. The slab rate should be increased to Rs. 25,000. I am sure there cannot be much difficulty. On the other hand, I am of the opinion that the Government would get more income. Further the poor people who are trading in small items like vegetables will not be affected. That is all my contention. The vegetable vendors, the fruit sellers, and other small traders dealing in articles of consumption will get much relief if the amendment is accepted. The Hon. Minister was telling us yesterday that the intrinsic value of the tax on the whole has not increased. Evidently he has forgotten the fact that transactions have increased in all sectors, and when transactions have increased in all sectors, the Government also are bound to get more money by way of this tax. This point should be taken into consideration by the Hon. Minister.

In regard to amendment No. 27, I wish to reiterate the fact that there should be complete exemption for foodgrains and other perishable articles like flowers, eggs, meat, fruits, plantain leaves, etc. I find on going through some books that this kind of exemption has been given in Uttar Pradesh, Bengal, Kerala, Mysore and



12th February 1959] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

other States. I am sure our Government also will follow suit and see that these perishables are given exemption. In regard to foodgrains, the Hon. Minister was telling us yesterday that 250 Madras measures of rice may not cost Rs. 100 or so. This is not a fact. Two hundred and fifty Madras measures, even if worked out at 14 annas per measure, will come to a large figure. He was also suggesting that after all it would come to one naya Paisa for one measure. When worked out at the multi-point system, it will come to 3 or 4 naye Paise. For 250 measures, this will be a large amount. This will really work hardship on the poor people. Therefore, I would, in all earnestness, request the Hon. Minister to take into consideration all these factors and see that exemption is given to these perishable articles and foodgrains. There should be some consideration shown by the Hon. Minister.

Dr. Lokanathan said that on foodgrains there should be only half a per cent. Now we are increasing it to 1 per cent. In regard to other items, Dr. Lokanathan has said 1 per cent. The Government have raised the rate to 2 per cent. This will really work hardship. Therefore I would request the Hon. Minister to consider all aspects and see that some relief is given to these poor people.

Mr. SPEAKER : The Hon. Minister will now reply.

The Hon. Sri R. VENKATARAMAN : கனம் சபாநாயகர் அவர்களே, கடந்த இரண்டு நாட்களாக நடந்த விவாதத்தில் . . .

Sri S. NAGARAJA MONIGAR : ஸார், நான் 33-வது திருத்தத்தை கொடுத்திருக்கிறேன். அதனால் நான் பேச வேண்டாமா என்று அறிய விரும்புகிறேன்.

Mr. SPEAKER : I have called the Hon. Minister.

Sri S. NAGARAJA MONIGAR : Sir, I have given notice of an amendment (No. 33).

Mr. SPEAKER : The hon. Member may have given notice. But the hon. Member has not stood up to indicate that he wants to speak. If the Hon. Minister has no objection, I will call Sri S. Nagaraja Monigar to speak.

திருத்தங்கள் கொடுத்தவர்கள் எல்லோரும் பேச வேண்டும் என்பது இல்லை. அப்படி எல்லோரும் பேச வேண்டும் என்று சட்டத்தில் கிடையாது. இருந்தாலும் உங்களை பேசுவதற்கு அனுமதிக்கிறேன், கனம் மந்திரி அவர்களுக்கு ஆட்சேபணை இல்லாமல் இருந்தால். ஏனென்றால் அவரைப் பேசுவதற்கு நான் அழைத்துவிட்டேன். கனம் அங்கத்தினர் எல்லோருக்கும் ஒன்று தாழ்மையுடன் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். திருத்தங்கள் கொடுத்தவர்கள் பேச வேண்டுமென்று விரும்பினால் அவர்கள் உடனுக்குடன் எழுந்து நின்று பேசுவதற்கு அனுமதி கேட்கவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

Sri S. NAGARAJA MONIGAR : நான் எப்பொழுதும் அப்படித்தான் எழுந்து நிற்பது உண்டு.

Mr. SPEAKAR : உங்களைப்பற்றி மட்டும் நான் குறிப்பிடவில்லை. பொதுவாக எல்லா அங்கத்தினர்களுக்கும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இருந்த போதிலும் கனம் அங்கத்தினர் நாகராஜ மணிகார் அவர்களைப் பேசுவதற்கு அனுமதிக்கிறேன்.

[12th February 1959

SRI S. NAGARAJA MONIGAR : கனம் சபாநாயகர் அவர்களே இப்பொழுது எனக்குப் பேசுவதற்கு சந்தர்ப்பம் கொடுத்ததற்காக முதலில் என்னுடைய வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்தச் சட்டத்தின் கீழ் மூன்ருவது பிரிவின் விதி விலக்குகளில் ஒன்ருக எனது 33-ஆவது திருத்தத்தை நான் பிரேரேபிக்கிறேன். அதாவது கோவாப்பரேட்டிவ் சொசைட்டிகளால் விற்பனை செய்யப்படும் பால் விற்பனைக்கு . . .

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I rise on a point of order. A decision has already been taken in regard to exemption to co-operative societies. So this amendment is not in order.

MR. SPEAKER : இரண்டாவது பிரிவு பிரகாரம் ஏற்கனவே இந்த ஹௌஸ் ஒப்புக்கொண்டு விட்டபடியால் அதைப்பற்றி விவாதம் செய்வது அனுவசியம் என்று அவர் சொல்லுகிருர்.

SRI A. GOVINDASAMY : இப்பொழுது ஸ்பெசிபிக்காக ஒரு திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனுல் அது சரி என்றுதான் தோன்றுகிறது.

SRI M. KALYANASUNDARAM : The point of order raised by the Hon. Minister may not apply to this amendment. That amendment sought to exclude the entire co-operative society from the purview of the tax. But this amendment deals with the sale of milk and milk products by co-operative societies. This amendment is different from the previous amendment.

MR. SPEAKER : When all products are rejected, does not milk come under that rejection? Normally when the House rejects all products, milk also is included. But, however, if the House will permit . . .

SRI S. NAGARAJA MONIGAR : After hearing me, you may decide the question, Sir.

MR. SPEAKER : Sri S. Nagaraja Monigar may speak.

* SRI S. NAGARAJA MONIGAR : கனம் சபாநாயகர் அவர்களே, உண்மையிலேயே இம்மாதிரியான ஒரு திருத்தம் கொண்டுவர நேர்ந்ததைப்பற்றி நான் சிந்தனை செய்கிறேன். இம்மாதிரியான ஒரு திருத்தம் கொண்டு வராமல் இருக்கக்கூடிய ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கலாகாதா என்றுகூட சிந்திக்கலானேன். பாலினுடைய முக்கியத்துவத்தைப்பற்றி இந்த சபையில் பல சமயங்களில் பல சந்தர்ப்பங்களில் பேசியிருக்கிறோம். பால் உணவு தானியங்களுடன் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறதல்லாமல் அழியும் பொருள்களுடன் சேர்க்கப்படாதது ஏன் என்பது எனக்கு விளங்கவில்லை. அழியும் பொருள்களுக்கு எல்லாம் ஒரு விலக்கு அளித்து அதன் மூலம் முப்பதாயிரம் ரூபாய் வரையில் விலக்கு அளித்திருக்கிருர்கள். அதில் பால் எப்படி வராது என்பதுதான் எனக்குத் தோன்றவில்லை. புஷ்பங்கள் ஒரு நாளில் கெட்டுவிடலாம். அதில்கூட மரு, மருக்கொழுந்து, தவனம் போன்றவைகள் பல நாட்கள் இருக்கக்கூடியவைகள். வாழையிலை போன்ற இன்னும் மற்ற பொருள்கள் பல நாட்கள் இருக்கக்கூடியவைகள். அவைகள் ஏழு எட்டு நாட்கள்கூட இருக்கும். ஆனல் பால் மட்டும் ஒரு நாள்தான் நிற்கும். பால் கறக்கும்போது கோமேயம் பட்டுவிட்டால் உடனே பால் கெட்டுப்போய்விடும். இல்லாவிட்டால் பாத்திரங்களை சரியானபடி கழுவாமல் இருந்தால் உடனே



12th February 1959] [Sri S. Nagaraja Monigar]

கெட்டுப்போய் விடும். அப்படிப்பட்ட நிலைமையில் பால் இருக்கிறது. பால் ஒரு உணவுப் பொருளாகவே கருதப்படுகிறது. ஏதோ சில பணக்காரர்கள் அதை உபயோகப்படுத்துவதால் அப்படி நினைக்கிருர்கள். கஞ்சிக்கு உப்பு இல்லை என்பாரும், பாலுக்குச் சர்க்கரை இல்லை என்பாரும் ஒன்ருகுமா என்பது போல் இதை பல பணக்காரர்கள் உபயோகப்படுத்துகிருர்கள் என்று கருதுவதுபோல் தோன்றுகிறது. உண்மையிலேயே பால் குழந்தைகளுக்கு வேண்டிய உணவுப் பொருளாகக் கருதப்படுகிறது. நோயாளிகளுக்கும் இது உணவுப் பொருளாகக் கருதப்படுகிறது. எவ்வளவோ பேர்களுக்கு இது அத்தியாவசியமான பொருளாக இருக்கிறது. பலருக்கு இது ஜீவாதார மருந்தாக இருக்கிறது. உயிர் போகக் கூடியவனுக்கு ஒரு சொட்டுப் பாலைக் கொடுத்தாவது அவனுடைய உயிரைப் பாதுகாக்கலாம் என்று கூட சொல்லப்படுகிறது :

" விக்கி இருமாமுன்
பாலுள் கண்ட வாய்படாமுன் "

என்று கூட பட்டினத்தடிகள் சொல்லியிருக்கிருர். மருந்துகளைப் போல் இதை சில சந்தர்ப்பங்களில் உபயோகப்படுத்துகிருர்கள். அப்படிப்பட்ட அத்தியாவசியமான பொருள்களில் இதுவும் ஒன்று. " பாலும் தேனும் " ஓடுகிறது என்று சொல்லும்போதுகூட பாலுக்குத்தான் முதல் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது மருந்துக்கு வேண்டிய பொருள். இதை சுகமாக சிலர் சாப்பிடுகிருர்கள் என்பதைப் பார்த்து இதை கொள்ளக் கூடாது என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

இரண்டாவதாக, கூட்டுறவு வியாபாரம் லாபத்துக்காகச் செய்யப்படுவது அல்ல. கூட்டுறவு இயக்கத்தைக் காப்பாற்ற " சேல்ஸ் டாக்ஸ் " சட்டத்தைத்தான் உபயோகிக்கவேண்டுமென்பது இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னதாக நினைக்கிறேன். கூட்டுறவு இயக்கத்திற்கு வரி விலக்குக் கொடுப்பது முக்கியமானது. கூட்டுறவு சங்கங்களின் முக்கிய பொறுப்பும் நோக்கமும் நேர்மையை வளர்ப்பதாகும். இந்த சந்தர்ப்பத்தில் வரி கடுமையாகப் போட்டு சர்க்கார்தான் வியாபாரிகளிடை தவருன செய்கைகளை அதிகரிக்கச் செய்கிருர்கள் என்று வியாபாரிகள் சில சமயங்களில் சொல்வதும் உண்மையோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது. கலப்படம் செய்பவர்களையும் கூட்டுறவு சங்கத்தையும் ஒன்ருகவே நினைத்து பணி ஆற்றுவது சரியல்ல. அதிலும் பால் விற்பனை செய்யும் கூட்டுறவுச் சங்கத்திற்கு விற்பனை வரி விலக்கு அளிப்பது மிகவும் முக்கியமானது. பல அந்நிய நாடுகளில் இருந்து நம்முடைய குழந்தைகளுக்காக பால் பவுடரை டின் டின்னுக அனுப்புகிருர்கள். பணமின்றி இனமாக அனுப்புகிருர்கள். பள்ளிகளுக்கும் மற்றும் பல இடங்களுக்கும் பணம் இல்லாமலே நாம் பால் கொடுத்து உதவும்போது, வரி போட்டு அதற்குப் பாதகம் ஏற்படும்படி செய்ய வேண்டாம் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். நேருஜி முதல் கொண்டு இந்த நாட்டின் செல்வம் குழந்தைகள்தான் என்று கொண்டாடுகிருர்கள். அந்தச் செல்வங்களுக்கு அத்தியாவசியமான பாலுக்கு வரி போட வேண்டாம் என்று வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன். 11-30 a.m.

* THE HON. SRI R. VENKATARAMAN : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த இரண்டு நாட்களாக நடந்து வரும் விவாதத்திலே முக்கியமாகச் சொல்லப்பட்டது மூன்ருவது ஷாத்திலே இருக்கக்கூடிய பிரச்னைதான். முதல் முதலிலே இந்த விற்பனை வரிச் சட்டம் கொண்டு வருகின்ற காலத்தில், இதனுல் வரிக் குறைவு ஏற்பட வேண்டுமென்று சொன்னதற்குச் சர்க்கார் இணங்கவில்லை. சட்டத்தை நல்ல முறையிலே திருத்தி அமைத்து, இப்பொழுது இருக்கும், சிக்கல்கள், பிரச்சனைகள், தொல்லைகள், தொந்தாவுகள் ஆகியவற்றை நீக்க வேண்டுமென்ற நோக்கத்துடன்தான் இதைக் கொண்டு வந்திருப்பதாகச் சொன்னேன். காரணம் என்னவென்றல் ஐந்தாண்டுத் திட்டத்தில் நிதி வசதி இந்த விதத்திலே குறையக்கூடாது. வரி குறையும்படியான எந்தக் காரியத்திலும் திட்டத்தின் நடுவிலே ஈடுபட முடியாது. ஆகவே சர்க்கார் இதை வரிக்குறைவு என்ற

[Sri R. Venkataraman] [12th February 1959

முறையில் தயாரிக்கவில்லை. இதில் இருக்கக் கூடிய சிக்கல்கள், தொல்லைகள், தொந்தரவுகளை நீக்குவதற்குத்தான் இப்பொழுது கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதை ரேஷனலைஸ் செய்ய முடியும் என்பதை பெருவாரியான வியாபாரிகள் ஏற்றுக்கொண்டார்கள். இது 20 வருஷங்களுக்கு முன்பு தயாரிக்கப்பட்ட சட்டம். இதற்குப் பல திருத்தங்கள் செய்துவிட்டோம். சட்டமே புரியவில்லை. சட்டத்தைத் திருத்த அவர்கள் யோசனை கூறினார்கள். இன்றைக்கு இருக்கக் கூடிய நிலைமையில், சர்க்கார் ஐந்தாண்டுத் திட்டத்தின் நடுவில் இருக்கக்கூடிய நிலைமையில், செலவுகள், இன்னும் அதிகரித்துக் கொண்டிருக்கக்கூடிய நிலைமையில், இப்பொழுது, பஞ்சப்படி 5 ரூபாயாக உயர்த்தி இருப்பதால் ஏற்படும் ஒரு கோடி 75 லட்சம் ரூபாய் அதிகச் செலவை நாம் ஏற்க வேண்டிய நிலைமையில் இருக்கும்போது வரிக் குறைவு செய்ய வேண்டுமென்று கேட்பது அவ்வளவு உசிதம் அல்லு என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். டாக்டர் லோகநாதன் அவர்கள் சிபார்சில் இரண்டே இரண்டைத்தான் நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. பல கட்ட விற்பனை வரியை ஒரு பர்சண்ட் ஆக ஆக்கவேண்டுமென்பதையும், உணவுக்கு ½ பர்சண்ட் குறைக்கவேண்டும் என்று சிபாரிசு செய்ததையும்தான் நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. சௌகரியமானதை மட்டும் ஏற்றுக்கொண்டோம் என்பதல்ல. பத்தாயிரம் ரூபாய் கம்பவுண்ட் செய்வதில் சர்க்காருக்குச் சாதகம் இல்லை. இப்பொழுது ஏற்றுக்கொண்டிருப்பதிலேயே சாதகம் உள்ளவைகளும் இருக்கின்றன. சாதகம் அல்லாதவையும் இருக்கின்றன. பத்தாயிரம் ரூபாய் முதல் 25,000 வரை கம்பவுண்ட் ரேட் கொடுக்கவேண்டியதில்லை. 30,000 வரை விதி விலக்கு கொடுக்கவேண்டுமென்று அவர் சொல்லவில்லை. காய்கறிகளுக்கும் மற்றப் பொருள்களுக்கும் வரி விதிக்க வேண்டுமென்பது அவருடைய அறிக்கை. இந்த அறிக்கையின் அடிப்படையில் எந்தெந்த முறையில் நன்றாகத் திருத்தி அமைத்தால் பாதிக்கப்படாது என்ற நோக்கத்துடன்தான் செய்யப்படுகிறது. நிதி நிலைமையின் காரணமாகவும், ஐந்தாண்டுத் திட்டத்தின் நடைமுறையை மாற்றியமைக்க முடியாத காரணத்தினாலும்தான் இந்த இரண்டு சதவிகிதத்தை ஒரு சதவிகிதமாகக் குறைக்க முடியாது என்று கூற விரும்புகிறேன். நேற்று பொது விவாதத்திற்குப் பதில் சொல்லும் போதும் கூறினேன். இந்த மசோதாவை இந்தச் சபையிலே பிரேரேபிக்கும்போதுகூடச் சொன்னேன். வரி விதிப்பைக் குறைக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் இந்தச் சட்டம் கொண்டு வந்ததாக நினைத்துக் கொண்டிருக்கக் கூடியவர்களுக்கு, "இது அந்த நோக்கத்துடன் கொண்டு வரப்படவில்லை என்பதை ஆதியிலிருந்தே சொல்லி வருகிறேன்" என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இந்த வரியைக் குறைத்தால் ஐந்தாண்டுத் திட்டத்தில் இருக்கும்படியான பல திட்டங்களை நிறுத்தி விடும்படியான நிலைமை ஏற்பட்டு விடும். நாம் இதைக் காட்டி "நாங்கள் இவ்வளவு ரூபாய் வசூலித்து இருக்கிறோம்" என்று சொல்லி மேற்கொண்டு மத்திய சர்க்காரில் இருந்து திட்டத்திற்காகப் பணம் வாங்கச் சௌகரியமாக இருக்கும். "விற்பனை வரியை அரை சதவிகிதமாகக் குறைப்பது நல்லதா அல்லது நான்கைந்து கம்யூனிடி ப்ராஜக்ட் வேலையை நிறுத்தி விடுவது நல்லதா? சிறு கைத்தொழில்களை ஆரம்பிப்பதையெல்லாம் நிறுத்தி விடுவது நல்லதா? ½ பர்சண்ட் வரியைக் குறைப்பது நல்லதா?" என்பதை ஆராய்ந்து பார்த்துத் தெரிந்து கொள்ளவேண்டும். ப்ளாக் மார்க்கெட் இருக்கிறது என்று பழனிசாமி கூறுகிறார்கள். வரியைக் குறைத்து விடுவதால் ப்ளாக் மார்க்கெட் இருக்காது என்று பழனிசாமி அவர்கள் வாதத்திற்காகச் சொல்லலாமே தவிர, நடைமுறையில் அது சரியாக இருக்காது. இரண்டு வரி விதிப்பு குறைவினால் மக்கள் நல்லவர்களாக, யோக்கியமானவர்களாகத் திருந்தி விடுவார்கள் என்று சொல்வது அனுபவத்தில் சரியாகக் காணப்படுவது இல்லை. "தியரி"ப்படி தத்துவார்த்தமாகச் சொல்லி இருக்கலாமே தவிர, நடைமுறையில் எந்தவிதமான மாற்றமும் ஏற்பட்டு விடாது. வரி கொடுக்காமல் ஏமாற்றிக் கொண்டிருப்பவர்கள் கட்டாயமாக எப்பொழுதும் அதைச் செய்து கொண்டுதான் இருப்பார்கள். குறைக்கவேண்டுமென்ற கொள்கை இதனால் அல்ல. வேறு பொதுவாக மக்களுக்குப் போடவில்லை என்ற பெயர் கிடைக்கவேண்டுமென்பதற்காகாகச் செய்ய வேண்டுமென்று சொன்னால் அது எங்களுக்குக்கூட சந்தோஷந்தான்,



12th February 1959] [Sri R. Venkataraman]

சர்க்கார்கூட "வரி விதிக்கவில்லை" என்று சொல்லி நல்ல பெயரை வாங்கிக் கொள்ள முடியும். இன்றைக்கு இருக்கக்கூடிய நிலையில் நம்முடைய "டெவலப்மெண்ட் ப்ரோகிராம்" கெட்டுவிடுமே என்ற ஒரே காரணத்தினால்தான் வரி விதிப்பு விகிதத்தைக் குறைக்க முடியவில்லை என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, பத்தாயிரம் ரூபாய் என்பதை இருபத்தி ஐயாயிரம் என்று உயர்த்த வேண்டுமென்று சொன்னார்கள். இதையும் நீங்கள் நன்றாகப் பரிசீலனை செய்து பார்க்கவேண்டும். இன்றைக்கு வியாபாரிகளுக்குத் தொல்லை இல்லாமல் செய்ய வேண்டுமென்பதற்காக நாம் பத்தாயிரம் ரூபாயில் இருந்து இருபத்தி ஐயாயிரம் ரூபாய் வரை கம்பவுண்டிங் ரேட்டைப் போட்டிருக்கிறோம். இதன்படி பதினையாயிரத்திற்குக் குறைவாக பத்தாயிரம் ரூபாய்க்கு மேல் வியாபாரம் செய்யக்கூடிய ஒருவன் வருஷத்திற்கு 120 ரூபாய்தான் வரி கட்டவேண்டும். பதினாலாயிரம் ரூபாய்க்கு ஒருவர் வியாபாரம் செய்வதாக வைத்துக்கொண்டால் இரண்டு பர்சண்ட் என்று போட்டால் 280 ரூபாய் வரி கட்டியாக வேண்டும். ஆனால் இப்போது அவர் கொடுப்பதானது 120 ரூபாய்தான். ஒரு பர்சண்டையும் விடக் குறைவு. பத்தாயிரத்திற்கு மாதம் 10 ரூபாய் என்ற விகிதத்தில் 120 ரூபாய் கட்டுகிறார்கள். கிட்டத்தட்ட முக்கால் பர்சண்டுக்கும் குறைவாக இருக்கிறது. ஆகவே 125 ரூபாய் வரையில்தான் ஒரு சிறு வியாபாரி வரி கட்ட வேண்டியிருக்கிறது. இன்னும் 25,000 ரூபாய் வியாபாரம் 11.40 a.m.
செய்யக்கூடியவர் இப்பொழுது கொடுக்கவேண்டிய தொகையைப் பார்த்தால் அது அரை சதவிகிதத்திற்குத்தான் வரும். பழம் காய்கறி இவற்றுக்குக்கூட இன்றையதினம் பெரிய வியாபாரிகள் சிறிய வியாபாரிகளோடு சேர்ந்து தப்பிக்கொள்ளப் பார்க்கிறார்கள். முப்பதாயிரம் ரூபாய்க்கு மேல் வியாபாரம் செய்யக்கூடிய ஒருவரால் ஏன் கணக்கு வைத்துக் கொள்ள முடியாது? முப்பதாயிரம் ரூபாய்க்குக் குறைவாக வியாபாரம் செய்யக்கூடியவர்கள் என்றால்—சிறு வியாபாரிகள்—அன்றாடம் வாங்கி விற்பனை செய்கிற கூடைக்காரர்கள்—அங்காடிக்காரிகள்—இவர்களுக்கு எல்லாம் கஷ்டம் ஏற்படக்கூடாது என்றுதான் அப்படிச் செய்தோம். ஆனால் அதற்கு மேல் வியாபாரம் செய்யக்கூடியவர்களுக்கு நாம் பரிந்து அனுதாபம் காட்டுவதன் காரணம்தான் தெரியவில்லை. 30 ஆயிரத்துக்கு மேல் வியாபாரம் செய்யக்கூடியவர்கள் என்றால் அவர்களால் கணக்கு வைத்துக்கொள்ள முடியும். கணக்கு வைத்துக் கொள்ளவும் வேண்டும். குமாஸ்தாக்கள் போட்டுக் கொள்ள அவர்களுக்கு முடியும். யாராவது ஓரிருவர்கள் இதனால் வேலை பெறட்டும். அதில்லாமல் சிறிய வியாபாரிகளை ஒட்டி பெரிய வியாபாரிகளும் தப்பிக்கொள்வதற்கு எடுக்கப்படுகிற முயற்சியை யாரும் ஆதரிக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

கம்பௌண்டிங் லிமிட்டை அதிகமாகச் செய்துகொண்டே போனாலும் வர்த்தகம் பிரிந்துவிடும். மாமன் மச்சான் பேரில் கடைகளைப் பிரித்துக் காட்டி வரிவிதிப்பிலிருந்து தப்பிவிடத்தான் முயற்சி எடுப்பார்கள். ஆகவே வரி விதிப்பின் எல்லையை உயர்த்திக் கொண்டே போவதும் சரியல்ல. லட்சம் ரூபாய்க்கு வியாபாரம் செய்யக்கூடியவர் 50, 50 ஆயிரத்துக்கு வியாபாரம் நடப்பது போல இரண்டு கடைகளாகப் பண்ணிவிடுவார்கள். இல்லாவிட்டால் அவர்கள் வரி கட்டுகிறார்கள் என்றால் யாருக்கு வரி கட்டுகிறார்கள்? சர்க்காருக்கு வரி கட்டுகிறார்கள். சர்க்கார் பணத்தை யாரும் வீட்டுக்குக் கொண்டு போகவில்லை. ராஜ்யத்தில் நாம் செய்கிற அபிவிருத்தித் திட்டங்களுக்கே அது செலவழிக்கப்படுகிறது. வரி குறைப்பது என்றால் எல்லா டெவலப்மெண்டுவொர்க்ஸூம்தான் பாதிக்கப்படும்.

டாக்டர் லோகநாதன் அவர்கள் கம்பௌண்டிங் லிமிட்டை 25 ஆயிரமாகச் செய்யவேண்டும் என்று சிபார்சு செய்திருந்தார்கள். அவர் மேற்கொண்டும் ஒன்று சொல்லியிருக்கிறார். அதாவது 25 ஆயிரத்திலிருந்து 50 ஆயிரம் வரையில் கம்பௌண்டிங் லிமிட்டை உயர்த்த முடியுமா என்பதைச் சர்க்கார் தங்களுடைய அனுபவத்தைப் பார்த்து முடிவு செய்யலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். நடைமுறையில் நமக்கு ஏற்[illegible]

[Sri R. Venkataraman] [12th February 1959

அனுபவத்தைக் கொண்டு கம்பௌண்டு ரேட்டை எந்த அளவுக்கு விதிக்கலாம் என்பதை சர்க்கார் பரிசீலனை செய்யும். இன்றைக்கு நாம் இந்தச் சட்டத்தில் மிகப் பெரிய மாறுதலைச் செய்து கொண்டிருக்கும்போது அதனால் நம்முடைய நிதி குறைவு ஏற்படுமானால் —அதனால் நமக்கு எவ்வளவு அதிகமான கஷ்டம் ஏற்படும் என்பதையும் நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். இதை உணராது வரியைக் குறைக்கவேண்டும் அல்லது இல்லாமல் செய்யவேண்டும் என்கிற அடிப்படையில் பால் முதலியவைகளைப் பற்றி பலர் பேசுகிறார்கள். இவை ஒவ்வொன்றையும் எடுத்து அலசி அலசிப் பார்த்துதான் பொறுக்கு கமிட்டியில் 25 அங்கத்தினர்கள் முடிவு செய்து இருக்கிறார்கள். வீட்டிலே மாட்டை வைத்துக்கொண்டு கறந்து வியாபாரம் செய்கிறவர்கள் இந்த வரி விதிப்பினால் பாதிக்கப்படபோவதில்லை. காரணம் 10 ஆயிரம் ரூபாய் வரையிலும் விலக்கு அளித்திருக்கிறோம். 10 ஆயிரம் ரூபாய்க்கு இப்படி யாரும் விற்பனை செய்ய முடியாது. சாதாரணமாக வீட்டிலே பால் கறந்து வாங்கி உபயோகிக்கிற எந்த மக்களும் இந்த வரியினால் பாதிக்கப்படப்போவதில்லை. இப்படி வாங்கி பாலை உபயோகிப்பவர்களின் எண்ணிக்கைதான் அதிகமும் கூட. ஆனால் இப்போது போட்டிருக்கிற வரியைக் கட்டப்போகிறவர்கள் இரண்டு விதம்தான். ஒன்று பால் சொஸைடிகள். இரண்டாவது கண்டிராக்டர்கள். கண்டிராக்டர்கள் டெண்டர் எடுத்து பால் சப்ளை செய்ய ஒப்புக்கொள்ளும்போதே சேல்ஸ் டாக்ஸையும் சேர்த்துத்தான் டெண்டர் எடுப்பார்கள். அதுபோல சொஸைடியிடத்தில் பாஸ்டரைஸ்டு மில்க் பாட்டிலில் போட்டு வீட்டில் கொண்டுவந்து டெலிவரி பண்ணவேண்டுமென்று விரும்புகிறவர்கள், a certain percentage of the people கொஞ்சம் இந்த வரியைத்தான் கட்டட்டுமே. இப்படி பால் வாங்கி உபயோகிப்பவர்களின் எண்ணிக்கை 10 பர்சன்ட்-க்கு மேல் இருக்காது. பாக்கி 90 பர்சன்ட் பேர்கள் சாதாரணமாக மாடுகள் வைத்துக்கொண்டோ, வீட்டில் கொண்டு வந்து கறந்து கொடுப்பவர்களிடத்திலோதான் வாங்குகிறார்கள். இவர்கள் இதனால் பாதிக்கப்படப்போவதில்லை. ஆகவே பால் குழந்தைகளின் உணவாயிற்றே, குழந்தைகள் நாட்டின் செல்வமல்லவா என்பதாகவெல்லாம் கோபுரங்களை அடிக்கிக்கொண்டே—அஸ்திவாரம் இல்லாமல் போவது சரியல்ல. பாலுக்கு எந்தவிதமான வரியையும் சாதாரணப் பிரஜை கொடுக்கப் போவதில்லை. (சம்இண்டராப்ஷன்) கனம் கோவிந்தசாமி அவர்களுக்கும், மற்றுமுள்ள இந்தச் சபை அங்கத்தினர்களுக்கும் நான் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். சொஸைடிக்காரர்கள் பால்காரர்களிடத்திலிருந்து பால் வாங்குகிறார்கள். இப்படி அநேக பால்காரர்களிடத்திலிருந்து பாலைச் சேகரிக்கும்போது—பால்காரர்களின் மீது இந்த விற்பனை வரி விதிக்கப்படுவது கிடையாது. மேலும் எந்த ஒரு பால்காரனும் 10 ஆயிரத்திற்கு மேல் பால் சப்ளை செய்ய முடியாது. பத்தாயிரத்துக்கு உட்பட்டே அவர்கள் வருவதால் அதற்கு விதிவிலக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த சொஸைடிக்காரர்கள் பாலை விற்பனை செய்யும்போது—சொஸைடி—பாஸ்டரைஸ்டு மில்க்—பாட்டிலில் வீட்டில் கொண்டு வந்து தரவேண்டும் என்று விரும்புகிறவர்கள்தான் இந்த வரியைக் கட்டப் போகிறார்கள். அதேமாதிரி கண்டிராக்டர்கள் காண்டிராக்ட் எடுக்கும்போது வரியை சேர்த்துவிடுவார்கள். ஆகவே ஏழை மக்கள் majority of the people கஷ்டப்படப்போகிறார்கள் என்ற வாதம் சரியல்ல என்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக உணவு தானியத்தைப் பற்றியும் நேற்று நான் சொன்னேன். நான் சொன்னது தவறு, எனக்குக் கிராமம் தெரியாது என்று சொன்னார்கள். எல்லாவற்றையும் தெரிந்து கொண்டு தான் சொல்வது என்பது யாராலும் முடியாது. அப்படிச் சொன்னால் சந்திர மண்டலத்தைப் பற்றிப் பேச முடியாது. மற்றவர்களும்கூட ஏதோ தங்களுக்கு ஒரு கிராமத்தில் இருக்கக்கூடிய அனுபவத்தை வைத்துக் கொண்டு தான் உலகம் அப்படி இருக்கிறதென்று பேசுகிறார்கள் என்று நினைக்கிறேன். நானும் என்னுடைய குறைந்த அனுபவத்தை வைத்துக்கொண்டு—இருக்கிற புள்ளி விவரங்களை எல்லாம் வைத்துப் பேசிக்கொண்டிருக்கிறது.



12th February 1959] [Sri R. Venkataraman]

புள்ளி விவரப்படி நமக்கு உற்பத்தி 32 லட்சம் டன்தான் அரிசியிலே. (சம் இண்டரப்ஷன்) I am talking of paddy. சாதாரணமாக எல்லா விஷயங்களைப் பற்றியும் நான் சொல்வேன். கேட்காவிட்டாலும் கூடச் சொல்வது வழக்கம். என்னை இடை மறிக்காமல் இருந்தால் எல்லா விஷயங்களையும் சுலபமாகச் சொல்ல முடியும்.

புள்ளிவிவரப்படி நம்முடைய உற்பத்தி 32 லட்சம் டன் என்றேன். இந்த 32 லட்சம் டன் அரிசியை எடுத்துக்கொண்டால் வியாபாரிகள் மூலம் மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு வருவது 10 லட்சம் டன்தான் என்று கணக்குப் போட்டிருக்கிறார்கள். மற்றது எல்லாம் உணவுப் பொருளாகவோ, விதைகளாகவோ, மற்றச் செலவுகளாகவோ உபயோகப்படுத்திக்கொண்டு விடுகிறார்கள். ஆகவே அரிசிக்கு சேல்ஸ் டாக்ஸ் என்றால் இந்த 10 லட்சம் டன்தான் கணக்கு வரும். இந்தப் பத்து லட்சம் கூட வியாபாரத்திற்கு வருவது குறைவு. ஆகவே இதனால் கிராமத்தில் இருக்கக்கூடியவர்கள் எல்லோரும் பாதிக்கப்படுகிறார்கள் என்று சொல்வது சரியல்ல.

அதேமாதிரியாக கம்பு கேழ்வரகு தானியத்தை எடுத்துக்கொண்டாலும் உற்பத்தி செய்யப்படுகிற இடத்தில் உபயோகப்படுத்திக் கொள்கிறார்கள் என்பது சர்க்காரிடம் உள்ள புள்ளிவிவரம். சில ஊரில் வண்டிகளில் கொண்டு போய் விற்கிறார்கள். மற்றவர்கள் வாங்குகிறார்கள் என்று சொன்னால் அந்த நிலை இல்லை என்று நான் சொல்லவில்லை. பெருவாரியாக உற்பத்தி செய்கிற இடத்தில்தான் உபயோகப்படுத்திக் கொள்கிறார்கள். அந்த இடத்தில் வரி கிடையாது. பொதுவாக இம்மாதிரி பொருள்களுக்கு இரண்டு மூன்று டிரான்சாக்ஷன் இருந்தால்தான் விற்பனை வரி விதிக்கக்கூடிய நிலைமை உண்டாகிறது. விவசாயிகளிடத்தில் இருந்து வியாபாரி வாங்கி, அதை கடைகளுக்குக் கொடுத்து கடையில் வைத்து விற்கிற நிலையில் விற்பனை வரி வருகிறது. இந்த மாதிரியான நிலைமையில் இருக்கக்கூடிய அளவு குறைவு என்பது சர்க்கார் புள்ளி விவரம். ஆகவே மெஜாரிடியாக இருக்கக்கூடிய—பெருவாரியாக இருக்கக்கூடிய சாதாரண பிரஜை யாரும் உணவு தானியங்களுக்கு விற்பனைவரி விதிப்பதின் காரணமாகப் பாதிக்கப்படவில்லை என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

11-50 a.m.

அடுத்தபடியாக எவ்வளவு சத விகிதம் இதில் வருகிறது என்பதைப் பற்றிகூட சற்று குறை கூறினார்கள். Wholesale price மீதுதான் விற்பனை வரி விதிக்கப்படுகிறது. மூட்டை ஒன்றுக்கு 20 ரூபாய் விலை என்று வைத்துக்கொண்டால் 5 மூட்டை நெல் 100 ரூபாய் ஆகும். ஒவ்வொரு மூட்டையும் 48 பட்டணம்படி என்றாலும் ஐந்து மூட்டைகள் 240 படி ஆகிறது. இந்த 240 படியின் விலை 100 ரூபாய் ஆகிறது. ஆகவே ஒவ்வொரு ரூபாய்க்கும் ஒரு நயா பைசாவுக்கும் குறைவானதாக இருக்கிறது. இந்த மூன்று transaction இருந்தால்தான் ஒரு நயா பைசா வரி ஆகின்றதுகூட ஆகாததேன் என்பதை நீங்கள் அலசிப் பார்க்கவேண்டும். (குறுக்கீடு) நெல்லின் விலை 20 ரூபாய்தான். இதனால் அதிகமான ஒரு பெரிய கஷ்டமோ அல்லது பளுவோ ஏற்படும் என்று சொல்வதற்கில்லை. நெல்லுக்கும் அரிசிக்கும் வரி போடுவதற்கு என்ன காரணம் என்பதை தெரிந்துக் கொள்ளவேண்டும். நெல்லுக்கு வரி போடாவிட்டால் நம் ராஜ்யத்திலிருந்து நெல்லாக மற்ற ராஜ்யத்துக்கு வாங்கிப்போகும் பொருள்களுக்கும் எந்தவிதமான வரியும் கிடைக்காது. நம் ராஜ்யத்திலிருந்து பிற ராஜ்யங்களுக்குக் செல்லும் நெல்லின்மீது ஒரு தம்படி வரிகூட கிடைக்காது. இன்றைக்கு நம் ராஜ்யத்திற்கு வரவேண்டிய வருமானத்தைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டும் என்பதற்காக நெல்லின்மீது வரிபோடப்படுகிறது. ஆந்திராவில் 3 சத விகிதம் வரி கொடுத்துத்தான் சென்னை நகருக்கு அவர்களிடமிருந்து உணவு தான்யங்களைக் கொண்டு வருகிறோம். மைசூர் ராஜ்யத்திலும், கேரள ராஜ்யத்திலும் வரி போடவில்லை என்றால் அவைகள் பற்றாக்குறை ராஜ்யங்களா இருக்கின்றன. அந்த மாகாணங்களிலிருந்து நாம் உணவுப்பொருள் வாங்கிக்கொண்டுவரமுடியாது. அங்கிருந்து நாம் வாங்கிக்கொண்டு வரமுடியும் என்ற நிலைமை

[Sri R. Venkataraman] [12th February 1959

இருக்குமானால், அவர்களும் தங்களுடைய வருவாயைப் பாதுகாத்துக்கொள்வதற்கு நிச்சயமாக விற்பனைவரி போடுவார்கள். ஆந்திரர்கள் ராஜ்யத்திலேயே இன்றைக்கு விற்பனை வரிகூட இருப்பது அவர்கள் தங்களுடைய வருவாயைப் பாதுகாத்துக்கொள்வதற்குத்தான். அது **surplus province** ஆக இருக்கிறது. அவர்களுடைய நெல் பிற ராஜ்யங்களுக்குச் செல்கிறது. இந்த வருவாயைப் பாதுகாத்துக்கொள்வதற்கு வரி கேட்கிறார்கள். நம்முடைய ராஜ்யத்தில் இன்றைக்கு போதிய அளவு உணவு தான்யம் இருக்கிறது. இங்கு மண்டல நிலை இருப்பதால் நெல் வெளி ராஜ்யங்களுக்குச் செல்கிறது. நாமே ஆந்திரா ராஜ்யத்திலிருந்து வாங்குகிறோம். நம் ராஜ்யத்திலே வாங்குகிறபோது விற்பனை வரி கொடுக்கவேண்டுமென்றால் வெளியே போகும் நெல்மீது வரி போட்டால்தான் அந்தப் பணம் நமக்குக் கிடைக்கும். ஆகவே இதை நன்றாக அலசிப்பார்த்து நம்முடைய வருமானம் இந்தத் துறையிலே பாதிக்கப்படாமல் இருக்கவேண்டும் என்பதற்காக இந்த விதி செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தத் திருத்தங்கள் எல்லாவற்றையும் கனம் அங்கத்தினர் அலசிப் பார்க்கும்படியாக நான் மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சர்க்காரிடத்திலிருந்து பாரம் (Form) வாங்க வேண்டுமென்ற முறையை மாற்றி அமைக்கவேண்டுமென்று. கனம் அங்கத்தினர் லாசர் அவர்கள் சொன்னார்கள். இந்த பாரத்தை யாராவது அச்சிட்டு தவறாக உபயோகப்படுத்திவிடுவார்களேயானால் சர்க்காருக்கு மிகுந்த நஷ்டம் ஏற்பட்டுவிடும். அதற்காகத்தான் தாங்களே அச்சிட்டு நெம்பர் போட்டு சரியான முறையில் இருக்கிறதா என்பதை பின்னால் செக் செய்வதற்குக் கூட வசதியாக இருக்கிறது. கனம் லாசர் அவர்கள் இந்த விதமான முறை வேறு எந்தச் சட்டத்திலும் கிடையாது என்று சொன்னார்கள். தயவுசெய்து சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸ் சட்டத்தை பார்த்தால் இந்த விதியை அவர்கள் போட்டிருக்கிறார்கள் என்பது புலனாகும். ஆகவேதான் இது நம்முடைய ராஜ்யத்திலும் ஏமாற்றப்படாமல் இருப்பதற்காக இந்த ஷரத்து இருக்கிறது. இதைத் தெரிந்துக்கொண்ட பிறகு கனம் லாசர் தம்முடைய திருத்தத்தை வாபஸ் பெறுவார்கள் என்று நம்புகிறேன். இந்த வரியைக் குறைக்கவேண்டும் என்று சொல்வது அவ்வளவு நல்லது அல்ல என்று சொல்ல விரும்புகிறேன். இது நாட்டுக்கு நல்லதா என்பதை கவனிக்கவேண்டும். இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையிலே நம்முடைய நாட்டில் ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு இந்த வரி மிகவும் உதவியாக இருக்கும். ஏதோ வாயளவில் வரியை நானும் குறைத்துவிட்டு, வரியை குறைக்கிறேன் என்று குறைத்துவிட்டு இதனால் நம்முடைய திட்டங்களை நிறைவேற்றாமல் இருப்பதா? அல்லது இதனால் நம்முடைய திட்டங்களை நிறைவேற்றுவதற்காக இந்த வரிக் கஷ்டங்களை ஏற்றுக்கொள்வது நல்லதா என்பதை சபையும் முடிவுசெய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்தத் திருத்தங்களை கனம் அங்கத்தினர் வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

(Sri K. Sattanatha Karayalar rose.)

MR. SPEAKER : The hon. Member cannot make a speech after the Hon. Minister has replied.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்த வரி விகிதத்தின் ரேட்டைக் குறைத்தால் ஒரு வேளை பணம் குறைந்து விடுமோ என்று சொல்லுகிறார்கள். ஆனால் பெட்டிங் திருத்த சட்டத்தைப் பற்றி கனம் நிதி அமைச்சர் பேசுகையில் ரேட் குறைப்பதினாலே வருமானம் குறைந்திருக்கிறது என்று சொன்னார்கள். அந்த அடிப்படையிலேயே இந்த ரேட்டைக் குறைத்தால் ஓரளவில் நமக்கு அதிக வருமானம் வராதா?

*THE HON. SRI R. VENKATARAMAN : பெட்டிங் டாக்ஸ்-ஐ நாம் ஒரே இடத்தில் வசூல் செய்கிறோம். குதிரை ஓடுகிற இடத்தில் வசூல் செய்வது சுலபமாக இருக்கிறது. ஆனால் இது பல இடங்களிலே பல



12th February 1959] [Sri R. Venkataraman]

மக்களிடத்திலிருந்தும் நாம் வசூல் செய்யவேண்டியிருப்பதால் ஒரு மூலை வரி வசூல் செய்யக்கூடியதில் இருக்கக்கூடிய நன்மை இதில் இருப்பதில்லை. ஆகவேதான் நாம் வரியைக் குறைத்து வருவாயை அதிகரித்துவிட இயலாது என்று சொல்ல விரும்புகிறேன்.

MR. SPEAKER : தயவுசெய்து கனம் அங்கத்தினர்கள் தங்கள் ஆதரவையும் எதிர்ப்பையும் தெரிவிக்கும்போது உரத்த குரலில் தெரிவிக்கும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். ஓட்டு போடும்போது ஆதரிக்கிறார்களா எதிர்க்கிறார்களா என்று தெரியவில்லை. இவைகள் முக்கியமான திருத்தங்களாக இருப்பதனாலும், கனம் அங்கத்தினர்களுடைய அபிப்பிராயம் தெரிய வேண்டி இருப்பதாலும் இதைச் சொல்லவிரும்புகிறேன்.

The amendments of Sri N. K. Palanisami, Sri S. M. Annamalai, Sri N. Marudachalam and Sri A. Govindasamy to sub-clause (1) and the amendments of Sri S. M. Annamalai and Sri N. K. Palanisami to the provisos to sub-clause (1) were put and lost.

MR. SPEAKER : I shall now put the amendment moved by Sri M. Kalyanasundaram to vote. The question is :

For item (i) of the proviso to sub-clause (1), *substitute* the following, viz. :—

'(i) In the case of foodgrains and perishable articles such as vegetables, milk, flowers, fresh fruits, plantain leaves, betals, eggs, meat and fish no sales tax shall be levied irrespective of turnover'."

The amendment was put and declared lost.

SRI M. KALYANASUNDARAM : I demand a poll, Sir.

(When the division bell was pressed, it was found not working.)

MR. SPEAKER : I am afraid the electricity mechanism has gone out of order. So, let us wait for some time. In the meantime, we shall dispose of the other amendments.

MR. SPEAKER : The question is—

"In item (i) of the proviso to sub-clause (1), *omit* the word 'flowers'." 12 noon.

The amendment was put and lost.

MR. SPEAKER : The question is—

"In item (i) of the proviso to sub-clause (1), *for* the words 'the rate shall be one per cent', *substitute* the words 'the rate shall be half per cent'."

The amendment was put and lost.

[12th February 1959

MR. SPEAKER : The question is—

'In item (ii) of the proviso to sub-clause (1), *for* the words "Thirty thousand rupees", *substitute* the words "fifty thousand rupees".'

The amendment was put and lost.

MR. SPEAKER : The hon. Member Sri Nagaraja Monigar is not pressing his amendment, I think.

SRI S. NAGARAJA MONIGAR : I am not pressing the amendment, Sir.

SRI M. KALYANASUNDARAM : I am objecting to leave being granted to the hon. Member to withdraw the amendment.

MR. SPEAKER : Then I will put the amendment to the vote of the House. The question is—

'After item (ii) of the proviso to sub-clause (1), *add* the following item, viz. :

"(iii) the sale of milk and milk products by co-operative societies shall not be liable for any tax under this Act".'

The amendment was put and lost.

The amendment was put and the House divided thus :
was, by leave, withdrawn.

MR. SPEAKER : The bell is ringing all right now. We will take up the amendment of Sri M. Kalyanasundaram. The question is—

'*For* item (i) of the proviso to sub-clause (1), *substitute* the following, viz. :—

"(i) In the case of foodgrains and perishable articles, such as vegetables, milk, flowers, fresh fruits, plantain leaves, betels, eggs, meat and fish no sales tax shall be levied irrespective of turnover".'

The amendment was put and the House divided thus :—

*Ayes.*

Sri V. K. Ramaswamy Mudaliyar.
„ T. S. Ramaswamy Pillai.
„ A. Govindasamy.
„ M. Kalyanasundaram.
„ A. R. Marimuthu.
„ K. Ramachandran.
„ M. Jagannathan.
„ N. K. Palanisami.
„ M. D. Ramasami.
„ M. Karunanithi.
„ V. Subbiah.
„ A. Perumal.
„ N. Marudachalam.

Sri S. A. M. Annamalai Odayar.
„ K. Appavoo Pillai.
„ P. S. Ellappan.
„ M. Selvaraj.
„ K. Gopala Gounder.
„ S. M. Annamalai.
„ M. P. Sarathy.
„ T. Irusappan.
„ T. Thirumalaimuthu Veerasakkaya Thiruvenkadasami Naicker.
„ A. V. P. Periavalaguruva Reddy.
„ D. S. Authimoolam.
„ K. Sattanatha Karayalar.



12th February 1959]

*Noes.*

Sri R. Bhaktavatsalu Naidu.
„ G. Annamalimuthuraja.
„ P. Appavu.
„ K. S. Ardhanareeswara Gounder.
„ V. Arunachala Thevar.
„ W. P. A. R. Chandrasekaran.
„ R. Chidambara Bharathi.
„ V. Chinniah.
„ M. P. M. Chinniah Kavundar.
„ A. Chinnasami.
„ T. T. Daniel.
The Hon. Sri K. Kamaraj Nadar.
„ C. Subramaniam.
„ M. Bhaktavatsalam.
„ M. A. Manickavelu.
„ P. Kakkan.
Sri P. G. Karuthiruman.
„ D. Dasarathan.
„ T. P. Elumalai.
„ G. Gomathi Sankara Dikshitar.
„ V. Govindaswami Naidu.
„ G. G. Gurumurthy.
„ P. Jayaraj.
„ R. Kandasami.
„ M. R. Kandasami Mudaliyar.
„ Karuthappa Gounder.
„ Kolanda Gounder.
„ V. K. Krishnamurthy.
„ R. Krishnaswami Gopalar.
„ P. Kuppusami.
„ S. Lakshmana Gounder.
„ S. Lazar.
„ B. K. Linga Gowder.
„ T. Manavalan.
„ P. G. Manickam.
„ M. K. Mariappan.
The Hon. Sri V. Ramiah.
Srimathi T. N. Anandanayaki.
„ Hemalatha Devi.
„ Kamalambuja Ammal.
„ A. S. Poonammal.
„ Kolanthai Ammal.
„ P. K. R. Lakshmikantham.

Srimathi Rajathi Kunchithapatham.
„ Savithri Shanmugham.
Sri J. Matha Gowder.
„ V. A. Muthaiya.
„ S. Nagaraja Monigar.
„ T. M. Nallaswami.
„ K. P. Palaniswami.
„ K. G. Palaniswami Gounder.
„ K. Pandiyaraj.
„ P. M. Periakaruppan Ambalam.
„ K. Periannan.
„ P. Ramachandran.
„ M. Ramachandra Reddiyar.
„ S. Ramalinga Padayachi.
„ T. R. Ramamirtha Thondaman.
„ S. Ramasami Naidu.
„ A. Chidambaranatha Nadar.
Srimathi Dr. Soundaram Ramachandran.
Sri K. L. Ramaswami.
„ A. Rathnavel Gounder.
„ S. Sadasivam.
„ S. C. Sadayappa Mudaliar.
„ R. C. Samanna Gounder.
„ Sami Sahajananda.
„ S. Sangili.
„ T. V. Sannasi.
„ M. S. Selvarajan.
„ M. K. Somasundaram.
„ T. K. Subbiah.
„ R. Subramaniam.
„ K. S. Subramania Gounder.
„ N. S. Sundararajan.
„ R. Swaminatha Merkondar.
„ S. Thangavelu.
„ N. R. Thiagarajan.
„ A. Vedarathnam Pillai.
„ M. William.
„ A. Samuel Nadar.
„ K. R. Viswanathan.
„ N. M. Vellappan.
„ V. Vedayyan.
„ P. Vedamanickam.

*Ayes*—25. *Noes*—85.

The amendment was lost.

The clause was put and carried.

*Clause 2—cont.*

THE HON SRI R. VENKATARAMAN : Mr. Speaker, we can now take up and dispose of clause 2. I will accept the amendment proposed by the hon. Member, Sri Palanisami. Also there is a typographical error, and the bracket has been omitted. The amendment given notice of by Sri Srinivasa Iyer supplies the omission and I propose that it be taken as a Government amendment. I move—

'In item (j), bracket the words, "other than newspapers, actionable claims, stocks and shares and securities".'

MR. SPEAKER: The question is—

"In explanation (1) to sub-clause (*r*), *omit* the word 'or' occurring after the word 'grading', and after the word 'sorting', *add* the words 'or drying'."

The amendment was put and carried.

MR. SPEAKER: The question is—

'In item (j), bracket the words, "other than newspapers, actionable claims, stocks and shares and securities".'

The amendment was put and carried.

The clause, as amended, was put and carried.

*Clause 4.*

SRI N. K. PALANISAMI: I move—

'*Omit* the words "whatever be the quantum of turnover in that year".'

SRI M. KALYANASUNDARAM: I second it, Sir.

SRI N. K. PALANISAMI: இதில் 'whatever be the quantum of turnover' என்று சொல்லப்பட்டிருக்கிறது. Why not the Government fix a minimum turnover for that instead of saying whatever be the quantum of turnover'.

THE HON. SRI R. VENKATARAMAN: இது 'டிக்லேர்ட் குட்ஸை'-ப் பொறுத்தது. இரண்டாவது ஷெட்யூலிலுள்ள சாமான்களைப் பொறுத்தது. எந்த எந்தப் பண்டங்கள் மீது 2 சதவிகிதத்திற்கு மேல் வரி போடக் கூடாது என்று மத்திய சர்க்காரால் போடப்பட்டிருக்கும் விதிக்கு உட்பட்ட பண்டங்கள் அவை. அவைகளுக்கு 'எக்ஸெம்ஷன்' கிடையாது. ஆகையால்தான் இங்கே 'whatever be the quantum of turnover' என்று போடப்பட்டிருக்கிறது.

The amendment was put and lost.

The clause was put and carried.

Clause 5 was put and carried.

*Clause 6.*

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, I move—

"*For* clause 6, the following shall be *substituted*—

'6. Tax under this Act to be in addition to tax under Central Act 74 of 1956 or any other law: The provisions of this Act relating to taxation of successive sales inside the State, only at a single point or at one or more points shall apply only to sales inside the State (other than sales in the course of inter-State trade or commerce) and the tax under this Act shall be levied in addition to any tax levied under the Central Sales Tax Act, 1956 (Central Act 74 of 1956) or any other law for the time being in force'.



சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸ் விதிக்கப்படும் பொருள்களின் மீது ராஜ்ய சர்க்காராகிய சென்னை சர்க்காரும் விற்பனை வரி விதிக்கலாம் என்பதைத் தெளிவுபடுத்தும் நோக்கத்துடன் இந்தத் திருத்தம் கொடுக்கப்படுகிறது. இப்போதுள்ள சட்டத்திலேயே இதற்காக 'க்ளாஸ்' இருக்கிறது. அந்த சந்தேகம் தீருவதற்காக இவ்வாறு திருத்தியமைக்கிறோம்."

The amendment was put and carried.

Clause 6, as amended was put and carried.

*Clause 7.*

SRI S. M. ANNAMALAI: I move—

"In sub-clause (1), *for* the word 'ten', *substitute* the word 'twenty' and *for* the word 'twenty', *substitute* the word 'thirty'."

SRI M. P. SARATHI: I second the amendment, Sir.

SRI M. JAGANNATHAN: I move—

"In sub-clause (1), *for* the words 'ten' and 'twenty-five' *substitute* the words 'twenty' and 'forty' respectively."

SRI K. RAMACHANDRAN: I second the amendment, Sir.

SRIMATHI T. N. ANANDANAYAKI: I move—

"In sub-clause (1), *for* the words 'more than twenty-five thousand rupees', *substitute* the words 'more than fifty thousand rupees'."

SRIMATHI KAMALAMBUJAMMAL: I second the amendment, Sir.

SRI K. SATTANATHA KARAYALAR: I move—

"In sub-clause (1), *for* the words 'ten' and 'twenty-five', *substitute* the words 'twenty-five' and 'fifty' respectively."

SRI K. RAMACHANDRAN: I second the amendment, Sir.

SRI N. K. PALANISAMI: Sir, I move—

"In sub-clause (1)—

(i) *for* the words 'ten thousand rupees', *substitute* the words 'twenty-five thousand rupees';

(ii) *for* the words 'twenty-five thousand rupees', *substitute* the words 'fifty thousand rupees'; and

(iii) *for* entries (i), (ii) and (iii) *substitute* the following, namely:—

| | Rates of tax. |
| --- | --- |
| Where the total turnover is not less than twenty-five thousand rupees but is less than fifty thousand rupees. | One hundred and twenty rupees. |

SRI N. MARUDACHALAM: I second the amendment, Sir.

SRI K. SATTANATHA KARAYALAR : Sir, I move—

" *For* items (i), (ii) and (iii) of sub-clause (1), *substitute* the following, viz. :—

| | Rate of tax. |
|---|---|
| (i) Where the total turnover is not less than twenty-five thousand rupees but is less than forty thousand rupees. | One hundred and eighty rupees per annum. |
| (ii) Where the total turnover is not less than forty thousand rupees but is not more than fifty thousand rupees. | Two hundred and forty rupees per annum. " |

SRI K. RAMACHANDRAN : I second the amendment, Sir.

SRI M. KALYANASUNDARAM : Sir, I move that—

" In items (i), (ii) and (iii) of sub-clause (1), *for* the entries under column ' Rate of tax ', *substitute* respectively the following, viz. :—

' Sixty rupees per annum ',

' Ninety rupees per annum ',

' One hundred and twenty rupees per annum '."

SRI N. K. PALANISAMI : I second the amendment, Sir.

SRI S. M. ANNAMALAI : I move—

" In item (i) of sub-clause (1), *for* the words ' ten ' and ' fifteen ', *substitute* the words ' twenty ' and ' twenty-five ' respectively."

SRI M. P. SARATHI : I second the amendment, Sir.

SRI M. JAGANNATHAN : Sir, I move—

" In item (i) of sub-clause (1), *for* the words ' ten ' and ' fifteen ', *substitute* the words ' twenty ' and ' thirty ' respectively."

SRI K. RAMACHANDRAN : I second the amendment, Sir.

SRI S. M. ANNAMALAI : I move—

" In item (ii) of sub-clause (1), *for* the words ' fifteen ' and ' twenty ', *substitute* the words ' twenty-five ' and ' thirty ' respectively."

SRI M. P. SARATHI : I second the amendment, Sir.

SRI M. JAGANNATHAN : Sir, I move—

" In item (ii) of sub-clause (1), *for* the words ' fifteen ' and ' twenty ', *substitute* the words ' thirty ' and ' thirty-five ' respectively."

SRI K. RAMACHANDRAN : I second the amendment, Sir.



SRI S. M. ANNAMALAI : Sir, I move—

" In item (iii) of sub-clause (1), *for* the word ' twenty ' wherever it occurs, *substitute* the word ' thirty '."

SRI M. P. SARATHI : I second the amendment ,Sir.

SRI M. JAGANNATHAN : Sir, I move—

" In item (iii) of sub-clause (1), *for* the words ' twenty ' and ' twenty-five ', *substitute* the words ' thirty-five ' and ' forty ' respectively."

SRI K. RAMACHANDRAN : I second the amendment, Sir.

SRI N. K. PALANISAMI : Sir, I move—

" In sub-clause (2), *for* the words ' more than twenty-five thousand rupees may apply to the assessing authority to be permitted to pay the tax under this section and on being so permitted he shall ', *substitute* the words ' not less than twenty-five thousand rupees and not more than fifty thousand rupees may '."

SRI N. MARUDACHALAM : I second the amendment, Sir.

SRI M. JAGANNATHAN : Sir, I move—

" In sub-clause (2), *for* the words ' twenty-five ', *substitute* the word ' forty '."

SRI K. RAMACHANDRAN : I second the amendment, Sir.

MR. SPEAKER : The hon. Member, Sri Lazar, is not in his seat. However, as Mr. Karayalar has also given notice of the same amendment he may move it if he wants.

SRI K. SATTANATHA KARAYALAR : Sir, I move that—

" In sub-clause (2) *for* the word ' twenty-five ', *substitute* the word ' fifty '.

SRI K. RAMACHANDRAN : : I second the amendment, Sir.

MR. SPEAKER : The clause and the amendments are before the House for discussion.

SRI S. M. ANNAMALAI : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, 3-வது பிரிவிற்கு நான் கொடுத்த திருத்தமே ஒத்துக்கொள்ளப்படவில்லை. அந்தத் திருத்தத்தின் அடிப்படையில்தான் இந்தத் திருத்தத்தையும் கொடுத்திருக்கிறேன். " கம்பவுண்டட் டாக்ஸ் " செலுத்துவதற்கு இருக்க வேண்டிய குறைந்த பட்ச வருமான வரம்பையும் அதிகப் பட்ச வருமான வரம்பையும் இன்னும் கொஞ்சம் அதிகரிக்க வேண்டும் என்பது தான் என் திருத்தத்தின் நோக்கம். என் திருத்தத்தை கனம் அமைச்சர் ஏற்றுக்கொள்ளப் போவதில்லையானாலும், நான் சொல்ல வேண்டிய கடமைக்காக இதைச் சொன்னேன். இத்துடன் என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

[12th February 1959]

SRI N. K. PALANISAMI : கனம் சபாநாயகர் அவர்களே, 50,000 ரூபாய் மொத்த வருட வருமானம் உள்ளவர்களை பெரிய வியாபாரிகளாகக் கருத முடியாது. சாதாரண வியாபாரிகளுக்கும் 50,000 ரூபாய் வருமானம் வருகிறது. சில வியாபாரிகள் கம்பவுண்டிங் ரேட்டில் விற்பனை வரியைச் செலுத்துவதற்கு சர்க்கார் இந்த மசோதாவில் வகை செய்திருப்பது மிகவும் நல்ல அம்சம். இது சம்பந்தமாக நிர்ணயிக்கப்பட்டுள்ள உயர்ந்தபட்ச மொத்த வருமானத்தை 50,000 ரூபாய்க்கு உயர்த்த வேண்டும் என்று என் திருத்தம் கூறுகிறது.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை வகித்தார்.)

இந்தப் பிரிவின் (2)-வது உப பிரிவில் ' . . . அண்ட் ஆன் பீயிங் ஸோ பெர்மிட்டெட் . . . ' என்று சொல்லப்பட்டிருக்கிறது. டர்னோவரில் 2 சத வீதம் பார்த்தால் சுமார் 300 ரூபாய் வரும். எனவே கம்பவுண்டிங் ரேட்டில் 150 ரூபாய்க்குத்தான் "ரெலீப்" கிடைக்கிறது. கம்பவுண்டிங் ரேட்டில் குறைக்க வேண்டும் என்று டாக்டர் லோகநாதன் அவர்கள்கூட சொல்லியிருக்கிறார்கள். எனவே கம்பவுண்டிங் ரேட்டில், இந்த அளவை 50,000 ரூபாய்க்கு உயர்த்தவேண்டும்; 25,000 ரூபாய் வரை எந்த வரியும் கிடையாது என்று விதிக்கவேண்டும்; 25,000 ரூபாய்க்கு மேல் கம்பவுண்டிங்கிற்கு அனுமதிக்க வேண்டும்.

"கம்பவுண்டிங் ரேட்" -இல் வரி செலுத்த வேண்டுமானால், அதற்கு அதிகாரிகளின் அனுமதியைப் பெற வேண்டும் என்று மசோதாவில் விதிக்கப்பட்டிருக்கிறது. (2)-வது உப பிரிவில் "Any dealer........ may apply to the assessing authority......and on being so permitted he shall pay" . . .

என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வாறு இருக்கக்கூடாது. ஒரு வியாபாரி கம்பவுண்டிங் ரேட்டில் வரி செலுத்த விரும்பினால், அதற்கு எந்த விதமான தடையும் இருக்கக்கூடாது. அப்படியே அவர் பெர்மிஷன் வாங்க வேண்டுமென்றால், ரெகார்ட் பூர்வமாக அந்த டீலர் பேரில் தப்பு இருந்தால், அப்போது அதற்கு "அப்ஜெக்ஷன்" இருக்கலாமே தவிர, மற்றப்படி கம்பவுண்டிங்கிற்கு யாராலும் எந்த விதமான தடையும் இருக்கக்கூடாது.

மேலும், இந்தப் பிரிவைப் பொறுத்தவரையில், வியாபாரிக்கு, அப்பீல் செய்துகொள்வதற்கான உரிமை மசோதாவில் அளிக்கப்படவில்லை. அதற்கு வகை செய்யப்படவில்லை. அவசியம் 31-வது பிரிவிற்கு 7-வது பிரிவையும் உட்படுத்த வேண்டும் என்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

12 20 p.m. சாதாரணமாக ஒரு கடையை எடுத்துக்கொண்டால் ஸிங்கில் பாயிண்ட் டாக்ஸிலும், டபிள் பாயிண்ட் டாக்ஸிலும் பல சமான்கள் விற்கப்படுகின்றன. மேலும் எக்ஸைஸ் ட்யூட்டி கட்டி சர்க்கரை, துணி வியாபாரமும் செய்வார்கள். ஆகவே, டோட்டல் டேர்ன் ஓவர் என்பதற்கு பதில் "டாக்ஸபிள் டேர்ன் ஓவர்" என்று திருத்திவிட்டால் சரியாகயிருக்கும். அதை சர்க்கார் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI K. RAMACHANDRAN : "எக்ஸெம்ஷன் லிமிட்டை" 10,000 ரூபாய் என்பதை 20,000 ஆக ஆக்க வேண்டுமென்ற யோசனையை சர்க்கார் ஏற்றுக் கொள்ளவில்லை. அத்துடன் டாக்ஸ் விகிதத்தை 2 சத வீதம் என்றிருப்பதை 1 சத வீதம் ஆக குறைக்கவேண்டுமென்று சொன்னதையும் சர்க்கார் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்தத் திருத்தங்கள் கொடுக்கப்பட்டிருப்பதின் நோக்கம், சிறு வியாபாரிகள் அனாவசியமாக பாதிக்கப்படக்கூடாது, விற்பனை வரி இலாகா அதிகாரிகளால் அவர்களுக்கு அனாவசியமான தொந்தரவு ஏற்படக்கூடாது, தொழில் முறையில் அவர்களுக்கு அனாவசியமாக கஷ்டங்கள் ஏற்படக்கூடாது என்ற கருத்தையொட்டிதுத்தான் இத்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. அதை ஏற்றுக்கொள்ளவில்லை. இருந்தபோதிலும் இந்த கம்பவுண்டிங் லிமிட் என்பது வியாபாரிகளுக்கு அதிக தொந்தரவு இல்லாத விஷயமாக இருப்பதால் அதையாவது 25,000 என்றிருப்பதை 40,000 வரையில்



12th February 1959] [Sri K. Ramachandran]

உயர்த்தி அந்த சலுகையைக் கொடுக்கவேண்டுமென்பதுதான் நான் கொடுத்திருக்கும் திருத்தத்தின் நோக்கம். ஆகவே, 25,000 என்பதை 40,000 ஆக ஆக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இதனால் அரசாங்கத்தின் வருவாய் ஒன்றும் குறைந்து விடாது. வியாபாரிகள் வரியை ஏமாற்றும் சூழ்நிலையும் இதில் வராது என்று சொல்லிக் கொண்டு 25,000 என்பதை 40,000 ஆக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* SRI K. SATTANATHA KARAYALAR : நான் கொடுத்திருக்கக்கூடிய திருத்தமும் கிட்டத்தட்ட இதற்கு முன் கொடுத்திருந்த அடிப்படையில்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. 25,000 வரை மொத்த டேர்ன் ஓவர் இருந்தால் அதற்கு விதிவிலக்கு கொடுக்கவேண்டுமென்று கொடுத்துள்ளேன். 15,000-த்தில் இருந்து 25,000 வரையிலுள்ள டேர்ன் ஓவர் குறைந்த டேர்ன் ஓவராகத்தான் இருக்கவேண்டும். அதனால் வரக்கூடிய வரி குறைவாகத்தான் இருக்கும். ஆகவே 25,000 முதல் 40,000 வரையிலும் 40,000-க்கு மேல் 50,000 வரையிலும் உள்ள வியாபாரிகளிடம் மட்டும் சர்க்கார் கொடுத்திருக்கும் அடிப்படையில் வரிவசூல் செய்யலாம். 25,000 மொத்த டேர்ன் ஓவர் உள்ளவர்கூட மிக சாதாரண சிறு வியாபாரிகள்தான் மிகச் சிறிய சில்லரை வியாபாரிகள்தான் இந்த 10,000 முதல் 25,000 வரையிலுள்ள டேர்ன் ஓவர் லிஸ்டில் வருவார்கள். அவர்களுக்கு விதிவிலக்கு அளிப்பது, பெரிய நிவாரணம் ஆகும். ஆகவே அதை சர்க்கார் அங்கீகரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : அமைச்சர் அவர்கள் வரியைக் குறைக்காத அளவில், சர்க்கார் வருமானத்தைப் பாதிக்காத அளவில் யோசனை சொன்னால் நல்லதென்று சொன்னார்கள். எனது திருத்தம் வரியைப் பாதிக்காது என்று நினைக்கிறேன். 25,000 என்று கம்பவுண்டிங் லிமிட் வைத்திருப்பதை 50,000 ஆக உயர்த்தினால் நன்றாகயிருக்கும். அடித்தளத்தை உயர்த்திவிட்டால் நான்கு கடைகளாக வைத்துக் கொள்வார்கள், அப்படி வரியை ஏமாற்ற முடியும் என்று சொன்னார்கள். அது யோசிக்கவேண்டிய விஷயந்தான். ஆனால் 25,000 என்பதை 50,000 ஆக மாற்றினால், கம்பவுண்டிங் ரேட்டை உயர்த்துவதால் நஷ்டம் வராது. இப்பொழுது குத்துமதிப்பாக ஒரு ரேட் போட்டு வாங்குகிறோம். வேண்டுமென்றால் குத்து மதிப்பு தொகையை அரசாங்கத்தின் வருமானம் பாதிக்காத அளவில் அதிக்கப்படுத்திக் கொள்ளலாம். நான் சொல்வது போல் 50,000 வரை உயர்த்தினால் வியாபாரிகள் கணக்கு வைத்துக் கொள்ளும் தொல்லையிலிருந்து விடுபடமுடியும். வியாபாரிகள் படும் கஷ்டம், கணக்கு வைத்துக் கொண்டு அதிகாரிகளிடம் போய் நிற்கவேண்டியிருப்பதால் அவர்கள் வியாபாரத்தையே கெடுப்பதுடன், அவர்கள் படும் கஷ்டம் சொல்லிமுடியாது. ஆகவே இந்தச் சலுகையை அளித்தால் அது மிகவும் வரவேற்கத் தக்கதாகயிருக்கும். இது, அரசாங்க வருமானத்தைப் பாதிக்காத யோசனையாக இருப்பதால் அமைச்சரவர்களின் சிந்தனைக்கு இது ஏற்றதாகயிருக்கும் என்ற எண்ணத்தோடு இந்தத் திருத்தத்தைக் கொண்டு வருகிறேன்.

SRI M. KALYANASUNDARAM : இந்தப் பிரிவில் இரண்டு திருத்தங்கள் அவசியமென்று கருதுகிறேன். ஒன்று, அதிகாரிகளுடைய அனுமதியை முன் கூட்டியே பெற வேண்டுமென்று சப் செக்ஷன் 2-ல் இருக்கிறது. In sub-clause (1), it is said ' . . . may *at his option*', வியாபாரி, தான் விரும்பினால் முதலாவதாகவே வரி கட்ட சலுகை பெற்றுக் கொள்ளலாம் என்று இருக்கிறது. ஆனால் அதற்கு மனு செய்து அதிகாரி அனுமதி அளித்தால்தான் அப்படி செய்யமுடியும் என்றிருக்கிறது. இரண்டாவது பிரிவில் of assessing authority to be permitted to pay the tax under this section and on being so permitted. என்றிருக்கிறது. அனுமதி வாங்கினால்தான் இந்த சலுகையை வருட ஆரம்பத்தில் பெற முடியும் என்றிருக்கிறது. வருட ஆரம்பத்தில் வியாபாரி விரும்பினால் அதைக் கட்டாயம் அதிகாரி கொடுக்க வேண்டுமென்றிருக்க வேண்டும். இறுதியில் அதிகாரிக்கு சந்தேகம் ஏற்பட்டால்

[Sri M. Kalyanasundaram] [12th February 1959

கணக்கைப் பார்த்து இவர் சலுகைக்கு அருகதையுடையவர் அல்ல என்று முடிவு செய்தால் மொத்த விற்பனையின் பேரில் வரி கட்டவேண்டும் என்று சொல்வதற்கு உள்ள அதிகாரம் இருக்கிறது' . . on being so permitted' என்றிருக்கிறது. முதலிலேயே வரி கட்ட மனு செய்தவுடனேயே அப்படி கட்டிவிடுவதற்கு உரிமை இருக்க வேண்டும். அப்படி தவறு ஏதாவது செய்திருந்தால் அதைக் கண்டுபிடிப்பதற்குள்ள அதிகாரம் அதிகாரிகளுக்கு இருக்கிறது. ஆகவே பழனிசுவாமி அவர்கள் கொடுத்திருக்கும் திருத்தத்தை ஒப்புக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இரண்டாவதாக, கட்டணம் அதிகமாகயிருக்கிறது. ஒரு வேலை பலகட்ட விகிதத்தை 2 சத வீதம் என்று வைத்திருப்பதால் அதேயடிப்படையில் லோகநாதன் அவர்கள் சிபாரிசு செய்திருப்பதை இரண்டு மடங்கு விதிப்பதாக மசோதாவில் இருக்கிறது. நான் முதலில இருந்தே லோகநாதன் அவர்கள் சிபார்சுகளை அப்படியே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று சொல்லியிருப்பதால் இந்த விஷயத்திலும் டாக்டர் லோநாதன் அவர்களின் சிபார்சின் அடிப்படையில், ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்தக் கட்டணத்தைப் பாதியாக குறைத்து திருத்தம் கொடுத்திருக்கிறேன். அதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* THE HON. SRI R. VENKATARAMAN : : உதவி சபாநாயகர் அவர்களே, இந்த வரியை கம்பவுண்ட் செய்வது 50,000 வரை உயர்த்த வேண்டுமென்று டாக்டர் லோகநாதன் அவர்களின் அறிக்கையிலேயே இருக்கிறது. ஓரிரு வருடங்கள் நிலைமையைப் பார்த்து, இதனால் சர்க்காருக்கு என்ன அனுபவம் வருகிறது என்பதைப் பார்த்து அதையொட்டி உயர்த்தலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்தை சர்க்கார் மனதில் வைத்துக்கொண்டிருக்கிறது. ஓரிரு வருடங்கள் இப்பொழுதுள்ளபடி கம்பவுண்ட்டிங் ரேட் எப்படி நடைமுறையில் நடந்து வருகிறது என்று பரிசீலனை செய்து பின்னால் அது பற்றி ஒரு முடிவு எடுக்கப்படும். ஆரம்பத்திலேயே 50,000 ரூபாய் வரை கம்பவுண்ட் ரேட் செய்து விட வேண்டுமென்று திடீரென்று முடிவு செய்தால் அதனால் நடைமுறையில், இதை அமுல் செய்யும் போது சிக்கல்கள் என்னென்ன வருமோ அல்லது அதனால் வருவாய் குறைவு என்ன வருமோ என்று தெரியாமல் போய்விடும். ஆனால் அந்தக் கருத்தை சர்க்கார் மனதில் வைத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

12-30 p.m. அடுத்தபடியாக, இந்த ரேட்டை நாம் இரண்டு சதவிகிதம் என்று போட்ட அடிப்படையில் மாற்றி அமைத்திருக்கிறோம். ஒரு சத விகிதம் என்பதை ஒத்துக்கொண்டிருந்தால், டாக்டர் லோகநாதன் அவர்கள் சொன்ன அளவுக்கே இந்த ரேட்டுகளும் போடப்பட்டிருக்கும். இப்பொழுது 'ஜெனரல் ரேட்டை' இரண்டு சத விகிதம் என்று போட்டுவிட்டு, இங்கு மாத்திரம் குறைத்தால் அது வியாபாரிகளிடையே பல சிக்கல்களையும், கஷ்டங்களையும் உண்டாக்கும். பெரிய வியாபாரிகள் மிக அதிகமான வரியும், சிறிய வியாபாரிகள் மிகக் குறைவான வரியும் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படுமேயானால், வியாபாரம் பாதிக்கப்படும். அதனால் கஷ்டமான நிலைமை ஏற்படும்.

அடுத்தபடியாக, ஸ்ரீ பழனிசுவாமி அவர்களின் திருத்தம் 'On being so permitted' என்ற வாசகத்தை எடுத்துவிடவேண்டுமென்பதுதான். அதை எடுத்துவிட்டால், இரண்டு லட்சம் ரூபாய் வியாபாரம் செய்யக் கூடியவர்கள் கூட 25,000 ரூபாய்க்குத்தான் வியாபாரம் நடப்பதாகச் சொல்லிவிட்டு மாதத்திற்கு ரூபாய் 15 வரி கொடுக்க முன் வந்து விடுவார்கள். பின்னால் வரக்கூடிய ஷரத்தில் 'ப்ரொவிஷனல் அஸெஸ்மெண்டு' என்று வைத்திருக்கிறோம். அதிகமான வியாபாரம் செய்பவர்களுக்கு வருஷ நடைமுறையிலேயே 'ப்ரொவிஷனல் அஸெஸ்மெண்டு' செய்ய முடியும். அதிலிருந்து பெரிய வியாபாரிகள் தப்பித்துக் கொள்வார்கள். அதற்காகத் தான் 'On being so permitted' என்ற வாசகத்தை இதில் சேர்த்திருக்கிறோம். இல்லாவிட்டால், யாரும் தன்னுடைய அபிப்பிரா



12th February 1959] [Sri R. Venkataraman]

யத்தில், தன்னுடைய மதிப்பில் 25,000 ரூபாய்க்குத்தான் வியாபாரம் ஆவதாகச் சொல்லிவிடுவார்கள். பிறகு அதுவே முடிவாகப் போய்விடும். அந்த முடிவை அப்படியே ஏற்றுக்கொள்ள முடியாது. அது நியாயமல்ல. அதனால்தான் 'On being so permitted' என்ற வாசகத்தைச் சேர்த்திருக்கிறோம்.

'டாக்ஸபிள் டர்ன்ஓவர்க்கு' மாத்திரம் 'டாக்ஸ்' போட வேண்டுமென்று சொன்னால், அப்பொழுது 'கம்பவுண்டிங்குக்கு' அர்த்தமில்லாமல் போய்விடும். 'கம்பவுண்டிங்' அடிப்படையைப் பார்த்தால் கணக்கு இல்லாமல் மொத்தமாக 'பர்சேஸ் பில்லை' வைத்துக்கொண்டு எவ்வளவு வியாபாரம் என்று மதிப்பிட்டு அதற்கு வரி போடவேண்டும். அப்படியிருக்கும்பொழுது 'டாக்ஸபிள் டர்ன்ஓவர்க்கு' தான் வரி விதிக்கவேண்டுமென்று சொன்னால், ஒருமுனை வரி விதிக்கக்கூடிய பொருள்களுக்கு தனிக் . கணக்கு வைக்கவேண்டும். பலகட்ட வரி விதிக்கக்கூடிய பொருள்களுக்கு தனிக் கணக்கு வைக்க வேண்டும். 'டெக்லார்டு குட்ஸ்' சம்பந்தமாக தனிக் கணக்கு வைக்க வேண்டும். எதை நாம் தவிர்க்கவேண்டு மென்று நினைக்கிறோமோ அதை மறுபடியும் செய்ய வேண்டியிருக்கும். அதனால் மிகவும் கஷ்டமான நிலைமை ஏற்பட்டுவிடும். ஆகவேதான் இந்த ஷரத்து இந்த விதமாக போடப்பட்டிருக்கிறது. இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

The amendment of Sri S. M. Annamalai to sub-clause (i) was put and lost.

The amendments of Sri M. Jagannathan and Srimathi T. N. Anandanayaki were by leave, withdrawn.

All the other amendments were put and lost.

The clause was put and carried.

### *Clause 8.*

DEPUTY SPEAKER : The motion is :

That clause 8 do stand part of the Bill.

If anybody wants to speak on the clause, he may speak.

* SRI G. G. GURUMOORTHI : கனம் சபாநாயகர் அவர்களே, 8-வது பிரிவின் பிரகாரம் 3-வது ஷெட்யூலில் கண்ட சில பொருள்களுக்கு வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. தற்பொழுது பவானியில் நெய்யக் கூடிய ஜமக்காளத்திற்கு வரி கிடையாது. ஆனால் இந்த ஷெட்யூல் பிரகாரம் ஜமக்காளத்திற்கு வரி விதிக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. கைத்தறியில் நெய்யப்படக்கூடிய நெசவுத் தொழிலில் பழமையான தொழில் இது. இந்தத் தாலுகாவில் இருக்கக்கூடிய ஒரு சில கிராமங்களில் இந்தத் தொழில் நடந்துகொண்டு வருகிறது. இந்தத் தாலுகாவில் எல்லா இடங்களிலும் நடைபெறுவதில்லை. வெளிப் பிரதேசங்களுக்குச் சென்று ஆர்டர் வாங்கி, அதன்பேரில் நெய்து விற்பனை செய்யக்கூடிய வியாபாரமாக இருக்கிறது. இந்த ஜமக்காளம் நெய்யும் தொழிலில் 10,000 தொழிலாளிகள் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆறு மாத காலத்திற்கு இந்தத் தொழில் சரிவர நடைபெறுவதில்லை. அவர்களுக்கு சரியானபடி கூலி கிடைக்காததினால் தொழில் சரிவர நடைபெறுவதில்லை. மத்திய அரசாங்கம்கூட இதற்கு ரயில்வே கட்டணத்தில் சலுகை அளித்திருக்கிறார்கள். ரயில்வே கட்டணத்தில் பாதிக் கட்டணம்தான் இதற்கு விதிக்கப்படுகிறது. ஆகவே, மூன்றாவது ஷெட்யூலில் 'கார்பெட்ஸ்

[Sri G. G. Gurumoorthi] [12th February 1959

என்று இருப்பதை நீக்கி, கார்பெட்டுக்கும் வரி விலக்கு அளிக்கவேண்டு மென்று ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறேன். அதை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டு இந்தத் தொழிலைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

SRI A. GOVINDASAMY : இந்த விதி விலக்கில் பனியனையும் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்ற சாதாரண கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவேண்டும். இதில் அமைச்சர் அவர்கள் பிடிவாதமாக இல்லாமல் கொஞ்சம் விட்டுக்கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI M. KALYANASUNDARAM : மூன்றாவது ஷெட்யூலில் 'ஹாண்டு லூம் கிளாத்' என்று போட்டிருப்பதால் இந்தப் பிரச்னை வர இருக்கிறது. அதை மாற்றி 'ஹாண்டுலூம் குட்ஸ்' என்று போட்டுவிட்டால் சரியாகப் போய்விடும். இந்த நேரத்தில் கைத்தறியில் நெய்யக்கூடிய எல்லா பொருள்களுக்கும் விதி விலக்கு கொடுக்கவேண்டுமென்பதுதான் கவனிக்க வேண்டிய விஷயம். ஜமக்காளம் கைத்தறியில் நெய்யப்படுவது போல் ஒரு சிறிய அளவுக்கு 'கிவில்டும்' கைத்தறியில் நெய்யப்படுகிறது. ஒரு விசேஷ தறியைக் கொண்டு ஊசி நூல் சேராமலே 'கிவில்டு' தலை காணி இவை நெய்யப்படுகிறது. அப்படி நெய்யக்கூடியவர்களிடமிருந்து வரி வசூலிக்கப்படுகிறது. அதற்கும் விதி விலக்கு கொடுக்கவேண்டியது அவசியமாகிறது. ஆந்திராவில் இதற்கு விதி விலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு இங்கே விதி விலக்கு கொடுக்காவிட்டால் ஆந்திராவிலிருந்து 'கிவில்டு' இங்கு வந்து போட்டி போடக்கூடும். ஆகையினால் இதற்கு விதி விலக்கு கொடுக்க வேண்டிய அவசியமாகிறது. கைத்தறியினால் நெய்யக்கூடிய எல்லாப் பொருள்களுக்கும் விதி விலக்கு அளிக்க வேண்டியது மிகவும் அவசியம். அதை கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுது இதற்கு உடனடியாக அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல முடியாவிட்டால் 17-வது பிரிவில் விதிவிலக்கு அளிப்பதற்கு கொடுக்கப்பட்டிருக்கக் கூடிய அதிகாரத்தைக் கொண்டாவது ஜமக்காளம், 'கிவில்டு', தலையணை இவைகளுக்கு வரியிலிருந்து விலக்கு
12–40 p.m. அளிக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

* THE HON. SRI R. VENKATARAMAN : இதில் (8-வது) செக்ஷனில் சொல்லப்பட்டிருப்பதையும், 17-வது செக்ஷனில் சொல்லப்பட்டிருப்பதையும், இரண்டிற்கும் இருக்கின்ற வித்தியாசத்தை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். 8-வது செக்ஷனில் மத்திய சர்க்காரால் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கும் பொருட்களைப்பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் 17-வது செக்ஷனில் ராஜ்ய சர்க்கார் எந்தெந்த பொருட்களின் மீது விதிவிலக்கு கொடுக்க வேண்டும் என்பதைப் பற்றி பரிசீலித்து விலக்கு கொடுக்கப்படுவதற்குள்ள அதிகாரத்தை கொடுக்கின்ற செக்ஷனாகும். இதில் எந்தெந்த பொருள்களுக்கு எக்ஸம்ஷன் கொடுக்கவேண்டும் என்று முடிவு செய்யப்படும்பொழுது இவைகளைப்பற்றி கவனிக்க முடியும். பவானி சமுக்காளம் விஷயமாக 17-வது ஷரத்தில் சொல்லப்பட்டிருக்கின்ற விதிகளின் பிரகாரம் வரிவிலக்கு கொடுத்திருக்கிறோம். ஆகவே பின்னால் எதற்கெல்லாம் எக்ஸம்ஷன் கொடுக்கவேண்டும் என்று சர்க்கார் பரிசீலனை செய்யும் போது கனம் கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்னவற்றையும், கனம் கோவிந்தசாமி அவர்கள் சொன்னவற்றையும், கனம் குருமூர்த்தி அவர்கள் சொன்னவற்றையும் கவனத்தில் எடுத்துக்கொள்ளும் என்பதையும் தெரிவித்துக்கொண்டு, இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

The clause was put and carried.

Clause 9 was put and carried.



12th February 1959]

*Clause 10.*

DEPUTY SPEAKER : The motion is :

"That clause 10 do stand part of the Bill."

SRI N. K. PALANISAMI : Sir, I move—

"For the words 'such dealer', *substitute* the words 'the assessing authority.'"

SRI N. MARUDACHALAM : I second the amendment, Sir.

DEPUTY SPEAKER : The clause and the amendment are before the House for discussion.

SRI N. K. PALANISAMI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சாதாரணமாக ஒரு வியாபாரி 50 ரூபாய்க்கு சாமான்கள் வாங்கினாலும்கூட, அங்கிருக்கக்கூடிய வரி விதிக்கின்ற ஆபீஸர், அவரை பிடித்துக்கொண்டு போய் அவர் மேல் வரி விதிக்க முடியும். அவ்விதம் வரி விதிக்கப்பட்ட ஆள், தான் வரி கொடுக்கவேண்டிய அவசியமில்லை என்பதை நிரூபிக்க ஹைகோர்டு வரைக்கும் போய்தான் நிரூபிக்க முடியும். இது சாதாரணமான வியாபாரியால் செய்யக்கூடிய காரியமல்ல. ஆனால் அவர் மேல் வரி போடுவதற்காக எந்த விதமான சாட்சிகளையும் டிபார்ட்மெண்டிலிருந்து சொல்லிவிட முடியும். டிபார்ட்மெண்ட்காரர்கள் சுலபமாக ப்ரூப் செய்து விடுவார்கள். ஆனால் சாதாரண வியாபாரியால் டிஸ்-ப்ரூவ் செய்ய முடியாது. "The fundamentals of justice is that everything should be proved" என்றிருக்கிறது. அப்படியிருக்கும்போது Burden of proof-ஐ வியாபாரியின் மேல் போடுவது என்பது பொருத்தமல்ல. இரண்டு வியாபாரிகளுக்குள் தகராறு ஏற்பட்டிருந்தாலும்கூட, அதன் மூலமாக இன்னொருவருடைய கணக்கை வைத்துக்கொண்டு தங்களுடைய வாதங்களை நிரூபித்துவிடுவார்கள். ஒவ்வொரு விசாரணையிலும் டிபார்ட்மெண்ட்தான் சாட்சியாக இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே initial burden of proof -ஐ வியாபாரியின் மேல் இருக்கக் கூடாது. இது சர்க்காரின் பேரில்தான் இருக்கவேண்டும். ஆகவே இப்பேர்ப்பட்ட சந்தர்ப்பங்களில் டிப்பார்ட்மெண்டுக்குத்தான் இந்த பொறுப்பை கொடுக்க வேண்டும், இல்லையென்றால், மிகவும் "அப்ரவீவ்" கிளாஸாக இருக்கின்ற இதன் மூலம் யாரை வேண்டுமானாலும் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்கின்ற நிலை வந்துவிடும். ஆகவே இதில் முன்னால் இருந்த மாதிரியே இருந்தால் போதும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் பழனிசாமி அவர்கள் சொன்னது போல், burden of proof பொறுப்பை வியாபாரிகளிடத்தில் போடுவதை விட சர்க்கார் ஏற்றுக்கொள்வதுதான் சிறந்ததாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். இவ்விதமான தொல்லைகளினால் அதிகாரிகள் அதிகமாக கஷ்டப்பட வேண்டியிராது. சிறு வியாபாரிகள்தான் கஷ்டப்பட வேண்டியிருக்கும். இவ்விதம் அதிகாரிகளின்மீது போடவேண்டிய பொறுப்பை சிறு வியாபாரிகளின் மீது போடுவது என்பது நமது கட்சிக்கோ அல்லது நமது அரசாங்கத்திற்கோ நல்லது அல்ல என்றுதான் நான் நினைக்கிறேன். ஆகவே அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி யோசித்து தக்க விதத்தில் மாற்றச் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

* THE HON. SRI R. VENKATARAMAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் பழனிசாமி அவர்களாவது வக்கீல் அல்ல, அதனால் அவர்களுக்கு இதைப்பற்றி நன்கு தெரிந்திருக்காது என்று எண்ணினேன். ஆனால் கனம் அங்கத்தினர்

[Sri R. Venkataraman] [12th February 1959

அனந்தநாயகி அம்மையார் அவர்கள் வக்கீல் தொழிலில் அனுபவம் இருந்தும் கூட இதைப்பற்றி சொல்லுவதைக் கேட்டு நான் ஆச்சரியமடைகிறேன். ஒருவருக்கு வருமானம் எவ்வளவு என்று சர்க்காரால் நிரூபிக்க முடியாது. வருமானம் இவ்வளவுதான் கிடைக்கிறது என்று அந்த நபர்தான் நிரூபிக்கவேண்டும். சர்க்கார் நிரூபிக்க இயலாது. **Res-ipsa-loquitor** என்று சொல்லுவார்கள். ஒரு விஷயத்தைப்பற்றி யாருக்கு முழு விபரங்களும் தெரிகின்றதோ அவர்கள்தான் அதைப்பற்றியுள்ள விபரங்களை கொடுக்கவேண்டும். ஒரு வியாபாரி ஒரு பண்டத்தை ஒருமுனை வரியின் மீது வாங்கினரா அல்லது பலமுனை வரியின் மீது வாங்கினரா என்றெல்லாம் சர்க்கார் சொல்ல முடியாது. எல்லா ரெவன்யூ லெஜிஸ்லேஷனிலும் இப்படித்தான் இருக்கக்கூடும். இந்தியன் பீனல் கோடிலும்கூட இவ்விதம்தான் இருக்கிறது. ஆகவே இது மிகவும் " அப்ரஸீவ் " கிளாஸாக இருக்கிறது என்று சொல்ல முடியாது. ஒரு வியாபாரியை தனக்கு வேண்டிய எல்லா விபரங்களையும் தெரிந்திருக்கக்கூடிய ஒருவரை சட்டத்தின் பிரகாரம் வேண்டிய விபரங்கள் கொடுக்கவேண்டும் என்று சொல்லுவது எந்த விதத்திலும் தவருகாது. அதல்லாமல் சர்க்காருக்குத்தான் இந்த பொறுப்பு இருக்கவேண்டும் என்று சொல்லுகிற சட்டம், எந்த நாட்டிலும் எந்த சட்டமும் கிடையாது என்பதையும் நான் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு இப்போது இருப்பது போலவே இருந்தால் போதும் என்று தெரிவித்தார்கள். 1939-வது வருஷத்திய சட்டத்தில் செக்ஷன் 3 (5)-ல் இருப்பது போலத்தான் இப்போதும் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

The amendment was put and lost.

The clause was put and carried.

### *Clause* 11.

DEPUTY SPEAKER : The motion is :

" That clause 11 do stand part of the Bill."

SRI N. K. PALANISAMI : ஸார், இப்போது சாதாரணமாக வரி எவ்வளவு கொடுக்க வேண்டுமென்று வரிவிதிப்பு அதிகாரி சொல்லுகிருரோ அதன்படி கொடுக்க வில்லையானுல், உடனே மாஜிஸ்ட்ரேட்டிடம் போய் சொன்னுல் உடனே சம்மன் அனுப்பி ஒன்றும் விசாரிக்காமல் போலீஸாரைக் கொண்டு கூட்டிக்கொண்டு வரச் சொல்லுகிருர்கள். இந்த மாதிரி சம்மனை அனுப்பி வியாபாரிகளை கூட்டிக்கொண்டு வரச் சொல்வது நியாயமா என்றுதான் கேட்க ஆசைப்படுகிறேன். ஆகவே இதை அவசியம் மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் அவர்கள் இந்த சட்டத்தின் எல்லா ஷரத்துக்களையும் நன்ருக கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதில் வரி விதிப்பு சம்பந்தமாக எந்த விதமான குறைபாடுகள் இருந்தாலும், அதைப்பற்றி அப்பீல் செய்வதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. முதலாவது அப்பீலும், அதற்கு மேல் அப்பலட் ட்ரிப்யூனலும், அதற்கு மேல் ஹைகோர்ட்டுக்கு போவதற்கும் உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. இதில் கடைசியாக தீர்மானம் செய்யப்பட்ட முடிவின் பிரகாரம் வரி கொடுக்காமல் இருந்தால் மாஜிஸ்ட்ரேட் மூலம் வசூலித்துக்கொள்ள முடியும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதல்லாமல் விசாரிக்காமல் போலீசாரை அனுப்பி வியாபாரிகளைக் கொண்டு வருவதுதான் இதன் நோக்கம் என்று கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வார்களானுல், கனம் அங்கத்தினர் அவர்கள் இதை நன்ருகப் புரிந்து கொள்ளாமல்தான் சொல்லுகிருர் என்றுதான் சொல்ல முடியும். ஆகவே இவ்விதம் அமைத்திருப்பது நியாயமற்றது என்று



12th February 1959] [Sri R. Venkataraman]

சொல்ல முடியாது. ஆகவே வரி வசூலிப்பதில் இப்போது அமைத்திருக்கின்ற முறையில் எந்தவிதமான தவறுமில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன் ஆகவே இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

The clause was put and carried.

### *Clause* 12.

DEPUTY SPEAKER : The motion is—

" That clause 12 do stand part of the Bill."

SRI S. LAZAR : Sir, I move—

" In sub-clause (1) *for* the words ' on the basis of prescribed return ', *substitute* the words ' on the basis of the prescribed return '."

SRI D. DASARATHAN : I second the amendment.

SRI N. K. PALANISAMI : I move—

" In sub-clause (2), *for* the words and figure ' if no return is submitted by the dealer under sub-section (1),, ' *substitute* the words and figure ' if no return is submitted under sub-section (1) by the dealer whose turnover is more than Rs. 50,000 '."

" In sub-clause (2), *for* the word ' consider ', *substitute* the word ' be '."

SRI N. MARUDACHALAM : I second the amendment, Sir.

SRI S. LAZAR : Sir, I move—

" In sub-clause (2), *for* the words ' to the best of its judgment ', *substitute* the words ' to the best of its judgment based on the prescribed guides to assessment '."

SRI D. DASARATHAN : I second the amendment.

SRI N. K. PALANISAMI : I move—

" In sub-clause (3), *omit* the words and figure ' sub-section (2) '."

SRI N. MARUDACHALAM : I second the amendment.

SRI S. LAZAR : Sir, I move—

" Omit sub-clause (3) ".

The amendment was duly seconded.

SRI K. SATTANATHA KARAYALAR : Sir, I move—

" In sub-clause (3) *for* the words ' one and a half times ', *substitute* the words ' an equal amount of '."

The amendment was duly seconded.

[12th February 1959

MR. SPEAKER: The clause and the amendments are before the House for discussion.

SRI N. K. PALANISAMI: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, முக்கியமாக, நேற்றுப் பேசிய காலத்திலே குறிப்பிட்டேன் "பெஸ்ட் ஆப் ஜட்ஜ்மெண்ட்"-ஐப்பற்றி இதைப்பற்றி இந்தச் சபையிலே அடிக்கடி பேசியும்கூட, சரியான பதில் கிடைத்தது கிடையாது. "பெஸ்ட் ஆப் ஜட்ஜ்மெண்ட்" இன்னும் ஆர்பிட்ரரியாகத்தான் இருக்கிறது. ஒரு வரி ஆபீஸர் ஒரு ஹோட்டலுக்குப் போய் டோடல் எக்ஸ் பெண்டிசர் என்ன என்று கேட்டு, பொய்க் கணக்கு எழுதியிருப்பதாகச் சொல்லி, அதன் மீது 4 மடங்கு போடுகிறார். இன்னொருவர் 6 மடங்கு போடுகிறார். இது "பெஸ்ட் ஆப் ஜட்ஜ்மெண்ட்" ஆகாது, "வொர்ஸ்ட் ஆப் ஜட்ஜ்மெண்ட்" ஆகத்தான் ஆகும். போடக்கூடிய ரூலில் இதுதான் "பெஸ்ட் ஆப் ஜட்ஜ்மெண்ட்" என்று இருக்கிறதா? இல்லையென்றால் எதை வேண்டுமானாலும் "பெஸ்ட் ஆப் ஜட்ஜ்மெண்ட்" ஆகத்தான் சொல்லி விடலாம்.

அடுத்தபடியாக, உப பிரிவு (2)-ல் "தி அஸெஸிங் அத்தாரிடி ஷல் ஆப்டர் மேகிங் ஸச் என்க்வயரி ஆஸ் இட் மே கன்ஸிடர் நெஸஸரி" என்று இருக்கிறது. சாதாரணமாக ஒரு டீலர் இருக்கலாம், அல்லது ஒரு வியாபாரி இருக்கலாம். அவரைக் கணக்கைக் கொண்டு வாருங்கள் என்று சொல்லலாம். அப்போது அந்த அஸெஸிங் அத்தாரிடி அது சரியானதல்ல என்று எண்ணினால், அவருக்குத் தகுந்தார்போல்—வியாபாரிக்குத் தெரிவித்தாலும் தெரிவிக்கலாம், தெரிவிக்காமலும் இருக்கலாம்—ஏதோ விசாரணை செய்து முடிவு செய்யலாம் என்ற முறையில் இருக்கிறது. ஆகையால் "கன்ஸிடர்" என்ற வார்த்தைக்கு பதிலாக "பீ" என்ற வார்த்தையைப் போட்டுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். "அஸெஸ் தி டீலர் டு தி பெஸ்ட் ஆப் இட்ஸ் ஜட்ஜ்மெண்ட்" என்று இருப்பதால் வரி போடுவது எவ்வளவு என்று தெரியாமல் போடுவதாக இருக்கிறது. அதற்கு 1½ மடங்கு "பெனல்ட்டி" போடுவது அநியாயம். ஆகையால்தான் "ஸப்-செக்ஷன் (2)" என்பதை நீக்கிவிடவேண்டுமென்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். அதையும் சர்க்கார் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM: ஸார், இந்தப் பிரிவிலே வரி விதிக்கக்கூடிய அதிகாரி தன்னுடைய யுக்தம்போல, எது உசிதம் என்று தோன்றுகிறதோ அந்த அடிப்படையில், வரியை நிர்ணயிக்கக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படும்போது நிர்ணயிக்கலாம் என்று இருக்கிறது. எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நிர்ணயிக்கலாம் என்று அர்த்தமில்லை என்று சர்க்கார் சொல்லலாம். நான் அதை ஒப்புக்கொள்கிறேன். ஒரு வியாபாரி வேண்டுமென்றே தவறான கணக்கைக் காண்பித்தால், வேண்டுமென்றே அரசாங்கத்தை ஏமாற்றினால் என்ன செய்வது? அந்த மாதிரி சந்தர்ப்பங்களில் அவைகளைத் தடுக்க அரசாங்கத்திற்கு அதிகாரம் வேண்டாமா என்று கேட்கலாம். ஏமாற்றக் கூடிய முறையில் கணக்குக் காட்டும் வியாபாரிகளுக்கு அனுதாபம் காட்டவேண்டுமென்பது எனது நோக்கமல்ல. இப்போது இருக்கும் நிலையில் சாதாரணமாகக் கூட ஒழுங்கீனமாக நடக்கக்கூடிய அதிகாரிகளிடம் இந்த வியாபாரிகளை பயமுறுத்தக் கூடிய அதிகாரம் கொடுக்கப்படுகிறது. ஆகையால் அதை ஓரளவு கட்டுப்படுத்தவேண்டுமென்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். என்னுடைய யோசனைக்கு ஆதாரமாக டாக்டர் லோகநாதன் அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார் என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு மீண்டும் ஒரு முறை கொண்டு வர விரும்புகிறேன். அவர் சொல்வது "I am convinced that a lagre part of the present discontent is due to the department's failure to maintain good public relations. வரியைக் குறைத்து விட்டால் மட்டும் போதாது. அதிகாரிகள்



12th February 1959] [Sri M. Kalyanasundaram]

நடந்து கொள்ளக்கூடிய முறையைப் பொருத்திருக்கிறது" என்று, கூறியிருக்கிறார். அதோடு கூட 'Best of Judgament' எவ்வளவு சங்கடமாக இருக்கிறது என்று கூறியிருக்கிறார்.

"'Best of Judgment' assessments should in no case be made on small dealers (i.e. those with turnovers less then Rs. 25,000 a year)- In other cases, Best of Judgment assessments may be made but the assessing officer must give sufficient reasons to justify his 'judgment, அதாவது, விசேஷமான சந்தர்ப்பங்களில்தான் யுத்தம் போல வரியை நிர்ணயிக்கிறார்களாதலால், அப்படி வரியை நிர்ணயிப்பதற்கான காரணங்களைக் கொடுக்கவேண்டுமென்று டாக்டர் லோகநாதன் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்: "The assessing authority shall after making such enquiry as it may consider necessary." அதாவது அந்த அதிகாரி தன் இஷ்டம் போல் விசாரணைநடத்தலாம், அவன் தன்னுடைய பியூனைக் கேட்டால் கூட அது விசாரணையாகி விடும், அல்லது அந்த வியாபாரிக்கு எதிராக இருப்பவர்களை விசாரித்து முடிவு செய்யலாம். முடிவு என்ன என்று ரெகார்ட் செய்யவேண்டுமென்று இந்தப் பிரிவில் இல்லை. என்னுடைய யோசனை என்னவென்றால் "The assessing authority shall after making such enquiry as it may consider necessary and after recording its conclusions" என்று சேர்க்கப்படுமானால், இந்தப் பிரச்னை தீர்ந்துவிடும். அவர்களுடைய அதிகாரம் கட்டுப்படுத்தபடும். என்ன முடிவுக்கு வருகிறார்களோ, அதை எழுதி விட்டால், அப்பீல் செய்யக்கூடிய நேரத்தில் உதவியாக இருக்கும். ஆகையால் இதை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் இந்தத் திருத்தத்தை கொடுத்திருந்தேன். குறிப்பிட்ட நேரத்தில் அனுப்ப முடியாதகாரணத்தினால் அந்தத் திருத்தம் இங்கு வருவதற்குச் சந்தர்ப்பம் இல்லாமல் போய் விட்டது. ஆகையால் இதை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெருமளவில் இந்தப் பிரிவும் பாதிக்காமல் நியாயமான வியாபாரிகளுக்கு தொந்தரவு ஏற்படக் கூடிய சமயத்தில் பயன்படுத்திக் கொள்ள சந்தர்ப்பம் ஏற்படும். அதோடு கூட டாக்டர் லோகநாதன் அவர்களுடைய சிபாரிசை ஏற்றுக்கொண்டதாக இருக்கும்.

அதோடு கூட, வியாபாரிக்கே பாதகமாக எல்லாப் பிரிவும் வந்திருக்கிறது. எவ்வளவு வரி விதிக்கவேண்டும் என்பதை அதிகாரியிடத்தில் விட்டு, அதற்கு எதிராக வாதாட வேண்டிய எல்லாப் பொறுப்பும் வியாபாரிக்கே இருக்கிறகாரணத்தினால், அவர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்கும் முறையில் செய்யக்கூடிய முடிவுகளை ரெகார்ட் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI S. LAZAR: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, முதல் திருத்தமானது, ஒன்றாவது உப பிரிவிலே, முதல் வரியிலே "The assessement of a dealer shall be on the basis of the prescribed return relating to his turnover ...."

The article 'the' is absolute necessary in between the words 'of' and 'prescribed'.

The assessment of a dealer shall be on the basis of the prescribed return என்பதில் 'the' என்ற வார்த்தையைச் சேர்க்கவேண்டுமென்று கொடுக்கப்பட்டுள்ளது. காரணம் எந்த ரிடர்னும் அல்ல, "Relating to his turnover" என்பதால் 'the' என்ற வார்த்தை இருக்கவேண்டும்.

[Sri S. Lazar] [12th February 1959

இரண்டாவது திருத்தம், " Do the best of Judgment " என்று சொல்லுகிறபோது இப்போது இருக்கக்கூடிய அதிகாரிகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கொள்கையை அடிப்படையாகக் கொண்டு அவர்களுடைய தீர்ப்பைக் கொடுக்கிறார்கள். அதைக் கொண்டு அஸெஸ்மெண்ட் போடப்படுகிறது. டாக்டர் லோகநாதன் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருப்பது, இந்த விவகாரங்களில் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட அனுபவங்களில் அடிப்படையில் ஒரு " கைட்–ஐ ", எப்படி அஸெஸ்மெண்ட் செய்ய வேண்டுமென்பதைப் பற்றி, அனுபவத்தை வைத்துக்கொண்டு ஒரு "கைட்" ஒன்றைத் தயாரித்து, சட்ட திட்டங்களை வகுத்துக் கொடுக்கவேண்டுமென்று. எந்த அளவுக்குத் தேவை என்பதைப் பார்த்தால் அப்பெல்லெட் ட்ரிப்யூனல் வரையில் வரக்கூடிய கேஸ்களில் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய தீர்ப்புகளில் பார்த்தால் நன்றாகத் தெரியும். குறிப்பாக ஒரு கேஸ் எனக்கு நன்றாக ஞாபகத்தில் இருக்கிறது. கார்பன்டைஆக்ஸைட் எந்த அளவு செலவாகிறது என்பதைக் கொண்டு ஒரு அதிகாரி மனதில் தவறாகக் கொண்ட கருத்தை, அதன் பிறகு அப்பெல்லெட் டிரிப்யூனலுக்கு வந்து, குறிப்பிட்ட அளவு கார்பன்டைஆக்ஸைடில் இத்தனை சோடா பாட்டில்கள்தான் தயாரிக்க முடியும் என்று தீர்ப்பைக் கொடுத்து, அஸெஸ்மெண்ட் அதாரிட்டி கொடுத்த தீர்ப்பு சரியல்ல என்று அந்தத் தீர்ப்பைத் திருப்பி விட்டார்.

1 p.m. அதேபோல், எத்தனையோ கேஸ்கள் அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு வந்திருக்கக்கூடும். ஆகவே, எந்த அடிப்படையிலே அஸெஸ் பண்ணவேண்டும் என்ற முறையை, ஒரு கட்டுப்பாட்டை பாரத்திலே ஏற்படுத்திக் கொடுத்தால், அது மக்களுக்கு ரொம்ப சௌகரியமாக இருக்கும் என்ற முறையிலேதான், அதை ஒரு திருத்தமாக நான் கொடுத்திருக்கிறேன்.

நான் கொடுத்திருக்கும் மூன்றாவது திருத்தம், மூன்றாவது உப பிரிவிலே யாராவது ஒருவர் சரியான கணக்கு கொடுக்கவில்லையானால், அப்பேர்ப்பட்டவருக்கு, கணக்கைப் பரிசீலனை செய்யக்கூடிய அதிகாரி ஒன்றரை மடங்கு அபராதம் விதிக்கலாம், ஏற்கனவே கொடுக்கும் வரியை விட, என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 45-வதுபிரிவிலே, இதுபோன்று தவறு செய்கின்றவர்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. இது போன்ற காரியங்களிலே வியாபாரிகளைப் பொறுத்த வரையில், அவர்களை மிரட்டி வைக்கவேண்டும் என்பது மிக மிக அவசியம் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால், ஏற்கனவே பொது விவாதத்தில் எடுத்துச் சொன்னது போல், அவர்கள் தவறு செய்வார்களானால், ப்ராஸிக்யூஷன் செய்து நடவடிக்கை எடுக்க முடியும் என்று பிரிவு 45–இல் இருக்கும் போது, இந்த இடத்திலே வரியோடு கூட ஒன்றரை மடங்கு அபராதம் விதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதி, மூன்றாவது பிரிவு தேவை இல்லை என்ற முறையிலே திருத்தம் கொடுத்திருக்கிறேன். இவைகளைப் பரிசீலனை செய்து அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN : மேஜையின் மீது வைக்கப்பட்டுள்ள லிஸ்டில் கோயம்பத்தூரில் இருக்கக்கூடிய பணக்கார காங்கிரஸ்காரர் நடத்தக் கூடிய இண்டஸ்ட்ரியில் ஸ்டார்ட்டர்கள் போன்றவைகள் தயாரிக்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனுல் குடியாத்தத்தில் இருக்கக்கூடிய ஏழை காங்கிரஸ்காரர் நடத்தக்கூடிய இண்டஸ்ட்ரியில் ஏராளமான கருவிகள் தயாரிக்கப்படுகின்றன. அங்கே அருமையான ஸ்டாட்டர்கள் தயாரிக்கப்படுகின்றன என்று பெரிய அதிகாரிகளும், பெரிய நிபுணர்களும் சொல்லி இருக்கிருர்கள். அவருடைய பெயரை இந்த லிஸ்டில் ஏன் குறிப்பிடவில்லை ? அதற்குக் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இதைப்பற்றி தனியாகக் கேள்வி போட்டால் விசாரித்து பதில் சொல்ல முடியும்.

SRI S. M. ANNAMALAI : இந்த மின்சார சாமான்களை உற்பத்தி செய்வதற்கு சர்க்கார் ஏதாவது ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்க உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இப்பொழுது அவசியம் இல்லை. இண்ட்ஸ்ட்ரியல் பாலிஸி தீர்மானம் பிரகாரம் அது தனியார் துறைக்கு ஒதுக்கப்பட்ட விஷயம்.

* Printed as Appendix I on pages 322–328 infra.



13th February 1959]

SRI K. B. S. MANI : தற்கால உத்தரவுப்படி சிறிய மேக்கர் போன்ற சாமான்கள் உபயோகப்படுத்த வேண்டுமென்று வைத்து இருந்தும் அவைகளுக்கும் லைசென்ஸ் வழங்கப்படும் என்ற உத்தரவும் போடப்பட்டிருக்கிறது. அதனுல் மேக்கர் போன்ற டெஸ்ட்பண்ணக்கூடிய சாமான்களும் கிடைப்பது இல்லை. அவைகளை இங்கேயே தயாரிக்க அரசாங்கம் முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன். அவைகள் சுலபமாகக் கிடைப்பதற்கும் வழி செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : தேவைப்படுகிற சாமான்களை உற்பத்திசெய்வதற்கு முதலாளிகள் அக்கறை கொள்ளுவார்கள். லாபம் அதிகமாக வரும் என்று வருவதினுல் அவர்களே உற்பத்தி செய்ய முன் வருவார்கள். ஏதாவது சாமான்கள் வேண்டியதாக இருந்தால் அவைகளை உற்பத்தி செய்ய அவர்களே முன் வருவார்கள். தனியார் துறையில் சர்க்கார் என்ன உதவிசெய்ய வேண்டுமென்று கருதுகிருர்களோ அதைச் செய்யும்.

SRI M. P. SUBRAMANIAM : மின்சார விஸ்தரிப்புத் திட்டம் இப்பொழுது பரவலாக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கும் நேரத்தில் ஸ்டாட்டர்கள், சுவிச்சுகள் போன்ற சாமான்களை ஒன்றுக்கு ஒன்றரை பங்கு கூடுதலாகக் கொடுத்து வாங்க வேண்டியதாக இருக்கிறது. இதைப்பற்றி அரசாங்கத்திற்குத் தெரியுமா ? இங்கே செய்யப்படும் சாமான்கள் போதுமான அளவு இல்லாத காரணத்தால், மேலும் வெளிநாடுகளிலிருந்து போதிய அளவு இறக்குமதி செய்வது இல்லாத காரணத்தால் இந்த சாமான்கள் ப்ளாக் மார்க்கெட்டில் விற்கப்படுகின்றன என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? ஆகவே இவைகளை போதுமான அளவுக்கு இங்கேயே உற்பத்தி செய்ய தனியார் துறையில் விடுவதற்கு அரசாங்கத்தினிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : தனியார் துறையில் ஏதாவது திட்டம் ஏற்படுத்த வேண்டும் என்று அவர்கள் கருதினுல் சர்க்கார் நிச்சயமாக அதைச் செய்யும்.

*Planting trees on road sides*

* 287 Q.—SRI V. ARUNACHALA THEVAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state the amount spent for planting trees on road sides by the Highways Department, Pudukkottai Division in the Tiruchirappalli district for the years 1957 and 1958?

THE HON. SRI P. KAKKAN : The expenditure on planting avenue trees on Government roads was Rs. 27,813 in 1957 and Rs. 21,306 in 1958 and that on District Board roads was Rs. 13,594 in 1957 and Rs. 11,410 in 1958.

*Community Development Scheme*

* 288 Q —SRI V. K. KOTHANDARAMAN : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

1958-வது ஆண்டில் வடாற்காடு ஜில்லாவில் எங்கெங்கே சமுதாய அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : During the year 1958 the following five blocks were launched in the North Arcot district :—

(1) Tirupattur Block,

(2) Wallajah Block,

(3) Sholinghur Block,

(4) Kaveripakkam Block, and

(5) Vaniyambadi Block.

**Sri V. K. KOTHANDARAMAN** : வட ஆற்காடு ஜில்லா ஒரு பஞ்ச பிரதேசம், வரண்ட பிரதேசம். ஆகவே சமுதாய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் அதைக் கொண்டுவரவேண்டும் என்று கனம் முதல் அமைச்சர் அவர்களுக்கு எழுதியதற்கு அதைப்பற்றி எங்களுடைய ஜில்லா ப்ளானிங் கமிட்டியில் வைத்து அவர்களுடைய முடிவையும் எடுத்து அதைப்போல் செய்யலாம் என்று எழுதியவர் அங்கே முடிவு எடுத்து அதையும் இங்கே அனுப்பினார்கள். ஆனால் இங்கே அதற்கு மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே ப்ளானிங் கமிட்டியின் முடிவுதான் முடிவா அல்லது சர்க்காருடைய முடிவுதான் முடிவா என்பதைப்பற்றி தெளிவாக தெரிவிக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : சில விஷயங்களில் அங்கே சொல்வதை ஏற்றுக்கொள்வதுண்டு. ஆனால் இது சம்பந்தமாக அங்கே விவகாரம் நடந்து முடிவு செய்யப்பட்டிருக்கிறது. எனக்குத் தெரிந்த வரையில் வட ஆற்காடு ஜில்லாவில் இது சம்பந்தமாக ப்ளானிங் கமிட்டியில் ஒரு முடிவுக்கும் வர முடியாதபடி சீட்டுப்போட்டு குலுக்கிப்பார்த்து அதன்படி முடிவு எடுத்து இருக்கிறார்கள். அம்மாதிரியான முடிவை ஏற்றுக் கொள்ள முடியாது. இங்கேயும் அப்படி சீட்டுப்போட்டு குலுக்கி எடுக்க முடியாது.

**Sri D. S. AUTHIMOOLAM** : இது வட ஆற்காடு ஜில்லாவைப் பொறுத்த கேள்வியாக இருந்தாலும் பொதுவாகக் கேட்க வேண்டுமென்று . . .

**Mr. SPEAKER** : அப்படிக் கேட்கக் கூடாது.

**Sri D. S. AUTHIMOOLAM** : Suppose the Hon. Minister agrees to it, I can get a reply.

Mr. SPEAKER : I must also admit the question. The Minister is not the final authority in the matter.

*River pumping scheme in Tiruchendur*

* 289 Q.—**Sri M. S. SELVARAJAN** : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் தாலூகாவில் ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டின் கீழ் தாம்பரபரணி நீர்ப்பாசனத்திற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் **River pumping** Scheme எந்த இடத்தில் அமைக்கப்படும்?

(ஆ) அதன் உத்தேச செலவு என்ன ?

(இ) அதனால் பாசனம் பெற உத்தேசிக்கப்படும் நிலங்களின் அளவு என்ன?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** :—

**(a) At Mela Authoor village.**

**(b) Non-recurring : Rs. 19,100.**
**Recurring (per year) : Rs. 4,126.**

**(c) 120·00 acres.**

**Sri M. S. SELVARAJAN** : புதிதாக சாகுபடிக்குக் கொண்டுவரக்கூடிய நிலங்களுக்கு பெட்டர்மெண்ட் டாக்ஸ் விதிப்பது என்பது அரசாங்கத்தின் உத்தேசமா? அல்லது தண்ணீர் தீர்வை விதிக்க உத்தேசமா? விதிக்கப்படுமானால் தண்ணீர் தீர்வை நிலத் தீர்வையை விட அதிகமில்லாமல் பார்த்துக்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : அந்த ஆத்தூர் கிராம திட்டத்தை பொறுத்தமட்டில் பெட்டர்மெண்ட் பீஸ் விதிப்பதாக இல்லை, ஏக்கருக்கு எவ்வளவு செலவு என்பதைப் பார்த்து ஏக்கருக்கு எவ்வளவு விதிப்பது என்பதுதான் உத்தேசம்.

*Children's Library, Madras*

* 290 Q.—Sri M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the number of members on roll in the Children's Library, Madras, during the year 1957-58; and

(b) the number of books issued during that year?

The Hon. Sri C. SUBRAMANIAM : (a) 375.

(b) 6,889.

Sri M. JAGANNATHAN : May I know, Sir, what is the membership fee for these Children's Libraries?

The Hon. Sri C. SUBRAMANIAM : I do not have the information with me, Sir.

**Sri M. JAGANNATHAN : From the answer given by the Hon. Minister I find that these libraries are not being properly utilized by the members of the public.** May I know what steps the Government wish or intend to take to popularize these libraries?

The Hon. Sri C. SUBRAMANIAM : My information is that these libraries are becoming more and more popular every year.

**Sri A. A. RASHEED** : What is the total number of books in these **libraries?**

The Hon. Sri C. SUBRAMANIAM : I do not have the information regarding the exact number of books in these libraries.

**Sri A. GOVINDASAMY** : இந்த குழந்தைகளின் நூல்நிலயத்தில் கல்கண்டு வைக்கப்பட்டிருக்கிறதா ? (சிரிப்பு)

**The Hon. Sri C. SUBRAMANIAM** : அது அங்கே இல்லாமலிருந்தால் கனம் கோவிந்தசாமி அவர்கள் அதை வாங்கி வைக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

*Health Check-up Clinic*

* 291 Q.—Sri M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) the number of persons who availed of the facilities **provided** at the Health Check-up Clinic in the Government General **Hospital**, Madras, during 1957-58; and

(b) the amount of fees collected from them for that year?

The Hon. Sri M. A. MANICKAVELU : (a) Six, Sir.

**(b) Rupees sixty.**

[13th February 1959

SRI M. JAGANNATHAN : In view of the fact that many a poor person does not find it practicable to go to the hospital to have his health checked up on account of the high fees demanded, will the Government consider the desirability of reducing the fee that is now demanded for health check up in the Government General Hospital?

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, the fee was reduced from Rs. 20 to Rs. 10.

SRI S. NAGARAJA MONIGAR : May I know, Sir, whether there is any proposal with the Government to start such health check up clinics in the Taluk Headquarters Hospitals at least once a week so that the people can avail themselves of the opportunity and the facility and get their health checked up?

THE HON. SRI M. A. MANICKAVELU : Even this check up clinic in the metropolis is not patronized. That being so I do not think it worthwhile to open these in other places. People are not still check up minded (Laughter).

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : நம்முடைய சென்னை நகர பெரிய ஆஸ்பத்திரியில் நூறு ரூபாய்க்கு அதிகமாக வருமானம் வரக் கூடியவர்கள் சிகிச்சை பெற வேண்டுமானால் அவர்களிடமிருந்து ஆஸ் பத்திரி பணம் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று இருக்கிறது. அதனால் இரண்டு லட்சம் ரூபாய் வருமானம் வருகிறது என்றும், செலவு 70 அல்லது 80 லட்சம் ரூபாய் ஆகிறது என்றும் சொல்லப்படுகிறது. சாதாரணமாக 100 ரூபாய் வருமானம் வரக்கூடியவர்களுக்கு தன்னுடைய வாழ்க்கையை நடத்துவதற்குக்கூட முடியாமல் இருக்கிறது. ஆகவே 100 ரூபாய் என்பதை. . . .

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் மன்னிக்க வேண்டும். இங்கே கேட்கப்பட்டிருக்கும் கேள்வி ஹெல்த் செக் அப்பைப் பற்றியது. நீங்கள் கேட்பது சிகிச்சைக்கு கட்டணம் கட்டுவதைப்பற்றி. அதனால் இந்தக் கேள்வி எழாது.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : ஜெனரல் ஆஸ்பத்திரியில் பல நோய்களுக்கு சிகிச்சை செய்யப்படுகிறது..... ஆகவே 100 ரூபாய் என்பதை ரூ. 250 அல்லது 300 ரூபாய் என்று உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதனால் பலர் சௌகரியம் அடைவார் கள். அப்படி உயர்த்துவதற்கு ஏதாவது உத்தேசம் உண்டா என்பதை கனம் மந்திரிகளிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தக் கேள்வியை தனியாகக் கேட்கவேண்டும். செக் அப் க்ளினிக்கைப்பற்றி கேள்வி கேட்டால் பதில் சொல்ல முடியும்.

*Aluminium plant*

* 292 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state the steps taken by the Government to set up an aluminium plant in the private sector in the State?

THE HON. SRI R. VENKATARAMAN : The Government have constituted a Committee of Industrialists with Sri R. Venkataswamy Naidu as Convenor to advise them in the matter of preparing



13th February 1959]

financial and other details in respect of the Salem Aluminium Plant to be set up in the Private Sector. On the advice of the Committee, a team of Experts from Montecatini of Italy was invited to give us a project report on the proposed aluminium plant. The Experts who inspected the area in November-December 1958 are preparing their report.

* 293 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the proposal to set up an aluminium plant in Salem district has reached a final stage; and

(b) whether the same would be in the public sector or private sector?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) The question of setting up the Salem-Mettur Aluminium Plant in the Private Sector is under active consideration. 9-20 a.m.

* 315 Q.—SRI A. GOVINDASAMY : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1958-ம் ௵ அக்டோபர் ௴ 10௳ தொழில் திட்டக் கமிட்டியின் கன்வீனர் திரு. ஆர். வெங்கடசாமி அவர்கள் சேலம் அலுமினியத் தொழிற்சாலை அமைப்பு பற்றிய திட்ட அறிக்கை ஒன்று நிதி அமைச்சரிடம் சமர்ப்பித்தாரா ?

(ஆ) அதன் சாராம்சம் என்ன ?

(இ) இந்தத் தொழிற்சாலை விஷயமாக இத்தாலியிலிருந்து நிபுணர்கள் குழு ஒன்றை அமைக்க உத்தேசம் உண்டா ? எப்பொழுது?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) Yes, Sir, Sri Venkataswamy Naidu addressed a note to the Government of Madras.

(ஆ) The note has been prepared from Geological Survey of India reports and contains information on the places in Shevaroy Hills where bauxite is available, the quality and quantity of bauxite and the economics of the Aluminium project.

(இ) Yes, Sir. At the invitation of this Government, two Experts from Montecatini, Italy, came to India in the third week of November 1958 and inspected the bauxite-bearing areas in Salem district. They are expected to submit their project report on Salem Aluminium Plant.

SRI N. K. PALANISAMI : இதற்கு உத்தேச மூலதனம் எவ்வளவு ? இதில் சர்க்கார் பங்கு ஏதாவது இருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதைப் பற்றி ப்ராஜக்ட் ரிப்போர்ட் வந்த பிறகுதான் நிர்ணயமாகச் சொல்ல முடியும் இருந்தாலும் பத்தாயிரம் டன் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலைக்கு சுமார் பத்து அல்லது பன்னிரண்டு கோடி ரூபாய் செலவு ஆகும்.

SRI A. GOVINDASAMY : இந்த ராஜ்யத்தில் இந்த அலுமினியத் தொழிற்சாலையை அரசாங்கம் எடுத்து நடத்த முன் வராமல் தனியாரிடம் விடுவதன் காரணம் என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிதிக் குறைவு ஏற்பட்டதன் காரணமாக இந்த அலுமினியம் " ப்ளாண்டுக்கு " " லோ ப்ரையாரிடி " கொடுத்து கடைசியாக செய்து விட்டார்கள். இதைத் தனியார் துறை எடுத்து நடத்த முடியும் என்று மத்திய சர்க்காரிடத்தில் சொல்லியது சர்க்கார்தான். சொல்லப்போனால் இப்பொழுது இத்தாலியில் இருந்து வந்திருக்கும் நிபுணர்களுக்கு ஆகும் செலவுகளைச் சென்னை ராஜ்ய சர்க்கார்தான் செய்துகொண்டிருக்கிறார்கள். தனியார் துறையில் கம்பெனி ஏற்படுத்திய பிறகு இந்தத் தொகை சர்க்கார் மூலதனமாக ஆக்கப்படும்.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : இந்த அலுமினியத் தொழிற்சாலையை மேட்டூரில் ஆரம்பிப்பது என்று திட்டமா ? அல்லது சேலம் ஜில்லா டேவிஸ்பட்டியிலே ஆரம்பிப்பதாகத் திட்டமிடப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இன்னும் முட்டையே இடவில்லை. குஞ்சுகளைப்பற்றி எண்ணுவதில் பிரயோஜனம் இல்லை.

SRI A. A. RASHEED : Is it a fact that the initial report of the Italian expert is a favourable one?

THE HON. SRI R. VENKATARAMAN : I am not at present at liberty to disclose the initial report.

SRI M. P. SUBRAMANIAM : ஏற்கனவே அலுமினியத்திற்கு வேண்டிய மூலப் பொருள்கள் கனடாவிற்கு ஆராய்ச்சிக்காக அனுப்பப்பட்டதா ? இப்போது இத்தாலியில் வந்திருக்கிற நிபுணர்கள் திட்டத்தை எப்படி எடுத்துக்கொள்ளலாம் என்பதைப் பரிசீலிக்கவா அல்லது அலுமினியத் தொழில் துவங்குவதற்கே லாயக்குள்ளதா என்பதை ஆராய்ச்சி செய்திருக்கிறார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஏற்கனவே நாம் எடுத்து அனுப்பிய " பாக்ஸைட் " சரியான இடத்தில் இருந்து எடுக்கப்படாததால் அதில் குறைவான அலுமினியம் " கண்டெண்ட் " இருந்ததாகக் கூறப்பட்டது. அதன் காரணமாக மத்திய சர்க்கார் அதை இறுதியில் அமெரிக்காவுக்கு அனுப்பவே இல்லை. அதற்குப் பிறகு பிரான்ஸில் இருந்து வந்த " சேபாட் " ( Sabot ) என்பவர் இதைப் பரிசீலனை செய்து பார்த்து இந்த பாக்ஸைட், அலுமினீயம் பொருந்தியதாக இருக்கிறது என்று கூறினார். இத்தாலியில் இருந்து வந்தவர்கள் இதை நன்றாகப் பரிசீலனை செய்து இந்தத் தொழிலை எடுத்துக்கொள்ள முடியும் என்று அபிப்பிராயம் சொல்லி இருக்கிறார்கள். இந்த பாக்ஸைட்டை இப்பொழுது இத்தாலிக்குப் பரிசீலனைக்காக அனுப்பி இருக்கிறோம்.

SRI A. GOVINDASAMY : இந்தத் திட்டத்தை நிறைவேற்ற ரஷ்யாவில் இருந்து ஏதாவது உதவி அளிப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இல்லை.

*House-sites for Harijans*

* 294 Q.—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) the villages in Lalgudi firka, Lalgudi taluk, Tiruchirappalli district where the Harijan colonies (cheries) are found thickly populated and from where petitions have been received for assignment of house-sites;





(b) the number of such applications pending before the Harijan Welfare Department;

(c) whether acquisition proceedings have been started in the said firka for assignment of house-sites; and

(d) the time by which acquisition proceedings will be completed and possession given?

THE HON. SRI P. KAKKAN : (a) A statement * is placed on the table of the House.

(b) Eighteen, Sir.

(c) Yes, Sir.

(d) No time-limit can be fixed. It depends upon the nature of each case.

* 295 Q.—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state the number of Harijans provided with house-sites free of cost in the Tindivanam taluk, South Arcot district, in 1957–58?

THE HON. SRI P. KAKKAN : No house-sites were assigned to the Harijans free of cost in Tindivanam taluk, during 1957–58, though lands were acquired for the purpose.

SRI S. LAZAR : இவைகளில் பல " அக்விசிஷன் ப்ரோபோசல்கள் " சர்க்காரிடத்திலே " பெண்டிங் " ஆக இருப்பதாகவும், அதற்குக் காரணம் ஏற்கனவே பிரசுரிக்கப்பட்ட " நோடிபிகேஷன் " பிரகாரம் அக்விசிஷன் " ஆபீசர் " ஆர். டி. ஓ. வாக இருப்பதால் இப்பொழுது இருக்கக் கூடியவர் " டிஸ்ட்ரிக்ட் ஹரிஜன் வெல்பேர் ஆபிசராக " இருப்பதன் காரணமாகவும் தாமதம் ஏற்படுவதன் காரணமாக அரசாங்கம் இதை உடனடியாகக் கவனித்து நடைமுறையில் கொண்டுவர நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI P. KAKKAN : சீக்கிரம் நடைமுறையில் நடத்தத் தக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. ஆறு " கேஸ் "கள் " இன்வெஸ்டிகேஷனில் " இருக்கின்றன. 18 கேஸ்கள் நோடிபிகேஷன் ஆப் டிக்ளரேஷனுக்குத் தகுந்த நிலைமையில் இருக்கின்றன.

SRI M. JAGANNATHAN : திண்டிவனம் தாலூகாவில் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டபோதிலும் மனைகள் வழங்குவது இல்லை என்று மந்திரிகள் அவர்கள் கூறினார்கள். அதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI P. KAKKAN : " சைட் " வாங்க பணம் கொடுத்திருக்கிறதா என்று கேட்டார்கள். பணம் கொடுக்கவில்லை என்று சொல்கிறேன்.

SRI K. PONNIAN : ஹரிஜனங்களுக்கு மனை லால்குடி பிர்க்காவில் மட்டும் அல்ல. மாகாணம் பூராவும் பிரச்னையாக இருக்கிறது. அவர்களுக்கு மாடு வாங்கும் சலுகை, கிணறு வெட்டும் சலுகை அளிப்பதைக்கூட தள்ளிப்போட்டு மனைப் பிரச்னையை உடனடியாகத் தீர்க்க சர்க்கார் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : அந்த முடிவினை இப்போது சொல்வதற்கில்லை.

SRI A. GOVINDASAMY : ஹரிஜனங்களுக்கு மனைக் கட்டு வழங்குவதில் எல்லா இடங்களிலும் இலவசமாக வழங்குவதற்கு அரசாங்கம் உத்தரவு இடுமா ?

* Printed as Appendix II on page 323 infra.

THE HON. SRI P. KAKKAN : எங்கெல்லாம் ஹரிஜனங்கள் பணம் கொடுத்து வாங்கமுடியாமல் இருக்கிறார்களோ அங்கெல்லாம் நிலம் இலவசமாக வழங்கப்படும்.

SRI S. LAZAR : நான் சொன்னது, இப்பொழுது திருச்சி ஜில்லாவில் இருந்து சுமார் 60 "ப்ரொப்போசல்கள் சர்க்கார் கையில் இருக்கின்றன. அதைச் " சாங்ஷன் " செய்து அனுப்பாததற்கு காரணம் "Section 6 of the Land Acquisition Act." படி நோடிபிகேஷன் கொடுத்தபோது "லாண்ட் அக்விசிஷன் ஆபீசர்" "ரெவினியூ டிவிஷனல் ஆபீசர் " என்று கொடுத்து இருந்தது. இப்பொழுது அந்த வேலையை டிஸ்ட்ரிக்ட் ஹரிஜன வெல்பேர் ஆபீசர் செய்யவேண்டுமென்று அரசாங்கம் " நோடிபிகேஷன்" கொடுத்திருப்பதன் காரணமாக இந்த "ப்ரொபோசல்கள் " எல்லாம் முடங்கிக் கிடக்கின்றன. இதைத் திருத்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்குமென்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : இது சம்பந்தமாகப் பரிசீலனை செய்யப்படும்.

SRI K. B. S. MANI : இந்தச் சர்க்காருடைய திட்டத்திலே எல்லா நன்மைகளையும் ஹரிஜனங்களுக்குக் கொடுப்பது பற்றிப் பரிசீலனை செய்யும் வேலைகளை " ஜே " டிவிஷன் பரிசீலித்து வருகிறது. இந்த டிவிஷனை வருஷா வருஷம் " ஆடிட் " செய்வதில்லை. இந்த டிவிஷனை " ஆடிட் " செய்ய அரசாங்கம் உத்தரவு இடுமா ?

THE HON. SRI P. KAKKAN : தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : சார், இந்த ஹரிஜன நல இலாகா மற்ற இலாகா வேலைகளிலும் ஹரிஜனங்களுக்கு மனை " அக்வையர் " பண்ணுவது போன்ற பல வேலைகளைச் செய்ய வேண்டி இருக்கிற காரணத்தினால் அவர்களுக்கு அதிகமாக வேலை இருக்கிறது. அந்த இலாகாவுக்கு அதிகப்படி சிப்பந்திகள் போடுவது, ஜில்லா ஹரிஜன இலாகா அதிகாரிகளுக்கு ஜீப் வழங்குவது போன்ற காரியங்களைச் செய்ய சர்க்கார் யோசிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : அதற்குக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

SRI V. K. KOTHANDARAMAN : பொழுது விடிந்தால், பொழுது போனால் ஹரிஜன மக்கள் தங்கள் வாழ்க்கையை நடத்துவதற்கே நேரம் எல்லாவற்றையும் செலவழிக்க வேண்டி இருக்கிறது. அவர்கள் வீட்டு மனை கோரி விண்ணப்பம் செய்து கொள்வதும், அதைத் தொடர்ந்து சென்று " சாங்ஷன் " ஆகிறதா என்று பார்ப்பதற்கும் முடியாத நிலைமை விளைகிறது. ஆகவே சட்டத்தைத் திருத்தியாவது உடனடியாக யார் யாருக்கு வீடு இல்லையோ அவர்களுக்கு எல்லாம் வீட்டு வசதி கொடுக்க சர்க்கார் யோசிக்குமா ?

MR. SPEAKER " இது ஒரு யோசனைதான்"

*Exclusion of certain posts from the purview of the Madras Public Service Commission*

* 296 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Chief Minister be pleased to state the reasons for excluding from the purview of the Madras Public Service Commission in 1957 the posts of—

(i) Assistant Director of Publicity for work connected with the integrated publicity scheme;





(ii) Officer-in-charge of Information Centre in Madras;

(iii) Temporary post of Legal Adviser to Deputy Inspector General of Police, Railways and C.I.D., Madras; and

(iv) District Publicity Officers?

THE HON. SRI C. SUBRAMANIAN : A statement * is placed on the table of the House.

SRI M. JAGANNATHAN : Sir, from the statement pliaced on the table of the House I find that the post of Assistant Director of Publicity for work connected with the integrated publicity scheme, is a post which is an isolated one. Again the post of temporary Legal Adviser to Deputy Inspector-General of Police, Railways and C.I.D., Madras, is an isolated one. Similarly the District Publicity Officers' posts are isolated ones. May I know why the Government should keep isolated posts of this type and bring them under the purview of the Government instead of bringing them under the purview of the Public Servcie Commission? Will it not be in the interests of public policy to see to it that these posts are brought under the purview of the Public Service Commission instead of bringing them under the purview of the Government? 9-30 a.m.

THE HON. SRI C. SUBRAMANIAM : All these aspects were taken into consideration, and the Government have taken this decision.

SRI A. A. RASHEED : Sir, apart from these posts, are there any other posts which are excluded from the purview of the Public Service Commission?

THE HON. SRI C. SUBRAMANIAM : I am sure there are a few more posts.

SRI T. S. RAMASWAMY PILLAI : From the answer given by the Government it is seen that these posts require special technical knowledge and experience. May I know (1) what technical and special knowledge these officers are now possessing and (2) whether the public Service Commission are not recruiting even now technical personnel to the various departments?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, these are all mainly Publicity Officers. Publicity is for the Government activities and the various plans and schemes. Naturally a person who is opposed to the views of the Government or to the policies of the Government certainly cannot be a Publicity Officer. For this purpose in all these cases, it is not merely the qualification which will have to be taken into consideration but also the aptitude of the officer. For example take the Khadi Officer. We cannot appoint a Khadi officer who has absolutely no faith in doing publicity for khadi. In the same way for the purpose of giving publicity to the various plans and schemes, we cannot appoint a person if he has no faith in the plans and schemes and within his heart of hearts wants to torpedo the execution of the plans and schemes. All these things

* Printed as Appendix III on page 324 infra.

have to be taken into consideration. That is why the Government have reserved powers to themselves to appoint the Publicity Officers in whom they have got confidence.

SRI V. K. RAMASWAMY MUDALIAR: Sir, the Hon. Minister has said that there are some other posts which are not brought under the purview of the Public Service Commission. May I know why those posts also are not included in the answer laid on the table of the House?

THE HON. SRI C. SUBRAMANIAM: I would request the hon. Member to read the main question.

MR. SPEAKER: The question is clear. The hon Member (Sri M. Jagannathan) wanted information only in respect of four categories.

*Permission to teachers to sit for S.S.L.C. Examination*

MR. SPEAKER: The hon. Member (Sri T. Veluchami) is not in his seat. The question and the answer will be printed in the official proceedings.

* 297 Q.—SRI T. VELUCHAMI: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா ?

(அ) ஹையர் கிரேடு ஆசிரியர்களும், மற்றும் பண்டிட், முன்ஷி போன்ற ஆசிரியர்களும் எஸ்.எஸ்.எல்.சி. பரீக்ஷைக்கு இதற்கு முன்பு அனுமதிக்கப்பட்டது போல், 1959 மார்ச் மாதம் வரும் பரீக்ஷையில் அனுமதிக்கப்படுவார்களா ?

(ஆ) அதற்குப் பின்னால் வரும் வருஷங்களிலும் அனுமதிக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

(இ) இல்லை என்றால், ஏன் ?

THE HON. SRI C. SUBRAMANIAM: (a) & (b) Yes, Sir.

(c) Does not arise.

*Kovilpatti Government Hospital*

* 298 Q.—SRI V. SUBBIAH: கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா ?

(அ) கோவில்பட்டி ஆஸ்பத்திரியை அரசாங்கம் எடுத்துக்கொண்ட பின் என்ன மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன ?

(ஆ) கோவில்பட்டி ஆஸ்பத்திரியில் ஆபரேஷன் தியேட்டர், மெட்டர்னிடி வார்டுகள், படுக்கைகள் விஸ்தரிக்க நோக்கம் உண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: (a) None so far, Sir.

(b) The matter is under consideration.

SRI V. SUBBIAH: கோவில்பட்டி அரசாங்க ஆஸ்பத்திரி தாலுகாவிலேயே ஐந்து லட்சம் ஜனத்தொகை உள்ள தலைநகரத்தில் உள்ளது. அதற்குப் பின்னால் எடுக்கப்பட்ட ஆஸ்பத்திரிகளான—நான்குநேரி, தென்காசி, சங்கரன்கோவில் முதலிய ஜனத்தொகை, வருமானம் இதைவிடக்



குறைவாகவுள்ள இடங்களில் இருக்கும் ஆஸ்பத்திரிகளில் அதிகமான அபிவிருத்தி செய்திருந்த போதிலும் கோவில்பட்டி ஆஸ்பத்திரியில் எந்தவிதமான வேலையும் செய்யாமல் இருப்பதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU: இப்போது அங்கே 14 படுக்கைகள் இருக்கின்றன. அதற்குமேலே இரண்டு வார்டு—ஒவ்வொரு வார்டிலும் 20 படுக்கை வீதம் கட்டுவதற்கும், ஆப்பரேஷன் வார்டு கட்டுவதற்கும், டிஸ்பென்சரி, லேபர் ரூம், எக்ஸ்ரே ப்ளாக் முதலியவை ஏற்படுத்துவதற்கும் டி. எம். ஓ. விடமிருந்து சிபார்சு எதிர்பார்க்கப்படுகிறது.

*Workers' participation in management*

* 299 Q.—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of Sri K. Sattanatha Karayalar): Will the Hon. the Minister for Industries be pleased to state the result of the experiment on the scheme of workers' participation in management?

THE HON. SRI R. VENKATARAMAN: The scheme of worker participation in management was introduced in this State in Messrs. Simpson and Group Companies (Private Sector) and in Government Transport Central Workshop, Chromepet (Public Sector). The proposal to have a Joint Council of Management in the Madras State Transport Department had, however, to be dropped, owing to disagreement in regard to the constitution of the Council.

While the Joint Council of Management in respect of the Press Group of Messrs. Simpson Group of Companies is reported to be working satisfactorily, the Joint Council of Management for the engineering group has not been functioning since January 1958 owing to certain differences of opinion on procedural issues in conducting the meeting of the Joint Council of Management.

SRI M. KALYANASUNDARAM: குரோம்பேட் தொழிற்சாலையில் தொழிலாளர்கள் நிர்வாகிகள் சேர்ந்து கவுன்சில் ஏற்படுத்த முடியாது போன காரணம் என்ன ? எந்த விஷயங்களில் அபிப்பிராயபேதம் ஏற்பட்டது ?

THE HON. SRI R. VENKATARAMAN: ஆரம்ப காலத்தில் நிர்வாகஸ்தருடைய பிரதிநிதி சேர்மனாக ஆறு மாதம் இருக்கவேண்டும். பிறகு அனுபவத்தை ஒட்டி என்ன மாறுதல் செய்ய வேண்டுமென்பதைப் பரிசீலனை செய்கிறேன் என்று நான் சொல்லியும் கூட தொழிலாளர்கள் ஒத்துக்கொள்ளாததால் அந்தக் கவுன்சிலை நிறுவ முடியவில்லை.

SRI T. S. RAMASWAMY PILLAI: ப்ரைவேட் செக்டாரில் ஏன் இந்தக் கவுன்சில் சரியாக ஏற்படுத்தப்படவில்லை ?

THE HON. SRI R. VENKATARAMAN: தொழிலாளர்கள் நான் சொன்னதை ஒத்துக்கொள்ளாதது தான்.

SRI S. NAGARAJA MONIGAR: அநேக முக்கியமான தொழில்களை நம் நாட்டில் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக வெளிநாட்டு உள்நாட்டு நிபுணர்களை எல்லாம் கலந்து ஆலோசித்து வருகிறோம். இப்படி இருக்க தொழிலாளர்களைச் சேர்த்துக்கொண்டு தொழில் அமைப்பது என்றால் சாத்தியமா ? அது ஒத்து வருமா ? எந்த அளவில் ஒத்துவரும் என்பதைத் தீர ஆலோசித்திருக்கிறார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN: தொழிலாளர்களுடைய ஒத்துழைப்பினால் தான் உற்பத்தியைப் பெருக்க முடியும் என்பது சர்க்காரின் அடிப்படையான கொள்கை.

[13th February 1959

**Sri M. KALYANASUNDARAM** : நிர்வாகிகள் சொன்ன யோசனையைத் தொழிலாளர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொன்னார்கள். தொழிலாளர்கள் சொன்ன யோசனை என்ன ? இவர்கள் சொன்ன யோசனையை நிர்வாகிகள் ஏன் ஏற்றுக்கொள்ளவில்லை ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : நிர்வாகிகள் ஒன்றும் சொல்லவில்லை. நான் சொன்ன யோசனையைத்தான் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லையென்று சொன்னேன்.

### *'Flu'*

* 300 *Q.*—**Sri N. K. PALANISAMI** : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether there was a large number of cases of 'flu' attack in the State during November 1958; and

(*b*) the precautions taken to prevent the same?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

**Sri N. K. PALANISAMI** : அக்டோபர் நவம்பர் மாதங்களில் இந்த ஜுரம் கிராமப் புறங்களில் வருகிறது. ஆகையால் சர்க்கார் பப்ளிக் ஆபீசர் மூலம் அந்தக் காலங்களில் உடனடியாக நிவாரணம் அளிக்க ஏற்பாடு செய்வார்களா ?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : இது ப்ளு நோய் பற்றிய கேள்வி. அதற்கு எல்லாம் நாங்கள் தயாராய் இருந்தோம். ஆனால் ப்ளு வரவில்லை. மற்றபடி அக்டோபர், நவம்பர் மாதங்களில் ஜுரம் வருவது வெதர் சேஞ்ஜினால். இதுவும் ப்ளு ஜுரம் என்று சில பேர் நினைக்கிறார்கள். ப்ளு வரவில்லை (சிரிப்பு).

**Sri A. GOVINDASAMY** : அமைச்சர் அவர்கள் ப்ளு வந்தால் அதை எதிர்க்க எல்லா வகையிலும் தயாராய் இருந்தார்கள் என்று சொன்னார்கள். எந்தவகையில் தயாராய் இருந்தார்கள் ?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : அதை நோட்டீஸ்டு டிஸீஸ் என்று பிரசாரம் பண்ணி, ஆனரரி டாக்டர், ரெகுலர் டாக்டர் எல்லாம் போட்டு, மொபைல்வான் மூலம் தக்க வைத்திய உதவி அளிக்கத் தயாராய் இருந்தோம். வழக்கம்போல எதிர்பார்க்கப்பட்டது வருவது இல்லை என்பது சரியாகப் போய்விட்டது. அந்தமாதிரி இது வரவில்லை (சிரிப்பு)

### *District Handloom Board*

9-40 a.m. * 301 *Q.*—**Sri M. JAGANNATHAN** : Will the Hon. the Minister for Industries be pleased to state the functions of the District Handloom Board?

**The Hon. Sri R. VENKATARAMAN** : A statement * is placed on the table of the House.

**Sri M. JAGANNATHAN** : From the statement placed on the table of the House, I find that holding exhibitions is one of the functions of the District Handloom Board. If the information is

* Printed as Appendix IV on page 324-326 infra.



13th February 1959]

available with the Hon. Minister, may I know, so far as the South Arcot district is concerned, whether any exhibition has been held in that district?

**The Hon. Sri R. VENKATARAMAN** : The scheme is to hold a small exhibition for three districts in each year. Even day before yesterday, I went to the exhibition held for three districts—Madras, North Arcot and Chingleput. Similar exhibitions are arranged in groups of three districts.

**Sri A. GOVINDASAMY** : இந்த கைத்தறி போர்டில் யார் யார் அங்கம் வகிக்கிறார்கள் ? நிர்வாகப் பொறுப்பு யார் கையில் இருக்கிறது ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : The District Collector, local Deputy Registrar of Co-operative Societies, one representative of the primary weavers co-operative societies, two representatives of handloom weavers, one representative of master weavers, one representative of yarn dealers and one representative of handloom cloth dealers. Local members vary from district to district.

### *Recruitment of persons belonging to the Scheduled castes to the Police force*

*302 *Q.*—**Sri P. G. MANICKAM** : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) ஷெட்யூல் வகுப்பினர்கள் 5 அடி 3 அங்குல உயரமிருப்பினும் அவர்களைப் போலீஸ் சேவைக்கு சேர்த்துக் கொள்ளும்படியாக மத்திய சர்க்காரிடமிருந்து நம் ராஜ்ய சர்க்காருக்கு ஏதேனும் உத்தரவுகள் அனுப்பப்பட்டிருக்கின்றனவா ?

(ஆ) அவ்வாறு உத்தரவுகள் அனுப்பப்பட்டிருப்பின் இவ்வுத்தரவுகள் பிரகாரம் 1958-ம் வருஷத்திலே எத்தனை பேர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள் ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : (*a*) No Sir.

(*b*) Does not arise.

**Sri P. G. MANICKAM** : மேற்கண்ட மத்திய சர்க்காரின் உத்தரவு ஒரிஸ்ஸா, பம்பாய், மைசூர் ஆகிய ராஜ்யங்களுக்கு அனுப்பப்படுவதன் பேரில் அந்த உத்திரவுக்கு இணங்க 5' 3" உயரத்தில் இருப்பவர்களை போலீஸ் தேர்ந்தெடுத்து இருப்பதாக தெரிகிறது. ஆகவே நமது சர்க்கார் மத்திய சர்க்காரின் உத்தரவுப்படி 5' 3" உள்ள ஹரிஜனங்களை யாவது போலீஸில் சேர்த்துக்கொள்வதுபற்றி ஆலோசனை செய்வார்களா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : அவ்வாறு திட்டம் மத்திய சர்க்கார் உத்திரவுப்படி இல்லை என்று சொன்னார்கள். மத்திய அரசாங்கத்தில் ஹோம் மினிஸ்ட்ரி கன்சல்டேஷன் கமிட்டியில் பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் இந்த யோசனையைக் கூறினார்கள். இந்த யோசனை ராஜ்ய அரசாங்கத்தின் அபிப்பிராயத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அடுத்த ராஜ்யங்களில் எப்படிச் செய்கிறார்கள் என்ற தகவல் என்னிடம் இல்லை. இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் நிபந்தனை இருக்கிறது. ஆகவே ஒரு குறிப்பிட்ட சமூகத்தினருக்கு இந்த நிபந்தனையை எடுத்து விடுவது நல்லதல்ல. இந்த சமூகத்திலேயே இந்த உயரம் உள்ளவர்கள் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். அதனால் இந்த யோசனையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை.

[13th February 1959

## *National Water Supply Scheme*

* 303 *Q.*—**Sri T. VELUCHAMI** : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) 1958–59-ல் **National Water Supply Scheme** என்ற பிரிவில் நெல்லை ஜில்லாவிற்கு எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது ?

(ஆ) இந்த ஸ்கீமின் அடிப்படையில் அம்பை, திருநெல்வேலி, ஸ்ரீவைகுண்டம் முதலிய தாலூகாக்களில் பல கிராமங்களுக்கு வெளியே வெகுதூரத்தில் கக்கூஸ்களும் போரிங்-பைப்புக்களும் அமைக்கப்படுவதின் நோக்கம் என்ன ?

(இ) இந்த கக்கூஸ்களையும் போரிங் பைப்புக்களையும் மக்கள் உபயோகப்படுத்துகின்றார்களா ? அல்லது உபயோகப்படுத்துவார்களா ?

(ஈ) இந்த ஸ்கீம் மக்களுக்கும் உபயோகமான ஸ்கீம்தானா ?

(உ) இந்த ஸ்கீமுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் பணத்தை **Local Development Works** ஸ்கீமுக்கு மாற்றுவதற்கு சர்க்காருக்கு ஏதேனும் உத்தேசம் உண்டா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : **(a) Rs. 5·5 lakhs, Sir.**

(*b*) Bore-wells and individual latrines are provided near habitations; but community latrines are put up a little away to prevent the spread of infection.

(*c*) The villagers are gradually getting accustomed to the bore-wells and latrines.

**(*d*) Yes, Sir.**

**(*e*) No, Sir.**

**Sri M. S. SELVARAJAN** : சார், இந்த திட்டத்தில் என்ன என்ன கிராமங்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன என்று பல வருஷங்களுக்கு முன்பு ஒரு லிஸ்ட் தயாரிக்கப்பட்டது. சில தாலுக்காகளில் கிளாரிங்காக விடப்பட்டிருக்கின்றனவா ? அப்படியானால் அதைப் பரிசீலனை செய்து அப்படி விடப்பட்டிருப்பவைகளைச் சேர்த்துக்கொள்ள அரசாங்கம் முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri M. A. MANICKAVELU** : இந்தத் திட்டத்தின் கருத்து ஆறு ஓரமாக இருக்கும் கிராமங்களுக்கு கிடைக்கவேண்டும் என்பது. அதனால் ஆற்றோரமாக இல்லாத கிராமங்களை எடுத்துக்கொள்ளாமல் விட்டிருக்கலாம்.

**Sri V. SUBBIAH** : இந்த திட்டத்தை எல். டி. ஒர்க்ஸ் ஸுக்கு மாற்றினால் நலமாக இருக்குமென்று மாற்றுவதற்கு உத்தேசம் உண்டா ?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : கனம் அங்கத்தினர் அவர்கள் இந்த இரண்டு திட்டங்களுக்கும் வித்தியாசம் தெரியாமல் கேட்கிறார்கள்.

நாஷனல் வாடர் சப்ளை ஸ்கீமில் பொது மக்கள் ஐந்து சதவிகிதமும் எல். டி. ஸ்கீமில் 50 சதமும் கொடுக்கிறார்கள். எல்லோரும் இந்தத் திட்டத்தை வேண்டுமென்று கேட்கிறார்கள்.

## *Rural Water Supply Scheme*

* 304 *Q*—**Sri T. VELUCHAMI** : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் கிராமாந்திர தண்ணீர் சப்ளைத் திட்டத்தின் கீழ் கிணறு வெட்டுவதற்கு முன்பு எத்தனை பிரேரேபிக்கப்பட்ட கிணறுகளில் தண்ணீர் இதுவரை பரிசோதனைக்காக **Water analyst** க்கு அனுப்பப்பட்டது.



13th February 1959]

(ஆ) முதலில் அனுப்பிய தண்ணீரை பரிசோதனை செய்ததில் எத்தனை பிரேரேபிக்கப்பட்ட கிணற்றுத் தண்ணீர் சாம்பிள்கள் தகுதியற்றவை என்று தீர்ப்புக் கூறப்பட்டது ?

(இ) மேற்படி கிணறுகளில் மீண்டும் எத்தனை கிணறுகளிலிருந்து தண்ணீர் எடுக்கப்பட்டு மறு பரிசீலனைக்கு அனுப்பப்பட்டது ?

(ஈ) இப்படி அனுப்பப்பட்டதில் எத்தனை கிணற்றுத் தண்ணீர் தகுதியானதென்று தீர்ப்புக் கூறப்பட்டது ?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) 4,497 during the period from 1st January 1956 to 31st October 1958.

**(*b*) 724.**

**(*c*) 22.**

**(*d*) 6.**

## *Madras Shops and Establishments Act*, 1947

* 305 *Q.*—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have exempted the registered co-operative societies from the provisions of the Madras Shops and Establishments Act, 1947 (Madras Act XXXVI of 1947); and

(*b*) if so, the reasons therefor?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) In 1953 co-operative societies in which non-members are employed were exempted from all the provisions of the Madras Shops and Establishments Act, 1947, subject to the condition that special by-laws prescribed by the Government were adopted and standing orders incorporating the provisions of Chapters II, III, V and VII of the Act were framed. The special by-laws and Standing Orders incorporated all the provisions regarding conditions of service of employees under the Act except in regard to appeal against dismissal. The exemption given was extended from year to year. It was, however, found that by 1957 only about 38 per cent of the total number of societies had adopted the special by-laws and framed Standing Orders. The exemption granted was cancelled on the ground that if the labour legislation was enforced in certain co-operative societies and not applied to certain other co-operative societies, it would lead to confusion, that provision regarding appeal was not substantial and that one of the special by-laws was contrary to freedom of association.

In September 1958 the representatives of the Tamilnad Co-operative Union, Ltd., urged for the restoration of exemption granted to the co-operative societies previously from all the provisions of the Madras Shops and Establishments Act, 1947. They represented that a small number of societies in rural areas had not adopted the special by-laws and that vigorous efforts were being made to persuade them to adopt the special by-laws. It was also pointed out that the co-operative societies were social welfare institutions, that their main object was service and not profit and that they have provided the maximum welfare amenities as would be consistent with their resources. They expressed their willingness to the

amendment of the by-laws in order to provide for appeal against dismissal of employees to the Registrar of Co-operative Societies and to the deletion of the by-law which restricted the freedom of association of co-operative employees. After careful consideration, the Government restored the temporary exemption to co-operative societies from all the provisions of the Madras Shops and Establishments Act, 1947, for a period up to 30th June 1959 subject to the condition that all the co-operative societies adopted the special by-laws and modified their Standing Orders within the time allowed failing which the exemption would be withdrawn.

SRI M. KALYANASUNDARAM : வர்த்தக ஊழியர் சட்டத்திற்கு மாறுதல் கொண்டுவருவதற்கு யோசனை உண்டா ? அப்படியென்றால் அது மத்திய சர்க்காருக்கு அனுப்பப்பட்டதா ? அவர்களின் அபிப்பிராயம் என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : மத்திய சர்க்காரால் கொண்டுவரப்பட்ட ஷாப் அஸிஸ்டெண்ட் ஆக்ட்டை மாற்றி அமைக்க இந்த சர்க்கார் ஒன்றும் யோசனை கூறவில்லை.

SRI N. K. PALANISAMI : வேலை நிர்ணயம், சர்விஸ் கண்டிஷன் முதலியவைகளை ஆராய்ந்து ஒரு நிரந்தரமான சட்டம் கொண்டுவர அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கோவாப்பரேடிவ் சொஸைடிகளில் இருப்பவர்கள் சாதாரண கடை சிப்பந்திகளாகத்தான் கருதப்படுவார்கள்.

*Artesian Well*

* 306 *Q*—SRI P. G. MANICKAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1958-ல் சுமார் 50 ஏகரா நிலங்களுக்கு பாசன வசதி அளிப்பதற்கான ஊற்றுக் கிணறுகள் சென்னை ராஜ்ஜியத்திலே எந்தெந்த இடங்களிலே தோண்டப்படும் ?

(ஆ) இத் திட்டத்துக்காக 1958-ம் வருஷத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The Government have sanctioned a scheme for the sinking of 50 artesian wells in Srimushnam and Setiathope firkas of Chidambaram taluk, South Arcot district.

(*b*) The cost of the scheme is Rs. 7,82,100.

SRI P. G. MANICKAM : இந்த திட்டத்தை மற்ற ஜில்லாக்களுக்கும் விஸ்தரிக்க அரசாங்கம் திட்டம் தயாரித்திருக்கிறார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஊற்றுக் கிணறுகள் ஏற்படுத்தும் திட்டம் ஆலோசனையில் இருக்கிறது. ஊற்றுகள் எங்கெங்கே இருக்கின்றனவோ அங்கங்கே இந்தத் திட்டம் ஏற்படுத்தப்படும்.

SRI A. GOVINDASAMY : இந்த ஊற்றுக் கிணற்றிலிருந்து பாயக்கூடிய தண்ணீர் அதிக நிலங்களுக்குப் பாய்வதால், இன்னும் இந்தக் கிணறுகளை அதிகரிக்க அரசாங்கம் யோசிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அந்தந்த நிலத்தின் தரத்தைப் பொறுத்திருக்கிறது.





SRI M. JAGANNATHAN : The Hon. Minister has stated that Government have sanctioned a scheme for sinking artesian wells in Chidambaram. May I know when the Government are likely to implement the scheme?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : That is being implemented. There is another proposal for sinking fifty wells.

SRI K. R. NALLASIVAM : இந்த ஆர்டிஷ்யன் கிணறுகளை எங்கெங்கே வெட்ட முடியும் என்று அரசாங்கம் பரிசீலித்ததா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தென் ஆற்காடு ஜில்லாவில்தான் ஊற்றுக்கள் அதிகமாக இருக்கின்றன. அங்கேதான் ஓரளவு பரிசீலனை நடந்து வருகிறது.

*Co-operative House Construction Society*

* 307 *Q.*—SRI S. PAKKIRISAMI PILLAI : Will the Hon. the Minister for Industries, be pleased to state—

(*a*) whether the Board of Management of the Madras Co-operative House Construction Society has been superseded; and

(*b*) if so, the reasons therefor?

THE HON SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) The term of office of the Committee of the Society expired on 8th December 1958. The Committee did not either take steps to convene a general body meeting for conduct of elections or seek extension of its term. The Registrar of Co-operative Societies on the request of the Committee superseded the Committee with effect from 8th December 1958 and appointed a Special Officer to manage its affairs.

*Postage stamps.*

* 308 *Q.*— SRI P. G. MANICKAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

தபால் தலைகளிலே (stamps) சென்னை ராஜ்ய தலைவர்களின் உருவப் படங்களையும் வெளியிட வேண்டும் என்று மத்திய சர்க்காருக்கு சென்னை சர்க்கார் ஏதேனும் கடிதங்கள் மூலமாக தெரிவித்திருக்கிறார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

*Madras City Transport*

* 309 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Industries, be pleased to state— 9-50 a.m.

(*a*) whether there is any proposal to increase the strength of the transport fleet to 600 in the Madras City; and

(*b*) if so, when the new buses will be added?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The organization and methods of working of the State Transport is now under study by an Industrial Engineering Unit under the guidance of an I.L.O. Expert. The refixation of fleet strength as well as

[13th February 1959

other matters relating to operational efficiency will all be decided upon as soon as the report of the Industrial Engineering Survey Unit is received.

**Sri A. A. RASHEED**: What is the present total strength of the transport fleet and how many of them are under repair?

**The Hon. Sri R. VENKATARAMAN**: Sir, the present strength is 470 and the effective operating strength is 75 per cent.

**Sri K. VINAYAKAM**: Is it not a fact that the Government have decided to replace 1/7th of the total number of buses now available every year with a view to augmenting the services?

**The Hon. Sri R. VENKATARAMAN**: Yes, it is so.

**Sri S. NAGARAJA MONIGAR**: என்ன தான் இருந்தாலும், சென்னையில் போக்குவரத்து மிகவும் கஷ்டமானதாக ஆகியிருக்கிறது. ஜனங்கள் பஸ்களில் இடம் பிடிப்பது நாளுக்கு நாள் மிகக் கஷ்டமாகி வருகிறது. ஆகவே, கூடியவரையில், தங்களுக்கு நஷ்டம் வந்தாலும், அதிக பஸ்களை விடுவதற்கு அரசாங்கத்தார் முன்வருவார்களா ?

**The Hon. Sri R. VENKATARAMAN**: இப்போது, சர்க்கார் நடத்தும் பஸ் ரூட்டுகளில் 40 சத விகிதம் "நான்-பிராபிட்" வகையைச் சேர்ந்தவை, அதாவது, அவைகளை "நான்-ரெம்யுனரேடிவ் லைன்ஸ்"ல் நடத்துகிறோம். அரசாங்கம் இந்த ஸெர்விஸை லாபம் கருதி நடத்தவில்லை. எக்ஸ்பெர்ட் அவர்கள் எவ்வளவு பஸ்கள் போட வேண்டும் என்று சொல்லுகிறார்களோ, அதன்படி ட்ராபிக் ஸர்வே செய்யப்பட்டு "ப்ளீட் ஸ்ட்ரெங்த் லிமிட்" நிர்ணயம் செய்யப்படும்.

**Sri V. K. RAMASWAMY MUDALIAR**: When is the report of the expert expected and may I know whether it will be placed on the table of the House?

**The Hon. Sri R. VENKATARAMAN**: Sir, it will not be placed on the table of the House because, it may contain a lot of information which may be used by competitive private enterprise. But, certainly the recommendations will be placed on the table of the House.

**Sri M. KALYANASUNDARAM**: சென்னையிலிருந்து திருவொற்றியூர் போகும் மார்க்கம் பூராவிலுமே அரசாங்க பஸ்கள் மட்டும் விடப்படும் என்றும் அந்த மார்க்கம் தனியாருக்குக் கொடுக்கப்படாது என்றும் கனம் மந்திரி ஒரு முறை அறிவித்தார். இன்னும் சில மார்க்கங்களையும் சர்க்காரே எடுத்து நடத்தும் என்றும் அவர் அறிவித்திருக்கிறார். அந்த யோசனை என் இன்னும் அமலுக்கு வரவில்லை ?

**The Hon. Sri R. VENKATARAMAN**: சுப்ரீம் கோர்ட்டால் ஒரு டெஸிஷன் செய்யப்பட்டிருக்கிறது. அது கனம் அங்கத்தினருக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். அதாவது, தேசியமாக்கும்போது அது சம்பந்தமாக விசாரணை செய்து அதைச் செய்யவேண்டுமா இல்லையா என்பது குறித்து உத்தரவு போடும் அதிகாரம் யாருக்கு இருக்க வேண்டும் என்பதைப்பற்றி ஒரு சர்ச்சை இருந்து வருகிறது. இந்த விஷயத்தில், 'ஹோம் ஸெக்ரடரி' போட்ட உத்தரவு செல்லுபடியாகாது, ஏனென்றால் அவர் ஒரு 'பார்டி டு தி டிஸ்ப்யூட்' என்று சுப்ரீம் கோர்ட்டார் சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு, ஆந்திராவில், முதல் மந்திரியே உத்திரவு போட்டிருப்பதாகவும், 'அதுவும் தவறு, முதல் மந்திரி கவர்ன்மெண்ட்



13th February 1959]

இல்லை' என்று மீண்டும் 'ரிட்' போட்டிருப்பதாகவும் தெரிகிறது. ஆகையால் இப்போதைக்கு அவசரப்படவேண்டாம் என்ற எண்ணத்தில் இந்தக் காரியம் தாமதப்படுத்தப்பட்டு வருகிறது.

**Sri A. GOVINDASAMY**: டபில் டெக்கர் பஸ் 'விஜயா' எப்போது பழுதடைந்தது ? அது எப்போது ரிப்பேர் செய்யப்படும் ? அது 'ரிப்பேர்' செய்யப்படுமா அல்லது 'கண்டெம்' செய்யப்படுமா ?

**The Hon. Sri R. VENKATARAMAN**: இதிலிருந்து, கனம் அங்கத்தினருக்கு விஜயாவிடத்தில் அதிக அன்பு இருப்பதாகத் தெரிகிறது. (சிரிப்பு).

*Separate Agricultural division for Villupuram*

* 310 Q.—**Sri A. GOVINDASAMY**: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether a separate Agricultural division has been created for Villupuram; and

(b) the number of tractors and oil-engines allotted to the division?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM**: (a) Yes, Sir.

(b) There is no separate allocation of tractors and oil engines for each division. There are 14 tractors and 37 oil engines in South Arcot district which are stationed at Cuddalore and diverted for work in the entire district including this division according to demand.

**Sri A. GOVINDASAMY**: தென்னுற்காடு ஜில்லாவில் விவசாய இலாகாவை இரண்டாகப் பிரித்துவிட்டு விழுப்புரத்திற்குத் தேவையான டிராக்டர்களையும் எஞ்ஜின்களையும் கடலூரில் வைத்திருப்பதில் என்ன அர்த்தம் ? விழுப்புரத்திற்குத் தேவையான டிராக்டர்களையும் எஞ்ஜின்களையும் விழுப்புரத்திற்கே மாற்ற அரசாங்கம் யோசிக்குமா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM**: மற்ற வேலைகளை கவனிப்பதற்காகத்தான் இந்த மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. எஞ்ஜினியரிங் வேலையைப் பொறுத்தவரையில் அந்த மாவட்டத்திற்கு ஒரு எஞ்ஜினியர்தான் இருக்கிறார். அங்கே டிராக்டர்களும் புல்டோஸர்களும் குறைவாக இருக்கின்றன. ஆகவே, அவைகளையெல்லாம் ஒரே இடத்தில் வைத்திருந்து எங்கெங்கெல்லாம் வேண்டுமோ அங்கெல்லாம் கொடுப்பதுதான் உசிதம் என்று கருதி, அவ்வாறே செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

*Trade union workers*

* 311 Q.—**Sri M. KALYANASUNDARAM**: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal to bring in suitable legislation for giving protection to trade union workers against victimisation; and

(b) what are the features of the proposed Bill?

**The Hon. Sri R. VENKATARAMAN**: (a) No, Sir.

(b) Does not arise.

**Sri M. KALYANASUNDARAM**: சென்னை உயர்நீதி மன்றத்தால் சமீபத்தில் அளிக்கப்பட்ட ஒரு தீர்ப்பில் எந்தத் தொழிலாளர்களையும் ஸ்டாண்டிங் ஆர்டர்படி வேலையிலிருந்து நீக்குவதற்குரிய உரிமை முதலாளிகளுக்கு உண்டு என்றும் அதை விசாரணைக்கு விடுவதற்கு சர்க்காருக்கு உரிமை கிடையாது என்றும் கூறப்பட்டிருக்கிறது. இந்த நிலைமையில், தொழிற் சங்கங்களைப் பழிவாங்கும் நோக்கத்துடன் முதலாளிகள் நூற்றுக்கணக்கான தொழிலாளர்களை வண்டலூர் மோட்டார் வர்க்ஸில் டிஸ்மிஸ் செய்திருப்பதைப் போல டிஸ்மிஸ் செய்யும்போது, அங்கே தலையிடுவதற்கு சர்க்காருக்கு சந்தர்ப்பம் இல்லாது போய்விட்டது. எனவே, இந்தக் குறையைப் போக்குவதற்காக சட்டத்தைத் திருத்தும் நோக்கம் சர்க்காருக்கு உண்டா ?

**The Hon. Sri R. VENKATARAMAN**: இந்த விஷயம் தற்போது அரசாங்கத்தின் ஆலோசனையில் இருந்துவருகிறது.

**Sri N. K. PALANISAMI**: ஒரு ட்ரிப்யூனல் " அவார்ட் " கொடுத்தால், அதற்கெதிராக பல ரிட்கள் கோர்ட்களில் போடப்பட்டு, அந்த அவார்டிற்கு எதிரான தீர்ப்பு கோர்ட்டுகளால் கொடுக்கப்படுகிறது. எனவே, ஒவ்வொரு கோர்ட்டையும், தொழிலாளர்களுக்கு என்னென்ன சட்டங்கள் இருக்கின்றன என்று பரிசீலித்து அந்த அடிப்படையில் தீர்ப்பளிக்கச் செய்ய சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா ?

**The Hon. Sri R. VENKATARAMAN**: ஹைக்கோர்ட்டு சட்டப்படிதான் தீர்ப்புக் கொடுக்கிறது.

**Sri M. KALYANASUNDARAM**: நான் என்னுடைய முந்தைய உப கேள்வியில் குறிப்பிட்ட விஷயம் பரிசீலனையில் இருக்கும் அதே சமயத்தில், இனி இம்மாதிரியான தகராறுகளை அட்ஜூடிகேஷனுக்கு விடுவதில்லை என்பது சர்க்காரின் கொள்கையாக இருக்கிறதா, அல்லது இனிமேல் இவைகள் அட்ஜூடிகேஷனுக்கு விடப்படுமா ?

**The Hon. Sri R. VENKATARAMAN**: ஹைக்கோர்ட்டின் தீர்ப்பிற்கு உட்பட்ட ஹைக்கோர்ட்டின் தீர்ப்பைப்பெற்ற எந்த விஷயத்தையும் மறுபடியும் ட்ரிப்யூனலுக்கு விடமுடியாது. ஏனென்றால், அவ்வாறு ஒரு விஷயத்தை மறுபடியும் டிரிப்யூனலுக்கு விட்டு ட்ரிப்யூனலின் தீர்ப்பைப் பெற்றால், அந்தத் தீர்ப்பு ஹைக்கோர்ட்டின் தீர்ப்பிற்கு மாறாக இருக்கிறது என்று " ஸ்டே " வாங்கிவிட முடியும். அதை ட்ரிப்யூனலுக்கு விட்டாலும், ஹைக்கோர்ட் தீர்ப்பிற்கு மாறாக ட்ரிப்யூனல் தீர்ப்பு கொடுக்க முடியாது. எனவே, ஹைக்கோர்ட்டின் தீர்ப்பைப் பெற்ற எந்த விஷயத்தையும் ட்ரிப்யூனலுக்கு விட முடியாது என்று சர்க்கார் கருதுகிறது.

**Sri M. KALYANASUNDARAM**: தொழில் அமைதி ஏற்படவேண்டும் என்றும், பழிவாங்குதலைத் தடுக்க வேண்டும் என்றும் சர்க்கார் விரும்பினாலும்கூட, இப்போதுள்ள ஹைக்கோர்ட் தீர்ப்பின்படி, தொழிலாளர்களை சர்க்கார் பாதுகாக்க முடியாத நிலைமை இருக்கிறது. இந்த நிலைமையில், தொழிலாளர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகப் போராட்டம் நடத்தும்போது போலீஸை அனுப்பி அவர்களை அடிக்காமலிருக்கும்படி கனம் போலிஸ் அமைச்சரிடம் கனம் தொழில் அமைச்சர் சிபாரிசு செய்வாரா ?

**The Hon. Sri R. VENKATARAMAN**: இந்த விஷயத்தில் சர்க்காரின் கொள்கை நன்றாக விளக்கப்பட்டிருக்கிறது. சட்டப்படி நடப்பவர்கள் யாரையும் போலீஸ்காரர்கள் அடிக்கமாட்டார்கள்.

*Tank improvement works*

**Mr. SPEAKER**: The hon. Member Sri K. Sattanatha Karayalar is not in his seat. The question and answer will be printed in the official proceedings.



* 312 Q.—**Sri K. SATTANATHA KARAYALAR**: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the number of tank improvement works taken up in the Kanyakumari district and Shencottah taluk, Tirunelveli district after their merger with this State;

(b) the number of acres benefited by these works; and

(c) the amount spent so far?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM**: (a) 159 works.

(b) 33,068 acres.

(c) Rs. 15·45 lakhs.

*Overhead tank for Alakandapuram village*

* 313 Q.—**Sri V. K. KOTHANDARAMAN**: கனம் ரெவினியூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) வடஆற்காடு ஜில்லா வாணியம்பாடி பக்கத்திலுள்ள அலகந்தாபுரம் கிராமத்தில் 1954-ல் (over head tank) கட்ட பஞ்சாயத்துத் தலைவருக்கு கான்டிராக்ட் கொடுக்கப்பட்டதா ?

(ஆ) அட்வான்ஸ் தொகை எவ்வளவு கொடுக்கப்பட்டது ?

(இ) அது கட்டி முடிந்துவிட்டதா ?

(ஈ) எப்போது ? இல்லை என்றால், ஏன் ?

**The Hon. Sri M. A. MANICKAVELU**: (a) The work was entrusted to the headman of the village, on behalf of the Alagandapuram panchayat.

(b) Rs. 4,500 in March 1957.

(c) The work has not yet been completed.

(d) The progress of the work slowed down due to the revision of the original estimate, which had provided for only steel tanks while the villagers insisted on having a R.C.C. reservoir.

**Sri V. K. KOTHANDARAMAN**: ரெஜிஸ்டெர்ட் கண்டிராக்டர்களாக அல்லாதவர்களிடத்தில் இதுபோன்ற வேலைகள் விடப்பட்டால், அப்படிப்பட்ட பல வருஷங்களாகியும் அவை செய்துமுடிக்கப்படுவதில்லை. கண்டிராக்டர்கள் சம்பந்தமாக தகுந்த நடவடிக்கைகள் எடுப்பதற்கு வகை செய்யக்கூடிய சட்டம் இல்லாததால், அத்தகைய நடவடிக்கைகள் எடுக்க முடிவதில்லை. இதன் காரணமாக இதுபோன்ற பல நல்ல வேலைகள் " பெண்டிங்காக " இருக்கின்றன. ஆகவே, நான் குறிப்பிட்டதுபோன்ற நடவடிக்கைகளை எடுப்பதற்கான சட்டத்தை இயற்ற அரசாங்கம் முயற்சிக்குமா ?

**The Hon. Sri M. A. MANICKAVELU**: இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில் கொஞ்சம் காலதாமதம் ஆனதற்குக் காரணம் என்னவென்றால், முதலில் 11,000 ரூபாய்க்குத் தயாரிக்கப்பட்டிருந்த எஸ்டிமேட் மாற்றப்பட்டு என்டிமேட் பிறகு 20,000 ரூபாயாக மாற்றப்பட்டது. அதற்குத் தகுந்தபடி தயாரிக்கப்பட்டதால் ப்ளான்கள் முதலியவைகளை இந்த மார்ச் மாதத்திற்குள் முடிந்துவிட வேண்டியிருந்தது. இந்தத் திட்டம் இந்த மார்ச் மாதத்திற்குள் முடிந்து விடும் என்று தெரிகிறது.

*Small scale industries*

* 314 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா :—

(அ) சிறு கைத்தொழில் நடத்த ஸ்தல ஸ்தாபனங்களின் அனுமதி கிடைக்காத நிலைமையைப்பற்றி 11—11—1958-ந் தேதி கனம் முதல் அமைச்சர் அவர்களுக்கு திரு. வி. கே, கோதண்டராமன், எம். எல். ஏ. எழுதிய லெட்டர் கிடைத்ததா ?

(ஆ) அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) The matter is under consideration. The remarks of the Heads of Departments are awaited.

*Rate of interest on the loans advanced to the State Electricity Board*

MR. SPEAKER : The hon. Member Sri N. K. Palanisami is absent. So, the question and answer will be printed in the official proceedings.

* 316 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Electricity be pleased to state the reasons for charging high rate of interest on the loan advanced to the State Electricity Board?

THE HON. SRI V. RAMAIAH : At present, interest at 5½ per cent per annum is charged on the loans advanced by the Government to the Madras State Electricity Board for the following reasons :—

(i) This is based on the effective rate of borrowing of Government.

(ii) This rate cannot be considered to be high when compared to the rate of 5½ per cent charged on loans under the State Aid to Industries Act and on the loans granted by the Industrial Investment Corporation ; and

(iii) Loans raised by Government in the open market and from Government of India have to be repaid after 10 or 12 years. The amounts re-lent to the Electricity Board by Government are treated as perpetual loans and the Board will not be repaying the principal as it is prohibited from doing so under the Electricity (Supply) Act, 1948. The higher rate of interest is justified on this ground also.

*Madurai City Milk Supply Union*

MR. SPEAKER : The hon. Member Sri V. Sankaran is not in his seat. The question and answer will be printed in the official proceedings.

* 317 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minsiter for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to give financial assistance to the Madurai City Milk Supply Union ; and

(*b*) if so, for what purposes?



THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) There was a proposal to give financial assistance to the Union. But it has been decided to be deferred.

(*b*) The financial assistance is intended for the installation of a Pasterization Plant in the Union.

*Smallpox*

* 318 Q.— SRI S. M. ANNAMALAI : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1957–58-ல் வடாற்காடு மாவட்டம் போளூரில் அம்மை நோயினால் இறந்த குழந்தைகள், பெரியவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) அதைத் தடுக்க என்ன என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) In 1957 two adults and in 1958 three adults and ninety-eight children died of smallpox in the Polur Panchayat.

(*b*) An intensive vaccination drive was carried out during 1958. Disinfection of infected premises and materials and health education were the other measures carried out.

SRI S. M. ANNAMALAI : சுமார் ஆயிரம் குழந்தைகளுக்கு மேல் இறந்திருக்கிறார்கள். இதில் சுகாதார அதிகாரிகள் சரிவர நடவடிக்கைகள் எடுக்கவில்லை. ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தலையிட்ட பின்னர்தான் சுகாதார அதிகாரிகள் நல்லமுறையில் நடவடிக்கைகள் எடுத்தார்கள். சுகாதார அதிகாரியினிடத்தில் சரியான ரிக்கார்ட் கிடையாது. பொது மக்கள், ஆயிரம் குழந்தைகளுக்கு மேல் இறந்திருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் சுகாதார அதிகாரிகள் 10, 20, 28, 98 என்றெல்லாம் கணக்குச் சொல்கிறார்கள். இதை சரியான முறையில் விசாரிக்க ஒரு கமிட்டி நியமிக்கப்படுமா ? 10-00 a.m.

THE HON. SRI M. A. MANICKAVELU : சிறிய அளவில் வித்தியாசம் இருந்தது என்றால் ஒப்புக்கொள்வேன். ஒரேயடியாக 98-யை ஆயிரம் என்று சொன்னால் அது முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைக்கும் சமாச்சாரமாகயிருக்கிறது. இதைப்பற்றி அங்கத்தினர் விவரம் கொடுத்தால் விசாரிக்கிறேன்.

MR. SPEAKER : இன்னும் இரண்டு கேள்விகள் இருக்கின்றன. மணி பத்தாகிவிட்டது. அதை இரண்டு நிமிடங்களில் முடித்துவிடலாம்.

*Hospital Clothing for the Patients*

* 319 Q.—SRI V. SUBBIAH : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

சென்னை அரசாங்கத்தில் உள்ள வைத்தியசாலைகளில் நோயாளிகளுக்கு அளிக்கப்படும் உடைகளைக் கட்டாயமாக அணிந்துகொள்வதிலிருந்து சொந்த உடைகளை அணிந்துகொள்ள கட்டுப்பாடுகளைத் தளர்த்த உத்தேசம் ஏதேனும் உண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir.

SRI V. SUBRIAH : நாகரீகமும், படிப்பும் உள்ள, கௌரவமான குடும்பத்திலுள்ள பெண்கள் இந்த உடையை உடுக்க மறுக்கிறார்கள். அவர்களுக்காவது விதிவிலக்கு அளிக்கப்படுமா ? அப்படி அவர்கள் கேட்டுக்கொண்டால் அதற்கு அனுமதி அளிக்கப்படுமா ?

THE HON. SRI M. MANICKAVELU : சாதாரணமாக ஜெனரல் வார்டில் எக்ஸ்ரேன் அதிகமாக வருவதால் அவர்கள் அழுக்கான துணியை அணிந்துகொள்ளாமல் இருக்க ஆஸ்பத்திரியில் சுத்தமான துணி கொடுக்கப்படுகிறது. ஆகவேதான், இந்த விதியிருக்கிறது.

*Draining scheme for the Sattur Panchayat Board*

*320 *Q.*—SRI S. B ADITYAN (on behalf of Sri D. S. Authimoolam) கனம் ரெவினியூ அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் ஜில்லா சாத்தூர் பஞ்சாயத்து போர்டு சாக்கடைக் கழிவு நீர் துப்புரவு விஷயமாக உதவித் தொகை கேட்டு சர்க்காருக்கு விண்ணப்பித்திருக்கிறதா ?

(ஆ) அதன் பேரில் எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) The matter is under consideration.

SRI N. R THIAGARAJAN : முதலமைச்சர் அவர்களின் தொகுதியாக சாத்தூர், இருப்பதால் அதை அவர் சரியாகக் கவனிக்காமல் இருக்கிறார். ஆகவே, அங்கு கூடுதல் பணம் செலவு செய்யப்பட்டால் தனது தொகுதிக்கு செலவு செய்கிறார் என்று மக்கள் நினைத்துக்கொள்வார்களோ என்றிருந்தால் ரெவின்யூ அமைச்சராவது இந்த சாத்தூர் காரியத்தைக் கவனிப்பார்களா ?

MR. SPEAKER : நீங்கள் சொல்வதை முதலமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்ள மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ANNOUNCEMENT *RE* MESSAGE FROM THE GOVERNOR.

MR. SPEAKER : I have to anounce to the House that I have received the following reply from the Governor to the letter conveying the Motion of thanks passed by the Assembly :—

"I have received with great satisfaction your resolution of thanks for the address with which I opened the present session of the Legislature."

III.—GOVERNMENT BILL.

THE MADRAS GENERAL SALES TAX BILL, 1958 (L.A. BILL NO. 6 OF 1958)—*cont.*

MR. SPEAKER : We shall now resume consideration of the Bill clause by clause. We have finished 20 clauses so far. We shall now take up clause 21.

*Clause 21.*

MR. SPEAKER : The motion is—

'that clause 21 do stand part of the Bill.'

SRI M. KALYANASUNDARAM : Sir, I move—

"In sub-clause (1), *for* the words 'ten rupees', *substitute* the words 'six rupees'."



SRI V. K. KOTHANDARAMAN : I second the amendment.

SRI N. K. PALANISAMI : Sir, I move—

"*Omit* item (ii) under sub-clause (5)."

SRI V. K. KOTHANDARAMAN : I second the amendment.

SRI M. KALYANASUNDARAM : I do not want to make any speech.

MR. SPEAKER : Mr. Palanisami may follow his example. There is no objection.

SRI M. KALYANASUNDARAM : It is so obvious. I want the rate of registration to be reduced. There is no need to speak.

SRI N. K. PALANISAMI : சிறிய வியாபாரிகளுக்கு செக்யூரிட்டி கிடைக்காது. பெரிய வியாபாரிகளாக இருந்தால் அவர்களுக்கு சகல வசதிகளும் கிடைக்கும். ஆகவே, சாதாரண ஒரு வியாபாரி செக்யூரிட்டி கொடுக்க வேண்டுமென்று சொன்னால் அது அவ்வளவு நியாயமல்ல. "The incidence of the tax is on the consumer and the consumer pays the tax" என்று சர்க்கார் அடிக்கடி சொல்லியிருக்கிறார்கள். வியாபாரிகள் வரி கொடுக்க வேண்டியதில்லை, கன்ஸூமர்கள்தான் கொடுக்க வேண்டியிருக்கிறது. கன்ஸூமர் கொடுக்காமல் இருக்கும்போது, சிறிய வியாபாரிகளிடம் செக்யூரிட்டி கேட்பது நியாயமல்ல. ஆகவே என்து திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

SRI S. LAZAR : 21வது பிரிவிலே உப பிரிவு 5(2)-ஐப்பற்றி நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அதில் இருக்கிற முறைப்படி வியாபாரிகள் செக்யூரிட்டி கொடுக்க வேண்டுமென்ற முறையில் அமைந்திருக்கிறது. இதை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வருவதின் நோக்கம் என்னவென்றால், எந்த அளவு டீலருக்கு தொந்தரவு இல்லாமல் இருக்க முடியுமோ அந்த அளவு செய்ய வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் கருத்து என்று அமைச்சர் அவர்கள் சொல்லி இருப்பதினால்தான். இப்பொழுது இருக்கக் கூடிய பிரிவுகளை அப்படியே வைத்துப் பார்க்கும்போது, ஆறு கட்டங்களில் ஒருவனுக்கு வரி விதிக்க வேண்டுமென்று முடிவு செய்யும்போது, ஆறு தடவை அந்த டீலர் அப்பெலேட் அத்தாரிட்டியிடம் போக வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதைப்பற்றி மட்டும் நான் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். முதலாவதாக, அதாவது முதல் தடவை 12(1) பிரிவின் கீழ் கணக்குகள் கொடுக்கப்படுகிறபோது அது சரியான கணக்கு அல்ல என்ற நிலைமையில் அதிகாரி நினைப்பார்களேயானால் அந்தச் சமயத்தில் ஒரு விசாரணை நடத்தலாம். அப்பொழுது டீலர் அதிகாரியிடம் வரவேண்டியிருக்கிறது, அது முதல் தடவை. இரண்டாவது தடவை, 13-வது செக்ஷன்படி 1-வது பிரிவில், ப்ரொவிஷனல் அஸெஸ்மெண்ட் செய்யும்போது அப்படிக் கொடுக்கும் கணக்கு சரியாக இல்லையென்று சொல்லும்போது அதுபற்றி விசாரணை நடத்தலாம். அப்பொழுது ஒரு தடவை வியாபாரி அப்பெலேட் அத்தாரிட்டியிடம் வர வேண்டியிருக்கிறது. அதற்கு அடுத்தபடியாக 13-வது செக்ஷன் மூன்றாவது உப பிரிவின்படி ப்ரொவிஷனல் அஸெஸ்மெண்ட் செய்யும்போது அதிகப்படியாகும்போது, அதிகப்படி ரேட் என்றோ அல்லது குறைந்த ரேட் என்றோ அமையும்போது மறுபடியும் அதுபற்றி 'ரீ ஓப்பன்' செய்ய அதிகாரிக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பதால் அது பற்றி விசாரணை செய்யும்போது திரும்பவும் டீலர் வரவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இது, 3-வது கட்டம். நான்காவதாக, வியாபாரி "எஸ்கேப்" ஆசாமியாக இருந்தால் 13(1) பிரிவின்படி மறுபடியும் வரவேண்டியதாக இருக்கிறது. ஐந்து வருட கால அளவிற்குள்ளாக ஒரு கணக்கு கொடுக்கப்பட்டு அதை திரும்பவும் பெறவேண்டுமென்ற முறையில் அதிகாரி முடிவு செய்கிறபோது அதைப் பற்றி விசாரணை நடக்கும்போது

நான்காவது முறை வரவேண்டியிருக்கிறது. அதற்கு அடுத்தபடியாக ஒவ்வொருவரும் ரெஜிஸ்ட்ரேஷன் செய்து கொள்ளவேண்டுமென்ற முறையில் 21-வது பிரிவில் அமைக்கப்பட்டிருக்கிறது. அதைத்தான் இப்பொழுது சொன்னேன். பின்னர், செக்யூரிட்டி கொடுக்க வேண்டுமென்று சொன்னல் இப்பொழுது ஒரு தடவை வரவேண்டியிருக்கிறது. ஆருவது முறையாக, 45-வது பிரிவின் பிரகாரம் ப்ராசிக்யூஷன் எடுக்கப்பட்டால் ஒரு முறை வரவேண்டியிருக்கிறது. இப்படி ஆறு கட்டங்கள் இருக்கின்றன. இவைகள் சாதாரணமாக நடக்காது என்று இருந்தாலும் கூட, ஹைப் பாத்தட்டிக்கல் கேஸாக் வைத்துத்தான் இப்பிரச்னைகளைப் பார்க்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட இடத்திலுள்ள அதிகாரி ஒரு குறிப்பிட்ட டீலருக்கு தொந்தரவு கொடுக்க வேண்டுமென்றால் ஒரு வியாபாரியை ஆறு கட்டங்களில் வரும்படிச் செய்யலாம். ஒவ்வொரு தடவையும் உடனே முடிகிற காரியமல்ல. குறைந்தது நாலைந்து தவணைகள் கேட்பதாகயிருக்கும். அப்படிப் பார்க்கும்போது இந்த அதிகாரிகளிடத்தில் வருவது பற்றி கவனிப்பதற்கு ஒன்றிரண்டு ஆட்களைப் போட வேண்டி வரும். இல்லையென்றால் வியாபாரிக்கு அவனது நேரம் பூராவையும் இதற்குச் செலவாக்கும்படி நேரிடும். ஆகவே நான் சொல்வது என்னவென்றால் ப்ரொவிஷனல் அஸெஸ்மெண்ட் என்று ஏற்கனவே 13-வது பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அஸெஸ்மெண்ட் பின்னல் வருகிறது. ஆகவே ஒரு டீலரிடமிருந்து செக்யூரிட்டி வாங்கவேண்டியது அவசியமில்லையென்று குறிப்பிடத்தான் இதை எடுத்துச் சொன்னேன். 13-வது பிரிவின் கீழ் அஸெஸ்மெண்ட் செய்த பிறகு மறுபடியும் செக்யூரிட்டி வாங்க வேண்டிய தேவையில்லை. ஆகவே, இது வியாபாரிகளுக்குத் தொந்தரவு கொடுக்குமாதலால் இதை எடுத்து விட வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக செக்ஷன் 7-ல் **"A dealer shall, until his registration is cancelled, be liable to pay the fees specified in sub-section (1) for every year..."**

10-10 a.m. 20-வது பிரிவின் பிரகாரம் பார்க்கும்பொழுது, 7,500 ரூபாய்க்கு அதிகமாக வியாபாரம் செய்யும் ஒரு வியாபாரி கண்டிப்பாக ரிஜிஸ்டர் செய்துகொள்ள வேண்டும். அதே சமயத்தில் அவர் சர்டிபிகேட் தொடர்ந்து வாங்கவேண்டும் என்று 21-வது பிரிவிலே 2, 3 உப பிரிவிலே கண்டிருக்கிறது. அப்படிச் சொல்லியிருக்கும்பொழுது, இது மறுபடியும் "ரிபீட்" செய்வதாக அமைந்திருக்கிறது. ஆதலால் 7-வது உப பிரிவிலே—"எ டீலர் ஷல் பே எவ்வெரி ஈயர் தி பீஸ்" என்பது அவசியமில்லை. அதை எடுத்துவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**THE HON. SRI R. VENKATARAMAN** : கனம் சபாநாயகர் அவர்களே, ரூ. 10 என்று இருப்பதை 6 ரூபாயாகக் குறைக்கவேண்டுமென்ற திருத்தத்தை ஏற்றுக்கொள்ளுவதற்கு இல்லை. காரணம் என்னவென்று சொன்னல், சர்க்காருக்கு என்ன செலவாகிறதோ அந்தச் செலவை ஈடுபடுத்துவதற்காகத் தான் இந்த பீஸ் விதிக்கப்படுகிறது. இது வரி அல்ல. இம்மாதிரி ரிஜிஸ்ட்ரேஷன் செய்வதற்கு உத்தியோகஸ்தர்களை வைத்து, ஆபீஸ் வைத்து நடத்தவேண்டியிருக்கிறது. அதற்கு என்ன செலவு ஆகிறதோ அதைக் கணக்குப் போட்டு, வருஷத்திற்கு 10 ரூபாய் என்று நிர்ணயம் செய்திருக்கிறோம். வருஷத்திற்கு 10 ரூபாய் என்று சொன்னல், மாதத்திற்கு ஒரு ரூபாய்க்கும் குறைவாக இருக்கிறது. ஒரு வியாபாரி ரிஜிஸ்டர் செய்துகொள்ளுவதற்கு ஒரு மாதத்திற்கு ஒரு ரூபாய்க்கும் குறைவாக பீஸ் கொடுக்கும்படி வைக்கவேண்டுமென்று சொன்னல், அதனல் சர்க்காருக்கு நஷ்டம் விளையும். அதனல் இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளுவதற்கு இல்லை.

இரண்டாவதாக "செக்யூரிட்டி" கொடுக்கவேண்டுமென்று இருப்பதை எடுத்து விட வேண்டுமென்று ஸ்ரீ என். கே. பழனிசுவாமி அவர்களும், ஸ்ரீ லாஸர் அவர்களும் சொன்னர்கள். நான் ஒரு சிறு உதாரணம் சொன்னல் இருக்கக்கூடிய நிலைமை நன்ருக விளங்கும். பங்களூரிலிருந்து ஒருவர் 100 பட்டுச் சேலையைத் தலையில் வைத்துக் கட்டிக் கொண்டு கோயம்புத்



தூரில் வந்து விற்ருல், அவர் ரூ. 6,000, 7,000-க்கு மேற்பட்ட வியாபாரத் திற்கு எந்த விதமான வரியும் கட்டாமல் போய் விடுவார். இம்மாதிரி தினம், தினம், வாரா வாரம் செய்துகொண்டே போகலாம். அதனல் தான் "காஷுவல் டீலர், டிரேடர்" முதற்கொண்டு ரிஜிஸ்டர் செய்து கொள்ளவேண்டுமென்பதற்காகத்தான் இந்தத் திட்டம் போட்டிருக்கிறேம். அம்மாதிரி "காஷுவல் டிரேடர்" இங்கு வந்து விற்பனை செய்துவிட்டுப் போனல் அவர்களிடம் வரி வசூல் செய்வதற்கு இந்த விதி போடப்பட்டிருக் கிறது. இந்த ராஜ்யத்தில் இல்லாத வெளி ராஜ்யத்திலிருந்து வரக்கூடிய வர்த்தகர்களுக்கோ அல்லது இங்கு இருக்கும் அவர்களது ஏஜண்டு களுக்கோ வரி விதிப்பதற்காகத்தான் இம்மாதிரி விதி போடப்பட்டிருக் கிறது.

அடுத்தபடியாக ஸ்ரீ லாஸர் அவர்கள் ரிஜிஸ்டரேஷன் கான்ஸலேஷன் செய்வதற்கு முந்திய இரண்டு வருஷங்களுக்கும் தொடர்ந்து ரிஜிஸ்டிரேஷன் பீஸ் கொடுக்கவேண்டுமென்று இருப்பதை எடுத்துவிடவேண்டுமென்று சொன்னர்கள். இந்த விதி இல்லாவிட்டால் ரிஜிஸ்டர்டு டீலர் தன்னுடைய பெயரை லிஸ்டிலிருந்து எடுத்துக்கொள்ளுவதற்கு முயற்சி செய்ய மாட்டார். ஒரு தரம் ரிஜிஸ்டர் செய்துவிட்டால், அம்மாதிரி அவர் ரிஜிஸ்டர் செய்துகொள்ளுவதற்கு அவருக்கு அருகதை இல்லை என்று நிரூபிக்கக்கூடிய பொறுப்பு ரிஜிஸ்டர்டு டீலருக்கு இருக்கிறது. அப்படி அந்தப் பொறுப்பு அவர்களுக்கு இல்லாவிட்டால் ஒரு தரம் ரிஜிஸ்டர் செய்துவிட்டு, எப்பொழுது லைசென்ஸ் பீஸ் கேட்டாலும், "எனக்கு 7,500 ரூபாய்க்கு குறைவாகத்தான் விற்பனை ஆகிறது, நான் அந்த விதிக்கு உட்படவில்லை" என்று பதில் சொல்லிக்கொண்டே இருக்கலாம். ஆகவே, வியாபாரம் குறைவாக இருக்கிறது, ரிஜிஸ்டிரேஷனை கான்ஸல் செய்துவிட வேண்டுமென்று சொல்லி அதை நிரூபிக்கவேண்டிய பொறுப்பு அவர்கள் கையில் விடப்படவேண்டுமென்பதற்காகத்தான் இந்த ஷரத்தை இம்மாதிரி அமைத்திருக்கிறேம். ஆகவே, இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளுவதற்கு இல்லை.

**SRI S. LAZAR** : நான் 7-வது உப பிரிவில் இருக்கக்கூடிய முதல் பகுதி அவசியம் இல்லை என்று சொன்னேன். ஏனென்றல் 21-வது பிரிவின் (1), (2)-வது உப பிரிவிலேயே இது தானகவே வந்துவிடுகிறது. அந்த இடத்திலே இதை மறுபடியும் சொல்லவேண்டியதில்லை என்று சொன்னேன்.

பிறகு அமைச்சர் அவர்கள் செக்யூரிடி வாங்குவது பற்றி சொல்லும் பொழுது "காஷுவல் டீலர் அல்லது அவர்களுடைய ஏஜண்டுகளிடம்தான் இந்த செக்யூரிடி வாங்கும் முறையில் இது அமையும் என்று சொன்னர். எல்லா வியாபாரிகளுக்கும் இது பொருந்தாது" என்று சொன்னல், அப்பேர்ப்பட்டவர்களை மட்டும் விலக்கி காஷுவல் டிரேடர், வெளி ஏஜண்டுகளுக்கு மட்டும் இது பொருந்தும் என்று இதை மாற்றிவிட்டால், அமைச்சர் அவர்கள் அணுகுகின்ற முறைப்படி இது அமையும் என்ற காரணத்தினல் இதை அப்படியாவது திருத்த முடியுமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

* **THE HON. SRI R. VENKATARAMAN** : I wish the hon. Member reads the language of the section. It merely says the prescribed authority shall have the power. It does not mean he will levy the security from everybody. He will exercise his discretion and that is subject to revision. Therefore, it is not necessary to change it.

In the instance given by my hon. Friend, I think he has taken an extreme case, of a man who is giving deliberately false accounts all along, it is only there he will have to go to the authority six

[Sri R. Venkataraman] [13th February 1959

times and I think it is necessary for him to go to the authorities six times if he goes on violating every one of the rules conected with the sales tax.

The amendments were put and lost.

Clause 21 was put and carried.

*Clause 22.*

MR. SPEAKER : The motion is—

" That clause 22 do stand part of the Bill."

SRI S. LAZAR : இந்தப் பிரிவின் முதல் உப பிரிவிலே—

"No persons who is not a register dealer shall collect any amount by way of tax.." என்ற முறையில் இருக்கிறது. அதாவது ரிஜிஸ்டர் செய்துகொண்டவர்கள் மட்டும்தான் இந்த வரியை வசூலிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. 2-வது உப பிரிவிலே— "If any dealer or person who is not liable to tax under this Act collects any amount purporting to be by way of tax.." என்று இருக்கிற காரணத்தினால் அது சரியாக இல்லை என்று நினைக்கிறேன். ஒருவேளை இந்தப் பிரிவை கொண்டுவந்திருக்கக்கூடிய நோக்கம் "who is not a registered dealer என்று நினைக்கிறேன்:

If any person who is not a registered dealer collects any amount purporting to be by way of tax, such dealer or person shall pay over to the Government "

என்று அமையவேண்டுமென்று நினைக்கிறேன். ஆகவே,

" If any dealer or person who is not a registered dealer "

என்று இதை மாற்றி அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, 3-வது உப பிரிவிலே—

"If any dealer or person collects tax on transactions not liable to tax under this Act.."

என்று கண்டிருக்கிறது. உபரியாக வசூல் செய்த பணத்தை அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டுமென்று இதில் அமைந்திருக்கிறது. இப்படி உபரியாக ஒரு சில வியாபாரிகள் வசூல் செய்யும்பொழுது ஒன்றுமே தெரியாத சாதாரண பாமரமக்கள் அந்த வரியை கொடுத்திவிடுவார்களேயானால் அதற்கு என்ன விமோசனம் இருக்கிறது என்று தெரியவில்லை. அப்படி வசூல் செய்கிறவர்கள்பேரில் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற முறையில் அமைந்திருந்தால், குற்றம் என்ற முறையில் 45-வது பிரிவில் அமைந்திருந்தால், அது போன்ற முறையில் வரி வாங்கக்கூடாத எந்தப் பொருள்களுக்கும் வியாபாரிகள் வரி வாங்காமல் இருப்பதற்கு முயற்சி செய்வார்கள். 22 (1)-வது பிரிவின்படி ரிஜிஸ்டர் செய்து கொள்ளாத வியாபாரி வரி வசூல் செய்தால் அவர் தண்டனைக்குள்ளாவார் என்று அமைந்திருக்கிறது. அதேமாதிரி (2), (3)-வது உப பிரிவின் கீழ் வரி வாங்கக்கூடாத பொருள்களுக்கு வரி வாங்கினால் அதுவும் தவறு என்ற முறையில் 45-வது பிரிவிலே அமையவில்லை. அரசாங்கத்திற்கு வருமானம் வரவேண்டுமென்ற முறையில் வாங்கக்கூடிய பணம் வந்து சேரவேண்டுமென்றும் இது அமைந்திருக்கிறதே தவிர, இம்மாதிரி வரி வாங்காமல் தடுப்பதற்கு ஒரு பரிகாரமும் இல்லை. இதை கவனிக்க வேண்டுமென்று அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

THE HON. SRI R VENKATARAMAN : செக்ஷன் 22 பிரகாரம் ரிஜிஸ்டர்டு டீலர் என்ன வரி உண்டோ அதற்கு மேல் கலெக்ட் செய்யக்கூடாது என்று கண்டிருக்கிறது. செக்ஷனில் 22 (2)-ல் டீலராக இருந்தாலும் சரி, டீலராக இல்லாத சாதாரண மனிதராக இருந்தாலும் சரி, விதிக்கப்



13th February 1959] [Sri R. Venkataraman]

படாத வரியை வசூலித்தால், சட்டப்படி அனுமதிக்கப்படாத வரியை வசூலித்தால், அதை சர்க்காருக்கு கட்டிவிடவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறது. இந்த இரண்டாவது உப பிரிவுக்கும் முதல் உப பிரிவுக்கும் உள்ள வித்தியாசம் இதுதான். யாராக இருந்தாலும் சரி, டீலராக இருந்தாலும் சரி, தனிப்பட்ட நபராக இருந்தாலும் சரி, யாரிடமாவது விற்பனை வரி என்று சொல்லி வசூலிக்க வேண்டாத தொகையை வசூலித்துவிட்டால் அவர் அந்தத் தொகையை சர்க்காரில் கட்டிவிடவேண்டும். ஸ்ரீ லாஸர் அவர்கள் இதைச் குற்றம் என்று செய்யவில்லை என்று சொன்னார்கள். குற்றம் என்று செய்வதற்கு அவசியமில்லை. இந்த விதமாக விதிக்கக்கூடாத வரியை யாராவது வசூலித்தால், அதைச் சர்க்கார் எடுத்துக்கொண்டுவிடும்; அதைச் சர்க்காருக்கு கட்டிவிடவேண்டுமென்று சொன்னால், யாரும் இம்மாதிரி வரி வாங்கமாட்டார்கள். அப்படி வாங்குவதில் அவர்களுக்கு எந்த விதமான லாபமும் இல்லை. ஏதாவது லாபம் இருந்தால்தான் அப்படி வாங்குவார்கள். ஆனால், வேண்டுமென்று செய்தால் அது குற்றமாகிவிடும். 45-வது பிரிவில 'wilfully acts in contravention of the provisions of this Act' என்று இருப்பதால் அது குற்றமாகிவிடும். ஆகவே, இந்த ஷரத்து சரியாக இருக்கிறது. இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

The clause was put and carried. 10-20 a.m.

Clause 23 was put and carried.

*Clause 24.*

MR. SPEAKER : The motion is—

" That clause 24 do stand part of the Bill."

SRI N. K. PALANISAMI : Sir, I move the following amendment—

" In sub-clause (1), *for* the words ' tweny-one days ' *substitute* the words ' thirty days '."

The amendment was duly seconded.

SRI S. M. ANNAMALAI : Sir, I move the following amendment—

" In sub-clause (1), *for* the word ' twenty-one ', *substitute* the word ' forty '."

SRI A. GOVINDASAMY : Sir, I second it.

SRI N. K. PALANISAMI : Sir, I move the following amendment—

" In item (*b*) under sub-clause (2), *after* the words ' imposed by him ', *add* the words ' after issue of summons to the dealer '."

The amendment was duly seconded.

SRI N. K. PALANISAMI : Sir, I move the following amendment—

" *Omit* sub-clause (3)."

The amendment was duly seconded.

MR. SPEAKER : The clause and the amendments are before the House for discussion.

SRI N. K. PALANISAMI : கனம் சபாநாயகர் அவர்களே, இதில் இப்போது கொடுத்திருக்கும் நாட்கள் போதாது. ஆகவே இதில் 30 நாட்கள் என்றாவது இருக்க வேண்டுமென்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். ஏனென்றால், இதில் சொல்லப்பட்டிருக்கும் 21 நாட்கள் என்பது மிகவும் குறைவானது. ஆகவே இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக சப்-கிளாஸ் பி-யில் சொல்லப்பட்டிருப்பதின் பிரகாரம் சம்மன் இல்லாமல் வியாபாரிகளை ஜப்தி செய்வதற்கும் முடியும் என்ற அளவில் அமைந்திருக்கிறது.

" on application to any Magistrate, by such Magistrate as if it were a fine imposed by him" என்று இருக்கிறது. இதற்குப் பின்னால் "after issue of summons to the dealer" என்று இருக்கவேண்டும் என்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். அதாவது சாதாரணமாக எவ்வளவு வரி கொடுக்க வேண்டுமென்று அதிகாரி மாஜிஸ்ட்ரேட்டிடம் போய் சொன்னால் அதன்படி உடனே சம்மன் பிறப்பிக்க முடியும். இவ்விதமில்லாமல் அதிகாரி போய் சொன்னாலும் அதைப்பற்றி விசாரணை செய்து அதன் பின்னால் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றுதான் நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். அடுத்தபடியாக 3-வது சப் கிளாஸில் penalty என்று குறிப்பிட்டிருக்கிறது. இதன்படி வரி கட்டத் தவறினால் முதல் மூன்று மாதத்திற்கு அரை சதமானம் வட்டியும், அதற்கு அடுத்த மூன்று மாதத்திற்கு ஒரு சதமானம் வட்டியும் கொடுக்க வேண்டியிருக்கிறது. இது வட்டி என்ற முறையில்தான் கொடுக்க வேண்டியிருக்கிறது. இவ்விதம் சர்க்காருக்கு வட்டி கொடுக்கவேண்டிய அவசியமில்லை என்று கருதுவதால் இந்த சப்-கிளாஸை நீக்கிவிட வேண்டும் என்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். இந்தத் திருத்தங்களை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* SRI S. M. ANNAMALAI : கனம் சபாநாயகர் அவர்களே, நான் கொடுத்திருக்கக்கூடிய திருத்தம், வியாபாரிகள் வரி கொடுக்கத் தவறுவார்களானால், அவர்களிடமிருந்து வரி வசூலிப்பதற்கு 21 நாள் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. இதன் பிரகாரம் வியாபாரி ஏதாவது தன்னுடைய வியாபாரத்தால் நஷ்டமானவர்கள் வரி கொடுக்க முடியாமல் இருக்கின்றவர்கள் 22-வது நாள் கொடுக்கவேண்டும் என்று கூட அதிகாரி உத்தரவிடலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மற்ற சட்டங்களில் எல்லாம் 40 நாட்கள், 30 நாட்கள் என்று குறிப்பிட்டிருக்கிறது. ஆகவே இதில் 21 நாட்கள் என்றிருப்பது பொருத்தமல்ல. இதன் மூலம் 22-வது நாள் வரி கொடுக்கவில்லையானால் அவர்களின் சொத்தின்பேரில்கூட ஜப்தி செய்து கொண்டு போகலாம் என்று இருக்கிறது. இதில் குறைந்தது இரண்டு மாதங்கள்வரை கூட காலம் கொடுக்கலாம். அதிலும் குறிப்பாக நஷ்டமடைந்த வியாபாரிகள் 22-வது நாளே வரிகளை கொடுக்க வேண்டியிருப்பதால், அவர்கள்பேரில் சலுகை காட்டுகின்ற முறையிலாவது இதில் 21 நாட்கள் என்றிருப்பதை 40 நாட்கள் என்று திருத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்காக நான் கொடுத்திருக்கும் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் சபாநாயகர் அவர்களே, 24-வது செக்ஷனில் முதலில் 21 நாட்களுக்குள்ளாக வசூலிக்கக் கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி முதலிலே நம்முடைய மசோதாவில் 15 நாட்கள் என்று சொல்லப்பட்டிருந்தது. அதன் பின்னால் இதைப்பற்றி பரிசீலனை செய்த பரிசீலனை கமிட்டியார் இது மிக குறைவாக இருக்கிறது, இதை அதிகப்படுத்தவேண்டும் என்று கருதி இதை 21 நாட்கள் என்று உயர்த்தினார்கள். இதில் இப்போது இருக்கும் 21 நாட்கள் என்று இருப்பதை 40 நாட்கள் என்று உயர்த்தினால் வரி கொடுக்க வேண்டியவர்கள் ஊரை விட்டே போகக்கூடிய நிலைமை ஏற்படலாம், அதன் காரணமாக சர்க்காருக்கு வரியை வசூலிக்க முடியாத நிலைமை ஏற்படலாம். ஆகவே இதில் 21 நாட்கள் என்று போட்டிருப்பதில் தவறு ஒன்றுமில்லை என்று நினைக்கிறேன். இதனால் சர்க்காரை ஏமாற்றுகிறவர்களுக்கு வழி கிடைக்காது என்றும் கருதிதான் இது இவ்விதம் போட்டப்பட்டிருக்கிறது. அடுத்தபடியாக சட்டத்திற்கும் நிர்வாகத்திற்கும் இருக்கின்ற வித்தியாசங்களை நாம் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். நிர்வாகத்தில் பல தவறுகள் நடக்கின்றது என்பதற்காக சட்டங்களையும் தவறான முறையில் ஏற்படுத்த முடியாது. சட்டத்தில் ஏதாவது பரிகாரம் காணவேண்டுமென்றால் அப்பீல், அதற்கு மேல் ரிவிஷன் என்றெல்லாம் பல வழிகள் இருக்கின்றன. கடந்த இரண்டு வருஷ காலத்தில் நடந்திருப்பவைகளை எடுத்துக்கொண்டுப் பார்த்தால் வரி கொடுக்க முடியாதவர்கள் எல்லாம் மேல் அதிகாரிகளிடத்தில் போய் முறையிட்டு வரிகளைத் தவணை முறைகளாக (இன்ஸ்டால்மெண்ட்) கட்டுவதற்கும், கட்டவேண்டிய தவணை காலத்தை நீட்டிகொடுக்கவேண்டும் என்று கேட்டும் பல உத்தரவுகளைப் பெற்றிருக்கிறார்கள். இவ்விதம் கேட்கப்படுபவைகள் எல்லாம் நியாயமாக இருந்தால் அவைகள் அனுமதிக்கப்படும். ஆகவே இதற்காக சட்டத்தில் மாறுதல் செய்ய முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்தபடியாக கனம் பழனிசாமி அவர்கள் சொன்னார்கள், நோட்டீஸ் கொடுத்ததின் பின்னால் தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். எப்போதுமே மாஜிஸ்ட்ரேட்டிடம் சென்று சொல்லும்போது அவர்கள் நோட்டீஸ் கொடுக்காமல் நடவடிக்கை ஒன்றும் எடுப்பதில்லை. இவைகள் எல்லாம் (ப்ரொஸீசர்) வழக்கமான நடவடிக்கைகளாக இருந்து வருகின்ற விஷயம். இவைகளையெல்லாம் சட்டத்தில் சேர்க்கவேண்டுமென்று சொன்னால் இந்தச் சட்டம் 600-க்கு மேற்பட்ட செக்ஷன்கள் உள்ளதாக ஆகிவிடும். எப்போதுமே கோர்டில் ஒரு கேஸை கொடுத்து விட்டால் ஒன்றும் விசாரிக்காமல் உடனே தூக்கில் போட்டுவிடமாட்டார்கள். இன்றைக்குப் போடப்பட்டிருக்கும் ப்ரவிஸோ-வைப்பார்த்தால் பரிசீலனை செய்து தான் இந்த உத்தரவை போடவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே நோட்டீஸ் கொடுக்காமல் நடவடிக்கை எடுத்து விடுவார்கள் என்று நாம் கருத வேண்டிய தேவையில்லை என்பதை சொல்லிக்கொள்கிறேன். அடுத்தபடியாக இதில் Penalty என்று போடப்பட்டிருப்பது பொருத்தமில்லை என்றுதான் நான் கருதுகிறேன். அதோடு இதில் சொல்லப்பட்டிருப்பது முதல் மூன்று மாதத்திற்கு அரை சத விகிதமும், அதன் பின்னால் ஆறு மாதத்திற்கு ஒரு சத விகிதமும் போடப்பட்டிருக்கிறது. இதுகூட போடவில்லையென்றால் வரி வசூலுப்பதில் பெரிய காலதாமதம் ஆகும். ஆகவே இதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

The amendments were put and lost.

Clause 24 was put and carried.

Clause 25 was put and carried.

Clause 26 was put and carried.

*Clause* 27.

MR. SPEAKER : The motion is—

" That clause 27 do stand part of the Bill."

SRI N. K. PALANISAMI : Sir, I move the folowing amendment— 10.30 a.m.

" In the proviso, *after* the words ' by transfer ', *add* the words ' and with knowledge of the liability of transferor '."

The amendment was duly seconded.

MR. SPEAKER : The clause and the amendment are before the House for discussion.

[13th February 1959

SRI N. K. PALANISAMI : ஒரு வரி விதிக்கும் ஆபீசர் பிராசிக்யூஷன் நடத்தக்கூடிய காலத்தில் விற்கிறவனை ஒன்றும்செய்யாமல் அந்தக் கடையை வாங்குகிறவனிடத்திலிருந்து வரி வசூலிக்க ஏற்பாடு செய்திருப்பது சரியல்ல. விற்கிறவன் வாங்குகிறவனிடம் எவ்வளவு பாக்கி டாக்ஸ் இருக்கிறதென்று முதலில் சொல்லாவிட்டால் இந்தத் தொகையை வாங்குகிறவன் கொடுக்கும்படியாக நேரிடும். உண்மையாகவே தெரிந்து வாங்கினால் பாக்கி வரியை இவனிடம் வசூலிப்பது நியாயம். அப்படி ஒன்றும் தெரியாது செய்கிறவர்களை—ஒன்றும் அறியாதவர்களை இது பாதிக்காமல் இருக்க என் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : ஒருவனிடமிருந்து ஒன்றை வாங்கும்போது யாரும் அசெட் அண்டு லையபிலிடி தெரிந்து கொள்ளாமல் வாங்கமாட்டார்கள். அப்படி வாங்கினால் பல நஷ்டத்திற்கு உள்ளாக நேரிடும். நமது பழனிசாமி அவர்களுக்கு வர்த்தக அனுபவம் கிடையாது. யாரோ லையபிலிடி அசெட் தெரியாமல் வாங்கி விடுவார்கள் போலும். அவர்களுக்கு நஷ்டம் உண்டாகுமே என்று பேசுகின்றார். அப்படி யாரும் வாங்கமாட்டார்கள். ஆகவே இந்தத் திருத்தத்திற்கு அவசியம் இல்லை.

The amendment was put and lost.

Clause 27 was put and carried.

Clause 28 was put and carried.

*Clause* 29.

MR. SPEAKER : The motion is—

"That clause 29 do stand part of the Bill."

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I move a few verbal amendments—

In sub-clause (1), for the words "Madras City Land revenue" *substitute* the words "Madras City Land Revenue."

In sub-clause (2), for the words "be vested with" *substitute* the word "have."

In sub-clause (3), for the words "vested under" *substitute* the words "conferred by".

The amendments were put and carried.

Clause 29 as amended was put and carried.

*Clause* 30.

MR. SPEAKER : The motion is—

"That Clause 30 do stand part of the Bill".

SRI N. K. PALANISAMI : Sir, I move—

In sub-clause (2), for the words "by the Government", *substitute* the words "by the High Court".

In the explanation to item (iv) of sub-clause (3) after the words "any other member", add the words "except the departmental member".



13th February 1959] [Sri N. K. Palanisami]

In sub-clause (4), *omit* the words "with the previous sanction of the Government".

The amendments were duly seconded.

SRI S. LAZAR : Sir, I move—

"*Omit* sub-clause (4).

MR. SPEAKER : Who is seconding the amendment?

SRI B. K. LINGA GOWDER : I am seconding it, Sir.

MR. SPEAKER : Next, time, I won't remind the hon. member for getting his amendment seconded. I will say that the amendment falls through for want of a seconder.

The clause and the amendments are before the House for discussion.

SRI N. K. PALANISAMI : முதலாவதாக வேகன்ஸி ஏற்பட்டால் அதை சர்க்காரே பூர்த்தி செய்யும் என்று சொல்லியிருப்பது சரியல்ல. என்னதான் சர்க்காரே நேர்மையாகச் செய்வதாக இருந்தாலும் வியாபாரிகள் மனதை திருப்தி செய்யமுடியாது. ஆகவே இதற்கு "ஹைக்கோர்ட்டினாலேயே" நியமிக்கப்பட வேண்டுமென்பது என் திருத்தம்.

அடுத்தபடியாக மூன்று ஜெட்ஜுகள் இருக்கும்போது இரண்டு பேர் சேர்ந்து கொடுக்கிற முடிவை முடிவாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். இலாகாவைச் சேர்ந்தவர்கள் ஜட்ஜாக வந்து விட்டால் இந்த முடிவு நியாயமாக இருந்தாலும் அவ்வளவு திருப்திகரமாக இருக்காது. ஆகவே "டிபார்ட்மெண்டல் மெம்பரைத் தவிர" என்று நான் கொடுத்திருக்கக்கூடிய திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக அபேலட் டிரிப்யூனல் என்பது தனித்து இயங்கக் கூடிய ஸ்தாபனம். அடானமஸ் பாடி. அவர்களுக்கே கட்டுப்பாடு விதிக்கக்கூடிய அளவு சர்க்கார் எந்தக் காரியத்தையும் செய்யக்கூடாது. சர்க்காரிடமிருந்து முன்பாக சாங்ஷன் வாங்கித்தான் நோட்டிபிகேஷன், ப்ரோசீஜரை ரெகுலேட் பண்ணலாம் என்பதாக வைத்திருப்பது அவ்வளவு பொருத்தமாக இல்லை. கோர்ட் எப்படி இயங்குகிறதோ அப்படி இயங்க வேண்டும். ஆகவே "சர்க்காருடைய முன் அனுமதியின்பேரில்" என்று விதிக்கப்பட்டிருப்பதை எடுத்துவிட வேண்டுமென்று வற்புறுத்துகிறேன். இந்தத் திருத்தங்களை எல்லாம் சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

SRI S. LAZAR : இந்தப் பிரிவைப் பற்றி பேச முற்படுகிறபோது கனம் பழனிசாமி வற்புறுத்திய முக்கியமான கருத்தை நானும் வற்புறுத்த விரும்புகிறேன். மூன்று நபர்கள் இருக்கிறபோது அதற்குத் தலைமை அதிகாரி ஜுடீஷியல் அதிகாரியாக இருக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதே முறையில் இரண்டு நபர்கள் இருக்கிறபோதும்கூட அதற்குத் தலைமை வகிக்கக் கூடியவர் சட்டம் தெரிந்தவராக நீதி பரிபாலனத்தைச் சேர்ந்தவராக இருக்கவேண்டும் என்கிற கருத்தை நானும் மிகவும் வலியுறுத்திச்சொல்ல ஆசைப்படுகிறேன். ஏனென்று கேட்டால் அபேலட் டிரிப்யூனல் என்று வைக்கிறபோது மூன்று மெம்பராகவோ, இரண்டு மெம்பாகவோ இருக்கிற காரணம் பூர்த்தியாக வேண்டுமானால் இரண்டு மெம்பரில் ஒரு மெம்பராவது சட்டம் தெரிந்தவராக அனுபவம் உள்ளவராக இருந்தால்தான் எந்த நோக்கத்தோடு அப்பலேட் டிரிப்யூனலுக்குப் போகிறார்களோ அந்த நோக்கம் நிறைவேறும். ஆகவே அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[Sri S. Lazar] [13th February 1959

அடுத்தபடியாக நான் கொடுத்திருக்கக் கூடிய திருத்தத்தைப் பற்றி பேசுகின்றபோது 4-வது பிரிவு பராவின் பிரகாரம் ஒரு அதிகாரத்தை அபலேட் டிரிப்யூனலுக்குக் கொடுக்கிறோம். சாதாரணமாக இந்தச் சபை தன் அதிகாரத்தை டெலிகேட் பண்ணுவது அரசாங்கத்திற்குத்தான். இதன்பேரில் அரசாங்கம் செய்கிற ரூல்ஸ், ரெகுலேஷன் எல்லாம் சபையின் பார்வைக்கு வருகிறது. அதற்கான ஏற்பாட்டையும் செய்துகொண்டிருக்கிறோம். ஆனால் இந்த உப பிரிவின் அடிப்படையில் பார்க்கிறபோது அந்த ஓர் அதிகாரத்தை அபலேட் டிரிப்யூனலுக்குக் கொடுக்கிறபோது அவர்கள் செய்கிற காரியம் இந்தச் சபையின் கருத்துக்கு உட்பட்டு இருக்கறா என்பதையெல்லாம் கவனிக்க வழியில்லாமல் போய்விடும். இந்த ஓர் அதிகாரத்தை அரசாங்கமே வைத்துக் கொண்டால் நடைமுறையில் இந்தச் சபையின் கௌரவத்திற்கு எந்த விதமான இழுக்கும் இல்லாத முறையில் நம் கௌரவம் காப்பாற்றப்படும். ஆகவே இந்த ஷரத்தையே எடுத்துவிட வேண்டுமென்பது என் திருத்தம். அப்படி அரசாங்கம் இது சம்பந்தமாக விதிகளைச் செய்கிறபோது அதையே அபலேட் டிரிப்யூனலுக்குக் கொடுத்து அரசாங்கமே வெளியிடலாம் என்ற காரணத்தினாலேயே இதை எடுத்துவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN: முதலாவதாக இந்த அபலேட் டிரிப்யூனலுக்கு ஏதாவது வேகன்ஸி வந்தால் அதை ஹைக் கோர்ட்டே பில்லப் பண்ணவேண்டுமென்று கனம் பழனிசாமி சொன்னார்கள். இதற்குத் தலைமையாக இருக்கிற ஜட்ஜையே அரசாங்கம்தான் நியமிக்கிறார்கள். ஆகவே அபலேட் டிரிப்யூனல் வேகன்ஸியை ஹைக்கோர்ட் தான் பில்லப் பண்ணவேண்டுமென்று சொல்வது பொருத்தமாகாது.

இரண்டாவது இதில் மெம்பராக ஆடிட் மெம்பர்கள்தான் இருக்கிறார்கள். கோர்ட்டுகளில் இருக்கிற நல்ல வழக்கு அறிஞர்களைப் பார்த்து நியமிப்பதற்கு ஹைக்கோர்ட்டுக்குச் சந்தர்ப்பம் இருக்கிறது. அதோடு இந்த இலாகா சம்பந்தப்பட்ட ஆடிட், ரெகுலேஷன் எல்லாம் தெரிந்தவர்கள் இருப்பதும் அவசியம். ஆகவே அட்மினிஸ்ட்ரேடிவ் க்வாலிபிகேஷன் உள்ளவர்களை சர்க்கார் இருபது வருஷ காலமாக நியமித்து வருகிறார்கள். மீண்டும் தொடர்ந்து அந்த அதிகாரத்தை சர்க்காரே வைத்துக்கொள்ள வேண்டும் என்றுதான் நினைக்கிறது.

அடுத்தபடியாக ஒரு மெம்பராக இருக்கக் கூடியவர்கள் இலாகாவைச் சேர்ந்தவராக இருக்கக்கூடாது என்று சொன்னார்கள். 25 ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாத கேஸ்களில்தான் ஒரு மெம்பர் விசாரணைக்கு வருவார். அது யாராக வேண்டுமானாலும் இருக்கலாம். இலாகா அதிகாரியாகவும் இருக்கலாம். அக்கவுண்டு மெம்பராகவும் இருக்கலாம். கோர்ட் மெம்பராகவும் இருக்கலாம். சிறிய கேஸ்களுக்கு இரண்டுபேர் தேவையில்லை என்பதனால்தான் இப்படிச் செய்யப்பட்டிருக்கிறது. மேலும் இதற்கு இன்னார்தான் இருக்க வேண்டுமென்பதும் இல்லை. அதேசமயத்தில் ஸ்ரீ லாசர் சொன்னார்கள், சட்டப் பிரச்னை எழுமானால் அவர்களால் தீர்க்க முடியாது என்று. ப்ரொவைசோவை அவர்கள் படிக்கவில்லை. சட்டப் பிரச்னை எழக்கூடிய கேஸ்கள் வரும்போது இந்த ஒரு மெம்பர் இது சம்பந்தமாக வழக்கை பெஞ்சுக்கோ பெஞ்சாக இருந்தால் புல் பெஞ்சுக்கோ ரெபர் பண்ணி அந்த முடிவையே கொடுக்க வழி செய்யப்பட்டிருக்கிறது.

'Provided that if any case which comes up before a single member (who is not the Chairman) or a Bench (of which the Chairman is not a member) involves a question of law, such single member or Bench may, in his or its discretion, reserve such case for decision by a Bench of which the Chairman shall be a Member'.



13th February 1959] [Sri R. Venkataraman]

ஆகவே அவர்கள் சொல்வதற்கு அர்த்தமில்லை என்று சொல்ல விரும்புகிறேன். மேலும் அவர் இந்த 4-வது பிரிவினையே எடுத்துவிட வேண்டுமென்று ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். இதில் அபலேட் டிரிப்யூனலுக்கு சில அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கனம் பழனிசாமி அவர்கள் "ப்ரிவியஸ் சாங்ஷன் ஆப் த கவர்ன்மெண்டு" என்று இருப்பதை எடுத்துவிட வேண்டுமென்று சொன்னார்கள். கேஸ்கள் எப்படி நடத்த வேண்டும் என்பதில் சர்க்கார் ஒரு நாளும் தலையிடாது. ஆனால் டிரிப்யூனல் உட்கார்ந்து விசாரணை செய்வதாக இருந்தால் செலவு ஆகிறது. அந்தச் செலவுகளுக்கு சர்க்கார்தான் அனுமதி அளித்தாகவேண்டும். அதற்காகத்தான் இந்த ஷரத்து இருக்கிறதே தவிர அவர்கள் முடிவு செய்கிற கேஸ்களில் தலையிடவேண்டும் என்பதைதற்காக அல்ல. சர்க்கார் ஒரு நாளும் தலையிடாது. ஆகவே இதை நீக்கிவிட வேண்டும் என்பதற்கும் அவசியமில்லையென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே தான் இந்தத் திருத்தங்களை ஒத்துக்கொள்ள முடியாமல் இருக்கிறதென்று சொல்ல விரும்புகிறேன்.

SRI S. LAZAR: Mr. Speaker, Sir, I want to explain . . . .

MR. SPEAKER: The hon. Member cannot make a second speech. The hon. Member has already spoken on the clause and the Hon. Minister has replied to that.

SRI S. LAZAR: We are on an important business therefore I want to make myself clear . . .

MR. SPEAKER: I cannot allow a second speech (seeing the hon. Member still standing). Will the hon. Member please resume his seat. When the Chair is on its legs, the hon. Member must sit down.

Now I am going to put the amendments to the vote of the House.

The amendments were put and lost.

Clause 30 was put and carried.

*Clause* 31.

MR. SPEAKER: The motion is—

'That clause 31 do stand part of the Bill'.

SRI N. K. PALANISAMI: Mr. Speaker, Sir, I move the amendments standing in my name, namely:

(1) In sub-clause (1) *for* the word and figure, "section 12" *substitute* the words and figures "section 7, section 12, section 13".

(2) In the second proviso to sub-clause (1), *omit* the words "or of such instalments thereof as might have become payable as the case may be".

(3) In item (*a*) (i), of sub-clause (3), *omit* the word "enhance".

The amendments were duly seconded.

MR. SPEAKER: The clause and the amendments are before the House for discussion.

[18th February 1959

10-40 a.m. SRI N. K. PALANISAMI : இந்தத் திருத்தத்தில், அப்பீல் என்பதில் காம்பவுண்ட் செய்த வரியை ஆபீசர் ஏற்றுக்கொள்ளாவிட்டால் அதற்கு அப்பீல் இதில் சேர்த்துக்கொள்ள வேண்டும். சர்க்கார் கொடுக்க வேண்டிய தொகையை இன்ஸ்டால்மெண்டாகக் கொடுத்தால், இன்னும் கொஞ்சம் அதிகமான தொகை சர்க்காருக்குக் கட்டவேண்டியதற்காக இதில் ஆராத்து சேர்க்கப்பட்டிருக்கிறது. அபராதம் போட்டால், அதற்கு அப்பீல் செய்தால் நியாயம் கிடைக்குமா என்று தெரியவில்லை. இருக்கக் கூடிய நிலைமையில் நியாயம் கிடைக்குமென்று தெரியவில்லை, நிலைமைக்கு கொடுக்கப்படுகிறது நியாயமா நயாயும் இல்லையா என்று மேலும் எப்படி இருக்கும் என்று தெரியவில்லை. இதைச் செய்யத் தவறியிருக்கிறது. இதில் என்ஹான்ஸ்மெண்ட் என்ற வார்த்தையை நீக்கவேண்டும். ஆகவே நாங்கள் கொடுத்திருக்கின்ற திருத்தத்தை ஆலோசித்து ஆதரிக்கு மாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இந்தச் சட்டத்திலே சில விஷயங்களை அப்பீல் செய்தால் அது செல்லாது என்று சொன்னால் அதற்கு ரிவிஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. ப்ரொவிஷனல் அஸெஸ் மெண்ட் செய்து காம்பவுண்ட் ரேட் போட்டுவிட்டால் ரிவிஷனுக்குப் போகலாம் அதற்குமேல் போகமுடியாது, காரணம் ப்ரொவிஷனல் அஸெஸ்மெண்ட் செய்து ஆவதற்கு ஒரு வருஷம் ஆகும். ப்ரொவிஷனல் அஸெஸ்மெண்ட் அதிகமாக வசூல் செய்திருந்தால் சேரவேண்டிய தொகைக்கு கிரெடிட் கொடுத்துவிட்டு பாக்கியை அவர்களுக்கு ரிபண்ட் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மேல் அப்பீல் கொடுத்தால் இதில் சிக்கல் தான் ஏற்படும். Final Assessment வரைக்கும் அஸெஸ்மெண்ட் வரைக்கும் மீண்டும் மீண்டும் அப்பீல் செய்துகொண்டே இருந்தால் விஷயம் தீர்ந்தபாடாகாது. ஆகவே இந்த 104-வது அமெண்ட்மெண்ட் தேவையில்லை. 105-ஆவது அமெண்ட்மெண்ட் இதனால் வியாபாரிகளுக்கு பாதகம்தான் ஏற்படும். அவர்கள் கொடுக்கவேண்டிய தொகை பூராவும் இன்ஸ்டால்மெண்டாக கொடுப்பது கஷ்டமாக இருக்கும் என்று சொல்லி ருர்கள். இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொண்டால் அவர்கள் முழுத் தொகையையும் ஒரே சமயத்தில் கட்டவேண்டியிருக்கும். இந்தத் திருத் தத்தை ஏற்றுக்கொண்டால் பாதகம் அதிகமாக இருக்குமே தவிர சாதகம் ஒன்றும் ஏற்படாது. ஆகவே இந்தத் திருத்தம் அவசியம் இல்லை.

முன்னூற்று ஆறுவது திருத்தம். வியாபாரிகளின் கணக்கு புஸ்தகங் களைப் பார்த்து அவர்களுக்கு எவ்வளவு வரி போட வேண்டும் என்பதை யொட்டி அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அதிகாரம் அதிகப் படியாக இருக்கிறது என்று சொன்னார்கள். அவ்விதம் அதிகாரம் கொடுப்பது குற்றம் அல்ல. அது பீனல் கோட் பிரகாரம் குற்றம் அல்ல. ஆகவே இதில் அவர்கள் கொடுக்கப்பட்டிருக்கும் திருத்தம் அவசியம் இல்லை.

The amendment relating to the second proviso to sub-clause (1) was, by leave, withdrawn.

The other two amendments were put and lost.

Clause 31 was put and carried.

Clause 32 was put and carried.

*Clause 33.*

MR. SPEAKER : The motion is—

'That clause 33 do stand part of the Bill'.



February 1959]

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I move—

'In sub-clause (3), *for* the words " such enquiry ", *substitute* the words " such inquiry ".'

It is only intended to correct a typographical error in the word "enquiry". The word should begin with the letter 'i' instead of the letter 'e'.

SRI S. LAZAR : Mr. Speaker, Sir, I move my amendment, namely :

'In the proviso to sub-clause (4), *for* the word " is ", *substitute* the word " in ".'

The amendment was duly seconded.

THE HON. SRI R. VENKATARAMAN : செலக்ட் கமிட்டி ரிபோர்ட்டில் " in " என்றிருக்கிறது. ஆனால் ஜெனுட் காப்பியில் " is " என்று போட்டி ருக்கிறது.

MR. SPEAKER : Is the hon. Member withdrawing his amendment in view of the reply of the Hon. Minister?

SRI S. LAZAR : Yes, Sir.

The amendment was by leave withdrawn.

MR. SPEAKER : The question is :

'In sub-clause (3), *for* the words " such enquiry ", *substitute* the words " such inquiry ".'

The amendment was put and carried.

The clause as amended was put and carried.

Clause 34 was put and carried.

*Clause 35.*

MR. SPEAKER : The motion is—

'That clause 35 do stand part of the Bill'.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I move the following amendments :

'In sub-clause (2), *for* the word " applications ", *substitute* the word " application ".'

'In the proviso to sub-clause (4), *for* the word " Board " *substitute* the words " Board of Revenue ".'

SRI N. K. PALANISAMI : Mr. Speaker, Sir, I move the following amendment, namely :

'In sub-clause (3) *omit* the last sentence, viz., " such an order shall be final and shall not be liable to be questioned in any court of law ".'

The amendment was duly seconded.

MR. SPEAKER : The clause and the amendments are before the House for discussion.

10-50 a.m. **Sri N. K. PALANISAMI** : கனம் சபாநாயகர் அவர்களே, "such an order shall be final and shall not be liable to be questioned in any court of law" என்ற வார்த்தைகள் கொண்ட கடைசி வாக்கியத்தை உப பிரிவு (3)-லிருந்து நீக்கிவிட வேண்டும் என்று நான் திருத்தம்கொடுத்திருக்கிறேன். இந்த வாக்கியம் இங்கே இருந்தால், அந்த ஆர்டருக்கு எதிராக அப்பீல் செய்துகொள்ளும் உரிமைகூட சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரருக்கு, இல்லாதுபோய் விடும். இவ்வாறு அந்த நபர் கோர்ட்டிற்குப் போகக் கூடாது என்று சொல்வது, அரசியல் சட்டத்தில் அவருக்கு அளிக்கப் பட்டிருக்கும் உரிமையிலிருந்து அவரை "ஸஸ்பெண்ட்" பண்ணுவது ஆகும். ஆகவே அப்பீல் செய்துகொள்வதற்கு இவர்களுக்கு உரிமை இருக்க வேண்டும் என்பது என் கருத்து.

மேலும், ஒரு கேஸ் நடந்தால் அதற்கான செலவைப் பொறுத்த வரையில், அவரவர்கள் செலவை அவரவர்கள் ஏற்க வேண்டும் என்று இருந்தது. ஆனால், இந்த மசோதாவில், அது சம்பந்தப்பட்ட பணத்தை வியாபாரிகளிடமிருந்து வசூலிப்பதற்கும் வகைசெய்யப்பட்டிருக்கிறது. அது கூடாது என்று நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். என்னுடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

**The Hon. Sri R. VENKATARAMAN** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஆர்டர்கள் சாதாரணமாக ஆர்டர்கள், அஸெஸ்மெண்ட் ஆர்டர்கள் என இருவகைப்பட்டவை. சில விஷயங்களில் அப்பீலும் சில விஷயங்களில் ரிவிஷன் மனுவும் செய்யப்படுகிறது. சிறு சிறு விஷயங்களைப் பொறுத்தவரையில், போர்ட் ஆப் ரெவின்யூ ரெவிஷன் செய்யும். சிறிய விஷயங்களுக்கு போர்ட் ஆப் ரெவின்யூவிடம், ரெவிஷன் கோரி மனுச் செய்துகொள்ளலாம். அஸெஸ்மெண்டுகளைப் பொறுத்தவரையில், ஹைகோர்ட்டுக்குப் போகலாம். ஹைகோர்டிற்குப் போவதற்கான உரிமையை அந்த அளவிற்கு கொடுத்திருக்கிறோம். அந்த உரிமையை இதற்கு மேல் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை.

The Government amendments were put and carried.

The amendment of Sri N. K. Palanisami was put and lost.

Clause 35 as amended was put and carried.

*Clause* 36.

**Mr. SPEAKER** : The motion is—

'That clause 36 do stand part of the Bill'.

**Sri N. K. PALANISAMI** : Sir, I move the following amendment.

'In item (*a*) (i) of sub-clause 3, *omit* the word "enhance".

The amendment was duly seconded.

**Sri S. LAZAR** : Sir, I move the following amendment—

'In sub-clause (3), *for* the words "of sub-section (6) and section 38", *substitute* the words "of sub-section (6) of section 38".'

The amendment was duly seconded.



**Sri N. K. PALANISAMI** : Sir, I move the following amendment—

'In sub-clause (7), *omit* the words "except as provided in the rules made under this Act".

The amendment was duly seconded.

**The Hon. Sri R. VENKATARAMAN** : Sir, I move the following amendment—

'In sub-clause (9), *for* the expression, "as assessed by the appropriate authority", wherever it occurs, *substitute* the expression, "as determined by the Appellate Tribunal".'

**Mr. SPEAKER** : The clause and the amendments are before the House for discussion.

(Sri R. Subramaniam in the Chair.)

**Sri S. LAZAR** : கனம் சபாநாயகர் அவர்களே, "ஒரிஜினல் கெஜெட் பப்ளிகேஷன்"-ல் "of" என்று இருந்தால் என்னுடைய திருத்தத்தை நான் வலியுறுத்தவில்லை.

38-வது பிரிவின் உப பிரிவு (3) (b)-யின் கடைசி ப்ரொவிஸோவில் "Provided further that........the Appellate Tribunal may defer the hearing of the appeal before it, till such revision petition in the High Court or the appeal in the Supreme Court is disposed of" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது ஒரு நவீன முறையாக இருக்கிறது. இதுபோன்ற எத்தனையோ ட்ரிப்யூனல்கள் இப்போது நாட்டில் நடந்துவருகின்றன. அவை சம்பந்தப்பட்ட சட்டங்களில், இதுபோன்ற ப்ரொவிஸோக்களை ஏற்படுத்தியதில்லை. காரணம், ட்ரிப்யூனல்கள் அவ்வாறு இயங்கினால் தீர்ப்புகள் அளிக்கப்படுவதில் காலதாமதம் ஏற்படும். ஒவ்வொரு நாளும் ஹைகோர்ட்டிலும், சுப்ரீம் கோர்ட்டாலும் எத்தனையோ தீர்ப்புகள் கொடுக்கப்படுகின்றன. வழக்குகளில் தங்கள் தீர்ப்புகளைக் கூறும் விஷயத்தில், மேல் கோர்ட்டுகள் என்ன தீர்ப்பு கொடுக்கப்போகின்றன என்று கீழ்க் கோர்ட்டுகள் காத்துக்கொண்டிருப்பதில்லை. அவ்வாறு இருந்தால் அதிகமான காலதாமதம் ஆகும். ஆகவே 10-11 a.m. அவசியமில்லை என்றால் அந்த ப்ரொவைஸோவை எடுத்துவிட வேண்டும் என்று அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கிறேன்.

**The Hon. Sri R. VENKATARAMAN** : கனம் சேர்மன் அவர்களே, முதலில் கனம் அங்கத்தினர்களுடைய திருத்தங்கள் சம்பந்தமாகப் பேசிவிட்டு பிறகு சர்க்கார் திருத்தத்திற்கு விளக்கம்கூற விரும்புகிறேன். அஸெஸ்மெண்டை "என்ஹான்ஸ்" பண்ணக்கூடாது என்று கனம் அங்கத்தினர் ஸ்ரீ புழனிசாமி சொன்னதற்கு முன்பே பதில் சொல்லி விட்டேன்.

கனம் அங்கத்தினர் ஸ்ரீ லாஸர் அவர்களை, தயவு செய்து 38-வது பிரிவைப் பார்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன். "ரெவ்யூ" பண்ணுவதற்குரிய அதிகாரம் அப்பெலேட் ட்ரிப்யூனலுக்கும் இருக்கிறது, ஹைகோர்ட்டிற்கும் இருக்கிறது. 38-வது பிரிவின் (6)-வது உப பிரிவைப் பார்த்தால், 38-வது பிரிவில் உள்ள ரெவ்யூ "பைனல்"-ஆக இருக்க வேண்டுமானால், அது (6)-வது உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ரெவ்யூவிற்கு உட்பட்டு இருக்க வேண்டும் என்பது தெரியும். ரெவ்யூ "பைனல்"-ஆக இருக்க வேண்டும் என்று இருக்கிறது. ஆகவே இது சரியான வாசகமாகத்தான் இருக்கிறது.

[Sri R. Venkataraman] [[illegible] February [illegible]]

இந்தப் [illegible] சர்க்கார் [illegible] திருத்தம் [illegible] "as assessed by the appropriate authority" என்ற வார்த்தைகளுக்குப் பதிலாக "as determined by the Appellate Tribunal" என்ற வார்த்தைகளைப் போட வேண்டும் என்று சொல்கிறோம். இதற்குக் காரணம் சொல்கிறேன். முதலில் செய்யப்பட்ட "அஸெஸ்மெண்ட்" 20,000 ரூபாயாக இருக்கலாம். பிறகு அப்பீலில் அது 50,000 அல்லது 60,000 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கக்கூடும். அந்த நிலைமையில், இப்போதுள்ள சட்டப்படி, அஸெஸ்மெண்ட் 20,000 ரூபாயாகத்தான் இருக்கிறது. ஆகவே, ஹைக்கோர்ட்டிற்குச் செல்ல உரிமை இல்லை என்று வாதாட முடியும். அப்படி இருக்கக்கூடாது என்பது சர்க்காரின் கருத்து. முதலில் அஸெஸ் பண்ணியதை கவனிக்காமல், கடைசியாக "டிடெர்மின்" செய்யப்பட்டதைக் கவனித்து ஹைக்கோர்ட்டிற்குச் செல்லுவதற்கு உரிமை இருக்க வேண்டும் என்பது சர்க்காரின் நோக்கம். வியாபாரிக்கு கடைசியாக டிடெர்மின் செய்யப்பட்ட தொகை 50,000 ரூபாய்க்கு மேற்பட்டு இருந்தால் அவர் ஹைக்கோர்ட்டிற்குச் செல்லுவதற்கு உரிமையுடையவராக இருக்க வேண்டும் என்று சர்க்கார் விரும்புகிறது. வர்த்தகர்களுக்கு பாதகம் இல்லாமல் இருப்பதற்காக இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறோம். கடைசியாக நிர்ணயிக்கப்படும் தொகை, அப்பெல்லேட் ட்ரிப்யூனலால் "டிடெர்மின்" செய்யப்படும் தொகை, 50,000 ரூபாய்க்கு மேற்பட்டு இருந்தால் ஹைக்கோர்ட்டிற்குச் செல்ல அவர்களுக்கு உரிமை அளிக்கப்படுகிறது. இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கனம் அங்கத்தினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

The amendments of Sri N. K. Palanisami were put and lost.

The amendment of Sri S. Lazar was by leave withdrawn.

The Government amendment was put and carried.

Clause 36 as amended was put and carried.

Clause 37 was put and carried.

*Clause 38.*

TEMPORARY CHAIRMAN (SRI R. SUBRAMANIAM): The motion is—

11-00 a.m. 'That clause 38 do stand part of the Bill'.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, I move the following amendments—

12·10 p.m. நாம் சட்டசபை கூடும்போது சட்டங்களை கொண்டு வருவது, மேலும் அதுபோன்ற கூடுதல் வரிகள் விதிப்பது போன்ற காரியங்களை செய்வது என்பதை நாம் கொள்கையாக வைத்துக்கொண்டிருக்கின்றோம். இப்போது சட்டத்தில் சொல்லப்பட்டிருப்பது "**The Government may, by notification, alter, add to or cancel any of the Schedules**" என்று இருக்கிறது. இதில் "**alter, add to, or**" என்பதை எடுத்துவிட வேண்டும் என்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். அதாவது அதிகமாக வரிகளை கூட்டக்கூடாது என்பது தான் என்னுடைய கருத்து. இந்த மசோதாவின் மூலமாக நான் இதுவரை மற்ற ராஜ்யங்களில் எல்லாம் இல்லாத நிலைமையில், நாம் உணவு தான்யங்களுக்கு வரி விதித்தாகிவிட்டது. அப்படியிருக்கும்போது இதற்கு மேலும் பொருட்களுக்கு வரியை கூட்டுவதற்கு நோட்டிபிகேஷன் மூலம் அதிகாரப்படுத்துவது என்பதை ஏன் ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. இதை முதலாவது கொண்டு வந்தபோது உணவுப்பொருட்களின் மீது வரியை குறைக்கலாம் என்று சொல்லப்பட்டது, ஆனால் கடைசியில் பொறுக்குகமிட்டியில் வரிவிதிப்பது என்று முடிவாகிவிட்டது. மேலும் டாக்டர் லோகநாதன் அவர்கள் செய்த சிபார்சிலிருந்தும் அதிகப்படியான அளவுக்கு உணவுப் பொருட்களுக்கு இப்போது வரி விதிக்கப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் பொதுமக்கள்தான் கொடுக்க வேண்டியிருக்கிறது. மற்ற ராஜ்யங்களில் எல்லாம் இம்மாதிரி உணவுப்பொருட்களுக்கு வரி போடவில்லை என்றிருந்தாலும்கூட இம்மாதிரி நோட்டிபிகேஷன் மூலம் வரி போடுவது என்கின்ற அதிகாரம் மற்ற எந்த ராஜ்யத்திலும் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். மத்திய அரசாங்கத்தில் "டாரிப் ஆக்ட்" என்ற ஒரு ஆக்ட் இருக்கிறது என்று வேண்டுமானால் அமைச்சர் அவர்கள் கூறுவார்கள். ராஜ்யத்தில் ஏதாவது அவசர நிலைமை வந்துவிட்டால் இந்த நோட்டிபிகேஷன் மூலம் வரியை அதிகப்படுத்துவது என்பது அவசியம் என்று சொல்லலாம். ஆனால் நம் ராஜ்யத்தை பொறுத்த அளவில் அவ்விதமான ஒரு பிரச்னை வராது என்று நம்மால் நிச்சயமாக சொல்ல முடியும். மேலும் சட்டசபையை கூட்டி இவ்விதமான அவசர காலங்களில் வரிகளை போடுவதற்கு அரசாங்கம் முன் வந்தால், அதற்கு அங்கத்தினர்கள் எல்லாம் தயாராக இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே ஜனநாயகத்தை பாதிக்கின்ற அளவில் இருக்கக்கூடிய இந்த அதிகாரத்தை கைவிடவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் இதை நன்குணர்ந்து இதை மாற்றி அமைப்பார்கள் என்றும் நம்புகிறேன். அதோடு என் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**Sri N. K. PALANISAMI** : கனம் சபாநாயகர் அவர்களே, என்னுடைய திருத்தம், சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கும் " "**but without prejudice to the validity of anything previously done thereunder**" என்பதை எடுத்துவிடவேண்டும் என்பதாகும். முன்பு என்ன செய்தாலும் சரி, பின்னால் செய்ததை யெல்லாம் அசெம்பிளியில் கொண்டு வந்து நிறைவேற்றுவது என்பது சரியல்ல. ஆகவே இவ்விதம் செய்வதற்கு அதிகாரமில்லை என்கின்ற முறையில் "**but without prejudice to the validity of anything previously done thereunder**" என்பதை நீக்கிவிட வேண்டும் என்கின்ற என்னுடைய திருத்தத்தை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**Sri M. P. SUBRAMANIAM** : கனம் சபாநாயகர் அவர்களே, 17-வது செக்ஷன் பிரகாரம் சில பொருட்களுக்கு வரியிலிருந்து விலக்கு அளிப்பதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த செக்ஷன் மூலமாக பொருட்களுக்கு வரியை கூட்டுவதற்காக அதிலும் நோட்டிபிக்கேஷன் செய்து அதன் மூலமாக வரியை கூட்டுவதற்குள்ள அதிகாரத்தை சர்க்கார் எடுத்துக்கொண்டிருக்கிறது. இதைப்பற்றி நான் பொது விவா



தத்தின் போதும் குறிப்பிட்டேன். ஆனால் அவசர நிலைமை ஏற்பட்டால் அந்த சமயங்களில் இம்மாதிரிப்பட்ட அதிகாரம் சர்க்காருக்கு இருக்க வேண்டியது அவசியமாகும் என்று வேண்டுமானால் அமைச்சர் அவர்கள் கூறலாம். ஆனால் கடந்த இருபது ஆண்டு காலத்தில் இம்மாதிரிப்பட்ட ஒரு நிலைமை ஏற்படவே இல்லை. அமைச்சர் அவர்கள் இதை "ஹைபொதிட்டிக்கல்"—லாகத்தான் இதைக் கொண்டு வந்திருக்கவேண்டும். அதல்லாமல் இதை அனுபவ பூர்வமாக உறுதியாக இதை கொண்டுவரவில்லை. இம்மாதிரியான நிலைமை ஏற்பட்டுவிட்டாலும் கூட அதிக அளவில் நமது வருமானத்தை பாதிக்கக்கூடிய அளவில் ஒன்றும் ஏற்படாது என்பது என்னுடைய திட்டவட்டமான கருத்து. மத்திய சர்க்காரில் ஏற்றுமதி இறக்குமதி சட்டத்தின் கீழ் டாரிப் ஆக்ட்ன் கீழ் இதைப்போல் ஒரு ஷரத்து ஒன்றை வைத்திருப்பதாகத் தெரிகிறது. அங்கே அவசியமாக இருக்கலாம். இம்மாதிரி அதிகாரம் இருந்தால்தான் நமக்கும் அதை உபயோகிக்க தோன்றுமே தவிர இம்மாதிரி ஒரு அதிகாரம் இல்லாவிட்டால் நமக்கு இந்த அதிகாரத்தை உபயோகிக்கக்கூடிய காலம் ஏற்படாது என்று நான் கருதுகிறேன். ஆகவே இந்த சட்டத்தைக்கொண்டு வருவது நல்லதல்ல, என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். நாம் ஏற்கனவே மற்ற ராஜ்யங்களில் எல்லாம் இல்லாத ஒரு வரியை உணவுப் பொருட்களுக்கு ஏற்படுத்தி இருக்கிறோம். அப்படியிருக்கும் இந்த நிலைமையில் நோட்டிபிக்கேஷன் மூலம் நாம் போட்டிருக்கும் வரியை குறைத்துக் கொள்வதற்கு உபயோகிக்கலாமே தவிர வரியை கூட்டுவதற்கு இம்மாதிரி அதிகாரம் உபயோகிக்கக்கூடாது. இம்மாதிரி கொண்டு வரக்கூடிய நோட்டிபிகேஷன் முடிவை ஆறு மாதத்திற்குள் சட்டசபையில் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும் என்று இருந்த போதிலும் கூட, இப்போது இந்த அதிகாரம் நமது ராஜ்யத்தைப் பொறுத்தவரையில் தேவையில்லை என்பதை உணர்ந்து அமைச்சர் அவர்கள் இதை மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பின்னால் ஏதாவது சந்தர்ப்பம் வருமானால் அப்போது ஒரு ப்ரொவிஷனை வைத்துக்கொள்ளலாம் என்பதை கருதியும், இதை நீக்க வேண்டுமென்று பல அங்கத்தினர்களும் அக்கறை கொண்டு கேட்டுக்கொள்வதாலும் அமைச்சர் அவர்கள் இதை எடுத்து விடுவதற்கு ஒத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

**Sri V. K. RAMASWAMY MUDALIYAR** : Mr. Speaker, Sir, as I have already stressed in my speech while the Bill was introduced in the Assembly, I have again to reiterate the point that the Government must not have powers to amend the schedule by notification. This is most reprehensible and against all principles of democracy. Therefore, I strongly object to the inclusion of clause 59 in this Bill. I want to know why in this sales tax Bill alone Government should take such extraordinary powers. The Hon. Minister was telling something about the Indian Tariff Act where such a provision exists. It may be so with regard to the Indian Tariff Act. That Act concerns people who have foreign business dealings. Among them there may be some hoarders and Government may not be in a position to take effective steps against them. They are different from people we are dealing under this Bill. Here we are dealing with local people and with collection of sales tax from them. Therefore, I am not at all in favour of the Government taking such extraordinary powers. If they want to meet emergencies, they can issue ordinances and meet the situation or they can issue notifications and then place them before the Assembly for its ratification. All these things are there and the Government can resort to them. Instead of that, if a provision of this kind were introduced in this Bill, I am sure the

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [13th February 1959

Government would be setting at naught all principles of democracy. I should say then Government by bringing in such provisions, are becoming more and more totalitarian. That is all my submission. The inclusion of the provision is more reprehensible and I strongly object to its inclusion in the Bill.

SRI S. LAZAR : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தப் பிரிவைப் பற்றி எதிர்கட்சி அங்கத்தினர் பலர் தங்கள் எதிர்ப்பை தெரிவிப்பதைபபார்த்து நான் ஆச்சரியப்படுகிறேன். ஏதோ புதிய பொருட்களுக்கு வரியை கூட்டுவதற்கு மாத்திரம்தான் இதில் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லக்கூடிய அளவில் பேசியிருக்கிறார்கள். இதில் போடப்பட்டிருக்கும் வரிகளை குறைப்பதற்கும் அதிகாரம் இருக்கிறது என்பதையும் நாம் கவனிக்கவேண்டும். ஆகவே சில அவசர சந்தர்ப்பங்களில் வரியை கூட்டுவதற்கோ அல்லது குறைப்பதற்கோ இந்த அதிகாரம் பயன்படும் என்கிற அளவில்தான் இதை சர்க்கார் மேற்கொண்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன். (குறுக்கீடு.) இதைப்பற்றி ஸபார்டினேட் லெஜிஸ்லேஷன் கமிட்டியின் அங்கத்தினர்கள் நன்றாக உணர்ந்திருப்பார்கள் என்று நம்புகிறேன். இந்த அதிகாரம் சர்க்காருக்கு இருக்கவேண்டியது அவசியம் என்பதுதான் என் கருத்து. ஆகவே இந்த திருத்தங்களை நான் எதிர்க்கின்றேன்.

12-20 p.m. THE HON. SRI R. VENKATARAMAN : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தப் பிரிவானது செலக்ட் கமிட்டியில் நீண்ட நேரம் சர்ச்சைக்கு உள்ளானது. அங்கு ஒரு நாள் பூராவும் விவாதம் நடந்தது என்றுதான் சொல்லவேண்டும். இதை எதிர்க்கின்றவர்கள் இரண்டு காரணங்கள் கூறுகிறார்கள். ஒன்று இது ஜனநாயகத்திற்கு விரோதமானது என்பது. இரண்டாவது இதற்கு அவசியம் இல்லை என்பது. முதல் காரணம் சரியல்ல என்பதை நான் விளக்கிக் காட்ட விரும்புகினேன். இந்த நாட்டில் இருக்கக்கூடிய அரசியல் சட்ட சாசனம் 1950-ம் வருஷத்தில் ஏற்பட்ட பிறகுதான் "Indian Tarrif Act, 1954"-ல் வார்த்தைக்கு வார்த்தை இதே விதமாக இருக்கக்கூடிய ஷரத்து போடப்பட்டிருக்கிறது. இந்த ஷரத்தின்படி சர்க்கார் நோடிபிகேஷன் செய்தவுடன் அந்த "செஷனிலோ" அல்லது அடுத்த "செஷனுக்குள்ளாகவோ", 6 மாதத்திற்குள் அந்த "நோடிபிகேஷன்" செய்யவேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால் அந்த "நோடிபிகேஷன்" தானாகவே மறைந்தாக வேண்டும். ஆகவே சட்டசபைக்கு வராமல் எந்த விதமான வரியும் விதிக்கக்கூடாது என்று அடிப்படைத் தத்துவார்த்தம் இருக்கிறது. இதை மறுக்கவில்லை. ஜனநாயகத்தின் அடிப்படை சட்டசபையைக் கலந்து செய்ய வேண்டுமென்பது. ஆகவே அந்த முறையில் இதை 6 மாதத்திற்குள்ளாக, அடுத்த செஷனுக்குள்ளாக சட்டசபையில் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும் என்ற அடிப்படையில் இது அமைக்கப்பட்டிருக்கிறது. இன்னும் "Provisional Collection of Tax Act" என்று மத்திய சர்க்காரில் இருக்கிறது. அந்தச் சட்டத்தின் கீழும் அவர்கள் "பட்ஜட்டிலே ஏதோ மாறுதல் செய்கிறோம்." என்று சொன்னவுடனே, "நொடிபை" செய்து விடலாம். அது உடனே அமுலுக்கு வந்து விடும். இதற்கு காரணம் என்னவென்று சொன்னால் நாட்டில் ஏற்படுகின்ற மாறுதல்களின் காரணமாக தனி வர்த்தகர்கள் இதில் லாபம் தேடக் கூடாது என்பதற்காகத்தான். இந்த விதமான நிலைமை இத்தனை நாள் ஏற்படவில்லை என்ற காரணத்தினால் இது ஏற்படாது என்று சொல்லுவதற்கில்லை. ஏற்படுவதற்குரிய அறிகுறிகளும் இருக்கின்றன. விற்பனை வரிச் சட்டம் அமலுக்கு வந்த பிறகு இன்றைக்கு "டிக்ளார்டு கூட்ஸ்" என்னென்ன போடவேண்டும் என்பதற்கு அதிகாரம் இருக்கிறது. 1-வது ஷெட்யூலில் நாம் இன்று ஒரு முனை வரி என்று விதிக்கக் கூடிய பங்கும் மத்திய சர்க்காரால் "டிக்ளார்டு கூட்ஸ்" ஆகச் செய்ய முடியும். அவ்வாறு செய்வார்களானால் நாம் ஷெட்யூலை மாற்றியமைக்க நிர்ப்பந்தம் இருக்கும். செக்ஷன் 57-ல் இந்த அதிகாரத்தை பெற்றிருக்கிறோம். அதற்கெல்லாம் அவகாசம் பிடிக்கும். அந்த இடைக்காலத்தில் லாபம் அடிக்கிறவர்கள் அடுத்த



13th February 1959] [Sri R. Venkataraman]

இடைக்காலத்தில் வர்த்தகர்கள் நாட்டில் இருக்கக் கூடிய சட்ட ரீதியான பிரச்னையை பெற்று லாபம் சம்பாதிக்க வேண்டுமா? வேண்டாமா? என்பதுதான் பிரச்னை. பல விதமான விஷயங்கள் வரவில்லை. உதாரணமாக மூன்று பண்டப் பொருள்களை எடுத்துக்கொள்வோம். துணி காப்பி, சர்க்கரை, என்று எடுத்துக்கொள்வோம். இவைகளுக்கு "சென்ட்ரல் எக்ஸைஸ்" விதிக்க வேண்டுமென்று பல "ரெப்ரசன்டேஷன்"கள் இன்றைக்கு மத்திய சர்க்காருக்குச் செய்து கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு செய்கின்றபோது அதில் ஒரு முடிவு எடுப்போமானால்—உதாரணமாக காப்பியை எடுத்துக்கொள்வோம். அதை சென்ட்ரல் எக்ஸைஸில் சேர்த்து விடுவோமானால் நாம் இங்கு மாறுதல் செய்யவேண்டும். அந்த 'கூட்ஸு'க்கு பம்பாயில் 10 சதவிகிதம் போட்டிருக்கிறார்கள். நாம் 7 சதவிகிதம் போட்டிருக்கிறோம். மற்ற மகாணங்களிலும் 7 சதவிகிதம்தான் போட்டிருக்கிறார்கள். பம்பாயில் முன்பே போட்டிருக்கிற காரணத்தினால் அவர்களுக்கு அனுமதி கொடுத்து விட்டார்கள். நாம் இப்பொழுது 10 சதவிகிதமாக மாற்ற வேண்டுமென்று சொன்னால், மாற்றப் போகிறோம் என்று தெரிந்து விட்டால் சட்டம் செய்துகொண்டு வருவதற்குள்ளே வியாபாரிகள் கணக்குகள் தயார் செய்து காட்டி விடுவார்கள். 1939-ம் வருஷத்தில் இருந்த நிலைமை 1959-ம் இல்லையென்று தாழ்மையாக எடுத்துக்காட்ட விரும்புகிறேன். 1939-ம் வருஷத்திய அரசியல் சட்டம் இருந்த நிலைமை என்ன? இன்றைய நிலைமை என்ன? வர்த்தகத் துறையில் விற்பனை வரியை விதிக்க மத்திய சர்க்கார், மாகாண சர்க்கார் ஆகிய இருவருக்கும் பல சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. எவ்வாறு செய்யப்பட்டது என்பதெல்லாம் உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். உதாரணமாக அடிஷனல் சென்ட்ரல் எக்ஸைஸ் விதித்தபோது நாம் ஒரு ஆர்டினன்ஸ் போட்டு, மற்றொரு ஆர்டினன்ஸ் போட்டு குழப்பங்கள் எல்லாம் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அந்த நிலைமை ஏற்படாமல் சர்க்கார் நோடிபிகேஷன் செய்தால் கட்டாயம் அதனுடைய சம்மதத்தைப் பெற வேண்டுமென்று இருக்கிறபோது, இதில் எந்த விதமான கஷ்டமும் ஏற்படுவதற்கில்லை. இது ஜனநாயகத்தை எந்தத் துறையிலும் பாதிக்கவில்லை. உண்மையாகவே இந்த அதிகாரத்தைத் தவறாகப் பிரயோகித்தால் உடனடியாக சட்டசபையில் வந்து இப்பொழுது பேசினாற்போல் பத்து மடங்கு அதிகமாகப் பேசலாம். இதில் "to the extent of the tax already levied" என்று போடுவது எதற்காக என்று சொன்னால், ஒரு நேரத்தில் 5 சதவிகிதம் போடவேண்டிய நிலைமை இருக்கலாம். 6 மாதத்திற்குள்ளாக நிலைமை மாறி 3 சதவிகிதம் அல்லது 2 சதவிகிதம் என்று வரியை மாற்றியமைக்கின்றபோது குறைத்து விடவும் முடியாது. அதிகமாகச் செய்கின்றபோது பணம் அதிகமாகக் கொடுங்கள் என்று கேட்கவும் முடியாது. இது "இன்கம் டாக்ஸ்" போல அல்ல. இது குறிப்பிட்ட வியாபாரிகளுக்குத் திருப்பிக் கொடுக்கக்கூடியதல்ல. அது முடியாது என்ற காரணத்தை எல்லாம் வைத்துத்தான் "to the extent of the tax already levied" என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் கனம் பழனிசாமி அவர்களைக் கேட்கிறேன், அந்தத் திருத்தத்தை எடுத்து விட்டால் திருப்பிப் பணம் கொடுக்கவேண்டுமென்ற நிலைமை ஏற்பட்டவுடன் யாரிடம் கொடுக்கச் சொல்லுவார். வியாபாரிகளுக்கு லாபமாகப் போய்விடும். ஆகவே இதில் எந்த விதமான பெரிய ஜனநாயகத்திற்கு விரோதமான நடவடிக்கையும், அரசியல் சட்டத்திற்கு விரோதமான நடவடிக்கையும் இல்லை என்று சொல்ல விரும்புகிறேன். இதற்கு ஆதார பூர்வமாகப் பிற சட்டங்கள் இருக்கின்றன. அனுபவ பூர்வமாக நிலைமைகள் ஏற்படக் கூடிய சந்தர்ப்பம் இருக்கிறது. நாம் மற்ற மாகாணத்தவரை விட கெட்டிக்காரர்கள். அவர்களே அதை ஒப்புக்கொள்கிறார்கள். இந்த மாகாணத்தில் உள்ள எதிர்க்கட்சிக்காரர்களைத் தவிர மற்ற எல்லோரும் ஒத்துழைக்கிறார்கள் என்று தாழ்மையாகத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். (குறுக்கீடு.) எனக்கே நம்பிக்கை இல்லாவிட்டால் நான் எப்படிப் பிறரிடம் சொல்ல முடியும்? இந்தத் துறையில் எந்த விதத்திலும் பாதகம் ஏற்படாது. சட்ட பூர்வமானது என்பதை எடுத்துக்காட்டி இந்த ஷரத்தை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : I am going to put the amendments to the vote of the House.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, we are opposed to the clause as a whole.

All the amendments, except the Government amendment, were put and lost.

The Government amendment was put and carried.

MR. SPEAKER : The question is—

'That clause 59 as amended do stand part of the Bill.'

Clause 59 as amended was put and the House divided thus :—

*Ayes.*

12-30 a.m.

1 Sri B. Bhaktavatsalu Naidu.
2 ,, M. J. Jamhal Mohideen.
3 ,, P. Appavu.
4 ,, V. S. Arunachalam.
5 ,, V. Arunachala Thevar.
6 ,, W. P. A. R. Chandrasekharan.
7 ,, R. Chidambara Bharathi.
8 ,, T. T. Daniel.
9 ,, M. R. Kandaswami Mudaliar.
10 ,, T. Karia Gounder.
11 ,, P. Kolanda Gounder.
12 ,, P. Kuppusami.
13 ,, S. Lazar.
14 ,, M. K. Mariappan.
15 Srimathi Savithri Shanmugham.
16 Sri P. M. Munisami Gounder.
17 ,, V. A. Muthaiya.
18 ,, S. Nagaraja Manigar.
19 ,, K. P. Palaniswamy.
20 ,, K. G. Palaniswamy Gounder.
21 ,, K. Pandivaraj.
22 ,, P. M. Periakaruppan Ambalam.
23 ,, K. Periannan.
24 ,, K. Ponnian.
25 ,, S. Ramakrishna Thevar.
26 ,, P. Ramachandran.
27 ,, M. Ramachandra Reddiyar.
28 ,, S. Ramasami Naidu.
29 ,, V. Vedayyan.
30 ,, A. Samuel Nadar.
31 ,, K. R. Viswanathan.
32 The Hon. Sri K. Kamaraj Nadar.
33 The Hon Sri C. Subramaniam.
34 ,, M. Bhaktavatsalam.
35 ,, M. A. Manickavelu.
36 ,, P. Kakkan.
37 Sri P. G. Karuthiruman.
38 ,, T. P. Elumalai.
39 ,, G. G. Gurumurthy.
40 ,, P. Javaraj.
41 ,, R. Kandasami.
42 The Hon Sri V. Ramaiah.
43 Srimathi Hemalatha Devi.
44 ,, Kamalambuja Ammal.
45 ,, Kolanthai Ammal.
46 ,, P. K. R. Lakshmikantam.
47 ,, A. S. Ponnammal.
48 ,, Rajathikulothunga Rajatham.
49 Sri A. Chidambaranatha Nadar.
50 ,, K. L. Ramaswami.
51 ,, S Sasili.
52 ,, M. S. Selvarajan.
53 ,, T. Sivagnanam Pillai.
54 ,, M. K. Somasundaram.
55 ,, R Srinivasa Iyer.
56 ,, T. K. Subbiah.
57 ,, K. S. Subramania Gounder.
58 ,, S. Tangavelu.
59 ,, N. R. Thiagarajan.
60 ,, A. Vedarathnam Pillai.
61 ,, M. William.
62 ,, M. Kulandaisami Gounder.
63 ,, P Vedamanickam.

*Noes.*

1 Sri A. R. Marimuthu.
2 ,, V. K. Ramaswami Mudaliyar.
3 ,, T. S. Ramaswamy Pillai.
4 ,, A. Govindasamy.
5 ,, M. Kalyanasundaram.
6 ,, M. Jagannathan.
7 ,, M. P. Subramaniam.
8 ,, N. K. Palanisami.
9 ,, K. R. Nallasivam.
10 ,, K. Sattanatha Karayalar.
11 ,, M. Karunanidhi.
12 Sri N. Marudachalam.
13 ,, S. A. M. Annamalai Odayar.
14 ,, A. V. P. Asaithambi.
15 ,, V. K. Kothandaraman.
16 ,, B. Doraisami Reddiar.
17 ,, P. S. Ellappan.
18 ,, M. Selvaraj.
19 ,, C Natarajan.
20 ,, S. M. Annamalai.
21 ,, T. Iruzappan.
22 ,, A. Perumal.

*Ayes*—63. *Noes*—22.

**The motion was carried.**



*Clause 60.*

MR. SPEAKER : The motion is—

" That clause 60 do stand part of the Bill."

SRI N. K. PALANISAMI The clause is not so clear and is not understandable. I, therefore, want a clarification from the Hon. Minister.

MR. SPEAKER : Is the hon. Member going to speak again after the Hon. Minister's speech?

SRI N. K. PALANISAMI : No. Sir.

THE HON. SRI R. VENKATARAMAN : *கனம் சபாநாயகர் அவர்களே, இந்தப் புதுச் சட்டம் 1959-ம் வருஷம் அமுலுக்கு வருகிறபோது சில பண்டங்களுக்கு பல கட்ட வரியாக இருப்பது ஒரு முனை வரியாக மாற்றப் படும். அவ்வாறு மாற்றப்படுகிறபோது வரி வசூல் செய்கிற அதிகாரி களிடத்தில் இது முதல் விற்பனை அல்ல, ஆகவே இதற்கு வரி கிடையாது என்று ஆட்சேபனை எழுப்ப முடியும். ஆகவே தான் இந்த ஷரத்துப்படி சட்டம் அமுலுக்கு வருகிறபோது ஒரு முனை வரியாக விதிப்பட்ட பொருள் விற்பனை செய்யப்படும்போது முதல் விற்பனையாகக் கருதி வரி போட இது வசதி செய்கிறது. அப்படி இல்லாவிட்டால் இடைக்காலத்தில் 6 மாதத் திற்கு எந்தப் பொருள் மீதும் வரி போட முடியாத நிலைமை உண்டாகிவிடும். அதன் காரணமாகத்தான் டிரான்சிஷனல் க்ளாசாக—தற்காலிக கிளாசாக—இது போடப்பட்டிருக்கிறது.*

(Deputy Speaker in the Chair.)

The clause was put and carried.

*Clause 61.*

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

" In sub-clause (2), *for* the words ' other proceedings under this Act ', *substitute* the words ' other proceeding under this Act '." 12-40 p.m.

The amendment was put and carried.

The clause, as amended, was put and carried.

*Re-opening of clauses*

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Deputy Speaker, Sir, in the several clauses so far carried, there are some typographical and other errors as also one or two omissions. I think this is the proper time for me to move amendments to set them right.

DEPUTY SPEAKER : The amendments have not been given notice of and I think the Hon. Minister wants to move them now.

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir.

SRI M. KALYANASUNDARAM : The Hon. Minister can move for re-opening of the clauses and then move the amendments.

*Clause* 3—cont.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

" That clause 3 be re-opened."

The motion was put and carried and the clause was re-opened.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move that—

" In sub-clause (1) of clause 3—

" *For* the words ' every casual trader or an agent ', *substitute* the words ' every casual trader or agent '."

Sir, we are omitting the article ' an ' before the word ' agent ' and that is only to correct an error in language.

The amendment was put and carried.

The clause, as amended, was put and carried.

*Clause* 6—cont.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

' That clause 6 be re-opened.'

The motion was put and carried and the clause was re-opened.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move that—

" In clause 6, *for* the word ' sales ' in the first three places where it occurus, *substitute* the words ' sales or purchases '."

The amendment was put and carried.

The clause, as amended, was put and carried.

*Clause* 14—cont.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

" That clause 14 be re-opened."

The motion was put and carried and the clause was re-opened.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

" In the proviso to sub-clause (1), *for* the word ' opplication ', *substitute* the word ' application '."

Sir, the word ' application ' begins with ' o ' which is a printers' mistake. We are changing it into ' a '.

The amendment was put and carried.

Clause 14 was, as amended, put and carried.

SRI M. KALYANASUNDARAM : Sir, I suggest that we can take up the schedules and the third reading of the Bill to-morrow, as there are some amendments to the third schedule.



DEPUTY SPEAKER : I have no objection, if the House so desires. The House will now adjourn and meet again at 9 a.m. on Saturday, the 14th February 1959.

The House then adjourned.

## IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A.—*Statutory rules, orders and notifications.*

86. *Notification issued with G.O. Ms.* 4552, *Revenue, dated* 14*th December* 1958, *amending the Madras Plantations Agricultural Income-tax (Appeal and Revision) Rules,* 1955. [*Laid on the table of the House under Section* 61 (3) *of the Madras Agricultural Income-tax Act,* 1955) (*Madras Act V of* 1959.]

B.—*Reports and other papers.*

23. *Short review of the activities and achievements of the Madras Government Cinchona Department for the half-year ended* 30*th September* 1958.

24. *Statement IV showing the action taken by the Government on assurances, promises and undertakings given during the first, second, third and fourth sessions,* 1957–58 *of the Madras Legislative Assembly.*

[13th February 1959

## APPENDIX I.

[Vide answer to starred question No. 286 asked by Sri A. Vedarathnam at the meeting of the Legislative Assembly held on 13th February 1959, page 254 supra.]

***Statement showing the details of the manufacturers of electrical equipment.***

| *Name of the company.* (1) | *Articles manufactured.* (2) |
|---|---|
| 1 Hackbridge, Hewittic and Easun Private. Limited, Madras. | Transformers. |
| 2 Transformer and Switchgear, Limited, Madras. | Transformers.<br>Isolating switches. |
| 3 Radio and Electricals, Limited, Madras. | Transformers.<br>H.T. Air-break switches (11 K.V. 33 K.V.)<br>H.T. Air-break fuses (11 K.V. 33 K.V.) |
| 4 English Electric Company (India), Limited, Madras. | Combinasion fuse switches double pole (30/60 150/300 amps.)<br>Combination fuse switch boards (30/60/150/300 amps.).<br>Distribution fuse boards (15/30/60/100 amps.).<br>Overhead busbar system (30/60/100 amps.). |
| 5 Ganapathy Engineering Manufacturers, Private Limited, Coimbatore. | Starters.<br>Switches. |
| 6 Easun Engineering Company, Limited, Madras. | Air-break switchgear. |
| 7 Hivelm Industries, Madras (High Voltage Equipments Line Materials). | Gang-operated air-break switches (11 K.V., 22 K.V., 33 K.V., 66 K.V., 110 K.V. and 132 K.V.).<br>Line materials—<br>Cross arms.<br>Guy sets.<br>Horn gap fuses. |
| 8 Sri C. Soundaram, Coimbatore .. | Starters.<br>Switches. |
| 9 Coimbatore Premier Corporation (Private), Limited, Coimbatore. | Starters.<br>Triple pole iron-clad switchgear. |
| 10 P. Natesan Industries (Private), Limited, Madras. | H.T. Air break switches (11 K.V., 22 K.V. and 33 K.V.)<br>Air circulators—Bracket type pedestal type.<br>Other line materials—<br>M.S. sheet boxes.<br>Aluminium D.P. cutouts.<br>H.T. Cross arms.<br>L.T. Cross arms.<br>C.I. Knobs.<br>Twisting tongs.<br>P.G. clamps. |
| 11 Electrical Industries, Industrial Estate, Guindy. | Holders.<br>Chokes.<br>..t fittings. |
| 12 South India Engineering Works, Waltax Road, Madras. | P.G. Clamps.<br>Distribution boxes. |
| 13 P.S.G. & Sons, Coimbat .. | Motors |



13th February 1959]

| *Name of the company.* (1) | *Articles manufactured.* (2) |
|---|---|
| 14 Agro-Industrial Corporation, Madras. | Distribution boxes. |
| 15 Mettur Workshops, Electricity Department, Mettur Dam. | Air break switches.<br>Cross arms.<br>Transmission towers and other line materials. |

## APPENDIX II.

[Vide answer to starred question No. 294 asked by Sri S. Lazar, at the meeting of the Legislative Assembly held on 13th February 1959, page 261 supra.]

***Name of the thickly populated villages in Lalgudi firka, Tiruchirappalli district, from which applications have been received for acquisition of house-sites for Harijans.***

1 Nathamangudi.
2 Alangudimahajanam.
3 Ariyur.
4 Senkaraiyur, hamlet of Ariyur.
5 T. Kallikudi.
6 Mullal, hamlet of T. Kallikudi.
7 Thiruniam.
8 Devankudi.
9 Kilambil.
10 Paruthikal, hamlet of Kilambil.
11 Kottamedu, hamlet of Kilambil.
12 Padugai, hamlet of Mangammalpuram.
13 Ananthimedu, hamlet of Mangammalpuram.
14 Venkatachalapuram.
15 Jangamarajapuram.
16 Ambil, hamlet of Jangamarajapuram.
17 Mettupatti.
18 Kurichi, hamlet of Mettupatti.
19 Sirumayankudi.
20 Kattur, hamlet of Sirmayankudi.
21 Kothamangalam.
22 Kottarangulam, hamlet of Peruvalanallur.
23 Pinnavasal, hamlet of Poovalur.
24 Manakkal.
25 Soosayapuram, hamlet of Manakkal.
26 Natarajapuram, hamlet of Athikudi.
27 Vazhithur.
28 Konnakudi.
29 Sathamangalam.
30 Ananthimedu, hamlet of Sathamangalam.
31 Kuhoor.
32 Inam Komakudi.
33 Mummudisholamangalam.
34 Mannimangalam.
35 Sennivokal.
36 Sirudaiyur.
37 Angarai.
38 Seshasamudram.
39 Pokkathakudi hamlet of Seshasamudram.
40 Mellavalai, hamlet of Seshasamudram.
41 Edayathumangalam.

## APPENDIX III.

[Vide answer to starred question No. 296 asked by Sri M. Jaganathan at the meeting of the Legislative Assembly held on 13th February 1959, page 263 supra.]

***Exclusion of certain posts from the purview of the Madras Public Service Commission in 1957 and the reasons therefor.***

| *Designation of the post.* | *Reasons for exclusion.* |
|---|---|
| (1) | (2) |
| (i) Assistant Director of Publicity for work connected with the integrated publicity scheme. | (i) The post is an isolated one requiring special technical knowledge and experience which can be best assessed by departmental officers. |
| (ii) Officer-in-charge of Information Centre in Madras. | (ii) The Information Centre at Madras is run by the State Government while the expenditure is shared equally between the State and the Central Governments. At the instance of the Government of India, selection for the post of officer-in-charge is made after interview by a Committee consisting of the Chief Secretary. The Director of Information and Publicity and the Information Officer, Press Information Bureau, representing the Government of India, Ministry of Information and Broadcasting. |
| (iii) Temporary post of Legal Adviser to Deputy Inspector-General of Police, Railways and Criminal Investigation Department, Madras. | (iii) Recruitment to the post of Legal Adviser is made by transfer from the category of Assistant Public Prosecutors and Assistant State Prosecutors. The posts of all such law officers are excluded from the purview of the Commission. The post of Legal Advisor which is an isolated one is also likewise excluded from the purview of the Commission. |
| (iv) District Publicity Officers .. | (iv) These are isolated posts requiring special technical knowledge and experience which can be best assessed by departmental officers. |

## APPENDIX IV.

[Vide answer to starred question No. 301 asked by Sri M. Jaganathan at the meeting of the Legislative Assembly held on 13th February 1959, page 266 supra.]

The main functions of the District Handloom Boards are—

(i) to study local problems of handloom industry and to devise ways and means to solve them ;

(ii) to maintain correct particulars of handlooms and dye houses in the district and also the names of the weavers, master weavers, dyers, etc ;







(iii) to study the human and technical resources of the district and suggest steps to improve their efficiency ;

(iv) to study the actual requirements of yarn and other raw materials of handloom industry;

(v) to advise on standardisation of handloom fabrics and planning quality, quantity and timing of production for each weaving centre in the district so that production is adjusted to demand;

(vi) to hold exhibitions, conduct propaganda and assist in the marketing of cloth ; and

(vii) to advise on such measures as would enable the handloom industry in the district to survive as a vital force in the economy of the country.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

LIBRARIAN, SECRETARIAT LIBRARY

**Saturday, 14th February 1959.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS

### *The Madras Lignite (Acquisition of Land) Act*, 1953

* 2 *S.N.Q.*—SRI A. GOVINDASAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government are aware of the decision of the High Court on the validity of the compensation provisions in the Madras Lignite (Acquisition of Land) Act, 1953; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) Certified copy of the judgment of the High Court is awaited.

SRI A. GOVINDASAMY : 1953-ம் வருஷத்திய நில ஆர்ஜித சட்டத்தின் கீழ் நெய்வேலி நிலக்கரி சுரங்கத்திற்கு ஒதுக்கப்பட்ட நிலத்திற்கு நஷ்ட ஈடு கொடுப்பது என்பது 1947-ல் என்ன விலை நிர்ணயம் செய்யப்பட்டதோ அப்படித்தான் கொடுத்து வந்திருக்கிறார்கள். ஆனால் ஹைக்கோர்ட்டு இன்றைக்கு அங்கே ரைஸ் மில் வைத்திருந்தவருக்கு நஷ்ட ஈடு கொடுப்பதை தற்போது இருக்கும் விலையை அனுசரித்துத்தான் கொடுக்க வேண்டும் என்று தீர்ப்பு அளித்திருக்கிறார்கள். அதைப் போலவே நிலங்களுக்கும் கட்டடங்களுக்கும் அந்த முறையிலேயே நஷ்ட ஈடு கொடுக்க அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கு உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : ஜட்ஜுமெண்ட் காபி வந்தவுடன் அதன்மேல் அப்பீல் போட முடியுமா என்பதைப்பற்றி ஆலோசனை செய்து அதன் பிறகு தான் இதைப்பற்றி முடிவு எடுக்கப்படும்.

SRI S. NAGARAJA MONIGAR : தென்னாடு மிகவும் தேய்கிறது, வடநாடு வாழ்கிறது என்று பேசுகிறவர்கள், மற்றும் 36 அடி ரஸ்தா சும்மா போடவேண்டும் என்று சொல்லுகிறவர்கள், காம்பென்சேஷன் குறைவாகக் கொடுப்பதைப் பாராட்டாமல் பெரிய லிக்னைட் தொழிற்சாலையை தென் இந்தியாவில் தொழில் வளர்ச்சிக்காக கொண்டு வருவதை தலைவர்கள் ஆதரிக்கக்கூடாதா, காம்பென்சேஷனை ஏதாகிலும் விட்டுக்கொடுத்து, என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

MR. SPEAKER : வீணை சண்டைக்கு ஏன் இழுக்கிறீர்கள்? அது சரியல்ல. It is an insinuation. The first half of the question is unnecessary and irritating. The second half is relevant. I would request the hon. Member not to make insinuations. This is not allowed under the rules. If the Minister is prepared to answer, I have no objection.

[14th February 1959

SRI S. NAGARAJA MONIGAR: I want the co-operation of all in this matter, Sir.

MR. SPEAKER: I feel the hon. Member should set an example by asking questions which are non-irritating. The hon. Member puts irritating questions and when the other side retaliates, he gets angry. This is not proper. The hon. Member may put a direct question. No insinuation is necessary.

THE HON. SRI R. VENKATARAMAN: சர்க்கார் செய்யவேண்டிய காரியம் ஒன்றும் இல்லை.

SRI A. GOVINDASAMY: Sir, as this is an important matter, I request that a half-hour debate be allowed.

MR. SPEAKER: What have the Government to say in the matter?

THE HON. SRI R. VENKATARAMAN: கனம் சபாநாயகர் அவர்களே, இதில் அரை மணி நேர விவாதத்திற்கு என்ன இருக்கிறது என்பது தெரியவில்லை. ஏனென்றால் எங்களுக்கு ஜட்ஜுமெண்ட காபி இன்னும் வரவில்லை. ஜட்ஜுமெண்ட் காபி வந்த பிறகு அதை சர்க்கார் பரிசீலனை செய்து, அதன் மேல் அப்பீல் செய்ய முடியுமா அல்லது முடியாதா என்பதைப்பற்றி யோசனை செய்ய வேண்டியதாக இருக்கிறது. அதனால் இப்போழுது அரை மணி நேர விவாதத்திற்கு இடம் ஒன்றும் இல்லை.

MR. SPEAKER: கனம் மந்திரி அவர்கள் சொன்ன பிரகாரம் பிறகு பார்க்கலாம். அடுத்த கேள்வி.

*Wheat*

*321 *Q.*—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Home be pleased to state the steps taken by the Government to increase the supply of wheat to this State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Imported wheat is made available in sufficient quantities at all the Central Storage depots in this State.

SRI N. K. PALANISAMI: போதுமான கோதுமை இருக்கிறது என்று செல்லும்போது இப்பொழுது கோதுமை படி ஒன்றுக்கு 11, 12 அணு என்று விற்கப்படுவதற்குக் காரணம் என்ன? கோதுமை போதுமான அளவில் கிடைக்க சர்க்கார் வேண்டிய நடவடிக்கை எடுக்குமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இப்பொழுது இறக்குமதி செய்யப்படும் கோதுமை நியாய விலைக்கடைகளில் விற்கப்படுகிறது, அதுவும் சப்சிடைஸ்ட் ரேட்டாக விற்கப்படுகிறது. ஆனால் அரிசியின் விலையைவிட கோதுமையின் விலை அதிகமாக உயர்ந்திருக்கிறது. இருந்தபோதிலும் பழைய விலையிலேயே கோதுமையை நியாய விலைக் கடைகளில் கொடுத்துக் கொண்டு வருகிருர்கள். அதனல் அதன் விலையை இன்னும் குறைப்பதற்கு இடம் இல்லை.

SRI A. A. RASHEED: Sir, is the Hon. Minister aware of the fact that there is shortage of maida in the State? If so, what steps have been taken by the Government to increase the production of maida?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: This is being looked into now and then.



14th February 1959]

SRI N. K. PALANISAMI: மைதாவைப்பற்றி கனம் மந்திரி அவர்கள் குறிப்பிட்டார்கள். இன்றைக்கு மூன்று அல்லது நான்கு மில்களுக்குத் தான் அதை தயாரிக்க லைசென்சு கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அதற்கு வேறு பெயரை வைத்து விற்று வருகிருர்கள். அதனல் கிடைக்க வேண்டியவர்களுக்குக் கிடைப்பது இல்லை. எனவே ரேஷன் முறையைப் போல் அதை ஏன் விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யக் கூடாது? அந்த முறையில் விநியோகம் செய்ய ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அவ்வாறு ஏற்பாடு செய்வதற்கு இல்லை. எங்கெங்கே புகார் வருகிறதோ அவ்வப்போது அது கவனிக்கப்பட்டு அது சரிவர விநியோகிக்கப்படுகிறதா என்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்துகொண்டு தான் இருக்கிறது.

SRI S. LAZAR: மைதாவின் திடீர் பற்ருக் குறைக்குக் காரணம் என்ன? அதை தவிர்க்க சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிருர்கள்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: மைதாவை அதிகப்படியாக உற்பத்தி செய்ய அரசாங்கம் கவனம் செலுத்திக் கொண்டு தான் வருகிறது. பற்ருக் குறைக்குக் காரணம் அதை அதிகமாக உபயோகிக்கிறவர்கள் அதிகமாக வந்திருக்கலாம்.

SRI A. GOVINDASAMY: நியாய விலைக்கடைகளில் கோதுமை கொடுப்பதில் குன்றந்த அளவில் கொடுக்கிருர்கள். இதைக் கொண்டு போவதற்கு சங்கடமாக இருக்கிறது. அதனல் கோதுமையை மாவாக அறைத்து விநியோகிக்க அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்க முன் வருமா? அப்படி மாவாக அறைத்து அதை நியாய விலைக் கடைகளில் விநியோகம் செய்ய முன் வருவார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கோதுமையை மாவாக அறைத்து அதை நியாய விலைக் கடைகளின் மூலம் கொடுப்பது என்பது அசாத்தியமான காரியம். அது சரியல்ல. சிலர் கோதுமையாகவே உபயோகிப்பார்கள். அவர்களையெல்லாம் மாவாக வாங்கிக்கொள்ள வேண்டும் என்று நிர்ப்பந்திப்பது சரியல்ல.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Sir, some of the North Indians who are staying in the City have informed me that they have not been given permits to import wheat from their respective States. If that is so, will the Government come forward to remove the restriction?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: So far as the information that is available with me is concerned, there is demand for samba wheat, and the request is for the import of samba wheat. This is mainly consumed by diabetic patients under medical advice. We have asked for the import of 6,000 tons from Bombay. We already got import permit for 500 tons. The rest also will be got.

SRI K. VINAYAKAM: Sir, are the Government aware that there are two varieties of wheat. One is the coloured blackish wheat, which is not wanted by the people. The other is whitish, which is more palatable. The coloured one is sold in the shops at the controlled rate, but the whitish one is not available. Will the Government take suitable steps to have the better variety distributed at least through co-operative societies like the T.U.C.S.?

[14th February 1959

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I have not received any such suggestion from consumers' co-operative societies. If co-operative societies make a specific proposal, that will be looked into.

SRI A. A. RASHEED: Sir, is there any proposal to allow more flour mills to be opened in our State to overcome the shortage in maida?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Yes, Sir. If the private sector comes forward to open more flour mills, that will be considered.

### *S.S.L.C. Examination*

* 322 *Q.*—SRI A. VEDARATHNAM: கனம் நிதி அமைச்சர் அவர்க தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கடந்த எஸ்.எஸ்.எல்.சி. பரீக்ஷையில் ஆங்கிலத்தில் தேறியவர்கள் எத்தனை பேர்?

(ஆ) ஆங்கிலத்தில் தவறியவர்கள் எத்தனை பேர்?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) & (*b*) Under the S.S.L.C. Scheme there is no 'pass' or 'fail' in any particular subject of the S.S.L.C. Examination. It is, therefore, not possible to say how many candidates 'passed' or 'failed' in English in the S.S.L.C. Examination held in March 1958.

SRI A. VEDARATHNAM: ஆங்கிலம் என்ற ஒரு பாடத்தில் மாத்திரம் மார்க் குறைவாக வாங்கியதன் காரணமாக ஏராளமான மாணவர்கள் பரீக்ஷையில் தவறிப்போகும் விஷயம் கனம் மந்திரி அவர்களுக்குத் தெரியுமா? அப்படியிருந்தால் அதன் காரணத்தை ஆராய்ந்து, அதாவது போதனையின் திறமை குறைவா அல்லது ஆங்கில பாடங்கள் கடுமையாக இருப்பது காரணமா என்பதை ஆராய்ந்து அதற்குத் தகுந்த பரிகாரம் தேட அரசாங்கம் முன் வருமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: ஆங்கில பாடத்தில் பலர் தவறி விடுகிறார்கள் என்பது வாஸ்தவம் தான். ஆங்கிலத்தை இன்னும் நல்ல முறையில் போதிப்பதற்கு இப்பொழுது பல ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

SRI T. T. DANIEL: May I know from the Hon. Minister, Sir, what steps the Government have taken to improve the standard of English in the high schools?

THE HON. SRI C. SUBRAMANIAM: நல்ல முறையில் ஆங்கிலத்தை போதிப்பதற்கு புதிய முறைகளை ஆசிரியர்களுக்குச் சொல்லிக் கொடுக்க பல முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. அதன் பிறகு ஆங்கிலத்தின் தரம் உயருவதற்கு வழி ஏற்படும்.

SRI K. SATTANATHA KARAYALAR: ஆங்கிலத்தில் தேர்வு அடைவதற்கு எவ்வளவு சதமானம் வேண்டும், தமிழில் தேர்வு அடைய எத்தனை சதமானம் வேண்டும், சர்வகலாசாலையில் சேருவதற்கு இவைகளில் எத்தனை சதமானம் தேவை. மற்றும் உயர்தர பள்ளிக்கூடங்களில் சேருவதற்கு எத்தனை சதமானம் தேவை என்பதை அறிவிக்க முடியுமா?



14th February 1959]

MR. SPEAKER: இதற்கு தனி கேள்வி போட வேண்டும்.

THE HON. SRI C. SUBRAMANIAM: ஆங்கிலத்தில் தேர்வு அடைய 40 பர்செண்ட் வேண்டும் என்று நினைக்கிறேன். மற்றவைகளில் 30 அல்லது 35 பர்செண்ட் என்று நினைக்கிறேன். தனியாக கேள்வி போட்டால் விவரம் சேகரித்துச் சொல்லுகிறேன்.

SRI A. VEDARATHNAM: ஆங்கிலத்தில் திறமையாக போதனை நடைபெறுவதற்காக செய்யப்படுகிற முயற்சிகள் என்ன, அதன் திட்டம் என்ன என்பதை அறிவிக்க முடியுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: இப்பொழுது பல ஆரம்பப் பள்ளிக்கூட ஆசிரியர்களையும் உயர்தரப் பள்ளிகளில் இருக்கும் ஆசிரியர்களையும் கொண்ட ஒரு செமினர் நடத்த அங்கே ஆங்கில போதனையில் வல்லவர்களைக் கொண்டு அவர்களுக்கு ஆங்கிலத்தில் பயிற்சி கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அத்துடன் ஆங்கிலத்தில் நல்ல முறையில் பயிற்சி அளிக்கக்கூடிய ஆசிரியர்களைக் கொண்டு போதனை செய்து அவைகளை கிராமபோன் ரிகார்டுகளில் எடுத்து அதன்மூலமாக பாடங்களைச் சொல்லிக் கொடுக்கவும் ஏற்பாடுகள் நடந்து கொண்டு வருகின்றன.

SRI S. NAGARAJA MONIGAR: சார், இம்மாதிரி சமீப காலத்தில் ஆங்கிலத்தின் தரம் குறைவாகப் போனதன் காரணம் இதர 'பாரங்களில்' தமிழிலேயோ அல்லது பிராந்திய மொழியிலேயோ போதிப்பதும், மற்ற மொழிகளின் மீது ஒரு வெறுப்பை ஏற்படுத்தியதும் தான் காரணம் என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் அறிவார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM: போதனா மொழி எதுவாக இருக்க வேண்டும் என்பதில் சர்ச்சை இல்லை. எந்த மொழியில் பயிலுவதாக இருந்தாலும் அந்த மொழியில் ஒரு தரம் இருக்க வேண்டும் என்று விதி வைத்திருக்கிறோம். அந்தத் தரத்திற்கு வரக்கூடிய அளவுக்குப் போதனை செய்ய வேண்டும் என்று முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

SRI T. S. RAMASWAMY PILLAI: ஆங்கில போதனை சரியான்படி நடப்பதற்கு அரசாங்கம் நல்ல பிழையற்ற பாட புத்தகங்களை வெளியிட உத்தேசித்திருக்கிறதா?

THE HON. SRI C. SUBRAMANIAM: இப்பொழுது பாட புஸ்தகங்களில் அதிகமாகப் பிழை இருக்கும் காரணத்தால் தரம் குறைந்து விட்டது என்று சொல்ல முடியாது. போதிப்பதிலே சில குறைகள் இருப்பதால் தரம் குறைந்து விட்டது என்று கருதப்படுகிறது. ஆகையால் இப்பொழுது அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப்பொழுது 5-ம் வகுப்பில் இருந்தே ஆங்கிலம் சொல்லித்தர ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இப்பொழுது தயார் செய்துள்ள புதிய பாடத் திட்டத்தை ரொம்பவும் சிறந்தது என்று எல்லா ஆங்கில நிபுணர்களும் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்.

### *Water-supply Scheme for Tenkasi*

* 323 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the stage at which the work of Tenkasi Water-supply Scheme is; and

(*b*) whether the work is progressing according to schedule?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) Eighty per cent of the work of laying of conveying mains forming the first stage of the scheme has been completed.

(b) The work on the scheme has since been deferred pending investigation of a source that will not affect the Courtallam waterfalls.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்த "சோர்ஸ்" கண்டு பிடிப்பதில் தென்காசியில் இருந்து மற்றொரு திட்டம் சர்க்கார் முன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறதா ? அது அங்கீகரிக்கப்படுமா ?

THE HON. SRI M. MANICKAVELU : இதைப் பற்றியெல்லாம் பரிசீலனை செய்துதான் ஒரு முடிவுக்கு வர முடியும்.

*Palar Mills, Walajabad*

* 324 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there was a lay-off in Palar Mills, Walajabad, due to electricity cut during June and July 1958; and

(b) if so, whether any lay-off compensation was paid to the workers for the abovesaid period?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes, Sir.

(b) Lay-off compensation was paid to all the workers who are eligible for such compensation under the Industrial Disputes Act.

SRI N. K. PALANISAMI : 240 நாட்கள் தொடர்ந்து வேலை செய்தால் இந்த நஷ்ட ஈடு கொடுக்கப்படும் என்று இருக்கும்போது, தொடர்ந்து 10, 15 வருஷங்கள் வேலை செய்தவர்களுக்கு இந்த நஷ்ட ஈடு கொடுக்கப்படவில்லை என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : 240 நாட்கள் வேலை செய்தவர்கள் எல்லோருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி யாருக்காவது கொடுக்கப்படாமல் இருக்கிறது என்று எந்தக் 'கேஸும்' சர்க்கார் கவனத்திற்கு வரவில்லை.

*Caste Hindu-Harijan Couples*

* 325 Q.—SRI P. G. MANICKAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1958-ம் வருஷம் அரிஜன ஜாதி ஹிந்து கலப்பு மண தம்பதிகள் எத்தனை பேர்கள் எதிர்கால வாழ்க்கைக்காக உதவி கோரி கவர்ன்மெண்டுக்கு விண்ணப்பித்தார்கள் ?

(ஆ) எத்தனை பேர்களுக்கு என்னென்ன உதவிகள் அளிக்கப்பட்டன ?

THE HON. SRI P. KAKKAN : (a) None, Sir.

(b) Does not arise.

SRI S. B. ADITYAN : கலப்புத் திருமணங்களைச் சர்க்கார் ஆதரிக்கிறதா ? அப்படியானால் என்னென்ன வகையில் ஆதரிக்கிறது என்று தெரியப்படுத்துமா ?

THE HON. SRI P. KAKKAN : தனிக்கேள்வி போட்டால் எல்லா விவரங்களும் விவரமாகச் சொல்லப்படும்.



* 326 Q.—MR. SPEAKER : The hon. Member Sri K. Sattanatha Karayalar is not in his seat. The question and answer will be printed in the Official Proceedings *.

*Fertilisers*

* 327 Q.—SRI SRI C. MUTHIAH : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1956–57, 1957–58-ல் தஞ்சை ஜில்லாவிற்கு உரத்திற்காக அளிக்கப்பட்டக் கடன் தொகை எவ்வளவு ?

(ஆ) எவ்வளவு செலவு செய்யப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The amounts allotted to the Tanjore district for the purchase of chemical fertilisers in 1956–57 and 1957–58 are Rs. 17·55 lakhs and Rs. 20·90 lakhs respectively.

(b) The amounts spent are Rs. 17·21 lakhs and Rs. 20·83 lakhs for the two years.

SRI K. VINAYAKAM : Sir, we wanted to concentrate on Question No. 326. We thought that the hon. Member who had given notice of the question was present in the House and he would put the question. We were not aware that he had left the House and was absent at the time the Hon. Speaker called that question. If only we were aware that he was absent, someone of us would have put the question on his behalf. So, I request that the Hon. Speaker may be pleased to take up that question now.

MR. SPEAKER : The Hon. Minister has already answered the next question, viz., question No. 327 and he is going to answer question No. 328 also.

(At this stage Sri K. Sattanatha Karayalar entered the House.)

SRI K. VINAYAKAM : Sir, the hon. Member who has given notice of the question, Sri Sattanatha Karayalar has also come back. So, I request you to take up question No. 326 now, as it is on a very important subject and so many of us are anxious to put supplementaries on it.

MR. SPEAKER : I agree. But the Hon. Minister has gone to the next question. Let us finish consideration of the next question and then take up question No. 326 as requested by the hon. Member.

As question No. 328 and question No. 351 relate to the same subject, I suggest we may take them up together.

* 328 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to give greater amount of loan and grant to the agriculturists to get chemical manure?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

---

* vide page 335 infra

* 351 *Q.*—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Home be pleased to state the steps taken by the Government to supply fertilizers to this State at a cheaper rate?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The important nitrogenous fertilisers are distributed by the State Government under the State Trading Scheme which is run on a " no profit no loss " basis so that the fertilisers may be available to the ryots at all Centres and at an uniform reasonable price.

The Government watch the distribution of superphosphate by the trade to ensure that the supply of this fertiliser is done equitably and at a reasonable price.

There has been no particular difficulty in regard to the supply or price of potassic fertilisers.

SRI N. K. PALANISAMI: ஈரோட்டை எடுத்துக் கொண்டால் மாதம் ஒன்றுக்கு சுமார் 1,500 மூட்டை கொடுத்தால் கூட போதாது. ஆனால் செப்டம்பர், அக்டோபர், நவம்பர் ஆகிய மூன்று மாதங்களுக்கும் 60 மூட்டைகள்தான் விநியோகம் செய்யப்படுகின்றன. இம்மாதிரி கஷ்டங்கள் இல்லாமல் இருக்க " லீன் " மாதங்களில் வரக்கூடிய மூட்டைகளைத் தேக்கி வேண்டும்போது அதிகமாகக் கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அம்மோனியம் சல்பேட்டைப் பொறுத்தவரையில் நம் நாட்டில் உற்பத்தியாவது போதாது. ஆகவே வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. அந்நிய நாட்டுச் செலாவணி காரணமாக அதிகமாக இறக்குமதி செய்யப்படுவதில்லை. அதன் காரணமாக விவசாயிகளுக்கு வேண்டிய அளவு கொடுக்க முடிவதில்லை.

SRI S. LAZAR: அரிசி நெல்லினுடைய விலையைக் குறைக்க, அதே 'ப்ரொப்ரோஷனேட்டில்' ரசாயன உரத்தின் விலையைக் குறைக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ரசாயன உரம் ஓரளவு இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது. அவ்வாறு அந்நிய நாடுகளில் இருந்து வருவதால் அதிக விலை கொடுத்து அதை வாங்க வேண்டி இருக்கிறது. அதிக விலை கொடுத்து வாங்கி இங்கு அது குறைந்த விலைக்குத்தான் கொடுக்கப்பட்டு வருகிறது.

SRI A. R. MARIMUTHU: இந்த உரம் வாங்க தஞ்சை ஜில்லாவில் கடன்கள் வழங்கப்பட்டும்கூட கொடுக்கப்படவில்லை என்பது அரசாங்கத்துக்குத் தெரியுமா ? கடனுக்கு உரம் கொடுக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அதைப் பற்றித் தகவல் இல்லை. ஆனால் பற்றுக்குறை இருக்கிறது என்று சொன்னேன். ஆயினும் அந்தந்தப் பருவ காலங்களில் வேறு மாவட்டங்களில் உரம் இருந்தால்கூட அதைக் கொண்டு வந்து கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

SRI S. M. ANNAMALAI: ரசாயன எருக்களை விடச் சிறந்த தும்பை, எருக்கு போன்ற காடுகளில் கிடைக்கும் செடிகள் மிகவும் பயன்படுகின்றன. அந்தத் தும்பைச் செடிகளைப் பணம் இல்லாமல் காடுகளில் இருந்து எடுத்துச் செல்ல சர்க்கார் அனுமதிப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ரசாயன உரங்களை விடச் சிறந்தது என்றல்ல. பசுந்தழை உரமும் வேண்டி இருக்கிறது. காடுகளில் இருக்கும் பச்சைத் தழை உரங்களை எடுத்துக்கொள்ள வசதி செய்யப்பட்டிருக்கிறது. யார் வேண்டுமானாலும் இலவசமாக எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னால் அங்கு எல்லோருக்கும் கிடைக்காமல் போய்விடும்; வல்லவர்கள் மட்டுமே எடுத்துக் கொள்ளக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடும்.



SRI T. S. RAMASWAMY PILLAI: இந்த அம்மோனியம் சல்பேட் சிந்திரி பாக்டரியில் இருந்து வருகிறதா அல்லது " எப்.எ.சி.டி. " பாக்டரியில் இருந்து வருகிறதா ? நம்முடைய அரசாங்கத்துக்கு ஷேர் எவ்வளவு இருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: நமக்குக் கொடுப்பதற்கும் 'ஷேருக்கும்' சம்பந்தம் இல்லை. எவ்வளவு ஷேர் என்று விவசாய தொழில் அமைச்சரைக் கேட்டால் சொல்லுவார். நம்முடைய நாட்டில் உற்பத்தியாகும் சிந்திரியில் இருந்துதான் அது வருகிறது. ஆல்வேயில் இருந்து வருவதும் விநியோகிக்கப்படுகிறது.

SRI K. SATTANATHA KARAYALAR: கடனுக வாங்கிய உரம் 'பளாக் மார்க்கெட்டுக்கு' திரும்ப வருகிறது. அதைத் தடுக்க சர்க்கார் உத்தேசித்திருக்கிறதா ? ஒரு மூட்டைக்கும் குறைவாக விவசாயிக்குக் கொடுக்க மார்க்கம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: எவ்வளவு நிலம் இருக்கிறதோ அதற்கு ஏற்ற அளவுதான் கொடுக்க முடியும். பத்து ஏக்கர் நிலத்திற்கு ஒரு ஏக்கர் நிலத்திற்கு வேண்டிய அளவு கொடுத்தால் பயன் இல்லை. கள்ள மார்க்கட்டில் அதிக விலை கொடுத்து வாங்குகிறவர்களும் ஏதோ நிலத்திற்குத்தான் போடுகிறார்கள். அதனால் எப்படியும் விவசாயத்திற்குத்தான் பலன் ஏற்படுகிறது.

### *Baby taxis*

MR. SPEAKER: கனம் அங்கத்தினர் அவர்கள் கேள்வி 326-ஐ எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அதை இப்பொழுது எடுத்துக் கொள்வோம்.

* 326 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether it is a fact that there is difficulty in obtaining Baby taxis opposite to Egmore Railway station during the arrival of trains in the morning between 7 and 8-30 a.m.;

(*b*) whether it is a fact that Baby taxis are not allowed to wait opposite the Railway station;

(*c*) whether it is also a fact that frequently taxis with " flags down ", i.e., " meters showing engaged " are found waiting; and

(*d*) if so, whether the Government propose to take steps to stop this improper use?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) Yes, Sir. This difficulty is not a daily feature but occasional when there is heavy rush of passengers.

(*b*) Taxis (Baby or big) are not allowed to be parked opposite the station. There are two taxi stands very close to the station, one provided by the Railway authorities and the other provided by the Traffic Department of the Madras City Police.

(*c*) No instance of taxis waiting with " flags down " in any of the two stands cited has come to notice. Some cases of taxis with " flags down " near platform No. 2 have been noticed and their drivers have been prosecuted.

(d) Steps have been taken to check this evil. The Railway Police are on duty at all times in front of the station during arrival and departure of trains. The City Police provide patrols in front of the station during arrival and departure of trains. Surprise checks also are made by the traffic police.

**Sri K. SATTANATHA KARAYALAR**: டிரெயினிலிருந்து இறங்கியதும் வெளியிலே நீண்ட தூரம் இந்த டாக்சிக்குச் செல்ல வேண்டியிருப்பதால் இந்த பேபி டாக்சி நிலையத்தை மாற்றி அமைக்க ஓரளவு ஸ்டேஷனுக்கு அருகிலேயே அமைப்பதற்கு அரசாங்கம் யோசிக்குமா ?

**The Hon. Sri V. RAMAIAH**: டாக்சி நிறுத்தக்கூடிய நிலையம் சம்பந்தமாக எல்லா பரிசீலனையும் செய்யப்பட்டு இப்போது நிறுத்தப்பட்டிருக்கும் இடம் சௌகர்யமாக இருக்குமென்றுதான் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**Sri K. VINAYAKAM**: Will the Hon. Minister think of the possibility of changing the place where the owner-driven cars are parked so that they may be parked a little distance away from the taxi stand?

**The Hon. Sri V. RAMAIAH**: As I have already stated in reply to the main question the present arrangement has not caused any difficulty. Therefore I don't see any reason why we should make changes in the existing system and get into more difficulties.

**Sri K. SATTANATHA KARAYALAR**: கனம் அமைச்சர் அவர்கள் டாக்சிகள் எங்கேஜ்ட் என்று போட்டு நிறுத்துவது அதிகமாக இல்லை என்று சொன்னார்கள். ஆனால் மாமூல் அடிப்படையில் போலீசாரால் பாதுகாப்பு அளிக்கப்படுவதால் அவர்கள் எங்கேஜ்ட் என்று போட்டுவிட்டு கூப்பிடும் போது வருவது கிடையாது. இதை கவனிப்பதற்காக சி.ஐ.டி. இலாக்காவிற்கு சிபார்சு செய்வார்களா ?

**The Hon. Sri V. RAMAIAH**: இதுபோன்ற தகவல்களை அரசாங்கத்திற்கு சமர்பித்தால் உடனடியாக கவனிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

**Sri A. A. RASHEED**: Is there any proposal to increase the number of Baby taxis to be put on the road?

**The Hon. Sri V. RAMAIAH**: I require a separate question for that.

**Sri A. GOVINDASAMY**: இந்த பேபி டாக்ஸிகளை அடையாளம் கண்டு பிடிப்பதற்கு, இவைகளையெல்லாம் ஒரே வர்ணத்தில் வைத்திருப்பதற்கு உத்திரவு போடுமா ?

**The Hon. Sri V. RAMAIAH**: இதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து ஒரே விதமான வர்ணத்தில் இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இதனால் சிரமம் குறையும் என்று சொல்வதற்கில்லை.

**Sri K. VINAYAKAM**: It is a fact that there are Police constables posted in the place to watch anything going wrong. But will the Government think of the possibility of posting traffic police instead of the civil police intended to maintain only law and order? The traffic police would be in a better position to control traffic there.







**The Hon. Sri V. RAMAIAH**: I am sure there will be traffic police also there. Whether it is traffic police or the other police, whoever is posted there, they are maintaining the arrangements well.

**Sri S. LAZAR**: சென்னை ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தவுடன்.

**Sri K. R. S. MANI**: இப்பொழுது இருக்கிற நிலைமை சுமாராக இருக்கிறதென்று சொன்னார்கள். ஆனால் கிராமங்களிலிருந்து லக்கேஜுடன் இறங்கி வரும் ஜனங்களிடம் ப்ரோக்கர்கள் வந்து தவறான வழியிலே அவர்களை அழைத்துக்கொண்டு போகிறார்கள் என்பதற்காக டூர் ஸ்டான்ட் இருக்கும் இடத்தில் டாக்ஸி ஸ்டாண்டை மாற்றுவதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

**The Hon. Sri V. RAMAIAH**: இப்பொழுது இருக்கும் இடத்திற்கு செல்வதில் சிரமம் ஒன்றும் இருக்காது.

**Mr. SPEAKER**: கனம் அங்கத்தினர்கள் ஒரு கேள்வி போடும்போது 10, 12 உப கேள்விகள் போடுகிறார்கள். நான் பார்த்தவரையிலும் எந்த சட்ட சபையிலும் கேள்வி போடும் அங்கத்தினருக்கு மட்டும் இரண்டு மூன்று கேள்விகள் கேட்க அனுமதிக்கிறார்களே தவிர இம்மாதிரி அதிகமாக கேள்விகள் கேட்பதை நான் பார்க்கவில்லை.

### *Connemara Public Library*

**Mr. SPEAKER**: As the hon. Member Sri M. Jagannathan, is not in his seat, the question and answer will be printed in the official proceedings.

* 329 Q.—**Sri M. JAGANNATHAN**: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the total number of depositors on roll at the end of the year 1957-58 in the Connemara Public Library, Madras;

(b) the number of new depositors during that year; and

(c) the number of withdrawals during that year?

**The Hon. Sri C. SUBRAMANIAM**: (a) 3,571.

(b) 649.

(c) 289.

### *G.C.I.M. doctors*

* 330 Q.—**Sri V. K. KRISHNAMURTHY**: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether the G.C.I.M. doctors are allowed to practise in the State Government hospitals; and

(b) if so, whether they are allowed to conduct major operations?

**The Hon. Sri M. A. MANICKAVELU**: (a) Yes, they are allowed to work in Government hospitals.

(b) Not just at present.

**Sri V. K. KRISHNAMURTHY**: எம்.பி.பி.எஸ். கோர்ஸுக்கும் ஜி.சி.ஐ.எம். கோர்ஸுக்கும் ஒரே மாதிரியாக இருந்தும், ஒரே மாதிரியான புஸ்தகங்கள் இருந்தும் மேஜர் ஆபரேஷன் செய்யக்கூடாது என்ற வரையறை இருக்கிறது.

THE HON. SRI M. A. MANICKAVELU: சமீப காலத்திலே அவர்களுக்கு சில சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 7, 8 இலாக்காக்களிலே அதோடு எம்.பி.பி.எஸ். டாக்டர்கள் இருக்கும் ஆஸ்பத்திரியில் அவர்கள் பணி புரியலாம் என்று இருக்கிறது.

SRI T. T. DANIEL: May I know from the Hon. Minister what are the seven special privileges that has been granted to them and is there any proposal before the Government to recognize these degrees as equivalent to the M.B.B.S. degrees?

THE HON. SRI M. A. MANICKAVELU: To recognize them as equivalent to M.B.B.S. the University must take it up. About the special privileges referred to by the hon. Member, they can work as medical officers in Local Fund dispensaries and hospitals of indigenous medicine, as medical officers in hospitals and dispensaries under the State Insurance Scheme, as second or third medical officer in the Taluk Headquarters hospitals where there are M.B.B.S. medical officers, in maternity and child welfare health centres (women doctors) as medical officers in the Community Projects and as medical practitioners and health officers under the Madras Public Health Service and things like that.

SRI A. VEDARATHNAM: கனம் சபாநாயகர் அவர்களே, 329-வது கேள்வி இன்னும் பதில் அளிக்கப்படவில்லை.

MR. SPEAKER: I said the hon. Member Sri M. Jagannathan is not in his seat and that the question and answer will be printed in the official proceedings.

*Unemployment*

* 355 Q.—SRI A. GOVINDASAMY: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டத்தில் வேலைத் தேடித் தரும் ஸ்தாபனத்தில் பதிவு செய்துக் கொண்டு வேலை இல்லாமல் இருப்பவர்கள் எண்ணிக்கை என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN: The number of candidates waiting for employment on the Live-Register of the District Employment Office, South Arcot, as on 30th November 1958 is 4,861.

* 331 Q.—SRI A. GOVINDASAMY: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

இந்த ராஜ்யத்தில்

(i) B.A., M.A., B.Sc. and M.Sc.,

(ii) Intermediate, S.S.L.C., Matriculation, and

(iii) III Form, IV Form and V Form.

வரை படித்துவிட்டு வேலையில்லாமல் இருப்பவர்கள் எண்ணிக்கை என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN: A paper furnishing the particulars is placed on the table of the House.

* Printed as Appendix I on page 411 infra.



SRI A. GOVINDASAMY: இந்த ராஜ்யம் பூராவும் படித்து வேலையில்லாமல் இருப்பவர்கள் 56,397 பேர் என்று புள்ளிவிவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கம் அவர்களுக்கு வேலை கொடுக்க துரிதமான நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN: கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லும் புள்ளி விவரம் சரியாக இருந்தால், வேலையில்லாதவர்களில் எம்ப்லாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ஜில் ரிஜிஸ்டர் செய்துக் கொண்டவர்களுக்குத்தான் வேலை கொடுக்கப்பட்டுவருகின்றன.

SRI A. GOVINDASAMY: எம்.எஸ்.ஸி. பட்டம் பெற்றவர்கள் பலருக்கு வேலை கிடைக்கவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறது. சென்னையிலிருந்து பட்டம் பெற்ற எம்.எஸ்.ஸீகளுக்கு வேலை கொடுக்கப்படுகிறது ஆனால் அண்ணாமலை யூனிவர்சிடியில் பாஸ் பண்ணியவர்களுக்கு வேலை கிடைப்பதில்லை. அப்படியென்றால் அவர்களுக்கு உடனடியாக வேலை கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN: சர்க்கார் வேலை கொடுக்கும் ஸ்தாபனத்தில் என்ன படிப்பு படித்திருக்கிறார்கள் என்பதை தவிர அவர்கள் ஊரைப்பற்றி கேட்பதில்லை.

SRI M. K. SOMASUNDARAM: 3-வது பாரத்திலிருந்து 5-வது பாரம் வரையில் உள்ள வகுப்புகள் வரையில் படித்திருக்கும் மாணவர்களை சேர்த்து, அவர்களுக்கு ஏதாவது தொழில் கற்றுக்கொடுக்க அரசாங்கம் முன் வருமா ? 9-30 a.m.

THE HON. SRI R. VENKATARAMAN: நமது ராஜ்யத்தில் இப்போது 12 இண்டஸ்ட்ரியல் ட்ரெயினிங் ஸ்கூல்கள் நடந்து வருகின்றன. அவைகளில், 3-வது பாரத்திற்கு மேல் படித்தவர்களுக்கு பயிற்சியளிக்கப்படுகிறது. இந்தப் பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை நன்றாக கிடைத்து வருகிறது. இந்தப் பயிற்சி இல்லாதவர்களுக்குத் தான் வேலை கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது.

*Quarters for Government Press workers*

* 332 Q.—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether there is any proposal to form a colony for Government Press Workers of Madras;

(b) if so, the amount provided therefor; and

(c) at what stage its implementation stands?

THE HON. SRI V. RAMAIAH: (a) & (b) Yes, Sir.

The Government have sanctioned a scheme for the construction of 300 quarters to the workers of the Government Press, Madras, at a total estimated cost of about Rs. 20 lakhs, spread over a period of three years.

(c) The foundation stone has been laid and the work taken on hand by the Public Works Department.

SRI K. SATTANATHA KARAYALAR: May I know the number of workers that will be accommodated in these quarters.

THE HON. SRI V. RAMAIAH: The building scheme is for 300 men.

[14th February 1959

*Travelling allowance to the poor*

* 333 Q.—SRI M. S. SELVARAJAN : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) லோகல் போலீசுக்கு வழங்கப்பெறும் T.A. விகிதங்கள் டவுன் போலீசுக்கும் வழங்கப் பெறுகிறதா ?

(ஆ) அவர்கள் கஷ்டங்களை எடுத்துச் சொல்லி நிவாரணம் கோரி சமீபத்தில் மனுக்கள் வந்திருக்கின்றனவா ?

(இ) அவைகளின்மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir

(*b*) No, Sir.

(*c*) Does not arise.

SRI M. S. SELVARAJAN : கிராமப் பகுதிகளில் உள்ள போலீசுக்குக் கிடைத்திருக்கும் டி.எ. வசதிகள் நகாப்புறத்திலுள்ள போலீசுக்கு கிடைக்கவில்லை என்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மூலக் கேள்வியும் இது தான். அம்மாதிரி வித்தியாசம் ஒன்றும் இல்லை என்று இதற்கு பதிலளித்தேன்.

*Medical College for Coimbatore*

* 334 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the present stage of the proposal for the starting of a Medical College in Coimbatore;

(*b*) whether any contribution from the public has been promised therefor; and

(*c*) if so, the details thereof?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) There is no such proposal.

(*b*) & (*c*) Do not arise.

MR. SPEAKER : When the reply is "There is no such proposal"; what question is the hon. Member Sri N. K. Palanisami going to ask? Anyway, if he wants he may put a questoin.

SRI N. K. PALANISAMI : அங்கே வைத்தியக் கல்லூரி அமைப்பதைப் பொறுத்தவரையில், தனிப்பட்ட நபர்கள் எதாவது "காண்ட்ரிப்யூஷன்" கொடுத்தால் தாங்கள் வைத்தியக் கல்லூரியை அமைப்பதாக அரசாங்கத்தார் சொல்லியிருக்கிறார்களா ? வைத்தியக் கல்லூரிக்கு அந்த முறையில் எதாவது எற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : எதோ ஒரு காலத்தில், அங்கே ஒரு தனிப்பட்ட நபர் இதற்கு எதோ உதவி செய்வதாகச் சொன்னார். அந்த உதவி போதுமான அளவில் இல்லாததாலும் இப்போது தஞ்சாவூரில் வேறு வைத்தியக் கல்லூரி நிறுவப்பட்டு விட்டதாலும் அந்தப் பிரச்னை இப்போது எழவில்லை.

MR. SPEAKER : Questions 335, 336, 337 and 352 relate to the same subject. They may be answered together.



14th February 1959]

*Family planning*

* 335 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether the Government have deputed any officer to China to examine and report on the family-planning programmes carried out there?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir, not any officer of Government.

* 336 Q.—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state, consequent on the steps taken by the Government to popularize the practice of birth control, whether any complaints that they have resulted in wounding the religious feelings of Hindu, Muslim and Christian population in the State have been received?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir, except from a section of the Catholic community.

* 337 Q.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether there is any proposal to award cash prizes to couples married ten years ago but having a family of only two children, as a measure of family-planning?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir.

* 352 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether doctors were sent to the Family Planning training and Research Centre, Bombay; and

(*b*) if so, the number and the nature of training they received?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) & (*b*) One Woman Assistant Surgeon attached to Government Hospital for Women and Children was sent for training for a period of ten days.

The training consisted of visits to the Family Planning clinics run by the All-India Family Planning Association in Bombay City and two other centres. Instructions were given in the technique of contraception. A study of the method of history—taking, maintenance of case records and follow-up of patients also formed part of the training programme.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware that one of the Tamil dailies is wrecking the programme by awarding cash prizes to large-sized families? If so, will the Government award cash prizes to small-sized families and encourage family planning?

THE HON. SRI M. A. MANICKAVELU : அப்படி பரிசு வழங்கப் போவதால் இந்தத் திட்டம் அடிபட்டுப் போய்விடும் என்று சொல்வதற்கில்லை. ஒரு கனம் அங்கத்தினர் அவ்வாறு செய்கிறார் என்றால், குறைந்த குழந்தைகளைப் பெற்றுள்ளவர்களுக்கு இந்த கனம் அங்கத்தினர் பரிசு கொடுக்கலாம்.

[14th February 1959]

SRI S. LAZAR: In view of the fact that these three religions prohibit the practice of birth control, may I know whether the Government will kindly slow down the policy and adopt other features in the Family Planning Programme than birth control?

THE HON. SRI M. A. MANICKAVELU: As regards the opposition from the Catholic Christian section, I may just inform the hon. Member that the Archbishop of Madras has stated that he admits that economic and social conditions make limited birth control advisable and that His Holiness the Pope approves of the observance of the safe period as a means of adopting family planning in the interests of good life.

SRI N. K. PALANISAMI: ஜனத்தொகையைக் கட்டுப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தத் திட்டம் எவ்வளவு தூரம் வெற்றிகரமாக நடந்து வருகின்றது என்று கனம் அமைச்சர் தெரிவிப்பாரா?

THE HON. SRI M. A. MANICKAVELU: இதற்கு ஒரு உதாரணம் சொல்லி பதில் சொல்ல வேண்டுமானால், சென்னையில் சுமார் 2,000 அல்லது இரண்டாயிரத்திச் சொச்சம் ஆண்கள், பெண்களுக்கு இந்த ரண சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்வேன். இத்தனை பேருக்கு ரண சிகிச்சை ஆகியிருப்பதற்கு அர்த்தம் என்னவென்றால், 10,000 அல்லது 20,000 குழந்தைகள் பிறக்காமல் தடுக்கப்படும். (சிரிப்பு).

SRI K. SATTANATHA KARAYALAR: May I know whether doctors are sent to the Family Planning Research Centre, Bombay, periodically? If so, how many are sent in a year?

THE HON. SRI M. A. MANICKAVELU: No, Sir. Doctors were once sent but now arrangements have been made to have a regional Research Centre in our Hospital for Women and Children. It will start going shortly and doctors can be trained here itself.

SRI A. GOVINDASAMY: குடும்பக் கட்டுபாடுத் திட்டத்தைப் பொறுத்தவரையில், அமைச்சரவையில் ஒருமித்த கருத்து இருக்கிறதா? அதிகக் குழந்தைகள் பெறுகிறவர்களுக்குப் பரிசுகள் கொடுப்பதை ஆதரித்து ஒரு கனம் அமைச்சர் பேசியிருப்பது கனம் சுகாதார அமைச்சருக்குத் தெரியுமா?

MR. SPEAKER: How can the hon. Member ask such questions? They speak with one voice.

SRI A. GOVINDASAMY: It is a relevant question, Sir.

MR. SPEAKER: I do not know. I am not quite sure. Anyway, there is no answer.

SRI S. NAGARAJA MONIGAR: மத விஷயங்களில் நாம் மக்களின் மனதைப் புண்படுத்துகிறோமா என்ற பிரச்னையைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே இந்த நாட்டின் முன்னேற்றத்திற்கான திட்டங்களில் இறங்கிவிட்ட நாம் வெகு தூரம் சென்றுவிட்டோம்; ஏற்கெனவே, சாரதாச் சட்டம், ஆலயப் பிரவேசச் சட்டம், பெண்களுக்கு சொத்துரிமை வழங்கும் சட்டம் முதலிய சட்டங்களை . . .

MR. SPEAKER: நீங்கள் என்ன கேள்வி போடுகிறீர்கள்? குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்துடன் ஆலயத்தைச் சேர்க்கிறீர்களே: பேசாமல் உட்காருங்கள். (சிரிப்பு.)



14th February 1959]

SRI K. R. VISWANATHAN: குடும்பக் கட்டுப்பாடு சம்பந்தப்பட்ட விஷயங்களை அறிந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் யாரும் சைனாவிற்கு அனுப்பப்படவில்லை என்று கனம் அமைச்சர் சொன்னார். இது சம்பந்தமாக உத்தியோகப் பற்றற்றவர்கள் யாராவது அங்கு அனுப்பப்பட்டிருக்கிறார்களா? அப்படியானால் அவர்கள் என்ன காரியம் செய்திருக்கிறார்கள்?

THE HON. SRI M. A. MANICKAVELU: ஆமாம். ஜனத்தொகையை எவ்வாறு கட்டுப்பட்டுத்துவது என்பது பற்றி அறிந்து வருவதற்காக டாக்டர் சந்திரசேகர் என்பவர் சைனாவிற்கு அனுப்பப்பட்டார்.

SRI S. B. ADITYAN: ஒரு நாட்டின் உண்மையான செல்வம் மக்கட் செல்வம் அல்லவா? அப்படி இருக்க, அதைக் குறைப்பது சரி ஆகுமா? (சிரிப்பு.)

THE HON. SRI M. A. MANICKAVELU: செல்வம் நல்ல செல்வமாக, நன்றாக, இருந்தால்தான் அது உபயோகப்படும். அது துருப் பிடித்ததாகவும் பாசி பிடித்ததாகவும் இருந்தால் அதனால் பிரயோஜனம் இல்லை. (சிரிப்பு.)

SRI A. A. RASHEED: What was the birth rate in our State in 1957 and what was the birth rate in 1958? Has there been any appreciable reduction in birth rate?

THE HON. SRI M. A. MANICKAVELU: I gave the figure the other day about birth rate. It is more or less steady. But there is a tendency to fall. The results will be known in a few months. I think there will be a fall.

SRI K. ANBAZHAGAN: அதிகமான குழந்தைகள் பிறக்கும் சூழ்நிலை சேரிகளிலேயே மிகுதியாக இருப்பதால், சேரி மக்களுக்கு குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைப் பற்றித் தெளிவாக எடுத்துச் சொல்லும் முறையில் அவர்களிடையே ஏதாவது பிரசாரம் செய்யப்படுகிறதா? நர்ஸ்கள் போன்று பயிற்சி பெற்றவர்கள் சேரிகளில் குடிசை குடிசையாகச் சென்று அங்குள்ள மக்களிடம் இந்தத் திட்டத்தைப் பற்றி விளக்க ஏதேனும் திட்டம் உண்டா?

THE HON. SRI M. A. MANICKAVELU: அம்மாதிரிச் செய்வதற்கு சென்னை நகரில் திட்டம் இருக்கிறது. சேரிகளில் ஏன் அதிகமான பிள்ளைகள் இருக்கின்றன என்றால், சாதாரணமாக, அரிசி உணவு சாப்பிடுபவர்களுக்கு அதிகப் பிள்ளைகள் பிறக்கின்றன என்றும், திடகாத்திரமாக இருக்கும் தொழிலாளர்களுக்கு அதிகக் குழந்தைகள் பிறக்கின்றன என்றும் சொல்லப்படுகிறது.

SRI S. RAMALINGA PADAYACHI: குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில், வயிற்றை அறுத்து ரண சிகிச்சை செய்வது நகரங்களில் பொருத்தமாக இருக்கிறது. இந்த முறையை கிராம மக்கள் அவ்வளவு விரும்பமாட்டார்கள். ஆகையால், குழந்தை பிறப்பதைத் தடுப்பதை மருந்து மூலம் செய்ய அரசாங்கம் முயற்சிக்குமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: ரண சிகிச்சை வழியை கிராம மக்கள் அதிகமாக வரவேற்கவில்லை என்று கனம் அங்கத்தினர் சொன்னார். அதை நான் ஒப்புக்கொள்ளவில்லை. பெரும்பாலும், கிராமத்தில் இருப்பவர்கள்தான் ஆஸ்பத்திரிகளுக்கு வந்து இந்த சிகிச்சை வேண்டும் என்று சொல்கிறார்கள்.

*Special buses for ladies*

* 338 Q.—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to run "Ladies Special" buses within the City limits during peak hours?

THE HON. SRI R. VENKATARAMAN: No, Sir.

SRI K. SATTANATHA KARAYALAR: ஸிட்டியில் அதிகமாக கூட்டம் இருக்கக் கூடிய நேரத்தில் பெண்களுக்காக தனி பஸ்கள் அனுப்பினால் மாணவிகளும் அதேபோல் உத்தியோகத்துறையிலும் பெண்களும் ஏறி வர சௌகர்யமாகயிருக்கும். ஆகவே அதுபற்றி கவனிக்கப்படுமா? பஸ்களில் ஏறும்போது முதல் இடம் பெண்களுக்கு கொடுக்கப்பட வேண்டுமென்று உத்தரவு இடப்படுமா?

THE HON. SRI R. VENKATARAMAN: பெண்களுக்கு 20 பர் செண்ட் ஸீட்ஸ் ரிசர்வ் செய்யப்பட்டிருக்கிறது. தனியாக peak-hour-ல் பஸ் விடுவது கஷ்டமாகயிருக்கும்.

*Sending farmers of the State to settle in Brazil*

* 339 Q.—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon the Minister for Home be pleased to state whether there is any proposal to send farmers from this State to settle in Brazil?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No, Sir.

SRI K. SATTANATHA KARAYALAR: ப்ரேஸிலிக்கு விவசாயிகளை அனுப்பலாம் என்று மத்திய அரசாங்கம் ஏதாவது ஒரு திட்டத்தை நமது அரசாங்கத்திற்கு அனுப்பியுள்ளதா? அதன்படி இதைப்பற்றி யோசித்தார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அத்தகைய தகவல் என்னிடம் ஒன்றுமில்லை.

SRI K. R. NALLASIVAM: துங்கபத்ரா, பக்ராநங்கல் போன்ற பிரதேசங்களில் 40 பர் செண்ட் தண்ணீர் விட்டும் கூட பாசனத்திற்கு வரவில்லை. ஆகவே இங்குள்ள விவசாயிகளை அங்கு குடியேற்றுவதற்கு அந்த மாகாண சர்க்காரோடு நமது சர்க்கார் தொடர்பு வைத்துக் கொண்டால் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இந்தக் கேள்வி, ப்ரேஸில் நாட்டுக்கு இங்குள்ள விவசாயிகளை அனுப்புவது பற்றியதாகும். இங்குள்ள விவசாயிகளை வேறு எந்த நாட்டிலும் குடியேற்றி வைக்கும் உத்தேசம் இல்லை.

SRI K. SATTANATHA KARAYALAR: ப்ரேஸில் நாட்டிற்கு வெளி மாகாணங்களில் இருந்து விவசாயிகளை அனுப்ப சில திட்டங்கள் வெளி வந்துள்ளது. அதேபோல் நம் மாகாணத்திலுள்ள விவசாயிகளும் அங்கு போக தயாராயிருந்தால் அப்படி அவர்களை அங்கு அனுப்பி வைக்க சர்க்கார் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்குமா? மத்திய அரசாங்கத்திடம் அப்படியொரு திட்டமிருந்தால், அதுபற்றி பரிசீலிக்கப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அதுபற்றிய தகவல் என்னிடம் இல்லை. சென்னை ராஜ்யத்திலுள்ள எந்த விவசாயியும் இந்த அரசாங்கத்தை அணுகி ப்ரேஸில் போக வசதி கோரவில்லை.



*Discovery of cannon balls at Sarabendrarajapatnam*

* 340 Q.—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether it is a fact that cannon balls of various sizes were discovered at Sarabendrarajapatnam in Pattukkottai taluk, Tanjore district;

(b) whether it is a fact that a large number of these cannon balls are being sold for steel in the market; and

(c) if so, what steps are taken to preserve these historical relics?

THE HON. SRI C. SUBRAMANIAM: (a) Yes, Sir.

(b) & (c) It is likely that the finder of the cannon balls has disposed of some of them. But it is estimated that the number of the balls so disposed of will not exceed 100. The Police Department is still investigating. The remainder, numbering about 2,710 are now under the custody of the local village officers, pending their removal to the Taluk office, Pattukkottai.

SRI S. LAZAR: How is the existence of these cannon balls accounted for?

THE HON. SRI C. SUBRAMANIAM: An investigation will have to be made and it is not possible to say how they came to be buried there.

*Drinking-water well*

* 341 Q.—SRI K. R. VISWANATHAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether the District Collector, Tiruchirappalli, has received any petition, dated 11th November 1958, from the President, Panchayat, Ponparappi, Udaiyarpalayam taluk, Tiruchirappalli district, regarding the construction of a drinking-water well with over-head tanks at Ponparappi; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU: (a) The Revenue Divisional Officer, Ariyalur, received the petition.

(b) The work is in progress.

*Chit funds*

* 342 Q.—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal to bring in legislation to control and regulate chit funds;

(b) if so, what its salient features are?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) Yes, Sir.

(b) The draft of a Bill has been referred to the Government of India for their concurrence. It is, therefore, not possible to specify with finality the salient features of the Bill at this stage.

[14th February 1959

Sri K. SATTANATHA KARAYALAR: இந்த சிட்டை கட்டுப் படுத்தும் முறையில் முதலில் சிட் நடத்துபவர்கள் ஓரளவு செக்யூரிட்டி பணம் வைக்க தகுதியுள்ளவர்களாகவாவது இருக்க வேண்டுமென்று சட்டத்தில் உட்படுத்தப் படுமா?

The Hon. Sri R. VENKATARAMAN: அந்த ஆலோசனை கவனிக்கப்படும்.

Sri A. A. RASHEED: Is it a fact that there are a large number of bogus chit funds in our State and if so, how many?

The Hon. Sri R. VENKATARAMAN: I do not know the number of bogus chit funds but really it is only to control them that we are bringing forward this legislation.

*Institute of Veterinary Preventive Medicine Workers' Union, Ranipet*

* 343 Q.—Sri S. B. ADITYAN: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the Institute of Veterinary Preventive Medicine Workers' Union (Registered No. 2359), Ranipet, has been recognized by the Government; and

(b) if not, the reasons therefor?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (a) The Institute of Veterinary Preventive Medicine Workers' Union has not been recognized by Government.

(b) The Institute of Veterinary Preventive Medicine is a technical department and the grievances of the mazdoors in the Institute of Veterinary Preventive Medicine (who are Government servants paid from contingencies) are being looked into as and when representations are received. The Government have therefore considered that there is no need for the recognition of any Workers' Union for such a purpose.

Sri S. B. ADITYAN: Even if the Union has not been recognized, will the Government please consider the representations which are made by the Union?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: As I have already stated, the Government have been looking into the various representations as and when they are received.

*Leprosy*

* 344 Q.—Sri S. LAZAR: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether the Government are aware of the increase of leprosy cases in Keezharasoor and Amarasoor villages in Pullambadi firka in Lalgudi taluk, Tiruchirappalli district;

(b) the reasons for the increase; and

(c) the steps taken to arrest the spread or increase of leprosy cases?



14th February 1959]

The Hon. Sri M. A. MANICKAVELU: (a) Cases of leprosy have been detected during a survey conducted by the Public Health Department.

(b) No special reasons could be adduced.

(c) A leprosy clinic is being run at Pullambadi and the Medical Officer in charge of the local fund dispensary at Arumbavoor is attending the clinic once a week for the treatment of leprosy cases. The persons have been advised to take early treatment and avoid close contact especially with children and youngsters. Educative propaganda on leprosy and its prevention is also done.

Sri K. B. S. MANI: இந்த குஷ்டரோகிகள், பொதுவாகவே தஞ்சை ஜில்லாவில் அதிகமாக தர்ம ஸ்தாபனங்கள் இருப்பதால், நடமாடுவது அரசாங்கத்திற்கு தெரியுமா? அப்படியிருந்தால் தஞ்சை ஜில்லாவில் தங்குவதற்காகவுள்ள சத்திரம் சாவடிகளில் அவர்கள் தங்காமல் தனிப்பட்ட இடங்கள் அமைக்க அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்குமா?

The Hon. Sri M. A. MANICKAVELU: தஞ்சை ஜில்லாவில் அதிகமாக இருக்கிறார்கள் என்று சொல்வது சரியல்ல. தென் ஆற்காடு ஜில்லாவில்தான் அதிகமாகயிருக்கிறது. ஆங்காங்கு க்ளினிக்குகள் ஏற்படுத்தப்பட்டு சிகிச்சைகள் செய்யப்பட்டு வருகின்றன. பொதுயிடங்களில் அவர்கள் போய் மற்றவர்களுக்கு அந்த நோய் தொத்திவிடாமல் இருக்க ஓரளவு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

*Construction of houses at Cauvery Nagar Mills area*

* 345 Q.—Sri S. LAZAR (on behalf of Sri V. Arunachala Thevar): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) how many houses are being constructed and at what cost, at Cauvery Nagar Mills area in Pudukkottai;

(b) the aid received from the Central and State Government; and

(c) whether there is any contribution from the management of Cauvery Mills, and, if so, how much?

The Hon. Sri R. VENKATARAMAN: (a) Four hundred and six (406) houses are being constructed at a cost of Rs. 13·15 lakhs.

(b) a loan of 50 per cent and a subsidy of 50 per cent of the cost of the project will be given by the Government of India; and

(c) the land required for the Project measuring 20 acres has been donated by the mills.

Sri S. LAZAR: இந்த வீடுகள் எந்த தொழிலாளர்களுக்கு? அந்த வீட்டு வாடகை நிர்ணயிக்கும் உரிமை யாருக்குண்டு?

The Hon. Sri R. VENKATARAMAN: இது அந்தப் பகுதியில் இருக்கக் கூடிய தொழிலாளர்களுக்கு, முக்கியமாக காவேரி மில்லில் வேலை செய்பவர்களுக்கு இந்த வீடுகள் கொடுக்கப்படும். வாடகை 10 ரூபாய் என்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. இது சர்க்காரைச் சேர்ந்தது.

*Public Prosecutors*

* 346 *Q.*—Sri S. B. ADITYAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government had a proposal to appoint Public Prosecutors from panels recommended by District Bar Associations;

(*b*) whether the Government experimented this proposal in any district;

(*c*) if so, with what result; and

(*d*) whether the Government have still a proposal to make selection of Public Prosecutors as said above?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) No, Sir.

(*c*) Does not arise.

(*d*) No, Sir.

*Cancer Clinics*

*347 *Q.*—Sri A. VEDARATHNAM : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) இம் மாநிலத்தில் புற்றுநோய் மருத்துவ நிலையங்கள் எங்கெங்கே இருக்கின்றன ?

(ஆ) அம் மருத்துவ நிலையங்கள் ஏதேனும் மேலும் நிறுவும் உத்தேசமுண்டா ?

(இ) அப்படியானால், எங்கே ?

(ஈ) எல்லா மருத்துவ நிலையங்களிலும் புற்று நோய் சிகிச்சைக்கு வசதி செய்ய திட்டமுண்டா ?

(உ) அப்படியானால், அதன் விவரம் என்ன ?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) Facilities for the treatment of cancer cases are available in the following medical institutions—

Government institutions.

1. Barnard Institute of Radiology, Government General Hospital, Madras.
2. Government Hospital for Women and Children, Egmore, Madras.
3. Government Ophthalmic Hospital, Madras.
4. Government Erskine Hospital, Madurai.
5. Government Raja Mirasdar District Headquarters Hospital, Tanjore.

Private.

1. Cancer Institute, Madras.
2. Christian Medical College and Hospital, Vellore.
3. Scudder Memorial Hospital, Ranipet.

(*b*) & (*c*) There is a proposal to provide facilities for the treatment of cancer cases in the Government Stanley Hospital, Madras.

(*d*) No.

(*e*) Does not arise.





Sri A. VEDARATHNAM : புற்று நோய்க்கு சரியான சிகிச்சை எது என்று தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறது ? அந்த சிகிச்சை மற்ற இதர ஆஸ்பத்திரிகளிலும் கிடைக்கும்படிச் செய்வதற்கு அரசாங்கம் ஏதாவது முயற்சி எடுத்துக் கொள்ளுமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : இந்த "ரேடியம் தெரபி" தான் இப்பொழுது அமுலில் இருக்கிறது. அதுவும் இப்பொழுது புதுமுறையில், "கோபால்ட் பீம்" என்று புதிதாக விஞ்ஞான முறையில் கண்டு பிடிக்கப் பட்டிருக்கிறது. அது பிரயோஜனகரமாக இருக்கிறது என்று தெரிகிறது. அடையார் கான்ஸர் இன்ஸ்ட்டிட்யூட்டில் இருக்கிறது. கானடாவிலிருந்து உதவி வரப்போகிறது. ஜெனரல் ஆஸ்பத்திரியில் இன்னும் அதிகமாக இதை விஸ்தரிக்க திட்டமிருக்கிறது. மற்ற ஜில்லாக்களில் இதைச் செய்வது அவ்வளவு சுலபமல்ல. சிறிய அளவில் "ரேடியம் தெரபி" மாத்திரம் ஆங்காங்கு செய்யலாம்.

Sri S. RAMALINGA PADAYACHI : ஸார், இந்தப் புற்றுநோய் அதிகமாக பீடி, சிகரெட் இவைகள் குடிப்பதினால்தான் வருகிறது என்று மருத்துவர்கள் சொல்லுகிறார்களே, அது உண்மையா ? அப்படியானால் அதை தடுப்பதற்கு அரசாங்கம என்ன நடவடிக்கை எடுக்கும் ?

The Hon. Sri M. A. MANICKAVELU : இதைப்பற்றி ஒன்றுபட்ட அபிப்பிராயம் இல்லை. இருந்தாலும் பீடி, சிகரெட் குடிக்காமல் இருப்பது நல்லது.

Sri T. T. DANIEL : In view of the fact that the treatment for cancer is now very costly, will the Government consider the desirability of finding some ways so that the treatment may be made available for all poor cancer patients?

The Hon. Sri M. A. MANICKAVELU : இன்னும் ஏதாவது விஞ்ஞான முறைகளில் வழிகளை கண்டுபிடித்தால் குறைந்த செலவில் இந்த சிகிச்சையை செய்து கொள்ள முடியும். ஆனால் இதுவரையிலும் குறைந்த செலவில் வழிகளை கண்டு பிடிக்கவில்லை.

Sri A. GOVINDASAMY : ஸார், இந்த புற்றுநோய் அறவே வராமல் தடுக்கப்படுகிறதா ? அல்லது மேலும் பரவாமல் இருப்பதற்காக சிகிச்சை செய்யப்படுகிறதா?

The Hon. Sri M. A. MANICKAVELU : ஆரம்ப கட்டத்திலேயே சிகிச்சை செய்து வருவார்களேயானால் அவர்களுக்கு நிவர்த்தி செய்ய முடியும் என்று நம்புகிறேன்.

*Fair Price Shops*

* 348 *Q.*—Sri M. KALYANASUNDARAM :
Sri K. SATTANATHA KARAYALAR : } Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of Fair Price Shops functioning in the State as on the 31st December 1958;

(*b*) the price at which rice is sold at these shops; and

(*c*) the total quantity of rice sold during the months of September, October, November and December 1958 (month by month)?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) 469.

(b) The sale of rice through Fair Price Shops has been stopped with effect from the 1st March 1958. Only wheat is being continued to be sold through these shops.

(c) Does not arise.

SRI K. SATTANATHA KARAYALAR : ஸார், சமீப காலத்தில் அனேக மலிவு கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. அந்த கடைகளுக்கு அரிசி எங்கே இருந்து கிடைத்தது ? அரசாங்கத்திலிருந்து அரிசி கொடுக்கப்பட்டதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சமீபத்தில் திறக்கப்பட்ட மலிவு கடைகள் அரசாங்கத்தால் திறக்கப்பட்டவை அல்ல. தனிப்பட்ட வியாபாரிகள் முன்வந்து தாங்களாகவே குறைந்த விலைக்கு விற்பதற்கு திறக்கப்பட்ட கடைகளாகும்.

SRI N. K. PALANISAMI : இம்மாதிரி அதிகமான கடைகள் திறந்தால் அரிசியின் விலை குறையும் என்று சர்க்கார் கருதுகின்றதா ? அவ்விதமென்றால் சர்க்கார் ஏன் அதிகமான கடைகளை திறக்கக்கூடாது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் விசாரித்த வரையில் இப்போது விலைவாசிகள் எல்லாம் குறைந்து கொண்டுதான் வருகின்றன. நியாய விலை கடைகள் திறப்பதினால் மாத்திரம் விலைவாசி குறைந்துவிடும் என்று எதிர்பார்ப்பதற்கு இல்லை. அதிகமான கடைகள் திறந்தால் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு வசதியாக இருக்கும்.

SRI S. LAZAR : ஸார், இவ்விதம் தனிப்பட்ட வியாபாரிகள் முன் வந்து நியாயவிலைகடைகள் திறக்க முன்வந்து மக்களுக்கு அதிகமான வசதியை ஏற்படுத்திக்கொடுப்பதால் தனிப்பட்ட வியாபாரிகளை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்போது அரசாங்கமே அதிகப்பட்ச விலையை நிர்ணயம் செய்து அரசாங்கமே தான்யங்களை வாங்குவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறது. இந்த நிலையில் நியாயவிலை கடைகளை அதிகமாக திறக்கவேண்டும் என்று தனிப்பட்ட வியாபாரிகளை அரசாங்கம் வற்புறுத்த வேண்டிய தேவையில்லை என்று கருதுகின்றது.

SRI S. PAKKIRISAMI PILLAI : இந்த மாதிரி நியாயவிலை கடைகளை திறந்து அதன் மூலம் குறைந்த விலையை நிர்ணயித்து, அரிசி அந்த விலைக்குக் கிடைக்காவிட்டாலும் அதிலிருந்து தொழிலாளர்களுடைய பஞ்சப்படி விகிதத்தைக் குறைப்பதற்கு அரசாங்கத்திற்கு ஏதாவது எண்ணம் இருக்கிறது என்று தொழிலாளர்கள் கருதுகிறார்களே, இது உண்மையா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : விலைவாசி குறைந்தால் நிச்சயமாக வாழ்க்கைச் செலவு குறையும். அதிலிருந்து பஞ்சப்படியும் குறையும். இதனால் தொழிலாளர்கள் வருத்தப்பட மாட்டார்கள், தொழிலாளர்கள் இதை வரவேற்கத்தான் செய்வார்கள்.

SRI K. SATTANATHA KARAYALAR : தனிப்பட்ட வியாபாரிகள் இவ்விதம் மலிவு கடைகளை திறக்க முன்வந்திருப்பதின் நோக்கம் அரசாங்கம் [illegible] தான்யங்களை கொள்முதல் செய்கின்ற சமயத்தில் அவர்களுக்கு [illegible] உரிமை போன்ற ஏதாவது சலுகை கிடைக்கும் என்ற எண்ணத்தின் பேரில்தான் இவ்விதம் தனிப்பட்ட முறையில் கடைகளை [illegible]



முன் வந்தார்கள் என்பது தெரியுமா ? அவ்விதம் கிடைக்காது என்ற எண்ணத்தில் இப்போது அதிமான வியாபாரிகள் கடைகளை மூடிவிட்டார்கள் என்பதும் அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவ்வாறு சலுகை கிடைக்கும் என்று அவர்கள் எதிர்பார்ப்பதற்கில்லை. அவர்கள் அவ்வாறு முயற்சி எடுத்ததை சர்க்கார் பாராட்டுகின்றது. அவர்கள் அதற்காக ஏதாவது சலுகை கேட்பார்களானால் அதுவும் பரிசீலக்கப்படும்.

### *Hospital guide for the Government General Hospital, Madras*

MR. SPEAKER : The hon. Member Sri Jagannathan is not in his seat. The question and answer will be printed in the official proceedings.

* 349 Q.—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether any Hospital Guide for the Government General Hospital, Madras, has been printed; and

(b) if so, the number of copies distributed so far?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) Yes. Sir.

(b) 815.

### *Medical Colleges*

* 350 Q.—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) the number of students admitted in the Medical Colleges under the categories, (i) Scheduled Castes and Tribes; (ii) Most Backward Classes; (iii) Backward Classes and (iv) other classes, during the years 1955–56, 1956–57 and 1957–58; and

(b) the number of Christians amongst them?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) A statement* is placed on the table of the House.

(b) The information is not available.

SRI K. VINAYAKAM : Sir, whereas candidates belonging to Most Backward Classes are clubbed with Backward Classes for matters of admission into these professional colleges and whereas they lose their chances, will Government consider the possibility of setting apart a separate percentage for students belonging to the Most Backward Classes in matters of admission?

THE HON. SRI M. A. MANICKAVELU : I can inform the hon. Member that the classification of Most Backward Classes has not been recognized for purposes of admission in colleges. There seems to be some legal difficulties and unless that is set right, it is not feasible.

* Printed as Appendix I on page 411 infra.

**Sri K. B. S. MANI :** ஸார், இந்த ஷெட்யூலில் எம்.பி.பி.எஸ்.-க்கு 41-ம் ப்ரீ-மெடிக்கல் கோர்ஸ்-க்கு 22-ம் ஸ்தானங்கள் கொடுக்கப்பட்டிருப்பதாக கூறப்பட்டிருக்கிறது. இதில் இவ்வளவுதான் அப்ளிகேஷன் வந்ததா? அல்லது இதற்கும் அதிகமாக அபளிகேஷன் வந்ததா? அதில் எவ்வளவு அப்ளிகேஷன் தள்ளப்பட்டன? அவ்விதம் தள்ளப்பட்டிருந்தால் அவர்களை இனிமேல் எடுத்துக் கொள்வதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

**The Hon. Sri M. A. MANICKAVELU :** என் எனக்குத் தெரிந்தவரையில் ஷெட்யூல் காஸ்ட் வகுப்பினரிடமிருந்து வந்த அப்ளிகேஷன் எல்லாம் அனேகமாக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. சில மிகுதியான இடங்களை மற்றவர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கலாம். எல்லோரையும் எடுத்துக்கொள்வதற்குத்தான் சர்க்கார் முயற்சி செய்து வருகிறது.

**Sri S. NAGARAJA MONIGAR :** இப்போது பின்தங்கிய வகுப்பினர்களுக்கும் ஏழைகளுக்கும் சர்க்கார் அதிகமான சலுகைகளை கொடுத்து டாக்டர் படிப்பு படிக்க வைத்தும், அவர்கள் பட்டம் பெற்ற பிறகு அரசாங்கத்திற்கு சேவை செய்ய வேண்டும் என்கின்ற எண்ணமில்லாமல் வேறு இடங்களுக்கு போய்விடுகிற நிலைமை ஏற்பட்டு விடுவதால் டாக்டர்கள் இல்லாமல் பல ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. ஆகவே இவர்கள் நமது சர்க்காரிலே வேலை செய்வதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா?

**The Hon. Sri M. A. MANICKAVELU :** கனம் அங்கத்தினர் அவர்கள் இன்று காலையிலுள்ள பத்திரிகையைப் பார்ப்பார்களானால் நமது பிரதம மந்திரி அவர்கள் "வைத்திய சிகிச்சைக்கு பயிற்சி பெற்றவர்கள் கிராமாந்திரங்களில் வேலை செய்யவேண்டும் என்கின்ற நிர்ப்பந்தம் ஏற்படுத்துவது நல்லது" என்று சொல்லியிருப்பதைப் பார்க்கலாம். இதை நமது அரசாங்கமும் ஆராயும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

### *Indian Labour Conference, Nainital*

*353 Q.—**Sri K. SATTANATHA KARAYALAR :** Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether this Government was represented at the 16th Indian Labour Conference held at Nainital, in May 1958; and

(b) if so, the decisions arrived at in that conference?

**The Hon. Sri R. VENKATARAMAN :** (a) Yes, Sir.

(b) A statement* containing the decisions arrived at the conference is placed on the table of the House.

**Sri K. SATTANATHA KARAYALAR :** ஸார், இந்த மகாநாட்டு தீர்மானங்களை பரிசீலித்து நமது மாகாணத்திற்கு எவை எவை கவனிக்கப்படும் என்பதை தெரிவிக்கும்படி வேண்டுகிறேன்.

**The Hon. Sri R. VENKATARAMAN :** கனம் அங்கத்தினர் அவர்கள் இந்த நடவடிக்கைகளை நன்றாக படித்துப்பார்த்திருப்பார்கள் என்று நம்புகிறேன். இது பொதுவாக முதலாளிகளும் தொழிலாளிகளும் எந்த முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு செய்யப்பட்ட சிபாரிசுகள். இவைகள் எல்லாம் தீர்மானம் என்று சொல்லுவதற்கில்லை. இதன் அடிப்படையில் சர்க்கார் தங்களுடைய தொழிலாளர் கொள்கையை வகுத்துக்கொண்டிருக்கின்றது.

*Printed as Appendix III on pages [illegible] infra.







### *Tanjore Headquarters Hospital*

*354 Q.—**Sri M. D. THIAGARAJA PILLAI :** கனம் செவிலிய அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லா தலைநகர் ஆஸ்பத்திரியில் எவ்வளவு படுக்கைகள் உள்ளன?

(ஆ) அதற்கு சென்ற 3 வருஷங்களில் எவ்வளவு செலவு செய்யப்பட்டு வருகிறது?

**The Hon. Sri M. A. MANICKAVELU :** (a) 636, Sir.

(b) Rs. 8,73,663 in 1955–56, Rs. 9,80,153 in 1956–57 and Rs. 10,74,708 in 1957–58.

**Sri A. VEDARATHNAM :** இந்த மருத்துவ நிலையத்தை இப்போது இருக்கும் இடத்திலிருந்து வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா? எந்த இடத்திற்கு மாற்றப்படும்?

**The Hon. Sri M. A. MANICKAVELU :** அதை அடியோடு மாற்றுவதற்கு உத்தேசமில்லை. சில செக்ஷன்கள் அங்கேயேதான் இருக்கும். புதிதாக ஏற்படுத்தப்படும் செக்ஷன்களை காலேஜ் கட்டுகிற இடத்தில் ஏற்படுத்தும்.

### *Lignite at Vilambur*

*355 Q.—**Sri A. VEDARATHNAM :** கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சியை அடுத்த விளாம்பூர் கிராமத்தில் கறுப்பு நிலக்கரி கிடைப்பதை அரசாங்கம் பரிசீலித்ததா?

(ஆ) அதன் விபரம் என்ன?

(இ) இது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

**The Hon. Sri R. VENKATARAMAN :** (a) There is no information available regarding the occurrence of coal in the Vilambur village, Kallakurichi taluk, South Arcot district, as no systematic mapping of the area has been carried out so far. But the general geology of the area does not show any possibility of coal deposits occurring there.

(b) & (c) Do not arise.

**Sri A. VEDARATHNAM :** இந்த இடத்தில் நிலக்கரி இருக்கிறதா என்று பரிசீலனை செய்யப்பட்டதா? யார் பரிசீலனை செய்தார்கள்? பரிசீலனை செய்தார்கள் என்றால் அதனுடைய ரிஸல்ட் என்ன?

**The Hon. Sri R. VENKATARAMAN :** சாதாரணமாக ஜியாலஜிக்கல் சர்வே செய்வதற்கு முன்னால் சில அறிகுறிகள் தெரியும். அந்த மாதிரியான அறிகுறிகள் ஒன்றும் தெரிவதற்கு முன்னால் பரிசீலனை செய்ய முடியாது. அவ்விதம் பரிசீலனை செய்தால் அது வீணாகத்தான் போய்விடும்.

**Sri S. NAGARAJA MONIGAR :** ஸார், இந்தமாதிரியான செல்வம் நாட்டுக்கு மிக தேவையானது என்பது தெரிந்திருந்தும், மதிப்புமிக்க வேதாரத்தினம் பிள்ளை அவர்கள் இதைப்பற்றி சர்க்காருக்கு முன்பே தெரிவித்திருக்கிறார்களா? அதன் பேரில் என்ன கவனம் செலுத்தப்பட்டது?

**Mr. SPEAKER :** It is only a suggestion. The Hon. Minister need not answer it.

[14th February 1959

10 a.m. SRI M. P. SUBRAMANIAM : ஸார், அமைச்சர் அவர்கள் கூறியது போல அந்தப் பகுதியிலே நிலக்கரி போன்ற பொருள்கள் கிணறுகளிலிருந்து வெட்டியெடுக்கப்படுவதாக மாவட்டக் கலெக்டர் அவர்களுக்கும் மற்றும் தாசில்தார் போன்ற அதிகாரிகளுக்கும் கடிதம் எழுதியிருப்பதாக அங்கத்தினர் அவர்கள் காண்பித்தார்கள். கள்ளக்குறிச்சி, ஆத்தூர் போன்ற பகுதிகளில் வெட்டியெடுக்கப்படுவது பழுப்பு நிலக்கரி அளவுக்காவது இருக்கிறதா என்று பரிசீலிக்க முயற்சி செய்வார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : The Government have to act on expert opinion and not on amateur suggestions.

MR. SPEAKER : இன்னும் நான்கு கேள்விகள் இருக்கின்றன. இன்னும் 5 நிமிஷ நேரம் எடுத்துக் கொண்டு முடித்து விடலாம்.

*Madurai Melakkal drinking Water Supply Scheme*

* 357 *Q.*—SRIMATHI P. K. R. LAKSHMIKANTHAM (on behalf of Sri V. Sankaran) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) when the (Madurai) Melakkal Drinking Water Supply Scheme is expected to be completed; and

(*b*) how much of the work has been carried out till now?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) The first and second stages of the Madurai Melakkal Water Supply Improvements Scheme are expected to be completed by the end of 1960. The third and fourth stages of the scheme may be completed by the end of 1966.

(*b*) About 70 per cent of the work on the first stage has been completed.

SRIMATHI P. K. R. LAKSHMIKANTHAM : ஸார், இந்த மேலக்கால் திட்டம் முடிவடைந்தால் தான் மதுரையில் குடி தண்ணீர் கஷ்டம் தீரும் என்று நினைப்பதால், இந்தத் திட்டம் எவ்வளவு சீக்கிரத்தில் முடிவடையும் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : நான் சொன்னேன் ஒவ்வொரு பகுதியாக, இரண்டு பகுதிகள் 1960–ம் ஆண்டு முடிவிற்குள் முடிவடைந்து விடும். மற்ற இரண்டு பகுதிகள் 1966–ல் தான் முடிவடையும். அதற்கு ஸாங்ஷன் எல்லாம் ஆகவேண்டும். இரண்டு பகுதிகளுக்கு ஸாங்ஷன் ஆகிவிட்டது; 130, 140 லட்சம் ஆகிறது.

SRI S. PAKKIRISAMI PILLAI : 358-வது கேள்வியை இன்றைக்கு இருமையன்று எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

MR. SPEAKER : எனக்கு ஆட்சேபணை இல்லை. 358-வது கேள்வி திங்கட்கிழமையன்று எடுத்துக் கொள்ளப்படும்.

*Slum Clearance Scheme*

* 359 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri M. Kalyanasundaram) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the total amount allotted during the Second Plan period for schemes of slum clearance in urban areas other than Madras City; and

14th February 1959]

(*b*) the number of schemes taken up already and the names of the cities to be benefited?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Nil, Sir.

(*b*) Does not arise.

*Fertilizer factory at Katpadi*

* 360 *Q.*—SRI S. M. ANNAMALAI (on behalf of Sri V. K. Kothandaraman) : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) வடஆற்காடு ஜில்லாவில் காட்பாடியில் நடந்து கொண்டிருந்த ஒரு உரத் தொழிற்சாலை இப்பொழுது மூடப்பட்டிருப்பது தெரியுமா ?

(ஆ) அதற்கு காரணம் என்ன ?

(இ) அதை மீண்டும் திறந்து நடத்துவதற்கான முயற்சி சர்க்கார் எடுத்துக்கொண்டார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) *to* (*c*) The hon. Member is apparently referring to the "Southern India Fertilizers" situated in Vallimalai Road, Katpadi. The factory was closed down from 31st December 1957 due to financial difficulties. It has since been revived by the previous manager and is functioning with effect from 28th January 1959 with a complement of ten workers.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—ANNOUNCEMENTS *RE* BILLS PASSED BY THE COUNCIL.

MR. SPEAKER : I have to announce that the Tiruchirappalli Kaiaeruvaram and Mattuvaram Bill, 1958 (L.A. Bill No. 25 of 1958) has been passed by the Council on 12th February 1959 without any amendment and the Madras Open Places (Prevention of Disfigurement) Bill, 1959 (L.C. Bill No. 8 of 1958) passed by the Council on 13th February 1959 has been received for the concurrence of the Assembly. 10 a.m.

## III.—GOVERNMENT BILL.

THE MADRAS GENERAL SALES TAX BILL, 1958 (L.A. BILL NO. 6 OF 1958)—*cont.*

MR. SPEAKER : We shall now proceed with the consideration of the Madras General Sales Tax Bill, 1958. Yesterday we have finished all the clauses and we are left with the consideration of the Schedules.

The motion is—

"That the First Schedule do stand part of the Bill."

SRI K. SATTANATHA KARAYALAR : Sir, I move—

In item 15, *for* the figure '½', *substitute* the figure '1'.

The amendments were duly seconded.

[14th February 1959

SRI A. GOVINDASAMY : Sir, I move—

" *Omit* item 20."

The amendment was duly seconded.

SRI N. K. PALANISAMI : Sir, I move—

" *For* the existing entries in columns (1), (2), (3) and (4), *substitute* the following :—

| *Serial number.* (1) | *Description of the goods.* (2) | *Point of levy.* (3) | *Rate of tax (per cent)* (4) |
|---|---|---|---|
| 21 | (No change) | (No change) | 1 |
| 22 | " | " | 1 |
| 23 | " | " | 7 |
| 25 | " | " | 7 |
| 27 | All kinds of wood and timber and similar articles | " | 1 |
| 30 | (No change) | " | 5 |
| 31 | " | " | 7 |
| 35 | " | " | 3 |
| 52 | " | " | 10 |
| 53 | " | " | 3 |

The amendment was duly seconded.

SRI S. M. ANNAMALAI : Sir, I move—

" *Omit* items 21 and 36 and re-number the other items."

The amendment was duly seconded.

SRI A. GOVINDASAMY : Sir, I move—

" *Omit* items 21 and 22."

The amendment was duly seconded.

SRI T. S. RAMASWAMY PILLAI : Sir, I move—

" In item 22, column (4), *for* the figure ' 3 ', *substitute* the figure ' ½ '."

The amendment was duly seconded.

SRI N. K. PALANISAMI : Sir, I move—

" *Omit* item 22."

The amendment was duly seconded.

SRI M. S. SELVARAJAN : Sir, I move—

" In item 27, column (2), *omit* the words and brackets ' (excluding Firewood and Charcoal) '."

The amendment was duly seconded.



14th February 1959]

SRI N. K. PALANISAMI : Sir, I move—

" In item 27, column (4) *for* the figure ' 3 ', *substitute* the figure ' 1 '."

The amendment was duly seconded.

SRI T. S. RAMASWAMY PILLAI : Sir, I move—

" In item 36, column (4) *for* the figure ' 5 ', *substitute* the figure ' 1 '."

The amendment was duly seconded.

SRI K. SATTANATHA KARAYALAR : Sir, I move—

" In item 36, column (4) *for* the figure ' 5 ', *substitute* the figure ' 3 '."

The amendment was duly seconded.

SRI K. SATTANATHA KARAYALAR : Sir, I move—

" In item 39, column (4) *for* the figure ' 5 ', *substitute* the figure ' 2 '."

The amendment was duly seconded.

SRI N. K. PALANISAMI : Sir, I move—

" *After* item 38, *insert* the following item, viz.,—

" 38-A Washing Soap At the point of First sale in the State 1 ".

The amendment was duly seconded.

SRI N. K. PALANISAMI : Sir, I move—

" In item 28, column (4) *for* the figure ' 6 ', *substitute* the figure ' 1 '."

The amendment was duly seconded.

SRI S. M. ANNAMALAI : Sir, I move—

" In the first Schedule *delete* the item 36;

" In item 42, under column (2), *add* the words and brackets, ' (excluding agricultural goods) ', *after* the word ' parts '."

The amendments were duly seconded.

SRI K. SATTANATHA KARAYALAR : Sir, I move—

" In item 45, column (4), *for* the figure ' 6 ', *substitute* the figure ' 3 '."

The amendment was duly seconded.

[14th February 1959]

SRI N. K. PALANISAMI : Sir, I move—

"In item 46, *for* the figure '6', in column (4) *substitute* the figure '3'."

The amendment was duly seconded.

SRI K. SATTANATHA KARAYALAR : Sir, I move—

"In item 53, column (4), *for* the figure '6', *substitute* the figure '5'."

The amendment was duly seconded.

SRI K. SATTANATHA KARAYALAR : Sir, I move—

"In item 60, column (2), *omit* the words 'Wattle Bark including'."

The amendment was duly seconded.

SRI M. S. SELVARAJAN : Sir, I move—

"In item 62, column (4), *for* the figure '3', *substitute* the figure '2'."

The amendment was duly seconded.

SRI T. S. RAMASWAMY PILLAI : Sir, I move—

"In item 62, column (4), *for* the figure '3', *substitute* the figure '1'."

The amendment was duly seconded.

SRI N. K. PALANISAMI : Sir, I move—

"*Omit* item 62 and re-number the rest of the items.

"In item 63, column (4), *for* the figure '3', *substitute* the figure '1'."

The amendment was duly seconded.

SRI S. M. ANNAMALAI : Sir, I move—

"*Omit* item 64."

The amendments were duly seconded.

SRI T. S. RAMASWAMY PILLAI : Sir, I move—

"In item 64, column (4), *for* the figure '2', *substitute* the figure '1'."

The amendment was duly seconded.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

"Item 21 shall be *deleted* and the remaining items shall be re-numbered."



14th February 1959] [Sri R. Venkataraman]

"In column (4), against item 62, *for* the number '3', *substitute* the number '2'."

"In item 28, in column (4), *for* the figure '6', *substitute* the figure '3'."

MR. SPEAKER : The Schedule and the amendments are before the House for discussion.

SRI M. S. SELVARAJAN : Sir, என்னுடைய ஒரு திருத்தம் விறகுக்கும் கரிக்கும் இன்றையதினம் பலமுனையில் விதிக்கப்பட்டு வருகிற தீர்வையை .

THE HON. SRI R. VENKATARAMAN : May I suggest, Sir, that we can take up item by item for discussion so that it will be easier to deal with the criticisms. Otherwise, we will have to mix together different items on different subjects. Therefore, we may take up the amendments to the items in the Schedule in their order. Item after item may be taken up. It will facilitate discussion.

MR. SPEAKER : Every hon. Member will be going on speaking on every amendment.

THE HON. SRI R. VENKATARAMAN : Otherwise, it will be difficult to answer the point raised in respect of every amendment.

MR. SPEAKER : I have no objection.

Sri K. Sattanatha Karayalar may speak on his amendment (No. 158).

*SRI K. SATTANATHA KARAYALAR: சபாநாயகர் அவர்களே, இந்த "புலியன் அண்டு ஸ்பீஸிஸ்"க்கு அரை சதமானம் வரி போட்டிருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் "பினிஷ்ட் ப்ராடெக்ட்ஸ்"-க்கு 31-வது ஐடத்திலே "ப்ரெஷஸ் ஸ்டோன்ஸ்", "டைமண்ட்ஸ்" முதலியன பொருத்தப்பட்ட நகைகளுக்கு 3 சதமானம் போடப்பட்டுள்ளது. சாதாரணமாக நகைக் கடையில் நடக்கக்கூடிய பழக்கம் என்னவென்றால், புலியனை வாங்கிக் கொடுத்ததாக வரவு வைத்துவிட்டு அதாவது 5 சவரனுக்கு ஒரு பொருள் வேண்டுமானால், வாங்க வந்தவர்கள் 5 சவரன் வாங்கியதாகக் காட்டி, அதற்கு ½ சதமானம் வரி வசூலித்து விட்டு, அதை அவர்கள் கொடுத்து அதிலிருந்து நகை செய்ததாகக் போட்டுக்கொடுத்து விடுகிறார்கள். தங்கம் யாருமே கொடுப்பதில்லை. "பினிஷ்ட் ப்ராடெக்ட்ஸ்"-க்கு ஒரு வரியும் "புலியன்"-க்கு ஒரு வரியும் போட்டால் இந்த முறையில் தப்பித்துக் கொண்டு விடுகிறார்கள். "புலியன்"-க்கு ½ சதமானமாகவும், 31-லே 3 சதமானமாகவும் இருப்பதால் அரசாங்கத்திற்குக் கிடைக்கவேண்டிய கணிசமான பணம் கிடைக்காமல் போகிறது. ஏதோ ஒரு விதத்தில் மாறுதல் ஏற்படுத்தினால் நல்லது. அமைச்சர் அவர்கள் கூறக்கூடும், புலியன் ரேட் கூட்டினால் இதர மாகாணங்களுக்கு வியாபாரம் போய் விடக்கூடும் என்று. இப்படி இருப்பதைத் தவறாகப் பயன்படுத்திக்கொள்ளச் சந்தர்ப்பம் இருப்பதற்கு மாற்று வழி கண்டுபிடிக்கவேண்டுமென்பதனால்தான் நான் இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் சபாநாயகர் அவர்களே, 10-10
பக்கத்திலே இருக்கும் ஆந்திர ராஜ்யத்திலும் மைசூர் ராஜ்யத்திலும் a.m.
இதற்கு அரை சதமானம் வரி என்று இருக்கிறது. ஆகவே, அரை சதமானம் என்று நாம் போட்டிருப்பதை உயர்த்தினால் புலியன் வியாபாரம் சென்னை

ராஜ்யத்தைவிட்டு மற்ற இடங்களுக்குப் போய் விடும் என்பதில் சற்றும் சந்தேகம் இல்லே. வர்த்தகத்தை நம்முடைய ராஜ்யத்திலிருந்து பிற ராஜ்யங்களுக்கு விரட்டுவது விற்பனை வரியின் நோக்கம் அல்ல. விற்பனை நம்முடைய ராஜ்யத்தில் ஏராளமாக நடக்கவேண்டும் என்பதுதான் நம்முடைய நோக்கம்.

இரண்டாவது, கனம் அங்கத்தினர் திரு சட்டநாத கரையாளர் அவர்கள் பேசியபோது, பொய்க் கணக்கு வைத்து அவர்கள் செய்ய முடியும் என்று எடுத்துக்காட்டினார்கள். அதைச் சர்க்கார் பரிசீலனை செய்யும். தங்கம் கொடுத்தது என்று எழுதியிருந்தால், எப்பொழுது தங்கம் கொடுத்தார்கள், எங்கிருந்து கொடுத்தார்கள் என்று இப்பொழுதே கணக்கு பார்த்து அப்படி செய்கின்றவர்களுக்கு இன்னும் அதிகமான வரி விதிக்கப்படுவதனாலே அந்தத் தொல்லே அதிகமாக இருக்காது என்று நினைக்கிறேன். தவறு செய்கின்றார்கள் என்பதற்காக சட்டத்தைத் திருத்தி நம்முடைய ராஜ்யத்தில் வர்த்தகத்தையும் விற்பனையையும் குறைத்துக்கொள்ளக் கூடாது என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

SRI A. GOVINDASAMY : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, வெஜிடபிள் ஆயில்களுக்குப் போட்டிருக்கும் விற்பனை வரியை அறவே நீக்க வேண்டும் என்று திருத்தம் கொடுத்திருக்கின்றேன். வெஜிடபிள் ஆயில்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிப்பதன் மூலம் அரசாங்கத்திற்கு ஒரு நஷ்டமும் ஏற்படாது. ஆகவே, விதிவிலக்கு அளிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தென்னாற்காடு ஜில்லாவட்டத்தில் மணிலா எண்ணெய் அதிகமாக உற்பத்தியாகும் பகுதிகள் இருக்கின்றன. மணிலா எண்ணெய்க்கு வரி அதிகமாகப் போட்டால் அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கும் ஏழைகள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுடைய பகுதியான பொள்ளாச்சியிலும் கடலே எண்ணெய் அதிகமாக உற்பத்தி ஆவதாலும், ஏழை எளியவர்கள் இதில் ஈடுபட்டிருப்பதாலும், வியாபாரிகள் தானே வரி கொடுக்கிறார்கள் என்று நினைக்காமல், வாங்குவோர்கள் தலையிலே வியாபாரிகள் வசூலித்துத்தான் இந்த வரியைக் கட்ட வேண்டிய நிலைமை இருப்பதாலும், இந்த எண்ணெய்களை ஏழைகள் உபயோகிப்பதாலும் மணிலா எண்ணெய்க்கு அறவே விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை.

SRI M. SELVARAJ : கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, நான் கொடுத்திருக்கும் திருத்தம், முதல் அட்டவணையில் 20-வது "ஐடம்" ஆக, வெஜிடபிள் ஆயில்களுக்கு மூன்று சத விகிதம் விற்பனை வரி போடப்பட்டிருப்பதை அறவே நீக்கவேண்டும் என்பதற்காகத்தான். நாம் 3 சதம் போட்டிருக்கிறோம். அண்டை ராஜ்யங்களிலே, குறிப்பாக ஆந்திர ராஜ்யத்திலே, 2 சத வரி ஒரே முனையில் போட்டிருக்கிறார்கள். ஏற்கனவே நமது அமைச்சர் அவர்கள் பேசியபோது, (புளியனுக்கு) பக்கத்து ராஜ்யங்களில் அரை சதவிகிதம் வரி விதிக்கும்போது நம்முடைய ராஜ்யத்தில் ஒரு சத விகிதம் வரி விதித்தால், நமக்குப் பாதகம் ஏற்படும் என்று தெரிவித்தார்கள். அதுபோன்று, அண்டை ராஜ்யத்திலே இத்தகைய வெஜிடபிள் ஆயில்களுக்கு இரண்டு சத விகிதம் வரி போட்டிருக்கும்போது, நாம் மூன்று சத விகிதம் வரி போட்டால், அதனால் நம்முடைய சென்னை மாநிலத்திலுள்ள அத்தனை எண்ணெய் வியாபாரிகளும் பாதிக்கப்படமாட்டார்களா என்பதை அவர்கள் சற்று யோசித்துப் பார்க்கவேண்டும். அண்டை ராஜ்யங்களிலிருந்து தினசரி இப்பொழுது குறைந்தது பத்து, பதினைந்து லாரி லோட்கள் மதராஸ் மார்க்கெட்டுக்கு வந்து கொண்டிருக்கின்றன. 3 சதம் என்று போட்டிருப்பது அதிகப்படியாக பாதகம் விளைவிக்கும். ஆகவே, அண்டை ராஜ்யங்களிலுள்ள அளவுக்காவது [illegible] வரி விகிதத்தைத் திருத்தவேண்டும் என்று நான் மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

01-01
[illegible]



THE HON. SRI R. VENKATARAMAN : கனம் சபாநாயகர் அவர்களே, நிதி நிலைமை காரணமாக வரியை ரத்து செய்ய முடியாது என்பதை நான் பல முறை எடுத்துக்காட்டியிருக்கிறேன். கனம் கோவிந்தசாமி அவர்கள் அதை ரத்து செய்யவேண்டுமென்று சொல்லியிருப்பதை நான் ஏற்றுக்கொள்ளுவதற்கில்லை.

அடுத்தபடியாக, இப்பொழுதிருக்கும் வரி இரண்டு சத விகிதம் "மல்டி பாயிண்ட்" முறையில். சாதாரணமாக, இரண்டு முறை கைமாறுகிறது என்று வைத்துக்கொண்டால்கூட 4 சத விகிதம் ஆகும். "ஸிங்கில் பாயிண்ட்" ஆக 3 சத விகிதம் செய்ததனால் வரி குறைக்கப்பட்டிருக்கிறது. இதைவிட இன்னும் குறைப்பதற்கு வசதி இல்லே என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : Amendment No. 160. *(Sri A. Govindasamy rose).

கனம் அங்கத்தினர் ஸ்ரீ கோவிந்தசாமி அவர்கள் 163-வது திருத்தத்தில் 21-வது ஐடத்தை நீக்கிவிட வேண்டும் என்று கோரியிருக்கிறார். மற்ற சில கனம் அங்கத்தினர்களும் இதற்குத் திருத்தங்கள் கொடுத்திருக்கிறார்கள். கனம் அங்கத்தினர்கள் கொடுத்த திருத்தங்கள் 21-வது ஐடம் மட்டுமல்லாமல் மற்ற சில ஐடங்களையும் நீக்கவேண்டும் என்ற முறையில் அவற்றை ஒன்றுகச் சேர்த்துக்கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், கனம் அமைச்சர் அவர்கள் 21-வது ஐடத்தை மட்டும் நீக்கவேண்டும் என்று திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். ஆகையால், அமைச்சர் அவர்கள்தான் 160-வது திருத்தத்தை பிரேரேபிக்கவேண்டும்.

The hon. Member has given notice of an amendment. The Government also have given notice of an amendment. This is a combined amendment. I leave it to the Minister.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move the following amendment :—

Item 21 shall be *deleted* and the remaining items shall be re-numbered.

SRI A. GOVINDASAMY : Sir, I want to speak on this item. கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, பிண்ணாக்கு மீது போட்டிருக்கும் வரியை ரத்துசெய்யவேண்டும் என்று நானும் நண்பர் திரு எம். செல்வராஜ் அவர்களும் திருத்தங்கள் கொடுத்திருக்கிறோம். அதே திருத்தத்தை கனம் அமைச்சர் அவர்களும் சர்க்கார்த் தரப்பிலேயிருந்து கொடுத்திருக்கிறார்கள்.

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் அவர்கள் தவருக நினைத்துக்கொண்டிருப்பதால் அதை இப்போதே திருத்திவிடுவது நல்லது என்று நினைக்கிறேன். சர்க்கார்த் திருத்தம், பிண்ணாக்குகளுக்கு ஒரு முனை விற்பனை வரி போடாமல், பல முனை விற்பனை வரி போடவேண்டும் என்பதற்காக. ஆனால், கனம் அங்கத்தினருடைய திருத்தம், இதற்கே வரியே விதிக்கக்கூடாது என்பதற்காக. அதுதான் வித்தியாசம்.

SRI A. GOVINDASAMY : Item 21 shall be deleted.. என்றுதான் சர்க்காருடைய திருத்தத்திலும் இருக்கிறதே தவிர, அவர் சொல்கிற வியாக்கியானம் அதில் இல்லை என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அந்த முறையிலே, அமைச்சர் அவர்கள், ஏழை விவசாயிகள் உபயோகிக்கும் பிண்ணாக்குக்கு வரி போடும்படியான நிலைமை ஏற்பட்டால் மிகுந்த பாதகத்தை விளைவிக்கும். விவசாய வருமான வரியும் போட்டுவிட்டு அவர்கள் விவசாயத்திற்கு உபயோகப்படுத்தும் பிண்ணாக்குக்கும் வரி போடுவதனாலே அதிகம் பாதகமான நிலைமை ஏற்படும். அதற்கு விதிவிலக்கு

[Sri A. Govindasamy] [14th February 1959

அளிக்கவேண்டும் என்று எதிர்த்தரப்பிலே இருக்கும் நாங்கள் சொல்வது மட்டும் அல்லாமல் சர்க்கார்த் தரப்பிலிருந்து பல உறுப்பினர்கள் இந்தக் கருத்தை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள் என்ற காரணத்தால், பிண்ணாக்கு மீது போட்டிருக்கும் வரியை ரத்து செய்யவேண்டும். அது போலவே விவசாயிகள் உபயோகிக்கும் ரசாயன உரங்களுக்கும் இந்த வரி விதிப்பிலிருந்து விலக்களிக்கவேண்டும். இந்த அரசாங்கத்திற்கு விவசாயிகளுடைய நலனில் அதிக அக்கறை காட்டி, உற்பத்தியை அதிகமாகப் பெருக்கவேண்டும், நாட்டில் சுபீட்சம் ஏற்படவேண்டும் என்பதிலே எண்ணம் இருக்குமானால், விவசாயிகளைப் பாதிக்காத அளவுக்கும், விவசாயிகளுக்கு நல்ல பாதுகாப்புத் தேடிக்கொடுக்கும் அளவுக்கும் இந்த வரியையும் ரத்து செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தப் பிரச்னைகளைப்பற்றி சட்டசபையில் விவாதிக்கும்போது இரண்டு அபிப்பிராயங்கள் முன்வருகின்றன. சர்க்கார் முதன் முதலில் இதற்கு மூன்று சத விகிதம் ஒரு முனையில் வரி விதிப்பதற்குக் காரணம், பிண்ணாக்கு குறைந்த பட்சம் இரண்டு மூன்று கை மாறுகிறது. கடைசியாக அதை உபயோகிக்கின்றவர்கள், இது இரண்டு மூன்று கை மாறினால், 6 சத விகிதம் அல்லது குறைந்த பட்சம் 4 சத விகிதமாவது வரி கொடுக்க வேண்டியிருக்கிறது. அதைக் குறைக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் 3 சதவிகிதம் வரி என்று போட்டிருக்கிறோம்.

ஆனால், சட்டசபையில் எல்லோரும் பத்தாயிரம் ரூபாய்க்குக் குறைவாக இருப்பவர்களுக்கு வரி விலக்கு கிடைக்கவில்லை, அதனால் அதை மாற்றவேண்டும் என்று சொன்னவுடன் சட்டசபை அபிப்பிராயத்தை ஏற்று நாம் அதைப் பல கட்ட வரியாக மாற்றினோம். அவ்வாறு மாற்றியதனால் சிலுகை என்ன கிடைக்கிறதென்றால், பத்தாயிரம் வரையிலும் வியாபாரம் செய்கின்ற சிறு பிண்ணாக்கு வியாபாரிகள், சிறிய எண்ணெய்ச் செக்குகளை வைத்துக்கொண்டிருக்கிறவர்கள், இவர்களுக்கு ஓரளவு நன்மை கிடைக்கிறது. அவர்களுக்கு நன்மை கிடைக்கவேண்டும் என்பதற்காகத்தான் அது மாற்றப்பட்டது. ஆகவே, இதை முழுதும் ரத்து செய்வதற்கில்லையென்பது என்னுடைய சொந்த அபிப்பிராயம். 3 சதவிகிதம்தான் மக்களுக்கு நல்லது, ஏழை மக்களுக்கு நல்லது, செக்கு வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கும் நன்மை என்று சட்டசபையினர் சொன்னதினால் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறேன். இதில் வேறு எந்த மாறுதலும் செய்வதற்கில்லை.

SRI A. GOVINDASAMY : Sir, I want an explanation.

MR. SPEAKER : நீங்கள் சொல்லவேண்டியதையெல்லாம் ஒரேயடியாக Speech யிலேயே சொல்லிவிடுங்கள். அமைச்சர் பேசின பிறகு பேசக்கூடாது. The hon. Member cannot speak again. I told Sri Lazar yesterday. How can the hon. Member speak now ? He cannot.

*SRI N. K. PALANISAMI : கனம் சபாநாயகர் அவர்களே, 21–வது நம்பரில் பிண்ணாக்குகளுக்கு மூன்று சத விகிதம் வரி என்று இருப்பதை ஒரு சத விகிதம் என்று குறைக்கவேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள். 22–வது நம்பரில் விவசாயத்திற்கு உபயோகிக்கக்கூடிய உரங்களுக்கு கண்டிப்பாக வரி இருக்கக்கூடாது. அப்படி இருக்கவேண்டும் என்று சர்க்கார் விரும்புவார்களானால், ஒரு சத விகிதம்தான் போடவேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை. 23–வது நம்பரில் கண்டிருக்கும் பொருள்களுக்கு மூன்று சத விகிதம் வரி போட்டிருப்பதற்குப் பதிலாக 7 சத விகிதம் அளவுக்கு வேண்டுமானால் உயர்த்திவிடலாம். 25–வது நம்பரில் கண்டுள்ள "மில்க் புட்ஸ் (எக்ஸ்க்ளூடிங் ப்ரெஷ் மில்க்) பட் இன்க்ளூடிங் மில்க் பவுடர்" என்பதற்கு 3 சத விகிதத்திற்குப் பதிலாக இன்னும் 4 சத விகிதம் அதிகமாகப் போடுவதால் ஒன்றும் கெடுதல் ஏற்பட்டு விடாது. ஏனென்றால், அவை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகக் கூடிய பொருள்கள், மரம், மூங்கில் இவைகளுக்கு 3 சதவிகிதம் போடப்பட்டி



14th February 1959] [Sri N. K. Palanisami]

ருக்கிறது. இது மிகவும் அதிகம். அவற்றிற்கு 1 சதவிகிதம் போடவேண்டும். 1 சதவிகிதம் போடா விட்டால் அதிகமான ஜனங்களைப் பாதிக்கும். பிஸ்கட், கேக் இவைகளுக்கு இன்னும் இரண்டு சத விகிதம் சேர்த்து 5 சத விகிதமாகப் போடலாம். ப்ரெஷஸ் ஸ்டோன்ஸ், வைரம் முதலியவைகளுக்கு போடப்பட்டிருக்கும் வரி 3 சதவிகிதம். அது குறைவாகத்தான் இருக்கிறது. அதை இன்னும் உயர்த்தி 7 சதவிகிதமாகப் போடலாம். காப்பிக்கு 5 சத விகிதம் போட்டிருக்கிறது. அதை 3 சதவிகிதமாக் குறைக்கலாம். ப்ரெஞ்ச் காப்பிக்கு அதிகம் வரி விதிக்கலாம். சிமெண்ட், சாதாரணமாக எல்லோரும் உபயோகிக்கக்கூடியது. அதற்கு கொஞ்சமாக வரி போட்டாலும், அதிகப்படியாக சேர்த்து விற்கக்கூடிய காரணத்தால் 5 சதவிகிதத்துக்குப் பதிலாக 3 சதவிகிதம் போடவேண்டும் என்பது என்னுடைய திருத்தம்.

சோப்புக்கு 5 சத விகிதம் போடப்பட்டிருக்கிறது. வாஷிங் சோப்புகளுக்கு 2 சத விகிதம் போடவேண்டும். பாக்கி சோப்புகளுக்கெல்லாம் வேண்டுமானால் 5 சத விகிதம் இருக்கலாம். வாஷிங் சோப்புகளுக்கு அவசியம் குறைந்த அளவில் 2 சத விகிதம்தான் போடவேண்டும் என்பது என்னுடைய திருத்தத்தின் நோக்கம். இன்னும் சிமெண்டுக்கு 6 சத விகிதம் போடப்பட்டிருக்கிறது, அதை 10 பர்செண்டுக்கு உயர்த்தலாம். அடுத்தபடியாக மடக்கக்கூடிய குடைகளுக்கு 6 பர்செண்ட் போடப்பட்டிருக்கிறது. சாதாரணமாக ஏழைகள் எல்லாரும் உபயோகிக்கக்கூடிய பொருள் இது. அதை 6 பர்செண்டிலிருந்து 3 பர்செண்டாக குறைக்கலாம். ஆகவே சில இடங்களில் அவசியமான பண்டங்களுக்கு குறைத்தும், அனாவசியமான பண்டங்களுக்கு வரியை அதிகப்படுத்தியும் போடலாம். சர்க்காருக்கு வருமானம் குறையாத அளவில் இப்படிப்பட்ட திருத்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதையெல்லாம் கனம் அமைச்சர் அவர்கள் ஆலோசனை செய்து அவைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

*SRI A. V. P. ASAITHAMBI : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, ஐடம் 32 சிக்கரியைப்பற்றி இரண்டொரு வார்த்தைகளை மட்டும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். சிக்கரிக்கு ஒரு முனை வரி 5 பர்செண்ட் விகிதம் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. சிக்கரி அந்நிய நாட்டிலிருந்து நம் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது. அதை காபியுடன் கலந்தால் அதற்கு ஒரு தனி ருசி இருப்பதால் அதை அதிகமாக உபயோகிக்கிறார்கள். ஹாலண்ட், பெல்ஜியம் போன்ற அந்நிய நாடுகளிலிருந்து இந்தியா பூராவுக்கும் கோடிக்கணக்கான ரூபாய் அளவில் இறக்குமதி செய்யப்படுகிறது. அதனால் அந்நிய செலாவணி கூட அதிகப்படியாக பாதிக்கப்படுகிறது. நம்முடைய இந்தியாவிலேயே அதை உற்பத்தி பண்ணுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. மலைப் பகுதிகளில் சிக்கரி பெருவாரியாக பயிர் செய்கிறார்கள். இந்த ஆண்டு அது நமக்கு பலன் தர இருக்கிறது. ஆகவே தென்னாட்டைப் பொறுத்த வரையில் சிக்கரி உற்பத்தி செய்யப்பட்டு அதிகப்படியாக வருவதற்கு இடம் இருக்கிறது. அந்நிய நாட்டிற்கும் கொடுக்கக்கூடிய அளவுக்கு நாம் பயிர் செய்வதற்கு வசதி இருக்கிறது. அதனால் அந்நிய நாட்டிலிருந்தே சிக்கரியை தருவிப்பதற்கு அவசியம் இல்லாமலேயே போய், நாமே அந்நிய நாட்டிற்கு ஏற்றுமதி செய்யக்கூடிய நிலைமை ஏற்படுவதற்கும் இடம் இருக்கிறது. அதனால் இந்த சமயத்தில் சிக்கரிக்கு 5 பர் செண்ட் வரி போடுவது என்பது சரியல்ல. அப்படிப் போட்டால் உற்பத்தியை அதிகப்படியாக ஊக்குவிக்க முடியாமல் இருக்கலாம். அதன் பிறகு நாம் அந்நிய நாட்டிற்கு அதை ஏற்றுமதி செய்து நமது அந்நிய நாட்டு செலாவணியைப் பெருக்கிக் கொள்வதற்கு நல்ல வசதி ஏற்பட இடம் இருக்கிறது. அதன் மீது அதிகப்படியாக வரியை விதித்தால் ஒருக்கால் அதன் உற்பத்தி பாதிக்கலாம், அதன் மேல் வியாபாரிகளிடமிருந்து வசூலிக்க முடியாமல் போய் விடலாம். அதனால் இந்த நேரத்தில் அதற்கு அதிகப்படியான வரியை விதிப்பது என்பது சரியல்ல. ஆகவே, உள் வியாபாரிகள் அந்நிய நாட்டிலிருந்து இறக்குமதி செய்வதற்கு இடம் கொடுக்காமல் நாம் உற்பத்தி செய்யக்கூடியதையே வாங்கி விற்பதற்கு

[Sri A. V. P. Asaithambi] [14th February 1959

வசதி கொடுக்கும் அளவில் இதற்கு அதிகப்படியான வரியை விதிக்கக் கூடாது என்றும் அதன் வியாபாரத்தை அதிகப்படியாக ஊக்குவிக்க வசதி செய்து கொடுக்கவேண்டும் என்றும் அதற்கு வேண்டிய வழி செய்து தரவேண்டும் என்றும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

*THE HON. SRI R. VENKATARAMAN : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஷெட்யூல் கமிட்டியின் முன்னால் சுமார் ஒரு வருஷம் பூராவும் பரிசீலனை செய்யப்பட்டது. கனம் பழநிசாமி அவர்கள் விற்பனை அடிப்படையில் அவைகளையெல்லாம் குறைக்கவேண்டும் என்று ஆலோசனை கூறிக்கொண்டிருக்கிறார். லக்ஷரி பண்டங்களை உபயோகப்படுத்தக் கூடாது என்பதற்காக விற்பனை வரி போடப்படுவது என்பது அல்ல. அல்லது லக்ஷரி பண்டங்களை உபயோகப்படுத்துவதைக் கட்டுப்படுத்தவேண்டும் என்பதற்காக விற்பனை வரி போடப்படுவது இல்லை. நம்முடைய ராஜ்யத்தில் விற்பனை சரியாக நடைபெறுவதற்கும், நம்முடைய ராஜ்யத்திலுள்ள வியாபாரம் மற்ற இடங்களுக்கு மாறக்கூடாது என்ற முறையிலும் தான் இந்த விற்பனை வரி விதிக்கப்படுகிறது. நம்முடைய ராஜ்யத்திலிருந்து மைசூருக்கோ அல்லது ஆந்திராவுக்கோ போகக்கூடாது என்பதற்காகத்தான் இங்கே அந்தந்த வியாபாரப் பொருள்களுக்குத் தகுந்தாற்போல் விற்பனை வரி விதிக்கப்படுகிறது. அந்தந்த பொருள்களுக்கு அந்தந்த வரம்புகளுக்குட்பட்டு வரி போட்டு பணம் வசூலிக்க வேண்டியதாக இருக்கிறது. வரம்புக்குட்பட்டு வசூல் பண்ணவேண்டுமேயல்லாமல் மற்ற வரிகளைப்போன்று இதை வசூலிக்கக்கூடாது. அதற்கு மற்ற வரிகளை உபயோகப்படுத்திக்கொள்ளலாம். லக்ஷரி பண்டங்களுக்கு அதிகப்படியாக வரி விதிக்க வேண்டும் என்று சொன்னால் நம் ஊரிலிருந்து அந்த வியாபாரம் மற்ற ராஜ்யங்களுக்குப் போய் விடுவதற்கு வசதி ஏற்பட்டு விடும். அதனால் நம்முடைய வியாபாரிகள் நசித்துப்போய்விடுவார்கள். அதனால் அதை உயர்த்துவதற்கு சர்க்காருக்கு எவ்வளவு அநுகூலம் இருந்தாலும்கூட அதை ஏற்றுவது இயலாது. அதைப்போலவே குறைக்க வேண்டிய பொருள்களுக்கு எல்லாம் வேண்டிய அளவும் குறைக்கப் பட்டிருக்கிறது என்பதையும் வற்புறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சாதாரணமாக பல கட்ட வகையில் மூன்று ட்ரான்சாக்ஷன்கள் இருக்கின்றன என்பதை எல்லோரும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு மூன்று ட்ரான்சாக்ஷனிலும் 2 பர்செண்ட், 2 பர்செண்ட், 2 பர்செண்ட் ஆக 6 பர் செண்ட் என்று ஆகிவிடும். அதை இப்பொழுது குறைத்திருக்கிறோம். அதைவிட இன்னும் குறைக்க இயலாது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக சிக்கரியைப்பற்றி குறிப்பிட்டார்கள். இன்றைய தினம் காபியுடன் சிக்கரியைக் கலந்து விற்கிறார்கள். சிக்கரி ஒரு சாதாரண பண்டமாக இருந்தாலும் கூட அதை காபியுடன் கலந்து விற்பதால் காபியின் விலையையே வைத்து விற்கிறார்கள். இதை காபியுடன் சேர்த்து விட்டால் காபியின் விலை என்னமோ அதையே இதற்கும் வைத்து விற்கிறார்கள். அதைப்போலவே ப்ரெஞ்சு காபியுடனும் சேர்த்து விற்கும் போது அதிகப்படியான விலைக்கு விற்கிறார்கள். பாதி காபி, பாதி சிக்கரியாக இருந்தாலும் பூராவிலையும் காபியின் விலைக்கே விற்கப்படுகிறது. அதனால் அதற்கு விற்பனை வரி போட்டால் எந்த விதமான கஷ்டமும் வராது என்று சொல்லிக்கொண்டு இந்த ஷெட்யூலை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஐட்டம் 21-ஐ நீக்கி விட வேண்டும் என்று நான் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறேன். அதாவது ஒரு கட்ட முனை வரி 3 பர்செண்ட் என்று விதிப்பதற்கு பதிலாக, இப்பொழுது இருக்கக்கூடிய பில்லில் இருக்கக்கூடியது போலவே, பல கட்ட முனையில் அதாவது 2 பர்செண்ட் லெவியாக இருக்கும் என்பதுதான்.



14th February 1959]

SRI S. LAZAR : On a point of order, Sir, பரிசீலிக்கப்படுகிற ஒவ்வொரு பகுதியைப்பற்றியும் திருத்தங்கள் கொடுத்தவர்கள் மட்டும் தான் பேச வேண்டுமா ? சில முக்கியமான விஷயங்களை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர பல அங்கத்தினர்கள் ஆசைப்படுகிறார்கள். அவர்கள் பேசுவதற்கு பின்னால் சான்ஸ் கொடுக்கப்படுமா என்பதைப்பற்றி தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

MR. SPEAKER : திருத்தங்களைப்பற்றி பேசின பிறகு நீங்கள் பேசலாம்.

*SRI S. M. ANNAMALAI : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் பேசும்போது சட்ட மன்ற உறுப்பினர்கள் இந்த பிண்ணாக்குக்குப் போடப்பட்ட வரியை தள்ளிவிட வேண்டும் என்று சொன்னதாகச் சொன்னார். பல முனை வரி வேண்டுமென்று சட்ட மன்ற உறுப்பினர்கள் கேட்கவில்லை. பிண்ணாக்கு மீதுள்ள வரியை அடியோடு நீக்கவேண்டும் என்றுதான் கூறினார்கள். சென்ற நான்கு மாதங்களை எடுத்துக்கொண்டால் ஒரு மூட்டை பிண்ணாக்கின் விலை ரூ. 17–5–0 ஆக இருந்தது. இப்பொழுது அதன் விலையை எடுத்துப் பார்த்தால் ஒரு மூட்டையின் விலை ரூ. 20–10–0 ஆக விற்கப்படுகிறது. சுமார் நான்கு ரூபாய் அளவிற்கு உயர்ந்திருக்கிறது. அந்நிய செலாவணியும் பாதிக்கப்படுகிறது என்று சொல்லி மணிலாப்பயிறு வெளி நாட்டிற்கு அனுப்புவதன் காரணமாக அதன் விலை மேலும் மேலும் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. அதனால் பிண்ணாக்கின் விலையும் உயர்ந்து கொண்டே இருக்கிறது. இப்பொழுது அதற்கு வரி விதிக்காமல் விட்டு விட்டு பின்னடி ஒரு மூட்டையின் விலை ரூபாய் 10 அல்லது 12 என்று விற்கப்பட்டால் அப்பொழுது வேண்டுமானால் வரி விதித்துக்கொள்ளலாம். அப்பொழுது சேர்த்துக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டால் சேர்த்துக்கொள்ளலாம். பிண்ணாக்கு மாட்டுக்கு தீவனமாக இருப்பதோடுகூட அதை விவசாயத்திற்கும் உபயோகப்படுத்துகிறார்கள். பிண்ணாக்குக்கு மேலும் மேலும் வரி போட்டுக் கொண்டிருந்தால் விலை உயர்ந்து விவசாயம் பயன் அடையாது. அதனால் பிண்ணாக்குக்கு இருக்கிற வரியை அடியோடு தள்ளிவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : Does the Hon. Minister want to reply ?

THE HON. SRI R. VENKATARAMAN : I have already stated that it is not possible to reduce the tax on these items.

SRI T. S. RAMASWAMY PILLAI : பிண்ணாக்கு விவசாயத்திற்கு அத்யாவசியமான பொருள். இதற்கு ஏன் வரி விதிக்க வேண்டும், ஏன் இதற்கு வரி போடுகிறார்கள் என்பது தெரியவில்லை. ஒரு பக்கம் உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்று சொல்லி விட்டு, அதற்கு உபயோககரமாக இருக்கும் உரத்திற்கு வரி விதிப்பது என்பது சரியல்ல. அப்படி வரி போடுவதால் விவசாயம் ஒரு விதத்தில் பாதிக்கப் படலாம். இவைகளுக்கு வரி போடுவதால் உணவு தானியங்களில் விலை கூட உயரலாம். நாம் உணவு தானியங்களுக்கும் வரி போடுகிறோம், உரத்திற்கும் வரி போடுகிறோம். இப்படி ஒவ்வொன்றுக்கும் வரி போட்டுக் கொண்டே இருந்தால் உணவு தானியங்களின் விலை இன்னும் அதிகமாக உயர்ந்து கொண்டே, போவதற்கு இடம் ஏற்படும்.

அடுத்தப்படியாக பல ராஜ்யங்களில் உரம் போன்ற கெமிகல் உரங்களுக்கு சப்சிடி கொடுக்கிறார்கள். (கனம் ஸ்ரீ சி. சுப்பிரமணியம் : உரத்தை உபயோகப்படுத்திக்கொள்ள தெரியவில்லை என்றால் அதற்கு சப்சிடி கொடுக்கிறோம்.) ஆனால் நம்முடைய ராஜ்யத்தில் அவைகளுக்கு வரி போடுகிறார்கள். சப்சிடி கொடுக்காமல் இருப்பதோடல்லாமல் வரியும் போடுகிறார்கள். ஆகையினால் எவ்வளவு தூரம் இதற்கு ஊக்கம் கொடுக்க முடியுமோ அவ்வளவு தூரம் ஊக்கம் கொடுக்க முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு நான் இத்துடன் என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

[14th February 1959

MR. SPEAKER : Does the Hon. Minister want to reply to the discussion on the amendments to items 21 and 22 ?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I have already stated that it is not possible to reduce the level of taxation on these items.

SRI M. S. SELVARAJAN : சார், விறகு, கரி ஆகியவற்றிற்கு ஒரு
0 30 a.m. முனை வரி விதிக்க வேண்டுமென்றுதான் டாக்டர் லோகநாதன் அவர்கள் ரிப்போர்ட்டில் சிபாரிசு செய்யப்பட்டிருந்தது. செலக்ட் கமிட்டியில் ஏற்கனவே இருந்ததுபோல் பல கட்ட விற்பனை வரி கொடுத்தால் 2 சத விகிதம் வாங்கிவிட்டால் நல்லது என்று நினைத்து அந்த விதத்தில் பல கட்ட விற்பனை வரி விதிக்கப்படவேண்டுமென்று திருத்தப்பட்டிருக்கிறது. சென்னை நகரத்தைப் பொறுத்தமட்டில் ஏறத்தாழ மூவாயிரம் வியாபாரிகள் வரை இந்தத் துறையில் இருக்கிறார்கள். கரி வியாபாரிகளில் பலருக்கு விலக்கு இருப்பதாகத் தெரிகிறது. அமைச்சர் அவர்கள் சொல்லிய அபிப்பிராயப்படி பல கட்டத்தில் 3 சத விகிதம் ஒரு முனை வரிக்குப் பதில் 2 சத விகிதம் வரி வருகிற போது ஏழை எளியவர்கள் விலக்குப் பெறுகிறார்கள். பத்தாயிரம் வரை விலக்கு இருப்பதால் பெரும்பாலோருக்கு இந்த அனுகூலம் கிடைக்கலாம் என்ற அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்கள். கரியைப் பெரும்பாலும் வசதி உள்ளவர்கள்தான் வாங்கி உபயோகிப்பதாகத் தெரிகிறது. பெரும்பாலும் ஏழை மக்களும் பாமர மக்களும் விறகுதான் உபயோக்கிக்கிறார்கள். 100-க்குத் 90 வியாபாரிகள் இந்தப் பத்தாயிரம் வரை விலக்குப் பெறாமலேயே வரி செலுத்தும் நிலைமையில்தான் இருக்கிறார்கள். பலகட்ட விற்பனை வரி விதிக்கப்படுவதால் கமிஷன் வியாபாரி முதலிலே 2 சதவிகிதம் கட்ட வேண்டும். பின்னர் அதை வாங்கும் வியாபாரி ஏறத்தாழ 100-க்கு 90 பேர் 2 சதவிகிதம் செலுத்த வேண்டும். ஆக இந்த இனத்தில் இரண்டும் இரண்டும் நான்கு சதவிகிதம் வரியாகச் செலுத்துவதோடு இதில் ஈடுபட்டிருக்கக்கூடிய சிறு வியாபாரிகள் கணக்கு வைத்துக் கொள்ளச் சிரமங்கள் ஏற்படும். ஒரு முனை வரியாக மாற்றி விடுவதன் காரணமாகச் சிறு வியாபாரிகளுக்குச் சிரமத்தைப் போக்க முடியும். மேலும் ஒரு முனை வரியாக வசூலிக்கும் போது 100-க்கு 100 கரி, விறகு ஆகியவைகளுக்கு வசூல் செய்வதனால் அரசாங்கத்திற்கு அதிகப்படியான வருமானம் வரும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. வருமானத்தைக் கூட கருதாமல் பல கட்டத்தில் வசூலிப்பதன் மூலமாக ஓரளவு ஏழை எளியவர்கள் விலக்குப் பெறுகிறார்கள் என்பதால் பல கட்ட விற்பனை வரி விதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டது. நான் விசாரித்த அளவில் ஏழை எளியவர் மீது இரண்டு கட்டத்தில் இந்த வரி சுமத்தப்படுகிறது என்பதுதான். இரண்டும் இரண்டும் நான்கு ரூபாய் நூற்றுக்கு அவர்கள் கொடுத்தால்தான் கரியோ விறகோ அவர்கள் வாங்கக் கூடிய நிலைமை இருந்து வருகிறது. ஆகவே ஒரு முனை வரியாக இதை ஆக்குவதன் மூலமாக ஒரு பக்கம் அரசாங்கத்துக்கு வருமானம் அதிகரிப்பதோடு 100-க்கு 90 வியாபாரிகள் இந்த சிரமங்களிலிருந்து விடுபடலாம். இதை மீண்டும் பரிசீலனை செய்து என்னுடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்வதின் மூலமாக ஆரம்பத்தில் செய்யப்பட்ட வரி ஏற்பாட்டுக்கு இணங்க, அரசாங்கம் சென்ற வருஷம் ஏப்ரல் மாதத்தில் முடிவு செய்ததற்கு இணங்க, பின்னர் ஆகஸ்ட், செப்டம்பர், நவம்பர் ஆகிய மாதங்களில் வர்த்தகர் பிரதிநிதிகளுக்கு அமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதிக்கு இணங்க ஒரு கட்டத்திலேயே வரி வசூலிப்பதன் மூலமாக ஏழை எளியவர்களுக்கு நல்லது செய்ததாக இருக்கும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

MR. SPEAKER : The Hon. Minister can reply to the discussion on the amendment to item 27, if he wants.



14th February 1959]

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் சபாநாயகர் அவர்களே, இரண்டு அபிப்பிராயங்கள் சில பண்டங்கள் விஷத்தில் நிச்சயமாக இருக்கிறது. ஒரு அபிப்பிராயம் சிறு வியாபாரிகளுக்குச் சலுகை காட்டவேண்டும் என்பது. மற்றொரு அபிப்பிராயம் இதில் ஒரு முனை வரி விதித்தால் சில நன்மைகள் இருக்கும் என்பது. இந்த இரண்டையும் சேர்த்து ஒரு திட்டத்தில் கொண்டு வர முடியாது. சிறு வியாபாரிகளுக்கு சலுகை அளிக்கவேண்டுமென்றால் 10 ஆயிரம் வரை விலக்கு அளிக்கவேண்டும். ஒரு முனை வரி மூலமாக விற்பனைத் தொல்லைகள் தீர வேண்டுமென்று சொன்னால் எந்த வித விலக்கும் இல்லாமல் எல்லா விதத்தில் இருந்தும் ஒரு முனை வரி வசூலிக்க வேண்டும். ஸ்ரீ செல்வராஜ் அவர்கள் ஒரு முனை வரி விதிக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். செலக்ட் கமிட்டியில் பல கட்ட விற்பனை வரி விதிக்க வேண்டுமென்று சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில் என்னுடைய எண்ணம் என்னவென்றால் இப்பொழுது இருக்கக்கூடிய திட்டத்திற்கு ஆதரவு இருக்குமானால் இதை அப்படியே வைத்துக்கொள்ளலாம். இதை நன்றாக ஆராய்ந்து இதில் மாறுதல் செய்யவேண்டுமென்பதற்கு எல்லோரும் ஒத்துக்கொண்டால் மாற்றி விடலாம். சர்க்காரைப் பொறுத்த வரையில் ஒரு முனை வரி விதித்தாலும் சரி, பல கட்ட விற்பனை வரி விதித்தாலும் சரி, சர்க்காருக்கு வரக்கூடிய வருமானம் ஒன்றுதான். கமிட்டியின் அபிப்பிராயப்படி செய்த முடிவை மாற்றுவதற்கில்லை என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

SRI T. T. DANIEL : Sir, Members who have not given notice of amendments may also be allowed to speak on the items.

MR. SPEAKER : But the difficulty is this. I have gone to item 27. The Hon. Minister has replied. If you are going to discuss items 20 and 21, it will mean a repetition of the arguments. So, hereafter I will allow any member, who has not given notice of an amendment, to speak if he wants to speak. Then I will call the Hon. Minister to reply to the discussion.

SRI S. LAZAR : இந்த 27-வது ஐடத்தில் கண்டிருக்கிற " All kinds of wood and timber . . and similar articles (excluding firewood and charcoal)" என்பது ஒரு முனை வரிக்கு உட்படுத்தப்படும் என்று குறிப்பிட்டு இருப்பதில் ஒரு பெரிய கஷ்டம் இருக்கிறது என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அவர்கள் ஏற்கனவே சொல்லி இருப்பது போலவே விறகு, கரி போன்றவைகளுக்கு பல கட்ட விற்பனை வரி விதிப்பதன் காரணமாக பத்தாயிரம் ரூபாய்க்கு அதிகப்படியாக வியாபாரம் செய்யக்கூடியவர்கள்தான் வரி கட்ட வேண்டி இருக்கும். இது சிறு வியாபாரிகளைப் பாதிக்காது. இந்த முறையில் இது அமைந்திருப்பதால் எந்த விதமான கஷ்டமும் இருக்காது. ஆனால் இந்த மரம் முதலியவைகளுக்கு ஒரு முனை வரி விதிக்க வேண்டும் என்றிருக்கிறது. சாதாரணமாக கிராமத்தில் மரங்கள் வாங்குகிறோம். ஏதோ பெரிய தோட்டங்கள் வைத்து பெரும் அளவுக்கு வியாபாரம் செய்யக்கூடிய வியாபாரிகளை மனதில் வைத்துக்கொண்டு இந்த "ஐடம்" தயாரிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இது சாதாரணமாக நடக்கக்கூடிய காரியமாகும். கன்னியாகுமரி பகுதியில் தேக்கு மரங்கள், இன்னும் மற்றப் பகுதிகளில் வேப்ப மரம், மா மரம் போன்றவைகள் விற்கப்படுகின்றன. இந்தச் சட்டத்தை அமுல் நடத்தும் போது அவர்கள் ஒவ்வொருவரும் வரி கொடுக்கவேண்டுமென்று ஏற்படுகிறது. ஆகவே இதைப் பல முனைவரி என்று மாற்றி விடுவோமானால் சௌகரியமாக இருக்கும். ஆகவே இதைப் பல முனை வரியாக மாற்ற வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஸ்ரீசெல்வராஜ் அவர்கள் பேசியது ஒன்று. அவர் கொடுத்திருக்கக்கூடிய திருத்தத்தின் வாசகம் ஒன்று. இப்பொழுது இருக்கக்கூடிய கரி, விறகு வியாபாரம் செய்கின்றவர்களுக்கு வரி இல்லை. அந்த மாதிரி இருக்கவேண்டுமென்று நினைத்தால் அவைகளுக்கு பல முனை வரி இருப்பதுதான் நல்லது.

மேலும் இந்த "Wood and timber." க்கும் பல முனை வரியாக இருந்தால் தொல்லை இல்லாமல் இருக்கும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

SRI T. T. DANIEL : Sir, I endorse fully the views expressed by my hon. Friend Sri Lazar. The price of wood and timber is very high. Perhaps we are purchasing wood and timber at high rates. I think the price of wood and timber is at the maximum in the market. Considering the price of these things in the last 10 or 12 years, I can very well say that it is very high now. If the Government were to levy the tax at the rate of 3 per cent, it will really be a burden to all the purchasers and the traders. As the provisions now stand, even when small landowners sell the timber got from their garden lands, the purchasers will have to pay the sales tax as they also come within the purview of this Bill.

As regards the suggestion made by Sri Selvaraj, I think he is correct. I would suggest that the Hon. Minister will agree to his suggestion. So far as firewood and charcoal are concerned, instead of having the proposed taxation, it would be better to have the former principle so that the poor people may not be affected.

* THE HON. SRI R. VENKATARAMAN : சார், இந்த ஷெட்யூலில் இருக்கிறதை விசாரணை செய்யும்போது எனக்கு ஒரு கதை ஞாபகம் வருகிறது. "The old man, his son and the ass" என்று கதை சொல்வார்கள். "கிழவன் கழுதைமேல் தன் மகனை ஏற்றி அழைத்துக்கொண்டு சந்தைக்குப் போகும்போது 'இது என்ன அநியாயம். பையன் நடக்கலாம். கிழவர் நடந்து போகிறாரே. இவர் கழுதைமேல் போனால் என்ன ?' என்று நடுவில் ஒருவர் சொன்னாராம். உடனே பையன் கீழே இறங்கி கிழவரை கழுதை மேல் ஏற்றி அழைத்துக்கொண்டு போகும்போது நடுவில் ஒரு பெண் வந்தாள். 'வயதானவர் கழுதை மேல் ஏறிக்கொண்டு பிள்ளையை நடத்தி அழைத்துப் போகிறாரே. அவர் இறங்கிக்கொண்டு பிள்ளையை அல்லவா ஏற்றிக்கொண்டு போகவேண்டும்' என்றாளாம். இரண்டு பேருமே ஏறிபோகும் போது ஜீவகாருண்யம் மிக்க ஒருவர் இப்படிக் கழுதைக்குத் தொந்தரவு அளிக்கலாமா. இந்த இரண்டுபேரும் அதைத் தூக்கிக்கொண்டு போகக்கூடாதா என்றாராம். உடனே அந்தக் கழுதையை இரண்டுபேரும் தூக்கிக்கொண்டு போக ஆரம்பித்தார்கள். கடைசியில் கழுதையின் கதி என்ன ஆயிற்று என்று நமக்குத் தெரியும்." இப்படி இந்த விஷயத்தில் ஒவ்வொருவரும் ஒரு அபிப்பிராயம் சொல்வதனால் சர்க்காருக்கு என்ன செய்வது என்றே புரியவில்லை. ஆகவே தான் டாக்டர் லோகநாதன் அவர்களுடைய அபிப்பிராயத்தை ஒத்துக்கொண்டு—அவர் இது சம்பந்தப்பட்ட வர்த்தகர்கள், பொது மக்கள் எல்லோரையும் கலந்து விசாரித்து, சிபார்சு செய்திருப்பதனால்—என்ன லாப நஷ்டம் ஏற்பட்டாலும் எதையும் மாற்றுவது இல்லையென்ற முடிவிற்கு வந்திருக்கிறோம் என்று சொல்ல நான் விரும்புகிறேன்.

SRI S. M. ANNAMALAI : மண் எண்ணெயின் அவசியத்தைப்பற்றி நான் அதிகம் சொல்ல வேண்டியதில்லை. மண் எண்ணெக்கு வரி போடுவது வெகுவாக பாமர மக்களைத்தான் பாதிக்கும் என்று அன்றே சொன்னேன். நகரங்களில் இருக்கக்கூடியவர் விளக்கு முதலியவைகளுக்கு அதிகமாக மின்சாரத்தை உபயோகப்படுத்திக்கொள்கிறார்கள். ஆனால் மண் எண்ணெ நாட்டுப்புறங்களில் உள்ளவர்களால் தான்—பாமர மக்களால் தான் உபயோகிக்கப்பட்டு வருகிறது. இதற்கு 5 பர்சண்ட் வரி



போட்டிருப்பது மிகமிக அதிகம். பிண்ணாக்குக்கே வரியைத் தள்ளாதவர்கள் மண் எண்ணெக்கு வரியை இல்லையென்று எங்கே தள்ளப்போகிறார்கள் என எனக்கே தோன்றினாலும் கூட நூற்றுக்கு ஐந்து ரூபாய் என்று இருப்பதை 1 ரூபாயாகவாவது குறைக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

SRI T. S. RAMASWAMY PILLAI : As regards item 36, I have nothing more to say.

SRI K. SATTANATHA KARAYALAR : கனம் சபாநாயகர் அவர்களே, நான் கொடுத்திருக்கக்கூடிய திருத்தத்தில் மண் எண்ணெக்கு 5 பர்சண்ட் என்று இருப்பதை 2 பர்சண்ட் ஆகக் குறைக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். ஆனால் இதற்கு ஒரு கட்ட விற்பனை வரி விதிக்கும்படியாகச் செய்திருப்பது சரியான நிலை தான். ஒரு முனை வரி விதிப்பதற்குரிய பொருள் க்ரொசின். இதற்குப் பதில் சொல்லும் போது கனம் அமைச்சர் அவர்கள் இன்னொரு கதை சொல்லமாட்டார்கள் என்று நினைக்கிறேன். பெட்ரோல் போன்ற பொருளுக்கு வரி உயர்ந்த ரேட்டாக இருப்பதனால் மண் எண்ணெக்குக் குறைப்பதனால் அதிகக் கஷ்டம் ஏற்பட்டுவிடாது என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக 30-வது ஐடத்தைப் பொறுத்த வரையில் பிஸ்கட் அண்டு கேக்குக்கு வரி விதிக்கப்பட்டிருப்பது—சிறிய தவறினால் ஏற்பட்டிருக்குமோ என்று நினைக்கிறேன். சாதாரணமாக பெரிய கம்பெனிகளை மனதில் வைத்துக்கொண்டு இந்தமாதிரியாக முடிவு எடுத்திருக்கிறார்கள் போலிருக்கிறது. இதில் 'Biscuits and cakes (packed, tinned or otherwise excluding bread)' -ப்ரெட்டுக்கு விலக்கு அளித்திருக்கிறார்கள். பிஸ்கட்டு, கேக் போன்றவைகள் பெரிய கம்பெனிகளில் மாத்திரம் உற்பத்தி செய்யப்படவில்லை. சாதாரணமாக ஆயிரம் ரூபாய், ஐநூறு ரூபாய்க்கு மேல் வியாபாரம் ஆகாத பங்குகளில் கூட பாட்டில்களில் வைத்துக்கொண்டு பிஸ்கட், கேக் எல்லாம் வியாபாரம் செய்கிறார்கள். வண்டிகளில் தள்ளிக்கொண்டு போய் வியாபாரம் செய்கிறார்கள். இதற்கு வரி சிங்கிள் பாயிண்டாக இருப்பதனால் 500 ரூபாய்க்கு வியாபாரம் ஆகிறது என்றாலும் கூட இதற்குத் தீர்வை வரும் என்று நினைக்கிறேன். இதை மல்டி பாயிண்டாக போட்டுவிட்டால் கூட அவ்வளவு பாதகம் ஏற்படாது. கண்டிப்பாக சில்லரை வியாபாரிகளுக்கு விலக்குக் கொடுப்பது அவசியம். பிஸ்கட், கேக் சில்லரையில் தயாரித்து விற்கக்கூடிய சிறிய வியாபாரிகளுக்குப் பாதகம் ஏற்படாத வகையில் இதைத் திருத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* SRI V. K. RAMASWAMY MUDALIYAR : சோஷலிஸ சமுதாயத்தின் கீழ் ஏழை மக்களுக்குப் பாடுபடுகிறோம், ஏழை மக்களுக்கு உதவி செய்கிறோம் என்று கூச்சல் போட்டுப் பிரயோசனமில்லை. மண் எண்ணெக்கு வரி போடுவதனால் ஏழை மக்கள் தான் பாதிக்கப்படப்போகிறார்கள். இதற்கு வரி போடக்கூடாது என்று எதிர்க்கட்சி சொல்கிறார்கள் என்பதற்காக ஒத்துக்கொள்ளவேண்டாம். ஏழை மக்களுக்கு உதவி செய்கிறோம் என்பதற்காகவாவது இந்தச் சலுகையை ஒத்துக்கொள்ளவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

SRI T. T. DANIEL : Sir, regarding item 36, I wish to state that kerosene oil is an article which is more or less exclusively used by the most downtrodden people in the State. I think the rate of tax is also very high. It would be better if the Hon. Minister gives us an idea of the estimated approximate income that he

[Sri T. T. Daniel] [14th February 1959]

expects to get by imposing this tax. We would very much appreciate it if it is possible to completely exempt kerosene oil from the operation of this Act.

**Sri S. LAZAR**: 30-வது ஐடத்தைப்பற்றி ஸ்ரீ சட்டநாத கரையாளர் பேசியதை நான் ஆதரிக்கிறேன். இந்த வியாபாரம் ஒவ்வொரு சிறிய நகரம் முதற்கொண்டு பெரிய நகரம் வரைக்கும் குடிசைத் தொழில் மாதிரியாக நடக்கிறது. அதுவும் குறிப்பாக டாக்டர்கள் எண்ணெய்ப் பொருளை அதிகமாக உபயோகிக்கக்கூடாது என்று யோசனை சொல்கிற சமயத்தில் மக்கள் பிஸ்கட், கேக் சாப்பிட ஆரம்பிப்பதால் ஏராளமாக குடிசைத் தொழில் முறையில் பிஸ்கட், கேக் எல்லாம் உற்பத்தி செய்யப்பட்டு தெருவில் விற்கப்படுகின்றன. வின்சென்ட் போன்ற பெரிய கம்பெனிகளை மனதில் வைத்துக்கொண்டு இந்த வரியைப் போட்டுவிட்டதாக நினைக்கிறேன். சாதாரணமாக 400, 300 ரூபாய் முதல் போட்டு இன்றையதினம் பலர் இதில் ஈடுபட்டிருக்கிறார்கள். இவர்களுக்கு எல்லாம் பாதகம் ஏற்படாது இருக்க வேண்டுமென்றால் அவசியம் விலக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஐடம் 31-லதிலே "ப்ரஷஷஸ் ஸ்டோன்" முதலியவற்றுக்கு 3 பர்சன்ட் வரி விதிக்கப்படுகிறது. செயற்கை வைரக் கற்கள் திருச்சி போன்ற நகரத்திலே ஏராளமாக இன்று உற்பத்தி செய்யப்படுகின்றன. அது பெரிய குடிசைத் தொழிலாக இருந்து வருகிறது. இந்தச் செயற்கை வைரங்கள் ப்ரஷஷஸ் ஸ்டோன் என்பதோடு சேர்ந்து வரிவிதிக்கப்படுமா இல்லையா என்பது தெரியவில்லை. சேர்ந்தது என்கிற அபிப்பிராயம் இருந்தால் அந்த எண்ணத்தைக் கைவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் திருச்சி நகரத்தில் மட்டும் 10 ஆயிரம் தொழிலாளர்கள் அதில் ஈடுபட்டிருக்கிறார்கள். இன்னும் இரண்டு மூன்று நகரங்களில் அநேகம் தொழிலாளர்கள் ஈடுபடுகிறார்கள். சிங்கில் பாயிண்ட் டாக்ஸ்
10-50 a.m. என்று வரும்போது அவர்கள் பாதிக்கப்படாத நிலையில் **at the point of first sale** என்றாவது செய்வதற்கு அவசியம் அரசாங்கம் யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**Sri M. R. KANDASWAMI MUDALIYAR**: 36-வது பிரிவிலே 5 சத விகிதம் என்று குறிப்பிட்டுச் சொன்னார்கள். இதைக் குறைப்பது நல்லது என்று நினைக்கிறேன். காரணம் பொதுவாக கிராம மக்கள் எல்லாம் இந்த மண்ணெண்ணெயைத்தான் உபயோகப்படுத்துகிறார்கள். மேலும் கிராமங்களுக்கு ஓடும் பஸ்களிலும்கூட பெட்ரோலில் மண்ணெண்ணெயைக் கலந்து உபயோகப்படுத்துகிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். பெரும்பாலான கிராமங்களில் மின்சாரம் இல்லாத காரணத்தால், முக்கியமாக கிராமங்களில் தான் அதிகமாக உபயோகப்படுத்தப்படுகின்றன. எதிர்கட்சிக்காரர்களும் இதைப்பற்றி விண்ணப்பித்துக்கொண்டிருப்பதால் ஏழைமக்களை முன்னிட்டு ஒரு சதம் அல்லது இரண்டு சதம் ஆகிலும் குறைத்துக்கொண்டு அவசியம் இதற்கு அரசாங்கம் விதிவிலக்கு அளிப்பதற்கு கனம் அமைச்சர் அவர்கள் சிந்தித்துப்பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

* **Sri A. GOVINDASAMY**: கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த மண்ணெண்ணெய்க்கு 5 சத விகிதம் இந்தச் சட்டத்தில் வரி போட்டிருக்கிறார்கள். அதில் ஒன்றாகிலும் இரண்டு சத விகிதமாகிலும் குறைக்கவேண்டுமென்று பலர் பேசியுள்ளார்கள். ஆனால் இதை அறவே நீக்கவேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். இந்த மண்ணெண்ணெயின் விலையுயர்வுபற்றியும் அதை வாங்கும் கஷ்டங்கள் பற்றியும் எல்லோருக்கும் நன்றாகத்தெரியும். ஆனால் நமது மின்சார அமைச்சர் நேரடியான தொடர்பு இல்லாமல் இருக்கலாம் என்று நினைக்கிறேன். கனம் அமைச்சர் அவர்கள் இப்பொழுது நாட்டில் நிலவும் நிலைமையை அறிந்து இந்த மண்ணெண்ணெய்க்கு போடப்பட்டிருக்கும் வரியை அறவே நீக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இரண்டு நாட்களுக்கு முன் சென்னையிலே மின்சாரம் தடைபட்டது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அந்த சமயத்தில்



[14th February 1959] [Sri A. Govindaswamy]

எவ்வளவு மண்ணெண்ணெய் விளக்குகள் தேவைப்பட்டன என்பதை எல்லோரும் அறிவார்கள். பல கிராமங்களில் மின்சார வசதி இல்லாத காரணத்தால் உணவுப்பொருளைப்போல் இதையும் நம்பி வாழ்கிறார்கள். அங்கே ஒரு புட்டி எண்ணெய்கூட சரியாக கிடைப்பதில்லை. ஆகவே இதற்கு வரியை அறவே நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். நண்பர் கந்தசாமி முதலியார் அவர்களும்கூட இதற்கு விதிவிலக்கு அளிக்கவேண்டும் என்று பேசியிருக்கிறார்கள். அதற்கு வோட்டு எடுத்தால் அவர்களும் ஆதரிப்பார்கள் என்று நினைக்கிறேன்.

* **The Hon. Sri R. VENKATARAMAN**: கனம் சபாநாயகர் அவர்களே, 1956-ம் வருஷத்தில் சட்டசபையில் பேசும்போது அங்கத்தினர்கள் பல கட்ட விற்பனை வரி நல்லதல்ல, எல்லோரையும் பாதிக்கும் என்று சொன்னார்கள். நமது நாட்டிலுள்ள வியாபாரிகள் எல்லோரும் சேர்ந்து மாநாடு ஒன்று நடத்தி ஒரு கட்ட வரியை சர்க்கார் விதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதன் காரணமாக டாக்டர் லோகநாதன் கமிட்டியைப் போட்டு அதை பரிசீலனை செய்தார்கள். அந்த நிபுணரின் யோசனையின் பேரில் பல முனை வரியை மாற்றியமைத்தார்கள். இப்பொழுது பிஸ்கட்டுக்குப் போட்டிருக்கும் வரி 3 சதம் தான், ஒன்றும் அதிகம் இல்லை. இதை அங்கத்தினர்கள் நன்றாக யோசித்துப் பார்ப்பார்களேயானால் எவ்வளவு தூரம் இதற்கு குறைவாக வரி போடப்பட்டிருக்கிறது என்பது புலனாகும்.

* **Sri K. SATTANATHA KARAYALAR**: கனம் சபாநாயகர் அவர்களே, நம் நாட்டிலே எல்லோரும் உபயோகப்படுத்தக்கூடிய ஒரு அத்தியாவசிய பொருள் சோப்புதான். இதற்கு சர்க்கார் 5 சத வரி போடுகிறார்கள். இதற்கு வரி போடுவது என்பது மனிதனின் நாகரீக வளர்ச்சியைத் தடைப்படுத்துவதாகும். இப்பொழுது சோப் செய்வது என்பது சாதாரணமாக கிராமங்களில் குடிசைத் தொழிலாக நடத்தப்பட்டு வருகிறது. பெரும்பாலான மக்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர். சிறு சிறு தொழிலாக நடத்துபவர்களுக்கு இந்த வரி இல்லாமல் இருந்தால் நலமாக இருக்கும். ஆனால் வசதியோடுகூடிய தொழில் அடிப்படையில் உள்ள பெரிய கம்பனியை நடத்துபவர்களுக்கு மாத்திரம் வரி போடலாம். முக்கியமாக வாஷிங் சோப் மிகவும் அத்தியாவசிய பொருளாக இருக்கிறது. ஆகவே இந்த வரி விதிப்பு அந்தத் தொழிலைப் பாதிக்காமல் இருக்கவேண்டும். ஆகவே **non-edible oil soap**-க்கு விதிவிலக்கு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **Sri N. K. PALANISAMI**: கனம் சபாநாயகர் அவர்களே, நான் கொடுத்திருக்கும் திருத்தம் இந்த சோப்பின் மீது விதிக்கப்பட்டிருக்கும் வரி விதிப்பினால் எவ்வளவு ஏழை எளியவர்கள் பாதிக்கிறார்கள் என்பதைப் பார்த்து **non-edible substances** மீது விதிக்கும் வரிக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும் அல்லது 1 சத வீதம் வரி போடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

* **The Hon. Sri R. VENKATARAMAN**: இப்போது இதற்கு பல முனையில் 2 சதவிகிதமாக இருக்கிறது. டாக்டர் லோகநாதன் அவர்கள் இது 11 a.m.
சம்பந்தமாகக் கணக்குப் போட்டு, ஜனங்கள் இப்போது இதற்கு இந்த விகிதத்தில் மொத்தம் 6 சதவிகிதம் வரி கொடுக்கிறார்கள் என்றும் இதற்கு இனிமேல் ஒருமுனையில் 5 சதவிகிதம் போடலாம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இதற்கு ஒருமுனையில் 5 சதவிகிதம் போடுவது நல்லது என்று அவர் சிபாரிசு செய்திருப்பதால் இதை மாற்ற முடியாது என்று சொல்லிக் கொள்கிறேன்.

**Sri S. M. ANNAMALAI**: கனம் சபாநாயகர் அவர்களே, நான் கொடுத்திருக்கும் திருத்தங்கள் அனைத்தும் விவசாயிகளின் நலனுக்காக கொடுக்கப்பட்டவை, விற்பனை வரியினால் விவசாயிகள் அதிகமாகப் பாதிக்கப்படக்கூடாது என்ற அடிப்படைத் தத்துவத்தில் இவைகளைக் கொடுத்திருக்கிறேன். விவசாயிகள் உபயோகிக்கும் 3-ஹார்ஸ் பவர் மோட்டார்கள்,

[Sri S. M. Annamalai] [14th February 1959

5-ஹார்ஸ் பவர் மோட்டார்கள், 5-ஆம்பியர் ஸ்விச்சுகள், 10-ஆம்பியர் ஸ்விச்சுகள் முதலியவைகளுக்கு, மசோதாவில் நிர்ணயிக்கப்பட்டுள்ள வரி விகிதத்தின்படி நிறைய வரி கொடுக்க வேண்டும். **(Sri R. Subramaniam in the chair)** ஒரு விவசாயி 5-ஹார்ஸ் பவர் மோட்டார் ஒன்றை நிறுவ வேண்டுமானால், அவன் 2,000 ரூபாய் செலவழித்தாக வேண்டும். அவன் இந்த 2,000 ரூபாய் செலவு செய்யும்போது, மசோதாவில் நிர்ணயிக்கப்பட்டுள்ள வரி விகிதத்தின்படி பார்த்தால், ரூ. 120 விற்பனை வரி கொடுக்க வேண்டியிருக்கும். விவசாயியிடமிருந்து இவ்வளவு விற்பனை வரிவசூலிப்பது சரியா? அரசாங்கம் விவசாயம் பெருக வேண்டும், விவசாயம் பெருக வேண்டும் என்று சொல்லிக்கொண்டு விவசாயிக்கு இவ்வளவு விற்பனை வரி போடலாமா? விற்பனை வரி மட்டுமன்றி, விவசாயிகளுக்கு என்ன வரியெல்லாம் போடலாமோ அவைகளையெல்லாம் அரசாங்கம் போட்டுவருகிறது. இவ்வாறு விவசாயிகள் மீது அரசாங்கம் வரிகளைப் போட்டுக்கொண்டே போனால் அவர்கள் நாளடைவில் சீரழிந்துபோவார்கள். ஆகவே இந்தப் பொருள்களுக்கெல்லாம் சலுகை தரவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

**Sri S. LAZAR**: கனம் தலைவர் அவர்களே, 40-வது ஐடெத்தில் "லெதர் குட்ஸ் ஆப் ஆல் கைண்ட்ஸ் எக்ஸ்க்லூடிங் புட்வேர்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. கிராமங்களில் உபயோகிக்கப்படும் பேலிங் **(baling material)** என்ன சொல்லுவார்களோ? அவைகளுக்கு வரி போட்டால் அதை வசூலிக்க முடியாது என்று நினைக்கிறேன். இப்போது கிராமங்களில் தோல் தொழிலாளர்கள் பெல்ட்டுகளும், மணிபர்சுகளும் தோலினால் செய்கிறார்கள். இவைகளுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. இவைகளைப் பொறுத்த வரையில், ஒரு முனை விற்பனை வரி நடைமுறையில் சாத்தியப்படாது, கஷ்டங்களைத்தான் உண்டுபண்ணும். ஒரு வேலை, ப்ளெக்ஸ், ரெக்ஸ், பாடா முதலிய கம்பெனிகளை மனதில் வைத்துக்கொண்டு இந்தப் பொருள்களுக்கு வரி போடப்பட்டிருக்குமோ என்று நினைக்கிறேன். "எக்ஸ்க்லூடிங் புட்வேர் அண்ட் அதர் மெடீரியல்ஸ் யூஸ்ட் பை அக்ரிகல்சரிஸ்ட்ஸ்" என்று இதை மாற்றிவிட்டால் தொந்தரவு இருக்காது என்று நினைக்கிறேன்.

**Sri A. V. P. ASAITHAMBI**: மதிப்பிற்குரிய சேர்மன் அவர்களே, கனம் அங்கத்தினர் ஸ்ரீ. எஸ். எம். அண்ணாமலை விவசாயத்திற்குப் பயன்படக்கூடிய "மோடார் பார்ட்ஸ்" போன்றவைகளுக்கு 6 சதவிகிதம் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் வரி விகிதத்தைக் குறைக்க வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்தார். அதை நான் ஆதரிக்கிறேன். இந்த மோட்டார்கள் முன்பெல்லாம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகிக் கொண்டிருந்தன. இப்போது கோயம்புத்தூர், சென்னை, முதலிய இடங்களிலேயே இவைகள் செய்யப்பட்டு வருகின்றன. அவைகள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வந்தபோது அவைகளுடைய விலை 200 ரூபாய் அல்லது 300 ரூபாய் அல்லது 350 ரூபாயாகத்தான் இருந்தது. இப்போது அது நான்கு மடங்கு அதிகமாகியிருக்கிறது. இந்த நிலையில் இவைகள்மீது போடப்படும் வரியும் அதிகமாக இருந்தால் இந்தத் தொழில் பாதிக்கப்படுவதுமட்டுமன்றி இவைகளை உபயோகிப்பவர்களும் மிகவும் பாதிக்கப்படுவார்கள். ஆகையால் இவைகள் மீதுள்ள வரி விகிதத்தைக் குறைக்க வழி இருக்கிறதா என்று கனம் அமைச்சரைக் கேட்கிறேன்.

* **Sri A. GOVINDASAMY**: மதிப்பிற்குரிய சேர்மன் அவர்களே, விவசாயிகள் மலையேற்றத்தில் தோலை உபயோகித்து வருகிறார்கள். இதன் மீது போடப்பட்டுள்ள வரியை நீக்காவிட்டால் விவசாயிகளுக்கு மிகவும் கவலை ஏற்படும். ஆளும் கட்சியைச் சேர்ந்த ஸ்ரீ லாஸர் போன்றவர்கள்கூட இந்த ஐடெத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் எவ்வளவோ வற்புறுத்திச் சொல்லியும் கனம் அமைச்சர் பிடிவாதமாக இருக்கிறார். கனம் அமைச்சர், எப்படியாவது பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இருக்கிறார் என்று சொல்லலாம். ஸ்ரீ லாஸர் அவர்களுடைய வற்புறுத்தலுக்காகவாவது இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.



14th February 1959]

(Mr. Speaker in the Chair.)

**THE HON. SRI R. VENKATARAMAN**: கனம் சபைத் தலைவர் அவர்களே, பிடிவாதமாக இருந்து பணம் சேர்த்து அந்தப் பணத்தை மீண்டும் இந்த ராஜ்யத்திற்கான நிர்வாகத் திட்டங்களுக்கே செலவழிக்கவேண்டுமென்ற கருத்தோடு நான் இருப்பதால், கனம் அங்கத்தினர் ஸ்ரீ கோவிந்தசாமி அவர்கள் என்னைப் பற்றித் தெரிவித்த அபிப்பிராயத்தை நான் பெருமையாகக் கொள்கிறேனே தவிர குற்றமாகக் கொள்ளவில்லை.

இந்தப் பொருள்களுக்கு வரி விதிப்பது சம்பந்தமாக அந்த அந்தத் துறையில் இருப்பவர்களுடன் கலந்தாலோசித்துவிட்டுத்தான் டாக்டர் லோகநாதன் அவர்கள் தமது சிபாரிசுகளைக் கொடுத்திருக்கிறார். எனவே விஷயம் தெரியாமல், இந்தப் பொருள்களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கும் வரி விகிதத்தில் மாறுதல் செய்தால் கஷ்டம் ஏற்படும். ஒவ்வொரு பொருளையும் விற்பனை வரிக்கு உட்படுத்தும்போது, அந்த அந்தத் துறையிலுள்ள வர்த்தகர் சங்கங்களுடனும் இதர ஸ்தாபனங்களுடனும் மற்றவர்களுடனும் கலந்தாலோசித்த பிறகுதான் விற்பனை வரி விகிதம் அந்த அந்தப் பொருளுக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இதில் மாறுதல் செய்ய வேண்டாம் என்று நினைக்கிறேன். இந்தப் பொருளுக்கு வரி விதிக்கப்பட்டிருப்பதால் விவசாயிகளுக்குக் கவலை வந்துவிட்டது என்று ஸ்ரீ கோவிந்தசாமி சொன்னார். விவசாயிகளின் கவலையை நீக்கவேண்டுமானால், அதற்குத் தான் 17-வது பிரிவு போடப்பட்டிருக்கிறது. அதன்படி, எக்ஸெம்ஷன் தேவைப்பட்டால், சர்க்கார் பார்த்துப் பரிசீலித்து எக்ஸெம்ஷன் கொடுக்கும். அப்படி இல்லாமல், இதற்குள் வரியை நீக்கினால், அதனால் என்ன விளைவுகள் ஏற்படுமோ சர்க்காருக்குத் தெரியாது. டாக்டர் லோகநாதன் அவர்கள் எல்லாவற்றையும் பார்த்தே தமது சிபாரிசுகளைக் கொடுத்திருப்பதால் இந்தத் திருத்தத்தை வலியுறுத்த வேண்டாம் என்று கனம் அங்கத்தினரைக் கேட்டுக்கொள்கிறேன்.

**Sri S. LAZAR**: On a point of clarification, Sir. டாக்டர் லோகநாதன் அவர்கள் வியாபாரிகளின் சங்கங்களைக் கூட்டி அவர்களுடைய அபிப்பிராயங்களை அறிந்த பிறகு அந்த அபிப்பிராயங்களின் பேரில் தமது முடிவுகளைச் செய்திருக்கிறார் என்றும், எனவே இந்த வரி விகிதத்தை ஒத்துக்கொள்ளவேண்டும் என்று கனம் அமைச்சர் சொன்னார். நான் முன்பு குறிப்பிட்டது போன்ற சிறு சிறு விவகாரங்கள் டாக்டர் லோகநாதன் அவர்களுடைய கவனத்திற்கு வந்திருக்க முடியாது என்று நினைக்கிறேன். இது சம்பந்தமாக கிராமக் கூட்டுறவுச் சங்கங்களாலோ, கிராமங்களில் வேலைசெய்யும் தோல் தொழிலாளர்களின் சங்கங்களாலோ, தோல் தொழிலாளர்கள் சார்பாகவோ டாக்டர் லோகநாதன் அவர்களுக்கு ஏதாவது யாதாஸ்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறதா அல்லது இந்த விஷயம் கனம் அமைச்சருடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா என்று தெரிவிக்க வேண்டும் என்று கனம் அமைச்சரை வேண்டுகிறேன்.

* **THE HON. SRI R. VENKATARAMAN**: முதலில் டாக்டர் லோகநாதன் அவர்களுடைய யாதாஸ்து பிரசுரிக்கப்பட்டது. அது பிரசுரிக்கப்பட்டவுடன் வர்த்தகர் சங்கங்கள் எல்லாம் தங்களுக்கு என்னென்ன கஷ்டங்கள் இருக்கின்றன என்பதை எடுத்தெழுதினார்கள். அதற்கு பிறகு மசோதாவைத் தயாரித்து அதை பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பினோம். அங்கே யார் யார் சாட்சியம் சொல்ல விரும்பினார்களோ அவர்களுக்கு சாட்சியம் சொல்ல சந்தர்ப்பம் கொடுத்தோம். இத்தனை சந்தர்ப்பங்களிலும் ஒரு கஷ்டம் தெரிவிக்கப்படாமல் இருக்கும்போது அந்தக் கஷ்டம் ஏற்படும் என்று இங்கே யூகத்தால் கூறுவதைக் கணக்கில் எடுத்துக் கொண்டு மசோதாவில் மாறுதல் செய்வது தவறு என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**Sri K. SATTANATHA KARAYALAR**: கனம் சபைத் தலைவர் அவர்களே, 45-வது ஐடெத்தில் "பர்னிசர்" என்ற இனத்தில், சோபா முதலிய எல்லாவிதமான சாமான்களுக்கும் 6 பர்சண்ட் வரி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. சமீபத்தில் மாநிலத்தில் பல்வேறு இடங்களிலும்

[Sri K. Sattanatha Karayalar] [14th February 1959

கூட்டுறவு அடிப்படையில் பல "கார்ப்பெண்ட்ரி யூனிட்டுகளை" அமைத்திருக்கிறோம். அப்படிப்பட்ட கூட்டுறவு ஸ்தாபனங்களும் இந்த வரிக்கு உட்படும் என்று தெரிகிறது. மேலும், தொழில் அபிவிருத்தி அடிப்படையில் சிறு தொழில்களை ஊக்குவிக்கும் முறையில், சில புதிய யூனிட்டுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இது ஒரு முனையில் விதிக்கப்பட்டிருப்பதால், இந்தத் தீர்வை அவைகளுக்கும் அமுலாகும். ஆகவே, கிராமங்களிலும் மற்ற இடங்களிலும் சிறிய அடிப்படையில் நடத்துபவர்களுக்கும் சிறிய யூனிட்டுகளுக்கும் விலக்களித்து, சென்னை, திருச்சி, மதுரை போன்ற இடங்களில் பெரிய அடிப்படையில் தொழில் நடத்தும் தொழிற்சாலைகளை மட்டுமே உட்படுத்தும் முறையில் இந்த ஐட்டத்தை மாற்றியமைத்தால் நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன்.

* **Sri A. GOVINDASAMY**: மதிப்பிற்குறிய சபைத் தலைவர் அவர்களே, பனை மரத்திலிருந்து செய்யப்படும் மரச் சாமான்களுக்கு ஓரளவு விலக்கு அளிக்கும் முறையில் இந்த விகிதத்தைக் குறைக்க வேண்டும் என்புதுதான் என் திருத்தத்தின் நோக்கம். மதுவிலக்குச் சட்டம் வந்ததன் விளைவாக பனை மரம் வைத்திருப்பவர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்; பனை மரத்திலிருந்து நாற்காலி, சோபா முதலியவைகள் குடிசைத் தொழில் முறையில் செய்யப்படுகின்றன. ஆகவே நாற்காலி, சோபா போன்றவைகளுக்கு இந்த விகிதத்திலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

**The Hon. Sri R. VENKATARAMAN**: "பர்னிச்சர்", கூட்டுறவு இயக்கம் மூலம் செய்தாலும், தனியார் துறையில் செய்தாலும் வாங்குபவர்கள் விலை கொடுத்துத்தான் வாங்கவேண்டும். அதில் கூட்டுறவு சொசைட்டிகளுக்கு சலுகை என்று சொன்னால் தனியார்கள் அந்தத் துறையில் வேலை செய்யமுடியாமல் போய்விடும். வர்த்தகத்தில் பாகுபாடு செய்யக்கூடாது என்பதுதான் நோக்கம். ஆகவே கூட்டுறவு சங்கத்திற்குத் தனிச் சலுகை கொடுக்க இயலாது என்று ஆரம்பத்திலேயே சொன்னேன். அதேபோல், பனை மரத்தில் செய்தாலும் சரி அல்லது தேக்கு மரத்தில் செய்தாலும் சரி, இப்பொழுது இருக்கிற புதிதாக அமைக்கும் டாக்ஸ் இருக்கப் போகிறது. அதை கூட்டிவிடவில்லை. மைசூரில் 7 சத விகிதம், ஆந்திராவில் 7 சத விகிதம் "அப்ஹோல்ஸ்டேர்ட் பர்னிச்சருக்கு" இருக்கிறது. ஆகவே 6 சத விகிதம் என்று இருப்பது அதிகமில்லை.

11-10 a.m. **Srimathi KAMALAMBUJA AMMAL**: ஸ்ரீனிவாஸ ஐயர் அவர்கள் கொடுத்திருக்கும் . . .

**Mr. SPEAKER**: அந்த திருத்தம் இல்லை. தனியாகப் பேசலாம்.

**Srimathi KAMALAMBUJA AMMAL**: ஐட்டம் 46-ல் "வெஜிட்டபிள் ப்ராடக்ட்ஸ்" என்று இருக்கிறது. "வெஜிட்டபிள் ப்ராடக்ட்ஸ்" என்று சொன்னால் மஞ்சள் முள்ளங்கி, பீட் ரூட் போன்றவைகள் கூட சர்க்கரை சேர்க்கப்பட்டு "டாபிகளாக" விற்பனை செய்யப்பட்டு, வருகிறது. "Vegetable products, that is to say, any vegetable oil or fat, which whether by itself or in admixture with any other substance, has by hydrogenation or by any other process been hardened for human consumption" என்று கொடுக்கும்போது, காரட் போன்றவைகளை டாபிகளாக விற்கும்போது "human consumptions" மாதிரி வருகிறது. மிட்டாய் வகையோடு அது சேர்க்கப்படுகிறது. ஐட்டம் 29-ல் confectionery-க்கு 3 சதம் விதித்திருக்கிறார்கள். வெஜிட்டபிள் ப்ராடக்ட்ஸை தித்திப்புப் பண்டங்களாகச் செய்தால் 6 சதவிகிதம் என்றிருக்கிறது. ஆகவே "வெஜிட்டபிள் ப்ராடக்ட்ஸ்" என்பதை மாற்றி "வெஜிட்டபிள் ஆயில் ப்ராடக்ட்ஸ்" என்று சேர்ப்பதுதான் சரியாயிருக்கும்.



14th February 1959]

**Sri A. V. P. ASAITHAMBI**: ஐட்டம் 50-ல் சூடத்திற்கு 6 சத விகிதம்.

**Mr. SPEAKER**: அதற்கு நாம் வரவில்லை, 46-ல் இருக்கிறோம்.

***The Hon. Sri R. VENKATARAMAN**: இப்பொழுது "வெஜிட்டபிள் ப்ராடக்ட்ஸ்" க்கு 2 சத விகிதம் பாயின்ட்டாயிருக்கிறது. இப்பொழுது போடப்பட்டிருக்கிறது 6 சத விகிதம் பாயின்ட் ஆகும். வசூல் செய்கிற இடத்தைத்தான் மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் இதற்கு இதுவரை வரி இல்லாமல் இப்பொழுது திடீரென்று 6 சத விகிதம் போட்டதாக நினைக்கிறார்கள். அது சரியல்ல. இப்பொழுதுள்ளதைத்தான், மல்டி பாயின்ட்லிருந்து, ஸிங்கள் பாயின்ட்டாக மாற்றியமைக்கிறோம். ஆகவே இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்வதற்கில்லை.

**Sri K. SATTANATHA KARAYALAR**: நான் கொடுத்திருக்கும் திருத்தம் ஒரு விளக்கம் தெரிவதற்காகத்தான். Furs and skins என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. கிராமாந்திரங்களில் தோலை உபயோகப்படுத்தி, கமலையில் தண்ணீர் இறைக்க உபயோகப்படுத்துகிறார்கள். அப்படி வரக்கூடிய தோலுக்கு இதன் அடிப்படையில் தீர்வை வரும் என்று தோன்றுகிறது. சில இடங்களில் மாட்டுத்தோலை தண்ணீர் இறைப்பதற்கு, பக்கட் செய்ய உபயோகிக்கிறார்கள், சாதாரணமாக சக்கிலியர்கள் போன்றவர்கள். பெரிய வியாபாரத் தொழிலாக அல்ல—சிறு குடிசைத் தொழிலாக அதைச் செய்கிறார்கள். இறந்துபோன மாட்டின் தோலை எடுத்து அதை எப்படி உபயோகிக்கலாம் என்று பார்த்துத் தண்ணீர் இறைக்கும் கமலைக்கு பக்கட் செய்வதற்குள் ஒரு இணைப்பொருளாக உபயோகிக்கிறார்கள். அந்தத் தோலுக்கு இத தீர்வை வருமா? அதுவும் ஸிங்கிள் பாயின்ட்டாக இருப்பதினால் இதை வலியுறுத்திக் கூறுகிறேன். நடைமுறையிலாவது அதற்கு விதிவிலக்கு இருக்குமென்று அமைச்சர் அவர்கள் சொன்னால் அது அந்த ஏழை மக்களுக்கு நன்மை பயப்பதாக இருக்கும்.

**Sri A. V. P. ASAITHAMBI**: இந்த சூடமானது பகவனுக்காக வேண்டி பக்தர்களால் கொளுத்தப்படுகிற ஒரு பொருளாகும். இதற்கு 6 சத விகிதம் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. பகவனுக்காகவும், பக்தர்களுக்காகவும் பரிந்து பேசக்கூடிய அளவிற்கு எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததற்கு மகிழ்ச்சியடைகிறேன். இந்த 6 சத விகிதம் என்பது ஆண்டவனுக்கே அடுக்காத செயலாக இருப்பதால் இதை அடியோடு ரத்து செய்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**Sri M. R. KANDASWAMI MUDALIYAR**: சூடத்திற்கு விதிக்கப்பட்டிருக்கிற 6 சத விகிதம் வரி கூடுதல் என்று சொல்வதற்கில்லை. அது, ஆண்டவனுக்கு அடுக்கக் கூடியதுதான். ஏனெனில், ஆண்டவனை தரிசிக்கக்கூடியவர்கள் அதிகம் பணம் கொடுத்து சூடம் வாங்கிக்கொளுத்தி, ஜோதியின் வடிவமாக ஆண்டவன் இருக்கிறான் என்பதைக் கண்டு கொண்டு மன நிம்மதி பெற்று ஆண்டவன் அருளைப் பெற அதிக வாய்ப்பளிப்பதாகும் என்று கூறிக்கொண்டு சூடத்திற்கு அதிக வரி போடுவதில் எங்களுக்கு கவலையில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆண்டவனுக்கு சூடம் கொளுத்த, அது பலம் 4 அணாவிற்குப் பதில் 10 அணாவாக இருந்தாலும் மக்கள் வாங்கி கொளுத்த சித்தமாக இருக்கிறார்கள். ஆகவே இந்த வரி இப்படியே இருக்கலாம், எனக் கூறுகிறேன்.

**Sri A. GOVINDASAMY**: ஆண்டவனைப்பற்றி நான் பேச வரவில்லை. கர்ப்பூரத்தைப்பற்றித்தான் பேச வந்திருக்கிறேன். கர்ப்பூரம் மருந்திற்கு உபயோகிக்கப்படும் பொருளாகும். ஆகவே அதின் மீதுள்ள வரியைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பக்தர்களுக்கு பரிந்து

[Sri A. Govindasamy] [14th February 1959

பேசினாலும்கூட அதை ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்கிறார்கள். ஆகவே, ஆண்டவன் விஷயத்தில் நான் தலையிடவில்லை. மருந்திற்கு சூடம் உபயோகமாக இருப்பதால் அதற்கு வரி விலக்கு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN: Furs and skins "(other than those of cattle, sheep and goats)" என்றிருக்கிறது. நடைமுறையில் ஏதாவது கஷ்டம் , ஏற்பட்டால் அதைப்பற்றிக் கட்டாயம் கவனிக்கலாம். அதைச் சேர்க்கவேண்டுமென்ற உத்தேசம் இல்லை. கற்பூரத்தைபற்றி நான் அதிகமாக ஒன்றும் சொல்லப் போவதில்லை. இப்பொழுது இருக்கிற வரியைத்தான் பாயின்ட்டாகயிருப்பது லிங்கள் பாயின்ட்டாக மாற்றியமைக்க பட்டிருக்கிறது.

SRI K. SATTANATHA KARAYALAR: Wattle bark including dyeing and tanning materials" என்றிருக்கிறது. நம் நாட்டில் "டானிங்" பொருள்கள் அதிகமாக் கிடைக்கவில்லை. அதை அதிக விலை கொடுத்து வெளி நாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டியிருப்பதால் உள்நாட்டிலேயே வாட்டில் மரங்கள் இப்பொழுது வெகுவாக பயிரிட்டு வருகிறோம். இதில் பாரஸ்ட் இலாகாவும் அதிக ஊக்கம் கொடுத்து வருகிறது. தனிப்பட்ட நபர்களும் சில இடங்களில் வாட்டில் மரங்கள் வளர்க்க முன் வந்துள்ளார்கள். ஆகவே, வெளிநாட்டிலிருந்து வருகின்றவைகளுக்குத்தான் வரி உண்டா, அல்லது நம் நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுகிற, வாட்டில் பார்க்குக்கும் உண்டா என்று தெரியவில்லை. நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் வாட்டில் பார்க்குக்கும் வரி உண்டு என்று தெரிகிறது. இது, டானிங் பொருளாக இருப்பதாலும், கிடைக்கக் கூடாத அபூர்வ பொருளாகவும் இருப்பதால் இதற்கு விதிவிலக்கு கொடுக்க வேண்டுமென்று கோரியுள்ளேன்.

11-30 a.m. * SRI M. J. JAMAL MOIDEEN: Mr. Speaker, Sir, before moving my amendment I just want to point out a type mistake that has crept into the amendment. I wanted the substitution of figure '2' for '3'.

MR. SPEAKER: May I just point out to the hon. Member that he cannot move his amendment now? When the amendments were taken up the hon. Member was not in his seat and therefore it was treated as withdrawn. If, however, the hon. Member wants to move it now, it can be done only with the special permission of the Speaker.

However there is an identical amendment moved by the hon. Member Sri Karayalar. The hon. Member may speak on that amendment. But if he wants to move his amendment he must obtain the permission of the Speaker. If the hon. Member makes a request, I shall consider his request.

* SRI M. J. JAMAL MOIDEEN: His amendment is slightly different from mine. I would like to move my amendment. Therefore I request the Hon. Speaker to permit me as a special case to move my amendment.

MR. SPEAKER: I allow the hon. Member to move the amendment as a special case.



14th February 1959]

* SRI M. J. JAMAL MOIDEEN: Mr. Speaker, Sir, I move—

"Omit item 60;

or

"In item 60 (i) in column (3) *for* the words 'at the point of last purchase in the State' *substitute* the words 'at the point of first sale in the State' and

(ii) in column (4), *for* the figure '3' *substitute* the figure '2'."

SRI K. SATTANATHA KARAYALAR: Mr. Speaker, Sir, I second the amendment.

* SRI M. J. JAMAL MOIDEEN: I want to make another request to the Hon. Speaker. There is another amendment in my name, amendment No. 189. I want to leave the House a little earlier and therefore I would request the Hon. Speaker to permit me to move that also.

MR. SPEAKER: The hon. Member cannot do that.

* SRI M. J. JAMAL MOIDEEN: In the list of amendments circulated in the last line of my amendment there is a typographical error. The figure occurring in the line should be '2' and not '1'. I had intended that '3' should be substituted by the figure '2'. I had made this correction while moving the amendment. Sir, my intention in asking this item to be omitted is this. Hitherto, it was subjected to multipoint tax. Now they have made it a singlepoint point tax at three per cent. The other day the Hon. Minister while replying to the general debate on the Bill said that all the recommendations made by Dr. Loganathan had been adhered to and in the case of hides and skins and also the wattle-bark the same thing had been followed. We were all glad when Dr. Loganathan was appointed to go into the question of sales tax. But when we met him we found he did not have a free mind.

MR. SPEAKER: How can the hon. Member say that? It won't be correct for the hon. Member to make that accusation against Dr. Loganathan here.

SRI M. J. JAMAL MOIDEEN: I am not making an accusation.

MR. SPEAKER: The hon. Member said that, Dr. Loganathan did not have a free mind in the matter. That is an accusation.

* SRI M. J. JAMAL MOIDEEN: He was under the impression that he should try to eliminate difficulties and see that the revenue from any particular item was not reduced. That was the thing he was labouring under. I said all his investigations

[Sri M. J. Jamal Moideen] [14th February 1959

were based on that one idea that no amount pertaining to any particular item should be reduced. That is why I said so. If I have used a wrong word or expression or language I am sorry for it. I would like to apologise for it. But the fact remains that he did not consider these things on the merits of the question. Of course we represented matters to him. He said : 'All right, if I do something, can you assure me that the same quantum of revenue could be collected from the same articles and the basis on which it could be done?'

Now, I would request the Hon. Minister to put this again under the multipoint tax instead of putting it under the singlepoint, with three per cent because there is not too many stages in the sale of these materials.

SRI S. LAZAR : ஸார், இதில் மியூஸிக்கல் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் என்று சொல்லப்பட்டிருக்கிறது. சாதாரணமாக இந்த சங்கீதக் கருவிகளை ஆசாரி போன்ற தொழிலாளிகள் கிராமங்களில் செய்து நகரப் புறங்களில் கொண்டுபோய் விற்கக்கூடிய ஒரு பொருளாக இருந்து வருகிறது. பெரிய அளவில் இம்மாதிரிக் கருவிகளைத் தயாரிக்கக்கூடிய கம்பெனி ஒன்றிரண்டு இருக்கலாம். ஆகவே இதை ஸிங்கிள் பாயிண்ட் என்று போட்டிருப்பதிலிருந்து எடுத்து மல்டி பாயிண்ட்டுக்கு மாற்றிவிட்டால் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும். ஏற்கெனவே இந்த தொழில் நாளடைவில் சீர்கேடு அடைந்து வருகிறது என்று அடிக்கடி இந்தச் சபையிலேயே கனம் வேதரத்தினம் பிள்ளை அவர்கள் போன்றவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையில் இந்த பொருட்களுக்கு வரி போடுவது உசிதமல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இதை வேண்டுமானால் பெரிய கம்பெனிகள் கொடுக்கலாம். அதற்காக இப்போது ஒருமுனையில் இருப்பதை பலமுனை என்று மாற்றி அமைத்து சிறு தொழிலாளர்களுக்கு இதிலிருந்து விலக்கு அளிக்கவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இது போன்ற திருத்தங்களை கொண்டு வருவதின் நோக்கம், இதைப்பற்றி பரிசீலனை செய்தவர்கள் சரியான விதத்தில் பரிசீலனை செய்யவில்லை என்று குறிப்பிடுவதற்காக அல்ல. "யானைக்கும் அடி சறுக்கும்" என்று சொல்வது மாதிரி சிலவேளை இம்மாதிரிப்பட்ட விஷயங்கள் பரிசீலனை செய்தவர்களுடைய கவனத்திற்கு வந்திருக்காது என்ற எண்ணத்துடன் இம்மாதிரிப்பட்ட திருத்தங்கள் கொடுக்கப்படுகின்றன. "நாங்கள் இதை யெல்லாம் கவனத்தில் எடுத்துக்கொண்டு பரிசீலனை செய்துதான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறோம்," என்று சொன்னால் நாங்கள் அதை வலியுறுத்தத் தயாராக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

11-30 a.m. MR. SPEAKER : I want to clear the misapprehension of the hon. Member Sri Jammal Moideen. If he is making any statement of anything which is in print and which is before the House, then he is justified. Otherwise, he will not be correct in saying that Dr. Loganathan was under some embarrassment. There might have been some personal conversation between the hon. Member and Dr. Loganathan which might have led to that impression but we cannot discuss that in the House. So, I would request the hon. Member to state if there is anything in print to support the reference made by him. Then, the hon. Member is entitled to make such a reference. Otherwise such references will be embarrassing both to Dr. Loganathan and to this House.



14th February 1959] [Mr. Speaker]

Now, the Hon. Minister will reply. If necessary, I will call the hon. Member.

THE HON. SRI R. VENKATARAMAN : The hon. Member Sri Jammal Moideen has made a categorical statement in the House with regard to the scope of the enquiry conducted by Dr. Loganathan. Therefore, I want to read a portion from the report of Dr. Loganathan.

'No detailed terms of reference was given to me. I was informed by the Minister that I was free to examine all aspects of the sales tax and make such recommendations as I deemed appropriate. However, in examining the possibilities of simplifying the Sales Tax System in Madras, I held the following general objectives in view'.

Among the objects he set to himself, one was 'It should give relief to the consumers to the extent that revenue considerations will permit'.

Therefore, there was no question of Dr. Loganathan not being a free agent. The responsibility of taking a decision with regard to the levying of a tax and the rate was that of the Government. It does not therefore mean that the Government should not be advised even against its own inclination by an expert. That is the approach that the Government took in this matter. We were prepared to entrust the enquiry to the expert and take the blame for not following one or two of his recommendations ourselves. That is what we have done. Therefore, it would not be right to question the validity of his recommendations. You may question the validity of the conclusion reached by the Government on this matter.

This question has always been a vexed one, the taxation of hides and skins and wattle-bark and other tanning ingredients and so on. Several conflicting representations were received and Government felt that the point of taxation should be the last purchase in the State. Dr. Loganathan examined all the aspects of the case. The trade made several representations to him and he came to the conclusion that the taxation of wattle-bark should be at the last purchase namely by the tanner, is the appropriate point of levy of tax. Otherwise all the objections with regard to small dealers, the objections regarding cultivation of wattle-bark raised by some hon. Members, will have some validity. Now there is no difficulty with regard to the cultivation of wattle-bark, no question of small dealers and so on. It is only at the point of purchase by the tanner who tans and exports to other countries that the levy is made. I think that is the most appropriate place and the levy is itself is not very heavy. It is appropriate and I have nothing more to add.

MR. SPEAKER : If the hon. Member wants to say anything by way of personal explanation in support of his contention I will allow. But he cannot make a second speech on the amendment.

[14th February 1959

* SRI M. J. JAMAL MOIDEEN : Mr. Speaker, Sir, I want to make a personal explanation. I have already made a long speech and I might have given a wrong impression. In his report, Dr. Loganathan has stated that whatever be the reforms suggested, they should not involve any loss in the current level of the State revenue from sales tax. This has perhaps led me to give a wrong impression. Whatever it is . . .

THE HON. SRI R. VENKATARAMAN : He could have stated . . .

MR. SPEAKER : Let the hon. Member complete his personal explanation.

SRI M. J. JAMAL MOIDEEN : As I said, I might have given a wrong impression and I am sorry about it.

As regards the reference made by the Hon. Minister regarding tanning . . .

MR. SPEAKER : The hon. Member cannot make a second speech. He must confine himself to what is stated in the Report of Dr. Loganathan.

*Item 62—Palmyra fibres and stalks*

SRI M. S. SELVARAJAN : கனம் சபாநாயகர் அவர்களே, என்னுடைய திருத்தத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருப்பதாகச் சந்தோஷப்படுகிறேன். இந்த இடத்தில் மற்றொன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். தும்பு எடுக்கும் தொழில் பெரும்பாலும் குடிசைத் தொழிலாகத்தான் இருக்கிறது. இன்றைய தினம் இருக்கிற பொருளாதார நிலையை உத்தேசித்து அரசாங்கம் இந்த அளவிற்கு ஒரு சிறு சலுகை கொடுப்பதற்கு முன் வந்திருக்கிறது. ஆனால் எதிர் காலத்தில் இந்த வர்த்தகத்தினால் வெளிநாட்டினரின் பணம் நம் கைக்கு வருவதற்கு ஏது இருக்கிறது. அது ஒரு புறம் இருக்க, இந்தத் தொழில் முற்றிலும் குடிசைத் தொழிலாக இருப்பதால் இன்னும் எந்த விதத்தில் சலுகை அளிக்கலாம் என்று அரசாங்கம் புனர் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

SRI T. S. RAMASWAMY PILLAI : கனம் சபாநாயகர் அவர்களே, செலெக்ட் கமிட்டியிலே இந்த ஐடத்தைப்பற்றி நன்றாக விவாதித்தாகி விட்டது. அமைச்சர் அவர்கள் இதைப் பரிசீலனை செய்வதாகச் சொன்னார்கள். கன்னியாகுமரி, திருநெல்வேலி போன்ற மாவட்டங்களிலும், தென் ஆற்காடு மாவட்டங்த்திலுங்கூட ஏராளமான ஏழை மக்கள் அங்கேயெல்லாம் பனம் தும்பு என்று சொல்வோர்கள், இங்கே என்ன சொல்வார்களோ தெரியாது. பனை நார் இவைகளை எடுத்து வெளிநாடுகளுக்குப் அனுப்பி, அதிலிருந்து அவர்கள் பிழைத்துக்கொண்டிருந்தார்கள். இது ஒரு குடிசைத் தொழிலாக இருக்கிறது. இத்தகைய குடிசைத் தொழிலுக்கு ஆதரவு காட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எத்தனையோ குடிசைத் தொழில்களுக்கு விதி விலக்கு செய்திருக்கிறோம். இதற்கும்கூட விதி விலக்குச் செய்யவேண்டுமென்று இங்கு குறிப்பிடுகிறேன். நம் அமைச்சர் அவர்கள் 3 சதமானம் இருந்ததை 2 சதமானமாக ஆக்கியதைப்பற்றி மகிழ்ச்சியடைகிறேன், என்னுடைய திருத்தம், அதை ஒரு சதமானமாகக் குறைக்க வேண்டுமென்பது. ஏனென்றால் சில தேச வர்த்தகத்தில் இருந்து அனுப்பப்படும் பொருள்களுக்கும் போட்டியாக இப்போது வந்துவிட்டது. இந்த வியாபாரம் இல்லாவிட்டால் ஆயிரக்



14th February 1959] [Sri T. S. Ramaswamy Pillai]

கணக்கான குடும்பங்கள் பிழைப்பில்லாமல் போய்விடும். இப்போதே சில கம்பெனிகள் இரண்டு மூன்று கம்பெனிகள் அடைக்கப்பட்டுவிட்டது கொலச்சல் போன்ற இடங்களிலே, திருநெல்வேலி ஜில்லாவிலே கூட. ஆகையால் வேறு குடிசைத் தொழில்களுக்கு விதி விலக்குக் கொடுப்பதுபோல இதற்கும் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI K. SATTANATHA KARAYALAR : கனம் சபாநாயகர் அவர்களே இந்த பனை நாருக்கு விதித்திருக்கக் கூடிய வரியை மூன்று சதமானத்திலிருந்து இரண்டு சதமானமாகக் குறைத்துக் கொள்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது ஒரு முனை வரியில் இருப்பது, இரண்டு, மூன்று தடவைகளாக மாறும் என்ற அடிப்படையில் டாக்டர் லோகநாதன் அவர்கள் சிபாரிசு செய்துள்ளார்கள். இந்த இனத்திலே சர்க்காருக்குக் கிடைக்கக் கூடிய வரி 20,000 ரூபாய்தான் இருக்கும் என்று தெரிகிறது. இந்தத் தொழிலிலே ஈடுபட்டுள்ள மக்கள் 20,000-க்கும் அதிகமாக இருக்கிறார்கள். இவர்கள் வேலை செய்வதைப் போய்ப் பார்த்திருந்தால், இதற்கு வரி விதிக்கவேண்டும் என்ற எண்ணம் வந்திருக்காது. கத்தாழையில நார் எடுக்கிறார்களே அது மிகவும் கஷ்டமான வேலை. அதிலும் கஷ்டமான வேலை இது பனை மட்டை இப்போது அடுப்பு எரிக்கத்தான் உபயோகப்படும். இந்தத் தொழிலும் எல்லா வேளையிலும் நடப்பதில்லை. இதை ஒரு பஞ்சகால வேலை என்று சொல்லலாம் அல்லது பஞ்ச நிவாரண வேலை என்று கூடச் சொல்லலாம். விவசாயத்திலே வேலை இருக்கக் கூடிய நாட்களிலே இந்த வேலையை யாரும் செய்ய மாட்டார்கள். மட்டையை ஊரவைத்து, அடித்துப் பதனிட்டு பைபராக்குவதிலே ஈடுபட்டால், அதிலே சாதாரணமாக ஒரு மனிதருக்குக் கிடைக்கக் கூடியது 8 அணா கூட இருக்காது. ஆகையால் கொஞ்சம் சிந்தனை செய்து பார்க்க வேண்டும். எவ்வளவு கஷ்டப்பட்டு வேலை செய்தாலும் 8 அணாவிற்கு மேல் கிடைக்காது. அதோடு இருவான வேலை இருக்கக்கூடிய காலத்தில் யாரும் இந்த வேலைக்கு வருவதில்லை. அடுப்பு எரித்து வீணாகப் போகக் கூடிய மட்டைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். அங்கே எலெக்ட்ரிக் ஸ்வீப்பர்ஸ் என்று சொல்லக் கூடிய யந்திரத்தில் துடைப்பதில் உள்ளே இணைத்துப் பெருக்குவதற்கு உபயோகப்படுத்துகிறார்கள். இது விஞ்ஞானத் துறையிலே வளர்ந்தோங்கும் நாட்டிலே உபயோகப்படுகிறது. இதற்கும் இப்போது போட்டி வந்துள்ளது. தென் ஆப்பிரிக்காவில் இதற்கு எதிராக அதிக நீளமுள்ள பைபர் கண்டுபிடிக்கப்பட்டு போட்டியாக வந்துள்ளது. எக்ஸ்போர்ட் புள்ளி விவரங்களைப் பார்த்தாலும் கடந்த நான்கைந்து ஆண்டுகளில் ஏற்றுமதியானது குறைந்து வருகிறது. கூடிய சீக்கிரம் நின்று கூட விடலாம். இதற்குத் தீர்வை விதிப்பதானது அகில இந்திய ரீதியில் டாலர் சம்பாதிப்பதில் இடைஞ்சலாக வந்து விடும். இது இங்கு வீணாகப் போகக் கூடிய ஒரு பொருள்தான். பஞ்ச காலத்தில் பஞ்ச நிவாரணமாகப் பிழைப்பைக் கொடுக்கக் கூடிய தொழிலாகும் இது. குறிப்பிடத் தகுந்த அளவு வரிமூலம் பணம் வராத இனம். ஆகையால் இந்த இனத்திற்கு விதி விலக்குக் கொடுக்கவேண்டும் என்று பணிவோடு வேண்டிக் கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் இப்போது அதை 2 சதமானமாகக் குறைப்பதற்கு ஒத்துக் கொண்டிருக்கிறார். இதை முற்றிலும் நீக்கிவிட்டால் வரி இனத்தில் வருவாய்க்குக் குந்தகம் வந்துவிடும் என்று சொல்வதற்கில்லை. இதில் அரசாங்கம் என்ன தொகை வரிமூலம் எதிர் பார்க்கிறார்கள் என்று தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆகையால் இதை முற்றிலும் நீக்கி விடுவது சாலச் சிறந்தது என்று சொல்ல விரும்புகிறேன்.

SRI T. T. DANIEL : Mr. Speaker, Sir, while appreciating the Government for having reduced the rate of tax from three per cent to two per cent, I would again appeal to the Hon. Minister to exempt this article from this tax completely. As has been correctly pointed out, this industry is carried on partly on a factory basis

and partly as a cottage industry. The conditions of the workers are really very miserable and even though they may work for eight or nine hours, they would not get even 10 or 12 annas.

I must also bring to the notice of the Government that there is really a very keen competition between our palmyra fibre and the palmyra fibre from Mexico and South Africa and also American synthetic fibre in the world market. It is seen from the balance sheets prepared by several companies that the quantity exported is being reduced during the last two or three years. I must also tell the House that some companies have already closed down and if the present state of affairs continue, perhaps they may even insist on the reduction of the workers in the factories. It is in such a condition that this industry is existing at present and I would therefore request the Hon. Minister to exempt this article from this tax completely.

* SRI A. GOVINDASAMY : கனம் சபாநாயகர் அவர்களே, மது விலக்கு ஏற்பட்டதன் விளைவாக பாதிக்கப்பட்ட மக்கள் இந்தக் குடிசைத் தொழிலிலே பெருவாரியாக ஈடுபட்டிருக்கிறார்கள். மது விலக்குத் திட்டத்தினாலே பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பல விதச் சலுகைகளைத் தேடித் தருவதாகச் சொல்லிவருகிற அரசாங்கம், திட்டத்தினாலே பாதிக்கப்பட்டு பனைமரத்தை வைத்துக் கொண்டிருப்பவர்கள் பனை நாரிலிருந்தும், பனை ஈர்க்கிலிருந்தும் அன்னியச் செலாவணியைச் சம்பாதிக்கக் கூடிய நல்ல வசதி இருக்கக் கூடிய தொழிலாக உள்ள தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்களுக்கு வேண்டிய சலுகைகளை அளிக்க வேண்டியது அவசியமாகும். அமைச்சர் அவர்கள் இதற்கு 3 சதவீதமாக இருந்ததை 2 சதவீதமாகக் குறைத்ததை வரவேற்கிற நேரத்தில், நாங்கள் கேட்கிறதற்கு முன்பே குறைத்துக் கொள்ள முன் வந்ததற்காக அவருடைய நல்லெண்ணத்தைக் கண்டு பாராட்டுகிறேன். அதோடு நாங்கள் கேட்டதற்காக இன்னும் ஒரு சதவீதம் குறைத்து அதாவது ஒரு சதவீதமாகக் குறைத்தால் இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள மூன்று மாவட்ட மக்கள் அமைச்சர் அவர்களைப் பெரிதும் பாராட்டுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. இப்போது கைத்தறிக்கு விதி விலக்கு அளித்திருக்கிறார்கள், கைத்தறி போல இதுவும் ஒரு குடிசைத் தொழில். இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் பனை ஈர்க்கிலிருந்து பெட்டி போன்றவைகள், மணிபர்ஸ் போன்றவைகள் எல்லாம் செய்கிறார்கள். இந்தத் தொழில் நசுங்காது இருக்கவேண்டுமானால், அமைச்சர் அவர்கள் ஏற்கெனவேயே ஒரு சதவீதம் குறைத்துக் கொண்டுவிட்டார்கள், எங்களுக்காக வேண்டி, மக்கள் நலனைக் கருதி இன்னும் ஒருசதவீதம் குறைத்தால் எல்லோரும் நன்றி செலுத்தவார்கள் என்று சொல்லிக் கொண்டு, இதை நன்றாக ஆலோசித்து சொல்லவேண்டும், வழக்கமாகச் சொல்லுகிற பதிலையே இதற்கும் சொல்லக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

11-40 a.m. SRI M. R. KANDASWAMI MUDALIYAR : தலைவர் அவர்களே, இந்தத் தொழில் என்னுடைய சேலம் ஜில்லாவிலும் கூட பரவலாக இருந்துகொண்டு வருகிறது. இந்தத் தொழில் மிகவும் போற்றுதற்குரிய முறையில் ஹரிஜனங்களாலும், தாழ்ந்த வருவாய் உள்ளவர்களாலும் நடைபெறுகிறது. கத்தாழை நார் எடுப்பது, பனை மட்டையிலிருந்து நார் எடுப்பது என்றால் மிக அசுத்தமான பொருளை நீக்கி எடுக்கவேண்டிய ஒரு காரியம். அசுத்தமான தண்ணீர் நாற்றம் இவைகளைச் சகித்துக்கொள்ள வேண்டிய முறையில், மிகக் கஷ்டமான முறையில் நார் எடுத்து ஜீவனம் செய்யக்கூடிய முறையில் இதில் ஈடுபட்டிருப்பவர்கள் இருக்கிறார்கள். அதோடு கூட, இந்த நார் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதன் [illegible] நமக்கு டாலர் முதலான அன்னிய நாட்டுச் செலாவணியைச் [illegible]கொடுக்கிறது. இத்தகைய தொழில் நசித்துப் போகாமல



பார்த்துக்கொள்ளக்கூடிய முறையிலும், இந்தத் தொழிலில் ஈடுபட்டு மிக எளிய நிலைமையில் கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பவர்களைக் காப்பாற்றும் வகையிலும், இதற்கு விதிவிலக்கு அவசியம் தேவை. இரண்டு சதவிகிதமாக குறைத்திருக்கிறார்கள். திரு. கரையாளர் அவர்கள் சொன்ன மாதிரி, இந்தத் தொழில் மிக அழிந்து போகக்கூடிய நிலைமையிலே சிறிய வர்க்கத்தினராலே இயக்கக்கூடிய தொழிலாக இருப்பதால், அதுவும் குடிசைத் தொழிலாக இருப்பதால், குடிசைத் தொழிலுக்கும் கூட்டுறவு இயக்கத்திற்கும் நம் அரசாங்கத்திலிருந்து ஒத்தாசைசெய்து, வளர்க்க ஏற்பாடு செய்துகொண்டிருப்பதால், 2 சதவிகிதம் என்பதை 1 சதவிகிதமாகக் குறைப்பது நல்லதாக இருக்கும். சேலம் ஜில்லாவில் இத்தொழில் பரவலான முறையில் நடப்பதால், அதை அமைச்சர் அவர்கள் நன்றாக யோசித்து, கூடுமானால் குறைப்பதற்கு முயற்சி செய்யவேண்டும். ஏற்கனவே பல மெம்பர்கள் சொல்லியதன் காரணமாக ஒரு சதவிகிதம் குறைந்திருக்கிறது; மேலும் இன்னொரு சத விகிதம் குறைத்தால் வசதியாக இருக்கும். அதை முடிந்தால் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

SRI N. K. PALANISAMI : கனம் சபா நாயகர் அவர்களே கனம் மந்திரி அவர்கள் முன்பு பேசியபோது, "வியாபாரம் செய்வதில் தனிப்பட்டவர்களுக்கும் கூட்டுறவு சங்கங்களுக்கும் ஒரே சலுகை தான், கூட்டுறவு சங்கங்களுக்குத் தனிச் சலுகை கிடையாது " என்று சொன்னார்கள். இம்மாதிரி ஒரு கொள்கை வைத்திருப்பதன் காரணமாகத்தான் சிறு சிறு கைத்தொழில்கள் அபிவிருத்தி அடையாமல், ஆரம்பித்த நிலையிலேயே இருந்துகொண்டிருக்கின்றன. கைத்தறி கூட்டுறவு சங்கத்தை எடுத்துக்கொண்டால், கைத்தறித் துணிக்கு ரிபேட் கொடுப்பதோடு விற்பனை வரிச் சலுகை கொடுக்கப்படுகிறது. அதேபோல், சிறு சிறு கைத்தொழில்களுக்கும் சலுகை கொடுத்தால்தான் பெரிய தொழில்களுடைய போட்டியிலிருந்து அவ்வைகள் காப்பாற்றிக்கொள்ளக்கூடும்.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I rise on a point of order. This item 62 relates to palmyra fibres and stalks, and not to co-operative society. The hon. Member is speaking on the merits of the co-operative society. (Laughter.)

MR. SPEAKER : I was about to draw the hon. Member's attention to that fact. That is right.

SRI N. K PALANISAMI : I am coming to that Sir ஆகவே, பல இடங்களில் பல பேர்கள் இன்றையதினம் சர்க்காரைக் கூட்டுறவு ஸ்தாபனங்கள் வைத்து .

MR. SPEAKER : Let the hon. Member confine himself to palmyra.

SRI N. K. PALANISAMI : குறைந்தது கூட்டுறவு ஸ்தாபனம் மூலமாக உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்காவது இந்த விற்பனை வரியிலிருந்து விதிவிலக்கு அளிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். . . . . . . .

MR. SPEAKER : I am sorry. If the hon. Member will not listen to me, I cannot allow him to proceed. Further, a point of order has been raised and I uphold the point of order. The Hon. Minister will speak now.

* THE HON. SRI R. VENKATARAMAN : கனம் சபாநாயகர் அவர்களே, ஒரு ஊசி மேலே கோபுரம் கட்டினால் எவ்வளவு 'பௌண்டேஷனி'லே இருக்குமோ அதுமாதிரி எல்லா ஆர்குமெண்டுகளையும் இதற்குச் சொல்லிவிட்டார்கள். காரணம் என்னவென்றால், இந்த 'Palmyra fibre' வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, அந்த இடங்களிலே விற்பனை செய்ய

[Sri R. Venkataraman] [14th February 1959

முடியாமல் இன்று மூடும்படியான நிலைமை ஏற்பட்டு விட்டது என்று சொன்னார்கள். ஒரு பண்டத்தின் இண்டர்நாஷனல் ப்ரைஸ் ஒரு சத விகிதம், இரண்டு சத விகிதம் வரி விதிப்பதினால் கொஞ்சங்கூட பாதிக்கப் படுவதில்லை. அதற்கு வெளி நாடுகளிலே தேவையோ, வெளி நாடுகளிலே விலையோ அந்தந்தப் பண்டங்களுக்கு ஏற்பட்டிருக்கும் ' உலகத் தேவை-சப்ளை நிலைமை (World supply and demand position) யைப் பொருத்தது. அதற்கு உரிய மற்ற பண்டங்கள் அகப்படுவதையும் பொருத்தது. அங்கு விலை கிடைக்கவில்லை, அதனால் விற்பனை வரியைக் குறை ' என்று சொல்வதற்கு ஆதாரம் இல்லை.

ஆனால், நாம் முக்கியமாகப் பார்க்க வேண்டியது என்னவென்றால், நம்முடைய ராஜ்யத்திற்குப் போட்டியாக பக்கத்து ராஜ்யத்திலே என்ன வரி விதிக்கிறார்கள், அவர்கள் போடும் வரி விகிதம் நம்முடையதைவிட குறைவாக இருக்கிறதா என்பது. அவர்களுடைய வரி விகிதம் குறைவாக இருந்தால், அவர்களுடைய ராஜ்யத்தில் வாங்கும் நிலைமை ஏற்படும் என்பதைத் தான் அவர்கள் எடுத்துப் பார்க்க வேண்டும். அவ்வாறு பார்க்கின்ற போது, இந்தப் பண்டத்திற்குப் போட்டியாக இருக்கும் ஒரு ராஜ்யம் கேரள ராஜ்யம். அங்கே தான் 'பைபர்' அதிகமாக உற்பத்தி செய்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். அந்த ராஜ்யத்தில் இதற்கு இரண்டு சத விகிதம் Single பாயிண்டாகப் போட்டிருக்கிறார்கள். Fbire is taxed as coir at 2 per cent single point.

ஆகவே, அந்த இடத்தில் இரண்டு சத விகிதம் சிங்கில் பாயிண்ட் விற்பனை வரி போடுகிறார்கள். நமக்கு அவ்வளவு வளர்ச்சியடைந்த தொழில் அல்லது இது. அவர்களோடு ஓரளவுக்குப் போட்டியிடவேண்டு என்பதற்காக அதை இரண்டு சத விகிதம் ' ஸிங்கிள் பாயிண்'டாகப் போட்டோம். வரியைக் குறைக்க வேண்டும் என்று கேட்டார்கள், அதற்காக ஒரு சத விகிதம் குறைத்தோம் என்ற முறையில் ஒரு சத விகிதம் இதற்கு வரியைக் குறைக்கவில்லை. பக்கத்தில் என்ன விதமாக இருக்கிறது, நாம் என்ன விதமான சலுகை கொடுத்தால் நம்முடைய ராஜ்ய 'பைபரு'க்கு ஒரு சலுகை ஏற்படும் என்பதை யொட்டி இரண்டு சத விகிதம் ஸிங்கிள் பாயிண்ட்டாகக் குறைத்து கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் சிறிய தொழில்களில் இருக்கின்றவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று சொல்வதற்கு ஆதாரம் இல்லை என்று நான் மீண்டும் கூற விரும்புகிறேன். இதுவும் வாட்டில் பார்க்கைப்போல் at the point of last purchase in the State கட்டத்தில் தான் போடப்பட்டிருக்கிறது. அந்தக் கட்டத்தில் ஏராளமாக வாங்குகின்றவர்கள் ஏற்றுமதி செய்கின்றவர்கள்தான். ஏற்றுமதி செய்கின்றதவர்கள் தான் அதைக் கொடுக்கும்படியாக இருக்கும். ஆகவே, தயவு செய்து இந்தத் திருத்தத்தை வாபஸ் பெறும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

*Item 63—Sugarcane—Amendment* 185

Sri N. K. PALANISAMI : Sir, I move my amendment.

Mr. SPEAKER : It has already been moved. The hon. Member can speak on it, if he wants. Is he going to speak on it?

Sri N. K. PALANISAMI : கனம் சபாநாயகர் அவர்களே, ஏற்கனவே மத்திய சர்க்காரில் இதற்கு எக்ஸைஸ் வரி போட்டிருக்கிறது. கரும்புக்கும் வரி சர்க்கரைக்கும் வரி என்று ஆய்விடும். முன்பு விவசாயி உற்பத்தி செய்கின்ற பொருளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருக்கும் போது, இங்கே கரும்புக்கு வரி போடுவதில் என்ன அர்த்தம் இருக்கிறது என்று தெரியவில்லை. மேலும், கரும்பு நேரடியாக சர்க்கரை மில்லுக்குப் போவதில்லை. அங்கங்கே ' குர் ' போன்று சர்க்கரை வெல்லம் செய்கிறார்கள். அப்படிப்பட்ட பொருளுக்கு அவசியம் விற்பனை வரி இருக்கக்கூடாது என்பது என்னுடைய திருத்தம். இதை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



14th February 1959]

Sri S. NAGARAJA MONIGAR : கனம் சபாநாயகர் அவர்களே, பொதுவாகவே, இந்தக் கடைசியில் சொல்லப்பட்ட கரும்பு, பனை நார், உருளைக் கிழங்கு போன்றவை தவிர முதலாவது ஷெட்யூலில் வருகின்ற பண்டங்கள் அத்தனையும் மவுண்ட் ரோடிலுள்ள கம்பெனியில் வியாபாரம் செய்பவர்களோ பர்ஸ்ட் லைன் பீச்சிலுள்ள வியாபாரிகளோ கையாளும் பண்டங்களாக இருக்கின்றனவே தவிர, நேற்றையதினம் மெமோரியல்' ஹாலில் தாலுகாக்களிலிருந்தும் ஜில்லாக்களிலிருந்தும் வந்துகூடி முறையிட்டுக் கொண்டிருந்த வியாபாரிகள் கருத்துக்கு இணங்கி அவர்கள் கோரிக் கொண்ட பண்டங்கள் இந்த ஒரு முனை வரியில் இருக்கின்றனவா என்று பார்க்கும்போது பெரும்பகுதி அப்படி இருப்பதாகத் தெரியவில்லை. மோட்டார்கள், மோட்டார் சைக்கிள்கள், ரேடியோ . . .

* Sri A. GOVINDASAMY : கனம் சபாநாயகர் அவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்னை எழுப்ப விரும்புகிறேன். இப்பொழுது நாம் கரும்பு பற்றி பேசுகின்றபோது இதர பல பிரச்னைகளைப்பற்றி பேசலாமா என்று அறிய விரும்புகிறேன்.

Mr. SPEAKER : கனம் அங்கத்தினர் ஸ்ரீ ஏ. கோவிந்தசாமி என்ன சொல்கிறார் என்றால், இதற்கு முன்பு ' ரூலிங் ' கொடுத்ததற்கு மாறாக இப்பொழுது கனம் அங்கத்தினர் ஸ்ரீ நாகராஜ மணிகார் பேசுகிறாரே, அவருக்கு மட்டும் நான் சலுகை கொடுப்பதுபோல் அவரைப் பேசும்படி அனுமதிக்கலாமா என்பது. நான் இப்பொழுது ஸ்ரீ நாகராஜ் மணிகார் அவர்களை மேலும் சம்பந்தம் அல்லாத விஷயத்தைப்பற்றி பேசவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். ' தர்டு ரீடிங் 'கிலே வேண்டுமானால் கனம் அங்கத்தினர் இப்படிப் பொதுவாகப் பேசலாம்.

Sri S. NAGARAJA MONIGAR : உருளைக் கிழங்கு ஒன்றுதான் இருக்கிறது.

The Hon. Sri R. VENKATARAMAN : கனம்சபா நாயகர் அவர்களே; 11-50 a.m.
கரும்பு சம்பந்தமாக சொல்லும்போது கடைசியில் வாங்குகிறவர்கள் கொடுக்க வேண்டும் என்று விதி போடப்பட்டிருக்கிறது. கடைசியில் வாங்குகிறவர்கள் சாதாரணமாக மில்காரர்கள் தான். சர்க்கரை உற்பத்தி செய்யக் கூடிய மில்காரர்கள் தான் வெல்லமாகக் காய்ச்சி வருகிறார்கள். அவர்களுக்குத்தான் பர்சேஸ் டாக்ஸ் போடப்பட்டிருக்கிறது. பர்சேஸ் பாயிண்டில் மூன்று சத விகிதம் போடப்பட்டிருப்பதால் யாரையும் பாதிக்காது. சாதாரணமாக சிறு தொழில் நடத்துகிறவர்களுக்கு இதனால் கஷ்டம் இருக்காது. அந்த முறையில் தான் இந்த வரி விதிக்கப்படுகிறது. மில்காரர்கள் தான் இந்த வரியைக் கொடுக்கப் போகிறார்கள். அதனால் ஒரு விதமான கஷ்டமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

Mr. SPEAKER : Sri S. M. Annamalai can now speak on his amendment relating to item No. 64 (186).

Sri S. M. ANNAMALAI : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இது முக்கியமான திருத்தம். காரணம் என்னவென்றால், கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது உருளைக் கிழங்குக்கு வரி போட்டால் அது விவசாயிகளை பாதிக்காது என்று சொன்னார். சாதாரணமாக வியாபாரிகள் பொருள்களை வாங்கும்போது சாமான் விலை, போக்கு வரத்து செலவு, அதன் பேரிலுள்ள விற்பனை வரி முதலியவைகளை கணக்குப் பார்த்துத்தான் வாங்குவார்கள். அதனால் விவசாயிகள் பாதிக்கப்பட மாட்டார்கள் என்று எப்படிச் சொல்லுகிறார் என்பதுதான் புரியவில்லை.

அடுத்தபடியாக உதகையானது ஒரு மங்கை, அந்த மங்கையின் அழகு அழிந்து போகிறது, அந்த அழகை மேலும் மேலும் பலப்படுத்த வேண்டும் என்று சொல்லி . . .

The Hon. Sri R. VENKATARAMAN : அவர் மங்கை, என்று சொல்லுகிறார், அது என்ன என்பது எனக்குப் புரியவில்லையே. (சிரிப்பு).

**Sri S. M. ANNAMALAI** : மங்கையின் அழகு அழிந்து போய் விட்டது, அந்த அழகை பலப்படுத்த வேண்டும் என்று சொல்லி உதகைக்குப் போய் சட்ட சபையை நடத்துவதைப்பற்றி யெல்லாம் நீதி அமைச்சர் குறிப்பிட்டார். அப்படி உதகையின் முன்னேற்றத்திற்கு பாடுபடுகிறவர்கள் அங்கே இருக்கக்கூடிய உருளைக்கிழங்கு விளைவிக்கக்கூடிய விவசாயிகளுக்கு இப்பொழுது வரி போடப் போகிறார்கள். அங்கேதான் அதிகப்படியான உருளைக்கிழங்கு உற்பத்தியாகிறது. இப்படி வரி போட்டால் அங்குள்ள மக்கள்தான் பாதிக்கப்படுவார்கள். உதகையையும், அங்கே இருக்கக்கூடிய மக்களையும் மேலும் மேலும் முன்னேற்றத்திற்கு கொண்டுவரவேண்டும் என்று சொல்லுகிற நேரத்தில் அவர்கள் விளைவிக்கக்கூடிய உருளைக் கிழங்குக்கு வரி போடுவது சரியல்ல. உண்மையிலேயே அங்கே இருக்கக்கூடிய மக்களை முன்னேற்றத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்று சர்க்கார் கருதினால் இந்த வரியை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**Sri A. V. P. ASAITHAMBI** : தலைவர் அவர்களே, உருளைக்கிழங்கிற்கு போடப்பட்டிருக்கும் வரியை அடியோடு நீக்கிவிட வேண்டும் என்று என்னுடைய கட்சிக்காரராகிய திரு. அண்ணாமலை அவர்களும், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. மாதா கௌடர் அவர்களும் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் திருத்தத்தை நானும் முழு மனதுடன் ஆதரிக்கிறேன். அப்படி ஆதரிக்கும்போது சில கருத்துக்களை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். உருளைக்கிழங்கு நீலகிரி மலையில் தான் அதிகமாகப் பயிரிடப்படுகிறது. அதிகமாக உற்பத்தியாகிறது. இது அனைவருக்கும் நன்றாகத் தெரியும். அங்கே இருக்கக்கூடிய மக்களின் வாழ்வை மிகவும் உயர்த்துவதாக சொல்லி இந்த வரியை விதிக்கிறோம் என்று சொல்வதில் இது ஒன்றாம். இன்றைய தினம் அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மக்களுக்கு அக்கறை காட்டவேண்டுமென்று அரசாங்கம் எடுத்துச் சொல்லி, அதன் காரணமாகத்தான் உதகைக்குக்கூட இந்த சட்டசபையைக் கொண்டு போய் நடத்துவது என்று இங்கே குறிப்பிட்டார்கள். உண்மையாகவே நீலகிரி மக்கள் மீது அரசாங்கத்திற்கு அக்கறை இருந்தால் இந்த உருளைக்கிழங்கு மீது விதிக்கப்போகும் விற்பனை வரியை அடியோடு ரத்து செய்துவிட வேண்டும். இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்த காங்கிரஸ் கட்சி அங்கத்தினரும் அந்தப் பகுதியைச் சேர்ந்தவருமான திரு. மாதா கௌடர் அவர்கள் அரசாங்கம் தன்னுடைய திருத்தத்தை ஏற்றுக் கொள்ளுமோ அல்லது கொள்ளாதோ என்ற சந்தேகத்தில் இந்த அவையில் இப்பொழுது இல்லை. அவர் இல்லாவிட்டாலும் பரவாயில்லை. நீலகிரி மக்களுக்கு உண்மையிலேயே அக்கறை காட்ட வேண்டும் என்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இருந்தால் இந்த உருளைக்கிழங்கிற்குப் போடப்பட்டிருக்கும் வரியை உடனே ரத்து செய்ய வேண்டும் என்று அரசாங்கத்தை வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**Sri M. R. KANDASWAMI MUDALIYAR**: கனம் தலைவர் அவர்களே, உருளைக்கிழங்கிற்குப் போடப்படும் வரியினால் அதை விளைவிக்கக் கூடிய விவசாயிகளுக்கு எந்த விதத்திலும் பாதகம் ஏற்பட்டு விடாது. காரணம் சாதாரணமாக உருளைக்கிழங்கைச் சாப்பிடுகிறவர்கள் அதிகமாக இருக்க மாட்டார்கள். அத்துடன் கத்திரிக்காய் முதலிய சாதாரண காய்கறிகளுக்குக் கூட வரி விதித்திருக்கிறோம். இதைச் சாப்பிடுகிறவர்கள் பெரும்பாலும் ஏழைகளாகத்தான் இருப்பார்கள். உருளைக்கிழங்கைச் சாப்பிடுகிறவர்கள் சாதாரணமாக பருத்துத்தான் இருப்பார்கள். சாதாரண ஏழைகள் உருளைக்கிழங்கிற்கு வரி போட்டால் பாதிக்கப்பட மாட்டார்கள். ஓரளவு பருத்து நல்ல நிலைமையில் இருக்கக்கூடியவர்கள் தான் இதை ஆட்சேபிப்பார்கள், மற்றவர்கள் ஆட்சேபிக்க மாட்டார்கள். இப்பொழுது புஷ்பம், பழம் போன்றவைகளுக்கும் நாம் வரி விதிக்கும்போது உருளைக்கிழங்கிற்கு வரி விதிப்பதனால் ஒன்றும் பாதகம் இல்லை. அதனால் வரி வேண்டாம் என்று சொல்வது நியாயம் இல்லை. வரி போட்டால் தான் உதகையிலுள்ள மக்களை நல்ல முறையில் முன்னேற்ற மடையச் செய்வதற்கு சௌகர்யமாக இருக்கும், அந்தப் பணத்தைக்கொண்டு செலவு செய்வதற்கு. அவர்களை



நல்ல முறையில் வாழ வைப்பதற்கு வரி தேவையாக இருக்கிறது. அந்த முறையில் அதற்கு வரி இருக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. அதனால் அதற்கு விதிக்கப்படப்போகும் வரியை நீக்க வேண்டியது அவசியம் இல்லை என்பதை கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**Sri A. GOVINDASAMY** : தலைவர் அவர்களே, உருளைக் கிழங்கு விளையக்கூடிய பகுதியைச் சேர்ந்தவர் ஸ்ரீ மாதா கௌடர் அவர்கள். அவர் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் தான். அவரே இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறார். உதகைக்கு சட்டசபையைக் கொண்டுபோக வேண்டும் என்பதை ஆதரித்தவரே இந்த திருத்தத்தைக் கொடுத்திருக்கிறார். அந்த வரியை நீக்க வேண்டும் என்று அவர் சொல்வது போலவே எங்கள் கட்சியைச் சேர்ந்த ஸ்ரீ அண்ணாமலை அவர்களும் சொல்லுகிறார். அதையே நானும் கூறுகிறேன். உருளைக்கிழங்கை மரக்கறி சாப்பிடுகிறவர்களும் சாப்பிடுகிறார்கள் மரக்கறி சாப்பிடாதவர்களும் சாப்பிடுகிறார்கள். அதை, ஒல்லியாக இருக்கிறவர்கள் சாப்பிட்டால் பருமனாகி விடுவதற்கு முடியும். கனம் கந்தசாமியைப் போலுள்ளவர்கள் சாப்பிட்டால் அவர்களும் உருளைக் கிழங்கு மாதிரி பெருத்து விடலாம். அதனால் எல்லோரும் அதை உபயோகிக்கும் அளவில் அதற்கு வரி விதிக்கக்கூடாது. உருளைக்கிழங்கிற்கு வரி விதிக்காமல் இருந்தால் அங்குள்ள விவசாயிகள் நல்ல முறையில் இருக்க வசதியாக இருக்கும். வரி விதித்தால் அதிகமாக விலை கொடுத்து வாங்க வேண்டியதாக இருக்கும். அதனால் இங்குள்ளவர்களுக்குப் பாதகம் ஏற்படும். அதனால் அதற்கு விதி விலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**Sri S. NAGARAJA MONIGAR** : கனம் தலைவர் அவர்களே, இந்த திருத்தத்தைக் கொடுத்த ஸ்ரீ மாதா கௌடர் இங்கே இல்லை என்று குறிப்பிட்டார்கள். அப்படிச் சொன்னவர்களுக்கு ஒரு விஷயத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உருளைக்கிழங்கை நீலகிரியில் உற்பத்தி செய்கிறார்கள் என்பது வாஸ்தவம்தான். அங்குள்ள உற்பத்தியாளர்களுக்கு வரி விதித்தாலும்கூட அங்கு உற்பத்தியாகும் உருளைக்கிழங்கு பெரும் பகுதியான வியாபாரம் முக்கியமாக விருதுநகர், சென்னை போன்ற இடங்களுக்கு கொண்டுபோய்தான் வியாபாரம் செய்யப்படுகிறது. அங்கேயே எல்லாம் வியாபாரம் செய்யப்படுவது இல்லை. இதைப்பற்றி குறிப்பிட நாம் கடமைப்பட்டிருக்கிறோம். இதைச் சர்க்காருக்குச் சுட்டிக்காட்டி அதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுத்துக்கொள்ளுமாறு சர்க்காரை நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

*** The Hon. Sri R. VENKATARAMAN** : கனம் சபாநாயகர் அவர்களே, எல்லா காய்கறிப் பண்டங்களுக்கும் நாம் வரி விதிக்கிறோம். அதே மாதிரி காய்கறிப் பண்டங்களில் சேர்ந்த உருளைக்கிழங்குக்கும் வரி விதிக்கப்படுகிறது. இதுவும் மூன்று கைகள் மாறுகிறது, அதாவது மல்டி பாயிண்ட் டாக்ஸில் வருகிறது. அதாவது உற்பத்தி செய்கிறவர், மொத்த வியாபாரி, சில்லரை வியாபாரி ஆக மூன்று கைகள் மாறுகிறது. (குறுக்கீடு). **Now I am talking of the three transaction.**

அதனால் அந்த அளவுக்குக் குறைந்திருக்கிறது. மற்ற காய்கறி பண்டங்களும் மூன்று கைகள் மாறுகின்றன. சாதாரணமாக மொத்த வியாபாரி, சில்லரை வியாபாரி, அடுத்தபடியாக செலவழிப்போர். அதனால் தான் அவைகளுக்கு பர்ஸ்ட் பர்சேஸ் என்று சொல்லி வரி விதிக்கப்படுகிறது. அதுவும் 2 பர்செண்ட் விதிக்கப்பட்டிருக்கிறது. பெருவாரியான உருளைக்கிழங்கு வெளி ராஜ்யங்களுக்குப் போவதால் அதற்கு வரி விதிக்காவிட்டால் இங்கு அதன் மூலம் வரக்கூடிய வருமானம் போய்விடும். அதனால்தான் பர்ஸ்ட் பர்சேஸ் என்று போடப்பட்டிருக்கிறது. அப்படிப் போடாவிட்டால் இங்கு ஏஜெண்ட்களை வைத்து எல்லாவற்றையும் வெளி ராஜ்யங்களுக்குக் கொண்டு போய் நமக்கு வரி கொடுக்காமல் தப்பித்துக்கொள்ளுவார்கள். இதனால் ஒன்றும் கஷ்டமில்லை. அடுத்தபடியாக உதகைக்குச் சலுகை கொடுக்க வேண்டும் என்று சொன்னது எனக்கு

[Sri R. Venkataraman] [14th February 1959

ரொம்பவும் பிடித்தமாக இருந்தது. இப்படிச் சொல்லியதால் எதிர் கட்சிக்காரர்களுடைய மனம் மாறிக்கொண்டு வருகிற மாதிரி தோன்றுகிறது. அதனால்தான் அவர்கள் உதகைக்கு எதாவது நன்மை செய்ய வேண்டுமென்று சொல்ல முற்பட்டிருக்கிறார்கள். இன்னும் ஏப்ரல் மாதத்திற்குள் அவர்களுடைய மனம் மாறுதல் நல்ல முறையில் அடைந்துவிடும் என்று நினைக்கிறேன். அதற்கு வேண்டிய அவகாசம் இருக்கிறது. ஏப்ரல் 20-ம் தேதி வரைக்கும் அவர்களுக்கு மனம் மாறுவதற்கு அவகாசம் இருக்கிறது. அதற்குள் அவர்களுடைய மனம் மாறி எவ்வளவோ இம்ப்ரூவ்மெண்டுக்கு இடம் இருக்கிறது அப்படிப்பட்ட இம்ப்ரூவ்மெண்ட் வந்திருப்பதால்தான் அவர்களுக்கு வரி போடுவதைகூட வேண்டாம் என்று சொல்லுகிறார்கள். உருளைக்கிழங்கு வகையில் மனம் மாற்றம் ஏற்பட்டிருப்பது போன்று மற்றவைகளிலும் மனமாற்றம் ஏற்பட்டுவிடும் என்று நினைக்கிறேன். அந்த அளவில் அவர்கள் ஒத்துழைத்ததற்கு அவர்களை நான் பாராட்டுகிறேன்.

12 noon MR. SPEAKER: Hon. members must tell me whether they are withdrawing their amendments or not, in view of the detailed discussion and reply of the Hon. Minister, instead of my putting to the Vote of the House all the amendments, taking up the time of the House. Let the hon. members please tell me as to which amendments they are not pressing.

The amendments of Sri K. Sattanatha Karayalar relating to item 15 and that of Sri A. Govindasamy relating to item 20, were put and lost.

MR. SPEAKER: The question is—

Item 21 shall be deleted and the remaining items shall be renumbered.

The amendment was put and carried.

Sri N. K. Palanisami's amendment relating to items 21 to 23, 25, 27, 30, 31, 35, 52 and 58 was, by leave withdrawn.

The amendment of Sri S. M. Annamalai relating to items 21 and 36 and that of Sri A. Govindaswamy relating to items 21 and 22 were put and lost.

The amendment of Sri T. S. Ramaswamy Pillai relating to item 22 was, by leave, withdrawn.

The amendment of Sri N. K. Palanisami relating to item 22 was put and lost.

The amendment of Sri M. S. Selvarajan relating to item 27, and the amendments of Sri N. K. Palaniswamy relating to items 27 and 28 were by leave, withdrawn.

MR. SPEAKER: The question is—

In item 28, in column (4), *for* the figure "6", *substitute* the figure "3".

The amendment was put and carried.



14th February 1959]

The amendment of Sri S. M. Annamalai relating to item 36 was put and lost.

The amendment of Sri T. S. Ramaswamy Pillai relating to item 36 and the amendments of Sri K. Sattanatha Karayalar relating to items 36 and 38 were, by leave, withdrawn.

The amendment of Sri N. K. Palanisami relating to item 38 was put and lost.

The amendment of Sri S. M. Annamalai relating to item 42 was put and lost.

The amendment of Sri K. Sattanatha Karayalar relating to item 45 was put and lost.

The amendment of Sri N. K. Palanisami relating to item 46 was, by leave, withdrawn.

The amendments of Sri K. Sattanatha Karayalar relating to items 53 and 60 were put and lost.

The amendment of Sri M. J. Jamal Moideen was deemed withdrawn, as the hon. member was not in his seat.

SRI M. S. SELVARAJAN: As the Government themselves have given an amendment in this regard, I am not pressing my amendment relating to item 62.

The amendment was, by leave, withdrawn.

The amendment of Sri T. S. Ramaswamy Pillai relating to item 62 and that of Sri N. K. Palaniswamy relating to item 62 were put and lost.

MR. SPEAKER: The question is—

"In column (4), against item 62, *for* the number "3", *substitute* the number "2".

The amendment was put and carried.

The amendment of Sri N. K. Palanisami relating to item 63 was put and lost.

MR. SPEAKER: The question is—

"*Omit* item 64".

The amendment was put and declared lost.

A poll was demanded on this amendment.

(The Division bell was rung.)

THE HON. SRI R. VENKATARAMAN: May I explain to the hon. members that if the amendment is accepted, then it will come under the multi-point tax and the tax will become more?

The amendment was again put and lost.

[14th February 1959]

The amendment relating to item 64 of Sri T. S. Ramaswami Pillai was put and lost.

The First Schedule, as amended, was put and carried.

*The Second Schedule.*

MR. SPEAKER: The motion is—

"That the Second Schedule do stand part of the Bill".

SRI N. MARUDACHALAM: Sir, I move—

In item 4, column (4), *for* the figure "2", *substitute* the figure "4".

SRI K. SATTANATHA KARAYALAR: I second the amendment.

MR. SPEAKER: You want to increase the tax? இரண்டாவது ஷெட்யூலில் 4-வது ஐடத்தில், 4-வது கலத்தில் இருக்கிற "2" என்பதை "4" என்று மாற்றவேண்டுமென்று இருக்கிறது. வேண்டும் என்றால் பேசுங்கள். இல்லாவிட்டால் விட்டு விடுங்கள். [The hon. Member wants to raise the tax.]

SRI N. MARUDACHALAM: இரும்பு சாமானை இருக்கிற சாதனங்களுக்கு எல்லாம் அதிகப்படி வரி விதிக்க வேண்டுமென்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். அதற்கு அதிக வரி போடுவதால் கெட்டு விடாது. விவசாயிகளுக்குக் கொடுக்கக்கூடிய சாதனங்களுக்கு குறைவான வரி போட்டு, மற்ற மோட்டார் போன்றவற்றுக்குப் பயன்படும் சாமான்களுக்கு அதிக வரி போடப்பட வேண்டும் என்பது என்னுடைய திருத்தம்.

SRIMATHI T. N. ANANDANAYAKI: கனம் சபாநாயகர் அவர்களே, இதற்கு 2 சத விகிதம் அதிகமாக வரி போடவேண்டும் என்று சொல்வது வியக்கத் தக்கதாக இருக்கிறது. இந்த "அயர்ன் அண்டு ஸ்டீல்" என்பது பெரிய வியாபாரிகளுக்கும், பெரும் பணக்காரர்களுக்கும் மட்டும் தேவையானது அல்ல. சிறு சிறு தொழிலில் ஈடுபட்டிருக்கக் கூடியவர்கள்கூட மிகவும் கஷ்டப்பட்டு வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பொருள்களுக்கு மத்திய அரசாங்கம் வேறு வரி போடுகிறது. ஆகவே இவற்றை அதிகக் கஷ்டப்பட்டு வாங்கிக் கொண்டிருக்கிறோம். எங்களைப்போன்ற பெண்கள் ஸ்டீலில் இருந்து செய்யப்படும் எவர் ஸில்வர் பாத்திரங்களைப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறோம். ஏற்கனவே எவர் சில்வர் பாத்திரங்கள் பவுண்டு 12 ரூபாய் 14 ரூபாய் என்று விற்கப்படுகிறது. மேலும் இதன் வரியை உயர்த்தினால் பெண்களாகிய நாங்கள் மிகவும் பாதிக்கப்படுவோம். பித்தளைப் பாத்திரங்களைக் கழுவுவது, ஈயம் பூசுவது ஆகிய கஷ்டங்களிலிருந்து விடுபடவே இந்தப் பாத்திரங்களைப் பெண்கள் அதிகமாக வாங்கி அழகாக வீடுகளில் வைத்திருக்கிறார்கள். இல்லக்கிழத்திகளுக்கு இன்றியமையாத எவர் சில்வர் பாத்திரங்களைச் செய்யப் பயன்படும் இரும்புக்கு வரியைக் குறைக்கவேண்டி இருக்க, 4 சதவிகிதம் ஆக்குங்கள் என்று அங்கத்தினர் திருத்தம் கொடுக்கிறார். ஏற்கனவே இது சரியான முறையில் கொடுக்கப்படாததால் தவறான முறையில் வாங்கி எவர் சில்வர் பாத்திரங்களை இரண்டு மடங்கு விலைக்கு விற்கிறார்கள். இந்த இனத்தில் வரியை உயர்த்துங்கள் என்று சொல்லுபவர் ஏதோ விரதம் எடுத்து, பெண்கள் இந்தப் பாத்திரங்களை வாங்கக் கூடாது என்ற எண்ணத்துடன் திருத்தம் கொடுத்திருக்க வேண்டும் என்று எண்ணத் தோன்றுகிறது. இது தவறானது. இரண்டு சதவிகிதம் போட்டிருப்பதே அதிகம். அதைக் குறைத்தால் வரவேற்கிறேன். இல்லாவிட்டால் அது அப்படியே இருக்கட்டும்.



[14th February 1959]

*THE HON. SRI R. VENKATARAMAN: கனம் சபாநாயகர் அவர்களே, இது 'Declared goods' அதாவது 'Inter-state trade and commerce' அத்தியாவசியமான பொருள்கள் என்று மத்திய சர்க்காரால் நிர்ணயிக்கப்பட்ட பண்டங்களில் ஒன்று. இதற்கு எல்லா ராஜ்யங்களிலும் ஒரேவிதமான வரி விதிக்கப்படவேண்டும். பொதுவாக "வரியை அதிகப்படுத்துவது" என்று இந்த விதமாக திருத்தம் கொடுக்கக்கூடாது. "மணி பில்" களுக்கு வரியை அதிகப்படுத்த வேண்டுமென்று திருத்தம் கொடுப்பதற்கு கவர்னருடைய "ரெகமண்டேஷன்" வேண்டும். குறைக்க வேண்டுமென்பதற்கு "ரெகமண்டேஷன்" தேவை இல்லை. இதை சட்ட சபையில் தெரிந்துகொள்ள வேண்டியது என்ற காரணத்தினால் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

Article 207 (1) of the Constitution reads thus:

A Bill or amendment making provision for any of the matters specified in sub-clauses (*a*) to (*f*) of clause (1) of article 199 shall not be introduced or moved except on the recommendation of the Governor, and a Bill making such provision shall not be introduced in a Legislative Council:

Provided that no recommendation shall be required under this clause for the moving of an amendment making provision for the reduction or abolition of any tax.

குறைப்பதற்குத்தான் திருத்தம் கொடுக்கலாமே தவிர, அதிகமாக்க வேண்டும் என்று திருத்தம் கொடுப்பது தவறு. அதற்குக் கவர்னருடைய சிபாரிசு வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER: I uphold the point of order raised by the Hon. Minister and rule the amendment of Sri N. Marudhachalam out of order. (Sri A Govindasamy rose). An amendment proposing an increase of tax requires the consent of the Governor. That has not been obtained. I agree with the Hon. Minister. I support the point of order and rule the amendment out of order. 12-10 p.m.

The Second Schedule was put and carried.

*The Third Schedule.*

SRI G. G. GURUMURTHI: Sir, I move—

In item 4, *omit* the word "carpets" within the brackets, and *after* item 7, *add* the following item, viz.:—

'8. Carpets'.

The amendment was duly seconded.

MR. SPEAKER: Amendment No. 195. Sri N. Marudachalam will move his amendment.

SRI A. GOVINDASAMY: Amendment 191 stands in my name. I may be allowed to move my amendment now.

MR. SPEAKER: Amendment 191 relates to item 7, but amendment 195 relates to item 5. Therefore, I take amendment 195 earlier.

SRI N. MARUDACHALAM: Sir, I move—

In item 5, *omit* the words "Sugar including".

The amendment was duly seconded.

SRI A. GOVINDASAMY: Sir, I move—

*After* item 7, *add* the following items, viz. :—

"8. All foodgrains namely, rice, wheat, paddy, cholam, cumbu. ragi, thinai, varagu, samai and milk, fresh fruits, betel, plantain leaves, flowers, eggs, meat and fish."

The amendment was duly seconded.

SRI K. SATTANATHA KARAYALAR: Sir, I move—

*After* item 7, *add* the following items, viz. :—

"8. Foodgrains.

9. Flowers.

10. Wattle bark.

11. Palmyra fibres and stalks".

The amendment was duly seconded.

SRI T. S. RAMASWAMY PILLAI: Sir, I move—

*After* item 7, *add* the following items:

"8. Foodgrains and pulses and vegetables and milk.

9. Chemical fertilizers and Bonemeal.

10. Firewood".

The amendment was duly seconded.

*SRI G. G. GURUMURTHI: தலைவர் அவர்களே, இந்த மூன்ருவது ஷெட்யூல் நான்காவது பிரிவில்—ஜமக்காளம் நீங்கலாக—என்று இருப்பதிஞல் ஜமக்காளத்திற்கு வரி விதிக்கப்படுமோ என்கிற சந்தேகத்தில் நான் என் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். ஜமக்காளத்திற்கு வரி விதிக்கக் கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN: கைத்தறியிஞல் செய்யப்பட்ட ஜமக்காளத்திற்கு வரி விலக்கு உண்டு. மற்ற ஜமக்காளங்களுக்கு வரி உண்டு.

MR. SPEAKER: May I ask the Hon. Minister whether he would like to follow the procedure that was adopted in regard to the First Schedule or he would like to reply to the discussion on all the amendments as a whole at the end?

THE HON. SRI R. VENKATARAMAN: I would reply to all the amendments as a whole.

*SRI A. GOVINDASAMY: தலைவர் அவர்களே, மீண்டும் உணவுப் பொருள்கள் மீது விதிக்கின்ற வரியை நீக்கவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், குறிப்பாக அரிசி, நெல், சோளம், கம்பு, ராகி, தினை, வரகுபோன்ற உணவுப்பொருள்கள்



மீதும், அதுபோல் பொருள்களான முட்டை, வெற்றிலை, பூ போன்ற பொருள்களுக்கும் விலக்கு அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

உணவுப் பஞ்சம் ஏற்படுகிறபோது. மீன் நல்ல சத்துள்ள பொருளாக, உணவு நெருக்கடியைத் தீர்ப்பதற்கு உபயோகப்படுவதஞல் இதற்கும் வரி விதிக்கக்கூடாது விவசாயிகள் உபயோகிக்கக் கூடிய உரம், பிண்ணாக்கு போன்றவற்றுக்கும் வரியை நீக்கவேண்டுமென்று பலதரப்பட்ட உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிருர்கள். கடைசியாக நான் கூற விரும்புவது தைத்த பனியன்கள் மீது போட்டு இருக்கிற வரியை நீக்க வேண்டும் என்பது. ஹோல்சேலாக கைத்தறிக்கு விலக்கு அளித்திருப்பதில் இதுவும் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். இல்லாத காரணத்திஞல் பனியன் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படுவார்கள். சட்டை போட முடியாதவர்கள் பனியஞவது போட்டுக்கொள்ளலாம் என்ருல் பனியன் விலையும் உயர்ந்து விடக்கூடும். இதற்கு வரி போடுவது அதிகமாக ஏழைகளைப் பாதிக்கும். மீண்டும் இதைப் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI T. S. RAMASWAMY PILLAI: குறிப்பாக இந்த ஷெட்யூலில் உணவு தானியங்கள், காய்கறிகள், பால், கெமிகல் பர்டிலிசைர்ஸ், போன்மீல், பயர்வுட் இவைகளுக்கு விலக்குக் கொடுக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். வரி விதிப்புக் கொள்கைகளைப் பொருத்த அளவில் உன்னதமான பெரிய புதுக் கருத்துக்கள் ஒன்றையும் அரசாங்கம் கையாளவில்லை. நமக்கு வேண்டியது ரெவின்யூதான் என்கிற அளவில் கையாளப்படுகிற கொள்கை தப்பு. டாக்டர் லோகநாதன்கூட மக்களுக்கு வசதி செய்ய வேண்டும், அவர்களுடைய பளுவைக் குறைக்க வேண்டும் என்கிற உன்னதமான அடிப்படையில்தான் உணவுப் பொருள்களுக்கு ½ சதவீதம் வரி என்று சிபார்சு செய்திருக்கிருர் என்று நினைக்கிறேன். இல்லாவிட்டால் அவற்றுக்கு 7 சத விகிதம் போடலாம் என்று சிபார்சு செய்திருக்கக் கூடும். நாங்களும் அந்த உன்னதமான தத்துவத்தின் அடிப்படையில்தான் பேசுகின்ருேம். ஆளும் கட்சியினரும் சோஷலிஸ்டிக் பாட்ர்ன் ஆப் சொஸைடிதான் வரவேண்டுமென்று கூறுகிருர்கள்.

ஆகவே இந்த அடிப்படையில் நான் கொடுத்திருக்கக் கூடிய திருத்தத்தை ஏற்றுக்கொண்டு இவைகளுக்கு விலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI K. SATTANATHA KARAYLAR: ஏற்கனவேயே செக்ஷன் 3-லே உள்ள பிரொவைசோ (1) ஐ நீக்கிவிடவேண்டுமென்று நாங்கள் கொடுத்திருந்த திருத்தத்தை சர்க்கார் ஏற்றுக்கொள்ளாத காரணத்திஞல், அதை ஒட்டி இந்தத் திருத்தத்தையும் வற்புறுத்தக்கூடாது என்று பதில் சொல்லிவிடுவார்களோ என்று அஞ்சினேன். அப்படி இல்லாத காரணத்திஞல் கனம் அமைச்சர் அவர்களை இந்த ஷெட்யூல் (3) இன் கடைசியில் 7-வது, பிரிவாக உணவு தானியங்கள், பூ, வாட்டில் பார்க், பல்மைரா பைபர்ஸ் ஸ்டாக்ஸ்—இவற்றையும் சேர்த்து விலக்கு அளிப்பதைப் பற்றி யோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் இதஞல் மிகப் பெரிய கஷ்டம் வந்துவிடாது. இந்த இனங்களில் மொத்த வருமானம் நம் சர்க்காருக்கு என்ன, இவற்றுக்குப் பூரண விலக்கு அளிப்பதால் என்ன குறையும் என்கிற புள்ளி விவரம் தெரிந்தால் நன்மை பயக்கும். அதேபோன்று ஜமக்காளத்திற்கு விலக்கு கொடுக்கவேண்டும் என்றும் சொல்லியிருக்கிருர்கள். கைத்தறி ஜமக்காளத்திற்கு வரி கிடையாது என்று அமைச்சர் சொன்ஞர். கைத்தறி மெத்தைக்கும் விலக்குக் கொடுக்கவேண்டும். அம்மாதிரி விலக்கு இருக்கிறதா என்று அறிய அவாவுறுகிறேன். அப்படிச் செய்தால் இது நன்மை பயக்கக் கூடிய ஒரு முறையாக அமையும் என்று சொல்ல விரும்புகிறேன்.

[14th February 1959

SRI S. LAZAR : கனம் சபாநாயகர் அவர்களே, கைத்தறி ஜமக்காளங்கள் பற்றிப் பேசும்போது அமைச்சர் குறிப்பிட்டார்கள். The item reads "All varieties of textiles (other than durris, carpets...." கைத்தறியில் செய்யப்பட்ட ஜமக்காளங்களுக்கு வரி இல்லை என்பதை நான்காவது பிரிவிலிருந்து பார்க்கும்போது அது அமையவில்லை, நான்காவது—

"Instead of handloom cloth," it should be "Handloom textiles" ஒருவேளை 7-வது பிரிவில் ஹாண்டுலூம் க்ளாத் என்று போட்டிருப்பதிலேயே இது சேர்ந்துவிடும் என்ற முறையில் விடப்பட்டிருந்தால் அதில் ஒரு சிறிய திருத்தத்தைச் செய்ய விரும்புகிறேன். ஹாண்டுலூம் டெக்ஸ்டைல் என்று போட்டுவிட்டால் கைத்தறி மூலம் செய்யப்படுகிற எல்லாப் பொருளும் வந்துவிடும் என்று நான் சொல்ல விரும்புகிறேன். இதையும் கவனித்து அமைச்சர் அவர்கள் செய்ய வேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

When there is a specific inclusion of carpets, and that too of all varieties, the interpretation will be that all kinds of carpets will have to be taken out of this Schedule and therefore will be liable to be taxed.

இதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

SRI M. R. KANDASWAMY MUDALIYAR : கனம் சபாநாயகர் அவர்
12-20 p.m. களே, ஜமக்காளங்களுக்கு வரி விதிக்கப்படுகிறது. அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து இதற்கு விதிவிலக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். பொதுவாக புண்ணாக்கிற்கு வரி விதிக்கப்படுவது விவசாயிகளை மிகவும் பாதிக்கும். இது விவசாயிகளுக்கு மிகவும் அத்யாவசியமான பொருள். இது மாடுகளுக்கும் உபயோகப்படுத்தப்படுகிறது. விவசாயிகள் உரமாகவும் உபயோகப்படுத்துகிறார்கள். ஆகவே இதற்கு விதிவிலக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

*SRIMATHI T. N. ANANDANAYAKI : கனம் சபாநாயகர் அவர்களே, பவானி ஜமக்காளம், பூ போன்றவைகளுக்கு விதிவிலக்கு அளிக்கவேண்டுமென்று திருத்தங்கள் கொடுத்திருக்கிறார்கள். பொதுவாக பூ, புடவை என்றாலே பெண்களுக்கு மிகவும் விருப்பமான பொருள் என்று எல்லோரும் எண்ணுவதுண்டு. ஆர்ட்டிபிஷியல் சில்க், கோரா சில்க், நைலான் சில்க் முதலிய நூல்களை கைத்தறி ஆடைகளை ஊக்குவிப்பதற்காகவே, விற்பனையாகும் என்பதற்காகவே கைத்தறி துணியில் சேர்த்து நெய்கிறார்கள். ஆகவே இதற்கும் விதிவிலக்கு அளிக்கப்படவேண்டுமென்று குறிப்பிட்டார்கள். பல அங்கத்தினர்கள் புண்ணாக்கு கிராமங்களிலே விவசாயிகளுக்கு மிகவும் அத்தியாவசிய பொருள், இது மாட்டிற்கும் உபயோகப்படுகிறது, உரமாகவும் பயன் படுத்துகிறார்கள் என்று பேசியிருக்கிறார்கள். பெண்கள் மிகவும் விருப்பத்தோடு அணியக்கூடியது பூ. அழகும் மணமும் வாய்ந்த இப் பூ அதிக நேரம் இருக்காது. அதி சீக்கிரத்தில் வாடிவதங்கிவிடும். இதனால் வியாபாரிகள் ஒன்றும் பெரும் லாபம் அடைந்துவிட முடியாது. ஆகவே இதற்கு விதிவிலக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* THE HON. SRI R. VENKATARAMAN : கனம் சபாநாயகர் அவர்களே, கைத்தறியில் நெய்யப்பட்ட ஜமக்காளமாக இருந்தால் அவைகளுக்கு செக்ஷன் 17 பிரகாரம் விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஆலையில் நெய்யப்பட்ட ஜமக்காளங்களுக்கு எந்த விதமான விதிவிலக்கும் அளிக்கப்படவில்லை. நைலான் சில்க், கோரா சில்க், ஆர்டிபிஷியல் சில்க் போன்றவைகள் பஞ்சு நூலுடன் இணைத்து கைத்தறியில் நெய்யப்பட்டால், கைத்தறி ஆடையாக மாறிவிட்டால் அதற்கு வரி கிடையாது. உணவுப் பொருளைப்பற்றிப் பேசும்போது புண்ணாக்கைப்பற்றி விஸ்தாரமாகப் பேசப்பட்டது. ஸ்ரீமதி அனந்தநாயகி அவர்கள் பூவைப் பற்றிப் பேசும்போது உண்மையாகவே எல்லோர் மனதையும் உருக்கிவிட்டது.



14th February 1959] [Sri R. Venkataraman]

ஆனால், 7-வது செக்ஷனைப் புரட்டிப்பார்த்தால் 30 ஆயிரத்துக்குமேலே வியாபாரம் செய்பவர்களுக்குத்தான் வரி விதிக்கப்படும் என்றிருப்பதனால் அவ்வளவு வியாபாரம் செய்வதற்குள் பூ ஒன்றும் வாடிவிடாது என்று சொல்ல விரும்புகிறேன்.

MR. SPEAKER : I think the amendments of Sri Govindasamy, Sri Sattanatha Karayalar and Sri T. S. Ramasamy Pillai for the addition of certain articles after item 7 are out of order, except perhaps the item relating to flowers, as the House has already passed certain clauses which cover those items or articles. The same applies to the amendment of Sri N. Marudachalam. So, I shall put Sri K. Sattanatha Karayalar's amendment relating to 'flowers' only to vote. The question is :

"*After* item 7, *add* the following item, viz.—

'8. Flowers' ".

The amendment was put and lost.

The amendment of Sri G. G. Gurumurthi was, by leave, withdrawn.

The Third Schedule was put and carried.

The Preamble and clause 1 were put and carried.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

"That the Madras General Sales Tax Bill, 1958 (L.A. Bill No. 6 of 1958), as amended, be passed."

MR. SPEAKER : Motion moved—

"That the Madras General Sales Tax Bill, 1958 (L.A. Bill No. 6 of 1958), as amended, be passed."

This is the third reading of the Bill. Those who wish to take part in the discussion may do so now. But, let the speeches be brief and short.

SRI A. GOVINDASAMY : கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த விற்பனை வரியை முதல் முதலாகக் கொண்டுவரும் போது ராஜாஜி அவர்கள் மதுவிலக்கினால் ஏற்படக்கூடிய நஷ்டத்தை ஈடு செய்வதற்காக இந்த விற்பனை வரி கொண்டுவருவதாகச் சொன்னார்கள். அப்பொழுது அவர்கள் கொண்டுவந்த நேரத்தில் வியாபாரிகள் வந்து தங்களை பாதிக்கிறது என்று அவர்களிடம் முறையிட்டால் அதற்கு கனம் ராஜாஜி அவர்கள் "உங்களை ஒன்றும் இந்த வரி பாதிக்காது, உண்மையாக பாதிக்கப்படுகிறவர்களெல்லாம் வாங்குவோர்தான்" என்று சொல்லுவார்கள். வாங்குவோர்கள் வந்து அவர்களிடம் வந்து முறையிட்டால் "வியாபாரிகள்தான் பாதிக்கப்படுகிறவர்கள்" என்று சொல்லிவிடுவார்கள். ஆனால் மதுவிலக்கு கொண்டு வருவதினால் ஏற்படும் நஷ்டத்தை ஈடு செய்வதற்காக இந்த வரியைக் கொண்டுவருவதாகச் சொன்னார்கள். கிராமங்களில் நீர்ப்பாசனத் திட்டங்களுக்குப் பணம் தேவைப்படும்போது, அந்த அளவிற்கு வரி விதிக்கப்படுகிறது. இது எவ்வளவையும் கொடுக்கக்கூடிய காமதேனு கற்பக விருக்ஷம் என்று சொன்னார்கள்.

மறுபடியும் வரி விதிக்கும்போது இது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு உபயோகப்படும் என்று சமாதானம் கூறி இதை எதிர்க்கக்கூடாது என்று சொன்னார்கள். பிறகு என். ஜி. ஓக்களுக்கு சம்பள உயர்வு அளிக்கவேண்டுமென்றால் அப்பொழுது இந்த வரியை ஒத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். நீலகிரியில் உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யும் அபிவிருத்தி திட்டத்திற்கு பணம் வேண்டுமென்றால் உடனே விற்பனை வரி கொடுங்கள் என்று சொல்கிறார்கள். எல்லாத் திட்டங்களை-
12-30 p.m. யும் நிறைவேற்றுவதற்கு வேண்டிய பணத்திற்காக வரி போடுகிறோம் என்று விற்பனை வரி ஒன்றையே சுட்டிக்காட்டும் நிலையில் இந்த அரசாங்கம் இன்று இருக்கிறது. மத்திய அரசாங்கத்திற்குப் போகும் பெரிய வரி இனங்களைத் தடுத்து நிறுத்தி நாம் எடுத்துக் கொண்டால் விற்பனை வரியை ஓரளவிற்குக் குறைக்க முடியும் என்பதை யாரும் மறுக்க முடியாது. உணவு தானியங்களின் மீது போடப்பட்டுள்ள வரியை நீக்க வேண்டும். இதை இந்தச் சபையில் பல ஆண்டுகளாக வற்புறுத்தி வந்திருக்கிறோம். அவைகளுக்கு அரசாங்கத்தார் விற்பனை வரியிலிருந்து விலக்களித்திருந்தால் அவர்களை கனம் அங்கத்தினர்கள் பாராட்டியிருப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

குடிசைத் தொழில்களுக்கு ஆக்கம் தரும் இந்த அரசாங்கம், பனை மரத்திலிருந்து செய்யப்படும் சாமான்களுக்கும் பனை ஈர்க்கிலிருந்து செய்யப்படும் சாமான்களுக்கும் விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். சில பொருள்களுக்குக் விலக்கோ சலுகையோ கேட்டபோது, அவைகளுக்கு முதல் கட்டத்தில் தானே வரி விதிக்கப்படுகிறது என்றும், வேறு சில பொருள்களுக்கு கேட்டபோது கடைசிக் கட்டத்தில் தானே விதிக்கப்படுகிறது என்றும் சொல்லி கனம் அமைச்சர் அவர்கள் விலக்கோ சலுகையோ அளிக்க மறுத்தார்கள், அது எங்களுக்குத் திருப்தியளிக்கவில்லை. சிறு வியாபாரிகள் விற்பனை வரி உத்தியோகஸ்தர்களைக் கண்டு பயப்படுகிறார்கள். இந்த அதிகாரிகள் வியாபாரிகளிடமிருந்து கணக்குகளைப் பறிமுதல் செய்து, இவ்வளவு வியாபாரம் நடந்திருக்க வேண்டுமென்று தீர்மானித்து, தங்கள் இஷ்டம் போல் வரி விதிக்கிறார்கள். விதிவிலக்கு வரம்பை 10,000 ரூபாயிலிருந்து 30,000 ரூபாய்க்கு உயர்த்த வேண்டுமென்று கனம் அங்கத்தினர்கள் கேட்டபோது அதற்கு அரசாங்கத்தார் ஒத்துக்கொள்ளவில்லை. இரண்டுக்கும் நடுவில் 20,000 ரூபாய்க்காவது உயர்த்தியிருக்கலாம். அரசாங்கத்தார் அதையும் செய்யவில்லை. விற்பனை வரி இலாகாவில் இருக்கும் சாதாரண பியூனைப் பார்த்தால் கூட வியாபாரிகள் பயப்படுகிறார்கள். அரசாங்கத்திற்கு சிறு சேமிப்பு நிதி அவசியமானால், அவர்களை சிறு சேமிப்பு நிதியை வசூலிக்கும் பொறுப்பை ரெவின்யூ இலாகாவிலுள்ள கலெக்டரிடமோ ஆர்.டி.ஓ.-விடமோ ஒப்படைக்காமல் விற்பனை வரி இலாகாவிலுள்ள டி.சி.டி.ஓ.-விடம் ஒப்படைக்கிறார்கள் என்றால் இதற்குக் காரணம் என்ன ? விற்பனை வரி அதிகாரிகளைக் கண்டால் வியாபாரிகள் பயந்து போய்ப் பணம் கொடுக்கிறார்கள். பணம் கொடுக்காவிட்டால் அவர்களை என்ன செய்துவிடுவார்களோ என்ற பயம் வியாபாரிகளுக்கு இருக்கிறது. வியாபாரிகளைப் பயமுறுத்தக்கூடிய அளவிற்கு அவ்வளவு அதிக அதிகாரங்கள் அவர்களிடம் இருக்கக்கூடாது. கனம் அமைச்சர் அவர்கள் இந்த இலாகாவைக் கொஞ்சம் கூர்ந்து கவனிக்க வேண்டும். அதிகாரிகள் சிறிய வியாபாரிகளின் கடைகளிலும் வீடுகளிலும் புகுந்து அவர்களுடைய விற்பனைக் கணக்குகளைப் புறிமுதல் செய்கிறார்கள். ஆனால் பங்களாக்களிலுள்ள பெரிய வியாபாரிகளைப் பொறுத்த வரையில் அதிகாரிகள் அவ்வாறு செய்வதில்லை ; அவர்களுடைய முன் அனுமதியைப் பெற்ற பிறகு தான் அவர்களிடம் செல்கிறார்கள். சில சிறிய வியாபாரிகள் வீட்டின் முன்புறத்தில் கடையை வைத்துக்கொண்டு பின்புறத்தில் வசித்துவருகிறார்கள். அதிகாரிகள் விற்பனைக் கணக்குகளைப் பறிப்பதற்காக அவர்களுடைய வீடுகளுக்குள் எந்த நேரத்திலும் புகுந்து விடுகிறார்கள். விற்பனைக் கணக்குகளைப் பார்ப்பதற்காக வியாபாரிகளிடம் செல்லும் விஷயத்தில் பெரிய வியாபாரிகளானாலும் சரி, சிறிய வியாபாரிகளானாலும் சரி, எல்லா வியாபாரிகளையும் ஒரேமாதிரியாக நடத்த வேண்டும்.



வியாபாரிகளில் விதவைகள் போன்றவர்கள் விஷயத்தில், அதிகாரிகள் அவர்கள் கொடுக்கும் விற்பனைக் கணக்குகளை நம்பாமல் அதிக வரி போடுவதுடன், அதைக் கொடுக்க ஆட்சேபனைகள் கிளப்பினால் அவர்களைப் போலீஸாரிடம் ஒப்படைக்கப் போவதாகச் சொல்லி பயமுறுத்துகிறார்கள்; போலீஸ்காரர்கள் போலீஸ் ஸ்டேஷனில் என்ன செய்வார்கள் என்று சொல்லி பயமுறுத்துகிறார்கள். போலீஸ் உதவியையும் கொண்டு வியாபாரிகளைப் பயமுறுத்துகிறார்கள். உதாரணமாக, வளவனூரில் ஒரு சாதாரண விதவை அரிசி வியாபாரம் செய்துகொண்டிருந்தாள். அவள் இவ்வளவுதான் வியாபாரம் செய்திருப்பாள் என்று ஏதோ மதிப்பிட்டு அதிக வரி போட்டுவிட்டார்கள். அவள் அந்த வரி அதிகமானது என்று சொல்லி அதைக் கொடுக்க மறுத்தபோது போலீஸ் ஸப் இன்ஸ்பெக்டரைக் கொண்டு அவளை பயமுறுத்தியதுடன், அப்பீல் செய்ய விரும்பினால் வரியை உடனே செலுத்திவிட்டுப் பிறகு வேண்டுமானால் அப்பீல் செய்துகொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். இதனால் வியாபாரிகள் பயப்படுகிறார்கள். இந்தக் கஷ்டங்களை நீக்குவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

* **Sri V. K. KOTHANDARAMAN :** கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது விற்பனை வரி மசோதா நிறைவேறியிருக்கிறது. இப்பொழுது விற்பனை வரி அமைச்சர் என்ற முறையில் கனம் ஸ்ரீ ஆர். வெங்கடராமன் அவர்களைப் பாராட்ட முடியாது. சட்டம் சம்பந்தமாக அவரிடம் வருத்தத்தைத்தான் தெரிவிக்க வேண்டியிருக்கிறது. தொழில் அமைச்சர் என்ற முறையில் பல தொழில் மசோதாக்களை நிறைவேற்றிய போது அவரைப் பாராட்டினோம். ஆனால் இன்று விற்பனை வரி மசோதாவை நிறைவேற்றியுள்ள அவருக்கு வருத்தம்தான் தெரிவிக்க வேண்டியிருக்கிறது. காரணம், எதிர்க் கட்சிகள் சார்பில் சுமார் 200 திருத்தங்கள் இந்த மசோதாவிற்கு கொடுக்கப்பட்டிருந்தன.

ஆளும் கட்சி அங்கத்தினர்களாலும் எத்தனையோ திருத்தங்கள் கொடுக்கப்பட்டிருந்தன. அவை கணிசமான அளவிற்காவது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. விற்பனை வரி பொதுமக்களை மட்டுமன்றி வியாபாரிகளையும் மிகவும் பாதிக்கிறது என்ற அபிப்பிராயத்துடன், ஆளும் கட்சியிலுள்ள பெரிய பெரிய வியாபாரிகள் இந்த மசோதாவை வரவேற்கவில்லை ; அவர்கள் உள்ளூர, குமுறிக்கொண்டிருக்கிறார்கள்.

**Sri M. R. KANDASWAMI MUDALIYAR :** Sir on a point of order, ஒரு ஒழுங்குப் பிரச்னை. ஆளும் கட்சியிலுள்ள வியாபாரிகளின் மனது குமுறிக் கொண்டிருக்கிறது என்று கனம் அங்கத்தினர் சொல்வது அவ்வளவு உசிதமானது அல்ல என்று நினைக்கிறேன். ஒரு கட்சியைப்பற்றி இவ்வாறு சொன்னால், அந்தக் கட்சியினால் யார் யார் குமுறிக் கொண்டிருக்கிறார்கள் என்ற கேள்வி எழக்கூடும். அவர் இவ்வாறு பேசுவது சரியல்ல என்று நினைக்கிறேன்.

**Mr. SPEAKER :** The hon. Member may proceed.

**Sri V. K. KOTHANDARAMAN :** It is not a point of order.

**Mr. SPEAKER :** It is for me to say whether it is a point of order or not. I simply asked the hon. Member to proceed with his speech. That is all. It is not for the hon. Members to give the ruling. I would not allow that.

**Sri V. K. KOTHANDARAMAN :** உணவுப் பொருள்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட வேண்டும். அரிசியாக இருந்தாலும் சரி, ராகியாக இருந்தாலும் சரி, சோளமாக இருந்தாலும் சரி,

எல்லா உணவு தானியங்களுக்கும் ஒரே விகிதத்தில் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. இப்போது மைசூர், கேரளா முதலிய ராஜ்யங்களில் உணவு தானியங்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I want to assure the House that Mysore is a deficit State with regard to food.

SRI V. K. KOTHANDARAMAN : ராகி சோளம் போன்றவைகளை ஏழைகள் உணவாக உபயோகித்துவருகிறார்கள். ஆகவே அரிசியையும் கோதுமையையும் தவிர இதர உணவுதானியங்களுக்கு விற்பனை வரியினின்றும் கண்டிப்பாக விலக்கு அளிக்க வேண்டுமென்று அசராங்கத்தாரைக் கேட்டுக்கொள்கிறேன்.

12-40 p.m. SRI K. SATTANATHA KARAYALAR : கனம் சபாநாயகர் அவர்களே இந்த சட்டத்தின் , பழைய சட்டத்திற்கு வருடந்தோறும் இரண்டு மூன்று திருத்தங்கள் வந்து கொண்டேயிருந்தன, அவைகளை எல்லாம் மாற்றி ஒட்டுமொத்தமாக பரிசீலனை செய்து ஒரு பெரிய மாறுதல் ஏற்படக்கூடிய அடிப்படையில் இந்த திருத்தங்கள் கொண்டு வருவதாக கொண்டுவரப் பட்டது. சிறு வியாபாரிகள் கஷ்டப் படக் கூடாது என்ற முறையில்தான் இந்தச் சட்டம் திருத்தியமைக்கப் படுவதாக கூறியுள்ளார்.

(Sri V. K. Kothandaraman in the Chair.)

அதோடு வியாபாரிகள் 'returns' முதலியன அனுப்பக் கூடிய முறையை எவ்வளவு எளிதாக்க முடியுமோ அவ்வளவு எளிதாக்கும் முறையில், கம்பவுண்டிங் முறை கொண்டுவரப் பட்டிருப்பதால், எவ்வளவு தூரம் வியாபாரிகளுக்குச் சௌகரியங்கள் அளிக்க முடியுமோ அந்தஅளவு அளிக்கும்பொருட்டு திருத்தங்கள் கொண்டு வரப்பட்டு நிறைவேறியிருக்கின்றன. ஆனால் ஸிங்கிள் பாயிண்ட் டாக்ஸ், அடிப்படையில் முதல் ஷெட்யூலின் அடிப்படையிலுள்ள வியாபாரிகளுக்கு பல சிக்கல்கள் விளைவிக்கும் என்று நினைக்கிறேன். ஆகவே, நடைமுறையில் இச்சட்டம் எப்படி நடக்கிறது என்று பார்த்து, அதை ஒரு வருடம் பார்த்து விட்டுப் பின்னர் இதைப் பரிசீலனை செய்வார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். முதல் ஷெட்யூலில் இருக்கக் கூடிய ஸிங்கிள் பாயிண்ட் டேர்ன் இனத்தில், மொத்த வியாபாரம் எவ்வளவு இருந்தபோதிலும் அந்தத் தீர்வை விகிதம் அமுலுக்கு வரும். சிறு சிறு வியாபாரிகள் பாதிக்கக் கூடிய நிலை ஏற்படலாம். ஆகவே தயவு செய்து இந்தச் சட்டத்தை அமுல் நடத்தக் கூடிய முறையில் சிறு வியாபாரிகள் மேல் ஒரு கண்ணோட்டம் வைத்து அவர்கள் பாதிக்கப் படாத நிலையில் இச்சட்டம் அமுல் நடத்தப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பிறகு, செக்ஷன் 17 படி சில பொருள்களுக்கு விதி விலக்கு கொடுக்கும்போது அதில் பரிசீலனை செய்யப்படவேண்டிய விஷயங்கள் பலதும் உண்டு. உதாரணமாக, இதற்கு முன்பு விற்பனை வரியில் ஒரு சிக்கல் இருந்தது. கார்ப் பட்டிற்கும், பெட் லைப்ரெட்ஸ், ரக், போன்ற பொருள்கள் வரும்போது எது போர்வை, எது விரிப்பு இவைகளில் எதற்குத் தீர்வை உண்டு எதற்குத் தீர்வை இல்லை என்பதைப் பற்றித் தர்க்கம் வந்தது. விளிம்பு வெட்டித் தைக்கப் படாதது போர்வை என்று கூறியிருக்கிறார்கள். லினன், அல்லது லினன் அண்ட் காட்டன் இரண்டும் சேர்ந்து செய்யப்படும் பொருள்களுக்கு, போர்வையின் விளிம்பை வெட்டி தையல் செய்திருந்தால் அது விரிப்பாக மாறலாம் என்ற அடிப்படையில் அதற்குத் தீர்வை விதிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஒரு சமயம் ஏற்பட்டது. இந்த மாதிரிப் பொருள்களுக்குக் குறைந்தது இன்ன விலைக்கு அதிகமாக இருந்தால் அதற்கு விதிவிலக்கு கொடுக்கப் படும் என்ற அடிப்படையை வைத்துக் கொண்டால் நன்றாகயிருக்கும். ஏனெனில் இதை உற்பத்தி செய்யக் கூடியவர்கள் ஒவ்வொரு பெயர்கள் இதற்குக் கொடுக்கிறார்கள். அதேபோல் கைத்தறிப் பொருள்களுக்கும், இதர பொருள்களுக்கும் விதிவிலக்கு கொடுக்கக் கூடியதை நல்ல முறையில் பரிசீலனை செய்து வியாபாரிகளுக்கும், பொதுமக்களுக்கும் அதிக [illegible]படி அவைகளை மாற்றியமைப்பது மிகவும் நன்மை பயப்பதாகும்.





எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு ஆண்டு இந்தச் சட்டத்தை பரிசீலனை செய்து அதற்குப் பின்னாவது உணவு தான்யங்களைப் பொறுத்தமட்டில் விதிவிலக்கு கொடுக்கலாமா என்பதைப் பரிசீலனை செய்யவேண்டுமென்று அமைச்சர் அவர்களை நான் பணிவோடு வேண்டிக் கொள்கிறேன். அடுத்தபடியாக, இதில் ரூள்ஸ் ப்ரெயில் சட்டம் செய்யும்போது சிறு வியாபாரிகளைப் பொறுத்த மட்டில் எந்த அளவு எந்தெந்தப் பொருள்களுக்கு விதிவிலக்கு கொடுத்தால் அவர்கள் பாதிக்கப்படாமல் இருப்பார்கள் என்பதைப் பரிசீலனை செய்து அதற்கான சட்ட திட்டங்கள் அமைக்கவேண்டுமென்று கூறிக் கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

(Sri T. P. Elumalai was sitting on the seat of the Secretary to the Legislature and talking with the Assistant Secretary.)

SRIMATHI T. N. ANANDANAYAKI : Sir, I rise to a point of order. Can a Member of this House sit in the seat of the Secret--- to the Legislature?

SRI S. LAZAR : அவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதா நிறைவேறக்கூடிய இந்த நேரத்தில் நான் எனது முடிவான சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஏதோ கட்சி நோக்கத்திலோ அல்லது கட்சிக் கொள்கைகளின் அடிப்படையிலோ பார்க்கும்போது இது சரிவர அமையவில்லையென்று சொல்லமுடியுமே தவிர சட்டத்தின் அடிப்படையில் வியாபாரிகளின் நலனின் அடிப்படையில், சர்க்காருடைய வருமானம் குறையாமல் இருக்கவேண்டுமென்றதின் அடிப்படையில் இவைகளை வைத்துப் பார்க்கும்போது இப்பொழுது நாம் இயற்றியிருக்கும் சட்டம் சிறந்ததொரு சட்டம் என்பதை யாரும் மறுக்கமுடியாது. மற்றைய சட்டங்கள் ஏற்பட்டதற்கு அல்லது ஏற்படுத்தப் பட்டதற்கு மாறாகவே இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையிலே முதலிலேயே ஒரு நிபுணரை நியமித்து வேண்டிய குறிப்புகளைத் தயார் செய்து அதன் பிறகு சட்டரீதியாக ஒரு சட்டத்தை வகுத்து அதையும் ஒரு தனிக் குழுவிற்கு விட்டு அதைவிடச் சிறப்பாக இந்த தனி குழுவிற்கு விடப் பட்ட நேரத்திலும் பொது மக்களைப் பொறுத்தவரைக்கும் அல்லது வியாபாரிகளைப் பொறுத்தவரைக்கும் என்னென்ன கஷ்டங்கள் இருக்கின்றன என்ற நோக்கத்தோடு ஒரு வருட காலம் நன்கு பரிசீலனை செய்து அதன் பிறகு கொண்டுவரக் கூடிய நேரத்தில் ஐந்து நாட்கள் அதுபற்றி விவாதம் நடத்திய பிறகு சட்டமாகப் போகும் இம்மசோதா உள்ளபடியே சிறந்தமுறையில் அமைந்திருக்கிறது என்று சொன்னால் அதில் எந்தவித கருத்து மாறுபாடும் இருக்க முடியாது. ஏற்கனவே இருந்த சட்டத்தைப் பார்த்தவர்களும், ஏற்கனவேயிருந்த கஷ்டங்களை நேரடியாகத் தெரிந்து கொண்டவர்களும் இந்தச் சட்டத்தின் நுட்பங்களையும் இதில் உள்ள சிறந்த அம்சங்களையும் நன்கு அறிந்து கொள்ள முடியும். இந்த வரிவிகிதம் மூன்று முறையாக பிரிக்கப்பட்டிருக்கின்றன, இந்தச் சட்டத்திலே, முதல் வகுப்பு, 64 வித பொருள்கள் ஒருமுனை வரிக்கு மாற்றுவது. அந்தப் பொருள்களுக்கு ஒருமுனை வரி விதித்தது, ஒன்று. இரண்டாவது வகுப்பு, 10,000 ரூபாய் வரையில் வியாபாரம் செய்யக் கூடியவர்களுக்கு வரி கிடையாது. மூன்றாவதாக, அழுகிப் போகக்கூடிய பொருள்களைப் பொறுத்தவரைக்கும் 30,000 ரூபாய் வரையில் விதிவிலக்கு கொடுத்து, அந்தப் பொருள்களின் வரி விகிதத்தைப் பொறுத்தவரைக்கும் மல்டி பாயின்ட்டில் 2 சத வீதம் அல்லது 1 சத வீதம் என்ற முறையிலே அந்தந்தப் பொருள்களுக்குத் தக்கவாறு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இம்மூன்று முறைகளை செவ்வனே கையாண்டு இருப்பதால் நடைமுறையில் வரும்போது எந்த விதமான கஷ்டமும் இருக்காது என்று நான் தைரியமாகச் சொல்ல முடியும். அடுத்தாற்போல் நடைமுறையில் வரி விகிதத்தை எடுத்துப் பார்க்கும் போதுகூட, அதற்காக வகுத்திருக்கும் சட்டம் வியாபாரிகளைப் பொறுத்த வரைக்கும் எந்தவிதத் தொந்தரவும் இல்லாத முறையிலே அப்படியே தவறுதலான முறையில் தொந்தரவுகள் ஏற்படும்போது அதைத் தீர்த்துக்கொள்வதற்கு அல்லது மாற்றிக் கொள்வதற்கு அல்லது அது

[Sri S. Lazar] [14th February 1959

போன்ற கஷ்டங்களை நீக்கிக் கொள்வதற்கு வேண்டிய சிறந்த அம்சங்கள் இச்சட்டத்தில் உட்படுத்தப்பட்டிருக்கிறது. சிறந்த அம்சங்கள் என்று சொல்லும்போது, இரண்டு வகையான வரிகள் இதில் வகுத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இலாகாவைப் பொறுத்த வரைக்கும், அதில் நம்பிக்கை இருக்கும் என்று சொன்னால் அதிகப்படி செலவில்லாமல் அவர்களின் சிரமத்தை நிவர்த்தி செய்து கொள்ளலாம். அதில்லாமல் இலாகாவில் நம்பிக்கை இல்லை என்ற எண்ணம் ஏற்படுகிறவர்களுக்குச் சட்டபூர்வமாக அப்பீல் செய்து கொண்டு தங்கள் குறைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம் என்ற முறையிலும் இரண்டு வகையாக ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத முறையில் அமைந்திருப்பதுதான் இந்த மசோதாவின் மிகச் சிறந்த அம்சம் என்பதை நான் இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன். அதற்கும் அடுத்தபடியாக வரி விதித்ததற்குப் பிறகும்கூட அந்த வரியை வசூல் செய்யக்கூடிய நேரத்தில் வியாபாரிகளுக்கோ அல்லது பொதுமக்களுக்கோ எந்தவித சங்கடமும் இல்லாத முறையில் வரி வசூல் செய்வதற்கு தவணைகள் முதற்கொண்டு கொடுக்கலாம் என்ற முறையில் அமைந்திருப்பது இன்னும் சிறந்த அம்சமாகும். தவறி குற்றம் ஏற்பட்டாலும் அதற்காகக் கூண்டில் நிற்கும்போதுகூட அதையும் "கம்பவுண்ட்" செய்து கொள்ளலாம் என்ற முறையில் இன்னொரு அம்சம் இருப்பதைப் பார்க்கிறபோது இச்சட்டத்திலுள்ள சிறந்த அம்சங்கள் நன்கு விளங்கும். ஆகவே, இப்படிப்பட்ட சிறப்பானதொரு சட்டத்தை ஏற்படுத்துகிற காலத்தில் அதற்குப் பொறுப்பாளிகளாக இருந்தவர்களை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. முதன்முதலாக டாக்டர் லோகநாதன் அவர்களுக்கு இந்தச் சபையின் நன்றியும் பாராட்டுதல்களும் உரித்தாகவேண்டும். அதை இச்சபை ஒத்துக் கொள்ளும் என்பதில் எந்த விதமான சந்தேகமும் எனக்கில்லை. அடுத்தபடியாக, இத்துறையில் ஈடுபட்டிருக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் சரி, அதிலும் சிறப்பாக இந்த இலாகா அமைச்சர் அவர்கள், இதில் இவ்வளவு தூரம் பரிவு காட்டி, அக்கறை காட்டி, நல்ல வருவாய் கிடைக்கும் சட்டமாக இது இருப்பதால் இதை நல்ல முறையில் அமைக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு நல்ல மனப்பான்மையோடு இச்சட்டத்தை அனுகியதற்காக அவர்களையும் நாம் பாராட்ட கடமைப்பட்டுள்ளோம்.

12-50 p.m. அதே சமயத்தில் ஒன்றிரண்டு முக்கியமான கருத்துக்களை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதாவது வியாபாரிகளுக்கு வரிகளை நிர்ணயிக்கும் அதிகாரிகளை நியமிக்கின்ற விஷயத்தில் 12-வது செக்ஷனில் "to the best of its judgement" என்று கொடுத்திருக்கிறோம். இதற்குத் தகுந்த முறையில் நடந்து கொள்ளுகின்ற அதிகாரிகளை நியமிக்க வேண்டுமென்று டாக்டர் லோகநாதன் அவர்கள் அறிக்கையிலும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதன் அடிப்படையில் ஏற்கனவே இருக்கின்ற அனுபவத்தைக் கொண்டு இந்தச் அதிகாரிகளை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு இந்த சட்டம் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து கொண்டு வரப்பட வேண்டும் என்று சொல்லுகின்ற நேரத்தில், இது அமுல் செய்யப்படுகின்ற நேரத்தில் எல்லோருக்கும் guides to assessment தயாராக இருக்கின்ற முறையில் ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

(Mr. Speaker in the Chair.)

அடுத்தபடியாக இது நேரடியாக பணத்தில் புழங்குகிற காரியத்தில் ஈடுபடுத்துகிற ஒரு சட்டத்தை நாம் செய்திருக்கிற இந்த நேரத்தில், இதில் ஈடுபடும் அதிகாரிகள் சிறந்த பண்புள்ளவர்களாகவும், நல்ல மனம் படைத்தவர்களுமாக இருக்க வேண்டும். இன்னொரு முக்கியமான கருத்தை டாக்டர் லோகநாதன் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதாவது நடைமுறையில் இது வந்த பிறகு வருமானத்தை அதிகமாகக் கொடுக்கும் என்று இருந்தாலும்கூட எதற்கெல்லாம் வரிவிலக்கு கொடுக்கலாம் என்பதை பார்த்து அதற்கெல்லாம் விலக்கு கொடுக்கலாம் என்றும். உணவுப் பொருள்களுக்கு வரி விலக்கு அளிக்கவேண்டும் என்றும், காம்பௌண்டு வரி முறையை 50 ஆயிரம் ரூபாய் வரைக்கும் வைத்துக்கொள்ளலாம்



14th February 1959] [Sri S. Lazar]

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதை அரசாங்கம் இனிமேல் பரிசீலித்து நடைமுறையில் வரும்போது இதைக் கொண்டு வரலாம் என்று தோன்றும்போது கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மீண்டும் இந்தச் சிறந்த சட்டத்தை இயற்றுவதற்குக் காரணமாயிருந்த டாக்டர் லோகநாதன் அவர்களையும் அமைச்சர் அவர்களையும் பாராட்டிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : I would like to know from the Hon. Minister how much time he requires for his reply so that I may adjust the time-limit for other Members.

THE HON. SRI R. VENKATARAMAN : Twenty minutes, Sir.

SRI. T. S. RAMASWAMY PILLAI : ஸார், எனக்கு முன்னால் பேசிய பல அங்கத்தினர்களும் குறிப்பிட்டது போல் இந்த மசோதா விற்பனை வரி சட்டங்களில் பல வருஷங்களாக பலவிதமான திருத்தங்களும் வளர்ந்து கொண்டிருந்த நிலைமையில் மிகவும் குழப்பமான ஒரு மசோதாவாக இருந்தது. இந்த நிலைமையில் இதை நன்கு ஆராய்ந்து பார்த்து இந்த மசோதா இப்போது கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி நன்கு விசாரித்த டாக்டர் லோகநாதன் அவர்கள் செய்த சிபார்சுகளில் பலவற்றையும் அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல இந்த மசோதாவைப் பொறுக்கு கமிட்டியும் சாங்கோபாங்கமாக பரிசீலனை செய்து, பல சமூகத்தினரிடமிருந்தும், பல பகுதியினரிடமிருந்தும் தகவல்களை அறிந்து அதற்கேற்ற முறையில் திருத்தங்களைச் செய்து இந்த மசோதாவைக் கொண்டு வந்தார்கள். இருந்த போதிலும் இதில் எல்லாப் பகுதியினருடைய குறைகள் எல்லாம் நீக்கப்படவில்லை என்பதை பொறுக்குக் கமிட்டியினரும் அதே போல் சட்டசபை அங்கத்தினர்களும் அறிவார்கள். இந்த மசோதா சாங்கோபாங்கமாக விவாதிக்கப்பட்டது என்பதை எல்லோரும் அறிவார்கள். அதே நேரத்தில் அரசாங்கத்தைப் பொறுத்த அளவில் அரசாங்கத்தின் கொள்கையாக இந்த மசோதாவை வைத்துக்கொண்டு இருக்கப் போவதில்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எங்களைப் பொறுத்த அளவில் நம்முடைய தேசீய அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவேற்றுகிற அளவில் இது அரசாங்கத்தின் கொள்கையின் அடிப்படையிலே இதை அமைத்திருக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய கருத்து. அந்த விதத்தில்தான் நாட்டினுடைய முன்னேற்றத்திற்கான வழியில் வரிவிதிப்பு சட்டங்கள் எல்லாம் அமைந்திருக்க வேண்டும் என்பதை யாரும் மறுக்க முடியாது. இன்றைய தினம் ஏழை பாமர ஜனங்களின் வாழ்க்கைச் செலவு எல்லாம் 50 சதமானம், 60 சதமானம் என்று உயர்ந்து கொண்டே போகின்ற இந்த நேரத்தில் உணவு தான்யங்களுக்கு வரிவிதிக்கக் கூடாது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். டாக்டர் லோகநாதன் அவர்களும் இதற்கு குறைந்த அளவில்தான் வரி போட வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் குறிப்பிட்டிருக்கும் விகிதத்திலிருந்து இரண்டு மடங்கு அதிகமாக, இந்த அரசாங்கம், அல்லது இந்த அரசாங்கத்திற்கு பொறுப்பாளியாக இருக்கின்ற அமைச்சர்கள் வரியை விதித்திருக்கிறார்கள். பொதுவாக இதன் மேல் இருக்கின்ற வரியை எடுத்துவிட வேண்டும் என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். இன்றைக்கு நமக்கு முக்கியமாக, இன்றியமையாததாக இருக்கின்ற உணவுப் பொருட்கள், விறகு, காய்கறிகள், கிரோஸின் ஆயில் போன்றவைகளுக்கு வரிவிலக்கு கொடுக்க வேண்டும் என்பதை நாம் இங்கு எடுத்துச் சொன்னோம். ஆனால் இவற்றின் மேல் இப்போது போடப்பட்டிருக்கும் வரியைக் குறைப்பதற்கும் கூட்டுவதற்கும் ஷெட்யூலில் சேர்ப்பதற்கும் 59-வது பிரிவின் கீழ், அதிகாரத்தை அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிறது. இத்தகைய அதிகாரத்தை வைத்துக்கொண்டு நமது நாட்டில் ஒரு சோஸலிஸ சமுதாயத்தை அமைக்க விரும்பும் சர்க்காரின் நடைமுறையில் இந்தச் சட்டத்தை அமுல் நடத்தும்போது இதனால் சமூகத்திலுள்ள ஏழை மக்களுக்கு ஏற்படும் கஷ்டங்களை உணர்ந்து விதிவிலக்கு

கொடுப்பார்கள் என்று நம்புகிறேன். சோஷியலிஸ சமுதாயம் அமைக்க வேண்டும் என்கிற லட்சியத்தை ஏற்றுக்கொண்டிருக்கிற நேரத்தில் சமூகத்தில் அடித்தளத்தில் இருக்கும் ஜனங்கள் மீது வரிப்பாரத்தை அதிகமாக சுமத்தமாட்டார்கள் என்று நம்புகிறேன். அதே நேரத்தில் இதில் இருக்கின்ற குறைகளை எல்லாம் நீக்குவதற்கும் நல்ல முறையில் நடைபெறச் செய்வதற்கும் வேண்டி நல்ல அதிகாரிகளை அங்கங்கே நியமிப்பார்கள் என்ற நம்பிக்கையோடு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**MR. SPEAKER :** கனம் அமைச்சர் அவர்கள் 1-10-க்கு பேசுவார். அதற்கு முன்னால் பல அங்கத்தினர்கள் பேசவேண்டும் என்று சொல்லுகிறார்கள். இத்தனை பேர்களும் பேசுவதென்றால் நான்கு நிமிஷம் ஐந்து நிமிஷம்தான் பேச முடியும். ஆகவே இரண்டு மூன்று அங்கத்தினர்கள் பேசுவதாக இருந்தால் அவர்களுக்கு கூடுதலாக நேரத்தை ஒதுக்க முடியும். அதற்குத் தகுந்த முறையில் அங்கத்தினர்கள் பேசவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக கனம் லட்சுமிகாந்தம் அவர்கள் பேசுவார்கள்.

**SRIMATHI LAKSHMIKANTHAMMAL :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த விற்பனை வரிச்சட்டத்தை நிறைவேற்றியிருக்கின்ற இந்த நேரத்தில் ஒன்றிரண்டு வார்த்தைகளை சொல்ல விரும்புகிறேன். இந்த விற்பனை வரிச் சட்டமானது கனம் ராஜாஜி அவர்கள் இருக்கின்ற காலத்திலேயே கொண்டு வரப்பட்டது. அப்போது இது புதிய சட்டமாகத் தோன்றியது. அப்போது வியாபாரிகளிடத்தில் இதற்கு அதிகமாக எதிர்ப்பு இருந்து வந்தது. ஆனால் நம்முடைய நாட்டினுடைய முன்னேற்றத்திற்காக இந்த மாதிரியான வரிபோட வேண்டியது அவசியம் என்பதை நாளாவட்டத்தில் எல்லோரும் உணர்ந்து கொண்டு வருகிறார்கள். மற்ற மாகாணங்களை விட எல்லாம் விற்பனை வரிச் சட்டமானது நம் மாகாணத்தில் கொண்டு வரப்பட்டு நல்ல முறையில் வரிகளை வசூலிப்பதற்கு தகுந்த முறையை கொண்டு வருவதில் நம் மாகாணம் முன்னோடியாக இருக்கின்றது. இதன் மூலமாக நமது சென்னை ராஜ்யம் சிறப்புப் பெற்று வருகிறது. இதை நாம் நன்கு பரிசீலித்துப் பார்ப்போமானால் இதைப்பற்றி ஒரு சில மாதங்களுக்கு முன்னால் டாக்டர் லோகநாதன் அவர்களும் பொறுக்குக் குழு கமிட்டியினரும் சேர்ந்து நன்கு பரிசீலித்திருக்கிறார்கள். அதன் பிறகுதான் இந்தச் சட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தில் அமைச்சர் அவர்கள் ஏழை மக்களுக்கு கஷ்டங்களை கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு உணவு பொருட்களுக்கு வரி விதிக்கவில்லை. நம்முடைய நாட்டின் முன்னேற்றத்திற்கு பல கோடிக் கணக்கில் ரூபாய் தேவைப்படுகின்றது. நாட்டின் முன்னேற்றம் என்று சொல்லும்போது நாட்டு மக்களுடைய முன்னேற்றம் என்று நாம் கருத வேண்டும். அதில் பணக்காரர்கள் என்றோ ஏழைகள் என்றோ வித்தியாசம் கிடையாது. நாட்டிலுள்ள ஒவ்வொருவருக்கும் நம்முடைய தேசத்தின் முன்னேற்றத்தில் அக்கறை இருக்க வேண்டும். இந்த நாட்டின் முன்னேற்றம் இந்த நாட்டிலுள்ள எல்லா மக்களுடைய முன்னேற்றம் என்பதைக் கருதித்தான் எல்லா உணவுப் பொருட்களின் மீதும் வரி போடப்பட்டிருக்கிறதே தவிர ஏழைகளை வாட்டி வதைக்க வேண்டும் என்ற நோக்கத்தினால் போடப்பட்ட சட்டமல்ல. நாம் சோஷியலிஸ சமுதாயத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறோம். அந்த சமயத்தில் இந்த நாட்டிலுள்ள எல்லா மக்களும் ஒன்று சேர்ந்து கொஞ்சம் கஷ்டப்பட்டாலும் ஒத்துழைக்க வேண்டும் என்பதைத்தான் இந்த சட்டம் நமக்கு எடுத்துக் காட்டுகின்றது. அதல்லாமல் தொழிலாளர்களின் மீது இந்த அரசாங்கத்திற்கு அக்கறை கிடையாது, தொழிலாளர்களிடமிருந்தும் ஏழை மக்களிடமிருந்தும், வரிகளை வாங்குவதற்குத்தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று எதிர் கட்சியினர் சொல்லுவார்களானால் அதை யாரும் நம்ப மாட்டார்கள். இந்த விற்பனை வரிச் சட்டம் மூலம் இப்போது விற்பனை வரி உணவுப்பொருட்களின் மீது போடப்பட்டிருந்தாலும் காலம் போகப் போக இதில் எந்த முறையில் வருமானம் வருகிறது என்பதை பார்த்துவிட்டு, இவைகளுக்கு விதிவிலக்கு கொடுக்கலாம் என்று தோன்றும் போது அவைகளுக்கு விலக்கு கொடுப்பதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரம்



இருக்கிறது. அதை வைத்துக்கொண்டு உணவுப்பொருட்களுக்கு இந்த வரிவிதிப்பிலிருந்து விலக்கு அளிப்பதற்கு சர்க்கார் முயற்சி எடுத்துக் கொள்ளும் என்று நான் நம்புகிறேன். இம்மாதிரியான வரிகள் எல்லாம் போடப்பட்டிருப்பதால் வியாபாரிகள் குமுறிக் கொண்டிருப்பார்கள் என்று சொல்லப்பட்டது. அவ்விதம் வியாபாரிகள் இருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. வியாபாரிகள் எல்லாம் வரிகளை சர்க்காருக்குக் கொடுப்பதற்குத் தயாராகத்தான் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அதிகாரிகளுடைய தொல்லைகள் இல்லாமல் இருந்தால் நிச்சயமாக அவர்கள் ஒழுங்காக வரியைச் செலுத்துவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இதைக் கொண்டு வரும்போது ஒழுங்கான முறையில் நடைபெறுவதற்கு வேண்டிய விதத்தில் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

***SRI M. P. SUBRAMANIAM :** அவைத் தலைவர்அவர்களே, இந்த விற்பனை வரி மசோதாவானது சட்டமாகும் தருவாயில் இருக்கிறது. 1 00 p.m.
கடந்த மூன்று அல்லது நான்கு நாட்களாக நாமெல்லாம் விவாதித்து, இப்போது இறுதியிலே சட்டமாக விருக்கிறது. இந்தச் சட்டத்திலே மிக முக்கியமாக நாம் காண்கிற நல்ல பலன் என்னவென்றால் இந்த விற்பனை வரியானது பல சந்தர்ப்பங்களிலே இந்தச் சபையிலே விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதிலும், சட்டம் முழுவதையும் பரிசீலிப்பதற்கு ஒரு வாய்ப்பை அளித்தது என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. கடந்த 20 ஆண்டுகளாக இருந்து வந்த சட்டத்தை எடுத்து, அதிலுள்ள சங்கடங்களை நிவர்த்திக்கும் முறையில் ஒரு முழுச் சட்டமாக ஆக்குவதிலே உள்ள கஷ்டங்களை, பொறுக்குக் குழுவில் நான் இருந்த காரணத்தினால், என்னால் உணர முடிகிறது. பல சந்தர்ப்பங்களிலே அமைச்சர் அவர்களுக்கும், இந்தத் துறையைச் சார்ந்த அதிகாரிகளுக்கும், சில கருத்துக்களை மாற்றிக் கொள்வதில் அவர்களுக்கும் கஷ்டங்கள் இருக்கின்றன என்பதை நம்மால் உணர முடிகிறது. இவ்வளவு கஷ்டப்பட்டும், புதிய சட்டத்தைக் கொண்டு வரும்போது பலர் விரும்பியதற்கிணங்க பல நன்மைகள் ஏற்படவில்லை என்பதிலே என்னைப் போன்றவர்களுக்கு வருத்தம் இருக்கத்தான் செய்கிறது. இதற்காக அமைச்சர் அவர்களுக்கு உள்நோக்கம் கற்பிக்க விரும்பவில்லை. இதில் வரக்கூடிய வருமானம் குறையக்கூடாது என்பதுதான் அவருக்குள்ள கவலை, ஆகவே இத்தகைய வருமானத்தின்—குறிப்பாக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பணம் வேண்டுமென்று சொல்லும் நேரத்தில்—குறைவு ஏற்பட்டால், திட்டங்களுக்குப் பாதகம் ஏற்படும் என்ற காரணத்தினால் அமைச்சர் அவர்கள் பல நல்ல திருத்தங்களை ஒப்புக் கொள்ளவில்லை என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். டாக்டர் லோகநாதன் அவர்களை நியமித்து இந்தச் சட்டத்தைத் திருத்துவதற்கு முக்கிய காரணம் பல்லாண்டுகளாக வியாபாரிகள் இந்தச் சட்டத்தால்—அதிலும் குறிப்பாக சிறு வியாபாரிகள்—பாதிக்கப்படுகிறார்கள், அவர்களுக்குச் சாதகம் ஏற்படவேண்டுமென்பதுதான் முக்கிய நோக்கம் என்று நினைக்கிறேன். எந்த அளவுக்குச் சிறு வியாபாரிகளுக்கு நன்மை கிடைத்தது என்று என்னால் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியவில்லை.

மற்றும் ஒன்று, இந்தச் சட்டத்தால் வியாபாரிகளுக்குத் தொல்லைகள் இருக்கின்றன என்பதைப் பல சந்தர்ப்பங்களில் சுட்டிக் காட்டியிருக்கிறோம். அமைச்சர் அவர்கள் ஒரு முறை சொன்னார்கள், கடந்த ஒரு ஆண்டுக்குள் தொல்லைகள் குறைந்திருக்கிறது என்று. இனி போகப் போகத்தான் சொல்ல முடியுமே தவிர இப்போது தவிர்க்கப்பட்டு விட்டது என்றோ, அல்லது தவிர்க்கப்படுமென்றோ சொல்லி விட முடியாது. பல சந்தர்ப்பங்களில் டாக்டர் லோகநாதன் அவர்கள் சொல்லியிருப்பது அவருக்குச் சாதகமானதாக இருந்தால் டாக்டர் லோகநாதன் அவர்களை மேற்கோளாகக் காட்டிப் பயன்படுத்திக் கொண்டார் அமைச்சர் அவர்கள். அதே நேரத்தில் நாங்கள் திருத்தத்திற்கு ஆதாரமாக டாக்டர் லோகநாதன் அவர்களை மேற்கோள் காட்டியபோது அவர் ஒத்துக் கொள்ளவில்லை. அவருடைய பெரும்பாலான

[Sri M. P. Subramaniam] [14th February 1959

ஆலோசனைகளை ஏற்றுக் கொண்டிருக்கிறோம் என்று தான். அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது அதில் அடங்கி இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

கடைசியாக, இந்தப் பக்கத்தில் உள்ள கனம் அங்கத்தினர் டி. என். ராமசுவாமிப் பிள்ளை கூறியது போல, இந்தச் சட்டம் வருவாய்க்கு உரிய சட்டமாக இருந்தாலும் சமூக நோக்கங்களை இதன் மூலம் சிலர் நன்மைகளை அடையும்படிச் செய்வதில் தவறில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பொறுக்குக் குழுவிலேயும், இங்கேயும் எடுத்துக் காட்டியதுபோல கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பல சலுகைகள் கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்திய நேரத்தில், தனிப்பட்ட நபர்களுக்கும் கூட்டுறவு சங்கங்களுக்கும் பாகுபாடு செய்வது என்பது சட்ட அடிப்படையிலே தவறு என்று சொன்னார்கள். தவருகத் தோன்றலாம். இருந்தாலும் கூட்டுறவு முறைதான் எல்லா .காரியங்களுக்கும் பயன்படுத்த வேண்டும் என்று சொல்லுகின்ற நேரத்தில், இந்தக் கூட்டுறவுச் சங்கம்தான் எல்லாத் துறையிலும் மிக உயர்ந்தது, வரவேற்கத் தகுந்தது என்ற அடிப்படைக் கொள்கையை எல்லோரும் ஒப்புக்கொண்டிருப்பதால் இந்தச் சலுகையைக் கொடுப்பதில் தவறில்லை. இப்போது பல விதத்தில் கைத்தறிக்கும் கதருக்கும் அதிக சலுகை கொடுக்கிறோம். மில்லுக்கும் இதற்கும் பாகுபாடு இருக்கிறது என்ற காரணத்தில் இதைத் தவிர்க்கவேண்டுமென்று கூற முடியாது. ஆகையால் அந்த நோக்கத்தில் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் விதி விலக்கு கொடுத்தால் நலமாக இருக்கும்.

இறுதியாகச் சொல்லுகிற நேரத்தில், இந்தச் சட்டம் ஏழைகளைப் பாதிக்கிற சட்டம் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த வரி மறைமுகவரியாக இருக்கின்ற காரணத்தால் இது பொது மக்களைச் சமமாகப் பாதிக்கிறது என்று சொன்னாலும், ஏழைகளுக்குத்தான் இதனால் வரிப்பளு அதிகமாக இருக்கிறது என்று நம்மால் உணர முடிகிறது. இந்த வரியினால் வியாபாரிகள் இடையிலே தொல்லைப்படுவார்கள் என்று சொன்னாலும் கூட, சாதாரணப் பொது மக்கள் வரிச் சுமையைத் தாங்குகிறவர்கள் பெரும் கஷ்டப்படுவார்கள் என்பதை மனதிலே வைத்துக் கொள்ள வேண்டும். அங்கத்தினர்களால் பல திருத்தங்கள் கொடுக்கப்பட்டும் ஒன்றுகூட ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அங்கத்தினர்களால் 200-க்கும் அதிகமான திருத்தங்கள் கொடுக்கப்பட்டன. அதிலே இரண்டொரு வெர்பல் திருத்தங்களைத்தான் ஒப்புக்கொண்டார்கள். பொறுக்குக் குழுவிலே பல சலுகைகளை கேட்டபொழுது சட்ட சபையில் பரிசீலிக்கலாம் என்று சொன்ன நேரத்தில் நாங்களெல்லாம் மன மகிழ்ச்சியோடிருந்தோம். அவைகளெல்லாம் இங்கேயும் கவனிக்கப்படவில்லை. மீண்டும் அடுத்த ஆண்டு பரிசீலனை செய்யக்கூடிய நேரத்தில் பரிசீலனை செய்து பட்ஜெட் வரும்போதுதான் இதைப் பற்றிப் பேசலாம் என்று இருப்பதை விட்டு, இது எப்படி நடக்கிறது என்பதைக் கவனிக்க ஒரு குழு அமைப்பதாக ஒரு உத்திரவாதம் அளித்தால் நல்லது என்று வேண்டிக்கொள்கிறேன்.

**Sri S. NAGARAJA MONIGAR :** கனம் சபாநாயகர் அவர்களே, நம் நாடு ஒரு விவசாய நாடு. அதற்கடுத்தாற்போல் வியாபாரிகளைக் கொண்டிருக்கிறோம். வியாபாரிகளை இந்தச் சட்டம் பாதிக்கிறது என்று சொல்லுகிறபோதிலும், இது பெருவாரியாக பொருளை உபயோகிக்கிற மக்களையும் பாதிக்கிறது. ஆகவே, இதற்கு வேண்டிய அவகாசம் எடுத்துக்கொண்டு, ஒரு நிபுணரைப் போட்டு, சென்ற ஒரு வருஷ காலமாகச் சிந்தனை செய்து 20 வருஷங்களுக்கு முன்பு போட்ட வரியாதலால் நமக்கு இதிலே பல அனுபவங்கள் உண்டு—அதையெல்லாம் கவனித்து அரசாங்கம் இதை உருவாக்கி, சட்ட சபையில் பாஸ் செய்வதற்கு ஏதுவாகச் செய்வதற்கு அமைச்சர் அவர்களை முதலில் பாராட்டுகிறேன்.

இதிலே மிகவும் கவனம் செலுத்தவேண்டியது அவசியமே. இதிலே இரண்டு விதக் குறைகள் சொல்லப்பட்டன. ஒன்று வியாபாரிகள் இதிலிருந்து தப்பித்துக்கொள்ள பொய்க் கணக்கு முதலியன எழுதி அரசாங்கத்தை ஏமாற்றப் பார்க்கிறார்கள் என்பது அரிச்சந்திரன் போல் இருந்து வியாபாரம் செய்வது முடியாது, வியாபாரம் என்றாலே எவ்வளவு



14th February 1959] [Sri S. Nagaraja Monigar]

லாபம் சம்பாதிக்க முடியுமோ அவ்வளவு சம்பாதிப்பதுதான் என்ற கொள்கை இருக்கிறது. கணக்கிலே தப்பித்துக் கொள்வதிலே சர்க்காரையும், அதிகாரிகளையும் குற்றம் சாட்டுகிறார்கள். இவர்கள் சொல்லுகிறார்கள் பொது மக்கள் சொல்லுகிறார்கள் வியாபாரிகள் சரியானபடி கணக்கு வைத்து வரி கொடுத்தால் வேண்டிய பணம் கிடைக்கும், ஆனால் அதிகாரிகளால் சரியானபடி வசூல் செய்யப்படுவதில்லை, அதிகாரிகள் சரியானபடி நடவடிக்கைகள் எடுப்பதில்லை, கொடுக்கிறவர்கள் லஞ்சம் கொடுக்கிறார்கள். வாங்குகிறவர்கள் வாங்குகிறார்கள், ஆகையால் கிடைக்க வேண்டிய பணம் கிடைக்காது போகிறது என்று இப்படி இரண்டு கட்சியிலும் சொல்லுகிறார்கள். பாமர மக்களாக உள்ளவர்களுக்கு, நல்ல படிப்பு இல்லாதவர்களுக்கு, சிறு வியாபாரிகளுக்குச் சலுகைகளைச் செய்திருக்கிறார்கள். 5,000 ரூபாய் என்று இருந்ததை இப்போது 10,000 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். இங்கே 25,000 ரூபாய், 30,000 ரூபாய் என்று கூடப் போடச் சொன்னோம். அதற்கு அமைச்சர் அவர்கள் சொன்ன பதில், சிறிய வியாபாரிகள் வியாபாரத்தை இரண்டாகப் பிரித்து விட்டு வரியை ஏமாற்றி விடுவார்கள் என்று சொன்னது பொருத்தமாக இருக்கிறது. சிறு வியாபாரிகளுக்கு விலக்கு அளித்திருந்தாலும், பெரிய வியாபாரிகளைப் பொருத்தமட்டில் கண்டிப்பாக நடவடிக்கை எடுத்து, இத்தனை பெரிய ஊழியர்களை லஞ்ச ஊழல்களுக்காகத் தண்டித்தோம், இத்தனை பெரிய வியாபாரிகளைச் சிறைக்கு அனுப்பினோம் என்கிற முறையில் இந்தச் சட்டத்தை அமுல் நடத்தினால் அன்றி இந்தக் கிளர்ச்சியும், இந்த எதிர்ப்பும் நாட்டிலே இருக்கிற அரசாங்கத்திற்கு ஹானி உண்டுபண்ணலாம் என்று சொல்லி, நான் சர்க்காரைப் பாராட்டி முடித்துக்கொள்கிறேன்.

* **THE HON SRI R. VENKATARAMAN :** கனம் சபாநாயகர் அவர்களே, இரண்டு ஆண்டுகாலமாக இந்த விற்பனை வரி விஷயம் நன்றாக ஆலோசிக்கப்பட்டது என்பதைக் கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் அறிவார்கள். 1959-வது சட்டத்திலே பல்வேறு திருத்தங்கள் செய்து, அந்தப் புத்தகத்தை எடுத்தால் ஒரு ஆலமரம்போல் இருந்தது என்று சொன்னேன். விழுதுகள் தொங்கிக் கொண்டிருப்பதை போல திருத்தங்கள் ஒட்டப்பட்டிருந்தது இன்றைக்கு அழகான ஒரு பூச்செடியாக உங்கள் முன்னால் தோற்றமளிக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

இந்தச் சட்டத்திலே செய்யப்பட்டிருக்கும் மாறுதல்கள் எல்லாம் கனம் லாஸர் அவர்கள் தெளிவாக ஒவ்வொன்றாக எடுத்துக் கூறிவிட்டார்கள். அதனால் மீண்டும் அவைகளைத் திருப்பிச் சொல்வதற்கு அவசியம் இல்லை. ஓரிரண்டு விஷயங்களை நான் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

இந்தச் சட்டம் வியாபாரிகளுக்குக் கஷ்டம் இல்லாத முறையில் அமைக்கவேண்டும் என்ற நோக்கத்துடன்தான் செய்யப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு இது வெற்றியடைந்திருக்கிறது என்பதை நான் மிகத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரை சத விகிதம், ஒரு சத விகிதம் என்று வரி விதிப்பதன் காரணமாக, பொது மக்களுக்கு டாக்டர் லோகநாதன் சொன்ன சிபார்சின் அடிப்படையிலே நன்மை ஏற்பட்டாலும், ஏற்படாவிட்டாலும், வியாபாரிகளைப் பொறுத்தமட்டில், அவர்களுக்கு எந்த விதமான தொல்லைகளும் இல்லை. அவர்கள் என்ன விரும்பினார்களோ, அவையெல்லாம் இந்தச் சட்டத்திலே செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சிறு வியாபாரிகளுக்கு நாம் இன்றைக்கு அவர்கள் கம்பவுண்டு செய்து கொடுக்கவேண்டிய நிலைமையை அனுமதித்திருக்கிறோம். கணக்குகள் வைத்துக்கொள்ளவேண்டிய தொல்லை பெரிய அளவு குறைந்துவிடும் என்று இதற்குமுன் நான் எடுத்துக்காட்டினேன். இன்றைக்கிருக்கும் வரி விதிப்பு நிலைமையிலே, நிர்ணயமாக நிச்சயமாக இவ்வளவு வியாபாரம் ஒவ்வொருவரும் செய்திருக்கிறார்கள் என்று கண்டுபிடிக்கவேண்டிய அவசியம் இருக்கிறது. ஏனென்றால், ரூபாய் 15,500 ஆக இருந்தால் ஒரு

வரியும், ரூபாய் 15,502 ஆக இருந்தால் சர்க்காருக்கு இன்னும் நான்கு நயே பைசே கூடி வரக்கூடிய நிலைமையும் இருப்பதால், ஒவ்வொருவருடைய கணக்கையும் நிச்சயமாகப் பரிசீலனை செய்து, எவ்வளவு வியாபாரம் செய்திருக்கிறார்கள் என்று கண்டுபிடிக்கவேண்டிய அவசியம் இருக்கிறது. அதனால்தான் அவர்கள் வியாபாரிகளைக் கணக்கைக் கொண்டுவரும்படிச் சொல்லி, பரிசீலனை செய்து, கொஞ்சம் அவர்களுக்குச் கஷ்டங்களையெல்லாம் கொடுக்கக்கூடிய நிலைமை இன்றைக்கு இருக்கிறது.

ஆனால், வரப்போகிற சட்டத்திலே, 10 ஆயிரம் ரூபாயிலிருந்து 15 ஆயிரம் ரூபாய் வரையிலும் அவர்களுக்கு எந்த விதமான வியாபாரம் நடந்திருந்தாலும், இதில் சர்க்காருக்கு அக்கறை இல்லை அதைக் கணக்கிட்டு சரிபார்த்து, எவ்வளவுதான் நிர்ணயமாக, நிச்சயமாக வியாபாரம் செய்திருக்கிறார்கள் என்று கண்டு பிடிக்கவேண்டிய அவசியம் இடையாது. அதுபோல் 25 ஆயிரம் ரூபாய் வரையிலும் அவர்கள் கம்பவுண்டு செய்து, வரி கொடுக்கக்கூடிய நிலைமை இருப்பதினால் 25 ஆயிரம் ரூபாய் வரைக்கும் இருக்கும் வியாபாரிகளுக்குத் தொல்லை பெரிய அளவு எடுபட்டுவிட்டது என்று சொல்லலாம்.

வரி விகிதத்தை எடுத்துக்கொண்டால்கூட, ஒரு சதமானம், பத்தாயிரம் ரூபாயிலிருந்து பதினைந்தாயிரம் ரூபாய் வரையில் இருக்கும். இருபத்தைந்தாயிரம் ரூபாய் வரையில் அரை சதமானமாக வரும். 24 ஆயிரம் ரூபாய் வியாபாரம் இருக்கிறதென்று வைத்துக்கொண்டால் ரூபாய் 480 வரி செலுத்தவேண்டும் வருஷத்திற்கு. நம்முடைய விதி பிரகாரம் ரூபாய் 240 கொடுத்தால் போதும். ஆகையால் இம்மாதிரி குறைவான வரி விகிதம் கூட அவர்களுக்குக் கிடைக்கிறது. அந்த விதத்திலும் அவர்களுக்கு ஓரளவு சலுகை கிடைத்திருக்கிறது.

கணக்கு வைக்கும் விஷயத்திலே, இன்றைக்கு நாம் இருபத்தையாயிரம் ரூபாய் வரையில் இருக்கிறவர்கள். பர்ச்சேஸ் பில் வைத்தால் போதும் என்ற திட்டத்தை கொண்டுவரப்போகிறோம் என்று செலக் கமிட்டி முன்னாலும் நன்றாக எடுத்துச் சொல்லியிருக்கிறோம். டாக்டர் லோகநாதன் அவர்கள் சொன்னதுபோல், இருப்பத்தையாயிரம் ரூபாயிலிருந்து ஐம்பதாயிரம் ரூபாய் வரையில்கூட அவர்களுக்கு கம்பவுண்டெட் டாக்ஸ் கொடுக்கவேண்டுமா என்பதை ஓராண்டு வருஷத்தில் பரிசீலனை செய்து பார்ப்போம் என்று சொல்லியிருக்கிறோம். சர்க்கார் நிச்சயமாகப் பரிசீலனை செய்து, இப்பொழுதிருக்கும் நடைமுறையிலே, வருகின்ற சட்டத்திலே எந்தச் சிக்கலும் ஏற்படாமல், வியாபாரிகளுக்கே அது நன்மையாக இருக்குமானால், அதையும் சர்க்கார் பரிசீலனை செய்வதற்குத் தயாராக இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தப்படியாக, நாம் இன்றைக்குப் பெரிய மற்றொரு மாறுதல் செய்திருக்கிறோம். இதற்கு முன்னால், அப்பீல் கேட்கின்றவரும், அஸெஸ்மெண்ட் செய்கின்றவரும் ஒரே அதிகாரியாக இருந்தார். ஒரு கேஸிலே அஸெஸ்மெண்ட் போட்டவர் மற்றொரு கேஸிலே அப்பீல் கேட்பார். இவ்வித குழப்பமான நிலைமை இருந்ததனால் அப்பீல் கேட்கின்றவர்களிடம் அப்பீலைக் கேட்டு முடிவு செய்கின்ற மனப்பான்மை இல்லாமல் இருந்தது. அவர்கள் தங்களுக்கு அஸெஸ்மெண்டிலே இருக்கும் தொல்லை, தொந்தரவுகளை வைத்துக்கொண்டு கூட, அப்பீல் கேட்கும்போது, அவர் நிர்த்தாட்சண்யமாகவோ அலட்சியமாகவோ இருக்குக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கலாம். ஆனால், இப்பொழுது அஸெஸ்மெண்ட் கமிஷனர் என்று தனியாக வைத்து, அதற்குமேல் அப்பெல்லெட் ட்ரைப்யூனல் அப்பீலைக் கேட்பதன் காரணமாக, அப்பீல் கேட்கின்ற போது, காலதாமதம் ஆகாமலும், அப்பீல் எந்த முறையில் கேட்கப்படவேண்டுமோ அந்த முறையில் கேட்பதற்கும் வசதியாக அமைந்திருக்கிறது. இந்தப் பிரிவினை காரணமாக அனேக சிக்கல்கள் குறைந்துவிடும் என்பதில் சந்தேகம் இல்லை.

இன்னும் அங்கு வரி விதிப்பதிலே, எந்த எந்த பொருள் மீது என்ன வரி விதிக்கவேண்டும் என்பது பற்றிச் சர்க்கார் ஏதோ நிர்ணயம் செய்துகொண்டதாக கனம் அங்கத்தினர்கள் பேசினது சரியல்ல. டாக்டர்



